# எமது நிறுவனம்



## எமது வரலாறு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவியின் ஆரம்பமானது பிரித்தானிய யுகத்தின் தொடக்க காலப்பகுதியளவு மிகவும் பழமை வாய்ந்ததாகும். 1796 ஆம் ஆண்டில் பிரித்தானியர்களால் நாட்டைக் கைப்பற்றி 3 ஆண்டுகளின் பின்னர் அதாவது 1799 ஆம் ஆண்டின் போது சிசில் ஸ்மித் என்ற பெயருடைய ஒரு கணக்காளர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக இருந்தமை பழைய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போதிலிருந்தே 41 கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் கீழ் சுதந்திரமான ஒரு நிறுவனமாக 2018 வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களமாவும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் அது தேசிய கணக்காய்வு அலுவலகமாகவும் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றது.

## எங்கள் கணக்காய்வு அதிகாரம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் மூலம் அரசாங்க துறையிலுள்ள நிறுவனங்களை கணக்காய்வு செய்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான அதிகாரம் முதன்மையாகக் கிடைத்துள்ளதுடன் இருபத்தியோராவது அரசியலமைப்பிற்கான திருத்தம் மற்றும் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளால் அது மேலும் விரிவடைந்துள்ளது.

“கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்கத்தின் அனைத்து திணைக்களங்கள், சனாதிபதி அவர்களின் செயலாளரது அலுவலகம், பிரதம மந்திரியின் செயலாளரது அலுவலகம், அமைச்சரவையின் செயலாளரது அலுவலகம் 44 ஆவது அல்லது 45 ஆவது உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் அலுவலகம், நீதிச் சேவை ஆணைக்குழு, அரசியலமைப்புச் சபை, 41(அ) உறுப்புரையின் I ஆம் பட்டோலையில் குறிப்பிட்ட ஆணைக்குழு, மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர், பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளர், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், ஏதாவது எழுத்து மூல சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வணிக முயற்சிகள் ஏனைய வியாபார முயற்சிகள் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படும் மற்றும் சொந்த பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தினை அரசாங்கம் அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தினால் ஏற்கப்படுகின்ற கம்பனிகளும் அவற்றின் கணக்குகளும் உள்ளடங்கலாக கணக்காய்வு செய்யப்பட

வேண்டும்" என அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அந்த அதிகாரம் பின்வரும் அதிகாரச் சட்டங்களில் இன்னும் விபரமாகக் காட்டப்பட்டுள்ளது.

- அரசாங்க நிதி தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைகளை உறுதியாகக் காட்டுவதற்காகவும் அதனுடன் சம்பந்தப்பட்ட அல்லது அதற்கு காரணமான விடயங்களுக்காக ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம்.

- அரச கூட்டுத்தாபனங்களுக்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற 1971 இன் 38 ஆம் இலக்க தேசிய நிதி அதிகாரச் சட்டத்தின் II ஆம் பகுதி,

- மாகாண சபைகளுக்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23 ஆம் பிரிவு

- மாநகர சபைகளுக்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு

- நகர சபைக்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181 ஆம் பிரிவு

- பிரதேச சபைகளுக்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 ஆம் பிரிவு

- கமநல அபிவிருத்திச் சபைகளுக்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சபைகள் அதிகாரச் சட்டத்தின் 58 ஆம் பிரிவு

- விளையாட்டு சங்கங்களுக்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுச் சங்கங்கள் அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

மேலும் அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் மூலம் பாராளுமன்றத்தினால் ஒரு தேவைப்பாடாக அங்கீகரிக்கப்பட்ட ஏதேனுமோர் சட்டத்தில் குறிப்பிட்ட ஏதாவது ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் செய்யப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் நிறைவேற்றும் போதும் ஒப்படைக்கும் போதும் அவரின் கடமைக்கு உதவியளிப்பதற்காக தகைமைபெற்ற கணக்காய்வாளர்களின் சேவைகளைப்

பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அரசியலமைப்பின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கணக்காய்வு தொடர்பான தொழில்நுட்ப, தொழில்சார் மற்றும் விஞ்ஞாபன ரீதியான சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்காக நிபுணர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான ஒழுங்குவிதிகளும் அதன் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 154(5) ஆம் உறுப்புரையின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவரது கடமைகளை மேற்கொள்ளும் போதும் ஒப்படைக்கும் போதும் அனைத்து ஏடுகளையும், அறிக்கைகளையும் பரீட்சித்தல் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் களஞ்சியங்களுக்கும் ஏனைய ஆதனங்களுக்கும் அணுகி கணக்காய்வினை மேற்கொள்ளல் மற்றும் தேவைப்படுகின்ற தகவல்களையும் விளக்கங்களையும் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## எங்கள் சேவை நாடுனர

மேலே காண்பிக்கப்பட்டவாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நோக்கெல்லைக்கு அரசியலமைப்பிலேயே வரைவிலக்கணம் வழங்கியுள்ளதுடன் அது மேலும் இருபத்தோராவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் கம்பனிகளையும் உள்ளடக்கி விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போது எங்கள் சேவைநாடுனர் அடிப்படையானது அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ளது.

| சேவை நாடுனர் | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| அமைச்சுக்கள் | 29 |
| இராஜாங்க அமைச்சுக்கள் | 40 |
| திணைக்களங்கள் | 110 |
| மாவட்ட செயலகங்கள் | 25 |
| பிரதேச செயலகங்கள் | 331 |
| அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபைகள், அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட தொழில் முயற்சிகள் | 222 |
| அரசாங்க கம்பனிகள் | 117 |
| அரசாங்க வங்கிகள் | 09 |
| நியதிச் சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள் | 67 |
| வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் | 113 |
| ஏனைய சுயாதீன நிறுவனங்கள் | 11 |
| மாகாண சபைகள் | 09 |

| | |
|---|---|
| உள்ளூராட்சி நிறுவனங்கள் | 341 |
| கமநல சேவை நிலையங்கள் | 565 |
| விளையாட்டு சங்கங்கள் | 66 |
| மாகாண சபைகளின் அமைச்சுக்கள், திணைக்களங்கள்,விசேட செலவு அலகுகள் | 273 |
| மாகாண சபை நியதிச்சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட நிறுவனங்கள் | 70 |
| மொத்தம் | 2398 |

அட்டவணை 01 - 2022 ஆம் ஆண்டின் போதான எமது சேவை நாடுனர் அடிப்படை

## எங்கள் நோக்கெல்லை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் I ஆம் பகுதியின் 3 ஆம் பிரிவிலிருந்து 5 ஆம் பிரிவு வரையான பிரிவுகளின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வுகளின் நோக்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க,

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால்,

- திரண்ட நிதியத்திற்கு கிடைக்கின்ற அனைத்து வருமானங்களும் திரண்ட நிதியத்திலிருந்தான அனைத்து செலவுகளும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

- கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களின் கணக்குகளில் செலவு செய்யப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டப்படுகின்ற பணம் அவை தொடர்புபடுத்தப்பட்டுள்ள அல்லது அறவிடப்பட்டுள்ள சேவைகள் அல்லது செயற்பாடுகளுக்காக சட்ட ரீதியாகப் பெற்று தொடர்புபடுத்தப்பட்டுள்ளனவா என்பது தொடர்பாக விசாரித்து தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

- செலவுகள் அவை கட்டுப்படுத்தப்படுகின்ற அதிகாரச் சட்டத்திற்கு இணங்கியுள்ளனவா என்பது தொடர்பாக தீர்மானித்தல் வேண்டும். மற்றும்

- ஒவ்வொரு கணக்காய்வின் போதும் வருமானங்கள், செலவுகள், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பாக பரீட்சித்தல் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் நோக்கெல்லைக்கு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் கணக்குகள், நிதிகள், நிதி நிலைமை, அரசாங்க நிதிகள் மற்றும் ஆதனங்களின் விவேகமுள்ள முகாமைத்துவத்தினைப் பரீட்சித்தல் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி இந்த அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றுவது

சம்பந்தமாக பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய எந்தவொரு விடயம் தொடர்பாகவும் அந்த விடயத்தை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு சான்றுகளுடன் பொது மக்களுக்கு மத்தியில் எவதேனுமோர் நபர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்து மூலம் தெரிவித்தால் அந்த விடயத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பரீட்சிக்க வேண்டியதுடன் அது தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அவரது தற்றுணிபின் பிரகாரம் கணக்காய்வின் நோக்கெல்லை தீர்மானிக்கப்படுவதுடன் இது தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கிணங்க,

- கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்விற்காக 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்குகள் மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கணக்காய்வு நியமங்கள் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வு நியமங்கள் தொடர்புபடுத்தப்படுதல் வேண்டும்.

- செயலாற்றல் கணக்காய்வு, சுற்றாடல் கணக்காய்வு, தொழில்நுட்ப கணக்காய்வு, மற்றும் ஏனைய ஏதாவது விசேட கணக்காய்விற்காக இலங்கை கணக்காய்வு நியமங்களில் ஏதாவது கணக்காய்வு நியமம் உறுதியாக குறிப்பிடப்படாத சந்தர்ப்பத்தில் அக்கணக்காய்வு சம்பந்தமாக தொடர்புபடுத்தப்பட வேண்டும் என அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களில் சர்வதேச அமைப்பின் மூலம் தீர்மானிக்கப்பட்ட அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான சர்வதேச நியமங்களின் ஏற்பாடுகளானவை, உள்நாட்டு தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையிலான திருத்தங்களுடன் தொடர்புபடுத்தக்கூடிய வகையில் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற அறிவுறுத்தலின் மூலம் உறுதியாகக் காட்டப்பட முடியும்

## எங்கள் சுதந்திரம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுதந்திரமானது அரசியலமைப்பின் மூலம் விரிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பில் திருத்தங்கள் மற்றும்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மூலம் அதிஉயர் கணக்காய்வு நிறுவனத்தின் சுதந்திரத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்படுகின்ற அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்கள் தொடர்பான சர்வதேச அமைப்பின் அடிப்படைத் தத்துவங்களுடன் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரைக்கு இணங்க,

- ஒரு கணக்காய்வாளர் தலைமை அதிபதியானவர் தகைமை பெற்ற ஒரு கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக இருக்கவேண்டியதுடன் 41 (அ) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படுவார். கணக்காய்வாளர் தலைமை அதிபதியானவர் சிறந்த மனநிலை இருக்கும் வரை தனது பதவியினை வகிப்பார்.

பாதகமான சுகாதார நிலைமை அல்லது ஊனமுற்ற நிலைமையின் அடிப்படையில் அல்லது சனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்தை கோருதல் ஆகிய நிலைமையின் போது மாத்திரம் சனாதிபதி அவர்களால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை பதவியிலிருந்து நீக்க முடியும். அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையில் மேலும் காண்பிக்கப்பட்டவாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சம்பளம் பாராளுமன்றத்தினால் நிர்ணயிக்கப்படுவதுடன் அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் திரண்ட நிதியத்திற்கு ஒரு செலவாக அமைவதுடன் அவரின் பதவிக் காலத்தில் அது குறைக்கப்படாமலிருத்தல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமை அதிபதி எந்த அமைச்சினதும் அல்லது அரசாங்க உத்தியோகத்தரின் மேற்பார்வைக்கு உட்படமாட்டார்.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிதி மற்றும் நிருவாக சுயாதீனத்திற்கு காணப்படுகின்ற வரையறைகள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் செயற்பாடுகள் தொடர்பான சுதந்திரம் இதுவரையிலும் அரசியலமைப்பின் மூலம் பாதுகாக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிதி மற்றும் நிருவாக சுதந்திரமானது நிலவும் அரசியலமைப்பு மற்றும் சட்டரீதியான ஏற்பாடுகளின் அடிப்படையில் நிறைவேற்றுனரினால் வரையறைகளுக்கு உட்படுத்திய சந்தர்ப்பங்கள் உள்ளன. எனினும் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏறபாடுகளின் மூலம் அவ் வரையறைகள் நீக்கப்பட்டுள்ளன. கணக்காய்வாளர் தலைமை அதிபதி அனைத்து தனிப்பட்ட மற்றும் நிறுவன ரீதியான கடப்பாடுகளிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டியதுடன் தன்னிச்சையான வரையறைகளில் இருந்தும் விடுபட்டிருத்தல் வேண்டும். நிதி, நிருவாகம் ஆகிய இரு வகைகளிலும் காணப்படுகின்ற வளங்களுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி நிறைவேற்றுனர் மீது

தங்கியிருப்பதானது பாராளுமன்றம் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் சுதந்திர தன்மைக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது நியாயமான ஏற்றுக்கொள்ளலாகும். நிதி மற்றும் நிருவாக சுதந்திரத்தினை உள்ளடக்கி கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்காக சட்ட ரீதியான ஏற்பாடுகளின் மூலம் அதிக பாதுகாப்பினை பாராளுமன்றத்தினால் வழங்குதல் வேண்டும். 2018 ஆம் ஆண்டு வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அவரது செலவிற்காக போதியளவு நிதி ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுத் திறைசேரியின் மீது தங்கியிருக்க வேண்டியதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மூலம் ஏனைய பொதுநலவாய நாடுகளைப் போல இலங்கையின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியும் அவரின் பதவியணி உள்ளடங்கிய தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கான பாதீட்டினை பாராளுமன்றத்தின் நிதி தொடர்பான தெரிவுக் குழுவினால் நுண்ணாய்விற்கு உட்படுத்தி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுவதுடன் அவரின் பாதீடு தொடர்பாக நிறைவேற்றுனரின் கட்டுப்பாடின்றி தீர்மானம் எடுக்கப்படும். அதற்கிணங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பாதீடு பாராளுமன்றத்தினால் தனியாக தீர்மானம் எடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதன் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமையை நிறைவேற்றும் போது நிதிசார் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அரசியலமைப்பின் 170 ஆவது உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் “அரசாங்க உத்தியோகத்தர் அல்லாது விசேட பட்டியலுக்கு” உள்ளடக்கப்பட்டுள்ளார். இது மேலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் நிருவாகச் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட ஏற்பாடாகும்.

இவ்வாறே, 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அதற்காக அங்கத்தவர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். ஆவ் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க கணக்காய்வு சேவைக்கான சேவை பிரமாணக் குறிப்பொன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான அமைச்சரவையினால் கொள்கை ரீதியான அவதானிப்புகள் கிடைக்கப்பெற்றிராமை யால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வுப் பதவியணியினரின் நிருவாக ஸ்வாதீனத் தன்மையைப் பாதுகாத்தல், பதவியணி யினரின் பதவியுயர்வு, இடமாற்றங்கள், ஒழுக்காற்று நடவடிக்கைகள், சம்பளங்கள் மற்றும் பதவியணியினரின் மற்றும் ஏனைய நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பிலான நிர்வாக ரீதியான விடயங்கள் மேற்கொள்ளப்படுவது மேலும் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவிற்கு சுயாதீனமாக

மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது.
ஐக்கிய நாடுகளின் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்கள் தொடர்பான சர்வதேச அமைப்பு (INTOSAI) 1977 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட "லீமா வெளியீட்டின்" மூலம் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் ரீதியாக அரசாங்க கணக்காய்வின் சுதந்திரம் தொடர்பான தத்துவங்களின் மீது கவனம் செலுத்தியுள்ளது. 30 ஆண்டுகளின் பின்னர் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்கள் தொடர்பான சர்வதேச அமைப்பின் XIX ஆவது சம்மேளனத்தில் (2007 மெக்சிகோ) "மெக்சிகோ வெளியீடு" இன் மூலம் அரசாங்கத் துறையின் சிறந்த கணக்காய்விற்காக அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வருமாறு 8 பிரதான அத்தியவசியமான தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

கொள்கை 1 - பொருத்தமானதும் வினைத்திறனானதுமான அரசியலமைப்பு சார்ந்த/ நியதிச்சட்ட ரீதியான/ சட்டரீதியான செயற்பாட்டு கட்டமைப்பும் அச்செயற்பாட்டு கட்டமைப்பிற்குள் உண்மையாக செயற்படும் ஏற்பாடுகள் காணப்படுதல்.
அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரத்தின் அளவினை விபரமாக வெளிப்படுத்திக் காண்பிக்கும் சட்டங்களை உருவாக்குதல் அத்தியவசியமானதாகும்.

கொள்கை 2 - அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் (கல்விசார் நிறுவனங்கள்) அங்கத்தவர்கள் சொந்த கடமைகளை நியாயமாக நிறைவேற்றும் போது அவர்களின் பதவியில் பாதுகாப்பு மற்றும் சட்டரீதியான சுற்றாடலில் சுதந்திரம்.
பின்வரும் நிலைமைகளின் கீழ் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் தலைவர்களின் மற்றும் கல்விசார் நிறுவனங்களின் அங்கத்தவர்களது நியமனங்கள், மீள் நியமனங்கள், தொழில் வாய்ப்பு, சேவையிலிருந்து நீக்குதல், இளைப்பாற்றுதல் என்பன தொடர்பான நிபந்தனைகள் உரிய சட்டங்களை உருவாக்குவதன் மூலம் விசேடமாக காட்டப்படுதல் வேண்டும்.

- சட்ட சபையினால் சான்றுபடுத்துகின்ற நடைமுறையின் மூலம் சுதந்திரத்தினை உறுதிப்படுத்தும் நியமனங்கள், மீள் நியமனங்கள் அல்லது சேவையிலிருந்து நீக்குதல் (அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரம் தொடர்பான ISSAI II வழிகாட்டிக்கோவை மற்றும் நன்னடத்தைகள்)

- சட்ட அதிகாரத்தின் (Mandate) அடிப்படையில் சொந்த செயற்பாடுகளை காரணமாகக் கொண்டு நிறைவேற்றுனர்கள் மேற்கொள்கின்ற எதிர்ப்புக்களுக்கு பயமின்றி நடவடிக்கை எடுப்பதற்கு இடமளிக்கும் வகையில் போதியளவு நீண்ட மற்றும் உறுதியான காலப்பகுதியுடன் செய்யப்படுகின்ற நியமங்கள், மற்றும் சிறந்த நடைமுறைகள்)

- சொந்த கடமைகளை முறைப்படியாக நியாயமாக மேற்கொள்ளும் போது கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் இடம்பெற்ற ஏதேனும் செயற்பாடடைக் காரணமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகளிலிருந்து காத்துக்கொள்ளல். (Immune).

கொள்கை 3 - அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் செயற்பாடுகளை நிறைவேற்றும் போது போதியளவு விரிவான சட்ட அதிகாரம் (Mendate) மற்றும் முழுமையான தற்றுணிவு பின்வரும் செயற்பாடுகளை கணக்காய்வு செய்யும் அதிகாரம் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

- அரசாங்கத்தின் நிதி, வளங்கள் அல்லது சொத்துக்களைப் பெற்றுக்கொண்ட நபர் அல்லது நலன்பெறுனரினால் அவற்றை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வது தொடர்பாக அதன் சட்டரீதியான தன்மையை கருத்தில் கொள்ளாது கணக்காய்வு செய்தல்

- அரசாங்கத்திற்கு அல்லது அரசாங்க நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டிய வருமானங்களைச் சேகரித்தல்

- அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் கணக்குகள் தொடர்பான சட்டரீதியான தன்மையும் ஒழுங்குமுறையும்

- நிதி முகாமைத்துவத்தினதும் அறிக்கையிடுதலினதும் தரம், மற்றும்

- அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான சிக்கனம், செயற்திறன் மற்றும் பயனுறுதி

சட்டத்தின் மூலம் அவ்வாறு செய்யுமாறு உறுதியாக கட்டாயப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர்த்து அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களினால் அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் கொள்கைகளை கணக்காய்வு செய்யாதிருக்க வேண்டும் என்பதனால் அவர்களின் கணக்காய்வானது கொள்கைகளை அமுல்ப்படுத்தும் செயற்பாடுகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு தொடர்புபடும் வகையில் சட்ட சபைகள் விதிக்கின்ற சட்டங்களுக்கு அந் நிறுவனங்கள் மதிப்பளிக்க வேண்டியதுடன் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சட்ட சபைகள் அல்லது நிறைவேற்றுனர்கள் மேற்கொள்கின்ற பணிப்புரைகளிலிருந்து அல்லது தலையீட்டிலிருந்து அக் கணக்காய்வு நிறுவனங்கள் விடுவிக்கப்படுகின்றன

- கணக்காய்வு பிரச்சினைகளை தெரிவு செய்தல்
- அவர்களின் கணக்காய்வைத் திட்டமிடல், வேலைக் குறிப்புக்கள் தயாரித்தல், நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், அறிக்கையிடுதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல்,

- தமது அலுவலகத்தை ஒழுங்கமைத்தலும் முகாமைத்துவம் செய்தலும்

- அங்கீகரிக்கப்பட்டவற்றை அமுல்ப்படுத்தல் தமது சட்ட அதிகாரத்தின் (Mandate) ஒரு பகுதியாகும் சந்தர்ப்பங்களின் போது சொந்த தீர்மானத்தை நிறைவேற்றுதல்.

அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களினால் தாம் கணக்காய்வு செய்யும் அமைப்புக்களின் முகாமைத்துவத்தினுள் எந்த வகையிலும் தலையீடோ அல்லது தலையீடு செய்வதாக காட்டிக்கொள்ளும் வகையில் செயற்படாதிருத்தல் வேண்டும்.

அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்கள் தமது கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களுடன் மிகவும் நெருக்கமாக தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதில்லை என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்கிணங்க அவர்களின் குறிக்கோளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக வெளிப்படையாக காண்பித்தல் வேண்டும்.

தமது பொறுப்புக்களை நிறைவேற்றும் போது அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு முழுமையான தற்றுணிபின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். அவர்கள் அரசாங்க நிதியத்தின் பயன்பாடு மற்றும் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு முயற்சி செய்கின்ற அரசாங்க அல்லது அரசாங்க நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுதல் வேண்டும்.

அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்கள் தொடர்பான சர்வதேச அமைப்பினதும் சர்வதேச கணக்காய்வாளர்கள் சம்மேளத்தினதும் ஏனைய ஏற்றுக்கொள்ளக் கூடிய நியமங்கள் நிர்ணயிக்கப்படுகின்ற நிறுவனங்களினதும் உத்தியோகபூர்வ ஆவணங்களை அடிப்படையாகக் கொண்ட பொருத்தமான வேலைகள் மற்றும் கணக்காய்வு நியமங்களையும் நன்னடத்தை கோவைகளையும் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களால் பயன்படுத்துதல் வேண்டும்.

அரசியலமைப்பின் நியதிச்சட்டங்களின் மூலம் அல்லது சட்டவாக்கங்களின் மூலம் பணிப்புரை செய்யப்பட்டுள்ள வகையில் வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களினால் சட்ட சபைக்கும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கும் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த நிறுவனங்களினால் மேற்கூறிய அறிக்கையை பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

கொள்கை 4 - மட்டுப்பாடின்றி தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல்.

அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் நியதிச் சட்ட பொறுப்புக்களை முறைப்படியாக நிறைவேற்றுவதற்காக

தேவையான அனைத்து ஆவணங்களையும் தகவல்களையும் உரிய வேளைக்கு சரியாக, நேரடியாக, சுதந்திரமாக பெற்றுக்கொள்வதற்கு போதிய அதிகாரம் அந் நிறுவனங்களிடம் இருத்தல் வேண்டும்.

கொள்கை 5 - தமது வேலைகள் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு உள்ள உரிமை மற்றும் கடப்பாடு

தமது கணக்காய்வுச் செயற்பாட்டின் பெறுபேறுகளை அறிக்கையிடுதல் சம்பந்தமாக அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு வரையறைகள் விதிக்காதிருத்தல் வேண்டும். தமது கணக்காய்வுச் செயற்பாட்டின் பெறுபேறுகளை ஆகக் குறைந்தது ஒரு ஆண்டிற்கு ஒரு தடவையேனும் அறிக்கையிடுவதற்கு அவர்களுக்கு சட்டரீதியாக பணிப்புரை செய்யப்படுதல் வேண்டும்.

கொள்கை 6 - கணக்காய்வு அறிக்கைகளின் உள்ளடக்கம் மற்றும் காலத்தை தீர்மானிக்கும் சுதந்திரம் மற்றும் அவற்றை வெளியிட்டு பகிர்ந்தளித்தல்.

- தமது கணக்காய்வு அறிக்கைகளின் உள்ளடக்கத்தை தீர்மானிக்கும் சுதந்திரம் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களிற்கு உள்ளது.

- கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் கருத்துரைகள் பொருத்தமான வகையில் கவனத்திற்கு எடுத்து தமது கணக்காய்வு அறிக்கைகளில் அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் உள்ளடக்கும் சுதந்திரம் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு இருத்தல் வேண்டும்.

- கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட வேண்டிய ஆகக் குறைந்த தேவைப்பாட்டினை உறுதியாகக் காட்டுதலும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் முறைப்படியாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அல்லது சான்றுபடுத்துவதற்கு உறுதியான விடயங்களைக் காட்டுதல் சட்டத்தின் மூலம் செய்யப்படுதல் வேண்டும்.

- அறிக்கையிடுவதற்குத் தேவையான விடயங்களை உறுதியாக சட்டத்தினால் பணிப்புரை செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர்த்து தமது கணக்காய்வு அறிக்கைகளின் காலத்தை தீர்மானிக்கும் சுதந்திரம் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு உள்ளது.

- ஒட்டுமொத்தமாக சட்ட சபை அதன் ஆணைக்குழு, அல்லது அரசாங்கத்தினால் புலனாய்விற்கு அல்லது கணக்காய்விற்காக விசேட கோரிக்கை விடுக்கப்படுகையில் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களினால் அவை நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

- அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் அறிக்கைகள் சட்டத்தால் வலியுறுத்தப்பட்டுள்ளவாறு உரிய அதிகாரிகளுக்கு முறைப்படியாகச் சமர்ப்பித்தல் அல்லது ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் அவற்றினை வெளியிட்டு பகிர்ந்தளித்தல் வேண்டும்.

கொள்கை 7 - அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் சிபாரிசுகள் தொடர்பாக வினைதிறனான பின்தொடர் நடவடிக்கைப் பொறிமுறை காணப்படுதல்

- அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்கள் தமது அறிக்கைகளில் குறிப்பிடுகின்ற உறுதியான சிபாரிசுகளை மீளாய்வு செய்து பின்தொடர் நடவடிக்கை எடுத்து சீர்திருத்த நடவடிக்கைகள் எடுப்பதற்காக உரிய வகையில் சட்டவாக்க சபைக்கு அல்லது அதன் ஆணைக்குழுவிற்கு அல்லது கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் நிருவாக சபைக்கு சமர்ப்பிக்கும்.

- அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களைப் போல உரியவாறு சட்டவாக்க சபை அதன் ஆணைக்குழு அல்லது கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் நிருவாக சபை என இவற்றின் அவதானிப்புக்களும் சிபாரிசுகளும் முறைப்படியாக அமுல்ப்படுத்தப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு அக் கணக்காய்வு நிறுவனங்களுக்குச் சொந்தமாக உள்ளக பின்தொடர் நடவடிக்கை முறைமை காணப்படல்.

- பின்தொடர் நடவடிக்கை மற்றும் அங்கீகரித்தல்களுக்காக தமக்கான நியதிச் சட்ட ரீதியான அதிகாரம் அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்பட்டிருந்தும் கூட அக் கணக்காய்வு நிறுவனங்கள் தமது பின்தொடர் நடவடிக்கை அறிக்கைகளை உரிய வகையில் சட்டவாக்க சபைக்கு அல்லது அதன் ஆணைக்குழுவிற்கு அல்லது கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தின் நிருவாக சபைக்கு கருத்திற்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக சமர்ப்பிக்கப்படும்.

கொள்கை 8 - நிதி மற்றும் முகாமைத்துவ/ நிருவாக சுதந்திரம் மற்றும் பொருத்தமான மானிட, பௌதீக மற்றும் நிதி வளங்கள் காணப்படல்.

- அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்குத் தேவையான மற்றும் நியாயமான மானிட, பௌதீக மற்றும் நிதி வளங்கள் இருத்தல் வேண்டும். இவ் வளங்களைப் பெற்றுக்கொள்வதனை கட்டுப்படுத்துவதற்கு அல்லது செயற்படுத்துவதற்கு நிறைவேற்றுனர் முன்வராதிருத்தல் வேண்டும். அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்கள் தமது பாதீட்டினை அவர்களாலேயே முகாமைத்துவம் செய்து பொருத்தமான வகையில் ஒதுக்கீடு செய்தல்.

- சட்டவாக்க சபை அல்லது அதன் ஒரு ஆணைக்குழு அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு தமது சட்டரீதியான அதிகாரங்களுக்கு இணங்க செயற்பாடுகளை (Mandate) நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுகின்ற உரிய வளங்களை அத்தியவசியமாக வழங்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தும் பொறுப்பினை வகித்தல் வேண்டும்.

- அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வளங்கள் அவர்களின் சட்டரீதியான அதிகாரங்களுக்கு இணங்க செயற்பாடுகளை (Mandate) நிறைவேற்றிக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கக் கூடிய அளவிற்கு போதாவிடின் இது தொடர்பாக நேரடியாக சட்டவாக்க சபைக்கு மேன்முறையீடு செய்யும் உரிமை அந்த கணக்காய்வு நிறுவனங்களுக்கு உள்ளது.

அரசியலமைப்பில் குறிப்பிடப்படுவது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பதவியணியினர் அல்லாது கணக்காய்வாளர் தலைமை அதிபதி என்பதனால் ஏனைய நாடுகளைப் போல தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பதவியணியினரின் நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வையினை விபரமாக காண்பிக்க வேண்டிய தேவைப்பாடு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மூலம் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

## 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம

தேசிய கணக்காய்வு அலுவலகத்தையும் இலங்கை அரசாங்க கணக்காய்வு சேவையையும் தோற்றுவிப்பதற்காகவும் அரசாங்க நிதி தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைகளை உறுதியாகக் காட்டுவதற்காகவும் அதனுடன் சம்பந்தப்பட்ட அல்லது அதன் விளைவான விடயங்களுக்கான ஏற்பாடுகள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் குறிப்பிட்ட பிரதான பண்புகள் பின்வருமாறாகும்.

- கணக்குகள், நிதி, நிதி நிலைமை, அரசாங்க நிதிக்கட்டுப்பாடு, கணக்காய்வு நிறுவனங்களின் ஆதனங்களைப் பரீட்சித்தல் மற்றும் செயலாற்றல் கணக்காய்வு, சுற்றாடல் கணக்காய்வு, தொழில்நுட்ப கணக்காய்வு, மற்றும் ஏனைய விசேட கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இயலுமான வகையில் நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டிருத்தல்.

- கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பாக எந்த ஒரு விடயத்தைப் பற்றி அந்த விடயத்தை உறுதிப்படுத்துவதற்கு போதியளவான சான்றுகளுடன் பொதுமக்கள் மத்தியில் யாராவது ஒரு நபர்

எமது நிறுவனம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்துமூலம் தெரியப்படுத்துவாராக இருந்தால் அந்த விடயம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பரீட்சிக்கப்பட வேண்டியதுடன் அது தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

- 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட கணக்காய்வு நியமங்கள் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வு நியமங்களை தேசிய கணக்காய்வு அலுவலகம் ஏற்றுக்கொள்வதுடன் அவை கணக்காய்விற்கு தொடர்புபடுத்தப்படுகின்றன.

- அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்க கம்பனிகளைத் தவிர்த்து, ஏதேனும் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் நிதிக்கூற்றுக்கள் அல்லது ஏதேனும் கணக்குகள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்கின்ற நிறுவனத்திற்கு ஒவ்வொரு நிதி ஆண்டும் முடிவடைந்ததன் பின்னர் ஐந்து மாதங்களுக்குள் பொழிப்பு அறிக்கையினை வழங்குதல் வேண்டும்.

- ஒரு அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்தினால் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனத்தினால் பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தினை வைத்திருக்கும் ஒரு கம்பனியின் அங்கீகரித்த வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய உரிய ஆவணங்களும் தகவல்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைத்து மூன்று மாதங்களுக்குள் தனது ஆண்டறிக்கையில் வெளியிடுவதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

- உரிய கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சருக்கும் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு பிரதியுடன் ஒவ்வொரு நிதி ஆண்டும் முடிவடைந்து ஐந்து மாதங்களுக்குள் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் நிருவாக சபைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வருடாந்த விபரமான முகாமைத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் அரசாங்கத்தின் ஒவ்வொரு நிதி ஆண்டும் முடிவடைந்து மூன்று மாதங்கள் கடப்பதற்கு முன்னர் திறைசேரி செயலாளரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

- கணக்காய்வு செயற்படுகின்ற அரசாங்க கூட்டுத்தாபனம் மற்றும்

நியதிச்சட்ட நிதியங்கள் அல்லது சபைகள் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மூலம் அல்லது அதன் கீழ் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வியாபார முயற்சிகள் அல்லது ஏனைய வியாபாரங்கள் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பபட்டுள்ளதாகக் கருதப்படுகின்ற தமது பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தினை அரசாங்கம் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களினால் வைத்துக்கொள்ளப் படுகின்ற கம்பனிகளிடமிருந்து கட்டணங்கள் அறவிடுதல் வேண்டும்.

- தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்படுகின்ற நபர்களின் சம்பளங்களும் ஏனைய படிகளும் மற்றும் வேறு ஏதேனும் நலன்கள் திரண்ட நிதியத்திற்கான ஒரு செலவாக இருத்தல் வேண்டும்.

- அனைத்து கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அவரால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள எவரேனும் ஒரு உத்தியோகத்தருக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டியதுடன் ஆக்கபூர்வமான ஒரு கணக்காய்வினை மேற்கொள்வதற்கு வசதிகளை வழங்குவதற்காக வேலை செய்வதற்குத் தேவையான பாதுகாப்பானதும் கண்காணிப்பும் உடையதுமான ஒரு சுற்றாடலினை தயார்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

- நிதி விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சரால் உறுதியாக குறிப்பிடப்படுகின்ற காலப்பகுதிக்குள் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் வருடாந்த பாதீட்டினை தயாரிக்க வேண்டியதுடன் சபாநாயகரால் தீர்மானிக்கப்படுகின்ற திகதியில் அதனை அவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்த மதிப்பீடு 10 நாட்களுக்குள் நிதி அமைச்சரின் அவதானிப்புக்களை சபாநாயகர் பெற்று பாராளுமன்றத்தில் முன்வைத்தல் வேண்டும். பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுகின்ற மதிப்பீட்டை தேசிய பாதீட்டில் உள்ளடக்குவதற்காக சபாநாயகரினால் நிதி அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அல்லது அதிகாரமுள்ள உத்தியோகத்தருக்கு உதவியளிக்காமை ஒரு குற்றம் என அதிகாரச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- இரகசியத்தன்மையை கவனத்தில் கொள்ளாது எழுத்துமூல அல்லது இலத்திரனியல் அறிக்கை, ஏடுகள், ஆவணங்கள் அல்லது தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அதிகாரம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- எந்த ஒரு நபரின் அல்லது நிறுவனத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்து கணக்காய்வு செலவினை அறவீடு செய்வதற்காக கணக்காய்வு கட்டணத்தை நிர்மாணிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- அறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காக கால அட்டவணையை நிர்ணயித்தல்.

- தேசிய கணக்காய்வு அலுவலகத்தை கணக்காய்வு செய்வதற்கு தகைமைபெற்ற சுதந்திரமான ஒரு கணக்காய்வாளர் சபாநாயகரினால் நியமிக்கப்படுவதுடன் அவரின் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

- இவ் அதிகாரச் சட்டத்தின் மூலம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் இருத்தலும் அவற்றின் ஆக்கபூர்வமான செயற்பாடும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தகவல்களை வழங்குகின்ற நபர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் பாராளுமன்றத்திற்கு தமது அறிக்கையை சமர்ப்பித்ததன் பின்னர் அவற்றை பொது மக்கள் பெற்றுக்கொள்வதற்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்தில் அதனை வெளியிடுதல் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் அல்லது அவரது பதவியணியிலுள்ள ஒரு உத்தியோகத்தரால் நேர்மை விசுவாசம் அல்லது அந்தக் கருத்தோடு மேற்கொள்கின்ற ஏதாவது நடவடிக்கையினால் அல்லது அரசியலமைப்பின் கீழ் நிறைவேற்றப்படுகின்ற முழுமையான சட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக உருவாகின்ற சட்டரீதியான நடவடிக்கைகளில் இருந்து அவர்கள் விடுவிக்கப்படுகின்றார்.

## எமது நிறுவனக் கட்டமைப்பு

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் தலைவர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாவதுடன் அலுவலகத்தின் நிதிசார் நடவடிக்கை சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் செயற்படுகின்றார். தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் நிகழ்கால தாபன கட்டமைப்பு நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணி யினருக்கு இணங்கும் வகையில்

ஒவ்வொரு மட்டத்திற்கும் உள்ளடக்கப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையைக் கொண்ட 5 பதவிகளை உள்ளடக்கியுள்ளது.

முதலாவது மட்டமானது 03 சிரேஷ்ட பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளை உள்ளடக்கியுள்ளது. இரண்டாவது மட்டமானது 15 பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளை உள்ளடக்கியுள்ளதுடன் அவர்களால் அரசாங்க கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான கொள்ளை ரீதியான மற்றும் ஒட்டுமொத்த அரசாங்க கணக்காய்வும் மேற்பார்வை செய்யப்படுகின்றது. பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் கீழ் 74 பிரிவுகள் ஸ்தாபிக்கப் பட்டுள்ளதுடன் அந்த ஒவ்வொரு பிரிவிற்கும் பொறுப்பாக இருக்கின்ற சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மேற்பார்வையின் கீழ் அரசாங்க மற்றும் மாகாண சபைகளின் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பிரிவுத் தலைவர்களுக்கு ஒப்படைக்கப்படுகின்ற பிரிவில் உள்ள கணக்காய்வு ‘‘கிளைகளின்’’ தலைமைத்துவம் ‘‘கிளைத்தலைவராக’’ உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது கணக்காய்வு அத்தியட்சகரால் நிறைவேற்றப்படுவதுடன் அவருக்கு நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையான கணக்காய்வு நிறுவனங்கள் ஒப்படைக்கப்படுகின்றன. அவர்கள் நான்காம் மட்டத்தை சேர்ந்தவராவர். அதற்கிணங்க உறுதியாக தமது மேற்பார்வைக்கு கொண்டு வரப்படும் கணக்காய்வுக் கிளையை செயற்படுத்த வேண்டிய முறைமையை முகாமைத்துவம் செய்தலும் மேற்பார்வை செய்தலும் தொடர்பான முழுமையான பொறுப்பு பிரிவுத் தலைவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. கிளைத் தலைவர்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உதவி கணக்காய்வு அத்தியட்சகர்கள் மற்றும் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் ஆக்கபூர்வமாகவும், வினைதிறனாகவும், சேவையில் ஈடுபட்டு அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களின் கணக்காய்வுகளை அமுற்படுத்துதல் கிளைத்தலைவர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க கிளைத் தலைவர்களுக்கு உதவியளிக்கும் இவ் உத்தியோகத்தர்கள் ஐந்தாம் மட்டத்தை சேர்ந்தவர் களாவார்கள்.

இலங்கை கணக்காய்வு நியமம், நியதிச் சட்ட மற்றும் ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகளுக்கும் அனுபவங்களுக்கும் இணங்கும் வகையில் பரீட்சிப்பு, அவதானிப்புக்கள், மற்றும் வெளிக்கள கடமைகளை தனது அங்கீகரித்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணங்கும் வகையில் நிறைவேற்றுவதன் மூலம் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களின் கணக்காய்வினை அமுற்படுத்தி தனது கிளைத் தலைவருக்கு உதவியளித்தல் கணக்காய்வு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும். மேலே குறிப்பிட்ட மூன்றாம் மட்டத்திற்குரிய 74 பிரிவுகளின் பிரிவுத் தலைவர்களில் ஒன்பது

பிரிவுகளின் 24 பிரிவுத் தலைவர்கள் மாவட்ட மட்டத்தில் பிராந்திய கணக்காய்விற்கு பொறுப்பாக செயற்படுவதுடன் அவர்களின் மேற்பார்வையானது இரண்டு பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளால் நிறைவேற்றப்படும்.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஒட்டுமொத்த நிதி மற்றும் நிருவாக நடவடிக்கைகள் சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் மேற்பார்வையின் கீழான நிருவாக நடவடிக்கைகள் பணிப்பாளர் (நிருவாகம்) இனால் தாபன கிளையின் மூலமும் நிதி நடவடிக்கைகள் பிரதம கணக்காளரினால் கணக்குப் பிரிவின் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதிப்பிரமாணம் 133 இல் குறிப்பிட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக பிரதான உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அமுற்படுத்தப்படுவதுடன் அவர் நேரடியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் செயற்பாடு மற்றும் மேற்பார்வையின் கீழ் நடவடிக்கை எடுப்பார்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாட்டின் பிரகாரம் அரசாங்க கணக்காய்வு சேவையை ஸ்தாபிப்பதற்கு தேவையான சேவை பிரமாணக் குறிப்பை அங்கீகரித்துக் கொள்வதற்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வுச் செயற்பாட்டினை தடையின்றி செயற்படுத்துவதற்காக அமைச்சரவையினால் அரசாங்க கணக்காய்வு சேவைக்காக தேசிய சம்பளங்கள், ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்த சம்பள அளவுத்திட்டத்தையும் சேவை பெயர்களையும் ஊழியர் எண்ணிக்கையையும் இலங்கை கணக்காய்வு சேவையின் மற்றும் இலங்கை பரீட்சகர் சேவையின் சம்பள அளவுத் திட்டத்திற்கு சேவைப் பெயருக்கும் ஊழியர் எண்ணிக்கைக்கும் பதிலீடு செய்து சேவைமூப்பின் அடிப்படையில் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் பதவியுயர்த்துவதற்கும் 2021 செப்தெம்ர் 13 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தமையால் அந்த நடவடிக்கைகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனையின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. கணக்காய்வுச் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் நீண்ட காலமாகக் காணப்படுகின்ற பதவியுயர்வைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இந்த இடைக்கால ஒழுங்குவிதிகளின் மூலம் குறித்த சில அளவிற்காவது தீர்த்துவைப்பதற்கான இயலுமை கிடைத்துள்ளது.

அதற்கிணங்க 2021 ஒக்டோபர் 01 ஆந் திகதியிலிருந்து அமுற்படுத்தும் வகையில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் கணக்காய்வை அமுற்படுத்துவதற்குரிய தாபன கட்டமைப்பானது திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டதுடன் புதிய தாபன கட்டமைப்பானது கீழே தரப்பட்டுள்ளது.

## தேசிய கணக்காய்வு அலுவலக நிறுவகக் கட்டமைப்பு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

| பிரதிக் கணக்காய்வாளர்கள் தலைமை அதிபதி | சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர்கள் தலைமை அதிபதி | |
|---|---|---|
| நிர்வாகம்(ADM) | நிர்வாகப் பிரிவு | S1 |
| | கணக்குப் பிரிவு | S2 |
| போக்குவரத்துஇ விமான சேவைகளஇதுறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் (TAP) | விமான சேவைகள் துறை | (AAV) |
| | போக்குவரத்துத் துறை | (COT) |
| | துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை | (PAS) |
| வங்கி, நிதி, அரசாங்க வருமான மற்றும் திறைசேரி அரசாங்க வருமானம் மற்றும் திறைசேரி (BPT) | காப்புறுதித் துறை | (INS) |
| | வங்கித் துறை | (BAN) |
| | அரசாங்க வருமானத் துறை | (PUR) |
| | திறைசேரி மற்றும் அரச கடன் துறை | (TPD) |
| கைத்தொழில், வியாபார மற்றும் வணிக, பொது நிர்வாக மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் (ITP) | கைத்தொழில், உற்பத்தி மற்றும் தொழிநுட்ப பிரிவு | (IMT) |
| | பொது நிர்வாகப் பிரிவு | (PAF) |
| | வெளிநாட்டு அலுவல்கள் பிரிவு | (PAF) |
| | வர்த்தகப் பிரிவு | (TAC) |
| நிதிக் கணக்காய்வு தவிர்ந்த ஏனைய சகல கணக்காய்வும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல் உள்ளடங்கலாக ஏனைய உதவிச் சேவைகளும் (SPA) | விசேட புலனாய்வுப் பிரிவு | (SIF) |
| | விசேட கணக்காய்வுப் பிரிவு | (PSE) |
| | கணக்காய்வு அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் | (RTP) |
| | செயலாற்றல் கணக்காய்வு | (PSE) |
| | சுற்றாடல் கணக்காய்வு | (PSE) |
| பாராளுமன்ற மற்றும் ஏனைய சுயாதீன ஆணைக்குழு, ஊடக மற்றும் தொடர்பாடல் மற்றும் இடர் முகாமைத்துவம் (PMD) | இலங்கை பாராளுமன்றப் பிரிவு | (PIC) |
| | இடர் முகாமைத்துவப் பிரிவு | (DMG) |
| | வெகுசன ஊடகப் பிரிவு | (CAM) |
| விவசாய, பெருந்தோட்ட மீன்பிடி மற்றும் நீர்ப்பாசனம் (APF) | விவசாயப் பிரிவு | (ARI) |
| | மீன்பிடி மற்றும் நீர்வள அபிவிருத்திப் பிரிவு | (FLS) |
| | நீர்ப்பாசனப் பிரிவு | (IWM) |
| | பெருந்தோட்டக் கைத்தொழில் பிரிவு | (PAL) |
| | கால்நடை வளப பிரிவு | (FLS) |
| உள்ளூராட்சி அதிகாரசபைக் கணக்காய்வு (LPS) | மிகைக்கட்டணம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகள் | (PLG) |
| | கொழும்பு | (COA) |
| | கொழும்பு | (COB) |
| | கம்பஹா | (GMP) |
| | களுத்துறை | (KLU) |
| | காலி | (GAL) |
| | மாத்தறை | (MTR) |
| | ஹம்பாந்தோட்டை | (HMB) |
| | திருகோணமலை | (TRC) |
| | அம்பாறை | (AMP) |
| | மட்டக்களப்பு | (BTC) |
| | யாழ்ப்பாணம் | (JAF) |
| | கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் | (KVM) |
| | புத்தளம் | (PTL) |
| | குருநாகல் | (KRG) |
| | மாத்தளை | (MTL) |
| | கண்டி | (KDA) |
| | கண்டி | (KDB) |
| | நுவரெலியா | (NUE) |
| | அநுராதபுரம் | (ANP) |
| | பொலொன்னறுவை | (POL) |
| | இரத்தினபுரி | (RAT) |
| | கேகாலை | (KGL) |
| | பதுளை | (BDU) |
| | மொனறாகலை | (MNG) |
| வெளிநாட்டு நிதியச் செயற்திட்டம், விளையாட்டு மற்றும் இளைஞர்அலுவல்கள் (PSY) | வெளிநாட்டு நிதிய செயற்திட்டத் துறை | (PSY) |
| | விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவகார துறை | (SYA) |
| மின்சார மற்றும் மின்வலுசக்தி (POE) | மின்சக்தித் துறை | (PWR) |
| | வலு சக்தி துறை | (ENR) |
| சுகாதார, நலன்புரி மற்றும் சமூக பாதுகாப்பு (HWS) | சுகாதாரத் துறை | (MED) |
| | உள்ளநாட்டு வைத்தியத் துறை | (MED) |
| | புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான துறை | (THO) |
| | ஆதார வைத்திய சாலைத் துறை | (THO) |
| | தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறை | (LSW) |
| | மருத்துவ வழஙகல் துறை | (MSU) |
| மத்திய அரச செலவினம், நீர்ப்பாசன மற்றும் நீர்வழங்கல் (CGW) | நீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாசன துறை | (WAS) |
| சுற்றுலா, முதலீட்டு அபிவிருத்தி, வனசீவராசிகள், வனவள கலாச்சார மற்றும் கலைகள் (TWC) | புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் துறை | (CAA) |
| | வனவள, வனவிலங்குகள் மற்றும் சுற்றாடல் துறை | (FWL) |
| | முதலீட்டு ஊக்குவிப்புத் துறை | (TIP) |
| கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி (EVT) | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் துறை | (VOT) |
| | வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை | (VOT) |
| | கல்வி வெளியீட்டுத் துறை | (EDU) |
| | கல்வித் துறை | (EDU) |
| | உயர் கல்வி துறை | (HED) |
| | திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத் துறை | (VOT) |
| வீதி, நிர்மாணிப்பு, வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி (RCH) | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை | (HUD) |
| | நெடுஞ்சாலைகள் துறை | (RAH) |
| | நிர்மாணம் மற்றும் பொறியியற் துறை | (CAE) |
| பாதுகாப்பு, நீதிமன்ற, சட்டம் மற்றும் சமாதானம் (DJL) | பொது மக்கள் பாதுகாப்புத் துறை | (JLO) |
| | தேசிய பாதுகாப்புத் துறை | (EEF) |
| | நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை | (JLO) |
| | பதிவாளர் நாயகத் துறை | (JLO) |
| → | பிரதான உள்ளகக் கணக்காய்வு | (INA) |

உதவிக் கணக்காய்வாளர்கள் தலைமை அதிபதி / கணக்காய்வு அத்தியட்சகர்கள்

உதவிக் கணக்காய்வு அத்தியட்சகர்கள் / கணக்காய்வு உத்தியோகத்தர்கள்

தேசிய கணக்காய்வு அலுவகத்தின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் தொடர்பாக மதிப்பீடு செய்ததை அடுத்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2021 செப்தம்பர் 13 ஆந் திகதி அங்கீகரித்திருந்த பதவியணியினர்களுக்கு இணங்க இலங்கை கணக்காய்வுச் சேவையின் மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 545 ஆகவும், கணக்காய்வு பரீட்சகர் சேவையின் மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 1450 ஆகவும் இருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் இருபதாவது திருத்தத்தின் பிரகாரம் இரத்துச் செய்யப்பட்ட இலங்கை கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு இருபத்தியோராவது திருத்தத்தின் பிரகாரம் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் அமுற்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு, ஒரு அரசாங்க கணக்காய்வுச் சேவையை ஸ்தாபிப்பதற்கு வரையப்பட்டிருந்த புதிய சேவை பிரமாணக் குறிப்பு அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரையில் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், 2023 யூன் 30 இல் உள்ளவாறு ஒவ்வொரு பதவிகளிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அட்டவணை இலக்கம் 02 இல் தரப்பட்டுள்ளது.

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | பதவியில் உள்ளவர்கள் | | வெற்றிடங்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2023.06.01 திகதி | 2023.06.30 திகதி | 2023.06.01 திகதி | 2023.06.30 திகதி |
| **(அ)- நிறைவேற்றுத் தரம்/ பதவிநிலை மற்றும் நிறைவேற்றுத்தரமல்லாத தரங்கள்** | | | | | | |
| 1 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 1 | 1 | 1 | 0 | 0 |
| 2 | சிரேஷ்ட பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 3 | 0 | 0 | 3 | 3 |
| 3 | பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 15 | 13 | 13 | 2 | 2 |
| 4 | பணிப்பாளர் (நிர்வாகம்) | 1 | 1 | 1 | 0 | 0 |
| 5 | பிரதான கணக்காளர் | 1 | 0 | 0 | 1 | 1 |
| 6 | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | 1 | 1 | 0 | 0 |
| 7 | சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 72 | 47 | 46 | 25 | 26 |
| 8 | உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 455 | 15 | 15 | 206 | 206 |
| 9 | கணக்காய்வு அத்தியட்சகர் | | 234 | 234 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) | 1 | 1 | 1 | 0 | 0 |
| 11 | கணக்காளர் | 1 | 1 | 1 | 0 | 0 |
| 12 | ஊதவிப் பணிப்பாளர் (தகவல் தொழிநுட்பம்) | 1 | 0 | 0 | 1 | 1 |
| 13 | சட்ட உத்தியோகத்தர் | 1 | 0 | 0 | 1 | 1 |
| 14 | நிர்வாக உத்தியோகத்தர் {கா.சே.உ.(மேலதிகம்} | 3 | 2 | 2 | 1 | 1 |
| 15 | தொழிநுட்ப உததியோகத்தர் விசேட | 1 | 0 | 0 | 1 | 1 |
| 16 | உதவி கணக்காய்வு அத்தியட்சகர் | 360 | 193 | 192 | 167 | 168 |
| 17 | கணக்காய்வு உத்தியோகத்தர் | 1090 | 769 | 765 | 321 | 325 |
| 18 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 3 | 2 | 2 | 1 | 1 |
| 19 | மொழிபெயர்ப்பாளர் | 10 | 8 | 8 | 2 | 2 |
| 20 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 73 | 54 | 53 | 1 | 20 |
| 21 | நூலகர் | 1 | 1 | 1 | 0 | 0 |
| 22 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் - I | 1 | 0 | 0 | 1 | 1 |
| 23 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 6 | 2 | 2 | 4 | 4 |
| 24 | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 121 | 119 | 119 | 2 | 2 |
| 25 | அறிக்கை தயாரிப்பாளர்* | 41 | 39 | 39 | ** | ** |
| 26 | ஓப்செட் லிதோ அச்சு இயந்திர இயக்குனர் | 1 | 0 | 0 | 1 | 1 |
| | | <u>2264</u> | <u>1503</u> | <u>1496</u> | <u>741</u> | <u>766</u> |
| **(ஆ) – கனிஷ்ட ஊழியர்** | | | | | | |
| 1 | சாரதி | 48 | 43 | 44 | 5 | 4 |
| 2 | சுற்றுலா விடுதி பொறுப்பாளர் | 13 | 7 | 7 | 6 | 6 |
| 3 | மின்சார தொழில்நுட்பவியளாளர் | 1 | 1 | 1 | 0 | 0 |
| 4 | நீர் குழாய் தொழில்நுட்பவியளாளர் | 1 | 1 | 1 | 0 | 0 |
| 5 | அலுவலக செயற்பாட்டு உதவியாளர் | 148 | 135 | 137 | 13 | 11 |
| 6 | திணைக்கள வேலையாள் ** | 2 | 1 | 1 | ** | ** |
| | | <u>213</u> | <u>188</u> | <u>191</u> | <u>24</u> | <u>21</u> |
| **<u>பொழிப்பு</u>** | | | | | | |
| | நிறைவேற்றுத் தரம்/ பதவிநிலை மற்றும் நிறைவேற்றுத்தரமல்லாத தரங்கள் | 2264 | 1503 | 1496 | 741 | 766 |
| | கனிஷ்ட ஊழியர் | 213 | 188 | 191 | 24 | 21 |
| | | <u>2477</u> | <u>1691</u> | <u>1687</u> | <u>765</u> | <u>787</u> |

அட்டவணை 02 - பதவியணியினர் நிலைமை 2023 யூன் 01 இல் உள்ளவாறும் 2023 யூன் 30 இல் உள்ளவாறும்

தேசிய கணக்காய்வு அலுவலகத்தை வலுப்படுத்துவதற்காக 21/1274/301/017 ஆம் இலக்க மற்றும் 2021 செப்தெம்பர் 13 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் செயற்பாடுகளை மிகவும் வினைதிறனாக நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் பதவியணியினரை விரிவுபடுத்தியுள்ளதுடன் அத்தேவைப்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு அரசாங்க கணக்காய்வு சேவை முறைப்படியாக தோற்றுவிக்கப்படும் வரை புதிய பதவியணியினரை சேவை மூப்பின் அடிப்படையில் பதவியுயர்த்துவதன் மூலம் அடைந்து கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் இது வரையிலும் செயற்பட்டுள்ளது.

## அரச கணக்காய்வு சேவை பிரமாணக் குறிப்பு

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு பதவியணி இலங்கை கணக்காய்வு சேவை மற்றும் இலங்கை பரீட்சகர் சேவையின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கியதாகும். 6/2006 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த இரண்டு சேவைகளுக்குமாக தனித்தனியான சேவைப் பிரமாணக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டிருந்தும் அதற்காக பதவியணியினரிடமிருந்து பல்வேறு பிரேரணைகள் மற்றும் வேண்டுதல்கள் தொடர்பாக மேலும் கருத்திற்கொள்வதற்காக சனாதிபதியின் செயலாளரால் ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்தது. அக்குழுவானது முன்னாள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தலைமைத்துவத்தில் இரண்டு முன்னாள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளினதும் சனாதிபதியின் மேலதிக செயலாளரின் அங்கத்துவத்தையும் உள்ளடக்கியிருந்தது. அக்குழுவின் பரிந்துரையைக் கவனத்தில் கொண்டு இலங்கை கணக்காய்வு சேவை மற்றும் இலங்கை பரீட்சகர் சேவை ஆகிய இரண்டு சேவைகளையும் ஒன்றிணைத்து "இலங்கை அரசாங்க கணக்காய்வு சேவை" என்ற பெயரில் புதிய ஒரு சேவையினை உருவாக்குவதற்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2014 திசெம்பர் 23 ஆந் திகதி அங்கீகாரம் கிடைத்திருந்தது

அவ் அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க இலங்கை கணக்காய்வு சேவையும் இலங்கை பரீட்சகர் சேவையும் ஒன்றிணைக்கப்பட்டு ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த "இலங்கை அரசாங்க கணக்காய்வு சேவை" யை தோற்றுவித்தல் ஒரு அரசாங்க கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க புதிய சேவைக்காக சேவை பிரமாணக் குறிப்பொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. புதிய சேவைப் பிரமாணக் குறிப்பை அங்கீகரித்தக் கொள்வதன் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் கடமைகளை மிகவும் ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்கு

மிகவும் விரிவான தொழில்சார் மட்டத்தில் பதவியணியைப் பேணுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

## தகைமை பெற்ற கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்துதல்

கணக்காய்வு பதவியணியில் காணப்பட்ட வெற்றிடங்களின் காரணமாக உருவாகிய வளங்களின் இடைவெளியை தீர்த்துவைப்பதற்காகவும் அரசாங்க கம்பனிகள், அரசாங்க வங்கிகளின் கணக்காய்வு போன்ற விசேட சந்தர்ப்பங்களின் போது போன்ற தேவைப்படுகின்ற விசேட சேவைகளுக்காகவும் தகைமைபெற்ற கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்துவது அவசியமானதாகும். அதற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (4)(அ)உறுப்புரையின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க சேவையில் ஈடுபட்டுள்ள கணக்காய்வு கம்பனிகளுக்கு அவர்கள் வழங்கிய கணக்காய்வு சேவைகளுக்காக 2022 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 31.2 மில்லியன் மற்றும் 31.9 மில்லியன் செலுத்தப்பட்டது. தகைமைபெற்ற கணக்காய்வாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளும் போது அவர்களால் முன்னர் வழங்கப்பட்ட சேவைகளின் தரம் கம்பனியில் கணக்காய்வு பரீட்சகர்களை சேர்த்து கொண்டமையால் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் உரிய கம்பனிகளை இருக்கின்ற பங்குதாரர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுடன் சேவையில் ஈடுபட்டுள்ள கணக்காய்வு பயிலுனர்களின் எண்ணிக்கை போன்ற விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன. அதற்கு மேலதிகமாக கணக்காய்வுக் கம்பனிக்கு உள்ள சர்வதேச தொடர்புகள் மற்றும் அவர்கள் வழங்கும் தொழில்சார் சேவைகளின் தன்மை முதலிய விடயங்கள் அவர்களை தெரிவு செய்யும் வரையறைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, கணக்காய்வாளர்களை தெரிவு. பெறுகை நடைமுறைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டதுடன் சராசரியாக ஒரு கணக்காய்வு கம்பனிக்கு உச்ச அளவில் 05 ஆண்டுகள் காலத்திற்கு தொடர்ச்சியாக ஒரு கணக்காய்வு பொறுப்பு ஒப்படைக்கப் பட்டுள்ளது.

பத்தொன்பதாவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நோக்கெல்லைக்கு உள்ளடக்கப்பட்ட 50 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட அரசாங்க உரிமையுள்ள 125 கம்பனிகளில் 17 கம்பனிகளை கணக்காய்வு செய்வதற்காக மாத்திரம் பிரசித்த தொழிலில் ஈடுபட்டுள்ள 02 கம்பனிகள் எனக்கு உதவியளித் துள்ளன. அதற்கு மேலதிகமாக இலங்கை மத்திய வங்கி மற்றும் 27 விளையாட்டு சங்கங்களை கணக்காய்வு செய்வதற்காகவும் தகைமைபெற்ற 13 கணக்காய்வாளர்களின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது.
நேரடியாக கணக்காய்வு செய்வதற்கு உட்படுத்துதல் மற்றும் பிரதான இரண்டு வர்த்தக வங்கிகளின் கிளைகளை

கணக்காய்வு செய்வதற்காக தகைமைபெற்ற கணக்காய்வாளர்களை நியமிக்காமைக்கு எடுத்த தீர்மானத்தின் காரணமாக 2017 ஆம் ஆண்டிலிருந்து ஈடுபடுத்தப்பட்ட உதவிபுரிந்த கணக்காய்வு கம்பனிகளின் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க வங்கிகளை கணக்காய்வு செய்வதற்காக தேவையான தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பிரசித்த தொழிலில் ஈடுபட்டுள்ள பட்டயக் கணக்காய்வாளர்களின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது.

## பாராளுமன்றத்திற்கு உதவியளித்தல்

அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாடு பாராளுமன்றத்திடம் உள்ளது. அரசாங்க கணக்களிப் பொறுப்பு முறைமை தொடர்பாக பிரதான பங்களிப்பை வழங்குகின்ற தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் நிதி பொறுப்பாண்மை மற்றும் அரசாங்க நிறுவனங்களின் செயற்பாட்டில் சிக்கனத்தன்மை, ஆக்கபூர்வத் தன்மை, விளைதிறன் என்பன தொடர்பாக நேரடியாக பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுகின்ற அரசாங்கத்தின் வெளிக் கணக்காய்வாளராக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளை 119 மற்றும் 120 இன் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்க கணக்குகள் தொடர்பான குழு (COPA) பொது முயற்சிகள் தொடர்பான குழு (COPE) என அறிமுகப்படுத்தப்பட்ட பாராளுமன்றத்தின் குழுக்களின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற அறிக்கைகள் ஆய்வுசெய்யப்படும். இந்த இரண்டு குழுக்களின் மூலம் அரசாங்க கணக்குகள் ஆய்வு செய்யப்படுவதன் மூலம் அரசாங்க நிதி மற்றும் வளங்கள் முறைப்படியாக பயன்படுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பாக பரீட்சிப்பதற்கு சட்டவாக்க சபைக்கு உதவியளிப்பதாகும். எனவே அரசாங்கத் துறையின் கணக்களிப்பிற்கான பொறுப்பு மற்றும் வினைத்திறனான கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக மிகவும் முக்கியமான கடமைகள் இந்த இரண்டு குழுக்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

நிலையியல் கட்டளை 119 இன் கீழ் தோற்றுவிக்கப்பட்ட அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவின் செயற்பாடுகளாக பொதுமக்களின் செலவுகளுக்காக பாராளுமன்றத்தினால் வழங்கப்படுகின்ற பணத்தை ஒதுக்கீடு செய்வதனைக் காட்டுகின்ற கணக்குகளும் அரசாங்கத்தின் கணக்குகள் தொடர்பான குழுவினால் பொருத்தமானது என கருதக்கூடிய பாராளுமன்றத்தின் முன்னிலையில் வைக்கப்படுகின்ற ஏனைய சில கணக்குகளும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உதவியுடன் ஆய்வு செய்யப்படுகின்றமையைக் குறிப்பிட வேண்டும். பொதுவாக ஏதாவது திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தின் கணக்குகள், நிதிக்கூற்றுக்கள், நிதி நடைமுறைகள், செயலாற்றல் முகாமைத்துவம் என்பவற்றை ஆய்வுசெய்தலும்

அதிலிருந்து உருவாகின்ற எந்தவொரு விடயமும் தொடர்பாக அரசாங்கத்தின் கணக்குகள் தொடர்பான குழுவினால் பாராளுமன்றத்திற்கு காலத்திற்கு காலம் அறிக்கையிடப்படும்.

நிலையியல் கட்டளை 120 இன் கீழ் தோற்றுவிக்கப்படுகின்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் கடமைகளாவது அரசாங்க கூட்டுத்தாபனம் முழுமையாக அல்லது ஒரு பகுதி அரசாங்கத்தினால் நிதி வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களின் கணக்குகள் மற்றும் ஏதாவது எழுத்திலான சட்டத்தின் மூலம் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்ட ஏதாவது வியாபாரம் அல்லது ஏனைய ஒப்படைப்பு சம்பந்தமாக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உதவியுடன் பரீட்சிக்கப்படும். ஏதாவது அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது ஏதாவது எழுத்திலான சட்டத்தின் மூலம் அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்ட வியாபாரம் அல்லது ஒப்படைப்புக்களின் பரீட்சிக்கப்பட்ட கணக்குகள் சம்பந்தமான பாதீடும் வருடாந்த மதிப்பீடும் நிதி, நிதி நடைமுறைகள், செயலாற்றல் மற்றும் வழமையான முகாமைத்துவம் மற்றும் அதனுடன் உருவாகின்ற ஏதாவது விடயம் தொடர்பாக பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் காலத்துக்குக் காலம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அவசியமெனக் கருதுகையில் குழு வினாலேயே அங்கத்தவர்களை உள்ளடக்கிய ஒரு துணைக் குழுவினை நியமிப்பதற்காக அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவினைப் போல பொது முயற்சிகள் தொடர்பான குழுவிற்கும் இயலுமை காணப்படுவதுடன் குழுவினைப் போல அதன் துணைக் குழுவிற்கும் அவற்றிற்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக யாராவது ஒரு நபரை அழைத்து கேள்வி கேட்கும் அதிகாரம் ஏதாவது ஒரு கடிதம், புத்தகம், பதிவேடு அல்லது வேறு ஆவணங்களைப் பெற்று பரீட்சிக்கும் அதிகாரம், களஞ்சியங்களுக்குற்றும் ஏனைய ஆதனங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடங்களுக்கு செல்லும் அதிகாரம் உள்ளது.

பாராளுமன்றத்தின் ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் முறைப்படியாக பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தெரிவுக் குழுவினால் பெயரிடப்படுகின்ற 16 உறுப்பினர்கள் வீதம் இருக்கும் வகையில் அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவும் பொது முயற்சிகள் தொடர்பான குழுவும் உள்ளடங்கியிருக்கும். அரசாங்கத்தின் கணக்குகள் தொடர்பான குழு மற்றும் பொது முயற்சிகள் தொடர்பான குழு ஆகிய இரண்டு குழுக்களினதும் பரீட்சிப்பிற்குப் பின்னர் அவற்றின் சிபாரிசுகளை நிறைவேற்றுனர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார் என்பது மாத்திரமின்றி அச்சிபாரிசுகள் ஆக்கபூர்வமாகவும் முழுமையாகவும் அமுல்ப்படுத்தப்பட்டதா, மிகவும் முக்கியமான வகையில் நிதி செயற்திறன் மற்றும் சேவை தரம் தொடர்பாக சாதகமான மாற்றம் நிகழ்ந்துள்ளதா என்பதனை ஆய்வு செய்து அமுற்படுத்தும் நடைமுறை தொடர்பாக குழுவிற்கு மீள அறிக்கை சமர்ப்பித்தலும்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் / அல்லது அவரின் பிரதிநிதிகள் நேரடியாக அக்குழுவிற்கு உதவியளிப்பார்கள். அங்கு கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படுகின்ற நிறுவனத்துக்குரிய கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட முக்கியமான அவதானிப்புக்களின் தற்போதைய நிலைமையை பரீட்சித்து நாளதுவரையாக்கப் பட்ட அவதானிப்புக்களுடன் தற்போதைய செயலாற்றல் தொடர்பாக குழுவின் கலந்துரையாடலுக்குப் பொருத்தமான அவதானிப்புக்களை உள்ளடக்கிய கலந்துரையாடல் குறிப்பொன்று தயாரிக்கப்பட்டு குழுவிற்குச் சமர்ப்பிக்கப் படுவதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு குழுவின் தலைவர் கலந்துரையாடலை நடாத்துவார்.

கலந்துரையாடலுக்குப் பயன்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களுக்குரிய தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாட்டு செயலாற்றல் தொடர்பான எழுத்துமூல தகவல்களை உள்ளடக்கிய ஒரு அறிக்கையை வழங்குவதற்காக உரிய அரசாங்க நிறுவனத்திற்கு வழமையாக ஒரு மாத காலம் குழுவினால் வழங்கப்படுகின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஓர் பிரதியுடன் சமர்ப்பிக்கப்படும் இவ் அறிக்கையை அடிப்படையாக் கொண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கூறிய கலந்துரையாடல் குறிப்பு தயாரிக்கப்படுவதுடன் முன்னர் நடாத்தப்பட்ட கூட்டங்களின் போது வழங்கப்பட்ட பணிப்புரைகளை அமுற்படுத்தும் செயல்முன்னேற்றம் பரீட்சிக்கப்பட்டு அது தொடர்பாக மேலும் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்களும் அந்த கலந்துரையாடல் குறிப்பில் வேறாக உள்ளடக்கப்படும். கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதன் பிரதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்படுவதனால் அதனை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடலை நடாத்துதல் குழுவிற்கு வசதியாக இருக்கும்.

குழுக்கூட்டச் சந்தர்ப்பத்தின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமையாவது கலந்துரையாடலுக்கு உட்படுகின்ற விடயங்கள் தொடர்பான பின்னணித் தகவல்களை வழங்கி கருத்திற்கொள்ளப்படும் விடயம் தொடர்பான கருத்துகளைத் தெரிவிப்பதன் மூலம் குழுவிற்கு உதவியளிப்பதாகும். அதன் போது, உரிய விடயங்கள் தொடர்பாக அதே போல குழு அங்கத்தவர்களால் எழுப்பப்படும் வினாக்களுக்கும் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்ட நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் சமர்ப்பிக்கும் விடயங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிப்பதும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பெரும்பாலும் மேற்கொள்ளப்படும்.

அதற்கிணங்க 2021 ஆம் ஆண்டின் போது அரசாங்க கணக்குக் குழுவினால் 20

நிறுவனங்களை பரீட்சிப்பதற்காக கோரப்பட்டிருந்ததுடன் அதன் போது 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை கலந்துரையாடுவதற்கு 19 கூட்டத் தொடர்களும் விசேட கணக்காய்வு அறிக்கைகளை கலந்துரை யாடுவதற்கு குழுவின் 08 கூட்டத் தொடர்களும் செயலாற்றல் அறிக்கைகளை கலந்துரையாடுவதற்காக குழுவின் 04 கூட்டத்தொடர்களுமாக நடாத்தப்பட்ட 31 கூட்டத்தொடர்களுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அக்குழுக்களுக்கு பங்களித்திருந்தார். அதேபோல அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவால் 26 நிறுவனங்களை பரீட்சிப்பதற்காக கோரப்பட்டிருந்ததுடன் அதன் போது 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை கலந்துரையாடுவதற்கு 30 கூட்டத் தொடர்களும் விசேட கணக்காய்வு அறிக்கைகளை கலந்துரையாடுவதற்கு குழுவின் 06 கூட்டத் தொடர்களுமாக 36 அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தொடர்களுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி உதவியளித்திருந்தார். அதற்கிணங்க இரண்டு குழுக்களும் 2021 ஆம் ஆண்டின் போது 46 நிறுவனங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை கலந்துரையாடுவதற்காக அழைக்கப்பட்டிருந்த 67 கூட்டத் தொடர்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி உதவியளித்திருந்தார்.

இதற்கு மேலதிகமாக குறிப்பாக அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்பவற்றின் நிதிக்கட்டுப்பாட்டையும் செயலாற்றலினையும் மதிப்பீடு செய்வதற்கான தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட வினாக் கொத்துக்களைத் தயாரிப்பதற்காக 2022 ஆம் ஆண்டின் போது தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவிற்கு உதவியளித்திருந்தார்கள். மேலும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அவ் வினாக்கொத்திற்கு வழங்கிய பதில்களின் சரியான தன்மையை பரீட்சித்து அது குறித்து அறிக்கையிடுவதன் மூலம் உரிய மதிப்பீட்டு நடவடிக்கையை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி மேலும் அக்குழுவிற்கு உதவியளித்துள்ளார்.

இவ்வாறே, நிதி தொடர்பான குழு, பாதீடு தொடர்பான குழு முதலிய பல்வேறு பாராளுமன்றக் குழுக்களுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் உத்தியோகத்தர்களை பங்குபற்றச் செய்வதன் மூலமும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நியதிச்சட்ட கடமைகளுக்கு மேலதிகமாக பல்வேறு வழிகளிலும் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி உதவியளித்துள்ளார்.

8 வாரங்களுக்குள் தனது அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கையிடுவதற்காக நிதி விடயத்திற் குப் பொறுப்பான அமைச்சருக்கும் நிறுவனத்திற்கும் பொறுப்பான அமைச்சருக்கும் அனுப்பிவைக்கப்பட்ட பாராளுமன்ற நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் பிரகாரம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் கணக்குகள் தொடர்பான குழுவின் அறிக்கை தொடர்பான பாராளுமன்ற வெளியீட்டுத் தொகுப்பு இல 114 இற்கு உரித்தாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பதில் அறிக்கையை பரீட்சித்து மீண்டும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் ஆண்டிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி யினால் நிறைவேற்றப்பட்ட மற்றுமொரு விசேட செயற்பாடாகும்.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் விதிக்கப்பட்ட மிகைக் கட்டணம்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம், 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருவதுடன் அதன் 19 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களால் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தில் ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு முரணாக இடம்பெற்றுள்ளது எனவும் அக்கொடுக்கல் வாங்கல்களின் மூலம் அதனுடன் தொடர்புபட்ட நபர்களின் மோசடி, கவனயீனம், பிழையான நடத்தை அல்லது ஊழலின் காரணமாக ஏதேனும் குறைகள் அல்லது நட்டங்கள் ஏற்பட்டுள்ளது என நம்புவதற்கு கணக்காய்வு சேவை ஆணைக்குழுவிற்கு நியாயமான காரணம் காணப்படும் சந்தர்ப்பத்தில் ஏதேனும் கொடுக்கல் வாங்கலின் காரணமாக இடம்பெற்ற அனைத்துக் குறைபாட்டிற்கும் நட்டத்திற்கும் உரிய பெறுமதி கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினால் மிகைக்கட்டணம் விதிப்பதற்காக அக்கொடுக்கல் வாங்கல் காரணமாக ஏற்பட்ட அனைத்துப் பற்றாக்குறைகள் அல்லது நட்டங்களுக்குரிய பெறுமதியை அக்கணக்காய்வு மேற்கொள்ளப்படும் நிறுவனத்தின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

அவ்வாறு அறிக்கையிடப்படுகின்ற பெறுமதியை அப்பற்றாக்குறைக்கு அல்லது நட்டத்திற்கு பொறுப்புக் கூறக்கூடிய நபரிடமிருந்து கூட்டாகவோ அல்லது வெவ்வேறாகவோ அறவீடு செய்யும் பொறுப்பு குறித்த பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தமது செயற்பாட்டை நிறைவேற்றும் போது தான் தெரிந்து கொள்வதற்கு கிடைத்த தகவல்களை ஏனைய நபர்களுக்கு வெளிப்படுத்துவதற்கு தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 09 ஆம் பிரிவின்

பிரகாரம் வரையறைகள் விதிக்கப்பட்டிருந்தமை மற்றும் கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 19 ஆம் பிரிவை அமுற்படுத்துவதற்குத் தேவையான கணக்காய்வு தகவல்களை கணக்காய்வு தலைமை அதிபதியிடமிருந்து கணக்காய்வு சேவை ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டிய முறை தொடர்பாக சட்டரீதியான ஏற்பாடு இல்லாமையின் அடிப்படையில் மிகைக் கட்டண நடைமுறையை அமுற்படுத்துவதற்காக அவ்வாறான சட்டரீதியான ஏற்பாட்டினை உள்ளடக்கும் வகையில் கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்ய வேண்டுமென சட்டமா அதிபரால் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந் நிலைமையின் கீழ் கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மிகைக் கட்டண நடைமுறையை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

எவ்வாறாயினும், தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் அமுற்படுத்தப்பட முன்பிருந்தே பல்கலைக்கழகங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரித்தான மிகைக் கட்டணம் விதிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வேறு எழுத்திலான சட்டங்களின் மூலம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் அந்த மிகைக் கட்டண நடைமுறை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பங்கேற்பில் முன்னையவாறே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதற்கிணங்க இந்த மிகைக்கட்டண நடைமுறையை மேலும் செயலூக்கப்படுத்தும் தேவைப்பாட்டை வலியுறுத்துவதுடன் இதற்காக மிகைக் கட்டணம் விதிப்பனவு நடவடிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முடிவிற்குக் கொண்டுவரப்படுவதற்கும் இது தொடர்பான மேன்முறையீடுகளைக் கருத்திற்கொள்ளும் பொருட்டு கணக்காய்வு சேவை ஆணைக்குழுவிற்கும் ஒப்படைக்கப்படுவதற்காக தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகள் திருத்தப்படுவது ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படுவது மிக உகந்ததென பரிந்துரைக்கப்படுகின்றது. இதற்காக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பந்திக்காக ஏற்ற திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

### உள்ளூராட்சி நிறுவனங்களில் மிகைக் கட்டணங்களை அறவீடு செய்தல்

இலங்கையில் 341 உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளதுடன் 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் அவற்றிற்கு உரியவைகளாகும். இந்த உள்ளூராட்சி நிறுவனங்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரை, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் தொடர்புடைய கட்டளைச் சட்டங்கள் மற்றும் அதிகாரச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்வு செய்யப்படும்.

அக் கட்டளைச் சட்டங்கள் மற்றும் அதிகாரச் சட்டங்களிலிருந்து சட்டத்திற்கு முரணான கொடுப்பனவு விடயங்கள், கவனயீனம் அல்லது தவறான நடத்தைகளால் ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் கணக்குகளில் காட்டப்பட வேண்டிய எனினும், காண்பிக்கப்பட்டிராத விடயங்களை மிகைக்கட்டணம் விதிப்பதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த அதிகாரத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 135 தரப்பினர்களுக்கு ரூபா 261,095 மில்லியன் தொகையான 10 மிகைக் கட்டண சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

## பொது மக்களின் முறைப்பாடுகளை பரீட்சித்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பான எந்தவொரு விடயம் குறித்தும் உறுதிப்படுத்துவதற்கு போதியளவு சாட்சிகளுடன் பொதுமக்களிடம் இருந்து எவரேனும் ஒருவரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்துகையில் அது குறித்து பரீட்சிக்க இயலும் என்பதுடன் அது குறித்து பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்

தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு பொது மக்கள் தனிப்பட்ட ரீதியில் அல்லது பொது மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு சங்கங்களினூடாக கிடைக்கும் எழுத்துமூல முறைப்பாடுகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்காக அலுவலகத்தில் தனியான ஒரு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அப்பிரிவின் மூலம் நிறுவனத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு மேலதிக ஆய்விற்காக அதன் விசேட புலனாய்வு மற்றும் தடைய கணக்காய்வுப் பிரிவிற்கு மற்றும்/ அல்லது பல்வேறு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களில் அமைந்துள்ள கணக்காய்வுக் கிளைகளுக்கு அல்லது பிராந்திய ரீதியாக அமைந்துள்ள புலனாய்வுப் பிரிவிற்கு அத்தகவல்கள் அனுப்பிவைக்கப்படும். அனுப்பி வைக்கப்பட்ட அத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும் கணக்காய்வின் மூலம் மேற்கொள்ளப்படும் அவதானிப்புக்களை அவற்றின் பொருண்மை மற்றும் தரத்தினை கவனத்திற்கொண்டதை அடுத்து குறித்த கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிறுவனம் தொடர்பாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்குவதற்கு அல்லது விசேட அறிக்கை/செயலாற்றல் அறிக்கையின் மூலம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு தேசிய கணக்காய்வு அலுவலகம் நடவடிக்கை எடுக்கும். எவ்வாறாயினும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 09 ஆம் பிரிவில் காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தி அக்கணக்காய்வின் பெறுபேறுகள் நேரடியாக உரிய முறைப்பாட்டைச் சமர்ப்பித்த நபருக்கு

தெரிவிக்கப்படுவதில்லை. எனினும், அனாமோதைய முறைப்பாடுகளை தவிர்த்து ஏனைய முறைப்பாடுகள் சம்பந்தமாக அவை பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றியும் அவை பரீட்சிக்கப்பட்டு பொருத்தமான வகையில் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவற்றை அனுப்பிய தரப்பினர்களுக்கு தெரிவிக்கப்படும்.

2021 ண்டின் போது தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு 2,111 பொது மக்கள் முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அந்த முறைப்பாடுகளில் 1,416 முறைபாடுகள் அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிறுவனங்களின் நிருவாக ரீதியான விடயங்கள் சம்பந்தமானதுடன் 57 முறைப்பாடுகள் பல்வேறு தரப்பினரின் துயரங்கள் சம்பந்தமானவைகளாகும். மேலும், 305 முறைப்பாடுகள் நிறுவன ரீதியான மோசடிகள் மற்றும் ஊழல்கள் சம்பந்தப்பட்டவைகளாக இருந்ததுடன் 28 முறைப்பாடுகள் பல்வேறு தரப்பினர்களின் தனிப்பட்ட விடயங்கள் சம்பந்தப்பட்டவைகளாகும். அவ்வாறே இந்த முறைப்பாடுகளுக்கிடையே 318 முறைப்பாடுகள் அனுப்பியவர்களின் அடையாளத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 1,378 முறைப்பாடுகள் பெயர் குறிப்பிடாது சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இவற்றில் அதிகளவானவை போதிய அளவில் அல்லது குறித்த அளவான சாட்சிகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இவற்றில் பெருமளவானவை போதிய அல்லது ஓரளவேனும் சாட்சிகளுடன் சமா்ப்பிக்கப்பட்டிருந்தன. சாட்சிகள் எதுவும் இல்லாது கிடைக்கும் முறைப்பாடுகளும் ஆய்விற்கு உட்படுத்தப்படும்.

மேலதிக புலனாய்வு நடவடிக்கைகளுக்காக எழுத்துமூல முறைப்பாடுகள் அனுப்பிவைக்கப்படும் பிரிவு வகைப்படுத்தல் மேற்கொள்ளப்படுகையில் முக்கியமாக கல்வித் துறைக்காக 334 முறைப்பாடுகளும் உள்ளுராட்சி துறைக்காக 268 முறைப்பாடுகளும் சுகாதார துறைக்காக 176 முறைபாடுகளும் பிரதேச செயலகங்கள் சம்பந்தமாக 172 முறைப்பாடுகளும் விவசாய சுற்றாடல் மற்றும் ஊழியர் நலன்புரி ஆகிய துறைகளுக்காக முறையே 119, 58 மற்றும் 46 ஆக முறைபாடுகள் கிடைத்திருந்ததுடன் அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்களுக்காக மேலும் 769 முறைபாடுகள் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்தன.

## பதவியணியினர் பயிற்சி

அரசாங்க வளங்களை சிக்கனமாகவும் ஆக்கபூர்வமாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்துவதை வலுப்படுத்துவதற்குத் தேவையான பங்களிப்பு மற்றும் வழிகாட்டிகளை வழங்குவதன் மூலம் இலங்கை மக்களுக்கு சிறந்த மற்றும் நம்பகரமான அரசாங்க சேவையை வழங்குவதை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் அரசாங்க நிறுவனங்களின் நிதி மற்றும் செயலாற்றல் கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பான கணக்களிப்பிற்கான பொறுப்பு சரியான

முறையில் நிறைவேற்றப் பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சித்து பாராளுமன்றத்திற்கு அறிக்கை யிடப்படும்.

இந் நியதிச்சட்ட ரீதியான கடமைகளை நிறைவேற்றுவதற்காக 1302 கணக்காய்வு உத்தியோகதர்களும் துணைச் சேவைகளிற்கு உரித்தான 417 உத்தியோகத்தர்களும் அடங்கிய பதவியணியினரின் பங்களிப்பு தற்போது தேசிய கணக்காய்வு அலுவகத்தினால் பெறப்பட்டுள்ளது.

அந்த நியதிச்சட்ட ரீதியான கடமைகளை ஆக்கபூர்வமாகவும், விளைதிறனாகவும் நிறைவேற்றும் வகையில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பதவியணியினர் பின்வரும் துறைகளினூடாக நிகழ்கால மற்றும எதிர்காவத் தேவைப்பாட்டிற்கு நிகரான வகையில் அறிவினாலும் திறமையினாலும் வலுப்படுத்தும் தேவைப்பாடு இனங்காணப்பட்டுள்ளது.

- அறிவினையும் தொழில்நுட்ப திறனையும் அபிவிருத்தி செய்தல்
- விளைதிறனையும் செயலாற்றலினையும் அதிகரித்தல்
- முகாமைத்துவ ஆற்றலினை முன்னேற்றுதல்
- கடமையை நிறைவேற்றுவதற்கு தேவைப்படுகின்ற அறிவு, கருவிகள் மற்றும் தொழில்நுட்ப ஞானத்தை வழங்குதல்
- நிதிசார்ந்த மற்றும் சேவை சார்ந்த சட்டங்கள் சம்பந்தமாக அறிவினை வழங்குதல்
- குழு உணர்வினை அபிவிருத்தி செய்தல்
- நன்னடத்தையை முன்னேற்றுதல்

அந்த குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் எதிர்பார்ப்புடன் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அனைத்து உத்தியோகத்தராலும் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திக்காக (Continuous Professional Development - CPD) ஆண்டொன்றிற்கு 100 மணித்தியாலத்திற்கு குறையாத கொள்கை ரீதியான, செயன்முறை ரீதியான உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பயிற்சி கற்கை நெறிகளை பூர்த்தி செய்யும் தேவைப்பாடு தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சித் தேவைப்பாட்டு ஆய்வின் (Training Need Assessment) பிரகாரம் உத்தியோகத்தர்களின் தொழில்சார் அபிவிருத்திக்காக வழங்கப்பட வேண்டியவை என இனங்காணப்பட்ட பின்வரும் துறைகளை உள்ளடக்கும் வகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கும் செயற்பணியை தேசிய கணக்காய்வு அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.

- நிதிக் கணக்காய்வு
- புலனாய்வுக் கணக்காய்வு
- செயலாற்றல் கணக்காய்வு
- சுற்றாடல் கணக்காய்வு
- தடயக் கணக்காய்வு
- பெறுகைகள் மற்றும் நிர்மாணங்கள் கணக்காய்வு

- செயற்திட்ட கணக்காய்வு
- இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கணக்காய்வு நியமங்கள்
- வரிவிதிப்பு
- கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் 5 ஆம் பந்திகளின் தேவைப்பாடு.
- உள்ளூராட்சி அதிகாரசபைகளின் கணக்குகளும் கணக்காய்வும்
- மிகைக்கட்டண செயற்பாடுகள்
- கணக்காய்வு அறிக்கையிடல்
- கணனி இயலுமையை விருத்தி செய்தல்
- மொழித்திறன் இயலுமையை விருத்தி செய்தல்

அந்த குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் எதிர்பார்ப்புடன் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின்ஒவ்வொரு உத்தியோகத்தரினாலும் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திக்காக (Continuous Professional Development - CPD) ஒரு ஆண்டிற்கு 100 மணித்தியாலத்திற்கு குறையாத கொள்கை ரீதியாகவும் செயன்முறை ரீதியாகவும் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் பயிற்சி கற்கை நெறிகளை பூர்த்தி செய்யும் தேவைப்பாடு தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கிணங்க உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் கடமைகளை தொழில்சார் மட்டத்தில் மேற்கொள்வதற்கு தேவையான திறமைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பயிற்சி பிரிவினால் ஒழுங்குபடுத்தல், அதற்காக அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல், அவர்களை ஊக்கப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அதன் போது வளப்பகிர்வாளர்களாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கும் தகமையுள்ள திறமையான உத்தியோகத்தர்களின் உதவியை போன்று தேவைக்கேற்ற வகையில் வெளி விரிவுரையாளர்களின் உதவியியையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான விரிவுரை, கலந்துரையாடல், செயன்முறைப் பயிற்சி, வெளிக்கள சுற்றுப் பயணம் போன்றவற்கை ஈடுபடுத்தி உரிய பயிற்சித் தேவைப்பாடுகள் அடைந்து கொள்ளப்படுகின்றன.

### உள்நாட்டுப் பயிற்சிகளை வழங்குதல்

மேற்கூறிய குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் வகையில் 2022 ஆம் ஆண்டில் தேசிய கணக்காய்வு அலுவலகப் பயிற்சிப் பிரிவால் கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்காக மேற்குறித்த துறைகள் உள்ளடக்கும் வகையில் 3 மாதங்களிற்குள் 36 பயிற்சி நிகழ்ச்சித்திங்களும் 2021 ஆம் ஆண்டில் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்ட புதிய கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்காகவும் 2022 ஆம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட கணக்காய்வு அல்லாத பதவியணியினருக்காக இரு தொடக்கப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. இல.18/2020 ஆம்

இலக்க "அரச மொழிக் கொள்கை செயற்படுத்தல்" எனும் பெயரில் பொது நிர்வாக சுற்றறிக்கையில் பிரகாரம், கணக்காய்வுப் பதவியணியினருக்கும் கணக்காய்வு அல்லாத பதவியணி உத்தியோகத்தர்களுக்காகவும் அரச மொழித் திறனை விருத்தி செய்வதற்கு தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு பயிற்றுவிப்புகள்

2022 ஆம் ஆண்டின் போதும் இரு உத்தியோகத்தர்கள் ITEC புலமைப் பரிசில் நிகழச்சித்திட்டத்தின் கீழ் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்து கொண்டிருந்ததுடன் இணையதள வழியூடாக நெறிப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செயலமர்வுகள் இரண்டிற்காக இரு உத்தியோகத்தர்கள் பங்கேற்கச் செய்யப்பட்டிருந்தனர்.

2022 ஆம் ஆண்டின் போது தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்காக மேலே குறிப்பிட்ட துறைகளை உள்ளடக்கும் வகையில் நடாத்தப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரம் அட்டவணை இலக்கம் 03 இல் தரப்பட்டுள்ளது.

| | நிகழ்ச்சித்திட்ட விபரம் | நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை | பங்கேற்ற உத்தியோகத்தர்கள் | | | | | | பயிற்சி மணித்தியாலம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பகுதித் தலைவர்கள் கலந்துகொண்ட சந்தர்ப்பங்கள் | உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி/ கணக்காய்வு அத்தியட்சகர்கள் பங்கேற்ற சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | உதவிக் கணக்காய்வு அத்தியட்சகர்கள் பங்கேற்ற சந்தர்ப்பங்களின எண்ணிக்கை | கணக்காய்வு உத்தியோகத்தர்கள் பங்கேற்ற சந்தர்ப்பங்களின எண்ணிக்கை | கணக்காய்வு அல்லாத உத்தியோகத்தர்கள் பங்கேற்ற சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | கூட்டுத்தொகை | |
| | | | | | | | | | |
| | உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள | | | | | | | | |
| 1 | நிதிக் கணக்காய்வு பயிற்சி | 33 | 111 | 281 | 184 | 581 | - | 1,157 | 8,504 |
| 2 | வரிவிதிப்பனவு தொடர்பான பயிற்சி | 2 | 26 | 108 | 27 | 406 | - | 567 | 4,111 |
| 3 | பெறுகை தொடர்பான பயிற்சி | 1 | 13 | 80 | 40 | 219 | - | 352 | 10,280 |
| 4 | புதிய உத்தியோகத்தர்களுக்கான தொடக்க பயிற்சி | 2 | - | - | - | 54 | 56 | 54 | 2,770 |
| | மொத்தம் | **38** | | | | | | **2,130** | **25,664** |
| | **வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | | | | | | |
| 1 | ITEC புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம் 2022/2023 அரச துறையின் பாதீடு, கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ( Budgeting, Accounting and Financial Management in Government Sector) | 1 | - | 2 | - | - | - | 2 | 131 |
| 2 | காலநிலை செயலாற்றல் கணக்காய்வுப் பயிற்சி (Climate Performance Audit Training)) | 1 | - | 1 | - | - | - | 1 | 12 |
| 3 | அரச துறையின் நிலைபேறான அறிக்கையிடலை விருத்திசெய்தல் (இணைய வழிவாயிலாக) (Advancing Public Sector Sustainability Reporting) | 1 | - | 1 | - | - | - | 1 | 4 |

அட்டவணை 03: 2022 ஆம் ஆண்டின் போது தேசிய கணக்காய்வு அலுவலக உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட ள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரம்

மூலம்:தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பயிற்சிப் பிரிவு

**வெளி நிறுவனங்களுக்கு வளவாளர்களை வழங்குதல்**

தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள 7 உத்தியோகத்தர்கள் 2022 ஆம் ஆண்டின் போது தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் கணக்காய்விற்குச் சமாந்திரமான துறைகள் தொடர்பாக ஏனைய அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் திறன்களை வளர்ப்பதற்காக அந் நிறுவனங்களின் வேண்டுகோளிற்கமைய தமது வளப்பகிர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் |
|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று |
| அறிக்கையிடலின் அடிப்படை |
| 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று |

## 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | உண்மை நிலை | |
|---|---|---|
| | **2022**<br>ரூபா | **2021**<br>ரூபா |
| **நிதியல்லாத சொத்துக்கள்** | | |
| **ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்** | 1,481,951,627 | 1,452,918,947 |
| | | |
| **நிதி சொத்துக்கள்** | | |
| **முற்பணக் கணக்குகள்** | 194,108,547 | 224,242,476 |
| **காசு மற்றும் காசுக்குச் சமனானவை** | - | - |
| | | |
| **மொத்த சொத்துக்கள்** | **1,676,060,174** | **1,677,161,423** |
| | | |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | |
| **திறைசேரிக்கான தேறிய சொத்துக்கள்** | (67,047,400) | 49,419,013 |
| **ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்** | 1,481,951,627 | 1,452,918,947 |
| **வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்** | | |
| | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| **வைப்புக் கணக்குகள்** | 261,155,947 | 174,823,463 |
| **தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி** | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **1,676,060,174** | **1,677,161,423** |

இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2022 பெப்ரவரி ஆந் திகதி

ஜீ.எஸ். கருணாரத்ன
பிரதான கணக்காளர்

2022 பெப்ரவரி ஆந் திகதி

# அறிக்கையிடலின் அடிப்படை

## அறிக்கையிடல் காலம்

இந்த நிதிக்கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலம் சனவரி 01 முதல் 2022 திசெம்பர் 31 வரை ஆகும்.

## அளவீட்டின் அடிப்படை

குறிப்பிட்ட சொத்துக்களின் மறுமதிப்பீட்டின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட வரலாற்றுக் கிரயத்தில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதுடன் , வேறுவிதமாக குறிப்பிடப்படாத வரையில் திருத்தியமைக்கப்பட்ட பண அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களின் புள்ளிவிவரங்கள் இலங்கை ரூபாயில் அருகில் உள்ள ரூபாய்க்கு வட்டமிடப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றது.

## வருமான அங்கீகாரம்

தொடர்புடைய வருமான காலத்தைப் பொருட்படுத்தாமல் கணக்கீட்டுக் காலத்தின் போதான பண பற்றுச்சீட்டுக்களின் பரிமாற்றம் மற்றும் பரிமாற்றம் அல்லாத வருமானங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

## சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் அங்கீகாரம் மற்றும் அளவீடு (PP&E)

சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படியானது, சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மை நிறுவனத்திற்கு பாயும்போது மற்றும் சொத்துக்களின் விலை நம்பகத்தன்மையுடன் அளவிடப்படும்போது அது அங்கீகரிக்கப்படுகிறது.

PP&E கிரயத்தில் அளவிடப்படுகிறது மற்றும் கிரய மாதிரி பொருந்தாத போது மறுமதிப்பீட்டு மாதிரி பயன்படுத்தப்படுகிறது.

## சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் ஏற்பாடு

இந்த ஏற்பாட்டுக் கணக்கு சொத்து பொறி மற்றும் உபகரணங்களுடன் தொடர்புடைய கணக்காகும்.

## பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை

2022 திசெம்பர் 31 இல் கையில் உள்ள உள்நாட்டு நாணயத் தாள்கள் மற்றும் நாணயங்கள் என்பன பணம் மற்றும் பணத்திற்குச் சமமானவையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## நிதியல்லாச் சொத்துக்கள்

மீளாய்வாண்டில் நிதியல்லாச் சொத்துக்களை வாங்குவதற்காக செலவிடப்பட்ட ரூபா 133,270.00 ஆனது 2022 ஆம் ஆண்டில் வாங்கிய சொத்தின் மீதான செலவாக இருப்பதால், திறைசேரியின் நிதிக்கூற்றுக்களில் தொடக்க நிலுவைகளின் கீழ் சீராக்கம் செய்யப்பட்டது.

| 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று | | | |
|---|---|---|---|
| பாதீடு 2022 ரூபா | | உண்மையானது | |
| | | | திருத்தப்பட்ட |
| | | 2022 ரூபா | 2021 ரூபா |
| - | **வருமானப் பெறுகைகள்** | 489,581,029 | 348,678,099 |
| - | வருமான வரி | - | - |
| - | உள்ளுர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள் | - | - |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | - | - |
| **300,000,000** | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 489,581,029 | 348,678,099 |
| **300,000,000** | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | **489,581,029** | **348,678,099** |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | 1,532,936,000 | 1,426,015,000 |
| - | வைப்புக்கள் | 190,875,670 | 138,531,867 |
| - | முற்பணக் கணக்குகள் | 80,667,273 | 83,398,507 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | 5,509,635 | 4,570,132 |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | **1,809,988,578** | **1,652,515,506** |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | **2,299,569,607** | **2,001,193,605** |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | **103,715,921** | **68,514,459** |
| - | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | **2,195,853,687** | **1,932,679,146** |
| | **கழி : செலவினம்** | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | - | - |
| **1,758,350,183** | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 1,740,721,144 | 1,579,046,154 |
| **337,729,817** | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 319,461,981 | 242,889,315 |
| **16,000,000** | மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள் | 14,499,269 | 13,168,281 |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | - | - |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | - | 34,698 |
| **2,112,080,000** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | **2,074,682,394** | **1,835,138,448** |
| | **மூலதனம் செலவினம்** | | |
| **12,000,000** | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 6,724,786 | 7,415,964 |
| **6,739,940** | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 6,730,671 | 4,670,023 |
| - | மூலதன மாற்றல்கள் | - | - |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | - | - |
| **1,760,060** | திறன் விருத்தி | 1,602,007 | 1,445,665 |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | - | - |
| **20,500,000** | **மொத்த மூலதனச் செலவினம் (எ)** | **15,057,464** | **13,531,652** |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | 104,543,186 | 76,096,982 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | 50,533,345 | 79,461,594 |
| | ஏனைய பிரதான பேரேட்டு கொடுப்பனவுகள் | 5,509,635 | 4,570,132 |
| | **மொத்த பிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | **160,586,166** | **160,128,708** |
| **2,132,580,000** | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | 2,250,326,024 | 2,008,798,808 |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ஒ = (உ-ஐ)** | (54,472,338) | **(76,119,662)** |
| | **பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி** | **(54,472,338)** | **(76,119,662)** |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | - | |

நிதிக்கூற்றுக்கள்

| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று | | |
|---|---|---|
| | உண்மை நிலை | |
| | | திருத்தப்பட்ட |
| | 2022<br>ரூபா | 2021<br>ரூபா |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | - |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | 489,581,029 | 348,678,099 |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 78,011,355 | 77,718,554 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 1,532,936,000 | 1,426,015,000 |
| முற்பணங்களை அறவிடல் | 81,525,178 | 85,093,512 |
| வைப்புக்களின் பெறுகை | 190,875,670 | 138,531,867 |
| ஏனைய பிரதான பேரேட்டு பெறுகைகள் | 5,509,635 | 4,570,132 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **2,378,438,867** | **2,080,607,164** |
| கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு: | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 2,064,649,400 | 1,830,269,066 |
| மானியங்களும் மாற்றல் கொடுப்பனவுகளும் | 14,499,269 | 13,168,281 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 28,578,887 | 3,567,631 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 103,715,921 | 68,514,459 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 50,211,898 | 79,750,590 |
| வைப்புக் கொடுப்பனவுகள் | 104,543,186 | 76,096,982 |
| ஏனைய பிரதான பேரேட்டு கொடுப்பனவுகள் | 5,509,635 | 4,570,132 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **2,371,708,196** | **2,075,937,141** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)ஸ்ரீ(அ)-(ஆ)** | **6,730,671** | **4,670,023** |
| முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ) | - | - |
| கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு: | | |
| பௌதீகச் சொத்துக்களின் கொள்வனவு அல்லது நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 6,730,671 | 4,670,023 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **6,730,671** | **4,670,023** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)ஸ்ரீ(ஈ)-(உ)** | **(6,730,671)** | **(4,670,023)** |
| தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ) +(ஊ) | - | - |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | |
| உள்ளுர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ) | - | - |
| *கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:* | | |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ) | - | - |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஓ)ஸ்ரீ(ஏ)-(ஐ) | - | - |
| காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)ஸ்ரீ(எ)¸(ஓ) | - | - |
| ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி | - | - |
| திசெம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி | - | - |

# விசேட புலனாய்வுத் துறை

## புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் / சம்பவங்கள் / நிறுவனங்கள்

- அறுவக்காலு சுகாதார கழிவு தேங்கும் செயற்திட்டத்தை குறித்துரைத்த ஒரு பகுதி
- திரிபோஷ கம்பனியின் 2021 பெப்ரவரி 02 ஆந் திகதியில் காணப்பட்ட கிலோ கிராம் 300,000 பூர்த்தி செய்யப்பட்ட திரிபோஷ இருப்பு
- இமதுவ நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் குறித்துரைத்த ஒரு பகுதி
- தேசிய பயிற்சி அதிகார சபையில் தெரிவு செய்யப்பட்ட நிருவாகப் பிரிவு
- கொழும்பு மாநகர சபையின் ஆதனங்கள் மற்றும் நிதி மோசடிகள்
- கொழும்பு மாநகர சபையின் மோட்டார் வாகன தரிப்பிடத்தின் நிர்வாகம்
- கொழும்பு மாநகர சபைக்குரிய பொரள்ளை மயான நிலத்திற்கு பொறுப்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தரின் செயற்பாடுகள்.
- சுகாதாஸ தேசிய விளையாட்டு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல்
- கண்டி மாவட்டத்தின் மெதவள பிரதேச வைத்தியசாலையின் நிர்வாகம்
- இலங்கை கனிப்பொருள் கம்பனி 2020 ஆம் ஆண்டின் போது இல்மனைற் தொன் 85,000 கேள்வி கோரல்
- அநுராதபுர மாவட்டத்தில் 2011-2012 ஆம் ஆண்டுகளில் வெள்ளத்தினால் பாதிப்பிற்குட்பட்ட வீதிகளின் மறுசீரமைப்பு.
- லேக்ஹவுஸ் நிறுவனத்தால் 2020 பொது தேர்தலில் கொள்கை வெளியீட்டை அச்சிடுதல்.
- இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பள அதிகரிப்பு செலுத்துதல்
- இணையவழி (Online) மொடியூல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.

# விசேட புலனாய்வுத் துறை

கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக அரச கணக்காய்விற்காக அரசியலமைப்பில் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை அமுல்படுத்துதலை ஒழுங்குமுறையாகவும், இலகுவானதாகவும் மேற்கொள்வதற்காக கணக்காய்வு பதவியணியினர் பல்வேறு விடயங்களுடன் தொடர்புடைய கணக்காய்வு பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டு அதற்காக விசேட பணிகள் கையளிக்கப்பட்டுள்ளது. அதன் போது ஏதாவது கணக்காய்வு நிறுவனத்திற்குரிய சில கொடுக்கல் வாங்கல்கள் அல்லது சம்பவங்கள் தொடர்பாக புலனாய்வு விசாரணை ஒன்றை மேற்கொள்ளும் தேவையொன்று எழும்போது புலனாய்வு கணக்காய்வு பணிகளை மேற்கொள்வதற்காகவும் மற்றும் ஏனைய பிரிவுகளில் மேற்கொள்ளப்படுகின்ற அவ்வாறான கணக்காய்வுகளுக்கு உதவியினை காண்பிப்பதற்காகவும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற விசேட புலனாய்வு மற்றும் தடயவியல் கணக்காய்வு தொடர்பாக பயிற்சிபெறற் மற்றும் அனுபவம் உள்ள உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய விசேட புலனாய்வு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் எங்களுக்கு கிடைக்கின்ற பொது மக்கள் முறைப்பாடுகள், அரசாங்கக் கணக்குக் குழு மற்றும் பொது முயற்சிகள் குழுக் கூட்டங்களின் போது வழங்கப்படுகின்ற அறிறுத்தல்கள், அரச நிறுவனங்களின் தலைவர்கள், ஊடகங்களினால் வெளியிடப்படுகின்ற விடயங்கள், காலரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார, சமூக விடயங்கள், எங்களால் கவனத்தில் கொள்ளப்படுகின்ற ஏனைய தொழில்ரீதியான தேவைகளையும் அடிப்படையாக கொண்டு விசேட கணக்காய்வு புலனாய்வுக்கு உட்படுத்துதல் பொருத்தமானது என என்னால் தீர்மானிக்கப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் இந்த புலனாய்வு பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்படுகின்றது.

சில சந்தர்ப்பங்களின் போது இந்தப் பிரிவின் உத்தியோகத்தர்கள் ஏனைய கணக்காய்வு பிரிவுகள் / கிளைகளுக்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டு விசேட புலனாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டின் போது விசேட புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் தொகுதிகளுக்கு இடையே பொருண்மையான முக்கியமான பரிசோதனைகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் / சம்பவங்கள் / நிறுவனங்கள்**

1. அறுவக்காலு சுகாதார கழிவு தேங்கும் செயற்திட்டத்தை குறித்துரைத்த ஒரு பகுதி

2. திரிபோஷ கம்பனியின் 2021 பெப்ரவரி 02 ஆந் திகதியில் காணப்பட்ட கிலோ கிராம் 300,000 பூர்த்தி செய்யப்பட்ட திரிபோஷ இருப்பு
3. இமதுவ நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் குறித்துரைத்த ஒரு பகுதி
4. தேசிய பயிற்சி அதிகார சபையில் தெரிவு செய்யப்பட்ட நிருவாகப் பிரிவு
5. கொழும்பு மாநகர சபையின் ஆதனங்கள் மற்றும் நிதி மோசடிகள்
6. கொழும்பு மாநகர சபையின் மோட்டார் வாகன தரிப்பிடத்தின் நிர்வாகம்
7. கொழும்பு மாநகர சபைக்குரிய பொரள்ளை மயான நிலத்திற்கு பொறுப்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தரின் செயற்பாடுகள்.
8. சுகாதாஸ தேசிய விளையாட்டு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல்
9. கண்டி மாவட்டத்தின் மெதவள பிரதேச வைத்தியசாலையின் நிர்வாகம்
10. இலங்கை கனிப்பொருள் கம்பனி 2020 ஆம் ஆண்டின் போது இல்மனைற் தொன் 85,000 கேள்வி கோரல்
11. அநுராதபுர மாவட்டத்தில் 2011-2012 ஆம் ஆண்டுகளில் வெள்ளத்தினால் பாதிப்பிற்குட்பட்ட வீதிகளின் மறுசீரமைப்பு.
12. லேக்ஹவுஸ் நிறுவனத்தால் 2020 பொது தேர்தலில் கொள்கை வெளியீட்டை அச்சிடுதல்.
13. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பள அதிகரிப்பு செலுத்துதல்
14. இணையவழி (Online) மொடியூல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.

எனினும் 2022 ஆம் ஆண்டு நாட்டில் காணப்பட்ட போக்குவரத்து பிரச்சினைகள் மற்றும் கலவர நிலைமைகளில் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக வெளிச்செல்வதற்கு காணப்பட்ட வரையறையான நிலைமையினால் கணக்காய்வு மற்றும் கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களின் பதவியணியினர் அலுவலகங்களில் இருந்து கடமைகளை நிறைவேற்றுதல் ஒப்பிட்டுரீதியில் குறைவடைந்தமை இந்த புலனாய்வு பிரிவின் பொறுப்புக்களுக்கு வரையறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்த புலனாய்வு பிரிவினால் வெளிப்படுத்தப்பட்டுள்ள சில அவதானிப்புக்கள் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 மற்றும் 12 பிரிவுகளின் பிரகாரம் விநியோகிக்கப்படுகின்ற அறிக்கைகளிலும், சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் விசேட அறிக்கையிலும், அரசியலமைப்பின் 154 உறுப்புரையின் படி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதுடன் சில அவதானிப்புக்கள் முகாமைத்துவத்திற்கு விநியோகிக்கப்படுகின்ற அறிக்கைகளிலும் உள்ளடக்கப்படுகின்றது.

எனினும் ஏனைய பிரிவுகளுக்கு நியமிக்கப்பபடுகின்ற பதவியணியினர் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஏனைய பிரிவுகள் / கிளைகளுக்காக நிரந்தரமாக மற்றும் தற்காலிகமாக நியமித்தல், புலனாய்வு கணக்காய்விற்காக ஒப்பீட்டுரீதியில் கணிசமான காலம் எடுக்கின்றமை மற்றும் கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக பதிலை பெற்றுக்கொள்வதற்கு கனிசமான காலம் எடுகின்றமை என்பவற்றால் அந்த பதிலை மீண்டும் மீண்டும் மீளாய்வுசெய்வதற்கு ஏற்படுவதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்படுகின்ற புலனாய்வுக் கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கைகளில் உள்ளடக்குதல் அனேகமாக எதிர்வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

# விசேட கணக்காய்வுத் துறை

## 2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைகள

- மத்திய கலாச்சார நிதியத்தின் தொழிற்பாடு தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை
- ஒரு கிலோ கிராம் சீனிக்காக விதிக்கப்பட்டிருந்த விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை ரூபா 50 இல் இருந்து 25 சதம் வரை குறைக்கப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நிவாரணம் நுகர்வோரைச் சென்றடைதல் தொடர்பான ஆய்வுக்கான விசேட கணக்காய்வு அறிக்கை
- இலங்கையின் நிதி முகாமைத்துவம் மற்றும் அரச கடன் நிர்வாகம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை 2018-2022
- சேதனப் பசளை மெற்றிக் தொன் 96,000 பெறுகை தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை
- நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி அனல்மின் நிலையத்திற்கு 2022-2025 காலப்பகுதிக்குரிய நிலக்கரி கொள்வனவிற்கான பெறுகை நடைமுறையை மதிப்பீடு செய்தல் தொடர்பிலான விசேட கணக்காய்வு அறிக்கை
- நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இலகு ரயில் போக்குவரத்து செயற்திட்டம் (கொழும்பு தொடக்கம் மாலம்பே வரை) இலங்கை அரசாங்கத்தினால் ஒருதலைப்பட்சமாக முடிவுறுத்தப்பட்டமை தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

# 2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 154 ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் விசேட அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் கணக்காய்வு செய்யப்படும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள்சபைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் இனங்காணப்பட்ட விசேட சம்பவங்கள் தொடர்பில் இந்த அறிக்கையை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த விசேட கணக்காய்வு அறிக்கைகளை வெளியிடும் போது பொது முயற்சிகள் குழு, அரச கணக்குகள் குழு ஆகியவற்றால் வழ்கப்பட்டு கட்டளைகளை மற்றும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனங்களின் தலைவர்களின் கோரிக்கைகளும், தேசிய மற்றும் கால அடிப்படையில் முக்கியத்துவம் தொடர்பில் கவனம் செலுத்தி ஊடக வெளியீடுகள் மமற்றும் மக்களின் முறைப்பாடுகள் ஆகியவை தொடர்பில் கருத்திற்கொண்டு எனக்கு சாட்டப்பட்டுள்ள தற்றுணிபு அதிகாரத்தின் அடிப்படையில் விசேட கணக்காய்வு அறிக்கைகளுக்கான விடயங்கள் தீர்மானிக்கப்படும்.

கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு 06 விசேட கணக்காய்வு அறிக்கைகள் 2022 ஆம் ஆண்டினுள் வெளியிடப்பட்டதுடன், அந்த அனைத்து அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், இந்த அறிக்கை தொடர்பில் அக்கறை செலுத்தும் தரப்பினரின் பயன்பாட்டுக்காக, தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு அலுவலகத்தின் வலைதளத்தில் அந்த அறிக்கைகள் மும்மொழிகளிலும் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டினுள் வெளியிடப்பட்ட ஒவ்வொரு விசேட அறிக்கைகளையம் வெளியிடுவதற்கு பின்பலமாக அமைந்த விடயங்கள் மற்றும் அந்த ஒவ்வொரு அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டுள்ள நிறைவேற்றும் பொழிப்புரைகள் கீழே காணப்படுகின்றது.

### மத்திய கலாச்சார நிதியத்தின் தொழிற்பாடு தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை

இலங்கையில் கலாச்சார உரிமைகளை உலகளாவிய அற்புதங்களாக்குவதைத் தொலைநோக்காக அறிந்து கொண்டு 1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச்சட்டத்தின் கீழ் “மத்திய கலாச்சார நிதியம்” உருவாக்கப்பட்டுள்ளது. அந்த நிதியத்தின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு என்பன நிர்வாகச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் கலாசார

நடவடிக்கைகள் தொடர்பில் விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் நிதியத்தின் பிரதான நிர்வாக அதிகாரியாவார். இவ்வாறு நிர்வகிக்கப்படும் இந்த நிதியத்தின் பிரதான வருமான மார்க்கமாக கலாசார உரிமை மிக்க இடங்களைப் பார்வையிட வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் வருமானம் கண்டறியப்பட்டுள்ளதுடன் அந்த வருமானம் நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு எவ்வளவு துாரம் உற்பத்தித் திறன் மிக்கதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதனைப் பரீட்சிப்பதற்காக இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பிற்கமைய இந்த நிதியத்தினை நிர்வகிப்பதற்கான அதிகாரம் கொண்ட நிர்வாகச் சபை நடப்புக் காலத்தில் கூட்டப்பட்டிருக்காததுடன் நிர்வாகச் சபை நியமிக்கப்பட்ட அமைப்பிற்கமைய தயாரிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. மேலும், அந்த நிதியத்தினால் சட்டத்தின் ஒரு சில குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஒழுங்கான விதிக் கோவையொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், இந்த கணக்காய்வு பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்ட 2015 – 2019 காலப்பகுதியினுள் நிதியத்தின் மொத்தச் செலவின் 38-58 சதவீதம் வரையான வீச்சில் ஊழியர் பராமரிப்பிற்காகச் செலவிடப்பட்டுள்ளதுடன் அதற்கு ஒப்பாக நிதியத்தின் முக்கிய நோக்கத்தினை நிறைவேற்றுவதற்குச் செலவிடப்பட்ட தொகை குறைந்த சதவீதத்தினையே கொண்டிருந்தது. மேலும், கலாசார மற்றும் சமய இடங்களைப் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளுக்காக நிதியினை வழங்குகையில் ஒழுங்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்குத் கட்டுப்பாட்டுச் சபை தவறியிருந்தது என்பதுடன், மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரகாரம், வருமானத்தினைச் சேகரிக்கும் அதிகாரம் வழங்கப்படாத கலாச்சார முக்கோண வலயத்திற்கு அப்பாற்பட்ட சமய மற்றும் கலாசார முக்கியத்துவம்வாய்ந்த இடங்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் அனுமதிப் பத்திரம் வழங்கி 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஜுன் மாதம் வரையிலும் ரூபா.13,552 மில்லியன் வரையான வருமானத்தை ஈட்டுவதற்கு நிதியம் நடவடிக்கை எடுத்திருந்தது.

மேலும், நிதியத்திற்கான பதவியணிக்கு ஆட்சேர்ப்பு செய்கையில் அங்கீகர்க்கப்பட்ட பதவியணியிணை மீறி மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு, ஆட்சேர்ப்பு செய்யும் பதவியணிக் கட்டமைப்பினுள் இல்லாத பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் உள்ளிட்ட ஊழியர் முகாமைத்துவத்தினுள் கருத்திற் கொள்ளத்தக்க மட்டத்தில் சிக்கல்கள் காணப்படுகின்றது என்பதும் அவதானிக்கப்பட்டது. மேலும், நிதியத்தின் பல்வேறு செயற்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடுகளை வழங்கும் போது, குறித்த செயற்திட்டங்களை தேர்ந்தெடுப்பதற்கான அளவுகோல்கள், திட்டத்தின் மதிப்பை நிர்ணயிக்கும் அதிகாரம் குறித்த

நிச்சயத்தன்மையொன்ற காணப்படவில்லை. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் உள்ளிட்ட இந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்படுகின்ற அனைத்துக் காரணிகளுக்கும் அமைய இந்த நிதியத்தினை உகந்த மற்றும் உற்பத்தித் திறன் கொண்டதாக இட்டுச் செல்வதற்குத் தேவையான ஒழுங்கு விதிகளை உடனடியாக மேற்கொள்வதற்கான தேவைப்பாட்டினை இந்த அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கின்றேன்.

**ஒரு கிலோ கிராம் சீனிக்காக விதிக்கப்பட்டிருந்த விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை ரூபா 50 இல் இருந்து 25 சதம் வரை குறைக்கப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நிவாரணம் நுகர்வோரைச் சென்றடைதல் தொடர்பான ஆய்வுக்கான விசேட கணக்காய்வு அறிக்கை**

2020 ஒக்தோபர் மாதத்தின் போது அரசினால் 1 கிலோ கிராம் சீனிக்காக விதிக்கப்பட்ட விசேட வியாபார பண்ட அறவீட்டினை ரூபா 50 இலிருந்து .25 சதம் வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறு வரி குறைக்கப்பட்டமையால் அரசாங்கத்திற்கு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்து ரூபா 16,763 மில்லியன் அளவிலான வரி வருமானம் 2021 பெப்ரவரி மாதமளவில் இழக்கப்பட்டிருந்ததுடன், நுகர்வோருக்கும் அரசு எதிர்பார்த்த வகையிலான நலனொன்று கிட்டியிருக்கவில்லை எனும் விடயம் கலந்துரையாடலுக்கு உட்பட்டிருந்தது. இந்த விடயங்களை கருத்திற்கொண்டும் அரச கணக்குகள் குழுவினால் எனக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கையொன்றுக்கு இணங்கவும் இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது.

இலங்கையின் வெள்ளை மற்றும் சிவப்பு சீனி ஆகியவற்றின் மாதாந்த சராசரி நுகர்வு சுமார் 50,000 மெற்றிக் தொன்களாக காணப்படுவதுடன், இலங்கையின் தற்போதைய மாதாந்த சீனி உற்பத்தியின் சராசரி 4,359 மெற்றிக் தொன்கள் ஆகும். அதன் பிரகாரம், இலங்கையின் மாதாந்த நுகர்விற்காக சுமார் 45,000 மெற்றிக் தொன்கள் அளவான சீனிக்கான பற்றாக்குறையொன்று நிலவுவதுடன், அந்த பற்றாக்குறை இறக்குமதியின் ஊடாக பூர்த்தி செய்யப்படுகின்றது.

1974ஆம் ஆண்டின் போது 46 மெற்றிக் தொன் அளவான சீனி இறக்குமதி செய்யப்பட்டதன் மூலம், இலங்கையின் சீனி இறக்குமதி ஆரம்பிக்கப்பட்டதுடன், இந்த அளவானது கிரமமாக அதிகரித்து 2020ஆம் ஆண்டளவில் வருடமொன்றுக்கு சராசரியாக 596,000 மெற்றிக் தொன் அளவான சீனி இறக்குமதி செய்யப்படுகின்றது.

எவ்வாறான போதிலும், அண்மைக்காலமாக சீனி இறக்குமதியை வலுவிழக்கச்செய்தல் மற்றும் அரசாங்கத்திற்கு வருமானமொன்றினை ஈட்டும் நோக்கில் அரசு அவ்வப்போது இறக்குமதி செய்யப்பட்ட சீனி மீது வரி விதித்தது. அதன் பிரகாரம், 2020ஆம் ஆண்டளவில் 1 கிலோ கிராம் சீனிக்காக ரூபா 50 வரி விதிக்கப்பட்டிருந்தது. எனினும், மக்களுக்கு வாழ்வாதார நலனொன்றை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அரசினால் 2020 ஒக்தோபர் 14ஆந் திகதி இந்த வரியானது 25 சதம் வரை குறைக்கப்பட்டிருந்தது.

எவ்வாறான போதிலும், தனியார் துறையினரால் மாத்திரம் இலங்கைக்கு சீனி இறக்குமதி செய்யப்படுவதுடன், அரச துறைக்கான சீனி விற்பனை லங்கா சதொச நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் போது வரி குறைக்கப்பட்டதன் பின்னர் லங்கா சதொச நிறுவனம் அவ்வப்போது தனியார் துறையின் இறக்குமதியாளர்களிடமிருந்து சீனியை கொள்வனவு செய்து விற்பனை செய்யும் போது 2020 ஒக்தோபர் 14 ஆந் திகதி( வரி குறைக்கப்பட்ட திகதியிலிருந்து) 2021 பெப்ரவரி 08 (கட்டுப்பாட்டு விலை அகற்றப்பட்ட திகதி வரையிலும்) ரூபா 102 மில்லியனான நட்டமொன்று லங்கா சதொச நிறுவனத்திற்கு ஏற்பட்டிருந்தது.

மேலும், சீனி இறக்குமதியை மட்டுப்படுத்தும் நோக்கில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் அனுமதிப்பத்திர முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த நடைமுறையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. பாவனையாளர்கள் அலுவலகள் அதிகாரசபையினால் அவ்வப்போது சீனிக்காக கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்ட போதிலும், அதன் மூலம் நாட்டில் சீனி விலையில் கட்டுப்பாடெடான்றினை எதிர்பார்த்தவாறு இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், சீனிக்காக விதிக்கப்பட்டிருந்த வரியினை குறைத்ததன் மூலம் அரசினால் எதிர்பார்க்கப்பட்ட நுகர்வோருக்கான நிவாரணம் வழங்கும் நோக்கத்தினையும் அடைய முடியாதவாறு இறக்குமதியார்கள் மற்றும் வியாபாரிகள் உள்ளடங்களான வியாபாரத் தரப்பினருக்கு கூடுதலான பொருளாதார நலனை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. குறித்த இறக்குமதியாளர்களிடையே பிரமிட் வில்மா நிறுவனத்தின் சீனி இறக்குமதி 2020 ஒக்தோபர் முதல் 2021 பெப்ரவரி வரையான காலப்பகுதியில் மாத்திரம் 1,222 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

எவ்வாறான போதிலும், அனைத்து விடயங்களையும் கருத்திற்கொள்ளும் போது வரியினை குறைத்தமையினால் இலங்கை அரசு சராசரியான ரூபா 16,708 மில்லியன் அளவான வருமானமொன்று மீளாய்வாண்டினுள் தியாகம் செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த நலனை பொருண்மையாக நுகர்வோருக்கு கிடைத்துள்ளது என்பதை கணக்காய்வினால் இனங்காண முடியாது இருந்தது.

அதன் பிரகாரம், சீனிக்கான வரி குறைக்கப்பட்டமைக்கு ஒப்பாக கிடைத்த நிவாரணத்தை நுகர்வோருக்கு வழங்காது தம்மிடம் வைத்துக்கொண்ட தரப்பினரை இனங்கண்டு, எதிர்காலத்திலேனும் அந்த பொருளாதார நலனை மக்களுக்கு கையளிப்பதற்கு உள்ள இயலுமை தொடர்பில் கருத்திற்கொள்வதற்கு அல்லது அரசினால் இழக்கப்பட்ட வரி வருமானத்தை தமது கையிருப்பில் வைத்திருந்த தரப்பினரிடமிருந்து அரசாங்கத்திற்கு மீள பெற்றுக்கொள்ளும் இயலுமை தொடர்பிலும் கவனம் செலுத்தல் பொருத்தமானது என பரிந்துரைக்கப்படுகின்றது.

**இலங்கையின் நிதி முகாமைத்துவம் மற்றும் அரச கடன் நிர்வாகம் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை 2018-2022**

அரசினால் பெற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களின் தேவைப்பாடு, கடன் பெறும் மூலங்கள், கடன் அறிக்கையிடல், கடன் சேவைப்படுத்தல், நிதி முகாமைத்துவ (பொறுப்புகள்) அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களிடையே அரச கடன் முகாமைத்துவத்திற்கு முக்கியமானது என கருத்திற்கொள்ளக்கூடிய நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பில் மற்றும் அரச கடன் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் மேற்கொண்ட விசேட கணக்காய்வு அறிக்கைக்குரியதாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. இந்த அறிக்கைக்கு முன்னதாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிலும் அரச கடன் தொடர்பிலான இரு விசேட கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டன. மேலும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் ஆண்டறிக்கைகள் மற்றும் அரச நிதிக்கூற்றுகளின் அடிப்படையில் வெளியிடப்படும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலமும் வருடாந்த அரச கடன் முகாமைத்துவம் தொடர்பில் அவதானிப்புகள் முன்வைக்கப்பட்டன.

நிதி அமைச்சின் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 12,030.5 மில்லியன் தொகையான இலங்கையின் அரச படுகடன் (Govenment Debt) பெறுமதியானது 2019 திசெம்பர் 31, 2020 திசெம்பர் 31 மற்றும் 2021 திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் உள்ளபடியாக ரூபா 13,031.5 மில்லியன், ரூபா 15,117.2 மில்லியன் மற்றும் ரூபா 17,589.3 மில்லியன் ஆக கிரமமாக அதிகரித்திருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2018.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக 84.2 சதவீதமாக காணப்பட்ட அரச கடன் வீதமானது 2019, 2020, 2021 ஆம் ஆண்டுகளின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக முறையே 86.8 சதவீதம், 100.6 சதவீதம் மற்றும் 104.6 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் ஆண்டின் இறுதியில் உள்ளபடியாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் கட்டமைப்பு பின்வருமாறு அட்டவணை 04 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | ரூபா மில்லியன் |
| **ஆண்டு** | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
| **வெளிநாட்டுக் கடன்** | | | | | |
| செயற்திட்டக் கடன் | 2,610,547 | 3,149,905 | 3,231,464 | 3,458,461 | 3,764,319 |
| சர்வதேச இறையாண்மை பிணைமுறிகள் | 1,475,049 | 2,220,411 | 2,531,493 | 2,203,279 | 2,243,049 |
| இலங்கை அபிவிருத்திப் பிணைமுறிகள் | - | - | 943 | 4,986 | 4,875 |
| திறைசேரி உண்டியல் மற்றும் பிணைமுறைகள் | 322,611 | 158,823 | 104,021 | 6,874 | 1,914 |
| ஏனைய | 310,411 | 430,408 | 333,362 | 378,579 | 477,993 |
| மொத்த வெளிநாட்டுக் கடன் | 4,718,618 | 5,959,547 | 6,201,283 | 6,052,179 | 6,492,150 |
| **உள்நாட்டுக் கடன்** | | | | | |
| திறைசேரி பிணைமுறிகள் | 3,892,408 | 4,197,323 | 4,606,232 | 5,713,300 | 6,966,218 |
| திறைசேரி உண்டியல்கள் | 697,154 | 746,887 | 873,943 | 1,620,705 | 2,270,508 |
| இலங்கை அபிவிருத்திப் பிணைமுறிகள் | 637,886 | 614,219 | 559,284 | 486,870 | 455,203 |
| சர்வதேச இறையாண்மை பிணைமுறிகள் | - | - | 202,099 | 415,756 | 372,612 |
| மத்திய வங்கி முற்பணங்கள் | 199,801 | 198,633 | 236,609 | 153,079 | 150,129 |
| ரூபாய் கடன் | 24,088 | 24,088 | 24,088 | 24,088 | 24,088 |
| ஏனைய | 212,878 | 289,851 | 328,006 | 651,269 | 858,466 |
| மொத்த உள்நாட்டுக் கடன் | 5,664,215 | 6,071,001 | 6,830,261 | 9,065,067 | 11,097,224 |
| **மொத்த கடன்** | **10,382,833** | **12,030,548** | **13,031,544** | **15,117,246** | **17,589,374** |
| செலாவணி மாற்ற வீதம் (ஆண்டின் இறுதியில்) 1 ஐ.அ.டொலர் | 152.8548 | 182.7499 | 181.6340 | 186.4082 | 200.4338 |
| **மொத்த கடன் (அமெரிக்க டொலர் மில்லியன்)** | **67,926.12** | **65,830.67** | **71,746.17** | **81,097.54** | **87,756.53** |
| | | | | | மூலம் - இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை - 2021 |

அட்டவணை 04

2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் இறுதியில் வெளிநாட்டு நாணயத்தில் பெயரிடப்பட்ட மொத்தக் கடன்களின் பெறுமதி முறையே ஐ.அ.டொலர் 38,687.14 மில்லியன், ஐ.அ.டொலர் 38,492.4 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 37,204.8 மில்லியன் ஆகும்.

மேலும் இலங்கை மத்திய வங்கியினால் அதன் ஆண்டறிக்கையின் பிரகாரம் அரச கடனாக (Public Debt) பொது முயற்சிகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு செயற்திட்டக் கடன்கள் மற்றும் அரச பிணையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடன்கள் உள்ளடங்கலாக 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக முறையே ரூபா 13,178.4 பில்லியன், ரூபா 14,155.3 பில்லியன், ரூபா 16,427.1 பில்லியன் மற்றும் ரூபா 19,407.2 மில்லியன் ஆகும்.

கடன் தரப்படுத்தல் நிறுவனங்களினால் 2019 ஆம் ஆண்டின் இறுதி முதல் கடன் நிலைபேறான தன்மையின் அடிப்படையில் தரப்படுத்தல்கள் கிரமமாக வீழ்ச்சியடைதல் மற்றும் அதனுடன் தொடர்புடையதாக குறிப்பிடப்பட்ட காரணங்கள் தொடர்பில் போதிய கவனம் செலுத்தப்பட்டமை மற்றும் அந்த நிலைமைகளை சீராக்குவதற்கு போதிய மற்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை
அவதானிக்கப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தினால் 2016 ஆம் ஆண்டின் போது இலங்கைக்கு

அங்கீகரிக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 1.5 மில்லியனான விரிவான கடன் வசதியின் கீழ் ஐக்கிய அமெரிக்க டொலர் 164 மில்லியனான தவணையொன்று (SDR 118.5 மில்லியன்) வழங்குவதற்குரியதாக 2019 நவம்பர் மாதம் வழங்கப்பட்ட மீளாய்வு அறிக்கையின் பிரகாரம், இலங்கையின் வெளிவாரிக் கடன் நிலைபேறானது என குறிப்பிடப்பட்டுள்ளதுடன், புதிய வரவு செலவுத்திட்ட விதிகளின் சட்டகமொன்று மற்றும் சுயாதீன அரச கடன் முகாமைத்துவ முகவர் நிறுவனமொன்றை தாபிப்பதன் மூலம் அரச கடனின் நிலைபேறான தன்மை உயர்த்த இயலும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் போது விசேடமாக வரி அடிப்படையை விரிவாக்குதல் மற்றும் இணக்கப்பாட்டினை அதிகரிப்பதன் மூலம் வருமானத்தை சேகரிக்க இயலும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும், 2019 ஆம் ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட வரி திருத்தங்கள் மேற்படி மீளாய்வு அறிக்கையின் பரிந்துரைகளுடன் பொருந்தாத காரணத்தால், அதன் மூலம் விரிவான கடன் வசதிகளை வழங்குவதற்குரியதாக 2016 ஆம் ஆண்டின் போது இணங்கிய வரவு செலவுத்திட்ட கொள்கைகள் மற்றும் கொடுப்பனவு சமப்படுத்தலுடன் தொடர்புடைய நோக்கங்களை நிறைவேற்றுதல் சவாலாகியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

அரசின் கடனின் அளவு மற்றும் மத்திய ஆண்டு சனத்தொகையின் பிரகாரம் நபரொருவருக்கான கடனின் அளவானது தொடர்ச்சியாக அதிகரித்துள்ளதுடன் 2010 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் அது நூற்றுக்கு 257 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 793,888 ஆக காணப்பட்டது. மேலும் அரச கடன் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணங்கள் நிதி அதிகாரச்சட்டத்தின் 113 ஆம் பிரிவின் அல்லது 2003 இன் 03 ஆம் இலக்க நிதி (முகாமைத்துவ பொறுப்புக்கள்) அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிராமையால் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கடன் விகிதமாக கணிப்பிடக்கூடிய பெறுமதியும் 2003 இன் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) அதிகாரச்சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதமா என்பது திட்டவட்டமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

இலங்கையின் கடன் முகாமைத்துவம் தொடர்பில் இலங்கை மத்திய வங்கிக்கு மற்றும் பொதுத் திறைசேரிக்கு சாட்டப்பட்டுள்ள பொறுப்பு தொடர்பான விடயப்பரப்பு திட்டவட்டமான எழுத்துமூல சட்டமொன்றின் மூலம் தெளிவாக இனங்காணப்பட்டிராததுடன், ஏதேனும் சந்தர்ப்பத்தில் நாட்டில் நிலவும் சரியான ஒட்டுமொத்த கடன் மீதி மற்றும் அது உருவாகியுள்ள விதத்தினை இனங்காணுவதற்கு முறையான நடைமுறைகளும் காணப்படவில்லை. 2017-2021 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கீட்டு வரைபுச் சட்டம் இரண்டாவது முறையாக வாசிப்பதற்கு நிமித்தமாக இருந்த திகதியில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் அரசின் நிதி மூலோபாயங்கள் தொடர்பான கூற்றில் குறிப் பிடப்பட்ட அரச நிதி தொடர்பான

அரசின் முன்னுரிமைகளில் கருத்தில் கொள்ளக்கூடியளவான பெறுமானத்தினை அடைந்து கொள்வதற்கு தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. நிதியாண்டினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மீதிகள் சரியான கடனாக கணக்கு வைக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், விசேடமாக ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகை அரசின் அல்லது துறைமுக அதிகாரசபையின் வருடாந்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம், அரசின் ஒட்டுமொத்த கடனை சரியாக அறிக்கையிடுவதற்கு பொருத்தமான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப் படாமையால், அவ்வாறானதொரு நடைமுறையினை அறிமுகப்படுத்துவதின் தேவைப்பாட்டினை வலியுறுத்துகின்றேன்.

வெளிநாட்டுக் கடனினுள் செயற்திட்டக் கடன் மீள்செலுத்துதல்களுக்காக எதிர்வுகூறப்பட்ட திட்டமொன்று பொதுத்திறைசேரியின் வெளிநாட்டுக் வளங்கள் திணைக்களத்திடம் காணப்பட்ட போதிலும் அந்த திட்டத்தின் பிரகாரம் சிறந்த முகாமைத்துவத்துவத்துடன் அந்நிய செலாவணியை ஈட்டிக் கொள்வதற்கு / முகாமை செய்வதற்கு தவறியிருந்தது. இலங்கைக்கு வெளிநாட்டு கடன் மீள்கட்டமைப்பினை மேற்கொள்ளும் வரையிலும் தாக்கமளிக்கும் கடன் (Affected Debt) சேவைப்படுத்தலை இடைநிறுத்துவதற்கு நேர்ந்திருந்தது. மேலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வெளிநாட்டு கடன் கூட்டு நாடுகள் / நிறுவனங்களின் பிரகாரம் பின்வருமாறு அட்டவணை 05 இல் காணப்பட்டது.

ரூபா மில்லியன்

| நாடு / நிறுவனம் | 2021 | | | | | 2020 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | செயற்திட்டக் கடன் | செயற்திட்டமல்லாத கடன் | | | மொத்தம் | செயற்திட்டக் கடன் | செயற்திட்டமல்லாத கடன் | | | மொத்தம் |
| | | பண்டக் கடன் | ஏனைய கடன் | மொத்தம் | | | பண்டக் கடன் | ஏனைய கடன் | மொத்தம் | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 1,051,994 | - | 425 | **425** | **1,052,419** | 864,407 | - | 1,049 | **1,049** | **865,456** |
| அவுஸ்ரேலியா | 5,002 | - | - | - | **5,002** | 7,017 | - | - | - | **7,017** |
| ஒஸ்ட்ரியா | 21,969 | - | - | - | **21,969** | 21,560 | - | - | - | **21,560** |
| கனடா | 3,209 | 1,003 | - | **1,003** | **4,212** | 3,385 | 1,117 | - | **1,117** | **4,502** |
| சீனா | 710,336 | - | 210,068 | **210,068** | **920,404** | 628,805 | - | 305,535 | **305,535** | **934,340** |
| டென்மார்க் | 23,913 | - | - | - | **23,913** | 26,810 | - | - | - | **26,810** |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கி | - | - | - | - | - | 262 | - | - | - | **262** |
| பின்லாந்து | 81,661 | - | - | - | **81,661** | 80,020 | - | - | - | **80,020** |
| பிரான்ஸ் | 36,992 | 4,365 | 385 | **4,750** | **41,742** | 39,848 | 4,825 | 418 | **5,243** | **45,091** |
| ஜேர்மனி | 25,290 | - | - | - | **25,290** | 22,454 | - | - | - | **22,454** |
| ஹொங்கொங் | 158,136 | 7,746 | - | **7,746** | **165,882** | 145,156 | 9,356 | - | **9,356** | **154,512** |
| இந்தியா | - | 423 | - | **423** | **423** | - | 1,113 | - | **1,113** | **1,113** |
| சர்வதேச அபிவிருத்தி சபை | 616,323 | - | - | - | **616,323** | 568,784 | - | - | - | **568,784** |
| ஜப்பான் | 621,587 | - | - | - | **621,587** | 659,260 | - | - | - | **659,260** |
| கொரியா | 66,624 | - | - | - | **66,624** | 68,771 | - | - | - | **68,771** |
| குவைத் | 17,947 | - | - | - | **17,947** | 14,866 | - | - | - | **14,866** |
| நெதர்லாந்து | 43,352 | - | - | - | **43,352** | 48,178 | - | - | - | **48,178** |
| சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் | 24,265 | - | - | - | **24,265** | 21,686 | - | - | - | **21,686** |
| சவூதி அரேபியா நிதியம் | 26,781 | - | - | - | **26,781** | 24,085 | - | - | - | **24,085** |
| ஸ்பெயின் | 20,544 | - | - | - | **20,544** | 21,448 | - | - | - | **21,448** |
| சுவீடன் | 6,952 | - | - | - | **6,952** | 9,457 | - | - | - | **9,457** |
| ஐக்கிய இராச்சியம் | 39,640 | - | - | - | **39,640** | 46,276 | - | - | - | **46,276** |
| ஐக்கிய அமெரிக்க இராச்சியம் | 15,541 | - | 11,904 | **11,904** | **27,445** | 17,525 | - | 13,409 | **13,409** | **30,934** |
| வேறு | 146,262 | - | 2,491,514 | **2,491,514** | **2,637,776** | 118,402 | - | 2,256,896 | **2,256,896** | **2,375,298** |
| **மொத்தம்** | **3,764,320** | **13,537** | **2,714,296** | **2,727,833** | **6,492,153** | **3,458,462** | **16,411** | **2,577,307** | **2,593,718** | **6,052,180** |

மூலம் - இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை - 2021

அட்டவணை 05:

இதன் பிரகாரம், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக முறையே ஆசிய அபிவிருத்தி வங்கி, சீனா, யப்பான் மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் ஆகியவை இலங்கை கடன் பெற்றுக்கொண்டுள்ள பிரதான நாடுகள் / நிறுவனங்கள் ஆகும்.

2020 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க டொலர் 7,103.93 மில்லியனான வெளிநாட்டில் தொழில் புரிவோரின் அனுப்பல்கள் 2021 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க டொலர் 5,491.46 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது. மேலும் இலங்கை மத்திய வங்கியின் நாளாந்த செலாவணி மாற்ற வீதத்தின் பிரகாரம், 2021 செப்தெம்பர் 07 முதல் 2022 மார்ச் 07 வரையிலும் ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றுக்கான செலாவணி மாற்றுவீதம் நிலையான பெறுமதியொன்றின் (ரூபா 202.9992) பேணுவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக அக்காலப்பகுதியினுள் வெளிநாட்டு அனுப்பல்கள் பாரிய அளவினால் குறைவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. மேலும் 2021 பெப்ரவரி முதல் 2021 ஆகஸ்ட் வரையான 7 மாத காலப்பகுதியில் கிடைக்கப் பெற்ற ஐக்கிய அமெரிக்க டொலர் 3,548.9 மில்லியனுக்கு ஒப்பாக 2021 செப்தெம்பர் முதல் 2022 மார்ச் மாதம் வரையான 7 மாதங்களுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 2,049.7 மில்லியன் மாத்திரம் கிடைத்துள்ளமை அவதானிக்கப்பட்டது. இந்த விடயங்களும் தாக்கம் செலுத்தியமையினால் 2018 ஏப்ரல் மாதமளவில் ஐக்கிய அமெரிக்க டொலர் 9,936 மில்லியனாக காணப்பட்ட இலங்கையின் உத்தியோகபூர்வ அந்நிய செலாவணிக் கையிருப்பின (வெளிநாட்டு நாணய கையிருப்பு) பெறுமதியானது 2022 மார்ச் மாதமளவில் ஐக்கிய அமெரிக்க டொலர் 2,000 மில்லியனை விட குறைவான பெறுமதியினை கொண்டிருந்தது.

நிதி அதிகாரச்சட்டத்தின் 66(1) பிரிவின் பிரகாரம் இலங்கை ரூபாவின் சர்வதேச ஸ்திரத்தன்மையை பேணுவதற்காக மத்திய வங்கியின் சொத்துக்களின் மூலம் சர்வதேச கொடுப்பனவு மீதியின் எதிர்பார்க்கக்கூடிய பற்றாக்குறையை தீர்ப்பதற்கு போதுமான சர்வதேச ஒதுக்கமொன்றினை பேணுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். எவ்வாறான போதிலும் இலங்கை மத்திய வங்கியினால் இரு சந்தர்ப்பங்களில் சர்வதேச இறைமை பிணை முறியினை விடுவிப்பதற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 1,500 மில்லியன் கூட்டுப்பெறுமதியுடைய வெளிநாட்டு ஒதுக்கம் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

மேலும் 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள) அதிகாரச்சட்டத்தின் எதிர்கால வரி வீதங்கள் மூலோபாயமிக்கதாகவும் ஸ்திரமான மட்டங்களில் பேணக்கூடியதாகவும் செலவினங்கள் மற்றும் வரி அறவிடல்களை மேற்கொள்வதற்குரிய கொள்கையினை பயன்படுத்துதல் எனும் கொள்கையினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 2019 ஆம்

ஆண்டிற்காக ரூபா 1,038 மில்லியனான ஆரம்ப வருமான மதிப்பீடானது 2020 ஆம் ஆண்டளவில் ரூபா 575 பில்லியன் வரையிலும் திருத்தப்பட்ட காரணத்தால் 2020 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 463 பில்லியனாலும், 2021 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 612 பில்லியனாகவும் காணப்பட்ட காரணத்தால், 2019 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2021 ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 426 பில்லியனால் குறைவடைந்திருந்தது. மேலும், 2019 ஆம் ஆண்டின் உள்ளபடியான வரி வருமானம் ரூபா 1,025 பில்லியனாக காணப்பட்ட போதிலும், அதற்கு ஒப்பாக 2020 ஆம் ஆண்டில் உள்ளபடியான வரி வருமானமான ரூபா 523 பில்லியனான காரணத்தால் 2019 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2020 ஆம் ஆண்டில் உள்ளபடியான வரி வருமானம் ரூபா 502 பில்லியன் வரை குறைவடைந்திருந்தது. அவ்வாறே, 2021 ஆம் ஆண்டுக்கான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரைபு செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், இந்த திணைக்களத்தின் சேகரிக்கப்பட்ட உள்ளபடியான வரி வருமபனம் ரூபா 623 பில்லியன் ஆனமையால், 2019 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக ரூபா 402 பில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்தது. அரச நிதிக்கூற்றுகளின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டின் மொத்த வரி வருமானம் ரூபா 1,670 பில்லியனாக காணப்பட்டதுடன், 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,712 பில்லியன், ரூபா 1,734 பில்லியன், ரூபா 1,216 பில்லியன் மற்றும் ரூபா 1,298 பில்லியனாகவும் காணப்பட்டது.

இலங்கையின் மொத்த அரச வருமானம் (மானியங்களுடன்) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2006 ஆம் ஆண்டின் போது 17.3 சதவீதமாக காணப்பட்டதுடன், 2010 ஆம் ஆண்டளவில் அது 13 சதவீதமாகவும், 2015 ஆம் ஆண்டின் போது 13.3 சதவீதமாகவும், 2018 ஆம் ஆண்டின் போது 13.5 சதவீதமாகவும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே 9.1 சதவீதம் மற்றும் 8.7 சதவீதமாகவும் அறிக்கையிடப்பட்டது. மேலும், இலங்கையின் மொத்த வரி வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 2010 ஆம் ஆண்டின் போது 11.3 சதவீதமாகவும், அது 2015 ஆம் ஆண்டின் போது 12.4 சதவீதமாகவும் 2021 ஆம் ஆண்டின் போது 7.7 சதவீதமாகவும் காணப்பட்டது. இந்த வருமானத்திலான வீழ்ச்சியின் காரணமாக வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை 2015 ஆம் ஆண்டு முதல் நிலவிய 7.6 சதவீதத்திலிருந்து 2021 ஆம் ஆண்டளவில் 12.2 சதவீதம் வரையிலும் அதிகரித்திருந்தது.

2005 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட்டிராததுடன் 2015 ஆம் ஆண்டு முதல் அது கணக்கு வைத்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டு முதல் அரச நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த பௌதீக சொத்துக்களின் நிர்மாணங்கள் மற்றும் கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீட்டு சுவீகரிப்புக்களாக பதிவு

செய்யப்பட்டிருந்த ரூபா 8,199 மில்லியன் பெறுமதியில் ரூபா 5,530 பில்லியன் அல்லது 67 சதவீதமான சொத்துக்கள் இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு தவறியிருந்தது.

அதற்கமைய, அரச கடன் தொடர்பில் நிலவும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணங்களை கருத்தில் கொண்டு சரியான முறையில் இலங்கை அரசின் கணனி கணிப்பிடுவதற்கு எந்த உருப்படிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பது இலங்கை மத்திய வங்கி, நிதி அமைச்சு மற்றும் உரிய தரப்பினர்களின் பரிந்துரைகளின் அடிப்பயையில் பாராளுமன்றத்தின் மூலம் சட்டரீதியாக நிர்ணயிக்கப்பட வேண்டிய போதிலும், ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் அது சுழற்சி பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்ச கடன் எல்லையினுள் கடன் எடுத்தல் இடம்பெற வேண்டியமையும் பெற்றுக் கொள்ளப்படும் கடன் உச்சமாக முகாமை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தலும், வெளிநாட்டுக் கடன் தொடர்பில் நிலவும் பிரதானமான அச்சுறுத்தலான ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைகின்றமையை கட்டுப்படுத்தல் ∴ அந்நிய செலாவணி வீதத்தை நிலையாக பேணுவதற்குரிய மூலோபாயங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலும், கடன் அறிக்கையிடலை முறைமைப்படுத்துவதற்கு துரிதமான நடவடிக்கை எடுத்தல், அரச கடனை உச்ச மட்டத்தில் குறைந்த அபாயம் மற்றும் கிரயத்தின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் மற்றும் முகாமைத்துவத்திற்காக அதற்கு விசேடமானதும் சுயாதீனமான நடைமுறைகள் / நிறுவனமொன்றை தாபித்தல், நாட்டுக்கு பொருத்தமான அரச கடன் கொள்கையொன்றை தயாரித்தலும் அதனை சட்டமூலமாக்குதலும், சர்வதேச நாணய நிதியம், கடன் தரப்படுத்தல் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் அவதானிப்புகள் தொடர்பில் கால அடிப்படையில் பதில் வழங்குதல் உள்ளடங்கலாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரது கவனத்திற்கு கொண்டுவருகின்றேன்.

**சேதனப் பசளை மெற்றிக் தொன் 96,000 பெறுகை தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை**

லங்கை பல ஆண்டுகளாக இறக்குமதி செய்கின்ற இரசாயனப் பசளையைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததுடன் 2021 மே மாதத்திலிருந்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரசாயன பசளை இறக்குமதியானது நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலம் தடைசெய்யப்பட்டிருந்தது. அதன் மூலம் 2019 ஆம் ஆண்டின் போது இரசாயனப் பசளை இறக்குமதிக்காக மேற்கொள்ளப்பட்ட அமெரிக்க டொலர் 221 மில்லியன் அளவான அதிக அளவான வெளிநாட்டு நாணயத்தினை சேமிப்பதற்கும் விவசாயிகள் சேதனப் பசளையை பயன்படுத்துவதற்கு ஈடுபடுத்துவதன் மூலம் சுகாதார பாதுகாப்பு உணவுகளுக்காக பழக்கப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது.

2021/2022 பெரும்போகத்திலிருந்து சேதனப் பசளையை மாத்திரம் பயன்படுத்துவதற்கு விவசாய அமைச்சினால் திட்டமிடப்பட்டிருந்ததுடன் பெரும்போகத்திற்கு போதிய அளவிலான சேதனப் பசளை நாட்டில் இல்லாமையின் காரணமாக 500,000 ஹெக்டயர் நெற்பயிர்ச் செய்கைக்குத் தேவையான சேதனப் பசளையினை இறக்குமதி செய்யவேண்டுமென விவசாய அமைச்சினால் அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டு சேதனப் பசளை இறக்குமதிக்காக 2021 யூன் 08 ஆந் திகதிய அமைப/21/0964/323/030 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

அதற்கிணங்க துரித பெறுகை நடைமுறையும் கால அட்டவணையும் பின்பற்றப்பட்டு சேதனப் பசளை இறக்குமதிக்காக சீனாவிலுள்ள வரையறுத்த கின்டாவோ சீவின் பயோடெக் தொகுதிக் கம்பனியானது அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபையினால் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அக்கம்பனியின் பசளை மாதிரியை பரீட்சித்த போது பசளை மாதிரியானது கிருமிநீக்கம் செய்யப்படவில்லை எனவும் ஆர்வீனியா (Erwinia) மற்றும் பெஸிலஸ் (Bacillus) என்ற பாதகமான பக்டீரியாக்கள் உள்ளடங்கியுள்ளது எனவும் தேசிய பயிர் தனிமைப்படுத்தல் சேவை அவதானிப்பு செய்திருந்தது. அவ்வாறான நிலைமையின் அடிப்படையில் இறக்குமதிக்குத் தேவையான தனிமைப்படுத்தல் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ளும் சிக்கல் உருவாகியுள்ளதன் காரணமாக விவசாய இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு விசேட செயற்பாட்டுக் குழு வழங்கிய சிபாரிசின் அடிப்படையில் உரிய பசளை இருப்பிற்காக நாணயக் கடிதத்தினைத் திறப்பதற்கு இரண்டு அரசாங்க பசளைக் கம்பனிகளான வரையறுத்த இலங்கை பசளை கம்பனியினாலும் வரையறுத்த கொமர்சல் உரக் கம்பனியினாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் 2021 செப்தெம்பர் 23 ஆந் திகதி உரிய வழங்குனர் கம்பனி சீனாவிலுள்ள கின்டாவோ துறைமுகத்திலிருந்து கொழும்பு துறைமுகம் வரை 20,550 மெட்ரிக்தொன் பசளை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என கப்பல் அறிவுறுத்தல் பத்திரத்தின் (Shipping Advice) மூலம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. மேற்கூறிய பசளை இருப்பினை எடுத்துவந்த Hippo Spirit கப்பல் இலங்கை துறைமுகத்தை அண்மித்து வருகை தந்திருந்த போதிலும் பயிர் தனிமைப்படுத்தல் அதிகாரச் சட்டத்திற்கு இணங்க கிருமி நீக்கப்படாத சேதனப் பசளை இருப்பினை இலங்கையில் தறையிறக்குவதற்கு முடியாமையின் காரணமாக சச்சரவுத் தன்மையான நிலைமை உருவாகியிருந்தது. பின்னர் இப்பசளைக் கப்பலில் உள்ள பசளையை பொறுப்பேற்றல் மற்றும் கொடுப்பனவு செய்தலை நிராகரித்து உரிய இறக்குமதி செய்த இரண்டு அரசாங்க கம்பனிகளான வரையறுத்த இலங்கை பசளைக் கம்பனி மற்றும் வரையறுத்த கொழும்பு கொமர்சல் பசளைக் கம்பனியால் கொழும்பு வணிக உச்ச நீதிமன்றத்தில்

CHC213/2021MR மற்றும் CHC214/2021MR ஆம் இலக்க வழக்குகள் தொடுக்கப்பட்டு மக்கள் வங்கிக்கு எதிராக கொடுப்பனவை நிறுத்திவைக்கும் தடைஉத்தரவு வழங்கப்பட்டிருந்தது. சிக்கல் நிலைமையானது அதிகரித்த காரணத்தால் சட்டமா அதிபரின் ஆலோசனையின் அடிப்படையில் சமாதானத்தின் மூலம் தீர்த்துவைப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக அமைப 21/2161/323/030-IX ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கப்பலில் உள்ளடக்கப்பட்ட பசளை இருப்பின் கிரயத்தில் 75 சதவீதத்திற்காக பெறுமதியாகிய அமெரிக்க டொலர் 6.9 மில்லியனுக்குச் சமமான ரூபா 1,382 மில்லியன் தொகையான முற்பணத்தை செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தால் 2022 சனவரி 07 ஆந் திகதி அந்த தொகையை செலுத்தி அதனை கணக்கீடு செய்வதற்காக 2022 மே 09 ஆந் திகதி விவசாய இராஜாங்க அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. சமாதான நிபந்தனைகளின் பிரகாரம் எதிர்பார்த்த சேர்மானம் மற்றும் தரத்தைக் கொண்ட பசளையை மீண்டும் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையை உள்ளடக்கி மேற்கூறிய இரண்டு வழக்குகளும் சமாதானமாகி இரத்துச் செய்யப்பட்டன. எனினும் இன்றுவரை எதிர்பார்த்த தரத்தினைக் கொண்ட பசளை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சமாதான நிபந்தனைகளின் பிரகாரம் நாணயக் கடிதத்தின் மற்றும் செயலாற்றல் பிணைமுறியின் காலத்தை நீடித்து அதனை செல்லுபடியுள்ளதாக வைத்துக்கொள்ள வேண்டிய போதிலும் 2022 மார்ச் 12 ஆந் திகதி நாணயக் கடிதம் மற்றும் 2022 மார்ச் 24 ஆந் திகதி செயலாற்றல் பிணைமுறி காலாவதியாகியிருந்தன. அதன் காரணமாக மீண்டும் உரிய கம்பனிகளால் நியமதரமுள்ள பசளைகள் வழங்கப்படாமையின் மூலம் அதற்காக செலுத்திய பணத்தை அறவீடு செய்யும் இயலுமை இல்லாமல் போயுள்ளது. இதன் காரணமாக பசளைக்காக செலுத்தப்பட்ட முழுப்பணமும் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட ஒரு நட்டமாக இருந்தது.

குறித்த பிணையங்கள் காலாவதியாவதற்கு முன்னர் காசாக்குவதற்கு அல்லது பிணையின் காலத்தை நீடிப்பு செய்ய நடவடிக்கை எடுக்காமையால் முற்பணங்களை செலுத்தும் போது எதுவித பிணையுமின்றி நிதியங்கள் விடுவிக்கப்பட்ட காரணத்தால் இரசிற்க ஏற்பட்ட நட்டம் இந்த கொடுக்கல் வாங்கலுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து அறவீடு செய்யவும், உடன்படிக்கையின் நிபந்தனைகள் மற்றும் 1999 இன் 35 ஆம் இலக்க தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் இலங்கைக்கு இறக்குமதி செய்ய முடியாத, நுண்ணங்கி நீக்கம் செய்யப்படாத, அழிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்ட விவசாய இரசாயன வகையொன்றல்லாத, இலங்கையின் பொருளாதார பெறுமதியொன்று இல்லாத பயிர்களுக்கு மென் அழுகல் மற்றும் அங்கமாரய போன்ற நோய்களை ஏற்படுத்தும் எர்வீனியா (Erwiniya)

மற்றும் பெசிலஸ் (Bacillus) எனும் பெயருடைய அபாயமிக்க பக்றீரியாவுடனான உரத்தின் இருப்பினை நாட்டினுள் கொண்டுவருவதற்க முயற்சி செய்தல், 2020.'.2021 பெரும் போகத்தின் போது நெற் செய்கைக்கு தேவையான உரத்தினை உடன்படிக்கையின் பிரகாரம் வழங்காது நட்டமொன்றினை ஏற்படுத்தல், விநியோகிக்காத உரத்தின் இருப்பிற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 6.9 மில்லியனுக்கு சமனான இலங்கை ரூபா 1,382,720,494 ஆன தொகையை பெற்றுக்கொள்வதற்காக இணக்கத்தின் பிரகாரம் செயற்படாமை தொடர்பில் வழங்குநருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து நட்டஈட்டினை பெற்றுக்கொள்ளவும், இலங்கையின் சட்ட திட்டங்களின் மற்றும் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்படாத மேற்படி விநியோக கம்பனி இலங்கையினுள் கறுப்பு பட்டியலிடப்படுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டது.

**நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி அனல்மின் நிலையத்திற்கு 2022-2025 காலப்பகுதிக்குரிய நிலக்கரி கொள்வனவிற்கான பெறுகை நடைமுறையை மதிப்பீடு செய்தல் தொடர்பிலான விசேட கணக்காய்வு அறிக்கை**

நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி அனல்மின் நிலையம் இலங்கையின் டீயளந டுழயன மின்நிலையமாக செயற்படுவதுடன் தேசிய மின்சார தேவைப்பாட்டின் 30 முதல் 40 சதவீதத்திற்கு இடைப்பட்ட பங்களிப்பினை வழங்குவதுடன், மின்நிலையத்தை செயற்படுத்துவதற்காக வருடாந்தம் 2.25 மெற்றிக்தொன் மில்லியன் அளவான நிலக்கரி தேவைப்படுகின்றது. 2021-2022 பெறுகை காலப் பகுதியின் இறுதி வரையிலும் வருடாந்த நிலக்கரி தேவைப்பாட்டின் 50 சதவீதம் நீண்டகால பெறுகையின் ஊடாகவும் எஞ்சிய 50 சதவீதமான அளவு துரித பெறுகை நடைமுறையின் ஊடாகவும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய 2021-2022 பெறுகை காலப்பகுதியினுள் 2.25 மில்லியன் மெற்றிக்தொன் அளவான நிலக்கரியை கொள்வனவு செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட நீண்டகால பெறுகை உடன்படிக்கை **(Term Tender)** இன் பிரகாரம், 2021-2022 தவணையினுள் 1.125 மில்லியன் மெற்றிக்தொன் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் இதுவரையிலும் விநியோகிக்கப்படாத 1.125 மில்லியன் அளவான நிலக்கரி இருப்பானது 19 கப்பல் இருப்புக்களின் ஊடாக **SWISS SINGAPORE OVERSEAS ENTERPRISES PVT LTD** இனால் விநியோகிக்க திட்டமிடப்பட்டிருந்தது. அவ்வாறே 2021-2022 பெறுகை தவணையினுள் **SUEK AG** கம்பனியினால் துரித பெறுகை **(Spot Tender)** ஆனது 05 (LCC/21/22/ST/28/5) ஆம் இலக்கத்தின் கீழ் விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும் இதுவரையிலும் விநியோகிக்கப்படாத 02 கப்பல் இருப்புக்களும் 2022-2023 தவணையினுள் விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதற்கமைய மொத்த தேவைப்பாடான 38 கப்பல் இருப்புக்களில் தொடர்ந்தும் 17 கப்பல்

இருப்புக்களின் பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டியதாக காணப்பட்டது.

லங்கா கோல் கம்பனியினால் 4.5 மில்லியன் மெற்றிக்தொன் அளவான நிலக்கரிக்காக நீண்டகால பெறுகை நடைமுறை 2022 யூலை 21 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் மூன்று காலப்பகுதிகள் (03 வருடங்கள்) அதாவது 2022-2023, 2023-2024, 2024-2025 தவணைகளை உள்ளடக்கும் வகையில் முறையே நிலக்கரி 1.125 மில்லியன் மெற்றிக்தொன், 2.25 மில்லியன் மெற்றிக்தொன் மற்றும் 1.125 மில்லியன் மெற்றிக்தொன் எனும் படியாக கொள்வனவு செய்ய உத்தேசிக்கப்பட்டிருந்தது.

இந்த பெறுகை நடைமுறை 2022 யூலை 21 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2022 ஆகஸ்ட் 25 ஆந் திகதி அதாவது 35 நாட்கள் எனும் குறுகிய காலப்பகுதியில் Black Sand Commodities FZ-LLC கம்பனிக்கு கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. அந்தக் கம்பனிக்கு பெறுகைக்கான கேள்வியினை கையளித்தல் தொடர்பில் விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு கௌரவ சபாநாயகரியால் அரச நிதி தொடர்பான செயற்குழுவின் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்கமைய 2022 செப்தெம்பர் 08 ஆந் திகதி அரச நிதி தொடர்பான செயற்குழுவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஏற்றுக் கொண்டதன் பிரகாரம் இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது.

SUEK AG இனால் தனக்கு பதிலாக எதிர்காலத்தில் நிலக்கரி கொள்வனவிற்காக தமது துணைக் கம்பனியொன்றாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள டடயஉம ஞயனெ ஊழஅஅழனவைநைள செயற்படுகின்றமையால் தமது பதிவினை Black Sand Commodities என மாற்றுவதற்கு கோரிக்கை விடுத்திருந்தது. அந்த கோரிக்கைக்கு எழுத்துமூல பதிலளிக்காது SSCAPC இனால் முக்கியமான மற்றும் நுணுக்கமான திருத்தங்களை விலைக்கேள்வியில் மேற்கொள்ள தீர்மானித்திருந்ததுடன், அந்த திருத்தத்தின் பின்னர் Black Sand Commodities கம்பனிக்கு இந்த விலைக்கேள்வியை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், குறித்த திருத்தத்திற்கு இணங்கினால் Black Sand Commodities இனால் SUEK AG இற்காக விலைக்கேள்வி முன்னைக்கப்பட வேண்டியதுடன், விநியோகிக்கப்படும் நிலக்கரியின் தரம், அளவு மற்றும் கொடுப்பனவு தொடர்பில் முழுமையான காப்பீடொன்று பதிவு செய்யப்பட்ட வழக்குநர் ஒருவரான SUEK AG இனால் வழங்கப்பட வேண்டிய போதிலும், Black Sand Commodities இனால் முன்வைக்கப்பட்ட விலைக்கேள்வி ஆவணங்களில் SUEK AG இற்காக Black Sand Commodities விலைக்கேள்வி முன்வைப்பதாக எதுவித சட்ட ஆவணமோ ∴ உடன்படிக்கையோ முன்வைக்கப்படவில்லை. மேலும், விநியோகிக்கப்படும் நிலக்கரியின் தரம், அளவு மற்றும் கொடுப்பனவு தொடர்பில்

முழுமையான காப்பீடொன்று SUEK AG இனால் வழங்கப்படும் எனும் சட்டரீதியான ஆவணங்கள் ∴ உடன்படிக்கைகள் விலைக்கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்யும் வழங்குநர்கள் நிலக்கரி பெறுகைக்காக பதிவு செய்யப்படுவதுடன், பதிவு செய்த வழங்குநர்களால் மாத்திரம் நிலக்கரி விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும், Black Sand Commodities நிலக்கரி விநியோகத்தராக பதிவ செய்திராததுடன், நிலக்கரி விநியோகத்திற்கரிய எதுவித தகைமை பரிசோதனைகளுக்கும் உள்ளாகியிருக்கவில்லை. Black Sand Commodities கம்பனியை கூட்டிணைப்பதற்காக 2022 மே 31 ஆந் திகதி IC Suek LtdLLC (Russia) கம்பனியினால் முன்மொழிவொன்று அங்கீகரிக்கப்பட்டு 2022 யூன் 01 ஆந் திகதி ஐக்கிய அரபு அமீரகத்தில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாக கூட்டிணைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய இது பதிவு செய்த விநியோகத்தரான SUEK AG இன் கீழ் பதிவு செய்யப்படாத கம்பனியொன்றல்லாத காரணத்தால் SUEK AG மற்றும் Black Sand Commodities ஆகியவற்றுக்கு இடையே நேரடியான தொடர்பொன்று காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறான போதிலும், இந்த நிலைமையை கருத்திற்கொள்ளாது Black Sand Commodities இனால் சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், பதிவு செய்த விநியோகத்தரின் சேவை பதிவு செய்யாத மற்றும் பதிவு செய்வதற்கு போதிய தகைமை இல்லாத வழங்குநர் ஒருவருக்கு கையளிப்பதற்று இணங்குதல் எனும் குறித்த திருத்தம் மேற்கொள்வதற்கு முன்னர் அதன் சட்டரீதியான நிலைமை தொடர்பில் சட்டமா அதிபரிடம் அறிவுரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

நிலக்கரி கொள்வனவு நடைமுறை தொடர்பில் அனைத்து தரப்பினரும் பெறுகை நடைமுறைக்கமைய தமது கடமையை சரியாக நிறைவேற்றுவதாக உறுதிப்படுத்தல் மற்றும் அந்த நிலைமையிலிருந்து முரண்படும் தரப்பினருக்கு எதிராக உரிய மேலதிக நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு தொடர்பில் சுட்டிக்காண்பித்தலும், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மற்றும் வழங்குநரின் நிதி இயலுமை, அனபவம், விநியோகத் தரம், போதிய சட்ட கடப்பாடுகள் உள்ளடங்களாக அடிப்படை தேவைப்பாடுகள் பாதுகாக்கப்படும் வகையில் விலைக்கேள்வியாளர்களை பதிவு செய்யும் நடைமுறையை ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் இலகுப்படுத்தி போட்டித்தன்மையை அதிகரித்தல் தொடர்பில் கவனம் செலுத்துதல் அந்த அறிக்கையின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், விலைக்கேள்வி ஆவணங்களில் திருத்தங்களை மேற்கொள்ளும் போது உரிய உறுதிப்படுத்தல்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத

வகையில் அவ்வாறான திருத்தங்களின் சட்டரீதியான தன்மையை உறுதிப்படுத்திய பின்னர் அவ்வாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அந்த திருத்தத்திற்க பொருந்தும் வகையில் விலைக்கேள்வி ஆவணத்தின் ஏனைய பிரிவுகள் மற்றும் உடன்படிக்கை திருத்துவதற்கு பொறுப்புடடன் செயற்பட வேண்டியதுடன், விலைக்கேள்வி ஆவணத்தில் கேள்வி அழைப்பு விடுக்கப்பட்ட பின்னர் முக்கியமான திருத்தத்தினை மேற்கொள்வதற்கு இயலுமான எல்லா சந்தர்ப்பத்திலிருந்தும் விலகியிருக்க வேண்டும் என்பது உள்ளடங்களாக சில பரிந்துரைகளை இந்த அறிக்கையின் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இலகு ரயில் போக்குவரத்து செயற்திட்டம் (கொழும்பு தொடக்கம் மாலம்பே வரை) இலங்கை அரசாங்கத்தினால் ஒருதலைப்பட்சமாக முடிவுறுத்தப்பட்டமை தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கை**

கொழும்பு மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு முன்மொழிந்திருந்த விடயங்களின் அடிப்படையில் கொழும்பு தலைநகரிற்கு மிகவும் பொருத்தமான புகையிரத ஊடகமாக இலகு புகையிரத (LRT) கட்டமைப்பு இனங்காணப்பட்டிருந்ததுடன், அதன் போது பச்சை, மஞ்சள், சிவப்பு, ஊதா, இளஞ்சிவப்பு, ஆலிவ் பாதை மற்றும் சாம்பல் பாதை என சுவுளு 1 முதல் சுவுளு 7 வரையிலுமான சில பிரதேசங்களை உள்ளடக்கி 7 வீதிகள் இனங்காணப்பட்டிருந்தன. அந்த 7 வீதிகளில் RTS 1 (பசுமை வீதி) மற்றும் RTS 4 (ஊதா வீதி) வீதிகள் முதலாவதாக நிர்மரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், இந்த செயற்திட்டத்திற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் பொரளை முதல் மாலம்பே வரையிலுமான RTS 4 வீதிக்கு முன்னுரிமை வழங்கி RTS 1 வீதி எதிர்கால செயற்திட்டமொன்றாக கருதுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாணம் 7 பொதிகளின் கீழ் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், இதற்கான நிதி வசதிகள் சலுகை அடிப்படையிலான கடன் நிபந்தனைகளின் கீழ் வழங்குவதற்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பிற்கான நிறுவனம் இணங்கியிருந்ததுடன், மதியுரை சேவைகளை வழங்குதல் ஜப்பானின் வரையறுக்கப்பட்ட ஓரியன்டல் கன்சல்டன் க்ளோபல் கம்பனி மேலும் சில கம்பனிகளுடன் இணைந்ததாக மேற்கொள்ள இணங்கியிருந்தது.

ஜப்பானின் சர்வதேச ஒத்துழைப்பிற்கான நிறுவனத்தினால் அந்த கடன் தொகை 12 வருட சலுகைக் காலமும் உள்ளடங்களாக 40 வருட காலத்தினுள் செலுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான வருடாந்த வட்டி வீதம் 0.1 சதவீதம் ஆகும். மேலே முதலாவதாக நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டம் 7 பொதிகளின் கீழ் நடைமுறைப்படுத்த

திட்டமிடப்பட்டிருந்ததுடன், உத்தேச கடன் தொகையில் ஜப்பான் யென் 30,040 மில்லியன் மேற்குறிப்பிடப்பட்ட 07 பொதிகளிடையே இனங்காணப்பட்ட பொதி 1 செயற்திட்டம் (புகையிரத என்ஜின்கள் மற்றும் மேடைகள்) ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்த செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கிரய நலன் பகுப்பாய்வின் பிரகாரம் பொருளாதார உள்ளக விளைவு வீதம் 20.18 சதவீதமாகவும், பொருளதார தேறிய இற்றைப் பெறுமதி ரூபா 174.3 பில்லியனாகவும் இனங்காணப்பட்டிருந்தது. அதற்கமைய பொருளாதார நலன் விகிதமானது கழிவு வீதத்தினை விஞ்சியிருந்த காரணத்தால் தேசிய பொருளாதாரத்திற்கு இது நலனளிக்கும் செயற்திட்டமொன்றாக இனங்காணப்பட்டிருந்தது. மேலும், பொருளாதார நலன்கள் 10 சதவீதத்தினால் குறைவடையும் போது, பொருளாதாரக் கிரயம் 10 சதவீதத்தினால் அதிகரிக்கும் போது மற்றும் மேற்படி இரு சம்பவங்களையும் ஒன்றாக கொள்ளுமிடத்து போன்ற மிகவும் பாதகமாக நிலைமையொன்றின் போதும் இந்த செயற்திட்டம் பயனுள்ளதாக இனங்காணப்பட்டிருந்தது. மேலும், பொருளாதார நலன்கள் 10 சதவீதத்தினால் குறைவடையும் போது, பொருளாதாரக் கிரயம் 10 சதவீதத்தினால் அதிகரிக்கும் போது மற்றும் மேற்படி இரு சந்தர்ப்பங்களையும் ஒன்றாக நோக்கும் போது போன்ற மிகவும் பாதகமான நிலைமையொன்றிலும் இந்த செயற்திட்டம் சாதகமானதாக இனங்காணப்பட்டிருந்தது. 4 சந்தர்ப்பங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதி பகுப்பாய்வின் பிரகாரம், 4 ஆவது சந்தர்ப்பம் மிகவும் சாதகமான சந்தர்ப்பமாக இனங்காணப்பட்டுள்ளதுடன், அதன் நிதி உள்ளக விளைவு விகிதம் (FIRR) 27 சதவீதமாவதுடன், அது 8.87 சதவீதமான கிரய விளைவு வீதத்தினை விஞ்சியுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளதுடன், இதன் தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 50,185 மில்லியனாக காணப்படுகின்றமை இனங்காணப்பட்டிருந்தது. மேலும், அந்த செயற்திட்டத்தின் சுற்றாடல் தாக்கமும் குறைவான மட்டத்தில் காணப்படுவதாக சூழல் தாக்க கற்கைகள் அறிக்கையின் பிரகாரமும் உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும், இந்த செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகை குறைந்த வட்டி வீதத்துடனான நீண்ட கால அடிப்படையில் மீள செலுத்த வேண்டிய கடன் தொகையொன்று என்பதால் மற்றும் இந்த செயற்திட்டத்தின் ஊடாக பொது போக்குவரத்துச் சேவையின் இயலளவினை அதிகரித்தல் மற்றும் சேவை வழங்குதல் ஆகியவற்றை மேம்படுத்தல் நோக்காக கொள்ளப்பட்டிருந்தமையால் மத்திய வங்கியின் கடன் சபையும் இந்த கடன் தொகையை பெற்றுக்கொள்ள பரிந்துரைத்திருந்தது. கொழும்பு நகரம் மற்றும் அதனை அண்மிய பிரதேசங்களை தொடர்புபடுத்தி ஆக்கபூர்வமானதும், செயற்திறனானதும் வேகமானதுமான புகையிரத போக்குவரத்துக் கட்டமைப்பொன்று காணப்படல் தலைநகர அபிவிருத்தி திட்டத்தின் அத்தியாவசியமான அங்கமொன்று என

குறிப்பிட்டு நிதி அமைச்சும் அவதானிப்புகளை முன்வைத்திருந்தது. மேலும், தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அந்த செயற்திட்டத்துடன் தொடர்புடையதாக திட்டமிடல் திணைக்களமும் இலகு புகையிரத செயற்திட்டத்தின் மூலம் பொருளதார அபிவிருத்தி, மக்களின் வாழ்க்கைத் தரத்தினை நிலைபேறானதாக அபிவிருத்தியடைதல் மற்றும் வாழ்க்கை நிலைமையில் தரம் சார்ந்த வளர்ச்சியொன்று ஏற்படுதல் செயற்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்காக பரிந்துரைக்கப்பட்டிருந்தது. சர்வதேச நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்பட்ட நிதி மற்றும் பொருளாதார பகுப்பாய்விற்கு இணங்கவும் விளைதிறன் உள்ளதாக இனங்காணப்பட்ட இந்த செயற்திட்டம் ஏற்றுக்கொள்ளக்கூடிய அடிப்படையொன்று இல்லாது ஆக்கபூர்வமான செயதிட்டமொன்றாக கருத்திற்கொள்ளாது எந்த அடிப்படையில் இரத்துச் செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

கோவிட் 19 தொற்று நிலைமைகள் காரணமாக இந்த திட்டத்தை செயலபடுத்த முடியாததால் ஒப்பந்தம் நிறுத்தப்படுவதாக ஜப்பான் அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்ததுடன், மேலும் இது அரசாங்கங்களுக்கிடையே மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளில் இருக்க வேண்டிய பரஸ்பர நம்பிக்கை மற்றும் நேர்மை ஆகியவற்றின் சீரழிவுக்கு வழிவகுக்கும் என்று அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த செயற்திட்டம் அல்லது கடன் உடன்படிக்கை நிறைவு செய்யப்படுதல் தொடர்பில் உரிய நிறுவனங்களுக்கு இடையே சரியான புரிந்துணர்வொன்று மற்றும் இணக்கப்பாடு இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

எவ்வாறான போதிலும், இலகு புகையிரத செயற்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இலங்கை அரசினால் அதிமேதகு முன்னாள் சனாதிபதியின் கட்டளையின் அடிப்படையில் செயற்திட்டத்தினை ஒருதலைப்பட்சமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானித்திருந்ததுடன், செயற்திட்டத்தினை மீள ஆரம்பித்தல் அல்லது அந்த செயற்திட்டத்திற்காக தற்போது செலவிடப்பட்டுள்ள ரூபா 5,977 ஆன செலவினங்களில் பெற்றுக்கொண்டுள்ள நலன்களையும் பயன்படுத்தி இந்த செயற்திட்டத்தை அல்லது மாற்றுச் செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனின் இந்த செலவினம் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட சிக்கனமற்ற செலவினமொன்றாக மாறும் என்பது அவதானிக்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட ஓரியன்டல் கன்சல்டன்ஸ் க்ளோபல் கம்பனி லிமிடட் கம்பனி எனும் முக்கியமான மதியுரைக் கம்பனியினால் கோரப்பட்ட இலாபம் இழப்பிற்கான நட்டஈடு ரூபா 5,169 மில்லியனான உரித்துத் தொகை அல்லது அந்த கோரிக்கைக்காக செலுத்தப்பட்ட தொகையை போன்றே எதிர்காலத்தில் செலுத்த நேர்கின்ற நட்டஈடு தாமத வட்டி அல்லது வேறு ஏதேனும் கொடுப்பனவொன்று இலங்கை அரசிற்கு நிச்சயமாக ஏற்படும் சிக்கனமற்ற செலவினம் ஆகும்.

வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் கடன் உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை ஜப்பானின் சர்வதேச ஒத்துழைப்பிற்கான நிறுவனத்தினால் (JICA) மறுதலிக்கப்பட்டமையால், இந்த நிறுவனம் தீர்ப்பனவு பணிக்காக சர்வதேச நீதிமன்றத்திற்கு செல்ல முடியாது என கூறுவதற்கு சான்றொன்று இல்லாதிருந்ததுடன், இவ்வாறு இடம்பெற்றால் இலங்கை அரசிற்கு பாதகமான நிலையொன்று ஏற்படல் (உயர்வான கிரயமொன்றினை மேற்கொள்ள நேரிடல்) தடுக்க முடியாது என்பது அவதானிக்கப்பட்டது.

அமைச்சரவையின் அல்லது நிறைவேற்றாளரின் தீர்மானத்தினை செயற்படுத்தும் உத்தியோகத்தர்கள் அந்த தீர்மானத்திற்கு இணங்க செயற்படுவதுடன், அந்த தீர்மானங்களின் பிரகாரம் செயற்படுவதுடன், அந்த தீர்மானங்கள் காரணமாக ஏதேனும் முக்கியமான சிக்கலொன்று ஏற்படக்கூடும் என தொழில்சார் முறையில் தீர்மானத்திற்கு வரக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படும் எனின், அந்த முடிவுகளை நிறைவேற்றாளருக்கு அறிக்கையிடும் நடைமுறையொன்றினை அறிமுகப்படுத்தும் இயலுமை தொடர்பில் அரசின் கவனம் செலுத்தப்பட வேண்டிய போதிலும், முறையான கற்கையொன்றின் பின்னர் எடுக்கப்பட்டுள்ள முன் தீர்மானங்களை மீள திருத்துவதற்கு.்.இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் போதுமுன் தீர்மானங்களுக்கு பங்களிப்பு செய்த தரப்பினரிடமிருந்து அது தொடர்பில் ஆராய்ந்து பெற்றுக்கொள்ளப்படும் தகவல்கள் தொழில்சார் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட வேண்டியமையும், இந்த செயற்திட்டத்திற்காக இது வரையிலும் செலவிடப்பட்டுள்ள தீர்க்கப்படாத கடப்பாடுகளை போன்றே சுவீகரிக்கப்பட்டுள்ள ஆதனங்கள் மாற்று திட்டமொன்றுக்காகவேனும் பயன்படுத்தி இந்த செலவினங்களில் காணப்படும் சிக்கனமற்ற தன்மையிலான தன்மையை சிக்கனமான நிலைக்கு உள்ளாக்குவதற்காக அதிக பிரயத்தனம் செய்ய வேண்டும். மேலும், 2021 திசெம்பர் மாதமளவில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ரூபா 5,066 மில்லியனான கடன் தொகை (Disbursement) உத்தேசிக்கப்பட்ட சலுகை அடிப்படையிலான நிபந்தனைகளின் அடிப்படையில் மீள தீர்ப்பனவு செய்யும் நிவாரணம் கடன் உடன்படிக்கை ஒருதலைப்பட்சமாக முடிவுறுத்தப்பட்ட பின்னரும் அவ்வாறே பேணிச் செல்வதற்கு தேவையான இணக்கப்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கும், அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு உரியதாக பொது திறைசேரி தமது அவதானிப்பினை முன்வைக்கும் போது அந்த விஞ்ஞாபனத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் தீர்மானங்களுக்காக ஒத்துழைப்பு வழங்குவதற்கு மேலாக தமது சுயாதீன தொழில்சார் அவதானிப்புகளை வழங்குவதற்கு உச்ச பிரயத்தனம் மேற்கொள்ளப்பட வேண்டியமை உள்ளடங்களாக சில பரிந்துரைகள் இந்த அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# செயலாற்றல் கணக்காய்வுத் துறை

## 2022 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சபைக்களிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகள் பின்வருமாறு ஆகும்

- ஒன்றிணைந்த வீதி முதலீட்டு வேலைத் திட்டத்தின் கீழ் கிராம மக்கள் மற்றும் சமூக பொருளாதார மத்திய நிலையங்களுக்கு இடையிலான வீதி நுழைவுத் தன்மையினை முன்னேற்றுவதற்கான செயலாற்றுகை அறிக்கை.
- புதிய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஆதாரங்களை அபிவிருத்தி செய்யும் செயல்பாட்டினை மதிப்பீடு செய்தல்.
- உள்நாட்டு சந்தைகளில் தரமான பொருட்களை விற்பனை செய்தல் தொடர்பாக இலங்கை கட்டளை நிறுவனத்தின் கடமைப் பொறுப்புகள்.
- அரச சார்பற்ற பாடசாலைகள் தொடர்பான ஒழுங்குறுத்தல் செயல்பாடு.
- இலங்கையில் தொற்றாத நாட்பட்ட நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் செயல்பாட்டினை ஒழுங்குறுத்தல்.
- மாகாண சபை நிறுவனங்களை அபிவிருத்தி செய்யும் பிரிவு ரீதியான செயல் திட்டத்தின் (புறநெகும) எதிர்பார்க்கப்பட்ட பலன்களை பெற்றுக் கொள்ளும் முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்தல்.
- மலைநாட்டு புதிய கிராம, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் மூலம் தோட்டப்புற மக்களுக்கு வீட்டு வசதிகளை வழங்கும் செயல் திட்டத்தின் செயலாற்றுகை.

# செயலாற்றல் கணக்காய்வுத் துறை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வுகள் தேசிய கணக்காய்வு அலுவலக வளாகத்தில் தாபிக்கப்பட்டுள்ள செயலாற்றல் கணக்காய்வு பிரிவின் மூலம் போன்றே கிளை மட்டத்திலும் மேற்கொள்ளப்படுகின்றது. தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் தாபிக்கப்பட்டுள்ள செயலாற்றல் கணக்காய்வு பிரிவின் மூலம் தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த தலைப்புகள் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்பட்டு செயலாற்றல் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன் கிளை மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற செயலாற்றல் கணக்காய்வுகளுக்கு தேவையான ஆலோசனை ரீதியிலான உதவியினை வழங்குதலும் இடம்பெறுகின்றது. இதற்கு மேலதிகமாக அதி உன்னத கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் புரிந்துணர்வு கணக்காய்வில் பங்கேற்பதும் இந்த செயலாற்றல் கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதே போன்று மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செயலாற்றல் கணக்காய்வுகளும் அதி உன்னத கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நிறுவனத்தினால் (INTOSAI) வழங்கப்பட்டுள்ள தரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றது.

செயலாற்றல் கணக்காய்வின் மூலம் ஏதேனும் அரச நிறுவனத்தின், வேலைத் திட்டத்தின், செயல் திட்டத்தின் அல்லது ஏதேனும் செலவு அலகில் தெரிவு செய்யப்பட்ட துறைகள் தொடர்பில் அதன் பொருளாதாரத் தன்மை, வினைத் திறன் மற்றும் உற்பத்தித் திறன் தொடர்பில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். அதன் போது குறித்த அவதானிப்புகளுக்கு மேலதிகமாக அவற்றை திருத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளும் குறித்த அறிக்கைகளில் உள்ளடக்கப்படும். ஏனைய கணக்காய்வுகளுடன் ஒப்பிடும் போது செயலாற்றுகை கணக்காய்வுகளுக்கு அதிக கால வீச்சு செலவிடப்பட வேண்டி உள்ளதுடன் அதற்கு அமைய 2022 ஆம் ஆண்டுக்கு முந்தைய வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட செயலாற்றல் கணக்காய்வுகளுக்கு உரியதான 2022 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சபைக்களிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகள் பின்வருமாறு ஆகும்.

1. ஒன்றிணைந்த வீதி முதலீட்டு வேலைத் திட்டத்தின் கீழ் கிராம மக்கள் மற்றும் சமூக பொருளாதார மத்திய நிலையங்களுக்கு இடையிலான வீதி நுழைவுத் தன்மையினை முன்னேற்றுவதற்கான செயலாற்றுகை அறிக்கை.

2. புதிய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஆதாரங்களை அபிவிருத்தி செய்யும் செயல்பாட்டினை மதிப்பீடு செய்தல்.

3. உள்நாட்டு சந்தைகளில் தரமான பொருட்களை விற்பனை செய்தல் தொடர்பாக இலங்கை கட்டளை நிறுவனத்தின் கடமைப் பொறுப்புகள்.

4. அரச சார்பற்ற பாடசாலைகள் தொடர்பான ஒழுங்குறுத்தல் செயல்பாடு.

5. இலங்கையில் தொற்றாத நாட்பட்ட நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் செயல்பாட்டினை ஒழுங்குறுத்தல்.

6. மாகாண சபை நிறுவனங்களை அபிவிருத்தி செய்யும் பிரிவு ரீதியான செயல் திட்டத்தின் (புறநெகும) எதிர்பார்க்கப்பட்ட பலன்களை பெற்றுக் கொள்ளும் முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்தல்.


7. மலைநாட்டு புதிய கிராம, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் மூலம் தோட்டப்புற மக்களுக்கு வீட்டு வசதிகளை வழங்கும் செயல் திட்டத்தின் செயலாற்றுகை.

மேலே கூறப்பட்ட கணக்காய்வுகளுக்கு மேலதிகமாக 2022 ஆம் ஆண்டிற்கு முன்னைய வருடங்களில் ஆரம்பிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சபைக்களிக்கப்பட்ட மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் வருடாந்த அறிக்கைக்கு இதுவரையில் விரிவான தகவல்கள் உள்ளடக்கப்படாத செயலாற்றல் கணக்காய்வு அறிக்கைகளின் முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டு பொழிப்பாக்கம் செய்யப்பட்ட அறிக்கை பின்வருமாறு ஆகும்.

## அரச நிறுவனங்களின் கட்டடத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் மற்றும் பயன்படுத்தல்.

அரச நிறுவனங்களில் நடவடிக்கைகளை பேணிச் செல்லுவதற்குத் தேவையான கட்டட தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்காக அரசுக்கு சொந்தமான கட்டடங்களைப் போன்றே வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டடங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த கட்டட நிர்மாணம், பராமரிப்பு மற்றும் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டடங்களுக்காக வாடகை செலுத்துவதற்கு அரசாங்கத்தினால் பாரிய அளவு செலவினை ஏற்க வேண்டி உள்ளது. அதற்கு அமைய அரச கட்டடங்களைப் பொருளாதார தன்மையுடன், வினைத்திறனுடன் மற்றும் உற்பத்தித் திறனுடன் பயன்படுத்தும் தேவைப்பாடு எழுந்துள்ளது. இவ்வாறு கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் கைப்பற்றுவதற்காக அரசாங்கத்தினால் குறிப்பிட்ட அளவு செலவினை ஏற்றுள்ள போதிலும் அரச நடவடிக்கைகளை பேணி செல்லுவதற்காக அரசுக்கு சொந்தமான கட்டட இடவசதிகள் போதிய அளவு இல்லாமை மற்றும் மேலதிக இடங்கள் காணப்படுகின்றமை, அவை பொருத்தமான அளவில் இல்லாமை, அரச கட்டட முகாமைத்துவத்தின் போது

அவசியமான மத்திய தரவு ஒழுங்கமைப்பினை பேணி செல்லாமை மற்றும் மதிப்பீடு செய்தலில் சிக்கல் காணப்படுகின்றமை என்பன இந்த கணக்காய்வினைத் தெரிவு செய்வதற்கான காரணமாகும். விசேட செலவு அலகுகளில் கட்டடங்கள், அரச பாடசாலைக் கட்டிடங்கள். உத்தியோகப் பூர்வ இல்லங்கள். வைத்தியசாலைக் கட்டிடங்கள், வெளிநாட்டு தூதராக அலுவலகங்கள் மற்றும் வெளிநாடுகளில் பேணிச் செல்லப்படும் கட்டடங்கள் அரச வங்கிகளுக்கு சொந்தமான கட்டடங்கள் தவிர மத்திய அரசுக்கு சொந்தமான கட்டிட பயன்பாடு இந்த கணக்காய்வில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதுடன் மதிப்பீட்டுத் திணைக்களத்தில் இருந்து கட்டடங்களை மதிப்பீடு செய்தல் தொடர்பான கொம்றோலர் ஜெனரல் அலுவலகத்தில் அதன் செயலாற்றல் தொடர்பிலும் தகவல்கள் இந்த கணக்காய்வின் போது பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வரவு செலவு மதிப்பீட்டிற்கு அமைய கட்டிடங்களை கொள்வனவு செய்தல், காணிகளை கொள்வனவு செய்தல், கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் கட்டிடங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரையில் மொத்த மூலதன நிதி ரூபா. 720 பில்லியன் ஒதுக்கப்பட்டு அதில் 67 சதவீதம் அதாவது ரூபா. 482 பில்லியன் மட்டும் செலவிடப்பட்டிருந்ததுடன் அது மொத்த அரச நிதி செலவில் 14 சதவீதத்திற்கும் 16 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. அவ்வாறு இருந்த போதிலும் அரச கட்டட தேவைப்பாட்டினை அதிகபட்ச செயலாற்றலுடன் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன் 2021 மார்ச் 31 ஆம் திகதி வரையில் அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் நியதிச் சட்ட நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் செயல் திட்டங்கள் உள்ளிட்ட 142 நிறுவனங்களின் 1,166 கட்டடங்களை பயன்படுத்துதல் தொடர்பாகக் கணக்காய்விற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களில் ,ருந்து அரச நிறுவனங்களில் கட்டட பயன்பாட்டில் செயலாற்றல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட பிரதான சிக்கல்கள் கீழே குறிப்பிடப்பட்ட தரவு வரைபடத்தின் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது




வரைபடம் : 1

அதே போன்று நிர்மாணிப்பின் போது, கொள்வனவு செய்யும் போது மற்றும் குத்தகைக்கு பெற்றுக் கொள்ளும் போது கட்டடங்களின் தேவைப்பாடு சரியான வகையில் இனம் காணப்படாத காரணத்தால் நிறுவனத்தின் நோக்கம் நிறைவேறும் வகையில் தமது கட்டடங்களை வினைத்திறனுடன், உற்பத்தித் திறனுடன் மற்றும் பொருளாதாரத்துடன் பயன்படுத்தப்படவில்லை என்பதும் நிறுவனத்துக்குச் சொந்தமான கட்டடங்களின் பயன்பாடு காலத்துக்கு காலம் மீளாய்வு செய்யப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. இட வசதி முகாமைத்துவத்தின் போது அனுமதிக்கப்பட்ட இடவசதிகள் ஒதுக்கீட்டுத் தரங்கள் இல்லாததுடன் அதற்கான கொள்கையும் காணப்படவில்லை.

அரச பணிகளுக்காகக் கட்டடங்களைக் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் போது அரச மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து மதிப்பீடு செய்யப்படாது குத்தகை பணம் செலுத்துதல், அரச மதிப்பீட்டினை பெற்றுக் கொள்ளாது அதிக குத்தகைப் பணம் செலுத்துதல் என்பன அவதானிக்கப்பட்டது. அரச

கட்டடங்களை மதிப்பீடு செய்யும் போது அதற்குத் தேவையான ஆவணங்கள் சரியாக அரச மதிப்பீட்டாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை போன்ற காரணங்களின் அடிப்படையில் அரச காணிகள் மற்றும் கட்டடங்கள் சரியான வகையில் மதிப்பீடு செய்யப்படாமை மற்றும் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தின் தாமதம் காரணமாக அரச கட்டடங்கள் சரியான பெறுமதிகளில் கணக்கீடு செய்யப்படாமை போன்ற காரணிகள் இந்த அறிக்கையில் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

அரசு நிறுவனங்களில் இடவசதி தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்யும் நோக்கில் கட்டடங்களை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் தேவையான நிதி இல்லாமை, நிர்மாண பலவீனம், நிர்மாணத்தினை இடை நடுவில் நிறுத்துவதற்கு தீர்மானித்தல், நிர்மாண நடவடிக்கைகள் தாமதமடைதல், நிறுவனங்களின் தேவைப்பாடுகளுக்கு அமைய அவ்வப்போது கட்டட திட்டத்தினை மாற்றுதல் மற்றும் மொத்த செலவு மதிப்பீடு மாற்றமடைதல் என்பன கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் ஆகும்.

அதே போன்று நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பில் முழுமையான மத்திய தரப்படுத்தப்பட்ட தகவல் ஒழுங்கமைப்பினை பேணிச் செல்லுதல், வினைத்திறனான பயன்பாட்டினை உறுதிப்படுத்தி அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்து முகாமைத்துவம் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையினை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் என்பன கொம்றோலர் ஜெனரல் அலுவலகத்தின் பிரதான செயல்பாடாகும். அவ்வாறிருந்த போதிலும் அவ்வாறான மத்திய தரப்படுத்தப்பட்ட தரவு ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளில் அசாதாரண தாமதம் மற்றும் அரச கட்டட பயன்பாடு மற்றும் முகாமைத்துவம் அதன் மூலம் கண்காணிப்பு செய்யப்படுதல் இடம் பெறாமை என்பன இங்கு தெளிவாக காணக்கூடிய அவதானிப்புகள் ஆகும்.

கணக்காய்வினால் பரிந்துரையாக அரச கட்டடங்கள் தொடர்பான தேசிய கொள்கையினை உருவாக்குதல், கண்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் மத்திய தரப்படுத்தப்பட்ட தகவல் ஒழுங்கு அமைப்பினை உடனடியாக தாபித்தல் மற்றும் அனைத்து அரசு நிறுவனங்களினாலும் தமக்கு சொந்தமான கட்டடங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் தரவுகள் பேணப்பட்டு கட்டடத்தில் உள்ள இடவசதிகளில் குறைபாடுகள் மற்றும் மிகை என்பவற்றைக் காலத்துக்கு காலம் ஆய்வு செய்தல் போன்ற விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதே போன்று கட்டடம் ஒன்றை நிர்மாணிக்கம் போது, கொள்வனவு செய்யும் போது அல்லது குத்தகைக்கு பெற்றுக் கொள்ளும் போது அந்த கட்டடம் ஈடுபடுத்தப்படும் கடமைப் பொறுப்பு, அதில் சேவையில் ஈடுபடும் பதவி அணியினர் மற்றும் பயன்படுத்தப்படும் உபகரணங்களின் தன்மைக்கு அமைய தேவையான இடவசதி அளவு எதிர்கால தேவைப்பாடு என்பன சரியான வகையில் கணிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டு கட்டிடங்களின்

உண்மையான தேவைப்பாட்டை சரியான வகையில் அடையாளம் காண்பதற்கான வழிகாட்டலைத் தயாரித்தல் மற்றும் இடவசதி பயன்பாடு தொடர்பான தரத்தினை அறிமுகப்படுத்துதல் போன்ற பரிந்துரைகளும் இங்கு முன்மொழியப்பட்டிருக்கின்றன.

**கொழும்பு நகரம் மற்றும் அதனை அண்டிய நுழைவு வீதிகளில் வாகன நெருக்கடியைக் குறைப்பதற்கு உரிய அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட கடமைப் பொறுப்புகளை மதிப்பீடு செய்தல்.**

நாட்டின் அபிவிருத்தி நோக்கில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுள் முறையான வீதி ஒழுங்கமைப்பு என்பது தேவைப்பாட்டுக்கு அமைய விரிவுபடுத்தப்பட்ட போதிய அளவிலான மற்றும் தரத்தினை கொண்ட உட்கட்டமைப்பு வசதியாக இருத்தல் வேண்டும். அதே போன்று, நகரத்தினுள் இடம்பெறும் அபிவிருத்தி பணிகளுக்கு சமனாக வீதி ஒழுங்கமைப்பு அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும். இதற்காக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அறிவியல் அடிப்படையில் தற்காலத்திற்கு மற்றும் எதிர்காலத்திற்குப் பொருத்தமான வகையில் வீதி ஒழுங்கமைப்பு தயாரிக்கப்பட்டு உள்ளது எனினும் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அது இன்னமும் தீர்க்கப்படாத சிக்கலாகக் காணப்படுகின்றது. மேல் மாகாணத்தினுள் அது விசேடமாக இருப்பது கொழும்பு வர்த்தக நகரமாக மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை தலைநகராக இருக்கும் காரணத்தால் ,ந்த நகர எல்லைக்குள் மற்றும் அதற்காக உள்ள நுழைவுகளில் இந்த சிக்கல் மூலம் சமூக, நிர்வாக, பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சுற்றாடல் ரீதியிலான தடைகள் ஏற்படும் சூழல் எழுந்துள்ளதால் ஆகும். காலி வீதி, ஹை லெவல் வீதி, புதிய கண்டி வீதி, லோ லெவல் வீதி, நீர் கொழும்பு வீதி, கண்டி வீதி மற்றும் ஹொரண வீதி உள்ளிட்ட 07 நுழைவு வீதிகளில் பெருமளவு எண்ணிக்கையிலான வாகனங்கள் இலங்கையின் வர்த்தக நகரமான கொழும்பு நகரை நோக்கி நுழையும் காரணத்தால் அங்கு நாளாந்தம் பாரிய எண்ணிக்கையில் வாகனங்கள் பயணிக்கின்றன.

கொழும்பு நகரம் மற்றும் அதனை அண்டிய நுழைவு வீதிகளில் காணப்படும் அதிக வாகன நெருக்கடியை முகாமைத்துவப்படுத்துவதற்காகக் குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்வுகளை வழங்குதல் தொடர்பில் அரசாங்கம் மற்றும் போக்குவரத்து முகாமைத்துவத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டிய நிறுவனங்கள் நிறைவேற்றுகின்ற மற்றும் நிறைவேற்றப்பட வேண்டிய கடமை பொறுப்புகளின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனை மதிப்பீடு செய்தல் இந்த செயலாற்றல் கணக்காய்வின் பிரதான நோக்கமாகும். இங்கு தேசிய பௌதீக திட்டத்தினை போன்றே நகர திட்டம் மற்றும் வீதி திட்டங்களுக்கு இணங்க போக்குவரத்து, வாகன முகாமைத்துவம், நகர அபிவிருத்தி மற்றும் வீதி அபிவிருத்தி தொடர்பில் அரச நிறுவனங்களின் கடமை

பொறுப்புகள் நிறைவேற்றப்படுதல் பரீட்சிப்பு செய்யப்பட்டது .

வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நகர அபிவிருத்தி, போக்குவரத்து மற்றும் வீதி அபிவிருத்தித் திட்டம் சட்ட ரீதியான ஆவணமாக மாற்றப்படாமை, வாகன நெருக்கடியில் செல்வாக்கு செலுத்தும் காரணங்களைத் தீர்மானமாக அடையாளம் கண்டு அவற்றை குறைப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் முன்னுரிமை இனம் காணப்படாமை, நகர அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து ஆகிய அனைத்து பிரிவுகளையும் ஒன்றிணைப்பதன் மூலம் அரச நிறுவனங்களின் பொறுப்புக்கள் இனம் காணப்படாமை போன்ற சிக்கல்கள் திட்டமிடுதலின் போது அவதானிக்கப்பட்டது. வீதி அபிவிருத்தி திட்டம், தேசிய பௌதிக திட்டம் மற்றும் நகர அபிவிருத்தி திட்டம் ஆகிய பிரதான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில் பொருளாதாரத் தன்மை, வினைத்திறன் மற்றும் உற்பத்தி திறன் குறைவடைதல் ,தில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. அதே போன்று போக்குவரத்து மற்றும் வீதி அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கைகள் வரைவு மட்டத்தில் காணப்படுகின்ற காரணத்தால் வாகன நெருக்கடியைக் குறைப்பதற்காக எடுக்கப்படும் வழிமுறைகள் ஒரே மாதிரியாக மற்றும் தொடர்ச்சியாக செயல்படாமை என்பன அவதானிக்கப்பட்டது. இந்த பிரதான திட்டத்துடன் இணைந்து குறித்த நிறுவனங்களின் செயல்பாட்டு திட்டம் தயாரிக்கப்படுவதில்லை என்பதும் வீதி நெருக்கடியை குறைப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய வழிவகைகள் இந்த செயல்பாட்டு திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

முறையான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படாத காரணத்தால் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட மாநகர திட்டத்தில் முன்மொழியப்பட்டிருந்த பேருந்து முன்னுரிமை பாதைகள், நெகிழ்ச்சியான அலுவலக நேரங்கள், நீர் போக்குவரத்து போன்ற செயல் திட்டங்களில் மற்றும் மிலேனியம் செயல்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு இயலாதிருந்தது. மாலம்பே தொடக்கம் கோட்டை வரையான இலகு ரயில் போக்குவரத்து செயல் திட்டம் வெளிநாட்டு நிதி உதவியில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டு அடிப்படை வேலைப் பகுதி பூர்த்தி செய்யப்பட்டு இருந்ததுடன் மேற்கு வலய இலகு ரயில் பாதை செயல் திட்டத்தின் அடிப்படை சாத்தியக்கூறு ஆய்வு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும் தற்போது வரையிலும் இந்த இரு செயல் திட்டங்களும் நிறுத்தப்பட்டு உள்ளதுடன் அதற்கு அமைய 2019 திசெம்பர் 31ஆம் திகதி வரையில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா. 11,537 மில்லியன் செலவு பயனற்றதாக இருந்தது.

அதே போன்று இந்த செயல் திட்டத்துடன் இணைந்ததாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வாகனத் தரிப்பிட முகாமைத்துவம், வீதிச் சந்தி கட்டுப்பாடு,

வாகன போக்குவரத்தினை கட்டுப்படுத்துதல், முற்பண அட்டை பேருந்து கட்டண முறைமை, ஓட்டுனர் முன்னேற்ற புள்ளி முறைமை மற்றும் நகர மத்திக்குள் நுழையும் வாகனங்களுக்கான கட்டணங்களை அறவிடுதல் போன்ற முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தாமை, 2019 ஆம் ஆண்டில் 9 ஆடம்பர பேருந்துகளை மட்டும் கொள்வனவு செய்யக் கூடியதாக இருந்தமை மற்றும் தேவைப்பாட்டுக்கு ஏற்ப அலுவலகம் மற்றும் பாடசாலைப் போக்குவரத்து சேவை முன்னேற்றம் அடையாமை என்பன அவதானிக்கப்பட்டன. கொழும்பு மற்றும் அண்டிய பிரதேசங்களில் இடம்பெறும் அனுமதியற்ற நிர்மாணிப்புகள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் காரணமாக ஏற்படும் வாகன நெருக்கடி மற்றும் அதன் மூலம் ஏற்படும் தாக்கங்கள் (TIA) என்பவற்றை மதிப்பீடு செய்வதற்காக தொடர் நடவடிக்கை ஒன்று பாரிய கொழும்பு பிரதேசத்தில் போதிய அளவில் மேற்கொள்ளப்படாமை, வாகனத் தரிப்பிட வசதிகள் போதிய அளவில் இல்லாமை என்பன வாகன நெருக்கடி அதிகரிப்பதற்குக் காரணமாக இருந்தன. அதே போன்று, கொழும்பு பிரதேசத்திற்கு வாகன பொலிஸ் படை அணியினர் போதிய அளவில் இல்லாமை, பயிற்சி அளிக்கப்படாத வாகன பொலிஸ் பதவி அணியினர் 78 சதவீதத்திற்கும் 86 சதவீதத்திற்கும் இடையில் இருத்தல் வாகன முகாமைத்துவம் தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

அதனால் வாகன நெருக்கடிக்குக் காரணமான காரணிகள், அதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகளின் முன்னுரிமை மற்றும் குறித்த நிறுவனங்களில் அது தொடர்பிலான பொறுப்பு சரியான முறையில் அடையாளம் காணப்பட்டு அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து வாகன நெருக்கடியைக் குறைப்பதற்கு தனியான திட்டமொன்றைத் தயாரித்து வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சட்டமாக்கி அந்த திட்டத்தினை சரியான நேரத்தில் நடைமுறைப்படுத்துதல், பொருத்தமான வாகன பொலிஸ் பதவி அணியினரை தேவைப்பாட்டிற்கு ஏற்ப கொழும்பு பிரதேசத்திற்கு இணைத்தல், ஓட்டுநர் முன்னேற்ற புள்ளி முறைமையை உடனடியாக நடைமுறைப்படுத்துதல், பயணிகள் போக்குவரத்தினை முன்னேற்றுவதற்காக முன்மொழியப் பட்டிருந்த செயல் திட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துதல், பாடசாலை மற்றும் அலுவலக போக்குவரத்து சேவைக்காக ஒழுங்கான வேலை திட்டம் ஒன்றை தயாரித்தல், நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஏனைய மாகாண நிர்வாக நிறுவனங்கள் ஒன்றிணைந்து அனுமதியற்ற நிர்மாணிப்புகள் மேலும் உருவாகுவதை தடுப்பதற்கான தொடர் நடவடிக்கை முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்கு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

# சுற்றாடல் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

- சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்படாது கழிவு நீர் சுத்திகரிப்பு முறையை இயக்குதல்
- முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்
- சொத்துக்களின் குறைவான பயன்பாடு

# சுற்றாடல் துறை

நிலைபேறான அபவிருத்தியுடனான இலங்கை எனும் நோக்கு மற்றும் நிலைபேறான இயற்கை வள முகாமைத்துவத்தின் மூலம் சுற்றாடல் முகாமைத்துவத்திற்காக தலைமைத்துவத்தை வழங்குவது சுற்றாடல் அமைச்சின் செயற்பணியாகும். அச் செயற்பணியை மேற்கொள்வதற்காக சுற்றாடல் அமைச்சும் இதன் கீழுள்ள நியதிச் சட்ட சபைகள்/ 04 நிறுவனங்களான மத்திய சுற்றாடல் அதிகாரசபை, புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம், GSMB தொழில்நுட்ப சேவைகள் கம்பனி மற்றும் இலங்கை வானிலை நிதிய தனியார் கம்பனி எனும் நிறுவனங்களால் பின்வரும் செயற்பாடுகளும் பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

- நிலையான வளர்ச்சிக் கொள்கை களை வகுத்து அவற்றைப் பயன்படுத்துவதற்காக பங்குதாரர்களின் பங்கேற்புடன் சுற்றாடல் மற்றும் இயற்கை வளத் துறைகளில் உள்ள பிரச்சனைகளைக் கண்டறிந்து பகுப்பாய்வு செய்தல்
- சுற்றாடல் மற்றும் இயற்கை வள பாதுகாப்பு தொடர்பான கொள்கைகளை வகுப்பதற்காக தொடர்புபட்ட தரப்பினருக்கு அறிவித்து செயற்படுத்துவதை உறுதி செய்தல்.
- சுற்றாடலுக்கும் இயற்கை வளங்களுக்கும் இணங்கக் கூடிய கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கு இயலுமான வகையில் உபாய மார்க்கங்களையும் செயற்பாட்டுத் திட்டங்களையும் தயாரித்து முன்னோடித் திட்டங்களைச் செயற்படுத்துதல்
- சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பான கொள்கை சீர்திருத்தம் மற்றும் நிலையான சூழல் பற்றிய கருத்து போன்ற முக்கிய சுற்றாடல் செயன்முறைகள் குறித்து தேசிய அளவில் பொது மக்களுக்கு அறிவூட்டுதல்.
- இலங்கையால் கையொப்பமிடப் பட்டுள்ள பலதரப்பு சுற்றாடல் தரங்களுக்கு இணங்க இலங்கையால் நிறைவேற்றப்பட வேண்டிய சர்வதேச கடப்பாடுகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துதல்.
- சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் துறை தொடர்பான பின்தொடர் முறைகளை அமைத்து பின்தொடர்வின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சுற்றாடல் முகாமைத்துவத்திற்கான பொருத்தமான உபாயமார்க்கங்களைப் பயன்படுத்துதல்.
- கொள்கைகளை நடைமுறைப் படுத்துகையில் சுற்றாடலுக்கு நேரும் பாதிப்புகள் குறித்து ஆய்வுகளை நடாத்தி, அத் தகவல்களின் பகுப்பாய்வையும் அத் தகவல் களையும் பொதுமக்கள் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுப்பிவைத்தல்.
- சிறந்த சுற்றாடல் முகாமைத்துவத் திற்காக அரச, அரச சார்பற்ற துறைகள் மற்றும் பொது மக்களின் அர்ப்பணிப்பிற்காக ஏற்ற சூழலை உருவாக்குதல்.

2022 ஆம் ஆண்டின் போது மேற்குறித்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக சுற்றாடல் அமைச்சிற்கு சேர்க்கப்பட்ட ரூபா 1,691 மில்லியன் தொகையான தேறிய ஒதுக்கீடு பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 1,510 மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி, ஆண்டின் இறுதியிலான மீதி ரூபா 181 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது.

மேற்குறித்த செயற்பாடுகளையும் பணி களையும் மேற்கொள்வது தொடர்பாக கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கிய மற்றும் பொருண்மையான கணக்காய்வு அவதானிப்புகள் தொகுக்கப் பட்டு கீழே காண்பிக்கப் பட்டுள்ளன.

### சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்படாது கழிவு நீர் சுத்திகரிப்பு முறையை இயக்குதல்

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (திருத்தம்) அதிகாரச் சட்டத்தின் 23(அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம் அதிகாரசபையால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழும் அச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படக்கூடிய ஏனைய ஏதேனும் நியமங்களுக்கும் ஏனைய துணைவிதிகளின் படி தவிர சுற்றாடலிற்கு மாசடைவை ஏற்படுத்தக் கூடிய கழிவுகளை சுற்றாடலுக்கு விடுவித்தலாகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், சுற்றாடல் அமைச்சின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையின் பயன்பாடு ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் கணக்காய்வுத் தினமாகிய 2023 மே 03 ஆம் திகதி வரையிலும் (05 ஆண்டுகளுக்கும் மேலான காலம்) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தைப் பெறாது இயங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பெறுகை வழிகாட்டல் விதிக் கோவையின் பிரகாரம், ஏலம் ஏற்கப்பட்டதை அடுத்து, குறித்த நிறுவனத்துடன் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திட வேண்டிய போதிலும், அமைச்சால் 2022 அம் ஆண்டின் பாதுகாப்பு சேவைகள் வழங்கப் படுவதற்காக ஒப்பந்த உடன்படிக்கை 2022 ஆகஸ்ட் 17 ஆம் திகதியே கைச்சாத்திடப் பட்டிருந்ததுடன் 2022 சனவரி முதல் 2022 ஆகஸ்ட் 17 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக சட்டரீதியான உடன்படிக்கை இன்றி ரூபா 5 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### சொத்துக்களின் குறைவான பயன்பாடு

“சொபாதம் பியஸ” கட்டிட வளாகத்தில் ரூபா 3.5 மில்லியன் செலவில் மீள் சுழற்சி முறையொன்று ஸ்தாபிக்கப் பட்டிருந்ததுடன் இதன் மூலம் உயிர் வாயு உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப் படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும், கட்டிடம் ஆரம்பிக்கப்பட்ட தினமாகிய 2017 செப்தெம்பர் 14 ஆம் திகதி முதல் கணக்காய்வுத் தினமாகிய 2023 மார்ச் 23 ஆம் திகதி வரையான 5 வருடகாலப் பகுதிக்கு மேலான காலமாக உற்பத்தி யாகிய உயிர் வாயு பயன்படுத்தப் பட்டிராததுடன் மூடப்பட்ட கழிவு நீர் முறைமையில் உற்பத்தியான உயிர் வாயு எந்தவித பயன்பாட்டிற்கும் எடுத்துக் கொள்ளப்படாது வாயு மண்டலத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

# விவசாயத் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

- விவசாய அமைச்சு
    - ஏற்பாடுகளின் பயன்பாடு
    - தேசிய தாவரவியல் தனிமைப்படுத்தல் மாதிரிப் பரிசோதனை விளைவற்ற சேதனப் பசளை இறக்குமதி செய்யப்பட்டமையால் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள நட்டம்
- வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி
    - நெநோ நைட்ரஜன் திரவ உரத்தை இறக்குமதி செய்கையில் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த பணத்தை அறவிட்டிராமை
    - உரக் கம்பனியால் திறைசேரியிடம் இருந்து மீளளிக்கப்பட்டிருந்த மானியப் பெறுமதி மீள அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.
- விவசாய அபிவிருத்தி திணைக்களம்
    - ஏற்பாடுகளின் பயன்பாடு
    - பட்டியல்களுக்காக பொறியியலாளரினதும் தொழிநுட்ப உத்தியோகத்தரினதும் பரிந்துரையின்றி உதவி ஆணையாளரால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை.
    - அவசர தேவைக்காக எனக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.
    - அறவிடப்பட வேண்டிய பணம் அறவிடப்படாதிருந்தமை
    - செயற்திட்டம் நிறைவேற்றப்படுவதில் தாமதம்
    - கமநல வங்கி முன்னோடிச் செயற்திட்டம் மற்றும் கமநல அபிவிருத்திச் செயற்பாட்டுக் குழுக்களுக்காக முகாமைத்துவ மென்பொருள் முறைமை ஒன்றிற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.
- ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய நடவடிக்கைகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்
    - விடுவிக்கப்பட்டிருந்த சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரிக்கு வழங்கப்பட்ட சம்பளத்தை மீளளிக்கப்பட்டிராமை
    - வெளிநாட்டுக் கற்கைச் செலவுகளை மீள அறவிடப்பட்டிராமை
- விவசாய மற்றும் விவசாய காப்புறுதி சபை
    - விவசாய முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்றை தயாரிப்பதற்காக நிதியத்தைப் பயன்படுத்தியிருந்த போதிலும், அம் முறைமையைப் பயன்படுத்தியிராமை
    - பயிர்ச்சேதத்திற்கான இழப்பீடுகளுடன் தொடர்பான விவசாயிகளை இனங்கண்டு தீர்க்கப்பட்டிராமை
    - காப்புறுதித் தவணைப் பணத் தொகையைக் கழித்து விவசாயிகளுக்கு காப்புறுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டிராமை
    - மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டம்
    - ஓய்வூதிய நலன்கள் வழங்குவதில் தாமதம்
- விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டம்
    - திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெற்ற நிர்வாகச் செலவினங்கள் விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதித் திட்டத்தின் வங்கிக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தமை
    - ஓய்வூதிய நலன்கள் வழங்கப்பட்டிராமை

- **விவசாயிகளின் அறக்கட்டளை நிதியம்**
    - **அதிஷ்ட இலாபச்சீட்டு வருமானம் முறையாக விவசாயிகளின் அறக்கட்டளை நிதியத்திற்கு வழங்கப்பட்டிராமை**
    - **நிதியத்தின் பணம் தொடர்ந்து நிலையான வைப்புகளிலும் திறைசேரி உண்டியல் களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தமை**
- **இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைப் பேரவை**
    - **செயற்திட்ட மோட்டர் வாகனம் ஒன்று சொந்தப் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப் பட்டிருந்தமை.**
    - **வாழ்வாதாரக் கொடுப்பனவு மீள அறவிடப்பட்டிராமை**
    - **இயற்கை விவசாயத் துறை தொடர்பான ஆராய்ச்சி நிறுவனங்களை ஊக்குவித்திராமை**
- **பிம் சவிய நிகழ்ச்சித்திட்டம்**
    - **நில வளங்களின் உரிமைகளைத் தீர்த்து, வருங்கால சந்ததியினருக்காக காணி களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை.**
    - **திட்டமிட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிராமை**
    - **பிரதேச செயலகப் பிரிவுகளில குறிப்பிடப்பட்ட அளவில் மாத்திரம் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தமை**
    - **கட்டிட வாடகையும் பாதுகாப்புச் செலவினங்களும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த பணி மேற்கொள்ளப் பட்டிராமை**
- **காணிச் சீர்திருத்த ஆணைக்குழு**
    - **முக்கிய பணியான காணிப் பதிவேடு தயாரிப்பு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.**
    - **காணி மற்றும் பிரசுரிக்கப்பட்ட தோட்டக் காணிகள் மிகவும் குறைவான மீதியைக் கொண்டிருந்தன.**
    - **நிலுவையாகக் காணப்பட்ட இழப்பீட்டுத் தொகை தீர்க்கப்பட்டிராமை**

# விவசாயத் துறை

உணவுப் பாதுகாப்பு மற்றும் தேசிய செழிப்பிற்காக வினைத்திறனான, பயனுள்ள மற்றும் உறுதியான விவசாயத் துறையொன்றை ஸ்தாபித்தல் இத் துறையின் பிரதான இலக்காகவும் இயற்கை வளங்களை நிலைபேறான முகாமைத்துவத்தின் மூலம் சமூக ரீதியான ஏற்றுக்கொள்ளப்பட்ட வணிகப் போக்கைக் கொண்ட, உலகளாவிய போட்டி உற்பத்திப்பொருளை உருவாக்கும் தொழில்முனைவான விவசாயத்துறையை மேற்கொள்வதை தமது நோக்காகக் கொண்டு இனங்காணப்பட்ட விவசாய அமைச்சு தற்போது அந் நடவடிக்கைகயை மேற்கொள்வதற்காக விவசாயப் பிரிவு, கால்நடை வளங்கள் அபிவிருத்திப் பிரிவு, உரங்கள் பிரிவு மற்றும் கிராமிய பொருளாதார பயிற்செய்கை மற்றும் மேம்பாட்டுப் பிரிவாகச் செயற்படுகின்றது. இவ் அமைச்சின் கீழ் 03 திணைக்களங்களும் 14 நியதிச்சட்ட நிறுவனங்கள் பின்வரும் நோக்கங்களையும் செயற்பணிகளையும் மேற்கொள்வதற்காக செயற்பட்டு வருகின்றன.

- அரசாங்கத்தால் அமுலாக்கப்படும் தேசியக் கொள்கை அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டு விவசாய விடயத்திற்கு உரித்தான திணைக்களமும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயத்திற்கு உரித்தான கொள்கை, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை வகுத்து, பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் மதிப்பிடல்.
- அமைச்சின் நோக்கெல்லைக்குப் பொறுப்பான மக்கள் சேவைகளை செயற்திறனான முறையிலும் மக்களின் மனதைக் கவரும் வகையிலும் வழங்குதல்.
- விரயத்தையும் ஊழலையும் முறையடிக்கும் வகையில் அமைச்சின் பணி மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு துணைபுரியும் வகையில் நவீன முகாமைத்துவ முறை மற்றும் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி சகல முறைகளையும் நடைமுறைகளையும் மறுசீரமைத்தல்.
- உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் உணவை உற்பத்தி செய்தல்.
- இருப்புகளைப் பேணுவதற்காகவும் வழங்கல் நடவடிக்கைகளை முறையாகச் செயற்படுத்துவதற்கும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்.
- பயிர்ப் பல்வகைப்படுத்தலை அடிப்படையாகக் கொண்ட விவசாய உற்பத்தியை மேம்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல்.
- உள்நாட்டு விவசாய உற்பத்திகளின் தரத்தை மக்களுக்கு உறுதிப்படுத்துவதற்குத் தேவையான முறைகளைத் தயாரித்தல்.

- பாரம்பரிய விவசாயிகள், இளைஞர் சமூகம் மற்றும் மாணவ மாணவிகளை நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விவசாயக் கல்வி வாய்ப்புக்களுக்கு வழிநடாத்துதல்
- இளம் விவசாய தொழில்முனைவோரை உருவாக்குவதற்கு ஊக்குவித்தல்.
- இரசாயன பூச்சிக்கொல்லிகள் மற்றும் ஏனைய இரசாயன கலவைகளை குறித்துரைக்கப்பட்ட நியமத்தின் படி பயன்படுத்துவதற்கான ஒழுங்குமுறைப்படுத்துதல்.
- விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களிற்காக பயிர்க் காப்புறுதித் திட்டங்களையும் விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டங்களையும் விரிவுபடுத்துதல்.
- நேரடி உற்பத்தியாளர்கள், செயன்முறைப்படுத்தும் நிறுவனங்கள், மொத்த விற்பனைக் கம்பனிகளிற்கும் ஏற்றுமதிக் கம்பனிகளுக்குமிடையிலான திட்டமிடப்பட்ட ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் உற்பத்திகளுக்கு அதிக விலையைப் பெற்றுக்கொடுத்தல்.
- காலநிலை மாற்றம் மற்றும் வானிலை தொடர்பான நாளாந்த தகவல்களை விவசாய சமூகத்திற்கு தெரிவிப்பதன் மூலம் இயற்கை அனர்த்தங்களை குறைத்துக்கொள்ளுதல்.
- தரமான விதைகள் மற்றும் செடிகளை விவசாய சமூகத்திற்கு வழங்குவதற்கான நடைமுறை ஒன்றை அமுற்படுத்துதல்
- நீர் முகாமைத்துவம் மற்றும் விவசாயிகள் பயிரிடலிற்குத் தேவையானதன் படி நீர் விநியோகத்தை முகாமைசெய்தல்.
- விவசாய அபிவிருத்தி வலயங்கள், விவசாயக் கிராமங்கள் மற்றும் நிலையேறான வீட்டுத்தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்.
- இலங்கை கமநல சேவையை நிர்வகித்து பதவியணி முகாமைத்துவம் செய்தல்.
- சிறிய அளவிலான கமநல வியாபாரங்களையும் அமைப்புகளையும் கட்டியெழுப்பி விஸ்தரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்
- சேதனப் பசளைகளைப் பயன்படுத்துத்தி நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்திக்காக முறைப்படி நாடும் நிகழ்ச்சித் திட்டங்களை விஸ்தரித்து ஊக்குவித்தல்.
- தரமான நிலையில் உள்ள பசளைகளை இறக்குமதி செய்து பகிர்ந்தளித்து அரசாங்க மானியக் கொள்கைக்குள் செயற்திறனான முறையில் செயற்படுத்துதல்.
- உரிய தரத்திலான இரசாயனப் பசளைகள் மற்றும் சுற்றாடலிற்கு ஏற்ற சேதனப் பசளையை உரிய காலத்தில் பகிர்ந்தளிப்பதற்கான முறை ஒன்றைத் தயாரித்தல்.
- உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சர்வதேச தரத்திற்கு இணங்க சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவித்தல்.
- உள்ளூர் விவசாயிகளையும் நுகர்வோரையும் திருப்திகொள்ளும் வகையில் நியாய விலைக் கொள்கை

மற்றும் பயிர் பல்வகைமைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துதல்.

- வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டங்களை செயற் படுத்துதல்.
- மிகை உற்பத்திப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்காக முறையான செயற்பாடொன்றைத் தயாரித்தல்.
- விவசாய உற்பத்திப் பெறுமதியைச் சேர்த்து ஏற்றுமதி செய்வதற்கான செயற்பாடொன்றைத் தயாரித்தல்.
- சர்வதேச தரத்திலான தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கான உள்ளூர் விதைக் கொள்கை யொன்றை அறிமுகப்படுத்தல்.
- தரமான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு தனியார் துறையை ஊக்குவித்தல்.
- தனித்துவமாக முளைக்கும் தரத்துடனும் நோய்கள் மற்றும் காலநிலை மாற்றங்களிற்கு எதிர்த்து நிற்கக்கூடியதுமான அதிக விளைவு தரும் நாற்றுகளை அறிமுகப் படுத்துதல்.
- அரசாங்கப் பண்ணைகளையும் விதை உற்பத்திப் பண்ணைகளையும் அபிவிருத்தி செய்தல்.
- உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பயிர்களின் இறக்குமதியைக் குறைத்தல்.
- கால்நடைத் துறையில் உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
- விலங்கு நலனும் அவை தொடர்புடைய நடவடிக்கைகளும்.
- நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கால்நடைகள் தொடர்பான ஆராய்ச்சித் துறையை விரிவுபடுத்தல்.
- கால்நடைத்துறையில் விலங்கின எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக விஞ்ஞான ரீதியான இனப்பெருக்க முறைகளை பிரசித்தப்படுத்தி அவ் விலங்குகளை நோய்களில் இருந்து பாதுகாத்து தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள்
- பல்வேறு புவியியல் தேவை களுக்கேற்ப சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பண்ணைகளின் விருத்தியை ஊக்குவித்தல்.
- கால்நடை தொடர்பான உற்பத்தியை அதிகரித்து ஏற்றுமதிக்காக ஊக்கப்படுத்தல்
- மத்திய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடைப் பண்ணைகளை நிர்மாணிப்பதற்காக தேவையான காணி மற்றும் முதலீட்டு வசதிகளை வழங்குதல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்திகளை அதிகரித்து உள்நாட்டு உற்பத்தியையும் நுகர்விற்கான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துதல்.
- இலங்கை விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதார சேவை நிர்வாகம் மற்றும் ஆளணி முகாமைத்துவம்
- நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கும் உரித்தான நடவடிக்கைகள்.
- விவசாய அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களையும் கண்காணித்தல்.

விவசாய தொழில்நுட்பப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த மேற்குறித்த நோக்கங்களையும் பணிகளையும் மேற்கொள்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சில விடயங்கள் பின்வருமாறு தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

### விவசாய அமைச்சு

#### ஏற்பாடுகளின் பயன்பாடு

2022 ஆம் ஆண்டின் போது விவசாய அமைச்சிற்கு ரூபா 123,052 மில்லியன் தொகையான தேறிய ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 95,151 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டு ரூபா 27,901 மில்லியன் தொகையான ஏற்பாடு எஞ்சியிருந்தது.

#### தேசிய தாவரவியல் தனிமைப்படுத்தல் மாதிரிப் பரிசோதனை

#### விளைவற்ற சேதனப் பசளை இறக்குமதி செய்யப்பட்டமையால் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள நட்டம்

சேதனப் பசளை இறக்குமதியின் போது 1999 இன் 35 ஆம் இலக்க பயிர்ப் பாதுகாப்புச் சட்டத்தின் படி, பயிர் தனிமைப்படுத்தல் சான்றிதழும் கமநலப் பணிப்பாளரால் விநியோகிக்கப்பட்ட இறக்குமதி அனுமதிப்பத்திரம் ஒன்றும் பெறப்படல் வேண்டும். எனினும், அத்தகைய அங்கீகாரம் வழங்கப்படாது தேசிய பயிர் தனிமைப்படுத்தல் தெரிவுப் பரிசோதனை தோல்வியென அறிந்திருந்தும் 2021/2022 பெரும்போகத்தின் 500,000 ஹெக்டேயருக்குத் தேவையான சேதனப் பசளை 96,000 மெ.தொன்கள் சீன நிறுவனம் ஒன்றினால் இறக்குமதி செய்யப்பட்டு அப் பசளை நாட்டில் இறக்கப்படாது அ.டொ. 6.9 மில்லியனிற்குச் சமனான ரூபா 1,383 மில்லியன் விளைவற்ற நிலையில் குறித்த கம்பனிக்குச் செலுத்தப்படுவதற்கு நேர்ந்திருந்தது.

### வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி

#### நெனோ நைட்ரஜன் திரவ உரத்தை இறக்குமதி செய்கையில் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த பணத்தை அறவிட்டிராமை

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியால் 2021 ஒக்டோபர் 18 ஆம் திகதி 100,224 நெனோ நைட்ரஜன் திரவ உரப் போத்தல்கள் இறக்குமதிக்காக ஒரு போத்தலுக்கு அ.டொ. 12.45 படி, ரூபா 253 மில்லியன் வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருக்கையில் போத்தலொன்றிற்கான விலை அ.டொ. 10 ஆகக் குறைவடைந்ததன் காரணமாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 50 மில்லியன் தொகையான பணம் கணக்காய்வுத் திகதியான 2023 சனவரி 30 ஆம் திகதி வரையிலும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### உரக் கம்பனியால் திறைசேரியிடம் இருந்து மீளளிக்கப்பட்டிருந்த மானியப் பெறுமதி மீள அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

2016 ஆம் ஆண்டின் போது மானிய உரங்கள் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டு, விவசாயிக்குப் பணம் வழங்கும் முறைக்கு மாற்றமடைந்தமையால் அன்றைய தினம் உரக் கம்பனியிடம் காணப்பட்ட உர இருப்பிற்கு உரித்தாக கொமர்ஷல் உரக் கம்பனியால் திறைசேரியிடம் இருந்து மீளளிக்கப்பட்டிருந்த மானியப் பெறுமதியான

ரூபா 2,112 மில்லியன் மீள திறைசேரிக்கு அனுப்பிவைக்கப் பட்டிருக்கவில்லை

**விவசாய அபிவிருத்தி திணைக்களம்**

**ஏற்பாடுகளின் பயன்பாடு**

2022 ஆம் ஆண்டிற்காக விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்ற ரூபா 10,053 மில்லியன் ஏற்பாட்டில் ரூபா 9,212 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறே, விவசாய இராஜாங்க அமைச்சு, கிராமிய நெல் மற்றும் தொடர்புடைய குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு, சுற்றாடல் அமைச்சு மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் பல்வேறு செயற்திட்டங்களுக்காக ரூபா 3,765 மில்லியன் தொகையான ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 2,020 மில்லியன் பயன்படுத்தப் பட்டிருந்தது.

**பட்டியல்களுக்காக பொறியியலாளரினதும் தொழிநுட்ப உத்தியோகத்தரினதும் பரிந்துரையின்றி உதவி ஆணையாளரால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை.**

சிறிய நீர்ப்பாசன மற்றும் தரிசு நெல் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மொனராகலை மாவட்ட அலுவலகத்தால் ரூபா 2.4 மில்லியன் செலவில் சாகினி வாவி புனரமைப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களிற்காக பொறியியலாளரினதும் தொழிநுட்ப உத்தியோகத்தரினதும் பரிந்துரையின்றி உதவி ஆணையாளரால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**அவசர தேவைக்காக எனக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.**

தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம், கொள்வனவு நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள.்.  ஆரம்பிக்கப்பட உள்ள அனைத்துச் செயற்திட்டங்களும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 6 மில்லியன் செலவில் 04 கொங்கிரீட் கலவைகள், 06 கொங்கிரீட் போகர் இயந்திரங்கள் மற்றும் 06 மண் அதிர்வு சுத்தியல் இயந்திரங்கள் மிகவும் அவசரமான செயற்பாடாகக் கருதப்பட்டு 2022 திசெம்பர் 28 அன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2023 யூன் 15 ஆம் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது ஓர் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

**அறவிடப்பட வேண்டிய பணம் அறவிடப்படாதிருந்தமை**

ஜப்பான் யென் உதவிச் செயற்திட்டத்தின் கீழ் 2006, 2008, 2010 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 02 சக்கர உழவு இயந்திரங்களுக்காக ரூபா 112 மில்லியன் நிலுவையாகவும், விவசாய அபிவிருத்தி நிதியத்தின் கடன்பட்டோர்களின் மீதித் தொகையில் உள்ளடக்கப்பட்டிருந்த 5 ஆண்டுகளுக்கு மேலான காலமாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3 மில்லியனும் ரூபா 20 மில்லியன் தொகையான 04 சக்கர உழவு இயந்திர தவணைப்பணமும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**செயற்திட்டம் நிறைவேற்றப்படுவதில் தாமதம்**

உலக வங்கி உதவியின் கீழ் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், பயிர் அறுவடைகளுக்காக உரிய விலையைப் பெறுவதும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறுகிய கால களஞ்சிய வசதிகளை வழங்குவதற்காக உலக வங்கிக் கடன் CERS (நிகழத்தக்க அவசர நிலைக் கூறு) இன் கீழ் ரூபா 223 மில்லியன் செலவில், 11 மாவட்ட அலுவலகங்களை உள்ளடக்கிய 26 களஞ்சியங்கள் 2021 இறுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 வரையில் 15 களஞ்சியங்களின் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 11 களஞ்சியங்களில் ஒரு களஞ்சிய வேலை மாத்திரம் பூர்த்தியடைந்திருந்தது. நிர்மாணிப்புகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்த 10 களஞ்சியங்களும் இவ் அறிக்கைத் திகதி வரையில் விளைவற்றுக் காணப்பட்டன.

**கமநல வங்கி முன்னோடிச் செயற்திட்டம் மற்றும் கமநல அபிவிருத்திச் செயற்பாட்டுக் குழுக்களுக்காக முகாமைத்துவ மென்பொருள் முறைமை ஒன்றிற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.**

மீளாய்வாண்டின் போது நிதியத்தால் கமநல வங்கி முன்னோடிச் செயற்திட்டம் மற்றும் கமநல அபிவிருத்திச் செயற்பாட்டுக் குழுக்களுக்காக முகாமைத்துவ மென்பொருள் முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்காக ரூபா 31 மில்லியன் பெறுமதிக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு இதில் ரூபா 9 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் எவ்வித செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய நடவடிக்கைகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்**

**விடுவிக்கப்பட்டிருந்த சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரிக்கு வழங்கப்பட்ட சம்பளத்தை மீளளிக்கப்பட்டிராமை**

நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு 2020 பெப்ரவரி 07 ஆம் திகதி முதல் முழுமையாக விடுவிக்கப்பட்டிருந்த சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரிக்கு 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளிற்கு முன்னர் செலுத்தப்பட்ட ரூபா 4 மில்லியன் சம்பளம் அச் சபையால் மீளளிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இது பெறவேண்டிய தொகையாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**வெளிநாட்டுக் கற்கைச் செலவுகளை மீள அறவிடப்பட்டிராமை**

தத்துவவியல் முனைவர் பட்டப்படிப்பைத் தொடர்வதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் 02 வருட சம்பளத்துடனான கற்கை லீவைப் பெற்றிருந்த சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் மேலும் 02 ஆண்டுகள் சம்பளமற்ற கற்கை லீவைப் பெற்றிருந்த போதிலும் பட்டத்திற்கான சான்றிதழை நிறுவனத்திற்கு வழங்கத்தவறியிருந்தமையால் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 9 மில்லியன் தொகையும் சீனாவில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் கலாநிதிப் பட்டப் படிப்பை மேற்கொண்டு கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவிக்காகச் சென்றிருந்த

அதிகாரியிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 5 மில்லியன் தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**விவசாய மற்றும் விவசாய காப்புறுதி சபை**

**விவசாய முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்றை தயாரிப்பதற்காக நிதியத்தைப் பயன்படுத்தியிருந்த போதிலும், அம் முறைமையைப் பயன்படுத்தியிராமை**

சர்வதேச நிதி நிறுவனத்துடன் (IFC) இணைந்து பயிர் இழப்பிற்கான காப்புறுதி இழப்பீட்டைச் செலுத்தும் செயன்முறை 2 ½ மாதங்களுக்கு குறைப்பதற்கு வேளாண்மை முகாமைத்துவ தகவல் முறைமையைத் தயாாரிப்பதற்கான ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 20 மில்லியன் நிதியுதவி, சபைக்கு வழங்கப்பட்டு இதற்காக சபை ரூபா 23 மில்லியன் தொகையைச் செலவிட்டிருந்த போதிலும் இம் முறைமை இழப்பீட்டைச் செலுத்தும் செயற்பாட்டிற்காக பயன் படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கை எய்த முடியாதிருந்தது.

**பயிர்ச்சேதத்திற்கான இழப்பீடுகளுடன் தொடர்பான விவசாயிகளை இனங்கண்டு தீர்க்கப்பட்டிராமை**

விவசாய உற்பத்தி மேம்பாட்டு நோக்கத்துடன், பயிர்ச்சேதங்களிற்காக விவசாயிகளுக்கு இழப்பீட்டை வழங்குவதற்கு சபையால் நடாத் தப்படும் “கெத்தட்ட அருண” காப்புறுதித் திட்டத்துடன் தொடர்புடைய 8,185 விவசாயிகளுக்கு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட ரூபா 71 மில்லியன் தொகையான இழப்பீட்டுத் தொகை, கணக்கு இலக்கம், விவசாயிகளின் பெயர் மற்றும் அடையாள அட்டை இலக்கம் இணக்கமின்மையால் வணிக வங்கிகளால் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த விவசாயிகளை இனங்கண்டு அம் மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு 5 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**காப்புறுதித் தவணைப் பணத் தொகையைக் கழித்து விவசாயிகளுக்கு காப்புறுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டிராமை**

2021/22 பெரும்போகத்திற்காக 26,904 விவசாயிகளுக்குச் செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகையில் ரூபா 11 மில்லியன் திடீர் விபத்துக் காப்புறுதி தவணையென கழிக்கப்பட்டிருந்ததுடன் அத் தொகை கழிக்கப்பட்ட நாள் முதல் ஒரு வருட காலத்திற்குள் திடீர் விபத்துக் காப்புறுதிகான காப்பீடு ஒன்று வழங்கப்பட வேண்டிய போதிலும் 14,779 விவசாயிகளுக்காக காப்புறுதித் தவணைத் தொகை கழிக்கப்பட்ட நாள் முதல் 7 மாத காலம் கடந்திருந்த போதிலும் காப்புறுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டம்**

மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்துள்ள 64,117 மீனவ மக்களிற்காக 60 வயது பூர்த்தியடைந்த உடன் ஓய்வூதியத்தை வழங்கும் முறைமை ஒன்று இன்மையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திட்டத்திற்குப் பங்களிப்புச்

செய்திருந்த 60 வயதிற்கு மேற்பட்ட ஓய்வூதிய வயதை அடைந்திருந்த 27,976 மீனவர்களில் 22,402 மீனவர்களுக்கு ஓய்வூதிய நலன் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**ஓய்வூதிய நலன்கள் வழங்குவதில் தாமதம்**

2009 சனவரி முதல் 2016 திசெம்பர் வரையான காலத்திற்கு உரிய ஓய்வூதியத்திற்காக விண்ணப்பித்த 137 மீனவர்களுக்கும் 2022 ஆம் ஆண்டின் போது ஓய்வூதியத்திற்காக விண்ணப்பித்த 83 மீனவர்களுக்கும் ரூபா 6 மில்லியன் தொகையான நிலுவை ஓய்வூதியத்தைக் கோரிய மீனவர்களுக்கு நலன்களை வழங்குவதற்கு 60 வயது பூர்த்தியடைந்து 1 மாதம் முதல் 07 மாத காலம் வரையான கால தாமதம் ஏற்பட்டிருந்தது.

**விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டம்**

**திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெற்ற நிர்வாகச் செலவினங்கள் விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதித் திட்டத்தின் வங்கிக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தமை**

மீளாய்வாண்டின் போது விவசாய ஓய்வூதிய நிதியத்தின் நிர்வாகச் செலவினத்திற்காக திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 190 மில்லியன், விவசாய ஓய்வூதிய நிதியத்தின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாது விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதித் திட்டத்தின் வங்கிக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

**ஓய்வூதிய நலன்கள் வழங்கப்பட்டிராமை**

துற்போதுள்ள தரவு முறைமையில் 871,425 பங்களிப்பாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 60 வயதைப் பூர்த்திசெய்த 439,025 பங்களிப்பாளர்களில் 246,531 பங்களிப்பாளர்களுக்கு ஓய்வூதிய நலன்கள் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**விவசாயிகளின் அறக்கட்டளை நிதியம்**

**அதிஷ்ட இலாபச்சீட்டு வருமானம் முறையாக விவசாயிகளின் அறக்கட்டளை நிதியத்திற்கு வழங்கப்பட்டிராமை**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி கொவிசெத்த அதிஷ்ட இலாபச்சீட்டு வருமானத்தில் 10 சதவீத அளவு 1995 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் தேசிய லொத்தர் சபையால் திறைசேரியின் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட ஒன்றிணைந்த கூட்டுத்தொகை ரூபா 6,367 மில்லியன் தொகையான போதிலும் அறக்கட்டளைப் பிணையின் மூலம் ஸ தாபிக்கப்பட்டுள்ள நிதியத்திற்கு 28 ஆண்டு காலத்தின் போது விவசாயிகளின் அறக்கட்டளை நிதியத்தின் செயற்பாடுகளையும் பணிகளையும் செயற்படுத்துவதற்காக ரூபா 956 மில்லியன் தொகை மாத்திரமேயாகும்.

**நிதியத்தின் பணம் தொடர்ந்து நிலையான வைப்புகளிலும் திறைசேரி உண்டியல் களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தமை**

விவசாயிகளின் அறக்கட்டளை நிதியத்தை நிறுவுவதற்கான முக்கிய நோக்கைச் செயற்படுத்துவதற்குப் பணத்தைப் பயன்படுத்தாது அறக்கட்டளை நிதியத்தின் பணம் தொடர்ந்து நிலையான வைப்புக்களிலும் திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந் நிலையான வைப்புக்களில் ரூபா 465 மில்லியன் தொகையும் திறைசேரி

உண்டியல்களில் ரூபா 90 மில்லியன் தொகையும் அவ்வாறு முதலீடு செய்யப்பட்டு ரூபா 73 மில்லியன் வட்டி வருமானம் ஈட்டப்பட்டிருந்தது.

### இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைப் பேரவை

**செயற்திட்ட மோட்டர் வாகனம் ஒன்று சொந்தப் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப் பட்டிருந்தமை.**

கென்யா அரசாங்கத்தின் சர்வதேச விவசாய வனவியல் தொடர்பான ஆராய்ச்சிக்கான சர்வதேச நிலையத்திற்கும் (ICRAF) இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைப் பேரவைக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டிருந்த ஆராய்ச்சி மற்றும் விஞ்ஞான ரீதியான தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கான “விவசாய வனவியல்” தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி, ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்திற்காகப் பெறப்பட்ட மோட்டார் வாகனம் செயற்திட்டம் பூர்த்தியடைந்ததை அடுத்து, கொள்கைச் சபைக்கு கையேற்கப்படாது ஒருங்கிணைப்பு விஞ்ஞானி சிரேஷ்ட பேராசிரியரின் சொந்தப் பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**வாழ்வாதாரக் கொடுப்பனவு மீள அறவிடப்பட்டிராமை**

2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியின் போது பட்டப் பின்படிப்பிற்காக வெளிநாட்டிற்குச் சென்ற தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் ஆராய்ச்சியாளர்கள் 25 பேருக்கு கொவிட் தொற்று நிலை காரணமாக கொள்கைச் சபைக்கு அறிவிக்காது இந் நாட்டிற்கு வருகை தந்த காலப்பகுதிக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 10 மில்லியன் வாழ்வாதாரக் கொடுப்பனவு மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

**இயற்கை விவசாயத் துறை தொடர்பான ஆராய்ச்சி நிறுவனங்களை ஊக்குவித்திராமை**

கொள்கைப் பேரவையால் சேதன விவசாயத்தில் கவனம் செலுத்துவதன் முக்கியத்துவத்தை இனங்கண்டு அத் துறைகளில் ஆராய்ச்சிகளை அதிகரிக்க வேண்டிய 07 முன்னுரிமைத் துறைகளை இலங்கையில் தற்போதுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அறிமுகப்படுதியிருந்த போதிலும் சேதன விவசாயக் கொள்கை மற்றும் தற்போது சந்தையில் கிடைக்கும் இயற்கை உணவுப் பொருட்களின் தர நிலை குறித்து ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆர்வம் காட்டியிருக்கவில்லை.

### பிம் சவிய நிகழ்ச்சித்திட்டம்

**நில வளங்களின் உரிமைகளைத் தீர்த்து, வருங்கால சந்ததியினருக்காக காணி களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை.**

1998 இன் 21 ஆம் இலக்க உரிமை கோரல் அதிகாரச்சட்டம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து நில வளத்தின் உரிமைகளைத் தீர்த்து, எதிர்கால சந்ததியினருக்குப் பாதுகாக்கும் நோக்கத்துடன் செயற்பட்ட இந் நிகழ்ச்சித்திட்டம் 2007 ஆம் ஆண்டு முதல் காணி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது. கணக்காய்வுத் திகதியுடன் 15 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் இந் நிகழ்ச்சித்திட்டம் 18

மாவட்டங்களிலும் 66 பிரதேச செயலகங்களிலும் மாத்திரமே செயற்படுத்தப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக அமைச்சிற்கு 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கப்பெற்ற ஏற்பாட்டுத் தொகை ரூபா 300 மில்லியனாகக் காணப்பட்டதுடன் செவிடப்பட்ட தொகை ரூபா 275 மில்லியனாகக் காணப்பட்டது.

### திட்டமிட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிராமை

2022 திசெம்பர் 31 இல் "பிம் சவிய" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், காணி ஆணையாளர் திணைக்களத்தால், நில அளவை செய்தல், அனுமதிப்பத்திரம் வழங்குதல், கொடுப்பனவுகள் வழங்குதல், நடமாடும் சேவைகளை நடாத்துதல், பிரிவு நாட்களை நடாத்துதல் மற்றும் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்குதல் போன்ற செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்த துடன் நில அளவை செய்வது தவிர்ந்த ஏனைய செயற்பாடுகளின் முன்னேற்றம் 3 – 39 சதவீத வீச்சில் காணப்பட்டது.

### பிரதேச செயலகப் பிரிவுகளில குறிப்பிடப்பட்ட அளவில் மாத்திரம் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தமை

காணி உரிமை தீர்வுத் திணைக்களத்திற்கு 2007 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டின் பெறுமதி ரூபா 5,911 மில்லியனாகும். 1998 ஆம் ஆண்டு முதல் 66 பிரதேச செயலகப் பிரிவுகளில் மாத்திரம் இந் நிகழ்ச்சித்திட்டம் அமுற்படுத்தப்பட்டிருந்தது. இதற்காக முறையான நடைமுறைப்படுத்தல் திட்டம் தயாரிக்கப்பட்டிராமை, பணி நிறைவேற்றப்பட்டு குறித்த காணி உரிமையாளர்களுக்கு உரிமைச் சான்றிதழுடன் வழங்கப்பட்டிருக்கவில்லை. குறித்த 66 தொகுதிகளுக்கு உரித்தான 3,971 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 1,468 மாத்திரம் அளவீட்டு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

### கட்டிட வாடகையும் பாதுகாப்புச் செலவினங்களும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த பணி மேற்கொள்ளப் பட்டிராமை

காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டு முதல் 48 பிராந்திய அலுவலகங் களுக்கான கட்டிட வாடகை மற்றும் பாதுகாப்புச் செலவினங்களுக்காக 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில ரூபா 271.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் கடந்த 6 வருடங்களாக ஒதுக்கப்பட்ட 167,322 கோவைகளில் மீள தீர்வளிக்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 58,823 ஆகும்.

### காணிச் சீர்திருத்த ஆணைக்குழு

### முக்கிய பணியான காணிப் பதிவேடு தயாரிப்பு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

1972 இன் இலக்கம் 01 காணி சீர்திருத்த ஆணைக்குழு நிறுவப்பட்டு இது வரையில் 50 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் குறிப்பாக இனங்காணப்பட்ட காணி தொடர்பான தகவல்கள் இன்மையால் இந் நிறுவனத்தின் முக்கிய பணியான காணிப் பதிவேடு தயாரிப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

**காணி மற்றும் பிரசுரிக்கப்பட்ட தோட்டக் காணிகள் மிகவும் குறைவான மீதியைக் கொண்டிருந்தன.**

காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் படி, விவசாயக் காணிகள் மற்றும் பிரசுரிக்கப்பட்ட தோட்டக் காணிகளின் எண்ணிக்கை 1,809,495 ஏக்கராகவும், சட்டபூர்வ கடப்பாடுளின் மூலமும் வர்த்தமானி மூலமும் மாற்றப்பட்ட தொகையைக் கழித்து மீதமாக உள்ள நிலப்பரப்பு 616,876 ஏக்கராவும் காணப்பட்டதுடன் சிகாரைகள் கோயில்கள் மற்றும் பொது மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதன் பின்னர் ஆணைக்குழுவிற்கு எஞ்சிய காணியின் அளவு 424,809 ஏக்கராகவும் காணப்பட்டது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காணி அளவின் பெறுமதி ரூபா 676 மில்லியனாகவும் இதன் படி, ஓர் ஏக்கரின் பெறுமதி ரூபா 1,561 ஆகவும் ஒரு பேர்ச்சின் பெறுமதி ரூபா 9.75 ஆகவும் மிகக் குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தன.

**நிலுவையாகக் காணப்பட்ட இழப்பீட்டுத் தொகை தீர்க்கப்பட்டிராமை**

1972 இன் 01 ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் படி, தோட்டக் கம்பனிகளில் இருந்தும் தனிநபர்களிடம் இருந்தும் கையேற்கப்பட்ட காணிகளுககாகச் செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையின் கூட்டுத்தொகையான ரூபா 215.7 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

# கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

- நிதியேற்பாட்டினைப் பயன்படுத்துதல்.
- திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் மொத்த மீன் உற்பத்தியில் நாட்டின் பொருளாதாரத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த பங்களிப்பு.
- நாளாந்த தனிநபர் மீன் நுகர்வு குறைவடைதல்.
- பேலியகொட மத்திய மீன் விற்பனை சந்தை தொகுதி முகாமைத்துவ அறக்கட்டளை.
- இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்
    - கூட்டுத்தாபனத்தின் உள்ளக சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு முரணாக மீன்களைக் கடனுக்கு விற்பனை செய்தல்.
    - மோசமான நிதி நிலைமையை முகாமைத்துவப்படுத்த இயலாமை.
    - செலுத்தப்பட வேண்டிய தொகையினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை.
    - காணி சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை.
- இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்.
    - இலங்கை கடற்றொழில் துறைமுகங்களின் வருடாந்த செலவில் அதிக பகுதி ஊழியர்களின் சம்பளங்களுக்காக செலவிடப்பட்டுள்ளமை.
    - பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய வரி வருமானம் அறவிடப்பட்டிருக்காமை.
- இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபை
    - சேற்று நண்டு வளர்ப்பு செயல்திட்டம் வெற்றியடையாமை.
    - மீன் உணவு தயாரிக்கும் இயந்திரம் எதுவித பயன்பாடுமின்றி செயலற்றுக் காணப்படுகின்றமை.

# கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி துறை

இலங்கை இந்திய சமுத்திரத்தில் ஒரு தீவாக அமைந்திருப்பதனால் அங்கு வாழும் மக்களின் புரத தேவைப்பாட்டை பெரும்பாலும் உவர்நீர் மீன்பிடி கைத்தொழில் மூலம் பூர்த்தி செய்யக் கூடியதாக உள்ளது. எனினும் நாட்டின் கேள்விக்கு ஏற்ற வகையில் மீன் வழங்கல் இல்லாததனால் பெரும்பாலும் மீன் உற்பத்திகளின் விலை மிகவும் உயர்ந்த பெறுமதியைக் கொண்டுள்ளதால் நாட்டின் மக்களுக்கு அந்த வளத்தினால் சரியான பலனைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாது உள்ளது.

இலங்கையில் பிரத்தியேக பொருளாதார வலயத்துக்கு உரிய 517,000 சதுர கிலோ மீட்டர் கடற்பிரதேசம், சர்வதேச கடல் மற்றும் 489,000 ஹெக்டயரிலான கடலேறி மற்றும் உள்நாட்டு நீர்த் தேக்கங்களை சிறந்த முறையில் பொறுப்புடன் பயன்படுத்தி தேசிய பொருளாதாரத்திற்கு உயர்ந்த பங்களிப்பை வழங்கும் கடற்றொழில் கைத்தொழில் ஒன்றை உருவாக்குவதன் மூலம் பொது மக்களின் மீன் நுகர்வினை அதிகரித்து ஊட்டச்சத்து மட்டத்தினை உயர்ந்த மட்டத்தில் பேணிக் கொள்ளுதல், தேசிய பொருளாதாரம் மற்றும் வெளிநாட்டு இருப்புக்களில் மீன் ஏற்றுமதியின் மூலம் விசேட பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தல், தொடர்புடைய சமூகத்தின் வாழ்க்கை நிலையை உயர்த்துதல் என்பன கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி பிரிவின் பிரதான நோக்கமாக இருந்தது. அந்த பெறுபேற்றினை கைப்பற்றுவதற்காகக் கடற்றொழில் அமைச்சு மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் மற்றும் 06 நியதிச் சட்ட சபைகள் ∴ நிறுவனங்களினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டி இருந்தன.


- கரையோரப் பிரதேசங்களில் மீன்களின் தொகை அளவினைக் கூட்டுவதற்காக விஞ்ஞான ரீதியிலான முறையொன்றை அறிமுகப்படுத்துதல்.
- கடற்றொழில் துறைமுகங்களை நவீனமயப்படுத்தல் மற்றும் தேவைப்பாட்டுக்கமைய புதிய துறைமுகங்களை நிர்மாணித்தல்.
- சர்வதேச கடல் பிரதேசங்களில் மீன்பிடி தொழிலை விரிவாக்குவதற்காக உள்நாட்டுக் கம்பனிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ரின்மீன் கைத்தொழிலை விரிவாக்குவதற்குத் தனியார் கம்பனிகள் மற்றும் முதலீட்டாளர்களை ஊக்குவித்தல்.
- உற்பத்தியாளருக்கும் மற்றும் பாவனையாளருக்கும் நியாயம் ஏற்படும் விதத்தில் மீன் உற்பத்தி மற்றும் சந்தை நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்து விரிவாக்குதல்.

- வடக்கு மற்றும் கிழக்குக் கடலில் அத்துமீரி மீன்பிடித்தலை இல்லாதொழித்தலும், கடற்படை மற்றும் கரையோரப் பாதுகாப்பு பிரிவுகளை வலுப்படுத்துவதற்காக, இந்தியாவுடனான முரண்பாடுகளை தீர்த்துவைத்தல்.
- மீனவ சமூகத்திற்குப் பயனுறுதியான வங்கி மற்றும் காப்புறுதி முறையொன்றை அறிமுகப்படுத்துதல்.
- சமுத்திரப் பல்கலைக்கழகத்தை உபயோகப்படுத்தி இளைஞர் யுவதிகளுக்காக கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவப் பயிற்சி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல்.
- மீனவ சமூகத்திற்கான நலன்புரி செயற்பாடுகளை விரிவுபடுத்துதல்
- ஏற்றுமதி சந்தையை நோக்கமாகக் கொண்ட அலங்கார மீன்கள் கைத்தொழிலை உருவாக்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்
- குளங்கள், களப்பு மற்றும் கரை நிலைங்களை அண்டி நன்னீர் மீன் வளர்ப்பு செய்கையை பிரபல்யப்படுத்துவதற்காகத் தேவையான வழிமுறைகளைத் தயார் செய்தல்.
- பெரிய அளவிலான படகுகளின் வழிநடாத்தல் செயற்பாடுகளை வினைத்திறமையாக மேற்கொள்வதற்காக கடற்றொழில் துறைமுகத்தை விருத்தி செய்தல்.
- பலநாள் கடற்றொழில் படகுகளுக்காகக் கடல் நீரை உபயோகித்து குளிரூட்டித் தொகுதியினை விருத்தி செய்தல் மற்றும் சூரிய வலுசக்தியை பாவிப்பதற்கு ஊக்குவித்தல்.
- நவீன தொடர்பாடல் வசதிகள், குளிரூட்டிகள், எரிபொருள் வழங்குதல் மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகளுடனான சகல கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூர நிலையங்களை விருத்தி செய்தல்.
- கடல் மற்றும் நன்னீர் மீன்களைப் பெருக்குவதற்காக கடற்றொழில் சமூக சங்கங்கள் மற்றும் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையோடு கூட்டிணைந்து நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல்.
- சூழல்நேயமான நவீன அதிதொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மீன் அறுவடையை விருத்தி செய்வதற்காக நடவடிக்கையை எடுத்தல்.
- கடற்றொழிலாளர்களின் மற்றும் அக்கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளோரின் துறைசார் பயிற்சி மற்றும் அறிவினை விருத்தி செய்தல்.

**நிதியேற்பாட்டினைப் பயன்படுத்துதல்.**

2022 ஆம் ஆண்டில் மேற்குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக கடற்றொழில் அமைச்சு, மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்திற்கு மொத்தமாக ரூபா 7,442 மில்லியன் நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அதில் ரூபா 6,216 மில்லியன் மட்டும் பயன்படுத்தப் பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,226

மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.




வரைபடம் : 02 வழங்கப்பட்ட ஒதுக்கீடும் உள்ளபடியான செலவினமும்
மூலம்: 2022 ஆம் ஆண்டின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

கடற்றொழில் அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களால் மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புக்களை மேற்கொள்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முக்கியமான கணக்காய்வு விடயங்கள சில கீழே பொழிப்பாக்கி காண்பிக்கப்பட்டுள்ளன.

**திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் மொத்த மீன் உற்பத்தியில் நாட்டின் பொருளாதாரத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த பங்களிப்பு.**

மேலே குறிப்பிடப்பட்ட கடற்றொழில் பிரிவில் எதிர்பார்க்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் மீன்பிடி சமூகத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதலை நோக்காகக் கொண்டு தேசிய நீர் வாழ் உயிரின செய்கை அபிவிருத்தி அதிகார சபை, தேசிய நீர் வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனம் மற்றும் இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டில் ரூபா. 1,759 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பான தொடர் நடவடிக்கை மற்றும் மதிப்பீடு அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**நாளாந்த தனிநபர் மீன் நுகர்வு குறைவடைதல்.**

கடலோரம், கடற்கரை மற்றும் களப்பு, நன்னீர், நீர் வாழ் உயிரின வளர்ப்பு, இறால் ஆகிய 05 துறைகளைக் கொண்ட மீன் உற்பத்தி 2021 ஆம் ஆண்டில் 321,575 மெட்ரிக் தொன்னாக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் அது 290,640 மெட்ரிக் தொன்னாக இருந்தது. அதற்கு அமைய 30,935 மெட்ரிக் தொன் குறைவடைந்து இருந்ததுடன் அது மொத்த உற்பத்தியில் 10 சதவீத சரிவாகும். இதனாலேயே 2021 ஆம் ஆண்டில் தனிநபர் மீன் நுகர்வு, நாள் ஒன்றுக்கு 36.7 கிராமமாக இனம் காணப்பட்டிருந்ததுடன் அது 2022 ஆம் ஆண்டில் மீன் நுகர்வு நாளொன்றுக்கு 31.3 கிராமாக இருந்ததனால் நாளாந்த மீன் நுகர்வு 15 சதவீதத்தினால் குறைவடைந்து இருந்தது.

**பேலியகொட மத்திய மீன் விற்பனை சந்தை தொகுதி முகாமைத்துவ அறக்கட்டளை.**

சுகாதாரமாகவும் மற்றும் சர்வதேச தரங்களுக்கு ஏற்பவும் மீன்களை கையாளுவதற்கு ஏற்ற வகையில் மொத்த மீன் விற்பனையாளர்களின், மீன் உற்பத்தியாளர்களின் மற்றும் நுகர்வோரின் பலன்களுக்காக 148 அலகுகளைக் கொண்ட 128 மொத்த சந்தை அலகினைக் கொண்ட சில்லறை விற்பனை நிலையம், குளிரூட்டி மற்றும் ஐஸ் இயந்திர கூடம் உள்ளிட்ட வசதிகளைக் கொண்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா. 1,694 கொண்ட பேலியகொட மீன் விற்பனை சந்தை தொகுதி முகாமைத்துவ அறக்கட்டளை 2010 ஓகஸ்ட் 10 ஆம் திகதி நம்பிக்கைப் பத்திரத்தின் மூலம் தாபிக்கப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டில் செயல்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

- மீளாய்வாண்டின் இறுதி வரையில் மீன் செயல்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 12 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் மீன் விற்பனை சந்தை தொகுதி முகாமைத்துவ அறக்கட்டளையை பாராளுமன்ற சட்டத்தின் மூலம் சட்ட ரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மீன் விற்பனை சந்தை தொகுதியினுள் மீன்களை கையாளுதலை சுகாதாரமாக மேற்கொண்டுவதற்கு, விற்பனை செய்யப்படும் மீன் உணவுகளின் சுத்தம் மற்றும் தரம் நிச்சயிக்கப்பட்ட தரத்தில் பேணப்பட்டு செல்வதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் சட்ட முகாமைத்துவ அறக்கட்டளை மூலம் அறிமுகப்படுத்தப்பட வேண்டி இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முகாமைத்துவ அறக்கட்டளை அதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை.

- அதே போன்று விற்பனை கூட உரிமையாளர்களிடம் இருந்து மீளாய்வாண்டு இறுதியில் ரூபா.81 மில்லியன் நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டி இருந்ததுடன் அந்தத் தொகையில் ரூபா. 55 மில்லியன் தொகையானது 03 வருடங்களுக்கும் அதிக காலம் தொட்டு செலுத்தப்படாதிருந்த கடை வாடகை என்பதனால், அந்த நிலுவை கடை வாடகை

தொகையினை அறவிடுவதற்கு போதிய அளவு வழிவகை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்**

கடற்றொழில் துறையுடன் தொடர்புபட்ட "சுய வள வலயம்" மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச சட்ட விதிகளுக்கு இணங்க அதற்கு வெளியே மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுதல், மீன் பதப்படுத்தல், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சந்தைகளுக்கு மீன்களை விற்பனை செய்தல், தேவையான சந்தர்ப்பங்களில் மீன் மற்றும் மீன் உற்பத்திகளை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்லுதல், மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில் ஏதேனும் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளுவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் கூட்டு முயற்சி ஒப்பந்தங்களில் ஈடுபடுதல் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகத்தர்களை பிரதிநிதித்துவப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகள் கூட்டுத்தாபனத்திடம் சட்ட ரீதியில் ஒப்படைக்கப்பட்டிருந்தது எனினும் மீன்களைப் பதப்படுத்தும் நடவடிக்கை மற்றும் மீன்களை மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பனை செய்தல் அல்லது விநியோகிக்கும் நடவடிக்கைகள் மட்டும் கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**கூட்டுத்தாபனத்தின் உள்ளக சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு முரணாக மீன்களைக் கடனுக்கு விற்பனை செய்தல்.**

கூட்டுத்தாபனத்தின் உள்ளக சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு அமைய மீன்களைக் கடனுக்கு விற்பனை செய்வதை உடனடியாக இடை நிறுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட வேண்டி இருந்த மொத்த மீன் விற்பனை பெறுமதி ரூபா. 262 மில்லியனாக இருந்ததுடன் இதில் 5 வருடங்களுக்கும் அதிகமாக வெளி கடன்பட்டோர் மீதி ரூபா. 29 மில்லியனும் ஊழியர்களுக்கு மீன்களை விற்பனை செய்ததனால் தீர்க்கப்படாத கடன்பட்டோர் மீதி மற்றும் வைத்தியசாலை கடன் பட்டோர் மீதி ரூபா. 17 மில்லியனும் ஆகும்.

எவ்வாறு இருப்பினும் சுற்றறிக்கைக்கு முரணாக கடனுக்கு மீன்களை விற்பனை செய்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக இதுவரையிலும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**மோசமான நிதி நிலைமையை முகாமைத்துவப்படுத்த இயலாமை.**

2022 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் செலுத்தப்பட வேண்டிய திறைசேரி பிணையின் அடிப்படையில் வங்கிக் கடன் மீதி ரூபா.159 மில்லியனும், அத்திகதியில் அதற்காக செலுத்தப்பட வேண்டிய வட்டித் தொகை ரூபா. 35 மில்லியனும் மற்றும் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் வங்கி மேலதிகப் பற்று ரூபா. 25 மில்லியனுமாக இருந்ததனால் இந்த மோசமான நிதி நிலைமையை

முகாமைத்துவப்படுத்துவதற்கு இயலாதிருந்தது.

**செலுத்தப்பட வேண்டிய தொகையினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை.**


2022 ஒக்டோபர் 30 ஆம் திகதி வரையில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் அடிப்படையில் ரூபா. 19 மில்லியன் தொகையும், நாட்டைக் கட்டி எழுப்பும் வரியாக ரூபா. 94 மில்லியனும் மாற்றப்படாது தடுத்து வைக்கப்பட்டிருந்தது. மேலும், அத்தினத்தில் செலுத்தப்பட வேண்டிய பொருளாதார சேவை வரிக் கட்டணம் ரூபா. 49 மில்லியனும், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கான அங்கத்துவக் கட்டணம் ரூபா. 579 மில்லியன் தொகையும் செலுத்தப்பட வேண்டிதாக இருந்தது.

**காணி சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை.**

கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக உள்ள 03 ஓய்வு விடுதிகளுடனான 04 ஏக்கர் 04 ரூட் 38.20 பர்ச்சஸ் அளவிலான காணி சிக்கல் தீர்க்கப்படாது இருந்ததுடன் நுவரெலியா, திருவகோணமலை ஆகிய ஓய்வு விடுதிகள் அமைந்துள்ள காணிகளின் அளவுகளும் இனம் காணப்படாது இருந்தன. அதற்கு அமைய சட்ட ரீதியான உரிமைத்துவம் இல்லாத காணிகளில் ஓய்வு விடுதிகளுக்கான கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு இருந்தன.

**இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்.**

இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் கடந்த பல வருடங்கள் தொட்டு தொடர்ச்சியாக நட்டத்திலான நிலைமையில் காணப்படுகின்றது.




| | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|
| மொத்த வருமானம் | 681 | 710 | 549 | 642 |
| மொத்த செலவு | 678 | 781 | 785 | 778 |
| இலாபம் ∴ (நட்டம்) | 3 | -71 | -236 | -136 |

வரைபடம் : 03 2018 முதல் 2021 வரை இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் வருமானம், செலவினம் மற்றும் இலாபம்

இவ்வாறு நட்டமடையும் நிலைமை தோன்றுவதற்கு அடிப்படை ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது துறைமுகங்கள் அதிக அளவில் நட்டம் அடையும் நிலைமையில் காணப்பட்டமையே ஆகும். இந்த காரணத்தின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையில் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டமடைந்து உள்ளதுடன் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான துறைமுகங்களில் இலாபம் / நட்டம் அடைந்த துறைமுகங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் மொத்த நட்டங்கள் என்பன கீழே கட்டப்பட்டுள்ளவாறு அமையும்.

| ஆண்டு | இலாபம் ஈட்டும் துறைமுகங்களின் எண்ணிக்கை | நட்டம் ஏற்படும் துறைமுகங்களின் எண்ணிக்கை | துறைமுகங்களின மொத்த நட்டம் (ரூபா. மில்லியன்) |
|---|---|---|---|
| **2018** | 5 | 15 | (41) |
| **2019** | 4 | 16 | (34) |
| **2020** | 4 | 18 | (112) |
| **2021** | 6 | 16 | (134) |


அட்டவணை : 06 கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான துறைமுகங்களின் 2018 டுமல் 2021 ஆம் ஆண்டு வரை இலாபம்/நட்டம் ஈட்டும் துறைமுகங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் மொத்த நட்டம்

**இலங்கை கடற்றொழில் துறைமுகங்களின் வருடாந்த செலவில் அதிக பகுதி ஊழியர்களின் சம்பளங்களுக்காக செலவிடப்பட்டுள்ளமை.**

இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக உள்ள 24 துறைமுகங்களிலும் வருடாந்த செலவுகளில் 50 சதவீதத்தை விஞ்சிய தொகை செலவிடப்பட்டிருந்தது ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரம் கொடுப்பனவுகளுக்காக என்பது தெளிவாக தெரிகின்றது. எரிபொருள் விற்பனை மற்றும் நங்கூர சேவையினை வழங்குதல் போன்ற பொதுவான துறைமுக செயல்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறாத துறைமுகங்களிலும் கூட சம்பளங்கள் மற்றும் படிகளுக்காக மொத்த செலவில் சுமார் 69 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது.

**பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய வரி வருமானம் அறவிடப்பட்டிருக்காமை.**

கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டி உள்ள வரி வருமானம் சரியான முறையில் அறவிடப்பட்டிருக்காததுடன் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் கடன்பட்டோர் மீதியினுள் வரி வருமானம் கடன் பட்டோர் பின்வருமாறு ஆகும்.




வரைபடம் : 04 2018 முதல் 2022 வரையான வரி வருமானக் கடன்பட்டோர்

**இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபை**

**சேற்று நண்டு வளர்ப்பு செயல்திட்டம் வெற்றியடையாமை.**

அம்பாந்தோட்டை மாவட்டத்தில், தங்கல்ல பிரதேச செயலாளர் பிரிவில், ரகவ மகா ஓயாவிற்கு சொந்தமான 42 ஏக்கர் தனியார் வயல் காணியில் விளை நிலத்தினுள், அதிகார சபையினால் 2017 ஆம் ஆண்டில் நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டில் ரூபா. 222 மில்லியன் செலவிடப்பட்டிருந்த சேற்று நண்டு (ஆரன ஊசயடிள) வளர்ப்பு செயல் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த செயல் திட்டம் வெற்றியடையாததால் செயல் திட்டத்தின் நோக்கத்தினை மாற்றி, உவர்நீர் இறால் (வனமி இறால்) வளர்ப்புக்காக தனியார் முதலீட்டாளர்களுடன் ரூபா. 193 மில்லியனுக்கு 2021 திசெம்பர் 02 ஆம் திகதி குத்தகை ஒப்பந்தம் எட்டப்பட்டிருந்தது.

**மீன் உணவு தயாரிக்கும் இயந்திரம் எதுவித பயன்பாடுமின்றி செயலற்றுக் காணப்படுகின்றமை.**

நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்திற்குத் தேவையான திலாபியா மீன்களுக்கான உணவினைத் தயாரிப்பதற்காக 2019 ஒக்டோபர் 08 ஆம் திகதி ரூபா.11.8 மில்லியன் செலவில் மீன் உணவு தயாரிக்கும் இயந்திரம் உடவளவை மீன் உணவு தயாரிக்கும் மத்திய நிலையத்தில் தாபிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் வருடாந்தம் மீன் உணவு 127,000 கிலோ கிராம் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 36,612 கிலோ கிராம் மற்றும் 36,975 கிலோ கிராம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அது எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டத்தில் 28 சதவீதம் மற்றும் 29 சதவீதமான குறைந்த அளவிலான வீதமாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டு வரையில் இந்த இயந்திரம் விதுவித பயன்பாடுமின்றி செயலற்று காணப்படுகின்றது.

# நீர்ப்பாசன துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை.
- கிங் நில்வலா திருப்பும் செயற்திட்டம்
- உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டம்
- உமா ஓயா கீழ் கங்கை அபிவிருத்தி செயல் திட்டம் (அலிக்கொட்டஆர களஞ்சிய நீர்த் தேக்கம் மற்றும் குடா ஓயா நீர்த் தேக்கம்)
- மொறகஹகந்த நீர்த் தேக்கத்தின் பிரதான அணைக்கட்டு நிர்மாண செயற்திட்டத்தின் மின்சார உற்பத்தி இயந்திரங்கள் நான்கைப் பொருத்துவதற்காக மேலதிக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை.
- யான் ஓய இடது பக்க வாய்க்கால் நிர்மாணம்
- பஸ்னாகொட நீர்த் தேக்க செயற்திட்டம்
- பெரிய ∴ மத்திய அளவிலான செயற்திட்டங்கள் தொடர்பாக 10 வருட கால திட்டத்தின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கு முடியாமை.
- நிலக்கீழ் நீர் கண்காணிப்பு தகவல் வலையமைப்பை ஸ்தாபித்தல்
- மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - குறித்துரைத்த பிரகாரம் நிறைவேற்றப்படாமையினால் கிரயம் உயர்வடைந்து சென்றமை.
- வட மத்திய பெரிய வாய்க்கல் செயற்திட்டம் - விளைவற்று காணப்படுகின்ற இரண்டாவது சுரங்கம் துழைக்கும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்தல்.
- வெவுகம் புபுதுவ செயற் திட்டம் ∴ காலநிலை மாற்றத்திற்கு இணங்கியதான ஒன்றிணைந்த நீர் முகாமைத்துவ செயற்திட்டம்.
- குறுக்குக் கோடுகளை இரத்துச் செய்து காசோலைகள் பணமாக்கப்பட்டமை.
- மோட்டார் வாகனங்கள் - நீர்ப்பாசனத் திணைக்களம் பொறுப்பில் காணப்படாமை
- குளம் மற்றும் நீர்த்தேக்க ஒதுக்கப் பிரதேசங்களில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் அல்லது பயிர்ச் செய்கை.

- இலங்கை மகாவலி அதிகார சபை
    - அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட காணி குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை.
    - பயிற்சிச் செய்கைக்காக வழங்கப்பட்ட காணி குறைவாக பயன்படுத்துதல்.
    - சிறிய அளவிலான மின் வலுக்கூட உரிமையாளர்களிடமிருந்து முறையான பிரகாரம் கட்டணம் அறவிடுவதற்கு முடியாதிருந்தமை.
    - கருங்கல் அகழ்வதற்காக அறவிட வேண்டிய தவணைப் பணம் செலுத்தாமல் புறக்கணித்தமை.
    - நியம தரத்தையுடைய நீர் வழங்கல்களை உறுதிப்படுத்தும் நோக்கில் மீள்சார்ந்த நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் 30 இ னை ஸ்தாபித்து அதற்கு இணையான வசதிகளை வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை.
- லங்கா மினரல் சேன்ட் லிமிட்டெட்
    - கனிய மணல் ஏற்றுமதி செய்யாமல் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி ஏற்றுமதிகளுக்காக எடுக்கப்பட்ட தீர்மானம் அமுல்படுத்தப்படாமை
    - கோகிலாயில் புதிய கனிய மணல் இயந்திரக் கூடமொன்றை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமை.


# நீர்ப்பாசன துறை

நீர்ப்பாசன அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்கள், மூன்று நியதிச்சட்ட சபைகள் மற்றும் செயற்திட்டங்களினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிகள் மற்றும் இலக்குகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

"சௌபாக்கியத்தின் தூரநோக்கு" கொள்கை வெளியீட்டிற்கு இணங்க மற்றும் அரசாங்கத்தின் மூலம் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வேறு தேசிய கொள்கைகளின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட "உச்ச அளவிலான நீர்ப்பாசனம் முகாமைத்துவம் ஒன்று" ஏற்படுத்துவதற்காக குறித்துரைத்த சட்டங்கள், கட்டளைகளுக்கு இணங்க நீர்ப்பாசன விடயத்திற்குரிய கொள்கை வழங்கல், தேசிய வரவுச் செலவுத் திட்டம், அரசாங்க முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் கீழ் உள்ள செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்.

நீர் மூலங்களை அபிவிருத்தி செய்தல், நீர்ப் போக்குவரத்து மற்றும் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துதல், நீர்த் தேக்கம் மற்றும் நீர்ப்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் விவசாயக் கைத்தொழில், குடிநீர், மின்சாரத்திற்காக தேவையான நீரை சரியான முகாமைத்து வத்தின் கீழ் வழங்குதல்.

மேற்கூறப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக நீர்ப்பாசன அமைச்சு மற்றும் அதன்கீழ் உள்ள திணைக்களத்திற்கு 2022 ஆம் ஆண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 73,332 மில்லியன் தேறிய நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தால் வழங்கப் பட்டிருந்ததுடன் மீளாய் வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 58,088 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்படுகின்றது.




| | நீர்ப்பாசன அமைச்சு | நீர்ப்பாசனத் திணைக்களம் | மொத்தம் |
|---|---|---|---|
| தேறிய நிதி ஏற்பாடு | 63670 | 9662 | 73332 |
| செலவினம் | 49397 | 8691 | 58088 |
| சேமிப்பு | 14273 | 971 | 15244 |

வரைபடம்: 05 வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுத்தொகையும் உள்ளபடியான செலவினமும்
மூலம்: 2022 வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

மேற்கூறப்பட்ட பணிகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசேதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட பொருந்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

**செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை.**

நீர்ப்பாசன அமைச்சு மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கிங்நில்வலா திருப்பும் செயற்திட்டம், உமா ஓயா கீழ் அபிவிருத்தி செயற்திட்டம், தல்பிட்டிகல நீர்த் தேக்க செயற்திட்டம், கும்புக்கன் ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டம், முந்தனி ஆறு கங்கை முடிவுறுத்தும் அபிவிருத்தி செயற்திட்டம், கியூல் ஓயா அபிவிருத்தி செயற்திட்டம், மொரகஹகந்த களுகங்க விவசாய அபிவிருத்தி செயற்திட்டம், கீழ் மல்வத்த ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் வினைத்திறன் மேம்படுத்துல் மற்றும் நீர்ப்பாசனை முறைமையை செயற்திறனாக முகாமைத்துவம் செய்யும் செயற்திட்டம் என்ற 09 செயற்திட்டங்கள் 2023 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தாதிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 203,159 மில்லியன் கிரயம் செய்யப்படடிருந்த இந்த செயற் திட்டங்களை அமுல்படுத்தும் போது காணப்பட்ட நலிவான முகாமைத்துவத்தின் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடவேண்டிய ஏற்பட்டிருந்தது. அதனிடையே 07 செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றம் 0 சதவீதம் முதல் 13.16 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**கிங் நில்வலா திருப்பும் செயற்திட்டம்**

கிங் நில்வலா திருப்பும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2014 நவம்பர் 05 ஆம் திகதி நீர்பாசன மற்றும் நீர் வழங்கல் முகாமைத்துவ அமைச்சர் மற்றும் சீனாவின் ஊயுஆநுஊ கம்பனியும் அ.டொலர் 690 மில்லியன் ஒப்பந்தத் தொகையில் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு அதற்காக வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ஒப்பந்தப் பெறுமதியில் 4.35 சதவீதான அ.டொலர் 30 மில்லியன் செலுத்தாமல் ரூபா 4,011 மில்லியன் செலுத்தி கைவிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் திட்டமிடலுக்கான மொத்த கிரயமும் 2014 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருக்கும் போது திட்டமிடல் பூர்த்தி செய்யப்படாமையின் அடிப்படையில் அதற்குரியதாக செலவிடப்பட்ட ரூபா 4,080 மில்லியன் கிரயம் எந்தவொரு பொருளாதார நலனையும் பெற்றிருக்கவில்லை.

**உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டம்**

செயற்திட்டம் 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 07 வருடங்களில் அதாவது 2015 நவம்பர் 15 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு முதலாவதாக எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 08 சந்தர்ப்பங்களின் போது அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் 2021 யூன் 30 ஆம் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. ஈரான் மராப் கம்பனி 2008 ஏப்ரல் 28 ஆம் திகதி பொறியலாளர், பெறுகைகள் மற்றும் நிர்மாண ஒப்பந்த முறைமையின் கீழ் (நுீஊ) ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்ததுடன் திருத்தப்பட்ட மொத்த கிரய மதிப்பீடு அமெரிக்க டொலர் 529 மில்லியன் அதாவது ரூபா 74,326 மில்லியன் ஆகும். அதன் கீழ் 2023 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு அமெரிக்க டொலர் 503 மில்லியன் ஆன வேலை உறுதிப்படுத்தி செலுத்தப்பட்டிருந்தது.

2023 மே 15 ஆம் திகதி வரையில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 07 வருடங்களில் 06 மாதங்கள் தாமதமடைந்ததன் காரணமாக செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை கைப்பெற்றிக் கொள்வதற்கு முடியாதிருந்தது. அதன் போது தேசிய மின்வலு உற்பத்தி முறைமைக்கு 120 மெகா வோல்ட் மின் சக்தியை சேர்த்தலில் தாமதம் ஏற்பட்டதன் மூலம் மாத்திரம் ஏற்பட்ட நட்டம் ரூபா 150,562 மில்லியன் ஆகும்.

மேற்கூறப்பட்ட தாமத்தை உள்ளடக்கிய 05 விடயங்களுக்காக ஒப்பந்தகாரரால் அ.டொலர் 181 மில்லியன் அரசாங்கத்திலிருந்து கோரப்பட்டிருந்தது. அதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் அ.டொலர் 19 மில்லியன் தொகை செலுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் அ.டொலர் 19 மில்லியன் செலுத்தும் அடிப்படையில் அமைச்சரவையின் விருப்பத்தின் பிரகாரம் ஒப்பந்தகாரருக்கு செலுத்துவதற்காக கருதுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறித்துரைத்த ரீதியில் குறிப்பிடப்படாமல் 2021 ஒக்டோபர் 31 ஆம் திகதி இலக்கம் ஐசு.ஂ.2021.ஂ.62 என்ற அமைச்சரவை குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் அ.டொலர் 38 மில்லியனுக்கு மேலதிகமாக ஒப்பந்தகாரருக்கு

செலுத்துவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் பிரதான நோக்கத்தில் நீர் ஒழுக்கில் ஏற்பட்ட நீர் கசிவிற்காக இழப்பீடாக ஒப்பந்தகாரரால் காப்புறுதி கம்பனியிலிருந்து அ.டொலர் 8 மில்லியன் இழப்பீடு பெறப்பட்டிருந்தது.

**உமா ஓயா கீழ் கங்கை அபிவிருத்தி செயல் திட்டம் (அலிக்கொட்டஆர களஞ்சிய நீர்த் தேக்கம் மற்றும் குடா ஓயா நீர்த் தேக்கம்)**

இந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 11,877 மில்லியன் அதாவது 120 சதவீதம் செலவிடப்பட்டிருந்த போதும் தெற்கு பக்கத்தின் வாய்க்காலின் கீழ் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணிகளில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு பூர்த்தி செய்யப் பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக உமா ஓயா நீர்த் தேக்கத்தின் நீர் கிருந்தி ஓய நீர்த்தேக்கத்திற்கு திருப்பும் பிரதான நோக்கமான தென் மாகாணத்தில் அமைந்துள்ள காணிகளுக்காக நீரை வழங்குவதற்கு முடியாதிருந்தது.

**மொறகஹகந்த நீர்த் தேக்கத்தின் பிரதான அணைக்கட்டு நிர்மாண செயற்திட்டத்தின் மின்சார உற்பத்தி இயந்திரங்கள் நான்கைப் பொருத்துவதற்காக மேலதிக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை.**

மொறகஹகந்த நீர்த்தேக்கத்தின் பிரதான அணைக்கட்டை நிர்மாணிக்கும் ஆரம்ப உடன்படிக்கையின் விடயப் பரப்பின் பிரகாரம் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட 05 மெகா வாட் மின் பிரப்பாக்கி இயந்திரங்கள் 02 மற்றும் 15 மெகா வாட் மின் பிறப்பாக்கிய இயந்திரங்கள் 01 உடன் மின் பிரப்பாக்கி இயந்திரங்கள் மூன்றின் மூலம் 25 மெகா வாட் உற்படுத்தி செய்யப்படுகின்ற மின்சார வலுக்கூடத்திற்குப் பதிலாக 05 மெகா வாட் மின் பிறப்பாக்கிய இயந்திரங்கள் 02 உம் 7.5 மெகா வாட் மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் 02 உடன் 04 மின் பிறப்பாக்கி இயந்திரங்களின் மூலம் 25 மெகா வாட் உற்பத்தி செய்யப்படுகின்ற மின் வலுக் கூடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு தீரமானிக்கப்பட்டிருந்தது. அதற்காக மேலதிக கட்டணமாக அ.அமெரிக்க டொலர் 10,937,960 ஒப்பந்தகாரருக்கு செலுத்துவதற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய 2016 நவம்பர் 29 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்காக நிதியமைச்சரின் அவதானிப்பின் பிரகாரம் செயற்திட்டத்தின் விடயப் பரப்பை தீர்மானிப்பதற்கு முன்னர், இலங்கை மின்சார சபையின் ஆலோசனை பெறப்படாமை தொடர்பாக வரிசை அமைச்சின் உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சரவைத் தீர்மானத்தின் படி செயற்திட்டத்தின் நலிவான திட்டமிடல் தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு உரிய நியமன அதிகாரிக்கு அறிக்கையிடப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்காக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மேலதிகமாக செலவிடுவதற்கு ஏற்பட்ட அமெரிக்க டொலர் 10.94 மில்லியன் செலவினம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டமாகும்.

**யான் ஓய இடது பக்க வாய்க்கால் நிர்மாணம்**

யான் ஓயா இடது பக்க வாய்க்கால் நிர்மாணம் தொடர்பாக சீன ஒப்பந்தகாரருடன் கைச்சாத்திடப்பட்ட EPC ஒப்பந்த உடன்படிக்கைக்குரிய சகல வேலைப் பகுதிகளும் உடன் படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரரால் பூர்த்தி செய்யப்பட்டமைக்கு செயலாற்றல் சான்றிதழ் 2021 ஒக்டோர் 28 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த அமெரிக்க டொலர் 3,478,910 ஆன 06 பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக கவனத்திற் கொள்ளாமல் முழுமையாக வேலை உறுதிப்படுத்தி செலுத்தப்பட்டிருந்தது.

**பஸ்னாகொட நீர்த் தேக்க செயற்திட்டம்**

அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழு (CAPC) பரிந்துரையின் பிரகாரம் சர்வதேச போட்டியாளர் கேள்வி கோருவதன் மூலம் சீனாவின் சினோ ஹைட்ரோ கம்பனி (Sinohydro Corporation Limited) இற்கு நிலையான விலையின் அடிப்படையில் இந்த ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. அதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அகக்குறைந்த விலை சமர்ப்பித்த ஒப்பந்தகாரர் சமர்ப்பித்த ரூபா 2,093 மில்லியன் கேள்வி ரூபா 2,347 மில்லியனாக சரியாக இருக்கவேண்டியமை கணிப்பிடப்பட்டு பெறுகைகள் வழிகாட்டியின் 2.6.1(v) இற்கு முரணாக ஒப்பந்தகாரர் சமர்ப்பித்த கேள்வியினை விட ரூபா 254 மில்லியன் அதிகரித்த பெறுமதியில் ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அந்த அதிகரிக்கப்பட்ட பெறுமதியில் ஒப்பந்தக்காரருக்கு கையளித்தமை மற்றும் அதனடிப்படையில் முற்பணம் கணிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டதன் காரணமாக ஒப்பந்தக்காரருக்கு 2019 ஆம் ஆண்டின் போது மாற்றமடையும் முற்பணமாக (Mobilization Advance) ரூபா 50 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

**பெரிய / மத்திய அளவிலான செயற்திட்டங்கள் தொடர்பாக 10 வருட கால திட்டத்தின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கு முடியாமை.**

இந்த பத்து வருட அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் மஹகல்கமுவ வெவ விஸ்தரித்தல், கீழ் மல்வத்து ஓயா நீர்த் தேக்க நிர்மாணம், ரிதிமாலியத்த ஒன்றிணைந்த அபிவிருத்தி, கிவுல் ஓய நீர்த் தேக்கம், கவுடுல்ல இடது பக்க பிரதான வாய்க்கால் தம்சோப்புர குளம் வரை நீடித்தல், ரம்புக்கண் ஓயா இணைந்த அபிவிருத்தி மற்றும் மகாவலி பீ வலய மாதுறுஓயா தெற்கு பக்க அபிவிருத்தி போன்ற 07 செயற்திட்டங்கள் 2012-2017 கால எல்லையில் அமுல்படுத்துவதற்கு தேவையான நிதி ஏற்பாட்டை வழங்குவதற்கு 2011 செப்டெம்பர் 28 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்தது. இந்த 07 செயற்திட்டங்களையும் அமுல்படுத்துவதற்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,528 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் அந்த செயற் திட்டங்களுக்கிடையே ஒரு செயற்திட்டம்

இதுவரை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் 03 செயற்திட்டங்களுக்குரிய பூர்த்தி செய்யும் சதவீதம் 1 இற்கும் 5 சதவீதத்திற்கும் இடையிலாக இருந்தது. இதற்கு மேலதிகமாக குடாவிலச்சிய நீர்த் தேக்க மறுசீரமைப்பு மற்றும் வினைத்திறன் மேம்படுத்தல் மற்றும் நீர்ப் பாசன முறைமையினை செயற்திறனாக அபிவிருத்தி செய்தல் (PEISEIP), தல்பிட்டிக்கல நீர்த் தேக்கம், கிங் நில்வலா திருப்புதல், தெமட்டகல்ல குள மறுசீரமைப்பு, கிம்பிலியாகொட வத்தை வீட்டு வீதிகள் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் என்ற செயற்திட்டங்கள் ஆறும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,902 மில்லியன் கிரயம் செலவிப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ஒரு செயற்திட்டம் மீளாய்வாண்டின் வரை பூரணமாக நிறைவேற்றப்படாதிருந்ததுடன் 05 செயற்திட்டங்களுக்குரிய பூர்த்தி செய்தல் சதவீதம் 0.06 இற்கும் 13.16 இற்கும் இடையிலாக இருந்தது.

**நிலக்கீழ் நீர் கண்காணிப்பு தகவல் வலையமைப்பை ஸ்தாபித்தல்**

சிறுநீரக நோய் கணிசமான அளவில் பரவியுள்ளதாக தெரிவு செய்யப்பட்ட 04 மாவட்டங்களில் தீர்மானிக்கப்பட்ட செயற்திட்டமாக நிலக்கீழ் நீர் ஊற்றுக்கள் முறைமையை ஸ்தாபிப்பதற்காக கிரயம் யூரோ 20,629,921.18 அதாவது ரூபா 3,628.39 மில்லியன் ஆன செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. 03 வருட காலத்தில் செயற்திட்ட காலம் 02 வருடங்களினால் நீடிக்கப்பட்டதன் பின்னர் 2022 திசெம் பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் செயற் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவேண்டியதாகக் காணப்பட்ட அத்தியவசிய பிரிவான தரவு நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

**மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - குறித்துரைத்த பிரகாரம் நிறைவேற்றப்படாமையினால் கிரயம் உயர்வடைந்து சென்றமை.**

இதன் கீழ் களுகங்கை நீர்த் தேக்கத்திலிருந்து மொரகஹகந்த நீர்த் தேக்கத்திற்கு நீரை எடுத்துக் செல்வதற்காக 8.8 கிலோ மீற்றர் நீளமான சுரங்க வீதியை அகழும் ஒப்பந்தம் 2018-2021 காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்காக அமெரிக்க டொலர் 22 மில்லியன் மற்றும் ரூபா 3,797 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 7,147 மில்லியன் வெளிநாட்டு கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

ஒப்பந்தத்திற்குரிய கால எல்லையில் பூர்த்தி செய்யாமை காரணமாக 2022 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந் போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மொத்த செயல்முன்னேற்றம் 82 சதவீதம் ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் நிர்மாணித்தின் செயல்முன்னேற்றம் 12 சதவீதம் ஆகும். ஒப்பந்தத்தில் விலை தளம்பல்களுக்காக ரூபா 275 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 781 மில்லியன் அதற்காக செலுத்தப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் நிர்மாண கிரயம் எதிர்காலத்தின் போது அமெரிக்க டொலர் 35 மில்லியன் (அண்ணளவாக ரூபா 9,383

மில்லியன்) வரை உயர்வடைந்து செல்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

**வட மத்திய பெரிய வாய்க்கல் செயற்திட்டம் - விளைவற்று காணப்படுகின்ற இரண்டாவது சுரங்கம் துழைக்கும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்தல்.**

வடமத்திய பெரிய வாய்க்கால் கட்டம் 02 செயற்திட்டம் மொறகஹகந்த நீர்த்தேக்கத்தில் இருந்து நீரைக் கொண்டு செல்வதற்கு 27.7 கிலோ மீற்றர் நீளமான சுரங்க வீதியை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் 2020-2027 காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்காக அமெரிக்க டொலர் 106 மில்லியன் மற்றும் ரூபா 21,180 மில்லியனும் ஆக மொத்தம் பெறுமதி ரூபா 40,073 மில்லியனுக்கு வெளிநாட்டு கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஒப்பந்தம் 2025 யூன் 07 ஆம் திகதியில் உள்ளவாறு விரைவாகப் பூர்த்தி செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த சுரங்கத் துழையிடும் இயந்திரத்திற்கு மேலதிகமாக 02 ஆன சுரங்கம் தோன்றும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு 2021 ஒக்டோபர் 07 ஆந் திகதி வரை அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதற்காக ரூபா 6,691 மில்லியனுக்கு இரண்டாவது சுரங்க துழையிடும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு 2022 ஒக்டோபர் மாதத்தில் இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் நாட்டில் காணப்பட்ட பொருளாதார வீழ்ச்சி மற்றும் மேலதிக நிதியத்தை விரைவாக கண்டறிவதற்கு உள்ள வசதியற்றவைகளினால் தற்போது காணப்படுகின்ற அமெரிக்க டொலர் 69.5 மில்லியன் (ரூபா 22,240 மில்லியன் அளவில்) நிதி ஏற்பாடு செய்யப்பட்டு ஒரு சுரங்க துழையிடும் இயந்திரம் மாத்திரம் பயன்படுத்தி ஒப்பந்தம் 2024 யூன் வரை பேணிச் செல்லப்பட்டதன் கீழ் புதிதாக நிறுவனங்களில் சுரங்க துழையிடும் இயந்திரம் 2024 மார்ச் வரை அமுல்படுத்தப்படாதிருப்பதற்கு 2023 ஏப்ரல் 03 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

**வெவுகம் புபுதுவ செயற் திட்டம் ∴ காலநிலை மாற்றத்திற்கு இணங்கியதான ஒன்றிணைந்த நீர் முகாமைத்துவ செயற்திட்டம்.**

செயற்திட்டத்திற்காக பசுமை காலநிலை நிதியம் (GCF) கடந்த 06 வருடங்களில் ரூபா 6,651 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 30.01 மில்லியன் தொகை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் (UNDP) 2022 திசெம்பர் 31 வரையில் ரூபா 1,465 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 7.99 மில்லியன் மாத்திரம் நீர்ப்பாசன அமைச்சிற்கு (MMDE) வழங்கப்பட்டிருந்தது. மிகுதி ரூபா 5,186 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 22.01 மில்லியன் தொகையில் செயற்திட்டத்தின் சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக UNDP இனால் ரூபா 2,777 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 13.94 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஐ.அ.டொலர் 8.07 மில்லியனுக்கு சமமான ரூபா 2,409 மில்லியன் செலவினம் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**குறுக்குக் கோடுகளை இரத்துச் செய்து காசோலைகள் பணமாக்கப்பட்டமை.**

நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ரூபா 500 இற்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகை ஒன்றை செலுத்தும் போது அது காசாக செலுத்த முடியாதிருந்த போதும் அதற்கு முரணாக மற்றும் உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 352 மில்லியன் பெறுமதியான 1177 காசோலைகள் பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளரின் பெயரில் எழுதி குறுக்குக் கோடுகளை இரத்துச் செய்து பிரிவு உதவியாளரால் காசாக மாற்றப்பட்டிருந்தது. அதன் பின்னர் பிரிவு உதவியாளரால் அங்கீகாரமின்றி செலுத்துபவர்களுக்கு காசுக் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**மோட்டார் வாகனங்கள் - நீர்ப்பாசனத் திணைக்களம் பொறுப்பில் காணப்படாமை**

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பெயரில் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் அல்லது திணைக்களத்தின் முகவரியின் கீழ் 2004 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்திற்குரிய மற்றும் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களின் எண்ணிக்கை 1124 ஆகும். அதன் பிரகாரம் 880 வாகனங்கள் திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படவில்லை.

**குளம் மற்றும் நீர்த்தேக்க ஒதுக்கப் பிரதேசங்களில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் அல்லது பயிர்ச் செய்கை.**

நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரியதாகக் காணப்படுகின்ற நீர் உத்தேச திட்டங்கள், 387 குளங்கள் மற்றும் நீர்த் தேக்கங்களில் 116 குளம் மற்றும் நீர்த் தேக்கங்களின் ஒதுக்கப் பிரதேசத்தில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் அல்லது பயிரிடல்கள் மேற்கொள்ளப்பட்டு நீர்ப்பாசன ஒதுக்கப் பிரதேச எல்லை, திணைக்களத்தின் காணியைப் பாதுகாத்தல் மற்றும் விடுவிப்பதற்காக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தால் 2014 திசெம்பர் 01 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட இலக்கம் 08.∴2014 என்ற திணைக்கள சுற்றறிக்கை மற்றும் 1946 இன் 32 ஆம் இலக்க நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் 65 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டு இது தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**இலங்கை மகாவலி அதிகார சபை**

**அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட காணி குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை.**

2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையால் முதலீட்டு செயற்திட்டங்களுக்காக 704 முதலீட்டாளர்களுக்கு 7,832 ஹெக்டேயர் காணி அளவு வழங்கப்பட்டிருந்தது. அது முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்ட காணி கூறுகளின் அளவு 3,645 ஹெக்டேயர் ஆக இருந்ததுடன் 5 சதவீதத்திற்கும் 25 சதவீதத்திற்கும் இடையிலான குறைவாக அபிவிருத்தி செய்யப்பட்ட காணி 377 ஹெக்டேயர்

ஆகக் காணப்பட்டது. அபிவிருத்தி செய்யப்படுகின்ற காணிக் கூறுகளின் அளவு 291 ஹெக்டேயர் காணியாக இருந்த காணியில் 25 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடையிலான அபிவிருத்தியும், 821 ஹெக்டேயர் காணியில் 50 சதவீதத்திற்கும் 90 சதவீதத்திற்கும் இடையிலான அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. முழுமையாக அபிவிருத்தி செய்யப்படாத காணி 2,697 ஹெக்டேயர் ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் வழங்கப்பட்ட காணி அளவில் 34 சதவீதம் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படாதிருந்தமையும் 19 சதவீதம் குறைவாக அபிவிருத்தி செய்யப்பட்டும் காணப்பட்டது.

**பயிற்சிச் செய்கைக்காக வழங்கப்பட்ட காணி குறைவாக பயன்படுத்துதல்.**

பாற்பசு பண்ணைகளில் ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகளுக்கு மகாவலி பீ, சீ, டீ, எல் மற்றும் உடவளவ வலயங்களில் பயிற்ச் செய்கைக்காக 2,802 ஏக்கர் அளவில் வழங்கப்பட்டு கால் நடை போசணை அபிவிருத்திக்குரிய செயற்பாடுகளை கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் கணக்காய்வு திகதியான 2023 மே 25 ஆம் திகதி வரையிலும் எந்தவொரு காணியிலும் பயிர்ச் செய்கையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

**சிறிய அளவிலான மின் வலுக்கூட உரிமையாளர்களிடமிருந்து முறையான பிரகாரம் கட்டணம் அறவிடுவதற்கு முடியாதிருந்தமை.**

சிறிய அளவிலான மின்சார உற்பத்தி முதலீட்டாளர்களின் அதிகார சபைக்கு அறவிடப்படுகின்ற நீர் போசனை முகாமைத்துவ கட்டணத்தை அறவிடுவதற்காக மின்சார சபை, உரிய மின் வலுக்கூடத்திற்குரிய முதலீட்டாளர் மற்றும் மகாவலி அதிகார சபையை உள்ளடக்கிய முறையாக முத்தரப்பினர் உடன்படிக்கையில் கைச்சாத்திடாமையின் காரணமாக மின் பிறப்பாக்கியை ஈடுபடுத்தும் போது இருக்கின்ற சிறிய அளவிலான 12 மின்வலுக்கூடங்களில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 242 மில்லியன் தொகையொன்று 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

**கருங்கல் அகழ்வதற்காக அறவிட வேண்டிய தவணைப் பணம் செலுத்தாமல் புறக்கணித்தமை.**

2020 திசெம்பர் 20 ஆம் திகதிய இலக்கம் அமப.∴201852.∴317.∴012 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் 15 வியாபாரிகளுக்கு கருங்கல் அகழ்வதற்காக அறவிடவேண்டிய ரூபா 893 மில்லியன் காணி பயன்படுத்தல் கட்டணத்தின் நிலுவைப் பணத்தில் 75 சதவீத அளவு பதிவழிப்பதற்கு அங்கீகாரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அந்த பதிவழித்தல்களான ரூபா 670 மில்லியன் மீள சேமிக்கப்பட்ட நிலுவைப் பணமான ரூபா 223 மில்லியன் 36 தவணைகளில் செலுத்துவதற்கும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த

தொகையில் ரூபா 166 மில்லியனுக்குரிய 05 வியாபாரிகளினால் இணங்கப்பட்ட பிரகாரம் தவணைப் பணம் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டிருந்தது.

**நியம தரத்தையுடைய நீர் வழங்கல்களை உறுதிப்படுத்தும் நோக்கில் மீள்சார்ந்த நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் 30 இ னை ஸ்தாபித்து அதற்கு இணையான வசதிகளை வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை.**

மகாவலி பீ மற்றும் எல் வலயங்களில் பரவிக் காணப்பட்ட கடுமையான சிறுநீரக நோய் நிலைமைக்கு தீர்வாக தரத்தை உடைய நீர் வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கில் மீள்சுத்திகரிப்புச் செய்யும் 30 இயந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அதற்கு இணைந்ததாக வசதிகளை வழங்குதலும் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டம் சரியான முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை இல்லாமையின் அடிப்படையில் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 80 மில்லியன் செலவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த மேற்கூறப்பட்ட 30 இயந்திரங்களில் 14 இயந்திரங்கள் 2023 மே 01 ஆம் திகதி வரையில் செயலிழந்த நிலையில் காணப்பட்டது.

**லங்கா மினரல் சேன்ட் லிமிட்டெட்**

**கனிய மணல் ஏற்றுமதி செய்யாமல் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி ஏற்றுமதிகளுக்காக எடுக்கப்பட்ட தீர்மானம் அமுல்படுத்தப்படாமை**

2020 பெப்ரவரி 12 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மூலப்பொருள் வடிவில் கனிய மணல் ஏற்றுமதி செய்யப்படாமல் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை வெளிநாட்டவர்களுக்கு அனுப்புவதற்கு கம்பனி கவனம் செலுத்த வேண்டி இருந்த போதிலும் அதற்காக தேவையான நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2023 மே 31 வரையும் எடுக்கப்படாதிருந்ததுடன் மூலப்பொருள் வடிவில் கனிய மணல் ஏற்றுமதி செய்யப்பட் டிருந்தது.

**கோகிலாயில் புதிய கனிய மணல் இயந்திரக் கூடமொன்றை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமை.**

கம்பனியால் மணல் முல்லைத்தீவு மாவட்டத்தில் கோகிலாயில் புதிய கனிய மணல் இயந்திரக் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக சில வருடங்கள் முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் 2013 பெப்ரவரி 13 ஆம் திகதி ரூபா 2 மில்லியன் தொகையில் 17.69 ஹெக்டேயர் அளவான காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இயந்திரக்கூட செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் ரூபா 39.3 மில்லியனுக்கு ஸ்பைரல் இயந்திரம் (Spiral Machine) கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த இயந்திரம் புல்மோட்டை இயந்திரக் கூடத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது. இயந்திரக் கூடத்தின் செயற்பாடுகள் 2022 ஆம் ஆண்டு வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

# பெருந்தோட்ட துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- பெருந்தோட்டத் துறை அமைச்சு
  - வருமான வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை.
  - குருநாகல் பெருந்தோட்ட கம்பனியில் இருந்து அறவிட வேண்டிய பணம் அறவிடப்படாமை.
- இரப்பர் ஆராய்ச்சி சபை
  - சபையினால் டயர் பரிசோதனை அலகின் வேலை இடைநடுவில் நிறுத்தப்பட்டமை.
  - துகள் எல்லை சேவையிடல் நிலையமொன்றின் நோக்கம் நிறைவேற்றப்படாமை
- தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை
  - நிதியம் உரிய நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்படாமை
- தெங்கு பயிர்செய்கை சபை
  - மாத்தறை, காலி மற்றும் அம்பாந்தோட்டை போன்ற 03 மாவட்டங்களில் தென்னை மரங்களில் இலைகள் கருகல் மற்றும் அழுகுதல் நோயை ஒழித்தல் மற்றும் கட்டுப்படுத்துவதில் தாமதம்.
  - திறைசேரியின் அங்கீகாரம் இன்றி தொழிலாளர் படி செலுத்தியமை
- தெங்கு ஆராய்ச்சி சபை
  - "சுதுமெஸ்ஸா" தொற்று நோயினை கட்டுப்படுத்துவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று ஈடுபடுத்தப்படாமை.
  - கற்கை விடுமுறை பெற்று வெளிநாடு சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய பணம் அறவிடப்படாமை.
  - ஆராய்ச்சி நடவடிக்கைகளை கைவிட்டுச் சென்றமை.

- இலங்கை தேயிலை சபை
    - தீர்த்து வைக்கப்படாத வைப்புக்கள் காணப்பட்டமை
    - தேயிலை கைத்தொழிலுக்காக தகவல் தொழில்நுட்ப முறைமையொன்று ஸ்தாபிக்காமை
    - தேயிலை வர்த்தக கண்காட்சிகளின் செயல் முன்னேற்றம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை
    - முறையற்ற வகையில் செயற்பட்ட உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படாமை
- தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்
    - உத்தியோகத்தரிடம் இருந்த அறவிட வேண்டிய பணம் அறவிடப்படாமை
    - முகாமைத்துவ தகவல் முறைமையை ஸ்தாபித்தல் மேற்கொள்ளப்படாமை
- மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை
    - வாடகை வருமானம் நிலுவையாக காணப்படுகின்றமை
    - குறைவாக பயன்படுத்தப்பட்ட காணிகளில் பயிர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை
- சிலாபம் பெருந்தோட்ட கம்பனி
    - செலவினங்களுக்கு ஈடாகின்ற வருமானம் உழைக்கப்படாமை

# பெருந்தோட்ட துறை

ஆராய்ச்சி ரீதியான முறையான திட்டம், புதிய தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் உச்ச அளவில் காணியை பயன்படுத்துவதன் ஊடாக பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை பல்வகைப்படுத்தல் மூலம் ஏற்றுமதி சந்தையில் கவர்ச்சிகரமாக கொள்வதற்கு இலக்கிடப்பட்ட ஒட்டு மொத்த பெருந்தோட்ட துறையிலும் புதிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் இந்த அமைச்சின் விடயப் பரப்பிற்கு உட்பட்டிருந்தது. இந்த அமைச்சுக்குரிய 02 திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனம், நியதிச் சட்ட சபைகள் என 28 நிறுவனங்களும் காணப்பட்டது. இந்த அமைச்சுக்கு கையளிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்படுகின்ற பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

- அரசாங்கத்தின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற தேசிய கொள்கையின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட பெருந்தோட்ட துறை விடயங்கள் மற்றும் அமைச்சுக்கு கையளிக்கப்பட்ட திணைக்களம் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுக்குரிய கொள்கை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வளங்கள், அமுல்படுத்துதல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பிடுதல்.
- அமைச்சின் விடயப் பரப்பிற்கு உரிய பொது மக்கள் சேவைகளை செயற்திறனாகவும் பொது மக்களுக்கு இசைவான வகையிலும் வழங்குதல்.
- விரயம் மற்றும் ஊழல்களை நீக்கி அமைச்சின் பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவதற்கு இயலுமான வகையில் நவீன முகாமைத்துவ முறைமை மற்றும் தொழில்நுட்பங்களை ஈடுபடுத்தி சகல திட்டங்கள் மற்றும் மறுசீரமைத்தல்.
- பெருந்தோட்ட துறையின் வினைத்திறனுக்காக சர்வதேச போட்டித் தன்மையை கட்டியெழுப்புதல்.
- சர்வதேச சந்தையை இலக்காக கொண்டு பெருந்தோட்ட பயிர்ச் செய்கைகளின் அடிப்படையிலான பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி தொடர்பான கைத்தொழில்களை கட்டியெழுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- தேயிலை, இறப்பர் கைத்தொழில் அபிவிருத்தி, மேம்படுத்தல் மற்றும் ஆராய்ச்சிகளுக்குரிய செயற்பாடுகள்.
- தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந் தோட்டங்களை கூறுகளாக்கி குடியிருப்புக்களை நிர்மாணித்தலை உச்ச அளவில் வரையறுத்தல்.
- பெருந்தோட்ட பயிர்ச் செய்கை தொழில்களுக்காக புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதை அதிகரித்தல்.
- அரச மற்றும் தனியார் பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான காணிகளையும் உள்ளடக்கி அது

சார்ந்த போக பயிர்செய்கை நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளை இலக்காக கொண்டு இறப்பர் சார்ந்த உற்பத்திகளை ஊக்குவித்தல்.
- தோட்டத் துறையின் காணிகளை முறையாக பயன்படுத்துவதற்காக திட்டமொன்றை தயாரித்து அமுல்படுத்துதல்.
- தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந் தோட்டங்களை கூறுகளாக்குவதல் தொடர்பாக அனுமதிப் பத்திரங்களை விநியோகித்தல் மற்றும் நிர்வகித்தல்.
- சிறிய பெருந்தோட்ட பயிர் செய்கையாளர்களை ஊக்குவிப்பதற்காக வேலைத் திட்டமொன்றை அமுல்படுத்துதல்.
- ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஒன்றிணைந்து அதிகரித்த விளைச்சலுடன் புதிய இனங்களை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- நவீன தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி உள்நாட்டு உற்பத்திகளில் பெறுமதி சேர்த்தல்கள் மூலம், உயர் பெறுமதியுடைய பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் ஏற்றுமதி சந்தை சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துதல்.
- பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளையும் உள்ளடக்கிய நிலைபேறான வளப் பயன்பாடு மற்றும் உயிரியல் பாதுகாப்பு மேம்பாட்டிற்காக தேவையான கொள்கைகளை அமுல்படுத்ததல்.
- பல்வகை பயிர்ச் செய்கைகள் மற்றும் ஒன்றிணைந்த பண்ணை முறைமை மூலம் பெருந்தோட்ட காணிகளை உச்ச அளவில் பயன்பாட்டிற்கு எடுத்தல் மற்றும் அதன் மூலம் உற்பத்தி மற்றும் ஊழிய ஈடுபாட்டை அதிகரித்தல்.

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் வருகின்ற நிறுவனங்களினால் மேற்கூறப்பட்ட பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிபுக்களின் பொழிப்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

**பெருந்தோட்டத் துறை அமைச்சு**

**வருமான வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை.**

1992 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்திற்குரிய கூட்டு மொத்தமான 249,843 ஹெக்டேயர் அளவான காணி 23 பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளுக்கு 53 வருட காலத்திற்காக குத்தகை அடிப்படையில் கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதில் 07 கம்பனிகளில் இருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 838 மில்லியன் வரி வருமானம் நிலுவையாக காணப்பட்ட போதும், நிதிப் பிரமாணம் 176(2) இன் பிரகாரம் திறைசேரியுடன் இணைந்து தாமதமின்றி நிலுவையாக இருந்த வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**குருநாகல் பெருந்தோட்ட கம்பனியில் இருந்து அறவிட வேண்டிய பணம் அறவிடப்படாமை.**

குருநாகல் பெருந்தோட்ட கம்பனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் 53 வருட காலத்தின் போது சமமான நான்கு தவணைகளில் அமைச்சுக்கு செலுத்த வேண்டிய வாடகை பணம் குறைவாக செலுத்தியமையால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 278 மில்லியன் குருநாகல் பெருந்தோட்ட கம்பனியில் இருந்து அறவிட வேண்டிக் காணப்பட்டதுடன், அதில் 117 மில்லியன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டது.

**இரப்பர் ஆராய்ச்சி சபை**

**சபையினால் டயர் பரிசோதனை அலகின் வேலை இடைநடுவில் நிறுத்தப்பட்டமை.**

சபையினால் டயர் பரிசோதனை அலகொன்றை ஸ்தாபிப்பதற்காக 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் மார்ச் மற்றும் மே மாதங்களில் அந்த பணிகளுக்காக ரூபா 30 மில்லியன் பெறுமதியான 03 இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், உரிய கட்டிடம் நிர்மாணிப்பதற்கு தவறியமையினால் இந்த உபகரணங்கள் கணக்காய்வுத் திகதியான 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது.

**துகள் எல்லை சேவையிடல் நிலையமொன்றின் நோக்கம் நிறைவேற்றப்படாமை**

அரசாங்க தனியார் கூட்டு முயற்சிகளின் கீழ் வியாபார மாதிரியொன்றாக இ றப்பர் உற்பத்தி திட்டமிடல் மற்றும் செயலாற்றலை மதிப்பிடுவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 50 மில்லியன் செலவில் “துகள் எல்லை சேவையிடல் நிலையம்” ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த நிலையத்தை ஸ்தாபித்ததால் எதிர்பார்த்த டயர் மாதிரி உற்பத்தி நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை**

**நிதியம் உரிய நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்படாமை**

இளநீர் மேம்படுத்துவதற்காக ரூபா 128 மில்லியன் தொகை 2019 ஆம் ஆண்டு முதல் 2022 வரை நாற்று மேடை செயற்திட்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. நிதியத்தில் இருந்து இளநீர் மேம்படுத்துலுக்காக ரூபா 25 மில்லியன் தென்னை பயிர் செய்கை சபைக்கு வழங்குதல் மற்றும் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 2 மில்லியன் செலுத்தி 20,000 நாற்று தேங்காய்களை கொள்வனவு செய்தல் தவிர நிதியத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய ஏனைய எந்தவொரு பணிகளும் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிதியத்தில் ரூபா 101 மில்லியன் மீதி காணப்பட்டது. அவ்வாறே தெங்கு பயிர்ச் செய்கை சபைக்கு வழங்கப்பட்ட

ரூபா 25 மில்லியன் தொகையும் உரிய பணிகளில் ஈடுபடுத்தாமல் மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

**தெங்கு பயிச்செய்கை சபை**

**மாத்தறை, காலி மற்றும் அம்பாந்தோட்டை போன்ற 03 மாவட்டங்களில் தென்னை மரங்களில் இலைகள் கருகல் மற்றும் அழுகுதல் நோயை ஒழித்தல் மற்றும் கட்டுப்படுத்துவதில் தாமதம்.**

மாத்தறை, காலி மற்றும் அம்பாந்தோட்டை என்ற 03 மாவட்டங்களில் தென்னை மரங்களில் இலைகள் கருகல் மற்றும் அழுகுதல் நோய் வலயங்களில் 2008 முதல் 2018 வரையான காலப் பகுதியில் நோய் தொற்றிய 332,075 தென்னை மரங்கள் இனங்காணப்பட்டு அதில் 309,622 தென்னை மரங்கள் அகற்றப்பட்டிருந்த போதும், நோயினை இனங்காணல் 14 வருடங்கள் கடந்திருந்த போதிலும், தென் மாகாணத்தில் இந்த நோயை ஒழுப்பதற்கோ அல்லது கட்டுப்படுத்துவதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாதிருந்ததுடன், நோய் வலயத்தில் நோய் அடையாளங்கள் காணப்படுகின்ற தென்னை மரங்கள் மற்றும் தென்னங்கன்றுகளை வெட்டி அகற்றுதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**திறைசேரியின் அங்கீகாரம் இன்றி தொழிலாளர் படி செலுத்தியமை**

திறைசேரியின் அங்கீகாரம் இன்றி சபையின் தலைவரை உள்ளடக்கிய 27 சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு 2021 நவம்பர் முதல் 2015 சனவரி வரை ரூபா 17 மில்லியன் தொழிலாளர் படி செலுத்தப்பட்டிருந்த போதும், இந்த படியினை மீள அறவிடுவதற்கோ அல்லது செலுத்தப்பட்ட பணம் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கோ சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**தெங்கு ஆராய்ச்சி சபை**

**“சுதுமெஸ்ஸா” தொற்று நோயினை கட்டுப்படுத்துவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று ஈடுபடுத்தப்படாமை.**

சபையின் பணிகளுக்கு இடையே முதன்மையான பணியான தெங்கு பயிர்ச் செய்கை தொடர்பாக அதிக விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சினை நடாத்துதல், நோய் மற்றும் தொற்று நோய்களை தடுத்தல், சிகிச்சையளித்தலாக இருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டின் அரை இறுதியில் ஏற்பட்ட “சுதுமெஸ்ஸா” தொற்று நோயை கட்டுப்பாடுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டு வரை நிலையான சிகிச்சை முறையொன்று ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன், வேப்பெண்ணெய் மற்றும் சவர்க்கார தூள்கள் கலவையொன்று 2022 இறுதி அரைப் பகுதி வரையில் இனங்காணப்பட்டு குறித்துரைத்த செயற்திட்டமாக பிரதேச செயலகத்தில் 3 பிரிவுகளில் மாத்திரம் 81,176 தென்னை மரங்களில் நோய் ஒழிக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தொற்று நோயை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**கற்கை விடுமுறை பெற்று வெளிநாடு சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய பணம் அறவிடப்படாமை.**

தெங்கு ஆராய்ச்சி சபையில் சேவையாற்றி இருந்த போது கற்கை விடுமுறை பெற்று வெளிநாடு சென்ற 06 உத்தியோகத்தரால் சபையுடன் ஏற்படுத்தப்பட்ட சேவை உடன்படிக்கை மீறப்பட்டு சபையில் சேவைக்கு அறிக்கையிடாமையின் காரணமாக சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 13.6 மில்லியன் தொகையும் சேவையாற்ற வேண்டிய கட்டாய சேவைக் காலத்தை விஞ்சுவதற்கு முன்னர் சபையில் சேவையை விட்டுச் சென்ற மூன்று பேரிடம் இருந்தும் சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 36.6 மில்லியன் தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**ஆராய்ச்சி நடவடிக்கைகளை கைவிட்டுச் சென்றமை.**

2012 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் சபையின் 7 பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட 14 ஆராய்ச்சிகள் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் சேவையை விட்டுச் சென்றமை, நிதி ஏற்பாடு கிடைக்கப் பெறாமை, காட்டு யானைகளால் சேதம் ஏற்பட்டமை, வலுசக்தி உற்பத் திக்காக கிளிரிசீடியா துண்டங்களின் கேள்வி குறைவடைந்தமை மற்றும் கிளிரிசீடியா பயிரிடல் குறைவடைந்தமை போன்ற காரணத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கைவிடப்பட்டிருந்ததுடன், அதற்காக சபையினால் ரூபா 11.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**இலங்கை தேயிலை சபை**

**தீர்த்து வைக்கப்படாத வைப்புக்கள் காணப்பட்டமை**

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களால் தேயிலை கொழுந்து வழங்குவதற்கு செலுத்துவதற்காக சபையில் வைப்புச் செய்யப்பட்ட போதும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சரியான பிரகாரம் உரிய நபர்களுக்கு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த வைப்பு பெறுமதி ரூபா 92 மில்லியன் ஆக இருந்ததுடன், அதில் ரூபா 6 மில்லியன் 10 வருடங்களை விஞ்சிய பழைய வைப்பாக இருந்தது.

**தேயிலை கைத்தொழிலுக்காக தகவல் தொழில்நுட்ப முறைமையொன்று ஸ்தாபிக்காமை**

தேயிலை கைத்தொழிலுக்காக தகவல் தொழில்நுட்ப முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்காக 2016 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், தேயிலை சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் நிதியத்தில் இருந்து அதற்காக ரூபா 220 மில்லியன் தொகை 2018 யூலை 03 ஆம் திகதி சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அந்த பணம் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டு 2020 செப்டம்பர் 30 ஆம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றுடன் முறைமையை ஸ்தாபிப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 53 மில்லியனுக்கு ஒட்டுமொத்த முறைமையும் இரண்டு வருடங்கள் ஆறு மாத கால அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதும், 2023 ஏப்ரல் 30

வரை பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மிகை மதிப்பீட்டின் அடிப்படையில் இந்த பணம் வழங்கப்பட்டதன் காரணமாக ரூபா 166 மில்லியன் தொடர்ந்தும் பயனற்று காணப்பட்டது.

**தேயிலை வர்த்தக கண்காட்சிகளின் செயல் முன்னேற்றம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை**

2022 இன் வருடாந்த திட்டத்தின் பிரகாரம் 34 வெளிநாட்டு வர்த்தக கண்காட்சிகளுக்காக பங்குபற்றுவதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 200 மில்லியன் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ஆண்டின் போது 25 வர்த்தக கண்காட்சிக்காக பங்குபற்றியமைக்காக ரூபா 104 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. சபையினால் தெரிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்காக விஷேட வர்த்தக கண்காட்சிகளில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பம் மற்றும் மானியங்கள் வழங்கியதன் பின்னர் அந்த வர்த்தக கண்காட்சியின் செயல் முன்னேற்றம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**முறையற்ற வகையில் செயற்பட்ட உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படாமை**

2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட “ரீ மேமன்ட்ஸ்” பெயருடைய கொழும்பு தேயிலை விற்பனை நிலையம் சாத்திய வள ஆய்வு இன்றி ஆரம்பித்தல் மற்றும் ஆக்கபூர்வமான முறையில் அமுல்படுத்தப்படாமையின் காரணமாக சபைக்கு ஏற்பட்ட ரூபா 63 மில்லியன் நட்டம் பதிவழிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக முறையற்ற வகையில் செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை.

**தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்**

**உத்தியோகத்தரிடம் இருந்த அறவிட வேண்டிய பணம் அறவிடப்படாமை**

மொத்த சம்பளத்துடன் கற்கை விடுமுறை பெற்று வெளிநாடு சென்று மீண்டும் சேவைக்கு வருகை தராத மற்றும் சேவைக்கு வருகை தந்ததன் பின்னர் கட்டாய சேவைக் காலத்தை பூர்த்தி செய்வதற்கு முன் சேவையை விட்டுச் சென்ற 04 உத்தியோகத்தரினால் 2005 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை சபையுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையை மீறியதன் காரணமாக உரிய பிணைமுறி பெறுமதியான ரூபா 15 மில்லியன் தொகை 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

**முகாமைத்துவ தகவல் முறைமையை ஸ்தாபித்தல் மேற்கொள்ளப்படாமை**

இலங்கை தேயிலை ஆராய்ச்சி சபைக்காக முகாமைத்துவ தகவல் முறைமையொன்று (ஆஐஞ) வடிவமைத்தல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்காக இலங்கை டெலிகொம் சேர்விஸ் லிமிடெட் இற்கு 2020 ஏப்ரல் 22 ஆம் திகதி ரூபா 4.2 மில்லியன் தொகையில் கட்டளை கையளிக்கப்பட்டிருந்ததுடன்,

மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1.1 மில்லியன் முற்பணத் தொகை வழங்குனர் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதும் இந்த பெறுகையின் செயல்முன்னேற்றம் 43 சதவீத மட்டத்தில் காணப்பட்டது.

### மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை

#### வாடகை வருமானம் நிலுவையாக காணப்படுகின்றமை

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் நீண்ட கால குத்தகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் இந்த குத்தகை ஆதனங்களில் இருந்து 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு ரூபா 196 மில்லியன் வாடகை வருமானம் நிலுவையாக காணப்பட்டது.

#### குறைவாக பயன்படுத்தப்பட்ட காணிகளில் பயிர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை

சபையில் ஹெக்டேயர் பதிவேட்டின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேயிலை மற்றும் ஏனைய போக பயிர்கள் மேற்கொள்ளப்படுகின்ற 15 தோட்டங்களுக்குரியதாக காணப்பட்ட மொத்த நில அளவு 10,126 ஹெக்டேயர் ஆக இருந்ததுடன், அதில் தேயிலை பயிர்ச் செய்கைக்காக 3,545 ஹெக்டேயரும், ஏனைய பயிர்ச் செய்கைகளுக்காக 705 ஹெக்டேயர்களும் வீதம் 4,250 ஹெக்டேயர் பயன்படுத்தப்பட்டிருந்தது. மிகுதி நில அளவான 5,876 ஹெக்டேயர் அதாவது மொத்த நில அளவில் 58 சதவீத அளவு குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த குறைவாக பயன்படுத்தப்பட்ட காணிகளில் பயிர் செய்வதற்கோ வெளித்தரப்பனருக்கு வழங்குவதற்கோ சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### சிலாபம் பெருந்தோட்ட கம்பனி

#### செலவினங்களுக்கு ஈடாகின்ற வருமானம் உழைக்கப்படாமை

சிலாபம் பெருந்தோட்ட கம்பனியில் கினியம தோட்டத்தில் காணப்படுகின்ற தெங்கு பயிர்ச் செய்கைகளில் கீழ் பயிர்செய்கையாக 2012 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட கப்புறுவன நாற்று தேங்காய் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ள 58 ஹெக்டேயர் காணியை பராமரிப்பதற்கு ஆரம்ப திகதி முதல் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 57 மில்லியன் கிரயமொன்று செய்யப்பட்ட போதிலும், கப்புறுவன விதை தேங்காய் செயற்திட்டத்திற்கு உரியதாக ரூபா 3 மில்லியனே உழைக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வருமானத்தை கிரயத்துடன் சீராக்கியதன் பின் மேலும் ரூபா 54 மில்லியன் கிரயத்தை மேவுகை செய்ய வேண்டியிருந்தது.

# காால்நடைகள் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- மில்கோ தனியார் நிறுவனம்.
    - மனித பாவனைக்குப் பொருத்தமற்ற பால் மா உற்பத்தி.
    - தொழிற்சாலையின் எணணெய் தாங்கியினுள் நிரப்பப்பட்டிருக்காத டீசல் தொகைக்கான கொடுப்பனவு செலுத்தப்பட்டமை.
    - நிறுவனத்திற்கு வந்திருக்காத டீசல் பவுசருக்கான கொடுப்பனவு வழங்கியமை.
    - வழங்கப்பட்ட டீசல் தொகை மற்றும் பெற்றுக் கொண்ட டீசல் தொகை என்பவற்றுக்கிடையில் காணப்பட்ட இணங்காமை.
    - திரவ பால் விற்பனை அளவு படிப்படியாகக் குறைவடைந்தமை.
    - பயன்பாட்டினைக் கருத்தில் கொள்ளாது சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்.
    - தொழிற்சாலைகளின் மொத்த கொள்ளளவினை பயன்பாட்டிற்கு எடுக்காமை.
- தேசிய கால்நடை அபிவிருத்தி சபை
    - மாடுகளுக்காக தனியார் காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த காப்புறுதி நட்ட ஈடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காமை.
    - தேங்காய் ஏலங்களின் போது குறித்த காலத்தினுள் தேங்காய் தொகைகளை அகற்றப்படாததால் அறவிடப்பட வேண்டிய தொகை அறவிடப்பட்டிருக்காமை.
    - வேறு நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட வாகனங்கள் ஓடுவதற்கு பயன்படுத்தப்பட்ட போதிலும் அந்த வாகனங்கள அது சட்ட ரீதியான உரிமையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
    - கால்நடை உணவு உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரம் செயலற்று இருந்தமை.

# கால்நடைகள் துறை

இலங்கை நகர்ப்புற மக்களை விடக் கிராமப்புற மக்கள் அதிகமாக வாழும் நாடாக இருப்பதுடன் கிராமப்புற மக்கள் பெரும்பாலும் அடிப்படை தொழில்களில் ஈடுபடுவோராக உள்ளனர். அதற்கமைய இந்த கிராமப்புற மக்களின் பிரதான வாழ்வாதாரமான விவசாயம் மற்றும் கால்நடை உற்பத்திகளைக் கொள்வனவு செய்தல் அவற்றுக்கு சிறந்த விலையினைப் பெற்று கொடுத்தல் மற்றும் உற்பத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் அடிப்படை உற்பத்தியை இரண்டாம் நிலை உற்பத்தியாக மாற்றி அவற்றை வெளிநாட்டு சந்தைகளுக்கு வழங்குதல் என்பன அதனுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களின் கடமைப் பொறுப்பாகும். அதற்கு அமைய இலங்கையில் கால்நடைகள் பிரிவுக்குரிய கடமைப் பொறுப்புகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உள்ளது.

பல்வேறு புவியியல் பிரதேசங்களுக்குப் பொருத்தமான வகையில் கால்நடைகளை அறிமுகப்படுத்துவதற்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயப் பண்ணை அபிவிருத்தியை ஊக்குவித்தல்.

- கால்நடைகள் சார்ந்த உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் ஏற்றுமதிக்காக ஊக்குவித்தல்.
- தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் ஊடாக உயர் தரத்திலான புல் வகைகளை அறிமுகப்படுத்துதல்.
- நடுத்தர மற்றும் பாரிய அளவிலான கால்நடை பண்ணைகளை நிர்மாணிப்பதற்கு உரிய நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து தேவையான காண் மற்றும் முதலீட்டு வசதிகளை வழங்குதல்.
- அரசுக்கு சொந்தமான கால்நடை பண்ணைகளை அதிகபட்சமாக பயன்படுத்தும் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியை விரிவுபடுத்துதல் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கு ஊக்குவித்தல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதன் மூலம் உள்நாட்டு உற்பத்தி மற்றும் நுகர்வு சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துதல்.
- கால்நடை பண்ணைகள் மற்றும் உற்பத்தி வசதிகளுக்கு சர்வதேச தரங்கள் மற்றும் உற்பத்தி திறனான கண்காணிப்பு ஒழுங்கமைப்பினை அறிமுகப்படுத்துதல்.
- கால்நடை வைத்திய வசதிகளை விரிவுபடுத்துவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயிகளுக்கு வசதிகளை வழங்குதல்.

மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு இந்த பிரிவுக்கு உரிய அரச திணைக்களம் ஒன்று. அரச கூட்டுத்தாபனம் ஒன்று மற்றும் இரு

அரச நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்ற பணிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களில் சில கீழே பொழிப்பாக்கம் செய்யப்பட்டுத் தரப்பட்டுள்ளது.

**மில்கோ தனியார் நிறுவனம்.**

**மனித பாவனைக்குப் பொருத்தமற்ற பால் மா உற்பத்தி.**

தொழிற்சாலை நவீன மயப்படுத்தல் செயல்திட்டத்தின் கீழ் நவீன இயந்திராலை பொருத்தப்பட்டதன் பின்னர் 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்டிருந்த 441,652 கிலோ கிராம் பால்மா குறையற்றது என பரிசோதனை அறிக்கை வழங்கப்பட்டிருந்த போதிலும் நுகர்வோர் முறைப்பாடுகள் காரணமாக மனித நுகர்விற்குப் பொருத்தமற்றது என மீண்டும் களஞ்சிய சாலைக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அதற்கு அமைய ரூபா. 475.2 மில்லியன் பெறுமதியான 720,000 கிலோகிராம் பால் மா தொகையில் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் கால்நடை உணவாக விற்பனை செய்யப்பட்டதன் பின்னர் மீதி 561,264 கிலோகிராம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி அம்பேவெல தொழிற்சாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் மனித பாவனைக்குப் பொருத்தமற்ற பால்மா உற்பத்திக்கு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் எதுவித விசாரணையும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**தொழிற்சாலையின் எணணெய் தாங்கியினுள் நிரப்பப்பட்டிருக்காத டீசல் தொகைக்கான கொடுப்பனவு செலுத்தப்பட்டமை.**

மில்கோ நிறுவனத்திற்குச் சொந்தமான அம்பேவெல தொழிற்சாலையில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரை பெட்ரோலிய கூட்டுத்தாபனத்தினால் டீசல் தொகை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது எனினும் ரூபா. 17 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட 165,300 லிட்டர் டீசல் தொகை மில்கோ நிறுவனத்தின் இருப்புப் புத்தகங்களுக்கு அமைய குறித்த களஞ்சியசாலையின் எண்ணெய்த் தாங்கியினுள் நிரப்பப்பட்டிருக்காத போதிலும் அதற்கான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**நிறுவனத்திற்கு வந்திருக்காத டீசல் பவுசருக்கான கொடுப்பனவு வழங்கியமை.**

2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரையில் எரிபொருள் தொகை தொழிற்சாலைக்கு கிடைத்தமைக்கான பாதுகாப்பு பிரிவின் ஆவணங்களைப் பரீட்சிக்கும் போது ரூபா. 9 மில்லியன் பெறுமதியான 92,400 லிட்டர் டீசல் தொகையினைக் கொண்டு வந்த 14 பவுசர் வண்டிகள் தொழிற்சாலையினுள் வந்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்ட போதிலும் அதற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**வழங்கப்பட்ட டீசல் தொகை மற்றும் பெற்றுக் கொண்ட டீசல் தொகை என்பவற்றுக்கிடையில் காணப்பட்ட இணங்காமை.**

மில்கோ நிறுவனத்திற்குச் சொந்தமான அம்பேவெல பால் தொழிற்சாலையில் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரையில் தொழிற்சாலையில் உள்ள மின் பிறப்பாக்கி இயந்திரத்திற்குத் தேவையான டீசலை தாங்கிகளில் வழங்கியமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரீட்சிப்பின் போது டீசல் தொகை மின் பிறப்பாக்கி இயந்திரத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதாக டீசல் இருப்பு ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் பொறியியலாளர் பிரிவினால் வழங்கப்பட்ட அறிக்கைக்கு அமைய வழங்கப்பட்ட டீசல் தொகை மற்றும் பெற்றுக் கொண்ட டீசல் தொகை என்பவற்றுக்கு இடையில் 58,703 லிட்டர் தொகை தவறவிடப்பட்டிருந்தது.

**திரவ பால் விற்பனை அளவு படிப்படியாகக் குறைவடைந்தமை.**

2020, 2021 மற்றும் 2022 ஆகிய வருடங்களில் உண்மையான திரவ பால் விற்பனை அளவு முறையே 17,891,573 லிட்டர், 20,705,024 லிட்டர், மற்றும் 16,012,534 லிட்டர் ஆகும். திரவ பால் விற்பனை அளவு படிப்படியாகக் குறைவடைந்து இருந்ததுடன் தற்கால சந்தை போக்கு திரவ பால் நுகர்வாக இருந்த போதிலும் அது தொடர்பில் முகாமைத்துவம் கவனத்தினை செலுத்தி திரவ பால் உற்பத்தியினை அதிகரிப்பதில் ஈடுபட்டு இருக்கவில்லை.

**பயன்பாட்டினைக் கருத்தில் கொள்ளாது சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்.**

நிறுவனத்திற்குச் சொந்தமான கொழும்பு தொழிற்சாலைக்கு 2011 ஜனவரி 20 ஆம் திகதி குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 104 மில்லியன் பெறுமதியான யோகட் கலவை இயந்திரம் 12 வருட காலம் தொட்டும் மற்றும் ரூபா. 2 மில்லியன் பெறுமதியான 4 பால் உற்பத்தி இயந்திர உபகரணங்கள் 4 வருடங்கள் தொட்டும் செயல்பாடின்றி காணப்பட்டன. நிறுவனத்திற்கு சொந்தமான திகன பால் தொழிற்சாலையில் காணப்படும் ஸ்டெரிலைஸ்ட் பால் போத்தல் உற்பத்தி செய்யும் இயந்திரம் மற்றும் கொழும்பு பால் தொழிற்சாலையில் ரூபா .15 மில்லியன் பெறுமதியான ஐஸ்கிரீம் கிண்ணம் உற்பத்தி செய்யும் இயந்திரம் என்பன முறையே 71 சதவீதம் மற்றும் 46 சதவீதமான மட்டத்தில் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டன.

**தொழிற்சாலைகளின் மொத்த கொள்ளளவினை பயன்பாட்டிற்கு எடுக்காமை.**

அம்பேவெல பால் தொழிற்சாலையில் பழைய மற்றும் புதிய உற்பத்தி நிலையங்களின் மொத்த கொள்ளளவு 9,300,000 லிட்டராக இருந்த போதிலும் 2020, 2021 மற்றும் 2022 ஓகஸ்ட் வரையில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களுக்கு அமைய பொதுவாக கொள்ளளவு பயன்பாடு முறையே 3,052,858 லிட்டர், 2,675,819 லிட்டர் மற்றும் 1,690,560 லிட்டராக இருந்தத்துடன் அது மொத்த கொள்ளளவில் முறையே 33 சதவீதம், 29

சதவீதம் மற்றும்18 சதவீதம் எனும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**தேசிய கால்நடை அபிவிருத்தி சபை**

**மாடுகளுக்காக தனியார் காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த காப்புறுதி நட்ட ஈடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காமை.**

பசுமாடுகளை இறக்குமதி செய்யும் செயல் திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பசு மாடுகளுக்காக தனியார் காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து காப்புறுதியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் மரணித்த இறக்குமதி செய்யப்பட்ட மாடுகளுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய காப்புறுதி நட்ட ஈடான ரூபா. 19 மில்லியன் தொகை 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்குத் தவறியிருந்தது.

**தேங்காய் ஏலங்களின் போது குறித்த காலத்தினுள் தேங்காய் தொகைகளை அகற்றப்படாததால் அறவிடப்பட வேண்டிய தொகை அறவிடப்பட்டிருக்காமை.**

தேங்காய் அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் நடத்தப்படும் தேங்காய் ஏலங்களின் போது அந்த அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய குறித்த காலப் பகுதியினுள் தேங்காய் தொகைகளை அகற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் தரகர்களிடம் இருந்து 2022 திசெம்பர் 31 ஆம் திகதி சபைக்கு அறவிடப்பட வேண்டி இருந்த 5 வருடங்களுக்கும் அதிகமான நிலுவை மீதி ரூபா. 18 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த மேதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**வேறு நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட வாகனங்கள் ஓடுவதற்கு பயன்படுத்தப்பட்ட போதிலும் அந்த வாகனங்கள அது சட்ட ரீதியான உரிமையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.**

தேசிய கால்நடை அபிவிருத்தி சபையினால் ஏனைய அமைச்சுக்களுக்கு சொந்தமான 42 வாகனங்களும், கொவுல்வெவ தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான 01 வாகனமும், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்துக்கு சொந்தமான 09 வாகனங்களும், இலங்கை கோழி நிர்வாக அபிவிருத்தி தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான 05 வாகனங்களுமாக வேறு நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்கள் ஓடுவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனங்களின் சட்ட ரீதியான உரிமையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

**கால்நடை உணவு உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரம் செயலற்று இருந்தமை.**

கால்நடை அபிவிருத்தி சபையில் 4 பண்ணைகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு வேளைக்கு 3.75 டொன் கால்நடை உணவை உற்பத்தி செய்யக்கூடிய 4 இயந்திரங்கள்

காணப்பட்டன. அதனால் ஒரு மாதத்திற்கு கால்நடை உணவு 900 மெட்ரிக் டொன் என ஒரு வருடத்திற்கு 10,800 மெட்ரிக் டொன் உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்த போதிலும் அந்த இயந்திரம் ஒரு வருட காலமாக செயலற்று காணப்பட்டது.

# காப்புறுதித் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு
    - காப்புறுதி தொழிலில் மொத்தப் பெறுமதி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மிகவும் குறைந்த பெறுமதியை கொண்டிருந்தமை.
    - காப்புறுதி உரித்து பெற்றுள்ளவர்களின் பாதுகாப்பு நிதியத்தின் மிகைக்காக ஆணைக்குழுவினால் வருமான வரி செலுத்தாமை
    - பொதுத் திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் ஊழியர்களுக்காக செயலாற்றல் படி செலுத்துதல்.
    - நிதித் துறையினை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமை.
- தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதிய சபை
    - சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்படாத காப்புறுதி தரகர்களுக்கு மீள்காப்புறுதி நடவடிக்கைகளுக்காக செலுத்தப்பட்டமை.
    - மீள்காப்புறுதி தரகர் கம்பனி உடன்படிக்கை நீக்கப்பட்டதன் அடிப்படையில் மீள்காப்புறுதி மேவுகை இன்றி நிறுவனம் நடாத்திச் செல்லப்பட்டமை.
    - கம்பனிக்கு செலுத்த வேண்டியதாக இனங்காணப்பட்டிருந்த பணம் செலுத்தாதிருந்ததன் அடிப்படையில் அந்த நிறுவனத்தால் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீள்காப்புறுதி தவணைப் பணம் செலுத்தாமை.
    - பெறவேண்டிய மீள்காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி நட்டங்களை பதிவதற்காக சரியான முகாமைத்துவ தகவல் முறைமையொன்று காணப்படாமை.

- **அக்ரஹார மருத்துவ காப்புறுதி**
  - **நலன்கள் செலுத்துவதில் தாமதம்**
  - **மீள்காப்புறுதி செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது ஏற்பட்டிருந்த சட்ட விரோத செயற்பாடுகளினால் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தமை.**
  - **சபை மிகைக் கட்டண வரி சட்டத்தின் பிரகாரம் மிகைக் கட்டண வரியின் கீழ் செலுத்தாதிருந்த போதும் மிகைக் கட்டண வரி செலுத்தியமை.**
- **இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்**
  - **கூட்டுத்தாபனத்தின் பொதுக் காப்புறுதி துறையினதும் ஆயுள் காப்புறுதி துறையினதும் சந்தைப் பங்கு.**

# காப்புறுதித் துறை



இலங்கையின் காப்புறுதித் தொழில்துறையில் காப்புறுதிக் கம்பனி மற்றும் 28 நிறுவனங்கள், 78 காப்புறுதி தரகர்கள், 31 நட்டஈடு செய்பவர்கள் மற்றும் அண்ணளவாக 45,000 அளவிலான காப்புறுதி முகவர்களின் அளவினை உள்ளடக்கி இருந்தது. இந்தத் தொழிலுக்குரிய ஒழுங்குபடுத்தல் நிறுவனமாக 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழில்துறையை முறைமைப்படுத்தும் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட காப்புறுதி ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கின்றது.

மேற்கூறப்பட்ட காப்புறுதித் துறைக்குரிய நிறுவனங்கள் மூலம் பணிகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுதல் தொடர்பான கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான மற்றும் பொருண்மையான கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு

### காப்புறுதி தொழிலில் மொத்தப் பெறுமதி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மிகவும் குறைந்த பெறுமதியை கொண்டிருந்தமை.

காப்புறுதிக் தொழிலின் மொத்தப் பெறுமதி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.4 சதவீதமாக இருந்தது. அது பிராந்தியம் மற்றும் சர்வதேச ரீதியில் பெறப்பட்ட மிகவும் குறைந்த பெறுமதியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமைக்கான காரணங்களை இனங்காண்பதற்கும், தேவையான செயற்பாடுகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை.

### காப்புறுதி உரித்து பெற்றுள்ளவர்களின் பாதுகாப்பு நிதியத்தின் மிகைக்காக ஆணைக்குழுவினால் வருமான வரி செலுத்தாமை

2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் காப்புறுதி உரித்துறுதி பெற்றவர்களிடமிருந்து பாதுகாப்பு நிதியத்தின் அடிப்படையிலான மிகைக்காக ஆணைக் குழுவினால் வருமானவரி செலுத்தவேண்டியிருந்த போதும் 2018 ஆம் ஆண்டு முதல் வருமான வரி செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2018 முதல் 2022 ஆம் ஆண்டு வரை வரி மற்றும் வரிசெலுத்தாமையின் அடிப்படையில் தண்டப்பணமாக ரூபா 909 மில்லியன் தொகை 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டி இருந்தது.

### பொதுத் திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் ஊழியர்களுக்காக செயலாற்றல் படி செலுத்துதல்.

பொதுத்துத் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் 2010 ஆம் ஆண்டு முதல் அடிப்படைச் சம்பளத்தில் செயலாற்றல் ஊக்குவிப்புப் படியாக செலுத்தப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டு முதல் அது மொத்த சம்பளத்தில் ஒன்றரை மாதமாக மாற்றப்பட்டு

செலுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக மொத்த செயலாற்றல் படி செலுத்துதல் 105 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது. மேலும் இந்த செயலாற்றல் படி செலுத்துவதற்குரிய பொருத்தமான செயலாற்றல் மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட மொத்த செயலாற்றல் படிகளின் கூட்டுமொத்தம் ரூபா 50 மில்லியன் ஆகும்.

**நிதித் துறையினை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமை.**

நிதித் துறையின் நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் அ.டொலர் 13.8 மில்லியன் காப்புறுதி துறைக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் பல்வேறு காரணங்களினால் இந்த செயற்திட்டத்திற்குரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாமல் முடிவுறுத்தப்பட்டிருந்தது.

**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதிய சபை**

**சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்படாத காப்புறுதி தரகர்களுக்கு மீள்காப்புறுதி நடவடிக்கைகளுக்காக செலுத்தப்பட்டமை.**

காப்புறுதியினை முறைமைப்படுத்தும் சட்ட விதிகளின் பிரகாரம் எந்தவொரு நபருக்கும் காப்றுதி சபையினால் கையளிக்கப்பட்ட தரகர்களாக பதிவுசெய்யும் சான்றிதழ் வழங்கப்பட்டிருக் குமாயின், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி தரகர்களின் சங்கத்தின் அங்கத்தவர்களாக இருந்தால் தவிர காப்புறுதி தரகர்களாக செயற்படுதல் அல்லது அவ்வாறு சமூகமளிக்க முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருக்கும் போது அந்த விதிகளின் பிரகாரம் பதிவு செய்யப்படாத காப்புறுதி தரகர்களுக்கு 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் மீள்காப்புறுதி செயற்பாடுகளுக்காக ரூபா 1,204 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**மீள்காப்புறுதி தரகர் கம்பனி உடன்படிக்கை நீக்கப்பட்டதன் அடிப்படையில் மீள்காப்புறுதி மேவுகை இன்றி நிறுவனம் நடாத்திச் செல்லப்பட்டமை.**

2023 யூலை 31 ஆம் திகதி வரை 18 மாத காலத்திற்கு மீள்காப்புறுதி செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட தரகர் கம்பனி மூலம் ஒரு தரப்பாக 2022 ஏப்ரல் 21 ஆம் திகதி உடன்படிக்கையிலிருந்து விலகியமையால் அத்திகதி முதல் 2022 ஆகஸ்ட் 01 ஆம் திகதி வரை மீள்காப்புறுதி மேவுகையின்றி நிறுவனம் நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன் அந்தக் காலத்தில் ரூபா 516 மில்லியன் தொகை அந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த தரகர் சங்கத்திற்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமையினால் நிதியம் அதிக ஆபத்தான நிலைமைக்கு உட்பட்டிருந்தது.

**கம்பனிக்கு செலுத்த வேண்டியதாக இனங்காணப்பட்டிருந்த பணம் செலுத்தாதிருந்ததன் அடிப்படையில் அந்த நிறுவனத்தால் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீள்காப்புறுதி தவணைப் பணம் செலுத்தாமை.**

தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் சாதாரண காப்புறுதிக்

கம்பனிக்குச் செலுத்த வேண்டியதாக இனங்காணப்பட்ட கோவை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 72 மில்லின் தொகை உரிய நிறுவனத்திற்கு செலுத்தாமையின் காரணமாக அந்த கம்பனியால் நிதியத்திற்கு செலுத்த வேண்டியதாக மீள்காப்புறுதி தவணைப் பணம் ரூபா 2,046 மில்லியன் தொகை 2022 சனவரி முதல் 2023 மார்ச் 31 வரையான 15 மாத காலம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இதனால் நிதியத்திற்கு இழக்கப்பட்ட வட்டி வருமானம் ரூபா 568 மில்லியன் ஆகும்.

**பெறவேண்டிய மீள்காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி நட்டங்களை பதிவதற்காக சரியான முகாமைத்துவ தகவல் முறைமையொன்று காணப்படாமை.**

பெறவேண்டிய மீள்காப்புறுதி மீதி ரூபா 3,284 மில்லியன் மற்றும் செலுத்த வேண்டிய மீள்காப்புறுதி நட்டங்களைப் பதிவதற்காக சரியான முகாமைத்துவ தகவல்கள் முறைமையொன்று காணப்படாமையினால் மீள்காப்புறுதி தவணை கால ரீதியில் சேகரித்தல் மற்றும் மீள்காப்புறுதி நட்டம் செலுத்துதல் பிரச்சினையுடனான நிலைமையில் காணப்பட்டது.

**அக்ரஹார மருத்துவ காப்புறுதி நலன்கள் செலுத்துவதில் தாமதம்**

காப்புறுதி உரித்து நலன்கள் செலுத்தும் விண்ணப்பப்பத்திரம் கையேற்கப்பட்ட திகதியின் பிரகாரம் ஒழுங்கு முறையாக பதிவுசெய்து கையேற்கப்படாமை, கையேற்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது அதன் சரியான தன்மை பரீட்சித்து கையேற்கப்படாமை, கையேற்கப்பட்டமை எழுத்து மூலம் உறுதிப்படுத்தல் வழங்காமை மற்றும் கணனி முறைமையின் நலிவுகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டில் பிரச்சினைகள் போன்ற விடயங்களின் காரணமாக விண்ணப்பங்களை செயற்திறனாக பரீட்சிக்கும் திட்ட முறைமை ஒன்று மற்றும் செலுத்தும் செயற்பாடுகள் காணப்படாமையினால் அக்கரஹார நலன்களைச் செலுத்துதல் தொடர்பாக நீண்ட தாமதம் காணப்பட்டது. அந்த தாமதம் சராசரியாக 200 நாட்கள் முதல் 240 நாட்கள் வரையிலான காலத்தைக் கொண்டிருந்தது.

**மீள்காப்புறுதி செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது ஏற்பட்டிருந்த சட்ட விரோத செயற்பாடுகளினால் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தமை.**

2016 ஆம் ஆண்டின் போது இயற்கை விபத்து காப்புறுதிகளை மேவுகை செய்வதற்காக அரசாங்கத்தின் நிதியத்தின் கீழ் காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. எனினும் நிதியத்தைப் பயன்படுத்தி மீள்காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது ஏற்பட்டிருந்த சட்டவிரோத செயற்பாடுகளினால் அரசாங்கத்திற்கு ரூபா 4,400 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், உதவி பொது முகாமையாளர் நிதி போன்றவர்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்த போதிலும் நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கோ அல்லது முறையான பரிசோதனை ஒன்றை நடாத்துவதற்கோ முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**சபை மிகைக் கட்டண வரி சட்டத்தின் பிரகாரம் மிகைக் கட்டண வரியின் கீழ் செலுத்தாதிருந்த போதும் மிகைக் கட்டண வரி செலுத்தியமை.**

சபையினால் மிகைக் கட்டண வரியாக ரூபா 1,196 மில்லியன் மீளாய்வாண்டின் போது வேலை நிறுத்த போராட்டம் மற்றும் பயங்கரவாத நிதியத்திலிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும் சபை 2022 இன் 14 ஆம் இலக்க மிகைக் கட்டண வரிச் சட்டத்தின் பிரகாரம் மிகைக் கட்டண வரியின் கீழ் இல்லாதிருந்ததுடன் இதன் காரணமாக நிதியத்திற்கு அந்தப் பணத்தை முதலீடு செய்து பெறக்கூடியதாக இருந்த ரூபா 275 மில்லியன் முதலீட்டு வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

**இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்**

**கூட்டுத்தாபனத்தின் பொதுக் காப்புறுதி துறையினதும் ஆயுள் காப்புறுதி துறையினதும் சந்தைப் பங்கு.**

2021 ஆம் ஆண்டின் போது பொதுக் காப்புறுதி பிரிவின் சந்தைப் பங்கு 18.74 சதவீதம் ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 0.34 சதவீதத்தால் சிறிய அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டிற்காக ஆயுட் காப்புறுதி பிரிவின் சந்தைப் பங்கு 17.62 சதவீதமாக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 1.08 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

# வங்கித் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- வங்கித் துறையின் சொத்துக்கள
- வங்கித் துறையின் பொறுப்புக்கள்
- வங்கித் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கட்டமைப்பு
- வங்கித் துறையின் வைப்புக்களின் கட்டமைப்பு
- இலங்கை மத்திய வங்கி
    - காப்பீடுகள் இல்லாது மீள் விற்பனை கொடுக்கல் வாங்கல்களில் முதலீடு செய்தல் காரணமாக நட்டம் ஏற்பட்டிருந்தமை.
- இலங்கை வங்கி
    - 2022 ஆம் ஆண்டில் நிதி பெறுபேறுகளில் பின்னடைவு.
    - ஆகக் கூடிய 10 செயலற்ற கடன் மீதிகளின் கூட்டுத் தொகை மொத்தக் கடன் மற்றும் முற்பணங்களின் மீதிகள் கவனத்தில் கொள்ளத்தக்க அளவு பெறுமதியினைக் கொண்டிருந்தமை.
- மக்கள் வங்கி
    - அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் மற்றும் முற்பணம் என்பன வங்கியின் மொத்தக் கடன் மற்றும் முற்பணங்களில் குறிப்பிடத்தக்களவு பகுதியினைக் கொண்டுள்ளது.
    - எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றினை எட்டாத காரணத்தால் தரவுகளைக் களஞ்சியப்படுத்தும் செயல்திட்டம் இடை நடுவில் நிறுத்தப்பட்டமை.
- தேசிய சேமிப்பு வங்கி
    - வங்கியின் வட்டி வருமானம் அதிகரித்தமையுடன் ஒப்பீட்டளவில் வட்டி செலவும் அதிகரித்தமை.
    - வங்கியின் அரச பிணையங்களிலான முதலீடு மொத்த முதலீடுகளில் குறிப்பிடத்தக்க பெறுமதியாக இருத்தல்.
    - மொத்த செயலற்ற கடன் மற்றும் முற்பணங்கள் குறிப்பிடத்தக்களவு பெறுமதியினால் அதிகரித்தல்.
    - தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் கீழ் வராத துறைக்காக வங்கி மூலம் கடன் வழங்குதல்.

- வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
    - ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எதிராக வழங்கப்பட்டுள்ள கடன் மற்றும் முற்பணம்.
    - தகவல் ஒழுங்கமைப்பை கையகப்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான 5 கட்டுப்பாடுகள் வங்கியினால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.
- பிரதேச அபிவிருத்தி வங்கி
    - உழைக்கும் போது செலுத்தும் வரிக்குரிய ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து குறைக்கப்படாது செலுத்தி இருந்தமை.
- அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி
    - கடந்த வருட நிதி பெறுபேற்றுக்கு நேரொத்து நிதி பெறுபேறு குறைவடைந்தமை.
    - செயலற்ற கடன் மீதி

# வங்கித் துறை

சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடியில் எழுந்த சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு 2022 ஆம் ஆண்டின் நிதி ஒழுங்கமைப்பிற்கு இயலுமானதாக இருந்தது. அனைத்து கடன் தரப்படுத்தல் நிறுவனத்தினால் இறையாண்மை கடன் தரப்படுத்தலை குறைத்தல், வங்கித் துறையினை அரச துறையில் அதிகமாக வெளிப்படுத்துதல், பொருளாதாரம் சுருக்கம் அடைதல், கடும் அன்னிய செலாவணி தட்டுப்பாடு மற்றும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருதரப்பு மற்றும் வணிகக் கடன்களின் அடிப்படையில் வெளிநாட்டு கடன் செலுத்துதலைத் தற்காலிகமாக இடை நிறுத்துதல் தொடர்பான அறிவித்தலுடன் உயர்தரத்தில் காணப்பட்ட பணவீக்கம், நிதித்துறையின் செயல்பாடுகள் தொடர்பில் இதற்கு முன்னர் இடம்பெற்றிருக்காத கடும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தி இருந்ததுடன் நிதி ஒழுங்கமைப்பின் தாக்குப் பிடிக்க கூடிய திறனும் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. எவ்வாறு இருப்பினும், கடன்களின் தரம் தொடர்ச்சியாக வீழ்ச்சி அடைதல், பணப்புழக்கத்தின் அடிப்படையில் ஏற்பட்ட கடும் அழுத்தம், உயர் கடன் குறைபாடு காரணமாக இலாபம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை மற்றும் எதிர்பாரா இழப்புகளை உள்வாங்குவதற்கு மூலதன இடையங்களின் சரிவு காரணமாக எழுந்த சவால்களுக்கு மத்தியிலும் 2022 ஆம் வருடத்தில் வங்கித் துறையினை நிலையாக பேணிச் செல்லக் கூடியதாக இருந்தது.

### வங்கித் துறையின் சொத்துக்கள்

2022 ஆம் ஆண்டு இறுதியில் நிதித் துறையில் மொத்த சொத்துக்களில் 61.9 சதவீதத்திற்கான உரிமையை கொண்டு வங்கித் துறையானது, நிதித் துறையில் தலைமைத்துவத்தைக் கொண்டிருந்தது. வங்கித் துறையின் சொத்துக்கள் 2022 ஆம் ஆண்டில் ரூபா. 2.6 ட்ரில்லியனால் அதிகரித்திருந்ததுடன் 2021 ஆம் ஆண்டு இறுதியில் அறிக்கை இடப்பட்ட 15.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும்போது 15.4 சதவீத அதிகரிப்பைக் காட்டி 2022 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா. 19 ட்ரில்லியனை விஞ்சியுள்ளது. மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இலங்கை ரூபாய் ஐக்கிய அமெரிக்க டொலருடன் ஒப்பிடும்போது 44.1 சதவீதத்தினால் மதிப்பிழப்பு ஏற்பட்டிருந்ததுடன் அதன் பெறுபேறாக வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்படும் சொத்துக்களில் அதிகரிப்பு ஏற்பட்டது. எவ்வாறு இருப்பினும், காணப்பட்ட கடும் நிதிக் கொள்கைகளை சந்தித்து 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட 14.5 சதவீத கடன் மற்றும் முற்பணங்களின் அதிகரிப்பு 2022 ஆம் ஆண்டில் 5.7 சதவீதம் வரையில் வீழ்ச்சி அடைந்தது. இதற்கிடையில் முதலீடுகள் 2021 ஆம் ஆண்டு இறுதியில் 16.4 சதவீதம் தொடக்கம் 2022 ஆம் ஆண்டு இறுதி வரையில் 19.4 சதவீதம் வரையில் அதிகரித்திருந்தது.

### வங்கித் துறையின் பொறுப்புக்கள்

நிதி வழங்குதலில் பிரதான மூலமாக வைப்புகளே தொடர்ச்சியாகக் காணப்பட்டதுடன் அது 2022 ஆம் ஆண்டு

இறுதி வரையில் மொத்த பொறுப்புகளில் 78.8 சதவீதமாக இருந்ததுடன், கடன் பெறும் மொத்த பொறுப்புகளில் 9.6 சதவீத பங்களிப்பாக இருந்தது. 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த வைப்புக்களின் அதிகரிப்பிற்கு கால ரீதியான வைப்பு முக்கியமான பங்களிப்பைக் கொண்டிருந்ததுடன் மொத்த வைப்புக்களில் கால ரீதியான வைப்பு கொண்டிருந்த பங்களிப்பு 2022 ஆம் ஆண்டில் 61.0 சதவீதம் தொடக்கம் 2022 ஆம் ஆண்டு இறுதியில் 67.9 சதவீதம் வரையில் அதிகரித்துச் சென்றுள்ளது. இதற்கிடையில், 2022 ஆம் ஆண்டு இறுதியில் மொத்த வைப்புக்களில் சேமிப்பு வைப்பு மற்றும் கால ரீதியான வைப்பு என்பன முறையே 24.3 சதவீதம் மற்றும் 6.9 சதவீதம் ஆகும்.

வங்கித் துறையில் மொத்த கடன் பெறுகை 2021 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ரூபா. 462,800 மில்லியன், அதாவது 27.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டில் ரூபா. 300,400 மில்லியன் அதாவது 13.8 சதவீதம் வீழ்ச்சியைக் காட்டியது.

**வங்கித் துறையின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கட்டமைப்பு**

| விடயம் | 2021 (அ) | | 2022 (ஆ) | | வேறுபாடு (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | சதவீதம் (%) | ரூபா மில்லியன் | சதவீதம் (%) | 2021 (அ) | 2022 (ஆ) |
| **சொத்துக்கள்** | | | | | | |
| கடன் மற்றும் முற்பணங்கள் | 10,726.7 | 63.8 | 11,337.9 | 58.4 | 14.5 | 5.7 |
| முதலீடு | 4,968.5 | 29.5 | 5,934.3 | 30.6 | 16.4 | 19.4 |
| ஏனைய (இ) | 1,131.0 | 6.7 | 2,144.3 | 11.0 | 15.0 | 89.6 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வைப்புகள் | 12,879.2 | 76.5 | 15,299.1 | 78.8 | 13.3 | 18.8 |
| கடன் பெறுவனவுகள் | 2,172.9 | 12.9 | 1,872.5 | 9.6 | 27.1 | -13.8 |
| முதலீட்டு நிதியங்கள் | 1,348.3 | 8.0 | 1,593.4 | 8.2 | 13.1 | 18.2 |
| ஏனையவை | 425.8 | 2.5 | 651.5 | 3.4 | 20.4 | 53.0 |
| **மொத்த சொத்துக்கள் / பொறுப்புகள்** | **16,826.2** | **100.0** | **19,416.6** | **100.0** | **15.1** | **15.4** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்ட

(ஆ) தற்காலிக

(இ) காசு மற்றும் வங்கி மீதிகள், வைப்புக்கள், மீள் விற்பனை உடன்படிக்கைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் உள்ளடங்கும்

அட்டவணை : 07

## வங்கித் துறையின் வைப்புக்களின் கட்டமைப்பு

| விடயம் | 2021 (அ) | | 2022 (ஆ) | | வேறுபாடு (%) | |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | சதவீதம் (%) | ரூபா மில்லியன் | சதவீதம் (%) | 2021 (அ) | 2022 (ஆ) |
| கேள்வி வைப்புக்கள் | 888.0 | 6.9 | 1,060.0 | 6.9 | 25.9 | 19.4 |
| சேமிப்பு வைப்புக்கள் | 4,011.8 | 31.1 | 3,713.0 | 24.3 | 19.7 | -7.4 |
| நிலையான வைப்பு | 7,860.4 | 61.0 | 10,393.0 | 67.9 | 8.6 | 32.2 |
| ஏனைய வைப்புக்கள் | 118.9 | 0.9 | 133.2 | 0.9 | 80.0 | 12.0 |
| **மொத்த வைப்புக்கள்** | **12,879.2** | **100.0** | **15,299.1** | **100.0** | **13.3** | **18.8** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்ட
(ஆ) தற்காலிக

அட்டவணை 08

வங்கித் துறைக்கு சொந்தமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதி நிறுவனங்களின் மூலம் தமது செயல்பாடுகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாகக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான மற்றும் குறிப்பிடத்தக்க கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கம் செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

### இலங்கை மத்திய வங்கி

**காப்பீடுகள் இல்லாது மீள் விற்பனை கொடுக்கல் வாங்கல்களில் முதலீடு செய்தல் காரணமாக நட்டம் ஏற்பட்டிருந்தமை.**

குறிப்பிட்ட முதன்மை விற்பனையாளருடன் பாதுகாப்புகள் இல்லாது மீள் விற்பனை கொடுக்கல் வாங்கல்களில் முதலீடு செய்த காரணத்தினால் வங்கியில் நான்கு திணைக்களங்களினால் முகாமைத்துவம் செய்யப்பட்ட நிதிகளுக்கு 2018 திசெம்பர் 10 ஆம் திகதியின் ரூபா. 2,586 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. 2020 செப்டம்பர் 18 ஆம் திகதியில் அந்த முதன்மை விற்பனையாளரிடம் இருந்து கிடைக்க வேண்டிய மீள் வகைப்படுத்தப்பட்ட முதலீடுகளின் பெறுமதி ரூபா. 2,954 மில்லியன் ஆகும். அந்த கிடைக்க வேண்டிய தொகையைக் குறித்த முதன்மை விற்பனையாளரிடம் இருந்து அறவிடுவதற்கு வங்கி சட்ட ரீதியான நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது.

### இலங்கை வங்கி

**2022 ஆம் ஆண்டில் நிதி பெறுபேறுகளில் பின்னடைவு.**

மீளாய்வாண்டில் செயல்பாட்டு பெறுபேறு ரூபா. 31,972 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் இலாபம் ரூபா. 37,590 மில்லியன் ஆகும். அதற்கு அமைய நிதி பெறுபேற்றில் ரூபா. 5,618

மில்லியன் பின்னடைவு அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவுக்கு பிரதானமாக முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது வட்டி செலவு 121 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை மற்றும் கடன் மற்றும் ஏனைய இழப்புகளுக்கான சேத கட்டணம் 99 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை என்பன காரணமாக இருந்தது.

**கடன் மற்றும் ஏனைய இழப்புகளுக்கான சேதக் கட்டண அதிகரிப்பு.**

கடன் மற்றும் ஏனைய இழப்புக்களுக்கான சேத கட்டணம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் ரூபா. 43,422 மில்லியனால் அதாவது 99.3 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2022 ஆம் ஆண்டு இலங்கையில் நிலவிய சாதகமற்ற பொருளாதார நிலைமையின் மத்தியில், இலாபத் தன்மை குறைவான சேவைகள் மற்றும் உற்பத்திகள் முடங்கியமை உள்ளிட்ட வாடிக்கையாளர் பல்வேறு பொருளாதார பின்னடைவுகளுக்கு முகம் கொடுத்தல் மற்றும் அரசாங்கம் மற்றும் அரச முயற்சிகளுக்கு வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட கடன் தொகை மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் அடிப்படையில் செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் அதிகரித்தல் என்பன இதற்கு பிரதான ரீதியில் காரணங்களாக இருந்தன.

**ஆகக் கூடிய 10 செயலற்ற கடன் மீதிகளின் கூட்டுத் தொகை மொத்தக் கடன் மற்றும் முற்பணங்களின் மீதிகள் கவனத்தில் கொள்ளத்தக்க அளவு பெறுமதியினைக் கொண்டிருந்தமை.**

2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் ஆகக் கூடிய 10 செயலற்ற கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 33,784 மில்லியனாக இருந்ததுடன் அது அத்தினத்தின் மொத்த கடன் மற்றும் முற்பண மீதிகளின் 1.45 சதவீதம் ஆகும்.

## மக்கள் வங்கி

**அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் மற்றும் முற்பணம் என்பன வங்கியின் மொத்தக் கடன் மற்றும் முற்பணங்களில் குறிப்பிடத்தக்களவு பகுதியினைக் கொண்டுள்ளது.**

2022 ஆம் ஆண்டு இறுதி வரையில் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் மற்றும் முற்பணம் என்பன ரூபா. 871,619 மில்லியனாக உள்ளதுடன் அது 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் வங்கியின் மொத்தக் கடன் மற்றும் முற்பணங்களில் 45.5 சதவீதமாகும். 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முதலீடு மற்றும் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஏனைய பெறுகைகள் ரூபா. 1,024,096 மில்லியனாக உள்ளதுடன், அதற்கு அமைய வங்கியின் மொத்த சொத்துக்களில் 63.79 சதவீதம் அரசாங்கம் மற்றும் அரசாங்கத்திற்கு

சொந்தமான தொழில் முயற்சிகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

**எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றினை எட்டாத காரணத்தால் தரவுகளைக் களஞ்சியப்படுத்தும் செயல்திட்டம் இடை நடுவில் நிறுத்தப்பட்டமை.**

தரவுகளைக் களஞ்சியப்படுத்தும் செயல் திட்டத்திற்காக 2022 மே 30 ஆம் திகதி வரையில் ரூபா.402 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றினை எட்டாத காரணத்தால் செயல்திட்டத்தினை நிறுத்துவதற்கு நிறைவேற்று செயல் குழு தீர்மானித்திருந்தது.

## தேசிய சேமிப்பு வங்கி

**வங்கியின் வட்டி வருமானம் அதிகரித்தமையுடன் ஒப்பீட்டளவில் வட்டி செலவும் அதிகரித்தமை.**

குறைந்த வட்டி வீதத்தில் காணப்பட்ட காலத்தில் வங்கியினால் அதிகளவு கடன் மற்றும் முற்பணத் தொகை நிலையான வட்டி வீதத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்தது என்பதால் அந்தக் கடன் மற்றும் முற்பணத்தை மீண்டும் விலையிட வங்கிக்கு முடியாது இருந்தமையும் தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கியின் மொத்த வைப்பு மற்றும் அதன் அடிப்படையிலான வட்டியில் 60 சதவீதம் அரச பிணையங்களில் முதலீடு செய்யப்பட வேண்டும் என்பதால் அதிக பலனை எதிர்பார்த்து நீண்ட கால திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகளும் மீண்டும் விலையீடு செய்யப்படவில்லை என்பதனால் 2022 ஆம் ஆண்டில் வங்கியின் வட்டி செலவு அதிகரித்ததுடன் ஒப்பீட்டளவில், வட்டி வருமானம் அதிகரிக்கவில்லை. மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து காரணங்களினதும் பெறுபேறாக 2022 ஆம் ஆண்டில் வங்கியின் நிகர வட்டி வருமானம் 40.6 சதவீதத்தினால் குறைவடைந்து இருந்தது.

**வங்கியின் அரச பிணையங்களிலான முதலீடு மொத்த முதலீடுகளில் குறிப்பிடத்தக்க பெறுமதியாக இருத்தல்.**

2022 ஆம் ஆண்டில் வங்கி அரச பிணையங்களில் ரூபா. 822,398 மில்லியன் முதலீடு செய்திருந்ததுடன் இது கடந்த வருடத்தில் ரூபா. 835,444 மில்லியன் ஆகும். அரச பிணையங்களிலான முதலீடு, வங்கியின் மொத்த முதலீட்டில் சுமார் 85 சதவீதமாக உள்ளதுடன் இது மொத்த சொத்துக்களில் சுமார் 50.9 சதவீதமாகும்.

**மொத்த செயலற்ற கடன் மற்றும் முற்பணங்கள் குறிப்பிடத்தக்களவு பெறுமதியினால் அதிகரித்தல்.**

வங்கியின் மொத்த செயலற்ற கடன் வீதம் 2021 ஆம் ஆண்டில் 2.97 சதவீதம் தொடக்கம் 2022 ஆம் ஆண்டில் 3.99 சதவீதம் வரையில் அதிகரித்து இருந்ததுடன் மொத்த செயலற்ற கடன் மற்றும் முற்பணங்களில் சேதத்திற்காக ஒதுக்கப்பட்ட வீதம் கடந்த வருடத்தில் 73.2 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் 75.2 சதவீதம் வரையில் அதிகரித்திருந்தது.

**தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் கீழ் வராத துறைக்காக வங்கி மூலம் கடன் வழங்குதல்.**

2022 திசெம்பர் 31 ஆம் திகதியில், மொத்த கடன் மற்றும் முற்பணங்களில் ரூபா. 4,178 மில்லியன் வெளிநாட்டுக் கடனாக உள்ளதுடன் இந்த மொத்தக் கடன் தொகையில், 2018 ஆம் ஆண்டில் மாலைதீவு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த அமெரிக்க டாலர் 9 மில்லியன் மற்றும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் அதன் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்ட நிலுவை வட்டி என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டில் சுற்றுலா கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனத்திற்கு நிர்மாண நடவடிக்கைகளுக்காக கடன் வழங்குதல், தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் கீழ் வராத ஓர் துறையாகும்.

**வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி**

**ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எதிராக வழங்கப்பட்டுள்ள கடன் மற்றும் முற்பணம்.**

ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எதிராக 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் வழங்கப்பட்டிருந்த மொத்த நிலுவை கடன் பெறுமதி ரூபா. 13,777 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா. 9,100 மில்லியன் தொகை செயலற்றதாக வகைப்படுத்தப்பட்டு இருந்ததுடன் அதன் மொத்த நிலுவையானது கடன் மற்றும் முற்பண மீதியில் 66.05 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேலும், நீகு நிதியம் ∴ கடன் ஒழுங்கமைப்பில் அறிக்கைகள் அழிக்கப்பட்ட காரணத்தால் 2022 காலப் பகுதிக்குரிய நீகு வாடிக்கையாளர் 70 பேருடைய மொத்த நிலுவை தொகை ரூபா. 3 மில்லியனை செலுத்த மத்திய வங்கியினால் நிராகரித்து இருந்தது.

**தகவல் ஒழுங்கமைப்பை கையகப்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான 5 கட்டுப்பாடுகள் வங்கியினால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.**

வங்கி சட்டத்தின் அறிவுரைகளுக்கு அமைய, அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள் 2015 ஜுலை 01 ஆம் திகதி தொடக்கம் செயல்படுத்தப்படும் வகையில் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கு அடிப்படை பாதுகாப்பு தரத்தினை நடைமுறைப்படுத்துதல் வேண்டும். எவ்வாறு இருப்பினும், தகவல் ஒழுங்கமைப்பை கையகப்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான 5 கட்டுப்பாடுகள் வங்கியினால் பின்பற்றப்படவில்லை. மேலும், 14 பாதுகாப்பு பிரிவில் 95 கட்டுப்பாடுகளில், 2022 ஆம் ஆண்டில் வங்கி 45 கட்டுப்பாடுகளுக்கு மட்டுமே இணங்கி இருந்தது.

**பிரதேச அபிவிருத்தி வங்கி**

**உழைக்கும் போது செலுத்தும் வரிக்குரிய ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து குறைக்கப்படாது செலுத்தி இருந்தமை.**

வருமான வரி செலுத்துவதற்கு கடமைப்பட்டுள்ள ஒவ்வொரு ஊழியர்களினதும் விருப்பின் பேரில் தொழிலில் இருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் இலாபங்களில்

அனைத்து தொழில் வழங்குநரும் வருமான வரியைக் குறைத்தல் வேண்டும். எவ்வாறு இருப்பினும், 2016 ஏப்ரல் 29 ஆம் திகதியிடப்பட்ட அரச முயற்சியாளர் சுற்றறிக்கைக்கு முரணாக, வங்கியால் 2022 ஆம் ஆண்டுக்கு ரூபா. 43 மில்லியன் உழைக்கும் போது செலுத்தும் வரிக்குரிய ஊழியர்களின் சம்பளத்திலிருந்து குறைக்கப்படாது வங்கியால் செலுத்தப்பட்டிருந்தது.

**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி**

**கடந்த வருட நிதி பெறுபேற்றுக்கு நேரொத்து நிதி பெறுபேறு குறைவடைந்தமை.**

மீளாய்வாண்டில் வருமான வரி செலுத்துவதற்கு முன்னர் நட்டம் ரூபா 89 மில்லியனாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தில் லாபம் ரூபா. 405 மில்லியன் ஆகும். அதற்கமைய நிதி பெறுபேறு ரூபா. 494 மில்லியன் குறைவாக இருந்தது. நிகர வட்டி வருமானத்துடன் ஒப்பிடும் போது 16 சதவீதத்தினால் குறைவடைந்திருத்தல் இதற்குப் பிரதான காரணமாக இருந்தது.

**செயலற்ற கடன் மீதி**

2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் ஆகக் கூடிய 10 செயலற்ற கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 175 மில்லியனாக இருந்ததுடன் அது அத்தினத்திலான மொத்த கடன் மற்றும் முற்பண மீதியில் 0.3 சதவீதம் ஆகும். 2022 திசெம்பர் 31 திகதியில் மொத்த செயலற்ற கடன்களில் தனியார் கடன் 24 சதவீதமும், வீட்டு கடன் 17 சதவீதமும், ஊழியர் சேமலாப நிதியக் கடன் 55 சதவீதமும் ஆகும்.

# அரச வருமானத் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- **உள்நாட்டு இறைவரித் திணைக்களம**
    - **திருத்தப்பட்ட அரச வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம்**
    - **அரச வருமானம் சேகரிக்கப்பட்டபோது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருமான சதவீதம் பெறப்படாமை**
    - **நேரடி மற்றும் மறைமுக வரிகளின் கலவை எதிர்பார்த்த மட்டத்தை அடையாமை**
    - **வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் ஒழுங்கமைப்பின் பராமரிப்பு பணிகளுக்காக மேலதிக கிரயமொன்று செலவிடுவதற்கு நேரிட்டமை**
    - **தகவல் ஒழுங்கமைப்பின் மூலம் இனங்காணப்பட்ட நிலுவை வருமானம் அறவிடப்படாமை**
    - **மூன்றாம் தரப்பினரால் சேகரிக்கப்பட்ட வரி வருமானத்தை சரியான நேரத்தில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை.**
- **இலங்கைச்சுங்கம்**
    - **தவறான தீர்மானத்தின் அடிப்படையில் நட்டம் செலுத்துவதற்கு நேரிட்டமை**
    - **விசாரணைகள் விரைவாக முடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை.**
    - **மீள் ஏற்றுமதிக்கு திட்டமிடப்பட்ட தேங்காய் எண்ணெய் உள்நாட்டு சந்தையில் விற்பனை செய்யப்பட்டமையால் அரச வருமானம் இழக்கப்பட்டமை**

- மதுவரித் திணைக்களம்
    - மதுபானம் மற்றும் கள்ளு உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் வடிசாலைகளிடமிருந்து அறவிடவேண்டிய மதுவரி வருமானம்
    - பாதுகாப்பு ஸ்டிக்கர் முகாமைத்துவ ஒழுங்கமைப்பில் காணப்பட்ட பலவீனங்கள்
    - மதுவரி திணைக்களத்திற்கு புதிய மறுசீரமைக்கப்பட்ட வருமான நிர்வாக ஒழுங்கமைப்பொன்றை அறிமுகப்படுத்துவதற்காக நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்படாமை
- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்
    - வரவு செலவுத்திட்ட மதிப்பீடு நியாயமற்ற முறையில் மற்றும் முறையான எதிர்வு கூறல் மற்றும் பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி மாற்றப்பட்டிருந்தமை.
    - ஆடம்பர வருமானம் சேகரிப்பதற்கு தவறியமை
    - மின் மோட்டார் செயற்திட்டம் செயற்படுத்தப்படாமை
- தேசிய லொத்தர் சபை
    - சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதி ஒருங்கிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமை
    - அரசாங்கத்தின் சார்பாக நடாத்தப்படுகின்ற அனைத்து லொத்தர் சீட்டு வருமானம் குறைவாக அனுப்பப்பட்டிருந்தமை
    - கோரப்படாத பரிசுத் தொகையை ஒருங்கிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமை
- தேசிய லொத்தர் சபை

# அரச வருமானத் துறை

2022 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டின் ஆரம்ப மதிப்பீட்டின்படி, அரச வருமானம் ரூபா 2,213 பில்லியனாகவும், ஆண்டின் இடைக்கால பாதீட்டின்படி, அது ரூபா 2,084 பில்லியனாகவும் இருந்தது. கடந்த ஆண்டில் அரச வருமானம் ரூபா 1,961 பில்லியனாக இருந்தமையால் முந்தைய ஆண்டை விட அரச வருமானம் ஆரம்ப பாதீட்டு மதிப்பீடு மற்றும் இடைக்கால பாதீட்டின்படி முறையே ரூபா 252 பில்லியன் மற்றும் ரூபா 123 பில்லியனால். அதாவது 12.85 சதவீதத்தால் மற்றும் 6.27 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டு அரசின் பாதீடு மதிப்பிப்பட்டுள்ளது. ஆனால் 2022 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட அரச வருமானம் ரூபா 1,999 பில்லியன் ஆகும். இதன்படி, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டின் ஆரம்ப மதிப்பீடு மற்றும் 2022 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால பாதீட்டு வருமான மதிப்பீடு ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில், இந்த வீழ்ச்சியானது முறையே ரூபா 214 பில்லியன் மற்றும் ரூபா 85 பில்லியன் ஆக இருந்தது.

நிதிப்பிரமாணம் 85(2)(ஆ) இன் பிரகாரம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வருமான மதிப்பீட்டை திருத்துவதற்காக அரச நிதிக் கொள்கைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடுதல் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளமையால், பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வருமான மதிப்பீடொன்று பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி திருத்தப்படுவதற்கான வாய்ப்பு வழஙகப்பட்டிருப்பதால் வருமானம் யதார்த்தமாக மதிப்பிடப்படுவதில் பொறுப்புக்கூறல் பலவீனமடைந்துள்ளது.

வருமானத்தை சேகரிக்கின்ற முக்கிய நிறுவனங்களான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம், மதுவரித் திணைக்களம் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டியிருந்த நிலுவை வருமான மீதியின் கூட்டுத்தொகை ரூபா 971,730 மில்லியன் ஆக இருந்தது.

வருமானத்தை சேகரிக்கின்ற முக்கிய நிறுவனங்களின் வருமான மதிப்பீடுகள் மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானம் தொடர்பான விபரங்கள் காட்டப்படுகின்றது.

### உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

வரி செலுத்துவதில் தன்னார்வ இணக்கத்தை ஊக்குவிப்பதன் மூலம் வரிக் கொடுப்பனவுகளைத் தவிர்த்தல் மற்றும் தவிர்ப்பதைத் தடுப்பதன் மூலம் வரிச் சட்டங்கள் மற்றும் ஏனைய அதிகாரச் சட்டங்களுக்கு உட்பட்டு வரி அறவிடுதல், வரி மற்றும் தொடர்புடைய சட்டங்களை நியாயமாகவும் சமமாகவும், மரியாதையாகவும் செயல்படுத்துவதன் மூலம் வரி முறைமையின் நேர்மை மற்றும் செயல்திறனில் பொதுமக்களின் நம்பிக்கையைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் உள்நாட்டு

இறைவரித் திணைக்களத்தின் செயற்பணியாக இருப்பதுடன் ,அதற்காக ஆணையாளர் நாயகத்தின் விடயப்பரப்பிற்குள் வருகின்ற அனைத்து அதிகாரச் சட்டங்களையும் நிர்வகித்தல், அரச வரி வருவாமானத்தை சேகரித்தல் மற்றும் அரச நிதிக் கொள்கைகளை செயல்படுத்துவது தொடர்பான கருத்துக்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன.

**திருத்தப்பட்ட அரச வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம்**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2022 ஆம் வருடத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 1,067,807 ஆக இருந்ததுடன் அது மீண்டும் ரூபா 1,131,012 வரை திருத்தப்பட்டு அதில் ரூபா 1,045,189 ஆன வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது.

**அரச வருமானம் சேகரிக்கப்பட்டபோது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருமான சதவீதம் பெறப்படாமை**

2022 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் மொத்த திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின்படி, 54 சதவீதம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து சேகரிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 2022 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் அரசாங்கத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த வருமானத்தில் 50 சதவீதமாகும்.

**நேரடி மற்றும் மறைமுக வரிகளின் கலவை எதிர்பார்த்த மட்டத்தை அடையாமை**

2022 ஆம் ஆண்டில், அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் மறைமுக வரிகளின் விகிதம் 70 சதவீதமாக இருந்ததாகவும் தற்போதும் 30:70 ஆக காணப்படுகின்ற நேரடி மற்றும் மறைமுக வரிகளின் கலவையானது, மிகவும் விரும்பத்தக்க கலவையாக 60:40 என்ற அளவை எட்டுவதில் இலங்கையின் கொள்கை சீர்திருத்தங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தற்போதைய வரிக் கொள்கை சீர்திருத்தங்கள் மறைமுக வரிவிதிப்பு மூலம் அதிக வரி வருமானமொன்றை எதிர்பாாப்பதுடன், அரசாங்கத்தினால் குறுகிய கால வருமானத்தை உயர்ததுவதற்கு மறைமுக வரிகள் பயன்படுத்தப்பட்டது. எனவே, அரசாங்கத்தின் உள்நாட்டு வரி சேகரிப்பாளர் என்ற வகையில் நேரடி வரி மற்றும் மறைமுக வரி விகிதத்தை 60:40 ஆக அடைந்து கொள்வது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சவாலொன்றாக இருந்தது.

**வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் ஒழுங்கமைப்பின் பராமரிப்பு பணிகளுக்காக மேலதிக கிரயமொன்று செலவிடுவதற்கு நேரிட்டமை**

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வருமானம் சேகரித்தலின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் ஒழுங்கமைப்பை (சுயுஆஐளு) நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக 2022 செப்டம்பர் வரையில் ரூபா. 7,153

மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. மேலும் சுயுஆஜளு ஒழுங்கமைப்பை தாபிப்பதற்காக பேணப்பட்டு வரும் செயல்திட்ட அலுவலகத்தில் கொடுப்பனவுகள் தொடர்பான மாதிரி பரீட்சிப்பிற்கு அமைய திணைக்களத்தின் 71 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் அண்ணளவாக ரூபா. 3 மில்லியன் வீதம் தொகையொன்று சம்பளத்திற்கு மேலதிகமாக செலுத்தப்படடிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் தொடக்கம் 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் வரையான காலப் பகுதிக்கு உரிய சுயுஆஜளு செயற்திட்ட பதவியணியினருக்கு ரூபா. 44 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. ஆனால் ஒழுங்கமைப்பின் ஐ ஆம் கட்டத்தை கையேற்பதற்கு தேவையான பதவியணியொன்று நிறுவப்படாத காரணத்தால் ஒழுங்கமைப்பின் பராமரிப்பு பணிகளுக்காக தொர்ந்தும் மேலதிக கிரயமொன்று செலவிடுவதற்கு நேரிட்டிருந்தது.

**தகவல் ஒழுங்கமைப்பின் மூலம் இனங்காணப்பட்ட நிலுவை வருமானம் அறவிடப்படாமை**

2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் திணைக்களத்தின் நிலுவை வரி அறிக்கையின் பிரகாரம் நிலுவை வரி மற்றும் தண்டம் வட்டி வருமானமாக சுயுஆஜளு மற்றும் டுநபயஉல கணினி ஒழுங்கமைப்பிற்கு அமைய, முறையே ரூபா 671,774 மில்லியன் மற்றும் ரூபா 232,568 மில்லியனுமாக ரூபா 904,342 மில்லியன் ஆகும்.இது மொத்த நிலுவை வருமானத்தில் ரூபா 740,917 மில்லியன் ஆன அறவீடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்ததடன், ரூபா 163,425 மில்லியன் மட்டும் அறவிடக்கூடியதாக இனம் காணப்பட்டிருந்தது. அவ்வாறு அறவிடக்கூடியதாக இனம் காணப்பட்டிருந்த வருமான நிலுவையில், ரூபா 86,802 மில்லியன் அதாவது 53 சதவீதம் 3 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக காணப்பட்ட மீதியொன்றாகும். இந்நிலைமையால் திணைக்களத்தின் அமைக்கப்பட்டுள்ள செயல்பாடுகளுக்குரிய தீர்மானிக்கப்பட்ட செயலாற்றுகையை அடைவதற்கு முடியாதிருந்தது.

**மூன்றாம் தரப்பினரால் சேகரிக்கப்பட்ட வரி வருமானத்தை சரியான நேரத்தில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை.**

அறவிடக்கூடியதாக அடையாளம் காணப்பட்ட மொத்த நிலுவை வருமானத்தில் ரூபா 114,294 மில்லியன், அதாவது 70 சதவீதம் பெறுமதி சேர் வரிகள் மற்றும் தண்டப்பணங்களாகவும் அதன் பிரகாரம் மூன்றாம் தரப்பினரால் சேகரிக்கப்பட்ட வரி வருமானம் உரிய நேரத்தில் அனுப்பப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

**இலங்கைச்சுங்கம்**

இலங்கை சுங்கத்தின் 2022 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 713,426 மில்லியன் ஆக இருந்ததுடன் அது மீண்டும் ரூபா 513,341 வரை திருத்தப்பட்டு ரூபா 523,346 மில்லியன் ஆன வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது.

2022 திசெம்பர் 31 இல் அறவிடவேண்டிய மொத்த நிலுவை வரி வருமானம் ரூபா 61,254 மில்லியன் ஆக அன்றைய திகதியில் மொத்த நிலுவை வரி வருமானத்தின் ரூபா 23,230 மில்லியன் அதாவது சதவீதம் இறக்குமதி நிலுவை வரியும், ரூபா. 16,076 மில்லியன் அதாவது 26 சதவீதம் விசேட வணிகப் பொருட்கள் வரியும், ரூபா 10,477 மில்லியன் அதாவது 17 சதவீதம் துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரியும், ரூபா 6,138 மில்லியன் அதாவது 10 சதவீதம் இறக்குமதி செஸ் வரியும் ஆகும். மீதமுள்ள ஏனைய வரிகள் தொடர்பான வரி நிலுவைத் தொகை ரூபா 5,333 மில்லியன் ஆகும்.. இந்த நிலுவை வரி வருமானத்தில் ரூபா 39,063 மில்லியன் அதாவது 63 சதவீதம் நிதி அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டும்.

**தவறான தீர்மானத்தின் அடிப்படையில் நட்டம் செலுத்துவதற்கு நேரிட்டமை**

கைப்பற்றப்பட்ட சிகரெட் கையிருப்பு தொடர்பில் எடுக்கப்பட்ட தவறான தீர்மானமொன்றின் அடிப்படையில் இலங்கை சுங்கத்திற்கு செலுத்த வேண்டி நேரிட்ட மொத்த நட்டம் ரூபா 69.4 மில்லியன் ஆகும்.

**விசாரணைகள் விரைவாக முடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை.**

2015 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 வரை, திணைக்களத்தின் 40 பிரிவுகளுடன் தொடர்புடைய 9,754 சுங்க விசாரணைகள் நடாத்தப்பட்டிருந்ததுடன், 2022 திசெம்பர் 31 இல் மொத்த விசாரணைகள் எண்ணிக்கையில், 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழைய 3,582 விசாரணைகளும், 1 மற்றும் 5 ஆண்டுகளுக்கிடையிலான 4,720 விசாரணைகளும் ஒரு வருடத்திற்குட்பட்ட 1,452 விசாரணைகளும் காணப்பட்டதுடன் அந்த விசாரணைகளை விரைவாக முடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**மீள் ஏற்றுமதிக்கு திட்டமிடப்பட்ட தேங்காய் எண்ணெய் உள்நாட்டு சந்தையில் விற்பனை செய்யப்பட்டமையால் அரச வருமானம் இழக்கப்பட்டமை**

தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்யப்பட்டு பெறுமதி சேரக்கப்பட்டு மீள் ஏற்றுமதி செய்வதற்காக சுங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கம்பனியொன்று 2014 முதல் 2017 வரையான காலப்பகுதியில் 463,065 கிலோ தேங்காய் எண்ணெயை உள்நாட்டு சந்தைக்கு விற்பனை செய்திருந்தது. அதற்காக சுங்கத்தினால் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு ரூபா 477 மில்லியன் அபராதமொன்று விதிக்கப்பட்டு அந்த அபராதம் ரூபா 90 மில்லியன வரை குறைக்கப்பட்டிருந்தமையால் மற்றும் சுங்க கட்டளைச் சட்டத்தின்படி அதில் 30 சதவீதம் மட்டுமே பொதுத் திறைசேரிக்கு பெறப்பட்டதால் உண்மையாக அரசாங்கத்திற்கு கிடைத்த வருமானம் ரூபா 27 மில்லியன் மட்டுமே ஆகும். ஆனால் அந்த சம்பவத்தால் அரசிற்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 64 மில்லியன் ஆக இருந்தது.

**மதுவரித் திணைக்களம்**

2022 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட மதுவரி வருமானம் ரூபா 180,000 மில்லியன் ஆக இருந்ததுடன் அது மீண்டும் ரூபா 185,000 வரை திருத்தப்பட்டு ரூபா 165,188 மில்லியன் ஆன வரி வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது.அது திருத்தப்பட்ட மதிப்பீட்டுடன் ஒப்பிடப்பட்டபோது 89 சதவீதமாக இருந்தது.

**மதுபானம் மற்றும் கள்ளு உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் வடிசாலைகளிடமிருந்து அறவிடவேண்டிய மதுவரி வருமானம்**

2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நிலுவை வருமான அறிக்கைக்கு இணங்க மதுபானம் மற்றும் கள்ளு உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் வடிசாலைகளிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை மதுபான வரி ரூபா 5,514 மில்லியன் ஆகும். அது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 17 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.அதில் 04 நிறுவனங்களுக்குரிய ரூபா 2,389 மில்லியன் ஆன நிலுவை மதுபான வருமானமொன்று 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவீடு செய்யப்படாதிருந்தது. மேலும் உற்பத்தி நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்து மீண்டும் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த காரமான மதுசார உற்பத்தி கம்பனியிடமிருந்து அறவிட வேண்டியதாக இருந்த ரூபா 2,748 மில்லியனுக்கான நிலுவை தவணைக் கொடுப்பனவு தவற விடப்பட்டிருந்தது.

**பாதுகாப்பு ஸ்டிக்கர் முகாமைத்துவ ஒழுங்கமைப்பில் காணப்பட்ட பலவீனங்கள்**

கணக்காய்வின்போது மேற்படி ஒழுங்கமைப்பில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டமை மற்றும் ஒப்பந்த நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் குறியிடும் இயந்திரம் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், மதுவரி திணைக்கள அதிகாரிகளின் பரிசோதனை குறிப்புகள் அறிக்கையின்படி , 2022 சனவரி 11 முதல் 2023 சனவரி 31 வரையான காலப்பகுதியில் 4.9 மில்லியன் மதுசார போத்தல்கள் ஸ்டிக்கர் அச்சிடப்படாது சந்தைக்கு வழங்கப்பட்டிருந்தமை, டிஜிட்டல் குறியிடல் இல்லாமல் சந்தைப்படுத்தப்பட முடியாமை போன்ற விதிகள் தொடர்ந்தும் அமுல்படுத்தப்படாமை ஆகிய விடயங்கள் காரணமாக மேற்படி ஒழுங்கமைப்பு தோல்வியடைந்தது.

**மதுவரி திணைக்களத்திற்கு புதிய மறுசீரமைக்கப்பட்ட வருமான நிர்வாக ஒழுங்கமைப்பொன்றை அறிமுகப்படுத்துவதற்காக நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்படாமை**

மதுவரி திணைக்களத்திற்கு புதிய மறுசீரமைக்கப்பட்ட வருமான நிர்வாக ஒழுங்கமைப்பொன்று (சுயுளுநுனு) செயற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை 2020 திசெம்பர் முதல் ஆரம்பிக்கப்பட்டு செயற்பாட்டு பகுதிகள் கண்டறியப்பட்டு முன்மொழியப்பட்ட வருமான ஒழுங்கமைப்பொன்றை நிறுவுவதற்கான பணிகளுக்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக எவ்வித் செலவொன்றும் மேற்கொள்ளப்படவில்லை.

**மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்**

இலங்கையில், மோட்டார் வாகனப் பதிவு, ஒழுங்குபடுத்தல், சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், வீதிப் பாதுகாப்பு மற்றும் சுற்றாடலுக்கு உகந்த வாகனங்களைப் பயன்படுத்துதல் போன்ற நோக்கங்களை கருத்திற் கொண்டு வினைத்திறனுள்ள மற்றும் பயனுள்ள சேவையொன்றை வழங்குதல மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் பிரதான நோக்கங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

**வரவு செலவுத்திட்ட மதிப்பீடு நியாயமற்ற முறையில் மற்றும் முறையான எதிர்வு கூறல் மற்றும் பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி மாற்றப்பட்டிருந்தமை.**

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தினால் ரூபா 1,050 மில்லியன் வரி வருமானமொன்று மற்றும் ரூபா 7,503 மில்லியன் வரி அல்லாத வருமானமொன்று 2022 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட வேண்டுமென வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தபோதிலும் , அம்மதிப்பிடப்பட்ட வரி வருமானம் ரூபா 630 மில்லியனாக 40 சதவீதத்தினால் மற்றும் வரி அல்லாத வருமானம் ரூபா 5,500 மில்லியனாக 27 சதவீதத்தால் குறைப்பதற்கு நிதியமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. எனினும், அந்த ஆண்டில் வரி வருமானமாக ரூபா 1,374 மில்லியன் மற்றும் வரி அல்லாத வருமானமாக ரூபா 6,554 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்த காரணத்தால் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் நியாயமற்ற முறையில் மற்றும் முறையான எதிர்வு கூறல் மற்றும் பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி மாற்றப்பட்டிருந்தன.

**ஆடம்பர வருமானம் சேகரிப்பதற்கு தவறியமை**

ஆடம்பர வருமான வரி கணக்கீடுகளின்படி, 2022 ஆம் ஆண்டிற்கான ரூபா 1,283 மில்லியன் மற்றும் கடந்த ஆண்டு நிலுவையாக இருந்த ரூபா 214 மில்லியனுடன் மொத்தம் ரூபா 1,497 மில்லியன் அறவிடப்பட வேண்டிய போதிலும் , அதில் ரூபா 165 மில்லியன் ஆன ஆடம்பர வரி வருமானமொன்றை சேகரிப்பதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் தவறியிருந்தது.

**மின் மோட்டார் செயற்திட்டம் செயற்படுத்தப்படாமை**

2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை மின் மோட்டார் செயற்திட்டத்திற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் மொத்தம் ரூபா 360 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மின் மோட்டார் செயற்திட்டத்திற்காக இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூபா 0.18 மில்லியனாக இருந்தது.

**தேசிய லொத்தர் சபை**

தற்போதைய வருமான நிலை மற்றும் இலாபப் பங்களிப்பை அதிகரிப்பதன் மூலம் அரசாங்கத்திற்கான பங்களிப்பை அதிகரிப்பதற்காக 1963 இன் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் தேசிய லொத்தர் சபையானது 1963 ஆம் ஆணடில் உருவாக்கப்பட்டிருந்தது.

**சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதி ஒருங்கிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமை**

தேசிய லொத்தர் சபையினால் லொத்தர் சீட்டு வருமானத்திலிருந்து சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினங்களைக் கழித்த பின்னர், மீதி ஒருங்கிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 2,397 மில்லியன் ஒருங்கிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது 2022 திசெம்பர் 31 இல் சபையில் தக்கவைக்கப்படடிருந்தது.

**அரசாங்கத்தின் சார்பாக நடாத்தப்படுகின்ற அனைத்து லொத்தர் சீட்டு வருமானம் குறைவாக அனுப்பப்பட்டிருந்தமை**

அரசாங்கத்தின் சார்பாக நடாத்தப்படுகின்ற அனைத்து லொத் தர் சீட்டு வருமானத்தில் 16.5 சதவீதம் ஒருங்கிணைந்த நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 11 சீட்டிழுப்புக்களில் குறிப்பிட்ட சதவீதத்தை விடக் குறைவாக , ஒருங்கிணைந்த நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருந்தமையால் 2022 ஆம் ஆண்டில் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட பெறுமதி ரூபா 560 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

**கோரப்படாத பரிசுத் தொகையை ஒருங்கிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமை**

2022 **ச**னவரி 27 ஆம் திகதி முதல் 2022 யூன் 30 வரை, சந்திரன் சீட்டிழுப்பின் மேலதிக அடையாளத்திற்காக வழங்கப்பட்ட பரிசுத் தொகையில் 06 மாதங்களுக்கு மேல் உரிமை கோரப்படாத ரூபா 12 மில்லியன். சட்டத்தின் ஏற்பாடுகளின்படி ஒருங்கிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் சபையின் நிதியத்தில் தக்கவைக்கப்படடிருந்தது.

**தேசிய லொத்தர் சபை**

1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தின் பிரகாரம், அபிவிருத்தி லொத்தர் சபையினால் நடாத்தப்படும் சீட்டிழுப்புக்களின் மூலம் பெறப்படுகின்ற முழுமையான இலாபமும் சனாதிபதியின் நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டும்.அதன்படி, 2022 ஆம் ஆண்டில் வரிக்குப் பின்னரான மொத்த இலாபம் ரூபா 3,211 மில்லியன் சனாதிபதி நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது.

# திறைசேரி மற்றும் அரச கடன

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

- அரச வருமானம்
- அரசாங்க செலவு
- வட்டிச் செலவு அதிகரித்தல்
- வருமானப் பற்றாக்குறை
- பாதீட்டுப் பற்றாக்குறை
- இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதீட்டு பற்றாக்குறை
- பாதீட்டு பற்றாக்குறை நிதியளிப்பு
- கடன்மீதி அதிகரித்தல்
- அரச கடன்
- பொறுப்பு எல்லையை மிகைத்தல
- தனிநபர் கடன் தொகை
- அரச வருமானம் குறைவடைந்து கடன் தவணை மற்றும் வட்டி கொடுப்பனவு அதிகரித்தல்

# திறைசேரி மற்றும் அரச கடன்


அரசின் நிதி நிர்வாகத்திற்குரியதாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் XVII அத்தியாயத்தின் 148 உறுப்புரையின் பிரகாரம் இலங்கை நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாட்டினையும் பாராளுமன்றம் கொண்டுள்ளது. அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசினால் சேகரிக்கப்படுகின்ற வருமானம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்ததுடன், அரசியலமைப்பின் 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகளின் பிரகாரம் திரண்ட நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய முறை குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செயற்பாடுகளைத் திட்டமிடல்,செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்கின்ற பிரதான வழிமுறை திறைசேரியாகும்.

### அரச வருமானம்

2022 ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 24,148 பில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், 2021 ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 16,809 பில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன்படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 7,339 பில்லியனினால் அதாவது 43.66 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2022 ஆண்டிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி அரச வருமானம் ரூபா 2,213 பில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், 2022 ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால பாதீட்டின் படி அரச வருமானம் ரூபா 2,084 பில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டில் அது ரூபா 1,961 பில்லியன் தொகையாக இருந்தது. அதன்படி, முன்னைய ஆண்டை விட அரச வருமானம் ஆரம்ப பாதீடு மற்றும் இடைக்கால பாதீட்டின் படி முறையே ரூபா 252 பில்லியனால் மற்றும் 123 பில்லியனால் அதாவது 12.85 சதவீதத்தினால் மற்றும் 6.27 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டு அரச பாதீடு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

2022 ஆண்டில் சேகரிக்கப்பட்ட அரசாங்க வருமானம் ரூபா 1,999 பில்லியன் தொகையாக இருந்ததுடன், அது திருத்திய வருமான மதிப்பீட்டை விட ரூபா 103 பில்லியனினால் குறைவடைந்திருந்து. அதன்படி, பாராளுமன்றத் திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருடாந்த பாதீடு ஆரம்ப மதிப்பீடு மற்றும் 2022 ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால பாதீட்டு வருமான மதிப்பீடுடன் ஒப்பீடு செய்த போது அந்தக் குறைவடைதல் முறையே ரூபா 214 பில்லியன் மற்றும் ரூபா 85 பில்லியன் தொகையாக காணப்பட்டது. 2012 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலவீச்சில் எல்லா ஆண்டுகளிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானத்தை விட சேகரிக்கப்பட்ட வருமானம் குறைவடைதல் 4.08 சதவீதம்

முதல் 26.06 சதவீத வீச்சு ஒன்றினை அடைந்திருந்ததுடன் இந்தக் கால வீச்சில் அதிகமான சதவீதம் 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. விபரங்கள் வரைபடம் 05 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




வரைபடம் 06 – மதிப்பிடப்பட்ட வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானத்தின் சதவீதமாக

மூலம் - வருடாந்த பாதீடு மற்றும் அரச நிதிக் கூற்று 2012 – 2022

நிதிப் பிரமாணம் 85(2)(ஆ) பிரகாரம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வருமான மதிப்பீட்டை திருத்துவதற்காக அரச நிதிக் கொள்கை திணைக்களத்திற்கு அறிவித்தல் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளமை யால், பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடொன்று பாராளுமன்றத்தின் அங்கீகார மின்றி திருத்துவதற்கு சந்தர்ப்பமளித்திருந்த மையால் வருமானம் தத்துரூபமாக மதிப்பீடு செய்யும் பொறுப்புக்கூறல் பலவீனமடைந்து இருந்தது.

### அரசாங்க செலவு

2022 நிதியாண்டிற்காக அரச செலவுகளுக்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் 2021 இன் 30 இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகள் காணப்படும் சட்டத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ள, திரண்ட நிதியத்திற்கு செலவுப் பொறுப்பு ஒன்றாகிய விஷேட சட்ட சேவைக்களுக்காக ஏற்பாடுகள் உட்பட அரசாங்க வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக ரூபா 4,819,569 மில்லியனிற்கான ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்தது. அரசியல் யாப்பின் 150

ஆவது உறுப்புரை பிரகாரம் விஷேட சட்ட சேவை வொரண்ட் அனுமதிப்பத்திரத்தின் மூலம் ரூபா 251,000 மில்லியனிற்கான ஏற்பாடு விஷேட சட்ட சேவை செலவுகளுக்காக பெறப்பட்டிருந்தது. அதன்படி, மீளாய்வாண்டின் வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக ரூபா 5,070,569 மில்லியனிற்கான தேறிய ஏற்பாடொன்று வழங்கப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 09 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| நிதி | மூலதன ஏற்பாடு | மீண்டெழும் ஏற்பாடு | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| வழங்கல் மற்றும் சேவைகளுக்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடு (ஒதுக்கீட்டுச் சட்டத்தின் I ஆம் அட்டவணை ) | 1,090,397 | 2,239,830 | 3,330,227 |
| காணப்படும் சட்டத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ள, திரண்ட நிதியத்திற்கு செலவுப் பொறுப்பு ஒன்றாகிய விஷேட சட்ட சேவைக்களுக்காக ஏற்பாடு (ஒதுக்கீட்டுச் சட்டத்தின் II ஆம் அட்டவணை) | 1,505,000 | 1,396,123 | 2,901,123 |
| வழங்கல் மற்றும் சேவை செலவுகளுக்காக மேலதிகமாக வழங்கப்பட்டிருந்த ஏற்பாடு(குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம்) | - | - | - |
| விஷேட சட்ட சேவை செலவுகளுக்காக மேலதிகமாக வழங்கப்பட்டிருந்த ஏற்பாடு | - | 251,000 | 251,000 |
| மொத்தம் | **2,595,397** | **3,886,953** | **6,482,350** |

அட்டவணை 09 - அரச வழங்கல் மற்றும் சேவைகளுக்கான ஏற்பாடு

மூலம் - 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டம் மற்றும் குறை நிரப்பு மதிப்பீடு

2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் தலைப்பு 240 தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறை நிரப்பு உதவிச் சேவை மற்றும் அவசர தேவைப்பாட்டு பொறுப்புக் கருத்திட்டத்தின் கீழ் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்களுக்காக மாத்திரம் பயன்படுத்துவதற்காக ரூபா 73,758 மில்லியனிற்கான மேலதிக ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அது மொத்த ஏற்பாடுகளில் ரூபா 73,079 மில்லியனிற்கான இற்கான ஏற்பாடு ஏனைய செலவுத் தலைப்பு

களுக்காக மாற்றப்பட்டிருந்தது. அதன்படி, ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 674 மில்லியனிற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 10 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| செலவின் தன்மை | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் | குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் | நி.பி.66/69 மாற்றல்கள் | தேறிய ஏற்பாடு | செலவுத் தலைப்புக்களுக்கு ஏற்பாடுகள் மாற்றப்பட்டமை | ஏற்பாட்டின் சேமிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| மீண்டெழும் | 55,600 | - | (31,363) | 24,237 | 23,563 | 674 |
| மூலதன | 18,153 | - | 31,363 | 49,516 | 49,516 | - |
| மொத்தம் | **73,753** | **-** | **0** | **73,753** | **73,079** | **674** |

அட்டவணை 10 – குறைநிரப்பு உதவிச் சேவை மற்றும் அவசர தேவைப்பாட்டுப் பொறுப்புக்கள் கருத்திட்டத்தின் கீழான ஏற்பாடுகள் மற்றும் அந்த ஏற்பாடுகள் ஏனைய செலவுத் தலைப்புகளுக்கு மாற்றுதல்.
மூலம் - தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் நிதிக் கூற்று 2022

மீளாய்வாண்டின் போது அரசாங்க வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக ரூபா 6,482,350 மில்லியனிற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் ரூபா 5,420,912 மில்லியன் தொகையாக இருந்தது. அதன்படி, முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான ஏற்பாடுகள் ரூபா 1,601,438 மில்லியன் தொகை அதாவது 19.58 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2022 ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த ஏற்பாடுகளில் ரூபா 5,985,985 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 496,365 மில்லியன் தொகை, அதாவது மொத்த ஏற்பாடுகளில் 8 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் படி அரசாங்க வழங்கல் மற்றும் சேவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் சேமிப்பு ஏற்பட்டிருந்த பல சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

- மீண்டுவரும் செலவுகளுக்கான மொத்த தேறிய ஏற்பாடுகள் ரூபா 3,791,498 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது அவற்றில் ரூபா 3,539,237 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 252,261 மில்லியன் தொகைக்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு ஒட்டுமொத்த மீண்டுவரும் ஏற்பாடுகளில் 7 சதவீதத்தை கொண்டிருந்தது.

- அரச முதலீட்டுகளுக்காக ரூபா 1,180,382 மில்லியனிற்கான தேறிய ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அவற்றில் ரூபா 1,014,293 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா 166,089 மில்லியனிற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு

ஒதுக்கப்பட்டிருந்த தேறிய ஏற்பாடுகளில் 14 சதவீதத்தை கொண்டிருந்தது.


- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் தவணை கொடுப்பனவுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,510,470 மில்லியன் தொகைக்கான தேறிய ஏற்பாடுகளில் கடனை திருப்பி செலுத்துவதற்காக ரூபா 1,432,455 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன்படி, ஒதுக்கப்பட்டிருந்த தேறிய ஏற்பாடுகளில் ரூபா 78,016 மில்லியன் தொகை எனப்படும் 5 சதவீத ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுகளுக்காக ரூபா 3,791,498 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 3,539,237 மில்லியன் தொகை எனப்படும் 93 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுக்காக ரூபா 2,874,192 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 2,757,343 மில்லியன் தொகை பயன்படுத்தப் பட்டிருந்தது. அதன்படி ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 7 சதவீதம் எனப்படும் ரூபா 252,261 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டிற்கான மொத்த பாதீட்டுச் செலவு ரூபா 6,482,350 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், உள்ளவாறான செலவு ரூபா 5,985,985 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன்படி, மதிப்பீடு செய்யப்பட்ட செலவில் ரூபா 496,365 மில்லியனிற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது.

## வட்டிச் செலவு அதிகரித்தல்

மீளாய்வாண்டின் போது வட்டிக்காக ரூபா 1,565,190 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டில் ரூபா 1,048,382 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், முன்னை ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 516,808 மில்லியன் தொகையினால் அதாவது 49.30 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2006 இன் போது ரூபா 150,778 மில்லியன் தொகையாக காணப்பட்ட வட்டிச் செலவு 2022 ஆண்டு இறுதியளவில் அது ரூபா 1,565,190 மில்லியன் தொகை வரை அதிகரித்திருந்தது. 2006 ஆண்டிற்கான ஒப்பாக 938 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2006 ஆண்டில் மொத்த வட்டிச் செலவு மீண்டுவரும் செலவில் 26.03 சதவீதத்தை கொண்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அது 44.22 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. அதேபோல் 2006 இன் போது அரச வருமானத்தில் 31.58 சதவீதம் எனப்படும் ரூபா 150,578 மில்லின் தொகை வட்டியாக செலுத்தப்பட்டிருந்ததுடன், 2022 ஆண்டில் அது 78.31 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. விபரங்கள் வரைபடம் 07 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




வரைபடம் 07 - மொத்த மீண்டுவரும் செலவு மற்றும் வட்டிச் செலவு

மூலம் - அரச நிதிக் கூற்று

### வருமானப் பற்றாக்குறை

மீளாய்வாண்டிற்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் வருமானத்தின் பற்றாக்குறை ரூபா 1,540 பில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் போது அது ரூபா 1,290 பில்லியன் தொகையாகக் காணப்பட்டது. 2006 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான கால வீச்சில் உயர்ந்த வருடமானப் பற்றாக்குறை 2022 ஆண்டிலே பதிவாகியிருந்தது. அந்த கால வீச்சில் அனைத்து ஆண்டுகளிலும் சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் அரச மீண்டுவரும் செலவை தீர்ப்பதற்கு முடியாமல் இருந்தது. வருமானத்தின் பற்றாக்குறையின் குறைந்த பெறுமதி 2007 ஆண்டு பதிவாகியிருந்ததுடன், அது ரூபா 43 பில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், சேகரிக்கப்பட்ட அரச வருமானத்தின் 7.52 சதவீத்தை பிரதிநிதிப்படுத்தியது. அந்தக் கால வீச்சில் ஒட்டுமொத்த வருமானத்தின் பற்றாக்குறை ரூபா 6,319 பில்லியன் தொகையாக காணப்பட்டது. அந்தப் பற்றாக்குறையை தீர்ப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் மற்றும் வெளிநாட்டு மானியம் பெறப்பட்டிருந்தது. அதன்படி, அந்தக் கால வீச்சில் உள்நாட்டுக் கடன் ரூபா 20,484 பில்லியன் தொகையும், வெளிநாட்டுக் கடன் ரூபா 7,487 பில்லியன் தொகையும் மற்றும் வெளிநாட்டு மானியம் ரூபா 246 பில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 28,218 பில்லியன் தொகை பெற்றிருந்தது. ஒவ்வொரு ஆண்டுகளிலும் அவ்வாறு பெற்றிருந்த கடன் மற்றும் மானியங்களில் 6.89 சதவீதம் முதல் 45.59 சதவீதம் வரையான வீச்சளவினால் வருமானப் பற்றாக்குறைக்கு நிதி அளிப்புச் செய்யப்பட்டது. பெற்றிருந்த கடன்கள் மற்றும் மானியங்களிலிருந்து முதலீடுகள் மேற்கொள்ளாமல் மீண்டுவரும் செலவுகளை தீர்ப்பதற்காக 2019 ஆண்டின் போது 20.25

சதவீதமும், 2020 ஆண்டின் போது 45.59 சதவீதமும், 2021 ஆண்டின் போது 42.39 சதவீதம் மற்றும் 2022 ஆண்டின் போது 30.59 சதவீதமாக பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 11 இல் காட்டப்பட்டுள்ளது.

| வருடம் | உள்ளபடியான வருமானம் | உள்ளபடியான மீண்டெழும் செலவுகள் | வருமானப் பற்றாக்குறை | வருமானப் பற்றாக்குறை சேகரிக்கப்பட்ட வருமானத்தின் சதவீதமாக | வெளிநாட்டு கடன், மானியம் மற்றும் உள்நாட்டு கடன் | வருமானப் பற்றாக்குற கடன் மற்றும் மானியங்களின சதவீதமாக் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | நூற்றுக்கு | ரூபா மில்லியன் | நூற்றுக்கு |
| **2006** | 477 | 579 | 102 | 21.38 | 514 | 19.84 |
| **2007** | 572 | 615 | 43 | 7.52 | 587 | 7.33 |
| **2008** | 664 | 736 | 72 | 10.84 | 678 | 10.62 |
| **2009** | 708 | 882 | 174 | 24.58 | 1,019 | 17.08 |
| **2010** | 826 | 951 | 125 | 15.13 | 918 | 13.62 |
| **2011** | 943 | 1,020 | 77 | 8.17 | 998 | 7.72 |
| **2012** | 997 | 1,118 | 121 | 12.14 | 1,108 | 10.92 |
| **2013** | 1,066 | 1,254 | 188 | 17.64 | 1,289 | 14.58 |
| **2014** | 1,128 | 1,370 | 242 | 21.45 | 1,397 | 17.32 |
| **2015** | 1,394 | 1,673 | 279 | 20.01 | 1,750 | 15.94 |
| **2016** | 1,699 | 1,771 | 72 | 4.24 | 1,623 | 4.44 |
| **2017** | 1,845 | 1,946 | 101 | 5.47 | 1,466 | 6.89 |
| **2018** | 1,935 | 2,109 | 174 | 8.99 | 1,883 | 9.24 |
| **2019** | 1,907 | 2,322 | 415 | 21.76 | 2,049 | 20.25 |
| **2020** | 1,379 | 2,683 | 1,304 | 94.56 | 2,860 | 45.59 |
| **2021** | 1,467 | 2,757 | 1,290 | 87.93 | 3,043 | 42.39 |
| **2022** | 1,999 | 3,539 | 1,540 | 77.04 | 5,035 | 30.59 |
| එකතුව | **21,006** | **27,325** | **6,319** | | **28,217** | |

அட்டவணை 11 – மீண்டுவரும் செலவை தீர்த்துக்கொள்ள முடியாதிருந்த வருமானத்தின் பற்றாக்குறை கடன்கள் மற்றும் மானியங்களின் மூலம் பயன்படுத்துதல்

மூலம் - 2006 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை அரச நிதிக் கூற்றுக்கள்

2006 ஆண்டின் போது ரூபா 151 பில்லியன் தொகைகான வட்டிக் கொடுப்பனவு 2022 ஆண்டிளவில் அது ரூபா 1,565 பில்லியன் தொகை வரை 936 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. பாதீட்டு பற்றாக்குறைகளை நிதியளிப்பு செய்தவதற்காக கடன் பெறுதல் அதற்கான வட்டி செலுத்துதல் வருடாந்தம் அதிகரித்திருந்தது. 2022 ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 1,999 பில்லியனிற்கான அரச வருமானத்தின் ரூபா 1,565 பில்லியன் தொகை எனப்படும் 78.29 சதவீதம் வட்டி செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. இந்த நிலைமை குறிப்பிட்ட காலப் பகுதியில் வருடாந்தம் அதிகரித்து செல்லல் காணப்பட்டதுடன், 2019 ஆண்டு முதல் துரிதமாக அதிகரித்திருந்தது. விபரங்கள் அட்டவணைகள் 12 இல் காண்பிக்கப்படுகின்றது..

| வருடம் | உள்ளபடி யான மீண்டெழும் செலவுகள் | வட்டி செலவுகள் | வட்டி செலவுகள் மொத்த மீண்டெழும் செலவுகளின் சதவீதமாக | உள்ளபடி யான வருமானம் | வட்டி செலவுகள் உள்ளபடி யான வருமானத்தின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | நூற்றுக்கு | ரூபா மில்லியன் | நூற்றுக்கு |
| 2006 | 579 | 151 | 26.08 | 477 | 31.66 |
| 2007 | 615 | 181 | 29.43 | 572 | 31.64 |
| 2008 | 736 | 212 | 28.80 | 664 | 31.93 |
| 2009 | 882 | 303 | 34.35 | 708 | 42.80 |
| 2010 | 951 | 348 | 36.59 | 826 | 42.13 |
| 2011 | 1,020 | 353 | 34.61 | 943 | 37.43 |
| 2012 | 1,118 | 409 | 36.58 | 997 | 41.02 |
| 2013 | 1,254 | 465 | 37.08 | 1,066 | 43.62 |
| 2014 | 1,370 | 446 | 32.55 | 1,128 | 39.54 |
| 2015 | 1,673 | 527 | 31.50 | 1,394 | 37.80 |
| 2016 | 1,771 | 611 | 34.50 | 1,699 | 35.96 |
| 2017 | 1,946 | 736 | 37.82 | 1,845 | 39.89 |
| 2018 | 2,109 | 852 | 40.40 | 1,935 | 44.03 |
| 2019 | 2,322 | 889 | 38.29 | 1,907 | 46.62 |
| 2020 | 2,683 | 975 | 36.34 | 1,379 | 70.70 |
| 2021 | 2,757 | 1,048 | 38.01 | 1,467 | 71.44 |
| 2022 | 3,539 | 1,565 | 44.22 | 1,999 | 78.29 |
| மொத்தம் | **27,325** | **10,071** | | **21,006** | |

அட்டவணை 12 - கடனுக்கான வட்டி செலுத்துவதற்காக சேகரிக்கப்பட்ட வருமானத்தின் கூடிய சதவீதம் செலவிடல்

மூலம் - 2006 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை அரச நிதிக் கூற்றுக்கள்


வருமானம் சேகரிக்கும் பிரதான நிறுவனங்களான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கைச் சுங்கம், மதுவரித்திணைக்களம் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவதத்து திணைக்களங் களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் சேகரிக்கப்பட வேண்டியிருந்த நிலுவை வருமான மீதியில் மொத்தம் ரூபா 971,330 மில்லியன் ஆகும். இருப்பினும், அதிக நிலுவை வருமானமொன்று பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 2022 திசெம்பர் 31 வரை சேகரிப்பதற்கு முடியுமாக இருந்த ரூபா 904 பில்லியன் வருமானம், சேகரிக்கப்படாமல் நிலுவையாக காணப்பட்டது. அவ்வருமானம் 2022 ஆம் ஆண்டில் சேகரிக்கப்படுவதற்கு முடியுமாக இருந்திருந்தால், அந்த ஆண்டின் வருமானப் பற்றாக்குறை ரூபா 636 பில்லியன் தொகை எனப்படும் 41.30 சதவீதத்தினால் குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருந்திருக்கும். அந் நிலுவை வருமானம் 2020 ஆம் 2021 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 698 பில்லியன் தொகையும் ரூபா 620 பில்லியன் தொகையாகக் காணப்பட்டது. அவ்வாண்டுகளின் போது அந் நிலுவை வருமானங்களை சேகரித்துக்கொள்ள முடியுமாக இருந்திருந்தால் 2020 ஆண்டின் போது வருமானப் பற்றாக்குறை 606 பில்லியன் தொகை வரை 46.47 சதவீதத்தினாலும், 2021 ஆண்டின் போது வருமானப் பற்றாக்குறை 670 பில்லியன் தொகை வரை 51.94 சதவீதத்தினாலும் குறைத்துக்கொள்வதற்கான இயலுமை காணப்பட்டது.

அதன் பிரகாரம், வரி நிர்வாக முகாமைத்துவ தகவல் அமைப்பில் காணப்பட்ட குறைபாடு, வரி மேன்முறையீட்டு நடைமுறைகளின் நீண்டகாலத்தன்மை, நிலுவை வரி அறவிடுவது தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு நீதிமன்ற அமைப்பொன்று நிறுவப்பட்டிருக் காமை போன்ற காரணங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிலுவையை அறவிடுவதிலான தாமதத்திற்கு தாக்கமளித்திருந்தன. விபரம் அட்டவணை 13 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| வருடம் | நிலுவை வருமானம் | வருமானப் பற்றாக்குறை | நிலுவை வருமானத்தில் சேகரிக்கப்பட்டிருப்பின் வருமானத்தின் மிகை / (பற்றாக்குறை) | வருமானப் பற்றாக்குறை குறைக்கப்படதன் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | நூற்றுக்கு |
| 2019 | 579 | 414 | 165 | 39.86 |
| 2020 | 698 | 1,304 | (606) | (46.47) |
| 2021 | 620 | 1,290 | (670) | (51.94) |
| 2022 | 904 | 1540 | (636) | (41.30) |

அட்டவணை 13 – வருமானத் திணைக்களத்தின் நிலுவை வருமானம் மற்றும் அது வருமானப் பற்றாக்குறைக்கு ஏற்படுத்திய தாக்கம்

மூலம் - 2019 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அரச நிதிக் கூற்றுக்கள்





வரைபடம் 08 - வருமானப் பற்றாக்குறை உள்ளபடியான வருமானத்தின் சதவீதமாக

மூலம் - அரச நிதிக் கூற்றுக்கள் 2006 - 2022

## பாதீட்டுப் பற்றாக்குறை

அரச நிதிக் கூற்றுக்களின் படி 2022 ஆண்டின் பாதீட்டு பற்றாக்குறை ரூபா 2,555 பில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அது மொத்த தேசிய உற்பத்தியின் 10.58 சதவீதமாக காணப்பட்டது. 2021 ஆண்டின் பாதீட்டு பற்றாக்குறை ரூபா 2,080 பில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அது மொத்த தேசிய உற்பத்தியில் 12.37 சதவீதமாக காணப்பட்டது. 2006 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை ஒட்டுமொத்த கால வீச்சு பூராகவும் பாதிட்டுப் பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அது 2006 ஆண்டில் காணப்பட்ட ரூபா 300 பில்லியன் தொகைக்கான பாதீட்டுப் பற்றாக்குறை 2022 ஆண்டளவில் ரூபா 2,555 பில்லியன் தொகை வரை அதிகரித்திருந்தது. அந்தக் கால வீச்சில் ஆகக் கூடிய பாதீட்டுப் பற்றாக்குறை 2022 ஆண்டில் பதியப்பட்டிருந்தது. 2006 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை பாதீட்டுப் பற்றாக்குறை மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதப்படி கணித்த போது அது 5.55 சதவீதம் முதல் 14.08 தொகை வரையான வீச்சு எண்ணிக்கை காணப்பட்டது. உள்ளவாறான பாதீட்டு பற்றாக்குறை உள்ளவாறான மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதம் 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் பிரிவு 3(அ) இன் பிரகாரம் காணப்பட வேண்டியிருந்த 5 சதவீத எல்லை அந்தக் காலப் பகுதியில் ஒரு ஆண்டிலேனும் பேணப்பட்டு காணப்படவில்லை. 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது முறையே 5.55 சதவீதம், 5.69 சதவீதம் மற்றும் 5.59 சதவீத எண்ணிக்கைகளில் பேணிச் செல்வதற்கு இயலுமாக இருந்தது. விபரங்கள் வரைபடம் 09 இல் காட்டப்பட்டுள்ளது




வரைபடம் 09 - பாதீட்டுப் பற்றாக்குறை மொ.தே.உ. சதவீதமாக

மூலம் - நிதியமைச்சின் வருடாந்த அறிக்கைகள் மற்றும் அரச நிதிக் கூற்று 2006 - 2022

### இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதீட்டு பற்றாக்குறை


அரச நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பாதீட்டுப் பற்றாக்குறை மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதீட்டு பற்றாக்குறை இடையே வித்தியாசமான பெறுமதிகள் பதிவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தினால் அரச நிதிக் கூற்று கணக்கீட்டு வகைப்படுத்தலின் படி தயாரிக்கப்பட்டிருந்தது எனவும், பொருளாதார வகைப்படுத்தலின் படி இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதீட்டுப் பற்றாக்குறை கணிக்கப்பட்டிருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. 2022 ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் படி பாதீட்டுப் பற்றாக்குறை ரூபா 2,459,967 மில்லியன் தொகையான போதிலும் அரச நிதிக்கூற்றுக்களின் படி அந்த பற்றாக்குறை ரூபா 2,554,741 மில்லியன் தொகையாக இருந்தமையால் அம் மீதிகள் இரண்டிற்கும் இடையில் ரூபா 94,774 மில்லியன் தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### பாதீட்டு பற்றாக்குறை நிதியளிப்பு

அரச நிதிக் கூற்றுக்களுக்கு உரிய முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பாதீட்டுப் பற்றாக்குறை ரூபா 474,664 மில்லியன் தொகையினால் அதாவது 22.82 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது பாதீட்டு பற்றாக்குறையை தீர்த்துக்கொள்வதற்காக தேறிய வெளிநாட்டுக் கடன் ரூபா 424,821 மில்லியன் தொகை பெற்றுக் கொள்வதற்கு நேரிட்டிருந்தது. அதன்படி, பாதீட்டுப் பற்றாக்குறையை தீர்த்துக்கொள்வதற்காக தேறிய உள்நாட்டுக் கடன் ரூபா 3,144,578 மில்லியன் தொகை பெற்றுக்கொள்வதற்கு நேரிட்டிருந்தது.

## கடன்மீதி அதிகரித்தல்

வருடாந்த பாதீட்டுப் பற்றாக்குறை அதிகரிப்பின் முன்னிலையில் கடன் பெற்றுக்கொள்ளும் தொகையும் அதிகரித்திருந்தது. 2022 ஆண்டு இறுதியளவில் அரசினால் செலுத்த வேண்டிய கடன்மீதி என ரூபா 27,379 பில்லியன் தொகை என அரச நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இந்த மீதி உள்நாட்டுக் கடன்கள் என ரூபா 14,360 பில்லியன் தொகையும், வெளிநாட்டுக் கடன்கள் என ரூபா 13,020 பில்லியன் தொகையுமாக காணப்பட்டது. 2022 ஆண்டின் போது அரச கடன்மீதி ரூபா 16,827 பில்லியன் தொகையாக இருந்தது. அதன்படி, 2021 ஆண்டிற்கு ஒப்பாக 2022 ஆண்டின் போது கடன்மீதி ரூபா 10,552 பில்லியன் தொகையினால் அதாவது 63 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2006 ஆண்டில் காணப்பட்ட ரூபா 2,431 பில்லியனிற்கான கடன்மீதி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 82.72 சதவீதமாக காணப்பட்டது. அது 2022 ஆண்டிறுதியளவில் கடன் மீதி ரூபா 27,379 பில்லியன் தொகையாக இருந்ததுடன், அது மொத்த தேசிய உற்பத்தியில் 113.38 சதவீதமாக காணப்பட்டது.




வரைபடம் 10 – அரசாங்க கடன்மீதி மொ.தே.உ. சதவீதமாக.

மூலம் - அரச நிதிக் கூற்றுக்கள் 2007-2022 மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை

## அரச கடன்

நிதி,பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்ளைகள் அமைச்சினால் 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட தற்காலிகமாக வெளிநாட்டுக்கடன் கொடுப்பனவுகளை நிறுத்தி வைப்பதற்கான கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் 2022 ஏப்ரல் 13 ஆம் திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதியில் கடன் ஒப்பந்தம் 391 இற்கான ரூபா 671,569 மில்லியன் கடன் தவணைக்கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருந்தது.

அரச நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் போது வெளிநாட்டுக் கடன் ரூபா 783,326 மில்லியன் தொகையும், உள்நாட்டு வங்கி அல்லாத கடன்கள் (திறைசேரி உண்டியல் மூலம் தேறிய கடன்பெறல் உட்பட) ரூபா 4,218,528 மில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா

5,001,854 இற்கான கடன் பெறப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டில் பெற்றிருந்த ரூபா 3,036,026 மில்லியனிற்கான கடன் எண்ணிக்கை (திறைசேரி உண்டியல் மூலம் தேறிய கடன்பெறல் உட்பட) உடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 1,965,828 மில்லியனினால் அதாவது 64.75 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது அரசு உள்நாட்டுக் கடன்கள் மீது கூடிய கவனம் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது பெற்றிருந்த உள்நாட்டுக் கடன்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டில் பெற்றிருந்த (திறைசேரி உண்டியல் மூலம் தேறிய கடன்பெறல் உட்பட) ரூபா 2,519,420 மில்லியனிற்கான உள்நாட்டுக் கடன் எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 1,699,108 மில்லியன் தொகையினால் அதாவது 67.44 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது பெற்றிருந்த கடன் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு அட்டவணை 14 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| விபரம் | 2022 ரூபா மில்லியன் | 2021 ரூபா மில்லியன் |
|---|---|---|
| **வெளிநாட்டுக் கடன் பெறல்** | 783,326 | 516,606 |
| **உள்நாட்டுக் கடன் பெறல்** | | |
| திறைசேரி உண்டியல் (தேறிய) | 1,855,672 | 649,336 |
| **திறைசேரி பிணைமுறி** | 2,373,044 | 1,761,979 |
| வெளிநாட்டு பிரயோக பண வங்கி அலகு (செயற்திட்டமல்லாத) | (77,701) | (102,352) |
| **அபிவிருத்தி பிணைமுறி** | 67,441 | 207,504 |
| வெளிநாட்டு பிரயோக பண வங்கி அலகு (செயற்திட்டமல்லாத) | 72 | 2,953 |
| **உள்நாட்டுக் காலரீதியான கடன் வசதிகள்** | - | - |
| **மொத்த உள்நாட்டுக் கடன் பெறல்** | 4,218,528 | 2,519,420 |
| **ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த கடன்தொகை** | 5,001,854 | 3,036,026 |

அட்டவணை 14 - அரசினால் பெற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் மூலம் - அரச நிதிக் கூற்றுக்கள் 2021 மற்றும் 2022

அரச நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மொத்த அரச கடன் மீதி (வங்கி மேலதிக பற்று தவிர) ரூபா 27,379,288 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அது 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 16,826,831 மில்லியன் தொகைக்கான மொத்த அரச கடன்மீதி (வங்கி மேலதிக பற்று தவிர) ஒப்பீடு செய்யும் போது ரூபா 10,552,457 மில்லியன் தொகையினால் அதாவது 62.71 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. நடப்பாண்டிற்குள் அரசினால் பிணை எடுக்கப்பட்டுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ரூபா 884,093 ஆன கடன் பொறுப்பு அரசின் நிதிக் கூற்றுக்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தமை மற்றும் அரசின் நிதிக் கூற்றுக்களில் நிதி நிலைமைக்கூற்றிலிருந்து முழுமையாக புறம்பாக பேணப்பட்டு வருகின்ற 08 கடன் வகைகளுடன் தொடர்பான ரூபா 518,293 மில்லியன் கடன் மீதி மீளாய்வாண்டில் அரசின் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டமையும், மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட வெளிநாட்டு கடன் உள்ளூர் நாணயங்களாக மாற்றப்பட்டபோது உருவான ரூபா 5,232,909 பரிமாற்ற நட்டமும் மீளாய்வாண்டின் மொத்தக் கடன் மீதி உயர்ந்த மதிப்பொன்றை கொண்டிருந்தமைக்கு காரணமாக இருந்தது. முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டு இறுதியளவில் காணப்பட்ட மொத்த அரச கடன் தொடர்பான விபரம் ஒன்று கீழே அட்டவணை 15 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| வி விபரம்விபரமபரம் | திசெம்பர் 31 இல் மீதி திதிதசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி | |
|---|---|---|
| | 2022 2020 2021 | 2021 2020 |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| திறைசேரி உண்டியல் | 4,126,384 | 2,270,712 |
| திறைசேரி பிணைமுறி | 8,692,135 | 6,937,928 |
| ரூபாக் கடன் | 24,088 | 24,088 |
| இலங்கை அபிவிருத்தி பிணைமுறி | 391,737 | 460,078 |
| வெளிநாட்டு பிரயோகப் பணத்தில் உள்நாட்டுக் கடன் | 131,372 | 139,301 |
| வெளிநாட்டு பிரயோகப் பணத்தில் வங்கி அலகு (செயற்திட்டம்) | 24,500 | 20,247 |
| சுஹுருபாய கட்டிட நிர்மாண வேலைக்காக பெறப்பட்ட கடன் | 4,551 | 5,120 |
| திறைசேரி பிணைமுறி (சுழல் பொறுப்புக்கள் முகாமைத்துவச் சட்டம்) | 30,000 | 30,000 |
| ஓய்வூதிய பணிக்கொடைக் கடன் | 48,924 | 52,995 |
| குத்தகை கடன் கொடுத்தோர் | 1,865 | 478 |
| உள்நாட்டு கால ரீதியான கடன் வசதிகள் | - | 45,000 |
| அதசினால் பிணை எடுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடன் | 884,093 | - |
| மொத்த உள்நாட்டுக் கடன் | 14,359,649 | 9,985,947 |
| வெளிநாட்டு (செயற்திட்டங்கள்) | 7,665,019 | 3,779,702 |
| வெளிநாட்டு பணத்திலிருந்து காலரீதியான கடன் வசதிகள் | 797,589 | 445,521 |
| சர்வதேச இறையான்மை பிணைமுறி | 4,557,030 | 2,615,661 |
| மொத்த வெளிநாட்டுக் கடன் | 13,019,638 | 6,840,884 |
| மொத்த அரச கடன்மீதி | 27,379,287 | 16,826,831 |
| மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி | 23,843,000 | 16,508,000 |
| மொத்த அரச கடன்மீதி மதிப்பீட்டு மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக | 114.83 | 101.93 |

அட்டவணை 15 - வகைப்படுத்தப்பட்ட வருட இறுதியில் காணப்பட்ட கடன்மீதி

மூலம் - அரச நிதிக் கூற்றுக்கள் 2021 மற்றும் 2022

## பொறுப்பு எல்லையை மிகைத்தல்

2021 இன் 12 ஆம் இலக்க மற்றும் 2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்திய) சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) சட்டத்தின் பிரகாரம், ஏதேனும், ஒரு வருட இறுதியில் காணப்படக்கூடிய உச்ச பொறுப்புக்களின் பெறுமதி அவ்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80 சதவீதத்தை மிகைக்கக் கூடாது என இருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன் மற்றும் நிதி நிலைமை கூற்றுக்கு புறம்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த பல்வேறு அரச தொழில் முயற்சிகளுக்கு உரிய பொறுப்புக்களையும் கவனத்தில் எடுத்த போது மீளாய்வாண்டின் போது அந்த எல்லையை மிகைத்து பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது. விபரம் அட்டவணை 16 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| பொறுப்புக்கள் பொறுப்புக்கள் | 2021 திசெம்பர் 31 திகதியில் உ 2022 திசெம்பர் 31 இல் பொறுப்புக்கள் பெறுமதி ள்ளவாறு பொறுப்புக்களின் ெ ரூபா மில்லியன் பறுமதி ரூபா பில்லியன் |
|---|---|
| வங்கி மேலதிக பற்று | 84 |
| அரச கடன்கள் (அரச நிதிக் கூற்றுக்களின் படி) | 27,379 |
| மத்திய வங்கி முற்பணம் | 235 |
| நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படாத பொறுப்புக்கள் | |
| கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன் | 39 |
| மொத்தப் பொறுப்புகள் | 27,737 |
| மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி | 16,508 |
| மொத்த பொறுப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக | 109.9 |


அட்டவணை 16 – உச்ச பொறுப்புக்கள் எல்லையை மிகைத்தல்

மூலம் - அரச நிதிக் கூற்றுக்கள்

திறைசேரியின் பிணைமுறிகள் மீது அரச தொழில் முயற்சிகளினால் பெற்றிருந்த கடனுக்காக வங்கிகளுக்கு வழங்கியிருந்த பிணைமுறி மற்றும் சலுகை கடிதங்களில் பெறுமதியாகிய ரூபா 1,292 பில்லியன் தொகை மற்றும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் வெளிநாட்டு செலவு அலகுகளின் வருடாந்த நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் கூற்றில் உட்படுத்தப்பட்டிருந்த ரூபா 106 பில்லியனிற்கான பெறுமதியும் மேற்கூறிய பொறுப்புக்களில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## தனிநபர் கடன் தொகை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 09 ஆண்டுகளில் தனிநபர் கடன் தொகை வரைபடம் 11 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.





வரைபடம 11 - தனிநபர் கடன் தொகை

மூலம் - அரச நிதிக் கூற்றுக்கள் 2013-2022 மற்றும் மத்திய வங்கி வருடாந்த அறிக்கை

மேற்கூறிய தகவல்களின் படி மொத்த அரச கடன் மத்திய வருடாந்த சனத்தொகையுடன் ஒப்பீடு செய்யும் போது 2012 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 264,811 தொகையான தனிநபர் கடன் பெறுமதி 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,234,358 தொகை வரை அதிகரித்திருந்தது. அதேபோல் அது 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 759,471 தொகைக்கான தனிநபர் கடன்தொகை ஒப்பீடு செய்யும் போது ரூபா 474,887 தொகையினால் அதாவது சுமார் 62.53 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## அரச வருமானம் குறைவடைந்து கடன் தவணை மற்றும் வட்டி கொடுப்பனவு அதிகரித்தல்

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது தேறிய கடன் கொடுப்பனவு (உள்நாடு மற்றும் வெளிநாடு) ரூபா 1,865,589 மில்லியன் தொகையினால் அதிகரித்திருந்ததுடன் கடனுக்கான வட்டி கொடுப்பனவும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 516,807 மில்லியன் தொகையினால் அதாவது 49.30 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுகளின் போது போலவே மீளாய்வாண்டின் போதும் கடன் தவணைகள் மற்றும் வட்டி செலுத்துவதற்காக சேகரிக்கப்பட்ட வருமானம் போதியளவானதாக காணப்படவில்லை. விபரங்கள் வரைபடம் 12 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




வரைபடம் 12 - கடன் தவணை மற்றும் வட்டி செலுத்துவதற்காக சேகரிக்கப்பட்ட வருமானம் போதியளவாக காணப்படாமை

மூலம் - அரச நிதிக் கூற்றுக்கள் 2013-2022 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் தவணை

# நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகள


## கணக்காய்வு அவதானிப்புக்கள

- நீர் வழங்கல் அமைச்சு
    - நடமாடும் நீர் தரத்தை பரிசோதிக்கும் வாகனம் பயன்படுத்தாமை.
- தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்
    - மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்காக யேமெ குடைவநசள 80 என்ற குறித்துரைத்த அளவில் வழங்காமை.
    - ஒரு வருட காலத்தின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய 04 செயற்திட்டங்களில் ஒருசெயற்திட்டத்தில் பம்பிக் கூடம் மாத்திரம் நிர்மாணித்தல்
    - நீர் மானிகளின் ஒரு உத்தரவாத காலத்தில் பயன்பாட்டிற்கு எடுக்காமை.
    - நீர் வழங்கல் செயற்திட்டங்களின் பொறியியளாளர்களின் பெறுமதியை விஞ்சி ஒப்பந்தம் கையளித்தல்.
- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை
    - நீர் வழங்கல் இலக்குகள் அடையப்படாமை
    - தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்காக அரசாங்கத்தின் பங்களிப்பு
    - அரசாங்கத்தின்  நிதியத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டம்
    - லக்கல புதிய நகர நீர் வழங்கல் செயற்திட்டம்
    - சகலருக்கும் நீர் நிகழ்ச்சித்திட்டம்
    - நீர் இன்றிய சந்தர்ப்பங்களின் போது நீரை பகிர்ந்தளிப்பதற்காக 30 கெப் வண்டிகள் கொள்வனவு செய்தல
    - நீர் வழங்கல் சபையின் உத்தியோகத்தர்கள் அமைச்சிற்காக விடுவித்தல்
    - மிகை ஊதிய படி செலுத்துதல்
    - கடன்பட்டோர் மீதியை அறவிடல்

# நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகள்


ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 இன் நிகழ்ச்சி நிரலில் நீர் மற்றும் சுகாதாரம் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 06 இன் பிரகாரம் சகலருககும் நீர் மற்றும் சுகாதார வசதிகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் நிலைபேறான முகாமைத்துவ உறுதிப்படுத்தல் ஒன்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட இலக்கை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் ஒட்டு மொத்த நீர் வழங்கல் தொடர்பாக அரசாங்கத்தின் பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக நீர் வழங்கல் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள சமூக நீர் வழங்கல் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, நீர் வளங்கள் சபை, நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம், சீனா, இலங்கை ஆராய்ச்சி மானிய செயற்திட்டம் போன்ற நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டில் நீர் வழங்கல் அமைச்சு செலவின தலைப்பின் கீழ் ரூபா 32,223 மில்லியன் தொகையும், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்காக ரூபா 941 மில்லியனும் ஆக வருடாந்த வரவு செலவுத் திட்ட பாதீட்டு நிதியேற்பாடு கிடைத்திருந்ததுடன் முறையே ரூபா 31,156 மில்லியன் மற்றும் 787 மில்லியன் அதாவது 96.69 சதவீதம் மற்றும் 83.63 சதவீதம் இந்த துறைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

நாட்டில் பாதுகாப்பான குடிநீர் மேவுகையின் கீழ் குழாய் நீர் மேவுகை பிரதானமாக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஒட்டு மொத்த சனத்தொகையில் குழாய் நீர் மேவுகையின் சதவீதம் 60.2 சதவீத பெறுமதியைக் கொண்டிருந்தது.




வரைபடம் : 13 நாட்டில் குடிநீர் குழாய்நீர் விநியோகம் 2015 முதல் 2022 ஆம் ஆண்டு வரை - குழாய் நீர் நுகர்வு மக்கள் தொகையின் சதவீதமாக

மூலம்: தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை




வரைபடம் : 14 நாட்டில் குடிநீர் குழாய்நீர் விநியோகம் (2015 முதல் 2022 வரை) - குடிநீர் விநியோகம்
மூலம்: தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நாட்டில் குடிநீர் வழங்கலின் முக்கிய முன்னுரிமைப் பணிப்பொறுப்பை வழங்குவதுடன் 2022 ஆம் ஆண்டு வரை சபையினால் நாட்டில் ஒட்டு மொத்த குடிநீர் வழங்கலில் 46.6 சதவீதம் அளவை மேவுகை செய்திருந்தது. எனினும், 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் நாட்டின் ஒட்டு மொத்த குடிநீர் வழங்கலில் 4.5 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் அந்த அதிகரிப்புக்கு சபையின் பங்களிப்பு 0.7 சதவீதம் மாத்திரமாக இருந்ததுடன் சமூக அடிப்படையிலான அமைப்புக்களில் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களில் இருந்து கிடைத்த பங்களிப்பு 3.7 சதவீதம் அளவில் அதிகரித்திருந்தது.

**நீர் வழங்கல் அமைச்சு**

“சகலருக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதாரம்” என்ற தூரநோக்கின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நீர் வழங்கல் அமைச்சின் ஒட்டு மொத்த சனத்தொகைக்கும் பாதுகாப்பான மற்றும் போதியளவான குடி நீர் வசதிகளை வழங்குவதற்காக தேவையான நுழைவை சான்றுபடுத்துதல் ஒவ்வொருவருக்கும் போதியளவான மற்றும் நியாயமான சுகாதார வசதிகளை உறுதிப்படுத்துதல் பிரதான நோக்கங்கள் ஆகும். அதற்காக அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- குடி நீர் வழங்கல் மற்றும் சுகாதார விடயத்திற்குரிய கொள்கைகளை தயாரித்தல்
- தேசிய வரவு செலவுத் திட்ட நிதியேற்பாட்டின் கீழ் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல்.
- அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் விடயங்கள் மற்றும்

பணிகள் தொடர்பான கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல் மற்றும் அமுல்ப்படுத்துதல், மேற்பார்வை மற்றும் மதிப்பீடு

**நடமாடும் நீர் தரத்தை பரிசோதிக்கும் வாகனம் பயன்படுத்தாமை.**

சீனா அரசாங்கத்தினால் மானியமாக வழங்கல் அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட ரூபா 39 மில்லியன் பெறுமதியான நடமாடும் நீர் தர பரிசோதனை வாகனம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு பரிசோதனை நடவடிக்கைகளுக்காகவும் ஈடுபடுத்தப்படாமல் பயனற்று அமைச்சின் வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்காக யேழெ குடைவநசள 80 என்ற குறித்துரைத்த அளவில் வழங்காமை.**

2021 ஆம் ஆண்டின் பாதீட்டு நிதி ஏற்பாட்டின் கீழ் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கும் நோக்கில் யேழெ குடைடநசள 80 ஐ வழங்கி பொருத்துவதற்கு திணைக்களம் ஒப்பந்தத்தை கையளித்திருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2022 திசெம்பர் 31 வரை ரூபா 121 மில்லியன் செலவிடப்பட்டு அதில் 25 மில்லியன் ஆன நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. யேழெ குடைவநசள 80 வழங்கி பொருத்துவதற்கு திட்டமிடப்பட்ட புத்தளம், குருநாகல், அநுராதபுரம் மற்றும் மொனராகலை என்ற மாவட்டங்களில் 2023 யூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் இந்த பிரதேசங்களுக்காக ரூபா 35.96 மில்லியன் செலவில் கொள் வனவு செய்யப்பட்டிருந்த 30 யேழெ குடைவநசள களில் 03 மாத்திரம் வழங்கி பொருத்தப்பட்டிருந்தது.

**ஒரு வருட காலத்தின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய 04 செயற்திட்டங்களில் ஒருசெயற்திட்டத்தில் பம்பிக் கூடம் மாத்திரம் நிர்மாணித்தல்**

அநுராதபுரம் மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 53.5 மில்லியன் ஆன 04 நீர் செயற்திட்டங்களுக்குரிய ஒப்பந்தம் 2021 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிர்மாணம் ஒரு வருட அளவிலான காலத்தின் போது பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. இந்த செயற்திட்டத்திங்களில் இருந்து ஒரு செயற்திட்டத்தில் மாத்திரம் பம்பிக் கூடம் நிர்மாணித்து பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மிகுதி வேலைப் பகுதிகள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**நீர் மானிகளின் ஒரு உத்தரவாத காலத்தில் பயன்பாட்டிற்கு எடுக்காமை.**

மீளாய்வாண்டில் ரூபா 4.3 கூட்டுத்தொகையான செலவினத்தை செய்து ஒரு வருட உத்தரவாத காலத்துடன் 945 நீர் மானிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2023 மார்ச் வரையிலும் அந்த நீர் மானிகள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம்

பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. அதன் பிரகாரம் உத்தரவாத காலத்துடன் கொள்வனவு செய்யப்பட்ட அந்த நீர்மானிகளை கொள்வனவு செய்தல் விளைவற்று இருந்தது.

**நீர் வழங்கல் செயற்திட்டங்களின் பொறியியளாளர்களின் பெறுமதியை விஞ்சி ஒப்பந்தம் கையளித்தல்.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 05 நீர் வழங்கல் செயற்திட்டங்களுக்குரிய மற்றும் மொனராகலை பிரதேசத்தில் 04 நீர் வழங்கல் செயற்திட்டங்களுக்குரிய பொறியியலாளர் மதிப்பீட்டு பெறுமதியை விஞ்சி 24 சதவீதம் முதல் 29 சதவீதத்திற்கு அதிகமான பெறுமதியில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு விஞ்சியமையினால் ஒப்பந்தங்களில் மொத்தக் கிரயங்களின் கூட்டுமொத்தம் ரூபா 14.5 மில்லியனாக இருந்தது.

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

**நீர் வழங்கல் இலக்குகள் அடையப்படாமை**

இலங்கையில் பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவதற்கான வசதிகளை வழங்குதல் பிரதான நிறுவனமான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்காக 2022 – 2025 ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தில் நீர் செயற்திட்டத்தின் கீழ் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட புதிய நீர் இணைப்புக்களின் எண்ணிக்கையை உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் போது புதிய நீர் இணைப்புக்களின் 327,685 வழங்குவதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டு பின்னர் அந்த நீர் இணைப்புக்கள் 190,000 வரை குறைக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதியில் சபை வழங்கிய உள்ளபடியான நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை 153,217 மாத்திரம் ஆகும்.

| செயலாற்றல் குறிகாட்டிகள் | அலகுகள் | 2022 | |
|---|---|---|---|
| | | இலக்கு | அடையப்பட்ட இலக்கு |
| பாதுகாப்பான குடிநீர் மேவுகை | சனத்தொகையில் சதவீதம் | - | 94.3 |
| பாதுகாப்பு குழாய் நீர் மேவுகை | சனத்தொகையில் சதவீதம் | 51.3 | 46.6 |
| புதிய நீர் வழங்கல் இணைப்புக்கள் | எண்ணிக்கை | 190,000 | 153,217 |
| பாதுகாப்பான குழாய் மலம் அகற்றும் வசதிகள் | சனத்தொகையில் சதவீதம் | 2.1 | 2.08 |
| வருமனம் கிடைக்காத நீர் வழங்கல் | | | |
| கொழும்பு நகரம் | சுத்திகரிக்கப்பட்ட நீரின் சதவீதம் | 18 | 24.11 |
| நாடு முழுவதும் | சுத்திகரிக்கப்பட்ட நீரின் சதவீதம் | 23 | 25.24 |

அட்டவணை 17

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்காக அரசாங்கத்தின் பங்களிப்பு**

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அரசாங்கத்தின் பங்கு பற்றலின் அடிப்படையில் சபையினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களில் இருந்து செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட கடனின் பெறுமதி ரூபா 334,844 மில்லியனாக இருந்தது. அதற்காக ஆண்டில் ரூபா 21,426 மில்லியன் நிதி செலவினம் ஒன்று செய்யப்பட்டு இருந்தது. மேலும் தெரிவு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 16 செயற்திட்டங்களுக்காக ரூபா 3,213.50 மில்லியன் கடப்பாட்டு கட்டணம் (ஊழஅஅவைஅநவெ ஊாயசபநள) 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 115,115 மில்லியன் செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட கடன் மற்றும் வட்டி அரசாங்கத்தின் உரித்தாக்கப்பட்டது. அதன் பிரகாரம் அந்தக் கடன் மற்றும் வட்டி அரசாங்கத்தினால் செலுத்த வேண்டியிருந்தது.

**அரசாங்கத்தின் நிதியத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டம்**

**லக்கல புதிய நகர நீர் வழங்கல் செயற்திட்டம்**

சிறுநீரக நோயாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய அளவு உலர் வலயத்தில் லக்கல பிரதேசத்தில் மக்களுக்கு அபிவிருத்தி செய்யப்பட்ட

பாதுகாப்பான குடிநீர் வசதிகளை வழங்கும் நோக்கில் ரூபா 4,496 மில்லியன் உள்நாட்டு நிதிய பங்களிப்பில் வழங்கும் இணக்கப்பாட்டுடன் 2014 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 02 வருடங்களில் அந்த நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு ஆரம்பமாக திட்டமிடப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டில் முடிவடையும் வரையில் செயற்திட்டத்திற்காக ரூபா 2,387 செலவில் செலவிடப்பட்டிருந்தது. பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக தாமதமடைந்திருந்தது.

### சகலருக்கும் நீர் நிகழ்ச்சித்திட்டம்

2025 ஆம் ஆண்டு வரையில் சகல இலங்கையருக்கும் சுத்தமான குடிநீரை வழங்கும் நோக்கில் ரூபா 1,132.5 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டத்திற்காக 2020, 2021 மற்றும் 2022 என்ற ஆண்டுகளுக்காக முறையே ரூபா 24,568 மில்லியன், ரூபா 29,568 மில்லியன் மற்றும் ரூபா 17,000 மில்லியன் அரசாங்கத்தின் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டிற்காக அமைச்சுக்கு நிதியம் (கட்டுநிதி) கிடைத்திருக்கவில்லை. செயற்திட்ட செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அந்த செயற்திட்டங்களில் இருந்து 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 7,559 மில்லியன் மற்றும் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 5,400 மில்லியன் மாத்திரம் கிடைத்தமையின் காரணமாக செயற்திட்ட காலம் 2914 ஆன செயற்திட்ட செயற்பாடுகளில் கணக்காய்வு திகதியான 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 1,330 செயற்பாடுகள் அதாவது 06 சதவீத மற்றும் 6 சதவீதத்திற்கு குறைந்த செயல் முறை பெறுமதியை அடையப்பட்டிருந்தது.

### நீர் இன்றிய சந்தர்ப்பங்களின் போது நீரை பகிர்ந்தளிப்பதற்காக 30 கெப் வண்டிகள் கொள்வனவு செய்தல்

நீர்மூலங்கள் காணப்படாமை, குறைந்த ஈரப்பதன் உள்ள பிரதேசங்களில் நுகர்வோருக்கு நீர் இன்றிய சந்தர்ப்பங்களில் நீரை பகிர்ந்தளிப்பதற்காக பெரும்பாகம் கொழும்பு மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் மூலம் ரூபா 228,540,780 பெறமதியான சிறிய ரக கெப் 30 கெப் வண்டிகள் (உசநற உயடி) கொள்வனவு செய்யப்பட்டதுடன் அந்த கெப் வண்டிகளில் நீர் தாங்கி பொருத்துவதற்காக தட்டுக்கள் அமைப்பதற்கும் தண்ணீர் மோட்டார் மற்றும் துணைப்பாகங்களை வழங்குவதற்கும் ரூபா 24 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் அந்த பொருத்தப்பட்ட தட்டுக்கள் அகற்றப்பட்டு வேறு நடவடிக்கைகளுக்காக அந்த கப் வண்டி ஈடுபடுத்தப்பட்டிருந்தது. ஆதன் பிரகாரம் தட்டினை பொருத்துதல் மற்றும் துணைபாகங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 24 மில்லியன் பயனற்ற செலவினமாக இருந்தது.

**நீர் வழங்கல் சபையின் உத்தியோகத்தர்கள் அமைச்சிற்காக விடுவித்தல்**

2021 நவம்பர் 17 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட செயல் கைநூலில் பிரிவு 3.5 இற்கு முரணாக 2022 ஆம் ஆண்டில் சபை மூலம் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட 15 உத்தியோகத்தர்களுக்காக சம்பளம் மற்றும் படியாக ரூபா 23 மில்லியன் சபையினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்தப் பெறுமதியினையும் உள்ளடக்கி 2015 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 வரை நீர் வழங்கல் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிளாக செலுத்தபபட்ட 239 மில்லியன் தொகை சமூக நீர் வழங்கல் அமைச்சினால் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபைக்கு மீளளிப்புச் செய்ய வேண்டியதாக காணப்பட்டது.

**மிகை ஊதிய படி செலுத்துதல்**

பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 17 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட செயற்பாட்டு கைநூலின் பிரகாரம் ஊக்குவிப்பு படி மிகை ஊதிய படி, ஊக்குவிப்பு படி இலாபத்தை ஒன்றிணைந்த நிதியத்திற்கு அனுப்பிய பின்னரே செலுத்த வேண்டியிருந்தது. அதற்கு முரணாக சபையினால் ரூபா 3.2 பில்லியன் நட்டம் ஒன்றை பெற்றிருக்கும் போது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டிற்காக மிகை ஊதிய படிக்கு பதிலாக வினைத்திறன் படியாக ரூபா 269 மில்லியன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாமைப்புச் சபையினால் அதன் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**கடன்பட்டோர் மீதியை அறவிடல்**

சபைக்கு சொந்தமான 02 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாத வியாபார கடன்கடன்பட்டோர், புதிய இணைப்புகளின் கடன்பட்டோர், மலம் அகற்றல் கடன்பட்டோர், துண்டிப்பு கடன்பட்டோர், மற்றும் ஏனைய கடன்பட்டோரில் ரூபா 1,791.25 மில்லியன் மீதி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்டது. மேலும் 03 தவணைகளில் அறவிட வேண்டிய ரூபா 5.6 மில்லியன் ஆன புதிய இணைப்புக்களுக்கான நீர்க்கட்டணம் 03 வருடங்களை விஞ்சியிருந்த போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. ரூபா 15.6 மில்லியன் செலவு மீதியாகக் காணப்படுகின்ற புதிய இணைப்பு கடன்பட்டோர் மீதி ஆண்டின் இறுதி வரையிலும் காணப்படுகின்ற போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# பொது மக்கள் பாதுகாப்பு துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

- பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு
    - விசேட அதிரடிப்படை படையணி ஒன்று மாலி அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்படுவதற்கு இயலாதிருந்தமை
    - விசேட அதிரடிப்படை படையணிக்காக போதிய மற்றும் வலுவான ஊடக வலையமைப்பை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய இயலாமை
- இலங்கை பொலிஸ்
    - பதவியணி வெற்றிடங்களை நிரப்பியிராமை
    - ஒதுக்கீட்டுப் பயன்பாடு
    - பொலிஸ் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டிராமை
    - சார்க் பயங்கரவாத மற்றும் போதைப் பொருள் தவறுகளை அவதானிக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக பெறப்பட்டிருந்த பணத்தை குறித்த செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிராமை
    - ஹபராதுவ “நில செவன” திட்டத்தில் வீடுகளை முறையாக கையேற்கும் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்திருக்கவில்லை.
    - வாகனங்களை நிறுத்திவைப்பதற்கு போதுமான இடவசதியற்ற கட்டிடம் ஒன்றை வாடகைக்கும் பெறுதல்.
    - வாகனங்களின் வேக எல்லையை பரீட்சிக்கும் உபகரணங்களைக் கொள்வனவு செய்திராமை
    - தவறிழைக்கப்படும் தடவைகளின் எண்ணிக்கை தொடர்பில் தகவல் முறைமை ஒன்றை இலங்கை பொலிஸ் மூலம் நடைமுறைப்படுத்தியிராமை
    - பொலிஸின் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பாக தகவல்கள் இன்மை
    - பொலிஸ் வெகுமதி செலுத்தும் பெறுமதியை தீர்மானிப்பதற்காக குறித்த அடிப்படை இன்மை

- குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்
    - திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானத்தைப் பார்க்கிலும் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளல்
    - ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறை வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு தேசிய சம்பளங்கள், பதவியணிகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை
    - வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்தில் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த இடவசதிகளிற்காக வாடகை அறவிடப்பட்டிராமை.
    - இரட்டைக் குடியுரிமைப் பரிந்துரைக் குழுவின் மூலம் எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தை அறிவிப்பதற்கு உரிய சான்றுகள் இன்மை
- ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
    - திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டைப் பார்க்கிலும் கூடுதலான வருமானத்தைப் பெற்றுக் கொள்ளல்.
    - அடையாள அட்டை வழங்குவதில் தாமதம்
    - குறைபாடுகளுடன் அடையாள அட்டைகளை அச்சிடுதல்
    - வழமையான சேவையில் அடையாள அட்டைகள் வழங்கப்படுதல

# பொது மக்கள் பாதுகாப்பு துறை

பொது மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை நோக்காகக் கொண்டு இலங்கை பொலிஸ் சேவையில் சேவை நிலையை உயர்த்துதல், போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்தும் பணிகள், நாட்டின் உள்ளகப் பாதுகாப்பை உறுதி செய்தல், சமூச விரோத மற்றும் குற்றச் செயல்களைத் தடுத்தல், மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பாதுகாப்பையும் பராமரிப்பையும் உறுதிப்படுத்துதல், முறையான போக்குரத்துக் கட்டுப்பாடு மற்றும் அதனை நவீனமயமாக்குதல், அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து தலையிடல், ஆட் பதிவு மற்றும் குடிவரவு மறறும் குடியகல்வு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல், அபாய ஔடதங்களின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் இவ் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அடிப்படைச் செயற்பாடுகளாக இனங்காணப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டின் போது மேற்குறித்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சால் ரூபா 12,095 மில்லியன் தொகையான தேறிக ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 11,274 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

மேற்குறித்த செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள் தொகுக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

### பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு

#### விசேட அதிரடிப்படை படையணி ஒன்று மாலி அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்படுவதற்கு இயலாதிருந்தமை

ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் கடமைகளிற்காக விசேட அதிரடிப்படைப் போர்ப் படையணி ஒன்று மாலி அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்படுவதற்காக 160 உத்தியோகத்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு இதற்காக 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 160 உத்தியோகத்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சிகளும் வழங்கப்பட்டு இதற்காக 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 1,780 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவ் உத்தியோகத்தர்கள் அமைதி காக்கும் கடமைகளிற்காக சேர்க்க முடியாதிருந்தது.

#### விசேட அதிரடிப்படை படையணிக்காக போதிய மற்றும் வலுவான ஊடக வலையமைப்பை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய இயலாமை

விசேட அதிரடிப்படை படையணிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு

போதுமானதும் வலுவானதுமான தகவல் தொடர்பு வலையமைப்பை ஏற்படுத்துவதற்கு ரூபா 196 மில்லியன் பெறுமதியான ஓர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இதற்காக வழங்கப்பட்ட உபகரணங்களுக்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 159 மில்லயின் செலவிடப்பட்டிருந்தது. தொடர்பு வலையமைப்பு 2017 முதல் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது ஸ்தாபிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் இச் செயற்திட்ட நடவடிக்கைகள் முற்றாக நிறைவேற்றப்பட்டிராமையால் எதிர்பார்க்கப்பட்ட வலுவான தொடர்பு வலையமைப்பை உருவாக்குவதற்கு விசேட அதிரடிப்படை படையணிக்கு இயலாதிருந்தது.

**இலங்கை பொலிஸ் பதவியணி வெற்றிடங்களை நிரப்பியிராமை**

இலங்கை பொலிஸ் 45 பிராந்திய பொலிஸ் பிரிவுகளையும் 79 செயற்பாட்டு பொலிஸ் பிரிவுகளையும் கொண்டுள்ளதுடன் நாடெங்கிலும் 607 பொலிஸ் நிலையங்கள் உள்ளன. இப் பொலிஸ் பிரிவுகள் மற்றும் பொலிஸ் நிலையங்களில் சீருடைப் பணியாட்களாக 85,144 பேரும், பொலிஸ் துணைச் சேவைப் பதவியணியாட்களாக 1272 பேரும், சிவில் பதவியணியாக 4,279 பதவியணியாட்களுமாக 90,695 கூட்டுத்தொகையானோர் கடமையாற்றுவதுடன் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 24,327 ஆகக் காணப்பட்டது.

**ஒதுக்கீட்டுப் பயன்பாடு**

இலங்கை பொலிஸிற்காக ரூபா 100,779 மில்லியன் தொகையான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதில் மீண்டெழும் ஒதுக்கீட்டில் ரூபா 94,368 மில்லியனான 96 சதவீதமும் மூலதன ஒதுக்கீட்டில் ரூபா 6,411 மில்லியனான 70 சதவீதமும் 2022 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

**பொலிஸ் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டிராமை**

பொலிஸ் கட்டளைச் சட்டத்தைத் திருத்த வேண்டிய தேவைப்பாடு 2014 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்டிருந்தது. சட்டம் துற்போதைய மற்றும் எதிர்கால சமூக மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சித் தேவைப்பாடுகளுக்கு ஏற்றவகையில் நாளதுவரையாக்கப்பட்டு திருத்தப்படுவதற்காக 2014 நவம்பர் 19 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**சார்க் பயங்கரவாத மற்றும் போதைப் பொருள் தவறுகளை அவதானிக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக பெறப்பட்டிருந்த பணத்தை குறித்த செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிராமை**

2013 ஆம் ஆண்டின் போது சார்க் பயங்கரவாத மற்றும் போதைப் பொருள் தவறுகளை அவதானிக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இந்தியாவில் இருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 46 மில்லியன் தொகையான நன்கொடைத் தொகையில் எஞ்சியிருந்த ரூபா 12 மில்லியன் தொகை குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்கில்

வைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதற்காக மேற்கொண்ட வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**ஹபராதுவ "நில செவன" திட்டத்தில் வீடுகளை முறையாக கையேற்கும் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்திருக்கவில்லை.**

ஹபராதுவ "நில செவன" திட்டத்தில் வீடொன்றை ரூபா 4 மில்லியன் படி 192 வீடுகளை ரூபா 730 மில்லியன் பெறுமதிக்குக் கொள்வனவு செய்யப்படுவதற்கு 2017 திசெம்பர் 29 ஆம் திகதி ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2019 ஏப்ரல் 02 ஆம் திகதி வரையிலும் ரூபா 500 மில்லியன் தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் இவ் உத்தியோகபூர்வ வீடுகளின் தேவைப்பாடுகள் மற்றும் கோரல்கள் தொடர்பான சரியான ஆய்வொன்று மேற்கொள்ளப்படாது கொள்வனவு செய்யப்படுவதற்கு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக குறித்த பொது வசதிகள் உள்ளடங்கலாக 192 வீடுகள் முறைப்படி கையேற்கப்படும் நடவடிக்கைகளும் 2023 மார்ச் மாதம் வரையிலும் பூர்த்தியடைந்திருக்கவில்லை.

**வாகனங்களை நிறுத்திவைப்பதற்கு போதுமான இடவசதியற்ற கட்டிடம் ஒன்றை வாடகைக்கும் பெறுதல்.**

புயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவு மற்றும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட 04 பொலிஸ் பிரிவுகளையும் பராமரிப்பதற்காக வாகனங்களை நிறுத்திவைப்பதற்குப் போதுமான இடவசதியற்ற கட்டிடம் ஒன்று ரூபா 235 வாடகைக்குப் பெறப்பட்டிருந்ததுடன் அங்கு மோட்டார் வாகனங்களை மேலும் கீழும் கொண்டு செல்வது உள்ளடங்கலாக மின்சாரக் கட்டணங்களுக்காக மாதாந்தம் ரூபா 3 மில்லியன் அளவில் செலுத்தப்படுவதற்கிருந்த போதிலும் மேலும் 02 ஆண்டுகளுக்காக இக் கட்டிடம் ரூபா 250 மில்லியனிற்கு மீள வாடகைக்குப் பெறப்பட்டிருந்தது.

**வாகனங்களின் வேக எல்லையை பரீட்சிக்கும் உபகரணங்களைக் கொள்வனவு செய்திராமை**

வாகனங்களின் வேக எல்லையை பரீட்சிக்கும் 25 உபகரணங்கள் இறுதியாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை 2016 ஆம் ஆண்டிலும் இதற்கு முன்னர் 2014 ஆம் ஆண்டின் போது 30 உபகரணங்களும், 2010 ஆம் ஆண்டின் போது 100 உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இவ் உபகரணங்களில் பெருமளவிலானவை தற்போது செயலிழந்த நிலையில் காணப்பட்டன. 2018 – 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது வருடாந்தம் தன்னியக்க வேகக் கணிப்பு இயந்திரம் (Automatic Speed Trap) 500 படி வாகனக் கட்டுப்பாட்டு மற்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான பிரிவால் கோரப்பட்டிருந்த போதிலும் அவை கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

**தவறிழைக்கப்படும் தடவைகளின் எண்ணிக்கை தொடர்பில் தகவல் முறைமை ஒன்றை இலங்கை பொலிஸ் மூலம் நடைமுறைப்படுத்தியிராமை**

2019 இ ன் 10 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்தல்) சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மோட்டார் வாகன தவறுகள் நிகழும் தடவைகளின் படி, தண்டனைப்பணம் அறவிடப்படும் முறைகுறித்து 2019 யூன் 20 ஆம் திகதி முதல் அமுலாகிய போதிலும் வாகனத் தவறுகள் தொடர்பாக தவறிழைப்பவர்கள் ஒரே தவறைப் புரியும் தடவைகளை தெளிவாக இனங்காணக் கூடிய வகையில் தகவல் முறைமை ஒன்றை இலங்கை பொலிஸ் மூலம் நடைமுறைப்படுத்தியிராததன் காரணமாக ஒரே தவறை பலமுறை புரியும் குற்றவாளிகளிடம் இருந்து சரியான தண்டப்பணத்தை அறவிட்டுக்கொள்வதற்கு இயலாதிருந்தது.

**பொலிஸின் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பாக தகவல்கள் இன்மை**

2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பொலிஸின் மொத்த வெற்றிட எண்ணிக்கை 24,327 ஆகக் கணிப்பிடப்பட்டிருந்த போதிலும், பொலிஸ் பிரிவுகள் மற்றும் பொலிஸ் நிலையங்களின் கடமைகளின் தன்மை தொடர்பான ஆய்வை அடுத்து குறிப்பாக இனங்காணப்பட்ட பதவியணி இன்மையால் அப் பிரிவு மற்றும் பொலிஸ் நிலையங்களில் வெற்றிடம் நிலவுகின்றதா அல்லது மிகையாக உள்ளதா என்பது குறித்து குறிப்பாகக் கூற முடியாதிருந்தது. இந் நிலையில் பதவியணியை நிலையத்தில் ஈடுபடுத்துவது முறையான செயன்முறையின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**பொலிஸ் வெகுமதி செலுத்தும் பெறுமதியை தீர்மானிப்பதற்காக குறித்த அடிப்படை இன்மை**

பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 73 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கு உரித்தான அரச பாதுகாப்பு அமைச்சரால் தயாரிக்கப்பட்ட கட்டளை 1990 மார்ச் 09 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டிருந்ததுடன் அக் கட்டளை நடைமுறைக்கு ஏற்ற வகையில் நாளதுவரையாக வேண்டியிருந்தது. இங்கு வெகுதித் தொகையை நியாயமான அடிப்படையில் செலுத்துதல், கொடுப்பனவுப் பெறுமதியை தீர்மானித்தலுக்காக நிச்சயிக்கப்பட்ட அடிப்படை ஒன்று இன்மையால் நிதியம் தொடர்பான பிரிவுகள் நாளதுவரையாக்கப்படும் தேவைப்பாடு காணப்பட்டது.

2015 – 2022 காலப்பகுதிக்கு உரித்தான பொலிஸ் வெகுமதி நிதியத்தின் முக்கிய வருமானம், செலவினம் மற்றும் முதலீட்டுப் பெறுமதி தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும். விபரம் அட்டவணை 18 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| விபரம் | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| பிரதான வருமானம் | | | | | | | | |
| நீதிமன்றத் தண்டப்பணம் | 713 | 845 | 962 | 1,014 | 984 | 1,017 | 925 | 1,312 |
| வாகன தண்டப்பணம் | 438 | 643 | 668 | 945 | 1, 219 | 646 | 698 | 623 |
| நிலையான வைப்பு வட்டி | 325 | 469 | 819 | 1,014 | 1,275 | 1,198 | 902 | 2,045 |
| கூட்டுத்தொகை | 1,476 | 1,957 | 2,449 | 2,973 | 3,478 | 2,861 | 2,525 | 3,980 |
| பிரதான செலவினம் | | | | | | | | |
| வெகுமதிக் கொடுப்பனவு | 567 | 685 | 715 | 885 | 872 | 1,427 | 981 | 1,185 |
| நலன்புரி | - | - | - | - | 6 | 93 | 125 | 360 |
| கூட்டுத்தொகை | 567 | 685 | 715 | 885 | 878 | 1,520 | 1,106 | 1,545 |
| பிரதான வருமானத்தின் செலவின சதவீதம் | 38% | 35% | 29% | 30% | 25% | 53% | 44% | 39% |
| நிலையான வைப்புப் பெறுமதி | 5,333 | 6,750 | 8,123 | 9,824 | 12,307 | 14,071 | 15,869 | 17,481 |

அட்டவணை - 18 பொலிஸ் வெகுமதி நிதியத்தின் முக்கிய வருமானம், செலவினம் மற்றும் முதலீட்டு பெறுமதி தொடர்பான விபரம்

மூலம்: பொலிஸ் வெகுமதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2015 – 2022

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட ஏனைய விடயங்கள் பின்வருமாறாகும்.

- 2020 மற்றும் 2021 ஆகிய இரு ஆண்டுகளைத் தவிர எஞ்சிய ஆண்டுகளின் போது பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி செலுத்துதல் மற்றும் அவர்களின் நலன்புரி நடவடிக்கைகளிற்காக 40 சதவீதத்தைப் பார்க்கிலும் குறைவான சதவீதம் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது.
- 2022 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த மொத்தப் பெறுமதி ரூபா 1,490 மில்லியன் ஆன நிலையான வைப்புக்கள் 4 இற்கு உரித்தாக 2022 செப்தெம்பர் மாதத்தின் போது அவ் வைப்புகள் இரத்துச் செய்யப்பட்டு கூடுதலான வட்டி வீதத்தில் வைப்புச் செய்யப்பட்டதன மூலம் ஏற்படும் நலன், குறைகளைக் கணக்கிடப்பட்டதை அடுத்து நிலவும் முதலீட்டை இரத்துச் செய்து மீள முதலீடு செய்யப்படுவதன் மூலம் ரூபா 18 மில்லியன் தொகையான மேலதிக வருமானத்தை ஈட்ட முடியும் என்பது இனங்காணப்பட்டிருந்ததுடன் தீர்மானம் எடுப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இது கிடைக்கப்பெறாது போயிற்று.

**குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்**

**திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானத்தைப் பார்க்கிலும் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளல்**

2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் மூல மதிப்பீட்டு வருமானம் ரூபா 8,480 மில்லியனானதுடன் திருத்தப்பட்ட மதிப்பீட்டு வருமானம் ரூபா 23,500 மில்லியன் தொகையான அதாவது மூல மதிப்பீட்டின் 177 சதவீதமாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் உள்ளபடியான வருமானம் ரூபா 23,834 மில்லியன் தொகையானமையால் திருத்தப்பட்ட வருமானத்தைப் பார்க்கிலும் கூடுதலாக ரூபா 335 மில்லியன் தொகையான வருமானம் ஈட்டப்பட்டிருந்தது.

**ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறை வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு தேசிய சம்பளங்கள், பதவியணிகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை**

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் நடைமுறைப்படுத்தப்படும் ஊக்குவிப்பு முறைமை, வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு தேசிய சம்பளங்கள், பதவியணிகள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு அமைவாக தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டின் பின்னர் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் படி, 2022 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவின் பெறுமதி ரூபா 192 மில்லியனாகும்.

**வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்தில் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த இடவசதிகளிற்காக வாடகை அறவிடப்பட்டிராமை.**

பத்தரமுல்ல சுகுருபாய கட்டிடத்தின் முதலாம் மாடியில் இருந்து ஏழாம் மாடி வரையிலும் பியச வளாகத்தில் ஒரு பகுதிக்கு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தால் வாடகை செலுத்தப்படுவதுடன் முதலாம் மாடி சில வங்கிகளுக்கும் (BOC,NSB,PEOPLE'S BANK,SAMPATH BANK) இரண்டாம் மாடி இரு குரியர் நிறுவனங்களுக்கும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் பொருட்டு இடவசதியளிக்கப்பட்டிருந்த போதிலும் அந் நிறுவனங்களிடம் இருந்து வாடகையோ அல்லது வேறு கொடுப்பனவுகளோ அறவிடப்பட்டிருக்கவில்லை.

**இரட்டைக் குடியுரிமைப் பரிந்துரைக் குழுவின் மூலம் எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தை அறிவிப்பதற்கு உரிய சான்றுகள் இன்மை**

இரட்டைக் குடியுரிமைப் பரிந்துரைக் குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்டு பணம் செலுத்தப்படுவதற்காக விண்ணப்பதாரர்களை அறிவூட்டி 2015 ஆம் ஆண்டு முதல் 2022 யூன் 30 ஆம் திகதி வரை 2,160 விண்ணப்பங்கள் காணப்பட்டதுடன் அவ் விண்ணப்பதாரிகளுக்கு உரித்தான சான்றிதழ் விநியோகிக்கப்பட்டு குறித்த

வருமானத்தை சேகரித்துக் கொள்வதற்காக முதலாவது சந்தர்ப்பத்தின் போது தன்னியக்க முறையில் அனுப்பிவைக்கப்படும் மின்னஞ்சல் தவிர வேறு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டைப் பார்க்கிலும் கூடுதலான வருமானத்தைப் பெற்றுக் கொள்ளல்.**

2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான திணைக்களத்தின் மூல வருமான மதிப்பீடு ரூபா 352 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு ரூபா 431 மில்லியனாக அதாவது மூல மதிப்பீட்டின் 122 சதவீதமாகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் உள்ளபடியான வருமானம் ரூபா 552 மில்லியன் தொகையானதுடன் திருத்தப்பட்ட வருமானத்தைப் பார்க்கிலும் ரூபா 121 மில்லியன் தொகையான வருமானம் ஈட்டப்பட்டிருந்தது.

**அடையாள அட்டை வழங்குவதில் தாமதம்**

சான்றளிக்கும் உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அடையாள அட்டைகள் 07 நாட்களுக்குள் அடையாள அட்டைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும், விண்ணப்பங்கள், அடையாள அட்டைப் பிரிவிற்குக் கிடைக்கப்பெறுவதற்கு 10 முதல் 35 நாட்கள் காலதாமதமடைந்திருந்த சந்தர்ப்பங்களைப் போன்று கிராம உத்தியோகத்தர்களால் பிரதேச செயலக அலுவலகங்களிற்கு பணத்தை ஒப்படைப்பதில் 13 முதல் 51 நாட்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

**குறைபாடுகளுடன் அடையாள அட்டைகளை அச்சிடுதல்**

மீளாய்வாண்டின் போது அச்சிடப்பட்ட மொத்த அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 628,973 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 22,497 அதாவது 4 சதவீதமானவை குறைபாடுகளுடன் காணப்பட்டன. இக் குறைபாடுகளுடனான அடையாள அட்டைகள் PVC மற்றும் Polycarbonate எனும் அட்டை வகைகள் இரண்டையும் உள்ளடக்கி இருந்த போதிலும், குறைபாடுகளுடனான முழு அடையாள அட்டைகள், மேற்குறித்த அட்டை வகைகள் இரண்டிற்குரித்தாக வெவ்வேறாக சமர்ப்பிக்கப்படுவதற்கு திணைக்களம் தவறியிருந்தமையால் குறைபாடுகளுடனான அடையாள அட்டைகளுக்கு உரித்தான கிரயத்தைக் கணிப்பிடுவதற்குத் தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**வழமையான சேவையில் அடையாள அட்டைகள் வழங்கப்படுதல்**

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திடம் வழமையான சேவையின் கீழ் 2022 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படாத 650,583 விண்ணப்பங்கள் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது வழமையான சேவையின் கீழ் 675,583 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் திணைக்களத்தால் 2022 திசெம்பர் 31

இல் முடிவுற்ற ஆண்டின் போது வழமையான சேவையின் கீழ் 459,978 தேசிய அடையாள அட்டைகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தமையால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விநியோகிக்கப்பட உள்ள அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 865,639 ஆகக் காணப்பட்டது.

# தேசிய பாதுகாப்பு

## கணக்காய்வு அவதானிப்புக்கள


- பாதுகாப்பு அமைச்சு
    - எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதிக்குள் ஒப்பந்தத்தை பூர்த்திசெய்ய முடியாமை
    - தந்திரோபாய பாதுகாப்புத் தகவல் தொடர்பு வலையமைப்புச் செயற் திட்டத்தின் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட செயற்திறன் நிலையை எய்தியிராமை
    - சொத்துக்கள் ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தப்பட்டிராமை
- தேசிய பாதுகாப்பு நிதியம்
    - வீடமைப்புத் திட்டத்திற்கான பலன்களைச் செலுத்தி முடிக்க இயலாமை
    - வட்டி வீத அதிகரிப்பால் நேர்ந்த நலநன உயரிய அளவில் பயன்படுத்திக் கொண்டிராமை.
- எங்களுக்காக நாங்கள் நிதியம
    - தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளில் மிகச்சிலருக்கே நலன் வழங்கப் பட்டிருந்தமை
- இலங்கை விமானப்படை
- பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி
- ரணவிரு சேவைகள் அதிகாரசபை
- இலங்கை இராணுவம
- இலங்கை கடற்படை
- இலங்கை கரையோர பாதுகாப்பு திணைக்களம்
- வரையறுத்த ரக்னா ஆரக்ஷக லங்கா கம்பனி
- சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகம்
- சிவில் பாதுகாப்புத் திணைக்களம்
- பல்செயற்பாட்டு அபிவிருத்திச் செயலாற்றல் படையணி திணைக்களம்

# தேசிய பாதுகாப்பு

பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள 07 திணைக்களங்கள் மற்றும் 16 நியதிச்சட்ட சபைகள்/ நிறுவனங்களால் பின்வரும் செயற்பாடுகளும் கடமைகளும் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

- தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயத்துடன் தொடர்பான திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங் களுக்கு உரித்தான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்குதல், செயற்படுத்துதல், பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- அமைச்சின் நோக்கெல்லைக்குப் பொறுப்பான மக்கள் சேவைகளை செயற்திறனான முறையிலும் மக்களின் மனதைக் கவரும் வகையிலும் வழங்குதல்.
- விரயத்தையும் ஊழலையும் முறை யடிக்கும் வகையில் அமைச்சின் பணி மேற்கொள்ளப்படுவதை உறுதிப் படுத்துவதற்கு துணைபுரியும் வகை யில் நவீன முகாமைத்துவ முறை மற்றும் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி சகல முறைகளையும் நடைமுறை களையும் மறுசீரமைத்தல்.
- தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- அரச மற்றும் உள்ளகப் பாதுகாப்பு தொடர்பான உளவுத்துறை சேவைகளை நடாத்துதல்
- வெடி பொருட்கள் மற்றும் துப்பாக்கிகள் தொடர்பான நடவடிக்கைகள்
- பாதுகாப்பு சேவைப் பணியாட் களுக்குப் பாதுகாப்புக் கல்வி மற்றும் பின்சேவைக் கல்வியை வழங்குதல்
- மீட்பு நடவடிக்கைகள் மற்றும் கடலோர காவல் சேவை நிர்வகித்தல்.
- கடத்தல் தொடர்பான நடவடிக்கைகள், போதைப்பொருள் பாவனையைத் தடுத்தல், மற்றும் கட்டுப்படுத்துதல்
- காலநிலை மற்றும் வானிலை தொடர்பான சேவைகளை வழங்குதல்.
- மண்சரிவு, அனர்த்த முகாமைத்துவம் மற்றும் இதனுடன் தொடர்புபட்ட ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கை களை மேற்கொள்ளுதல்.

2022 ஆம் ஆண்டின் போது திருத்தப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்குறித்த கடமைகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சிற்கும் 07 திணைக்களங்களுக்கும் ரூபா 394,477 மில்லியன் மொத்த தொகையான நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்தது டன் மிளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 353,125 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப் பட்டிருந்தது. விபரம் வரைபடம் 15 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




| | பாதுகாப்பு அமைச்சு | இலங்கை இராணுவம் | இலங்கை கடற்படை | இலங்கை விமானப் படை | வளிமண்டலவியல் திணைக்களம் | சிவில் பாதுகாப்பு திணைக்களம் | இலங்கை கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் | பல்செயற்பாட்டு அபிவிருத்தி திணைக்களம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேறிய ஏற்பாடு ரூ மில் | 29339 | 205787 | 68845 | 55236 | 792 | 20201 | 507 | 13770 | 394477 |
| தே. செலவு ரூ மில் | 27260 | 193691 | 61429 | 42016 | 369 | 19332 | 337 | 8691 | 353125 |
| சேமிப்பு ரூ. மில் | 2079 | 12096 | 7416 | 13219 | 423 | 869 | 170 | 5079 | 41351 |

வரைபடம் 15 – வழங்கப்பட்டிருந்த ஏற்பாட்டின் அளவும் செலவினமும்

மூலம் - 2022 வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

மேலே குறிப்பிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்களின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளன.

### பாதுகாப்பு அமைச்சு

#### எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதிக்குள் ஒப்பந்தத்தை பூர்த்திசெய்ய முடியாமை

பாதுகாப்பு படை தலைமை அலுவலகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் சில நிர்மாணிப்புப் பணிகள் தாமதமானமை, நாணயக் கடிதத்தை திறப்பதில் தாமதம் முதலிய காரணங்களால் எதிர்பார்த்த காலத்திற்குள் ஒப்பந்தத்தைப் பூர்த்திசெய்வதற்கு முடியாது போனமையால் ஒப்பந்த கால எல்லையை நீடிக்க வேண்டி ஏற்பட்டது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவ்வாறான ஒப்பந்தங்களை நீடித்ததன் காரணமாக 06 வழங்கல் ஒப்பந்தக்காரர்களால் ரூபா 1,389 மில்லியன் தொகையும் ஐக்கிய குடியரசு டொலர் 6.21 மில்லியன் தொகையான கால நீடிப்புச் செய்வதற்கான 28 பணக் கோரிக்கைகள் (Claims for EOT) வேண்டப்பட்டிருந்தன.

#### தந்திரோபாய பாதுகாப்புத் தகவல் தொடர்பு வலையமைப்புச் செயற் திட்டத்தின் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட செயற்திறன் நிலையை எய்தியிராமை

பாதுகாப்பு சேவைகளுக்கிடையே பொதுவான தகவல் தொடர்புப் பொறிமுறையை ஏற்படுத்துவதற்காக ரூபா 1,192 மில்லியன் செலவில் தந்திரோபாய பாதுகாப்புத் தகவல் தொடர்பு

வலையமைப்புச் செயற்திட்டம் 2014 – 2016 காலப்பகுதியின் போது நிறை வேற்றப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், பல்வேறு தாமதங்கள் காரணமாக திட்டக் காலம் மூன்று சந்தர்ப்பங்களின் போது 06 ஆண்டுகளால் நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட செயற்திறன் நிலைகளை எய்த இயலாதிருந்தது. இச் செயற்திட்டத்திற்காக மைக்ரோவேவ் வானொலி தகவல் தொடர்பு அமைப்பைக் கொள்வனவு செய்வதற்கான கொள்வனவுக் குழுவின் செயற்பபாடு 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் கொள்வனவுக் குழுவின் பரிந்துரை 2022 ஏப்ரல் 20 ஆம் திகதி வரை தாமதமாகியிருந்ததுடன் அன்றைய திகதி வரையில் கொள்வனவுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. இதன் படி, இக் கொள்வனவுச் செயற்பாட்டிற்காக ஏறக்குறைய 06 ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டு செயற்திட்ட தாமதம் தொடர்பில் நேரடித் தாக்கத்தைச் செலுத்தியிருந்தன.

### சொத்துக்கள் ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தப்பட்டிராமை

தந்திரோபாய பாதுகாப்புத் தகவல் தொடர்பு வலையமைப்புச் செயற்திட்டத்திற்காக 2016 ஆம் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 38.54 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 22 மின்பிறப்பாக்கிகளும் ரூபா 562 செலவிடப்பட்டு நிர்மாணிப்புகள் பூர்த்தியடைந்திருந்த 11 தகவல் தொடர்புக் கோபுரங்களும் அதனுடன் தொடர்பான உதிரிப்பாக அறைகள், இணையான செயற்பாடுகளின் நீண்ட காலதாமதம் காரணமாக 2020 ஆம் ஆண்டு முதல் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்த முடியாதிருந்ததுடன் செயற்திட்டத்திற்காக ஏற்கப்பட்ட ரூபா 659 மில்லியன் தொகையான கிரயம் ஆக்கபூர்வமான பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை.

### தேசிய பாதுகாப்பு நிதியம்

இந் நிதியம் 1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதி அதிகாரச்சட்டத்தின் கீழ் தேசிய பாதுகாப்பிற்காக நிதி வழங்கும் முகமாக நிறுவப்பட்ட நிதியமாகும். அதன் செயற்பாடுகள் தொடர்பான அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

### வீடமைப்புத் திட்டத்திற்கான பலன்களைச் செலுத்தி முடிக்க இயலாமை

“மெத்செவன” பகுதியளவான வீடமைப்புத் திட்டத்தின் கீழ் போர் வீரர்களின் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைப் நிர்மாணித்து முடிப்பதற்காக 2022 ஆம் ஆண்டில் 150 பயனாளிகளிற்கு நலனாக தலா ரூபா 750,000 படி ரூபா 113 மில்லியன் செலுத்தி முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அவ் ஆண்டில் எவ்வித தவணைப்பணத்தையும் செலுத்த முடிந்திருக்கவில்லை.

### வட்டி வீத அதிகரிப்பால் நேர்ந்த நலநன உயரிய அளவில் பயன்படுத்திக் கொண்டிராமை.

2022 மே மாதத்தில் வட்டி வீதங்கள் அதிகரித்திருந்த போதிலும் மீள் முதலீடு குறித்த முடிவை எடுப்பதற்கு இரண்டு

மாதங்களுக்கு மேற்பட்ட காலதாதம் ஏற்பட்டதன் காரணமாக வட்டி வீத அதிகரிப்பினால் ஏற்பட்ட நலநன உயரிய அளவில் பயன்படுத்தியிருக்கவில்லை. இதன் படி, 72 நாட் தாமதத்தால் இழந்த மதிப்பிடப்பட்ட வட்டி வருமானம் ரூபா 22 மில்லியனனுக்கும் அதிகமாகக் காணப்பட்டது.

### எங்களுக்காக நாங்கள் நிதியம்

இந் நிதி, 2008 ஆம் ஆண்டின் "அபி வெனுவென் அபி" நிதிய அதிகாரச்சட்டத்தின் கீழ் ஆயுதப் படைகளின் உறுப்பினர்களுக்கு வீடமைப்பதற்காக அல்லது வீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக கடன் வழங்குவதற்காக நிறுவப்பட்ட நிதியமாகும். அதன் செயற்பாடுகள் தொடர்பான அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

### தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளில் மிகச்சிலருக்கே நலன் வழங்கப் பட்டிருந்தமை

2022 ஆம் ஆண்டில் அதிகபட்சமாக ரூபா 300 மில்லியனிற்கு உட்பட்ட 25 முழு வீடுகளுக்கும் 350 பகுதியளவிலான வீடுகளுக்கும் வீடமைப்பு உதவித் தொகை வழங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பாதுகாப்பு அமைச்சினால் பொது மக்கள் சந்திப்புத் தினங்களில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 11 பயனாளிகளுக்காக மாத்திரமே பகுதியளவிலான உதவித் தொகையாக ரூபா 7 மில்லியன் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்ததது. இதன் படி, மீளாய்வாண்டின் நிதி செயற்பாடு 2.3 சதவீதமான குறைந்த பட்ச அளவில் காணப்பட்டது.

### இலங்கை விமானப்படை

இலங்கை விமானப்படை, "வான் சக்தியை திறன்பட பயன்படுத்துவதன் மூலம் தேசிய பாதுகாப்பை உறுதி செய்தல்" நோக்கை அடிப்படையாகக் கொண்டு "விமான நடவடிக்கைகளை செயற்படுத்தி எமது விசேட திறனை அடிப்படையாகக் கொண்டு தொழிற் திறன்களின் படி விமானப்படையால் தேசிய பாதுகாப்பு பணியை நிறைவேற்றிக்கொள்ளல்" எனும் செயற்பணிக்காக 5 முக்கிய பணிகளாற்றப்படுகின்றன. இப் பணியை நிறைவேற்றுவதற்காக இலங்கை விமானப்படை நிர்வாகக் கட்டமைப்பு கொழும்பில் உள்ள விமானப்படைத் தலைமை அலுவலகம் உட்பட முக்கிய 05 தளங்களைக் கொண்டு இயங்குகின்றன.

- பாகிஸ்தான் கடன் திட்டத்தின் கீழ் யுத்தத் தாங்கிகள் (APC – 15) கொள்வனவு செய்வதற்காகப் பெறப்பட்ட ஏற்பாட்டில் ரூபா 16 மில்லியன் தொகை, இந்தியக் கடன் திட்டத்தின் கீழான ரேடார் அமைப்பிற்கான உதிரிப்பாகக் கொள்வனவிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.
- இரத்மலானை விமானப்படைத் தளத்தில் உள்ள விமானப்படை அருங்காட்சியகம் 2022 ஆம் ஆண்டில் உழைக்கப்பட்ட ரூபா 21 மில்லியன்

வருமானத்தில் அரசாங்கம் இழந்த வருமானம் ரூபா 19 மில்லியன் ஆகும்.

- இலங்கை விமானப்படையிடமிருந்த மொத்த மதிப்பு ரூபா 53,847 மில்லியனான 110 விமானங்களில் 66 விமானங்கள் 01 முதல் 23 வருட காலமான நீண்ட காலமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து விலகியிருந்தன.
- இலங்கை விமானப்படையின் 3 தளங்களில் உள்ள 31 வகையான பொருட்களிற்கு உரித்தான ரூபா 29 மில்லியன் கூட்டுப்பெறுமதியான இருப்புகள் எவ்வித பயன்பாடும் இன்றி 01 முதல் 09 வருட காலமாக விளைவற்றுக் களஞ்சியத்தில் காணப்பட்டன.
- அமைதி காக்கும் படைக்கு அனுப்பிவைப்பதற்காக 2022 ஏப்ரல் 01 அன்று ரூபா 42 மில்லியனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த “லான்ட் ரோவர் டிப்பென்டர் ஜீப்” வண்டி 2023 மே 19 ஆம் திகதி வரையிலும் ஒரு வருடத்திற்கு மேற்பட்டிருந்த போதிலும் அமைதி காக்கும் படைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.
- 2018 ஆம் ஆண்டில் ரூபா 946 மில்லியன் செலுத்திக் கொள்வனவு செய்யப்பட்ட 06 விமானங்களில் 2 விமானங்கள் 2020 ஆம் ஆண்டின் போதும் 2023 ஆம் ஆம் ஆண்டின் போதும் விபத்திற்குள்ளாகி முற்றாகச் சேதமுற்றிருந்தன. கொள்வனவு செய்யப்பட்ட எஞ்சிய 04 விமானங்களும் இயந்திரப் பராமரிப்பின் தாமதம் காரணமாக 02 வருடங்களுக்கு மேலான காலமாக பயிற்சி நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் படி, ஏற்கப்பட்ட மொத்தச் செலவும் விளைவற்ற செலவாகியிருந்தது.
- 2021 ஆம் ஆண்டில் "X Press Pearl" கப்பலின் விபத்தைத் தடுப்பதற்காகப் பங்களிப்புச் செய்தமைக்காக

ஐஅடொ 2,875,136.55 இழப்பீட்டுத் தொகை மீளளிக்கப்பட வேண்டியிருந்ததுடன் இதில் ஐஅடொ 1,149,500 அபாயக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான மேலதிக ஆதாரங்களை விமானப் படையினால் சமர்ப்பிக்கப்பட்டிராததன் காரணமாக குறித்த இழப்பீட்டைச் செலுத்தும் தரப்பினர் அதனைச் செலுத்துவதற்கு மறுத்தமையால் முழுத் தொகையும் அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெறாது போயிற்று.

- 2004 – 2013 வரையான வெளிநாடுளுக்கு திருத்த வேலை களுக்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்த ஐஅடொ 179,633 மதிப்பிலான 50 விமான உதிரிப்பாகங்களும் 2016 முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது வெளி நாட்டிற்குத் திருத்த வேலைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்த 53 விமான உதிரிப்பாகங்களும் 2 முதல் 18 வருடங்கள் வரையான காலதாமதமாகியும் விமானப்படைக்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

### பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி

ஆயுதப் படைகளில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு உரித்தான

சேவைகளிற்கு உரித்தான நியமனங்கள் மற்றும் பதவி உயர்விற்காக அவர்களைத் தயார்படுத்துவதற்காகவும் அறிவை வழங்குவதற்காக பதவிநிலைக் கல்லூாயில் பயிற்சியளிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவ் உத்தியோகத்தர்களின் தொழிற்துறை அறிவையும் புரிதலையும் மேம்படுத்துவதை முக்கிய பணியாகக் கொண்ட பதவிநிலைக் கல்லூரியின் 2022 ஆம் ஆண்டிற்கான மொத்தச் செலவு ரூபா 171 மில்லியனாகும்.

ரூபா 133 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட நான்கு மாடி நூலகத்திலும் பரீட்சை மண்டபக் கட்டிடத்திலும் நீர்க் கசிவுப் பிரச்சனை காரணமாக மேல் தளத்தில் மின் அமைப்பு மற்றும் சுவர்கள் பாரியளவில் சேதத்திற்குள்ளாகி இருந்ததுடன் மீளமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை இயலாது போயிற்று.

## ரணவிரு சேவைகள் அதிகாரசபை

ஆயுதப்படைகள் மற்றும் பொலிஸின் ஊனமுற்ற உறுப்பினர்கள் மற்றும் போர் நடவடிக்கையின் போது இறந்த அல்லது காணாமற் போன ஆயுதப்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தளைச் சார்ந்தவர்களின் நலனை மேம்படுத்துவது அதிகாரசபையின் முதன்மை நோக்காகும். 2022 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் மொத்தச் செலவு ரூபா 464 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

- மீளாய்வாண்டின் இறுதியில் ஊனமுற்ற, காணாமற் போன மற்றும் இறந்த அல்லது அவர்களைச் சார்ந்தவர்கள் பற்றிய முறையான மற்றும் துல்லியமான தகவல் அமைப்பை நாளதுவரையாகப் பராமரிப்பதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.
- 2001 ஆம் ஆண்டின் போது அதிகாரசபைக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக நன்கொடையாகக் கிடைக்கப் பெற்றிருந்த ஏக்கர் 1 ரூட் 1 பேர்ச் 09 அளவிலான ரூபா 1.5 மில்லியன் பெறுமதியான ஓர் காணி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.
- 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அதிகாரசபை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை இணைந்து செயற்படுத்திய விருசுமித்துறு வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 1950 முழு வீடுகளையும் 1700 பகுதிளவிலான வீடுகளையும் நிர்மாணித்து முடிப்பதற்காக ரூபா 3,192 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் உதவு தொகை வழங்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 550 ஆகக் காணப்பட்டமையால் இம் முழுத் திட்டத்தில் 15 சதவீத அளவிலான குறைந்த மட்டம் நிலவியது.

## இலங்கை இராணுவம்

தொழிற்தரம், நம்பகத்தன்மை மற்றும் மரியாதை ஆகியவற்றின் மூலம் நாட்டில் ஒற்றுமை இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைக் காப்பதனை முக்கிய பணியாகக் கொண்டு நாட்டில் அமைதியான சூழலை உருவாக்கி,

அரசின் பாதுகாப்பிற்கு ஒப்பற்ற பங்களிப்பை வழங்கி தேசிய பேரழிவுகள் மற்றும் அவசரகால சூழ்நிலைகளுக்கு ஆதரவை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கும் மிகப்பெரிய படையணி இராணுவமாகும். இராணுவ நடவடிக்கைகளிற்கான 2022 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டிருந்த மொத்தச் செலவு ரூபா 194 பில்லியனாகும். மீண்டெழும் செலவுகள் ரூபா 190 பில்லியனாகும். இதில் ரூபா 148 பில்லியன் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. இராணுவம் தொடர்பான கணக்காய்வின் மூலம் கண்டறியப்பட்ட விடயங்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டின் போது சனாதிபதி செயலகத்தால் அனுராதபுர மாவட்டத் தில் 11 குளங்களைப் புனரமைப் பதற்காக இராணுவத்திற்கு ரூபா 100 மில்லியன் தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நான்கு குளங்களின் புனரமைப்புகள் இது வரையிலும் நிறைவேற்றப் பட்டிராமையால் அப் பிரதேச கிராமிய மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர். குளங்களின் புனரமைப்பிற்கு நேரடித் தொடர்பற்ற அலுவலகங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களிற்காக ரூபா 28 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அனுராதபுர மாவட்ட செயலகத்தினால் வழங்கப்பட்ட ரூபா 1.6 மில்லியன் பெறுமதியான சீமேந்து இராணுவ முகாம்களின் நிர்மாணிப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

- ரூபா 205 மில்லியன் ஏற்பாட்டில் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப் படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிராததுடன் வேறு செலவின விடயங்களின் கீழ் அரசாங்கத்தின் சில அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக ரூபா 1,153 மில்லியன் இராணுவத்திற்கு வழங்கப் பட்டிருந்தது. இதில் ரூபா 634 மில்லியன் வருட இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது. இதன் கீழ் இரு நுழைவு வீதிகளினதும் ஒரு முன்பள்ளிக் கட்டிடத்தினதும் பணிகளின் நிறைவு சதவீதம் 15 இனைப் பார்க்கிலும் குறைவாகக் காணப்பட்டது

- இராணுவத்திற்குச் சொந்தமான மற்றும் இராணுவத்தினால் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த 15 காணிகளும் ரூபா 35 பில்லியன் பெறுமதியான் 2,163 கட்டிடங்களும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இராணுவத்திற்குச் சொந்தமானதும் பயன்படுத்தப்படும் 3,201 வாகனங்களிற்குக் காப்புறுக் காப்பு பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், தேவைப்பாட்டை ஆராயாது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 5 மில்லியன் பெறுமதியான டயர்களும் வாகன பட்டரிகள் உள்ளடங்கலாக உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது கைதவிர்க்க நேர்ந்திருந்ததுடன் இராணுவத்தின் பல்வேறு சொத்துக்களுக்காக நேர்ந்திருந்த ரூபா 13 பில்லியனான ஐந்து ஆண்டுகளிற்கு மேற்பட்ட நட்ட

இழப்புகளை அறவிடுவதற்கோ அல்லது தள்ளுபடி செய்வது நலிவான நிலையில் காணப்பட்டது. இராணுவத்தினதும் குடிமக்களினதும் மருத்துவ நடவடிக்கைகளை மிகவும் ஆக்கபூர்வமாகவும் திறமையான நிலையிலும் மேற்கொள்வதற்காக ரூபா 39 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இரு மருத்துவப் பேரூந்துகளால் (நடமாடும் மருத்துவ பரிசோதனை அறை மற்றும் மருந்தகத்துடனான பேரூந்து மற்றும் நடமாடும் ஆய்வுகூட வசதிகளுடனான பேரூந்து ஒன்று) இராணுவத்தினருக்கும் மக்களுக்கும் கிடைக்கப்பெற்ற சேவை மிகவும் குறைவான நிலையில் காணப்பட்டது.

- மீளாய்வாண்டிற்காக ரூபா 47 பில்லியன் கிரய மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டத்தின் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் அல்லது சேவைகளின் அலகின் அளவுகள் குறிப்பிடப் பட்டிராததுடன் கொள்வனவு வழிகாட்டல்கள் கருத்திற்கொள்ளப் படாது ரூபா 693 மில்லியன் கொள்வனவிற்காக வரையறுக்கப்பட்ட∴ மட்டுப்படுத்தப்பட்ட தேசிய போட்டிக் கேள்வு முறை பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், வழங்குனர்களிடம் இருப்புகள் உள்ளனவா எனவும் விபரக்குறிப்பு ஆவணங்கள் தேவையான விதத்தில் விபரிக்கப்படாது விலைகளைக் கோரியிருந்தமையால் போட்டி விலைகளைப் பெற்றுக்கொள்ள இயலாதிருந்தது. மேலும் கொள்வனவு நடவடிக்கைகள் பிணைக்காப்பீடு, செயற்திறன் காப்பீடு மற்றும் ஒப்பதம் இன்றி மேற்கொள்ளப் பட்டிருந்தமையால் இராணுவத்தின் நிர்மாணிப்புகள் மற்றும் பழுதுபார்த்தல்களுக்கான முன் தயாரிக்கப்பட்ட கொங்கிரீட் உள்ளடங்கலாக உபகரணங்களைக் கொள்வனவு செய்கையில் ரூபா 368 மில்லியன் பெறுமதியான பொருட் களும் சேவைகளும் வழங்குனர் வழங்கத் தவறியிருந்ததுடன் மேலதிக கிரயத்தில் கொள்வனவுகள் மீள மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

## இலங்கை கடற்படை

- 1950 இன் 34 ஆம் இலக்க கடற்படைச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டஇலங்கை அரசாங்க கடற்படை 1993 இன் 11 ஆம் இலக்க கடற்படை (திருத்தம்) சட்டத்தின் மூலம் இலங்கை கடற்படை நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. தேசிய பாதுகாப்பு மற்றும் தேசிய தேவைப்பாட்டிற்கான தேசிய கொள்கைகளுக்கு இணங்க, கடல் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான கடற்படை நடவடிக்கைகளை மேற்கொள்வதைப் பணியாகக் கொண்டு 15 கடற்படை நோக்கங்களையும் 07 கடற்படை அல்லாத நடவடிக்கைகளுடனான கடற்படை முழுத் தீவையும் உள்ளடக்கிய 07 கடற்படைக் கட்டளைகளாக பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றது.
- 2017 ஆம் ஆண்டில் வெடி மருந்துக் களஞ்சியத்தில் நேர்ந்த ரூபா 8 மில்லியன் நிதி மோசடி தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் இதுவரையிலும் பூர்த்தியடைந்திருக்கவில்லை.

- நீர்கொழும்பில் உள்ள தனியார் கல்வி நிறுவனமொன்றில் கட்டிட நிர்மாணிப்பிற்காக கடற்படையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். 2019 திசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்த இச் செயற்திட்டத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் 1614 மனித நாட்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இவ்வாறே பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி 9901 மனித நாட்களுமாக 11,515 மனித நாட்களுக்கு மொத்த சம்பளச் செலவினமாக ரூபா 28 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இது மீளளிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை கரையோர பாதுகாப்பு திணைக்களம்

2009 இன் 41 ஆம் இலக்க கரையோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரச்சட்டத்தின் மூலம் இலங்கை கரையோரப் பாதுகாப்பு திணைக் களம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கடல் சுற்றுச்சூழலை பாதுகாத்தல், பராமரித்தல், தூய்மைப்படுத்தலை உறுதிப்படுத்தல் மற்றும் பயனுள்ள கடல் சட்டத்தைச் செயற்படுத்துதல், பல்லுயிர் மேலாண்மை, இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுளின் மேலாண்மை மற்றும் உயிர் மற்றும் உடமைகளின் பாதுகாப்பும் கடல் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் மூலம் சுற்றாடலின் சமநிலைத் தன்மையைப் பேணி கடல் மாசடைவைத் தடுப்பதனையும் செயற்பாடாகக் கொண்ட 12 செயற்பணிகளை திணைக்களம் கொண்டுள்ளது.

- அதிகாரச்சட்டத்தின் III ஆம் பகுதியின் 11 ஆம் 12 ஆம் பிரிவுகளிற்கு இணங்க ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப் பட்டிராமையால் திணைக்களத்தின் வருடாந்த நடவடிக்கைகள் தொடர்பான மீளாய்வு மேற்கொள்ளப் பட்டு அமைச்சரிடம் இது தொடர்பான விபரமான ஓர் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கும் திணைக்களத்தால் செயற்படுத்தப்பட வேண்டிய கொள்கைகள் தொடர்பான அமைச்சருக்கு பரிந்துரைகளை வழங்குவதற்கும் பாதுகாப்பு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு ஏதேனும் ஓர் விடயம் தொடர்பாக ஆலோசனையை வழங்கவும் முடியாதிருந்தது.
- மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் தடை செய்யப் பட்ட போதைப்பொருட் கடத்தலில் ஈடுபட்ட படகுகள் உட்பட 07 கடற் படகுகளும் கைப்பற்றப்பட்டிருந்தன.
- மீளாய்வாண்டின் போது திணைக் களத்தால் 14 சந்தர்ப்பங்களின் போது கைப்பற்றப்பட்டிருந்த தடை செய்யப்பட்ட 330 கிராம் போதைப் பொருட்களும் 1300 போதை மாத்திரைகளும் இலங்கை பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தன.
- ரூபா 284 மில்லியன் பெறுமதியான 07 கப்பல்களும் படகுகளும் 03 மாதங்கள் முதல் 3 வருடங்கள் வரையான காலமாக செயலற்ற நிலையில் காணப்பட்ட போதிலும்

ஏற்பாடுகள் இன்மையால் அவை திருத்தப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

**வரையறுத்த ரக்னா ஆரக்ஷக லங்கா கம்பனி**

முழுமையான உரித்தை இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் அரசாங்க கம்பனியான இக் கம்பனி 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. கடல் பாதுகாப்பு, வியாபார, தொழில்நுட்ப மற்றும் வணிகப் பாதுகாப்பு சேவைகள், தீயணைப்பு சேவைகள், உணவகம் மற்றும் சிற்றுண்டிச்சாலை வியாபாரங்கள், கண்ணிவெடி அகற்றல் சேவை, பணத்திற்கான பாதுகாப்பு மற்றும் கடன் பரிவர்த்தனைகள் போன்றவற்றிற்கு பாதுகாப்பளித்தல் ஆகியவை இக் கம்பனியின் பணிகளிற்கு உரித்தானவையாகும். மேற்குறித்த செயற்பாடுகளின் மூலம் கம்பனி 2020/2021 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 1,986 மில்லியன் தொகையான வருமானத்தை ஈட்டியிருந்தது. இதன் செலவினம் ரூபா 1,872 மில்லியனாகும். கம்பனி, 220 பதவியணியைக் கொண்டிருந்ததுடன் இதில் 181 பேர் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகின்றனர்.

- 2016/2017 நிதியாண்டு முதல் 2020/2021 நிதியாண்டு வரை கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் குறித்து மறுப்பு அபிப்பிராயத்துடனான கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது.
- ரூபா 1,841 மில்லியன் தொகையான கடன்பட்டோர் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, இதற்கு உரித்தான நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களும் தயாரிக்கப்பட்டிராததுடன் குறித்த ஏனைய சான்றுகளும் இன்மையால் அக்கொடுக்கல் வாங்கல்களை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.
- கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் படி, 2021 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 557 மில்லியனான வர்த்தக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளும் ரூபா 170 மில்லியனான வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளும் உறுதிப்படுத்தப்படுவதற்கான சான்றுறுதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகம்**

1988 இன் 27 ஆம் இலக்க மற்றும் 2007 இன் 50 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1981 இன் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல அரசாங்க பாதுகாப்பு பயிற்சி நிறுவன அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பயிற்சி உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள், அரசாங்க உத்தியோகத்தர்ளிற்கான அரச பாதுகாப்பு மற்றும் இராணுவ முகாமைத்துவத்திற்கு உரித்தான கற்கைப் பிரிவு தொடர்பாக கற்கைப் பாடநெறிகளை நடாத்தி ஆலோசனை வழங்குவதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

- 2011 ஆம் ஆண்டு முதல் கெடேட் உத்தியோகத்தர்கள் அல்லது அரசாங்க உத்தியோகத்தர்களல்லாத உள்நாட்டு வெளிநாட்டு மாணவர்களிற்கு கட்டணம் செலுத்தும் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் போது அவ்வாறு பட்டம் பெற்றிருந்த 4,376 மாணவர்களிற்காக 31 பட்டப் பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தன. இந்த 31 பட்டப் பாடநெறிகளில் 11 பட்டப் பாடநெறிகள் கெடேட் உத்தியோகத்தர்கள் அல்லாத கட்டணம் செலுத்தும் அடிப்படையில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்காக மாத்திரம் செயற்பட்டு வருகின்றன.
- 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான கூட்டக் குழுவில், மாணவர்களின் சேர்க்கை மற்றும் நிர்வாக சபையின் தீர்மானத்தின் செல்லுபடித்தன்மை போன்ற விடயங்கள் உள்ளடங்கும் வகையில் பல்கலைக்கழகங்களிற்கு பொருந்தும் வகையில் பல்கலைக் கழக அதிகாரச்சட்டத்தை திருத்திக் கொள்ளும் படி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் அதிகாரச்சட்டத் திருத்தச் செயற்பாடு கள் முடிவுறுத்தப் பட்டிருக்கவில்லை.
- 2013 ஆம் ஆண்டின் போது கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழக போதனா வைத்தியசாலை நிர்மாணிக்கப்படுவதற்காக தேசிய சேமிப்பு வங்கியால் வழங்கப்பட்டிருந்த ஐக்கிய அமெரிக்க டொலர் 201.6 மில்லியன் கடன் தொகையில் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஐக்கிய அமெரிக்க டொலர் 21.5 மில்லியன் தொகை அதாவது ரூபா 7,468 மில்லியன் தொகை 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.
- 2017 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ரூபா 85 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 90 மருத்துவ உபகரணங்களும் ரூபா 77 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட வைத்திய உபகரணத் தொகுதிகளும் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. மேலும், 2022 மே மாதம் முதல் போதனா வைத்தியசாலையில் உள்நோயாளர்களுக்கான மருத்துவ சிகிச்சையளிக்கப்படும் வார்ட் இலக்கம் 07 பயன்படுத்தப்படுவது நிறுத்தப்பட்டு மூடப்பட்டிருந்தமையால் அங்கு பயன்படுத்தப்பட்ட ரூபா 14 மில்லியன் பெறுமதியான 52 மருத்துவ உபகரணங்களும், தீவிர சிகிச்சைப் பிரிவு 02, 03 மற்றும் 04 பயன்படுத்தப்படுவது நிறுத்தப்பட்டிருந்த மையால் அங்கு ரூபா 198 மில்லியன் பெறுமதியான 145 பொருட்களும் ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. அதன் படி, விளைவற்ற நிலையில் காணப்பட்ட மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 374 மில்லியனாகும்.
- கெஸ்பேவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 21.5815 ஹெக்டேயர் காணியில் பல்கலைக்கழக போதனா

வைத்தியசாலை ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த காணியின் சட்டபூர்வ உரிமை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. எனினும், அக் காணியில் நிர்மாணிக்கப்பட்ட போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான கட்டிடங்களின் பெறுமதி ரூபா 45,386 மில்லியனானதுடன் காணி அபிவிருத்திக்காக ரூபா 1,217 மில்லியனும் செலவாகியிருந்தன. மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகி 06 வருடங்களுக்கு மேலாகியிருந்த போதிலும், குறித்த காணியைச் சுவீகரிக்கும் பணிகள் நிறைவடைந்திருக்கவில்லை.

- 2018 ஆம் ஆண்டில் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக போதனா வைத்தியசாலையின் நிர்மாணிப்பின் போது 56 பிரிவுகளுக்கு உரித்தான ஆய்வகப் பரிசோதனைப் பொருட்களையும் அறிக்கைகளையும் கொண்டு செல்வதற்காக 530,000 அமெரிக்க டொலர் செலவில் வாயுக் குழாய் அமைப்பொன்று (Pneumatic Tube System) நிறுவப்பட்டது. எனினும், 2022 ஆம் ஆண்டிற்காக 56 பிரிவுகளில் 47 பிரிவுகளிற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றிலும் 24 பிரிவுகளிற்கான தரவுப் பரிமாற்றத்திற்காக 2 முதல் 100 வரையான குறைந்த தரவுகளே என்பது அவதானிக்கப்பட்டது.
- 2022 சனவரி 24 அன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் Amrita Technologies மற்றும் Thinkcube Systems கம்பனியுடன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக போதனா வைத்தியசாலையின் ஐ.அ டொலர் 1 மில்லியன் செலவில் சுகாதாரத் தரவுகள் முகாமைத்துவ அமைப்பொன்றை ஸ்தாபிப்பதற்காக முத்தரப்பு உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி, இவ் அமைப்பு 2023 பெப்ரவரி 24 ஆம் திகதி முடிவடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2023 மே 31 ஆம் திகதி வரையிலும் இவ் அமைப்பை நிறுவுவதற்கான பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### சிவில் பாதுகாப்புத் திணைக்களம்

வெற்றியை அடுத்து நாட்டின் தேசிய அபிவிருத்திச் செயன்முறைக்குப் பங்களிக்கும் பணியின் கீழ் முக்கிய 7 நோக்கங்களுடன் திணைக்களம் உருவாக்கப்பட்டது.

- திணைக்களம் ஏனைய அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும் பாதுகாப்பு மற்றும் ஏனைய சேவைகளுக்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய எனினும் ரூபா 334 மில்லியன் நிலுவைத் தொகை 2023 மார்ச் 24 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்காக திணைக்களம் தவறியிருந்தது.
- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் 1.3

ஆம் பிரிவிற்கு முரணாக 2569 திணைக்கள படை வீர/வீராங்கனைகள் 2569 பேர் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் உள்ள விகாரைகள் / தொல்பொருள் ஸ்தலங்கள் உள்ளடங்கலான புனித ஸ்தலங்களுக்கு பல்வேறு கடமை நடவடிக்கைகளுக்காக நீண்ட காலமாக ஈடுபடுத்தப்பட்டு வந்திருந்த துடன் அப் படை வீர/வீராங்கனைகளின் வருகை மற்றும் வெளியேறும் நேரம் குறித்து முறையான கண்காணிப்பு இன்றி 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 1,294.78 மில்லியன் சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**பல்செயற்பாட்டு அபிவிருத்திச் செயலாற்றல் படையணி திணைக்களம்**

திணைக்களத்தின் முக்கிய இலக்காக நாடளாவிய ரீதியில் குறைந்த பட்ச கல்வித் தகைமையுடன் வறுமையில் வாடும் குடும்பங்களின் 100,000 இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர் களுக்கு முறையான தொழிற்பயற்சிகளை வழங்கி, அவர்களை பல்செயற்பாட்டு அபிவிருத்திச் செயலாற்றல் படையணியாட்களாக அரச மற்றும் அரச சார் நிறுவனங்களினதும் ஆரம்பத் தரத்திலான வெற்றிடங்களில் உள்ள சேவைத் தேவைப்பாட்டிற்காக பணியமர்த்துதலாகும். இப் பாரிய செயற்பணி இது வரையிலும் வெற்றிகரமாக செயற்படுத்தப்படுவதுடன் அத் தொழில்முறை நிலையில் உள்ள படையணியானது தேவைக்கேற்ப தனியார் துறை வேலைகளில் ஈடுபடுத்தபடுவதற்கும் தேவைப்படின் வெளிநாட்டுத் தொழில் வாய்வுச் சந்தைத் தேவைகளுக்காக ஈடுபடுத்துவதற்கும் ஏற்ற வகையில் வலுவூட்டப்பட்டுள்ளது.

# நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

- புதிய அரசியலமைப்பு வரைவைப் பூர்த்தி செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி பயன்படுத்தப்பட்டிருக்காமை.
- நட்ட ஈட்டுத் தொகையினை அமெரிக்க டொலர்களில் பெற்றுக் கொள்ளாது உள்நாட்டு நாணயத்தில் பெற்றுக் கொள்ளுதல்.
- நீதித்துறை நிர்வாகம்
    - இலங்கையில் நீதி கட்டமைப்பை தன்னியக்கமயப்படுத்தும் செயல் திட்டத்தை இடை நடுவில் நிறுத்தியமை.
    - பிள்ளைகளின் சாட்சியங்களைப் பெற்றுக் கொள்ளும் முறைமைகளை மாற்றுவதற்காகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்களைப் பயன்படுத்தி இருக்காமை .
- கடன் இணக்கசபை திணைக்களம்
    - கிளை சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட அங்கத்தவர் தொகையினை நியமித்திருக்காமை.
    - கடன் நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்து கோரிக்கைகளைத் தீர்ப்பதில் முன்னேற்றம் .
- சிறைச்சாலைகள் திணைக்களம்.
    - நலனோம்பல் சிற்றுண்டிச்சாலை மற்றும் விற்பனை நிலையங்களின் வருமானங்கள் அரச வருமானத்தில் வரவு வைக்கப்பட்டிருக்காமை.
    - கைதிகளுக்கு சிறைக்கூடங்களில் போதியளவு இட வசதி இல்லாமை.
    - சிறைச்சாலை கொள்ளளவுக்கு அமைய தடுத்து வைக்கக்கூடிய கைதிகளின
    - கைதிகளைக் குழுக்களாகப் பிரித்து தடுத்து வைக்கப்பட்டிருக்காமை.
    - புனர்வாழ்வுக்கான கட்டளை வழங்கப்பட்டுள்ள கைதிகளைப் புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பாமை.
    - பகுப்பாய்வு அறிக்கைகள் கிடைக்காததால் சிறைச்சாயில் அடைக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்தல் .
    - முகாமைத்துவத் தகவல் ஒழுங்கமைப்பினைப் பயன்படுத்தி இருக்காமை.
    - சிறைச்சாலை வைத்தியசாலைகளுக்கு இணைத்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வைத்தியர்கள் குறித்த காலம் சேவையில் ஈடுபடாமை.
    - உணவகம் எனும் போர்வையில் சிறைச்சாலை திணைக்களத்தின் வளங்களை ஈடுபடுத்தி தனியார் வணிக நடவடிக்கைகளை நடாத்திச் செல்லுதல்.
- சட்டமா அதிபர் திணைக்களம்.
    - குடிமக்கள்; / பயனாளிகள் சாசனம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்காமை.

- அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்.
    - நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதில் உள்ள பலவீனங்கள்.
    - பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பகுப்பாய்வு அறிக்கை வழங்கும் முன்னேற்றத்தின் பலவீனங்கள் .
    - வெளிநாட்டுக்குச் சென்ற மற்றும் சேவையைக் கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிட்டிருக்காமை.
- சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்.
    - சமுததாயஞ்சார் சீர்திருத்த செயல்பாடுகளுக்காக போதிய அளவு இட வசதிகள் இல்லாமை.
    - விரல் அடையாள இயந்திரம் தாபிக்கப்பட்டதண் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேறாமை.
- மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள்.
    - தீர்க்கப்பட்டுள்ள வழக்கு எண்ணிக்கைகளின் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் இருத்தல்.
- நீதிச் சேவைகள் ஆணைக் குழு.
    - வலுவாதார அபிவிருத்தி நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை .
    - குடிமக்கள் / பயனாளிகள் சாசனத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை.
- சட்ட உதவிகள் ஆணைக்குழு.
    - சட்ட உதவிகளை வழங்குவதற்கான வழக்கினை தீர்ப்பதில் முன்னேற்றம்.
- இழப்பீட்டுக்கான அலுவலகம்.
    - நட்ட ஈடு செலுத்தும் செயல்பாட்டில் தாமதம்.
    - இற்றைப்படுத்தப்படாத தகவல்களில் அடிப்படையில் நட்டு ஈடு வழங்கும் செயல்பாடு மேற்கொள்ளப்படுதல்.
    - பொருளாதார பெறுபேறு இன்றி நடைமுறைக் கணக்கில் பணத்தினைத் தடுத்து வைத்திருந்தல்.
- காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம்.
    - கிடைத்திருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது விசாரணை செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்த பெறுமதியைக் கொண்டுள்ளமை.
    - கோவைகளை இற்றைப்படுத்துவதில் தாமதம்.
- குற்றத்தால் பலியானவர்கள் மற்றும் சாட்சியாளர்களைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை.
    - நட்ட ஈடு வழங்குவதற்கு முன்மொழிபட்டு முறையொன்றினைத் தயாரித்து அதனை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்காமை.
    - கருணை இல்லத்தைப் பயன்படுத்தாமை.


# நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு துறை

நாட்டில் மக்கள் நம்பும் சட்ட ஒழுங்கமைப்பு மற்றும் நியாயமான இலங்கை எனும் நோக்கின் கீழ், மக்களை மையமாகக் கொண்டு நீதி நிர்வாகத்தின் மூலம் இலங்கை மக்களுக்கு நிலையான நியாயமான மற்றும் சுதந்திரமான சூழலை உருவாக்குவதன் மூலம் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- உற்பத்தித் திறனான மற்றும் காலத்துக்கு ஏற்ற சட்ட மறுசீரமைப்பு.
- கொள்கை அபிவிருத்தி முயற்சிகள்.
- சர்வதேச அமைப்புகளுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கை எடுத்தல் மற்றும் இணைதல்.
- மக்கள் சட்ட சேவை..

இந்த நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்காக முக்கியமான பல்வேறு செயல்பாடுகளின் கீழ் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் செயல்பாடுகள், கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கை என்பன அமைச்சிடம் உள்ள முக்கிய பொறுப்புகள் ஆகும். அமைச்சின் கீழ் அமைக்கப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களிலும் பிரதான செயல்பாடுகளைக் கொண்டு குறித்த நோக்கத்தினை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு அமைய நீதி மற்றும் சிறைச்சாலை அலுவல்களின் கீழ் 28 செயல்களை நிறைவேற்றுவதற்கு 08 திணைக்களங்கள் மற்றும் 11 சட்ட ரீதியான சபைகள் / நிறுவனங்கள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் சட்டக் கல்லூரி இந்த அமைச்சின் கீழ் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்த செயல்பாடுகளை நிறைவேற்றுதல் தொடர்பாகக் கணக்காய்வில் பயன்படுத்தப்பட்ட காரணிகள் தொகுக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக நீதி அமைச்சு மற்றும் 09 திணைக்களங்களுக்கு மொத்தமாக ரூபா. 32,138 மில்லியன் நிதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் மொத்தமாக ரூபா. 27,114 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வரும் வரைபடம் 16 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேசிய நிதி | 8255 | 11176 | 40 | 9106 | 1887 | 137 | 312 | 18 | 677 | 530 | 32138 |
| உள் செலவினம் | 4849 | 10616 | 37 | 8396 | 1744 | 133 | 300 | 16 | 531 | 492 | 27114 |
| எஞ்சிய நிதி | 3406 | 560 | 3 | 710 | 143 | 4 | 12 | 2 | 146 | 38 | 5024 |

வரைபடம்: 16 வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் அளவும் உள்ளபடியான செலவினமும்

மூலம்: 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

**புதிய அரசியலமைப்பு வரைவைப் பூர்த்தி செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி பயன்படுத்தப்பட்டிருக்காமை.**

புதிய அரசியலமைப்பு வரைவைப் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட காலக்கெடுவினை இனம் காண்பதற்காக 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டு வருடாந்த மதிப்பீடுகளில் முறையே ரூபா. 50 மில்லியன், ரூபா. 100 மில்லியன் மற்றும் ரூபா. 5 மில்லியன் என மொத்தமாக ரூபா. 155 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா. 41 மில்லியன். ரூபா. 88 மில்லியன் மற்றும் ரூபா. 4 மில்லியன் அதாவது 78 சதவீதம் தொடக்கம் 88 சதவீதம் வரையான நிதி எஞ்சியிருந்தது.

**நட்ட ஈட்டுத் தொகையினை அமெரிக்க டொலர்களில் பெற்றுக் கொள்ளாது உள்நாட்டு நாணயத்தில் பெற்றுக் கொள்ளுதல்.**

தீப்பற்றியிருந்த MV X - Press Pearl கப்பலினால் ஏற்பட்டிருந்த கடல் சார் ஆபத்துக்கள் காரணமாக கடல் அமைப்பிற்கு கரையோரம் மற்றும் நில அமைப்பிற்கு மீனவ சமூகத்திற்கு ஏற்பட்ட சேதத்திற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு அவுஸ்திரேலிய சட்ட நிறுவனத்திற்கு ரூபா. 77 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு அதிக விலையினை செலுத்தி சர்வதேச சட்ட நிறுவனத்திடம் இருந்து சேவையைப் பெற்றுக் கொண்டிருந்த போதிலும், நட்ட ஈட்டுத் தொகையினை அமெரிக்க டொலர்களிலேயே பெற்றுக் கொள்ளாது ரூபா. 912 மில்லியன் பெறுமதியினை கொண்ட நட்ட ஈட்டுத் தொகையை உள்ளக பணமாற்றலாக ஏற்றுக் கொண்டமை கணக்காய்வின் போது சிக்கலுக்குரியதாகக் காணப்பட்டது.

**நீதித்துறை நிர்வாகம்**

**இலங்கையில் நீதி கட்டமைப்பை தன்னியக்கமயப்படுத்தும் செயல் திட்டத்தை இடை நடுவில் நிறுத்தியமை.**

2016 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த இலங்கை நீதி அமைப்பை தன்னியக்கமயமாக்கும் செயல் திட்டத்திற்கான ஆலோசனை சேவையை வழங்குவதற்கு ரூபா. 79 மில்லியன் தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா. 36 மில்லியன் தொகை அந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் மொத்தமாக ரூபா. 49 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டு இறுதி வரையில் செயல் திட்டத்திற்கான ஒப்பந்தக்காரரை தெரிவு செய்தல் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆலோசனை சேவை வழங்குவதற்காக இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் செலுத்திய தொகையில் ரூபா. 27 மில்லியன் தொகையினை மீண்டும் நீதி அமைச்சுக்கு மாற்றி இருந்ததுடன் செயல் திட்டத்தினை இடை நிறுத்துவதற்கு அமைச்சு தீர்மானித்திருந்தது.

**பிள்ளைகளின் சாட்சியங்களைப் பெற்றுக் கொள்ளும் முறைமைகளை மாற்றுவதற்காகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்களைப் பயன்படுத்தி இருக்காமை .**

பிள்ளைகளின் சாட்சியங்களை திறந்த நீதிமன்றங்களில் பெற்றுக் கொள்ளாது ஒலி, காட்சி இணைப்புகள் மூலம் பெற்று கொடுக்கும் செயல் திட்டத்திற்காக 26 அழைப்புத் தொகுதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா. 49 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு தினம் வரையிலும் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாது போயிருந்தது.

**கடன் இணக்கசபை திணைக்களம்**

**கிளை சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட அங்கத்தவர் தொகையினை நியமித்திருக்காமை.**

கிளை சபைகளின் அமைப்பு தலைவரினால் மற்றும் நான்கு பேரை விட அதிகரிக்காத மற்றும் இருவரை விடக் குறையாத வேறு அங்கத்தவர்களைக் கொண்டிருக்க வேண்டிய போதிலும், குருணாகல் கிளை சபை 2022 செப்டம்பர் மாதம் தொடக்கம் தலைவர் மற்றும் இன்னுமொரு அங்கத்தவரை மட்டும் கொண்டிருந்தது. மேலும், குருணாகல் கிளை சபைக்கு 34 நீதி சேவை அதிகார பிரதேசங்களில் 14 இன் கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தது என்பதனால், பிரதேச கிளை சபை அமைக்கப்பட்டதில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் திறன் சிக்கலுக்குரியதாகும்.

**கடன் நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்து கோரிக்கைகளைத் தீர்ப்பதில் முன்னேற்றம் .**

2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான 04 ஆண்டுகளில் கிடைத்த மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை, தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை மற்றும் எஞ்சியுள்ள கோரிக்கைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | 2022 | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|---|
| **மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை** | 1881 | 1406 | 1268 | 1237 |
| **வருடத்தினுள் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை** | 822 | 230 | 222 | 416 |
| **திசெம்பர் 31 ஆம் திகதியில் எஞ்சியிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை** | 1059 | 1176 | 1046 | 821 |
| **எஞ்சயிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை மொத்த கோரிக்கை எண்ணிக்கையின் சதவீதமாக (%)** | 57 | 84 | 82 | 66 |

அட்டவணை : 19 கடன் உதவி வழங்கப்படுவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கோரல்கள் தீர்க்கப்படும் முன்னேற்றம்.

2022 ஆம் ஆண்டு வரையில் திணைக்களத்திடம் காணப்பட்ட மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை 1881 ஆகும். 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் தீர்க்கப்படாத கோரிக்கைகளின் எண்ணிக்கை 1,059 ஆக இருந்ததுடன் அதில் பிரதான அலுவலகத்தில் 192 கோரிக்கைகளும், கொழும்பு, காலி, கம்பஹா மற்றும் குருணாகல் கிளை சபைகளில் இருந்த கோரிக்கைகள் முறையே 177, 106, 281, மற்றும் 303 ஆகும்.

**சிறைச்சாலைகள் திணைக்களம்.**

சிறைக் கைதிகளுக்கு முறையான புனர்வாழ்வளிப்பு மூலம் சட்டத்தை மதிக்கும் மனிதாபிமானம் உள்ள நபர்களாக மாற்றி நாகரீக சமுதாயத்தை உருவாக்குவதற்கு பங்களிப்பு வழங்குதல் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் உந்துதல் மற்றும் திணைக்கள குழுக்களின் உணர்வைக் கரையேற்றுதல் என்பன சிறைச்சாலை திணைக்களத்தின் நோக்கமாக உள்ளத்துடன், அதற்காக சிறைச்சாலை திணைக்களத்தினால் 09 செயல்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன.


**நலனோம்பல் சிற்றுண்டிச்சாலை மற்றும் விற்பனை நிலையங்களின் வருமானங்கள் அரச வருமானத்தில் வரவு வைக்கப்பட்டிருக்காமை.**

சிறைச்சாலைகள் திணைக்களத்தில் செயல்படுத்தப்படும் நலனோம்பல் சிற்றுண்டிச்சாலை மற்றும் விற்பனை நிலையங்களில் சேவையாற்றுவதற்காக திணைக்கள உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன் நீர் மற்றும் மின்சாரத்திற்காகவும் செலவிடப்படும் செலவு சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் ஏற்கப்படுகின்றது. எனினும் அவற்றினை குத்தகை வருமானமாக அரச வருமானத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 09 சிறைச்சாலை நிறுவனங்களில் 2022 ஆம் ஆண்டு முதல் 06 மாதங்களில் சிற்றுண்டி சாலை மற்றும் விற்பனை நிலையங்களில் அந்த சிற்றுண்டிச் சாலைகளுக்கு இணைக்கப்பட்டுள்ள 27

சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா. 8 மில்லியன் தொகை சிறைச்சாலைகள் திணைக்களம் செலுத்தி இருந்தது. இதற்கு மேலதிகமாக 5,581 மனித நாட்களுக்கு சிறைத் தொழிலாளர்களை ஈடுபடுத்தி இருந்ததுடன் கைதிகளுக்கு உணவுப் பொருட்கள் மற்றும் துப்புரவுப் பொருட்கள் விற்பனையில் மட்டும் ரூபா. 105 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டிருந்தது.


**கைதிகளுக்கு சிறைக்கூடங்களில் போதியளவு இட வசதி இல்லாமை.**

ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தரங்கள் மற்றும் சிறைச்சாலைகள் கட்டளை சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க மற்றும் உள்ளக சுற்றறிக்கைகளுக்கு அமைய கைதிகளின் உள மற்றும் உடல் தகுதிகளுக்குப் பொருத்தமான வகையில் போதிய அளவு இட வசதிகள் இருக்க வேண்டிய போதிலும், 2022 ஜூலை 01 ஆம் திகதி வரையில் 14 சிறைச்சாலைகளில் ஆண் கைதிகளுக்கு 108,689 சதுர அடியிலான குறைந்த இடவசதி அளவே காணப்பட்டது. 2015 திசெம்பர் 31 ஆம் திகதி தொடக்கம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் சிறைச்சாலை கொள்ளளவை விஞ்சி தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளின் எண்ணிக்கை வரைபடம் 17 இன் படியாகும்.




வரைபடம் : 17 சிறைச்சாலை கொள்ளளவை விஞ்சி தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளின் எண்ணிக்கை

(மூலம் - சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புள்ளிவிபரவியல் பிரிவு)




வரைபடம் : 18: 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதத்திலும் சிறையில் உள்ள கைதிகளில் எண்ணிக்கை

மூலம் - சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புள்ளி விபரவியல் பிரிவு

**சிறைச்சாலை கொள்ளளவுக்கு அமைய தடுத்து வைக்கக்கூடிய கைதிகளின்**

2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் சிறைச்சாலை கொள்ளளவுக்கு அமைய தடுத்து வைக்கக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை 11,291 ஆக இருந்த போதிலும், அதனை விஞ்சி தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளின் எண்ணிக்கை 14,885 ஆகும். 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 27 சிறைச்சாலை நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிவிபரத் தரவுகளுக்கு அமைய கொள்ளளவை விஞ்சிய கைதிகளின் எண்ணிக்கை 62 தொடக்கம் 1,907 வரையான வீச்சில் அதிக பெறுமதியில் இருந்தது.

**கைதிகளைக் குழுக்களாகப் பிரித்து தடுத்து வைக்கப்பட்டிருக்காமை.**

சிறைச்சாலை கட்டளை சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க கைதிகள் குழுக்களாகப் பிரித்து தடுத்து வைக்கப்பட வேண்டும். எனினும் கணக்காய்வினால் சிறைச்சாலைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட 04 பௌதீக பரீட்சிப்பு சந்தர்ப்பங்களின் போது 2,222 கைதிகள் வகைப்படுத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

**புனர்வாழ்வுக்கான கட்டளை வழங்கப்பட்டுள்ள கைதிகளைப் புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பாமை.**

2022 நவம்ப 01 ஆம் திகதி வரையில் நீதிமன்றங்களின் மூலம் புனர்வாழ்வுக்கான கட்டளை வழங்கப்பட்டு புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு எண்ணிக்கையை விஞ்சி கைதிகளைத் தடுத்து வைத்திருத்தல்.

அனுப்புவதற்கான எதிர்பார்ப்புடன் 06 மாதங்களுக்கும் அதிக காலம் வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளின் எண்ணிக்கை 1,271 ஆகும்.

**பகுப்பாய்வு அறிக்கைகள் கிடைக்காததால் சிறைச்சாயில் அடைக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்தல் .**

நீதிமன்றத்தினால் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு உரியதான பொலிசாரினால் பகுப்பாய்வு திணைக்களத்துக்கு சமர்ப்பித்துள்ள போதைப் பொருள் மாதிரிகளுக்கு உரிய பகுப்பாய்வு அறிக்கை இதுவரையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததால் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை 5,676 ஆகும்.

**முகாமைத்துவத் தகவல் ஒழுங்கமைப்பினைப் பயன்படுத்தி இருக்காமை.**

சிறைச்சாலை திணைக்களத்தில் ரூபா. 221 மில்லியனான முகாமைத்துவ தகவல் ஒழுங்கமைப்பைத் தாபிக்கும் செயல் திட்டத்திற்கு 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா. 152 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் முகாமைத்துவ தகவல் ஒழுங்கமைப்பினைத் தாபித்ததன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் எட்டப்பட்டிருக்கவில்லை.

**சிறைச்சாலை வைத்தியசாலைகளுக்கு இணைத்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வைத்தியர்கள் குறித்த காலம் சேவையில் ஈடுபடாமை.**

சுகாதார அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு அமைய சிறைச்சாலை வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் வார நாட்களில் நாள் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது 06 மணித்தியால காலமும் மற்றும் சனிக்கிழமைகளில் 04 மணித்தியால காலமும் சேவையாற்ற வேண்டிய போதிலும், சிறைச்சாலை வைத்தியசாலைகளில் இணைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 33 வைத்தியர்கள் ஒரு மாத காலப்பகுதிக்கு 4,570 மொத்த மனித மணித்தியாலங்கள் சேவையாற்ற வேண்டிய போதிலும் அவர்கள் 1,296 மனித மணித்தியாலங்கள் மட்டுமே சேவையாற்றி இருந்தனர்.

**உணவகம் எனும் போர்வையில் சிறைச்சாலை திணைக்களத்தின் வளங்களை ஈடுபடுத்தி தனியார் வணிக நடவடிக்கைகளை நடாத்திச் செல்லுதல்.**

அனுராதபுரம் சிறைச்சாலையில் நலனோம்பல் விற்பனை நிலையம் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு ஒழுங்கமைப்பில் காணப்படும் குறைபாட்டினால் சிறைச்சாலை அதிகாரி ஒருவரினால் நலனோம்பல் சங்கத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் உணவகம் எனும் போர்வையில் சிறைச்சாலை திணைக்களத்தின் வளங்களை ஈடுபடுத்தி தனியார் வியாபார நடவடிக்கையாக பாரிய அளவிலான உணவகம் நீண்ட காலம் தொட்டு நடாத்திச் செல்லப்பட்டுள்ளது.

**சட்டமா அதிபர் திணைக்களம்.**

**குடிமக்கள் / பயனாளிகள் சாசனம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்காமை.**

அரச நிர்வாக சுற்றறிக்கையின் அறிவுரைகளின் பிரகாரம் அரச துறையின் செயல்பாடுகளை மிகவும் வினைத்திறனாக்குவதற்கு மற்றும் அதற்காக தொடர்புடைய தரப்பினருடைய புரிந்துணர்வு மற்றும் ஒருவருக்கு ஒருவர் இடையிலான நம்பிக்கையை வளர்ப்பதற்கு குடிமக்கள் / பயனாளிகள் சாசனத்தை அறிமுகப்படுத்துதல் அனைத்து அரச நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருந்த போதிலும், திணைக்களம் இது வரையிலும் குடிமக்கள் / பயனாளிகள் சாசனத்தை அறிமுகப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்.**

**நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதில் உள்ள பலவீனங்கள்.**

மீளாய்வாண்டில் 5 செலவு விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதிகளுக்கு மேலதிகமாக நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் வேறு நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா. 19 மில்லியன் நிதி மாற்றப்பட்டிருந்தது. செலவு விடயங்களுக்கு இடையே அவ்வாறு மாற்றப்படும் வீதம் 13 சதவீதம் தொடக்கம் 333 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. அதே போன்று நிதிப் பிரமாணம் 66 மாற்றுதலின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளில் மூன்று செலவு விடயங்களில் 24 சதவீதம்

தொடக்கம் 68 சதவீதம் வரையில் மீதி காணப்பட்டது. மூலதன செலவு விடயங்களுக்கான நிதி ரூபா. 5 மில்லியனான மொத்த நிதியும் எஞ்சியிருந்தது..

**பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பகுப்பாய்வு அறிக்கை வழங்கும் முன்னேற்றத்தின் பலவீனங்கள் .**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் திணைக்களத்தின் 12 பிரிவுகளுக்காக 7700 வழக்குகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பகுப்பாய்வு அறிக்கைகள் வழங்குவதற்கு எஞ்சியிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டில் இன்னமும் 45,245 வழக்குகள் கிடைத்திருந்தன. இதனால் 2022 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 40,756 ஆக உள்ளத்துடன் ஆண்டின் இறுதியில் பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக 12,189 வழக்குகள் எஞ்சி இருந்தன.

**வெளிநாட்டுக்குச் சென்ற மற்றும் சேவையைக் கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிட்டிருக்காமை.**

சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொண்டு வெளிநாட்டுக்குச் சென்ற திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மூவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 3 மில்லியனான மொத்த தண்டப் பணம் மற்றும் சம்பளத்துடனான விடுமுறை பெற்றுக் கொண்டு வெளிநாட்டுக்குச் சென்ற உதவிப் பகுப்பாய்வாளர் மீண்டும் சேவைக்கு சமூகமளிக்காத காரணத்தால் அறவிடப்பட வேண்டிய ரூபா. 9 மில்லியனான தொகை என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வெளிநாட்டுக்குச் சென்ற சிரேஷ்ட உதவிப் பகுப்பாய்வாளருக்கு சுகயீனம் காரணமாக மீண்டும் இலங்கைக்கு வந்ததுடன், அந்த உத்தியோகத்தருக்கு பாடநெறிக் கட்டணம் உள்ளிட்ட ஏனைய செலவுகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா. 6 மில்லியன் தொகை திணைக்களத்தினால் இழக்கப்பட்டிருந்தது.

## சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்.

**சமுததாயஞ்சார் சீர்திருத்த செயல்பாடுகளுக்காக போதிய அளவு இட வசதிகள் இல்லாமை.**

சமுதாய சீர்திருத்த செயல்பாடுகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு தமது நடவடிக்கைகளைத் தடையின்றி நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான இட வசதிகள் மற்றும் அலுவலக வசதிகள் என்பன போதிய அளவில் வழங்கப்பட வேண்டிய போதிலும், 9 மாகாண நீதான் நீதிமன்றங்களில் அமைக்கப்பட்டுள்ள 49 சமூக மேம்பாட்டு அலுவலகங்களில் போதிய அளவு இட வசதிகள் இல்லாத காரணத்தால் சமூக மேம்பாட்டு செயல்பாடுகளை உற்பத்தித்திறனான வகையில் செயல்படுத்துவதற்குத் தடையாக உள்ளது.

**விரல் அடையாள இயந்திரம் தாபிக்கப்பட்டதண் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேறாமை .**

திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்களுக்கு 2018 ஆம் ஆண்டில். ரூ 3 மில்லியன் செலவில் 97 விரல்

அடையாள இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், பிரதான அலுவலகத்தினால் நிர்வகிக்கப்படும் வகையில் பிரதேச அலுவலகங்களின் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் தரவு ஒழுங்கமைப்பு அபிவிருத்தி செய்யப்படாத காரணத்தால் விரல் அடையாள இயந்திரம் தாபிக்கப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை..

**மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள்.**

அரசியல் அமைப்பு சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பிரயோகித்து நீதியை வினைத்திறனாக நிர்வகிப்பதன் மூலம் இலங்கை மக்களின் நம்பிக்கையை பாதுகாத்தல் மற்றும் அதன் மூலம் மக்களின் அபிவிருத்தியை ஏற்படுத்துதல் உச்ச நீதிமன்றத்தின் நோக்கமாகும் .

மேலே கூறப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கம் செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

**தீர்க்கப்பட்டுள்ள வழக்கு எண்ணிக்கைகளின் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் இருத்தல்.**

2022 ஜனவரி தொடக்கம் திசெம்பர் வரையில் உச்ச நீதிமன்றத்தில் தீர்க்கப்படுவதற்காக இருந்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 6,678 ஆக இருந்த போதிலும், அந்த காலத்தினுள் தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1,196 ஆக இருந்த காரணத்தால் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் இன்னமும் தீர்க்கப்படுவதற்காக இருந்த வழக்குகளின் எண்ணிக்கை 5,482 ஆகும். அதாவது வருட ஆரம்பத்தில் தீர்ப்பதற்காக இருந்த வழக்குகளுடன் ஒப்பிடும்போது தீர்க்கப்பட்ட வழக்குகளின் தொகை 18 சதவீதம் எனும் குறைந்த வீதத்தில் உள்ளது.

**நீதிச் சேவைகள் ஆணைக் குழு.**

**வலுவாதார அபிவிருத்தி நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை .**

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடிதத்தின் பிரகாரம் வலுவாதார அபிவிருத்தி நோக்கினை எட்டுவதற்குத் தேவையான வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**குடிமக்கள் / பயனாளிகள் சாசனத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை.**

அரச நிர்வாக சுற்றறிக்கையின் அறிவுரைகளின் பிரகாரம் அரச துறையின் செயல்பாடுகளை மிகவும் வினைத்திறனாக்குவதற்கு மற்றும் அதனோடு தொடர்புடைய தரப்பினர்களிடையே சிறந்த புரிந்துணர்வு மற்றும் ஒருவருக்கொருவர் இடையிலான நம்பிக்கையை வளர்ப்பதற்கு குடிமக்கள் / பயனாளிகள் சாசனத்தை அறிமுகப்படுத்துதல் அனைத்து அரச நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்த போதிலும், ஆணைக்குழு இதுவரையில் குடிமக்கள் / பயனாளிகள் சாசனத்தை அறிமுகப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**சட்ட உதவிகள் ஆணைக்குழு.**

**சட்ட உதவிகளை வழங்குவதற்கான வழக்கினை தீர்ப்பதில் முன்னேற்றம்.**

ஆணைக் குழுவின் 2022 வரைவு வருடாந்த அறிக்கைக்கு அமைய சட்ட உதவி வழங்குவதற்கு 2022 ஜனவரி 01 ஆம் திகதியில் முன்கொணரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 38,099 ஆக உள்ளதுடன், 2022 ஜனவரி தொடக்கம் திசெம்பர் வரையில் புதிதாக தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 11,380 ஆக இருந்ததால் அந்த காலப் பகுதியினுள் நடவடிக்கை எடுப்பதற்கு இருந்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 49,479 ஆகும். அதில் 10,740 வழக்குகள் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அத்தினத்தில் இன்னமும் தீர்ப்பதற்காக இருந்த வழக்குகள் 38,739 ஆகும். அது மொத்தமாக சேவை வழங்குவதற்கு இருந்த வழக்கு எண்ணிக்கையில் 78 சதவீதம் ஆகும்.

**இழப்பீட்டுக்கான அலுவலகம்.**

**நட்ட ஈடு செலுத்தும் செயல்பாட்டில் தாமதம்.**

இழப்பீட்டுக்கான அலுவலகத்தில் நட்ட ஈடு செலுத்தும் செயல்பாடு தொடர்பான பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்ட வகையில் நட்ட ஈட்டு பிரேரணைகள் 04 முறைமைகளின் கீழ் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் நிறுவனத்திடம் அனுப்பப்பட்டிருந்த ரூபா. 653 மில்லியன் பெறுமதியான 4,770 நட்ட ஈட்டு விண்ணப்பப் பத்திரங்கள் தொடர்பில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நட்ட ஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**இற்றைப்படுத்தப்படாத தகவல்களில் அடிப்படையில் நட்டு ஈடு வழங்கும் செயல்பாடு மேற்கொள்ளப்படுதல்.**

மீளாய்வாண்டினுள் இழப்பீடு வழங்குவதற்காகக் காசோலை வழங்கப்பட்ட போதிலும் இழப்பீட்டாளர்களுக்கு காசோலை வழங்கும் சந்தர்ப்பத்தில் இற்றைப்படுத்தப்படாத தகவல்களின் அடிப்படையில் நட்டு ஈடு வழங்கும் செயல்பாடு இடம் பெற்ற காரணத்தால் அந்த செயல்முறை சரியான வகையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டுக்கான நட்ட ஈடு பெறுனர்களுக்கு வழங்கப்பட்டிருந்த காசோலைகளில் ரூபா. 18 மில்லியன் பெறுமதியான 150 காசோலைகளின் தகவல்கள் சரியானதாக இல்லாததன் அடிப்படையில் வங்கியினால் மறுக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டினுள் ரூபா. 30 மில்லியன் பெறுமதியான 448 காசோலைகள் கால நீடிப்பு செய்யப்பட்டிருந்தது.

**பொருளாதார பெறுபேறு இன்றி நடைமுறைக் கணக்கில் பணத்தினைத் தடுத்து வைத்திருந்தல்.**

இணைந்த கடன் உதவி முன்மொழிவு முறையொன்று 2022 ஆம் ஆண்டில் தேறியிருந்த ரூபா. 115 மில்லியன் முதலீடுகளில் 2022 ஒக்டோபர் 21 ஆம் திகதி தொடக்கம் காணப்பட்ட ரூபா. 20 மில்லியன் தொகை மற்றும் மூலதன செலவுக்காக திறைசேறியிடமிருந்து கிடைத்த 2022 மார்ச் 22 ஆம் திகதி தொடக்கம் தடுத்து வைக்கப்பட்டிருந்த

ரூபா. 5 மில்லியன் தொகை என்பன எதுவித பொருளாதாரப் பெறுபேறும் இன்றி கணக்காய்வு தினம் வரையில் இழப்பீட்டுக்கான அலுவலக வங்கி நடைமுறைக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

**காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம்.**

**கிடைத்திருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது விசாரணை செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்த பெறுமதியைக் கொண்டுள்ளமை.**

காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகத்தினை அமைப்பதற்கு உரிய சட்டத்தின் முக்கிய செயல்பாடுகளுள் காணாமல் போனவர்கள் தொடர்பான நிகழ்வுகள் தொடர்பில் சரியான வழிமுறை எடுக்கும் நோக்கில் உரிய அதிகாரியிடம் பரிந்துரை சமர்ப்பித்தல் மற்றும் காணாமல் போனவர்கள் மற்றும் அவர்களது உறவினர்களின் உரிமைகள் மற்றும் பிணைப்புகளைப் பாதுகாத்தல் உள்ளிட்டதுமாக, அலுவலகத்தில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கிடைக்கப் பெற்றிருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 14,988 ஆக உள்ளத்துடன், அத்தினத்தில் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,389 ஆகும். அதற்கு அமைய கிடைக்கப் பெற்றிருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது விசாரணை செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 15 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**கோவைகளை இற்றைப்படுத்துவதில் தாமதம்.**

2022 ஆம் ஆண்டில் ரூபா.9 மில்லியன் செலவு செய்யப்பட்டு விசாரணை பிரிவின் ஒத்துழைப்புடன் விசாரணைகளை நடத்துதல் மற்றும் 9000 கோவைகளை இற்றைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அந்த வருட இறுதி வரையிலும் ரூபா. 21 மில்லியன் செலவிடப்பட்டு 2389 கோவைகள் மட்டுமே இற்றைப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய மதிப்பீடு செய்யப்பட்ட தொகையினை விட 226 சதவீதத்தினால் உண்மையான தொகை அதிகரித்து இருந்ததுடன் அதற்கு அமைய சரியான முறையில் நிதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**குற்றத்தால் பலியானவர்கள் மற்றும் சாட்சியாளர்களைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை.**

**நட்ட ஈடு வழங்குவதற்கு முன்மொழிபட்டு முறையொன்றினைத் தயாரித்து அதனை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்காமை.**

குற்றத்தால் பலியானவர்களினதும் மற்றும் சாட்சியாளர்களினதும் நிதியிலிருந்து நட்ட ஈடு வழங்குவதற்காக முன்மொழியப்பட்டிருந்த முறையொன்றினைத் தயாரித்து அதனை ஏற்றுக்கொள்ளல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டும் என்றாலும், அதிகார சபை அமைக்கப்பட்டு 7 ஆண்டுகள் கடந்து இருந்த போதிலும், அதற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அந்த நிதியத்தில் 2022 திசெம்பர் 31 ஆம்

திகதியில் ரூபா. 16 மில்லியன் மீதி காணப்பட்டது.

**கருணை இல்லத்தைப் பயன்படுத்தாமை.**

கருணை இல்லமொன்றை நடாத்திச் செல்வதற்காக வஸ்கடுவ பிரதேசத்தில் காணி மற்றும் கட்டிடம் ரூபா. 21 மில்லியன் தொகை மற்றும் அதற்குத் தேவையான வீட்டுப் பொருட்கள் மற்றும் ஏனைய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு. ரூபா. 1 மில்லியன் தொகையினை செலவு செய்து இருந்த போதிலும் இந்த கருணை இல்லம் பயன்படுத்தப்படாது செயலற்று காணப்பட்டது.

# மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- நிதி ஒதுக்கீடு மற்றும் செலவு.
- வாகன விபத்து மற்றும் சேதங்கள்.
- தீப்பிடித்திருந்த வாகனத்திற்கு உரிய காப்புறுதியினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை.
- டிஜிட்டல் விற்பனைத் தளத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட பலன்கள் பெற்றுக் கொள்ளப்படாமை.
- வெளிநாட்டு உதவி செயல்திட்டங்களின் செயலாற்றுகை.
- நடப்பு தரவுகள் மற்றும் அறிக்கைகளை உரிய நிறுவனத்திற்கு வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டிருந்த தரவு ஒழுங்கமைப்பைப் பயன்படுத்தாமை.
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை.

# மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் துறை

சிறுவர்கள் மற்றும் மகளிர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அனுகூலமான உணர்வளிக்கும் சமூகத்தினை உருவாக்கும் நோக்கில் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் கீழ் மகளிர், சிறுவர் அலுவலக பிரிவு, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆகிய நிறுவனங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்காக உள்ளன.

.

- அமைச்சின் விடயப் பரப்பிற்குள் உட்படும் பொதுமக்கள் சேவைகளை வினைத்திறனுடனும் மற்றும் பொதுமக்களின் நட்புறவு வகையிலும் வழங்குதல்.

- விரையம் மற்றும் ஊழலை ஒழித்து அமைச்சின் கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவதற்கு பயனுள்ள வகையில் புதிய முகாமைத்துவ முறை தொழில்நுட்பங்களை ஈடுபடுத்தி அனைத்து முறைமைகள் மற்றும் ஒழுங்குகளை சீர்திருத்தம் செய்தல் .

- பெண்கள் சாசனத்தை நடைமுறைப்படுத்துதல்.

- அரச நடவடிக்கைகளின் போது தீர்மானம் எடுத்தல் மற்றும் அரசியல் துறையில் பெண்களின் பங்களிப்பு மற்றும் பிரதிநிதித்துவத்தை முன்னேற்றுவதற்கான வழிமுறைகளை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

- மோதல்கள் மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்ட பெண்களை வலுவூட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- மகளிர் மற்றும் சிறுவர் துன்புறுத்தலை தவிர்ப்பதற்கான சட்டக் கொள்கைகளை வலுப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.


- பாலினம் மற்றும் ஆண் பெண் சமூக பாலின அடிப்படையில் பெண்களைப் பாகுபடுத்துவதை தவிர்ப்பதற்காக இருக்கும் சட்டத்தினை திருத்தி புதிய சட்டம் மற்றும் கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

- பெண்கள் தலைமையிலான குடும்ப அலகுகளை வலுப்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் வேலைத் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

- மகளிர் மற்றும் சிறுவர் நடவடிக்கைகளுக்கு உரிய நீண்டு நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி விருப்புரிமையை நிறைவேற்றிக் கொள்ளுதல்.
- முன்பள்ளிகளுக்கான தேசிய கொள்கையினை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்.
- உடல் மற்றும் மன ரீதியாக ஆரோக்கியமான பிள்ளைகளை உருவாக்கும் நோக்கில் சர்வதேச தரத்துடன் பொருந்தும் வகையிலான வேலைத் திட்டங்கள் மற்றும் செயல் திட்டங்களை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
- சிறுவர் சாசனத்தை நடைமுறைப்படுத்துதல்.
- சிறுவர் பாதுகாப்பு மத்திய நிலையத்தை ஒழுங்குறுத்தல் செய்தல்
- சிறப்பான திறமைகள் உள்ள பிள்ளைகளின் அந்தத் திறமைகளை மேம்படுத்துவதற்காக நிதி உதவிகளை வழங்குதல்.

**நிதி ஒதுக்கீடு மற்றும் செலவு.**

2022 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்திற்கு மொத்தமாக ரூபா. 33,394 மில்லியன் நிதி பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதி வரையில் அதில் ரூபா. 19,385 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் உருவில் காட்டப்பட்டுள்ளது.




| | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்திற்கு | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை | மொத்தம் |
|---|---|---|---|---|
| நிதி ஒதுக்கீடு | 32639 | 434 | 321 | 33394 |
| செலவு | 18646 | 425 | 314 | 19385 |
| மீதி | 13993 | 9 | 7 | 14009 |

வரைபடம் : 19 வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் அளவும் உள்ளபடியான செலவினமும்

மூலம் : 2022 வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

**வாகன விபத்து மற்றும் சேதங்கள்.**

**தீப்பிடித்திருந்த வாகனத்திற்கு உரிய காப்புறுதியினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை.**

அமைச்சுக்கு சொந்தமான காப்புறுதி பெறுமதி ரூபா. 22 மில்லியனான மோட்டார் வாகனம் ஒன்று தீப்பிடித்ததன் காரணமாக விபத்து ஏற்பட்டு 07 மாதங்களின் பின்னர் வழங்கப்பட்டிருந்த இறுதி அறிக்கைக்கு அமைய காப்புறுதி நிறுவனத்தினால் ரூபா. 17 மில்லியன் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவித்திருந்த போதிலும் அந்தத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**டிஜிட்டல் விற்பனைத் தளத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட பலன்கள் பெற்றுக் கொள்ளப்படாமை.**

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்ப கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்வி சேவை இராஜாங்க அமைச்சின் 2020 ஆம் ஆண்டு வருடாந்த செயல் திட்டத்தில் மகளிர் தொழில் முயற்சிக்காக டிஜிட்டல் விற்பனை தளமொன்றைத் (நுீழுடய) தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்காக 2022 ஆம் ஆண்டு இறுதி வரையில் ரூபா.4.4 மில்லியன் தொகை அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது. மகளிர் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளின் விற்பனைக்கான நிகழ்நிலை விற்பனைத் தளமான இந்த ஒழுங்கு அமைப்பினுள் 143 பெண்கள் மட்டுமே பதிவு செய்திருந்த போதிலும் விற்பனை நடவடிக்கைகள் இடம் பெற்றிருக்கவில்லை.

**வெளிநாட்டு உதவி செயல்திட்டங்களின் செயலாற்றுகை.**

முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி செயல் திட்டத்திற்காக உலக வங்கி நிதி உதவியின் கீழ் மீளாய்வு ஆண்டில் வருடாந்த மதிப்பீடு மற்றும் துணை மதிப்பீடுகள் மூலம் ரூபா. 1,895 மில்லியன் நிதி வழங்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்த பெறுமதி ரூபாய் 37 மில்லியனான 20 முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் இரத்து செய்யப்பட்டிருந்தது.

**நடப்பு தரவுகள் மற்றும் அறிக்கைகளை உரிய நிறுவனத்திற்கு வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டிருந்த தரவு ஒழுங்கமைப்பைப் பயன்படுத்தாமை.**

சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சாசனத்தை நடைமுறைப்படுத்தும் முன்னேற்றம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் குழுவிற்கு வழங்குவதற்காக தகவல்களை சேகரித்து வைத்திருப்பது சிரமம் என்பதால் சரியான, நடப்பு தரவுகள் மற்றும் அறிக்கைகளை உரிய நிறுவனத்திற்கு வழங்கும் நோக்கில் ரூபா. 2 மில்லியன் தொகை செலவிடப்பட்டு தரவு ஒழுங்கமைப்பொன்று உருவாக்கப்பட்டு இருந்த போதிலும் தரவு ஒழுங்கமைப்பிற்குத் தரவினை உள்ளீடு செய்தல் சிக்கல் என்பதன் காரணமாக பயன்படுத்தப்படாது செயலற்றுக் காணப்பட்டது.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை.**
2016 ஆம் ஆண்டில் 30 வருட கால குத்தகை காலத்திற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்த காணியினை ரூபா. 18 மில்லியன் பெறுமதிக்கு கொள்வனவு செய்திருந்த போதிலும் இந்தக் காணியினை இது வரையிலும் எதுவிதமான செயல்பாட்டிற்கும் ஈடுபடுத்தாது செயலற்று காணப்படுகின்றது.

# வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

- வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபடுவதில் முன்னேற்றத்தை சுட்டிக்காட்டுதல்.
- கொரியாவில் தொழிலுக்காக இலங்கையில் தொழிலாளர்களை அனுப்புவதற்குரிய உடன்படிக்கை இற்றைப்படுத்தப்படாமை.
- வெளிநாட்டுத் தூதரகங்களில் அமைக்கப்பட்டுள்ள தொழிலாளர் நலன்புரி பிரிவுக்கு பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்காக ஒழுங்கான நடைமுறையினைத் தயாரித்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி இடர் கடன் செலுத்துதல்.
- அபுதாபி உயர் ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் பணியகத்தின் முகாமையாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி முறைகேடு.
- அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்.
- தொழிலாளர் நலன்புரி நிதியம்.
    - புலம்பெயர்ந்தோருக்காக ஒரு மில்லியன் பெறுமதியான வீடு வீதம் அமைத்துக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றமின்மை.
    - வளைகுடா போரில் வேலையை இழந்தவர்களுக்கு நட்ட ஈடு வழங்குதல்.
    - பணியகத்திற்கு கிடைத்திருந்த நிதியினைக் குறித்த செயல்களுக்கு பயன்படுத்தாது தடுத்து வைத்திருத்தல்.
    - ஒன்றிணைந்த மாவீரர் வீட்டுக் கடன் வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தாமை.
- இலங்கை வெளிநாட்டு தொழில் முகவர் தனியார் கம்பனியின் செயலாற்றுகை.
    - தொழில் வெற்றிடங்களுக்கு போதிய அளவு தொழிலாளர்களை அனுப்புவதற்கு தவறியிருந்தமை.

# வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை

இலங்கை இயற்கை வளங்கள் நிறைந்த நாடாக இருந்த போதிலும் வெளிநாட்டு சந்தையில் நெகிழ்வற்ற கேள்வியைக் கொண்ட உற்பத்திகளுக்கான தொழில்நுட்ப மற்றும் மூலதன குறைபாடுகளினால் இன்னமும் அடிப்படைப் பொருட்களை இறக்குமதி செய்யும் நாடொன்றின் நிலையிலேயே இருப்பதற்கு நேரிட்டுள்ளது. அதே போன்று நாட்டின் கனிம வளங்களின் தட்டுப்பாட்டினால் இன்னமும் வரையறைக்குட்பட்ட நீர் மின் சக்தி தவிர ஏனைய அனைத்து வலு சக்திகளின் தேவைகளுக்காக வெளிநாட்டு சந்தைகளை நாடிச் செல்லுவதற்கு நேரிட்டுள்ளதன் மூலம் நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி இடைவெளி தொடர்ந்தும் அனுகூலமற்ற நிலையில் காணப்படுகின்றது, இந்த நிலைமையினை வெற்றி கொள்வதற்கான சிறந்த தீர்வாக நெகிழ்வற்ற கேள்வியைக் கொண்ட வெளிநாட்டு தொழில் சந்தையை உருவாக்குததலே எனினும் அதற்கு பொருத்தமான வெளிநாட்டு பயிற்சி பெற்ற தொழில் படையினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். இந்த தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக தொழில் மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு அமைச்சின் கண்காணிப்பு மற்றும் செயல்பாட்டின் கீழ், வெளிநாட்டு தொழில் துறை தொடர்பான அரசின் கடமைப் பொறுப்பினை நிறைவேற்றும் முன்னணி நிறுவனமாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் காணப்படுவதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவன அமைப்பின் மூலம் அதன் சேவைகள் விரிவுபடுத்தப் பட்டுள்ளன.


- 15 வெளிநாட்டுத் தூதரகங்களில் தொழிலாளர் நலன்புரி பிரிவுகளைத் தாபித்தல்.
- வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக வெளியேறி பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்த புலம்பெயர்ந்தோர்களை தற்காலிகமாகத் தடுத்து வைப்பதற்காக 05 தடுப்பு முகாம்களை இந்த நலன்புரி பிரிவின் கீழ் பேணிச் செல்லுதல்.
- புலம்பெயர்ந்த தொழிலாளர்களைப் பழக்குதல் மற்றும் பயிற்றுவித்தல் நடவடிக்கைகளுக்காக நாடு முழுவதிலும் 10 மத்திய நிலையங்களைப் பேணிச் செல்லுதல்.
- வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் 06 பிராந்திய அலுவலகங்களைத் தாபித்தல்.

2022 ஆம் ஆண்டினுள் பணியகத்தினால் தனது சேவைகளின் மூலம் மொத்தமாக ரூபா. 11.470 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டிருந்ததுடன் மொத்த செலவு ரூபா. 3,680 மில்லியனாக இருந்தது. 2022 திசெம்பர் 31 ஆம் திகதியின் பணியாகத்திற்குச் சொந்தமான மொத்த முதலீட்டு பெறுமதி ரூபா. 23,251 மில்லியனாக இருந்தது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தகவல்களுக்கு அமைய 2022 ஆம் ஆண்டில் பணியகத்தில் பதிவு செய்து தொழிலுக்காக வெளியேறிச்

சென்றவர்களின் எண்ணிக்கை 311,046 ஆக இருந்தது. அதில் 183,649 (60%) வீட்டு வேலையாட்கள், அரைவாசி பயிற்சி பெற்ற மற்றும் பயிற்சி பெறாத தொழிலாளர்களாக இருந்தனர். தொழில் சார் தரத்தின் தொழிலுக்காக மற்றும் பயிற்சி பெற்ற தொழில்களுக்காக வெளியேறிய எண்ணிக்கை முறையே 14,307 மற்றும் 40,174 ஆக இருந்தனர்.

**சேவை வகைப்படுத்தலுக்கு அமைய வெளிநாடு செல்லுதல் - 2022**





வரைபடம் :20 சேவை வகைப்படுத்தலுக்கு அமைய வெளிநாடு செல்லுதல் - 2022
மூலம் : இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்

**வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபடுவதில் முன்னேற்றத்தை சுட்டிக்காட்டுதல்.**

உலகளாவிய தொற்றுநோய் நிலைமையை முக்கியமாகக் கொண்டு பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கடந்த வருடங்களில் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைவடைந்து இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் 154 சதவீத முன்னேற்றம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

**பணியகத்தில் பதிவு செய்து தொழிலுக்காக வெளிநாடு செல்லுதல் - 2018 தொடக்கம் 2022 வரை**




வரைபடம் :21 பணியகத்தில் பதிவு செய்து தொழிலுக்காக வெளிநாடு செல்லுதல் - 2018 தொடக்கம் 2022 வரை
மூலம் : இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை - 2022

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள சட்டரீதியான நிறுவனங்களினால்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புகளில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கம் செய்து கீழே தரப்பட்டுள்ளது.

**கொரியாவில் தொழிலுக்காக இலங்கையில் தொழிலாளர்களை அனுப்புவதற்குரிய உடன்படிக்கை இற்றைப்படுத்தப்படாமை.**

கொரியாவில் தொழிலுக்காக இலங்கை தொழிலாளர்களை அனுப்புவதற்கு உரியதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு மற்றும் கொரிய அரசாங்கம் என்பவற்றுக்கிடையே 2014 நவம்பர் 29 ஆம் திகதி 02 வருட காலத்திற்கு உரிய கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைய, நியாயமான காரணங்கள் இன்றி அந்த ஒப்பந்தம் மீண்டும் இற்றைப்படுத்தப்படுவதற்காக ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு 06 மாத காலம் கடந்திருக்குமாயின், ஒப்பந்தத்தினை இடை நிறுத்துவதற்கு அல்லது முடிவுறுத்துவதற்கான இயலுமை உள்ளது. இதன் கீழ் அந்த அரசாங்கத்திடம் தொழிலாளர்களை அனுப்பும் நடவடிக்கை பணியாகத்தினால் மட்டும் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கடந்த 06 வருடங்களில் மொத்தமாக 20,667 பேர் தொழிலுக்காக அனுப்பப்பட்டிருந்தனர். எனினும் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒப்பந்த இற்றைப்படுத்தப்படுதல் 2023 ஜூலை வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.

**வெளிநாட்டுத் தூதரகங்களில் அமைக்கப்பட்டுள்ள தொழிலாளர் நலன்புரி பிரிவுக்கு பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்காக ஒழுங்கான நடைமுறையினைத் தயாரித்தல்.**

2023 ஜனவரி 18 ஆம் திகதி இடம்பெற்ற அரச முயற்சிகள் செயற்குழு கூட்டத்திலும் வெளிநாட்டு தூதரகங்களுக்கு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் நடைமுறை பற்றிய முகாமித்துவ சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு அமைய ஒழுங்கான நடைமுறையொன்றைத் தயாரிக்குமாறு பரிந்துரை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2023 ஜனவரி 17 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த நடைமுறையில் குறைபாடு காணப்படுகின்றது என்பதைக் குறிப்பிட்டு பணியகத்தினால் நிராகரிக்கப்பட்டு இருந்தது.

**அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி இடர் கடன் செலுத்துதல்.**

அரச நிர்வாக சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கு முரணாக பணியகத்தில் உத்தியோகத்தர்களுக்கு இடர் கடன் செலுத்தப்பட்ட காரணத்தினால் மீளாய்வு வருடத்தில் 525 உத்தியோகத்தர்களுக்கு மொத்தமாக ரூபா. 68 மில்லியன் மேலதிகமாக இடர் கடனாக செலுத்தப்பட்டிருந்ததுடன் உடனடி கடனாக 4.2 சதவீத வட்டி வீதத்தின் கீழ் 107 பேருக்கு 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 4 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.

**அபுதாபி உயர் ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் பணியகத்தின் முகாமையாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி முறைகேடு.**

அபுதாபி உயர் ஸ்தானிகர் அலுவலகத்தில் தொழிலாளர் நலன்புரி பிரிவின் பதவியணி அங்கத்தவர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா. 1 மில்லியன் நிதி முறைகேடு மற்றும் பணியகத்தின் முகாமையாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா. 4 மில்லியன் நிதி துஷ்பிரயோகம் என்பன இடம் பெற்று 9 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்.**

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அதிகார சட்டத்தின் 45 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கைக்கு வெளியே தொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களின் நலனைக் குறிக்கோளாக கொண்டு ஆரம்பிக்கப்பட்டு இருந்த தொழிலாளர் நலன்புரி நிதியத்தின் வெளிநாட்டு வங்கி நடைமுறை கணக்குகளில் காணப்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா. 395 மில்லியனாக இருந்தது. அதிகார சட்டத்தின் 17 (2) மற்றும் 45 (2) பிரிவுகளின் ஒழுங்கு விதிகளுக்கு முரணாக பணியக நிதியத்திற்கு சேர்க்கப்பட வேண்டிய மொத்தமாக ரூபா. 3,494 மில்லியன் வருமானம் தொழிலாளர் நலன்புரி நிதியத்தில் சேகரிக்கப்பட்டு இருந்ததுடன் பணியக நிதியத்தில் இருந்து செலுத்தப்பட வேண்டிய வெளிநாட்டு தூதரக சேவைக்காக இணைக்கப்பட்டிருந்த 60 உத்தியோகத்தர்களின் சம்பளம், கொடுப்பனவு மற்றும் ஏனைய வசதிகளுக்காக மொத்தமாக ரூபா. 684 மில்லியன் தொகை தொழிலாளர் நலன்புரி நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது.

**தொழிலாளர் நலன்புரி நிதியம்.**

**புலம்பெயர்ந்தோருக்காக ஒரு மில்லியன் பெறுமதியான வீடு வீதம் அமைத்துக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றமின்மை.**

தொழிலாளர் நலன்புரி நிதியத்தின் மூலம் முழுமையாக ஊனமுற்ற புலம்பெயர்ந்தோருக்கு ஒரு மில்லியன் பெறுமதியான வீடு வீதம் அமைத்துக் கொடுப்பதற்காக 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் 04 வீடுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா. 10 மில்லியன் ஒதுக்கப்பட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதில் 03 வீடுகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்காதுடன் ரூபா. 2 மில்லியன் மட்டும் செலவிடப்பட்டிருந்தது.

**வளைகுடா போரில் வேலையை இழந்தவர்களுக்கு நட்ட ஈடு வழங்குதல்.**

1990 மற்றும் 1991 ஆம் ஆண்டுகளில் வளைகுடா போரில் தொழிலை இழந்தவர்களுக்கு நட்ட ஈடு பெற்றுக் கொடுப்பதற்காக ஐக்கிய நாடுகள் நட்ட ஈட்டு ஆணைக்குழு இலங்கைக்கு வழங்கி இருந்த நட்ட ஈட்டு நிதியில், நட்டு ஈட்டினை வழங்குதல் 1994 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2022 திசெம்பர் 31

ஆம் திகதி வரையிலும் 948 பேருக்கு ரூபாய். 251 மில்லியன் தொகை நட்ட ஈடாக செலுத்த வேண்டி இருந்தது. இந்த நட்ட ஈட்டு நிதி நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்டு 1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்காக ரூபாய். 4,961 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டு இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில், நட்ட ஈட்டு நிதியம் ரூபா. 5,212 மில்லியனாகி இருந்தது. எவ்வாறு இருப்பினும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நட்ட ஈடு செலுத்தப்பட வேண்டிய நபர்களுக்கு இந்த நட்ட ஈட்டினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**பணியகத்திற்கு கிடைத்திருந்த நிதியினைக் குறித்த செயல்களுக்கு பயன்படுத்தாது தடுத்து வைத்திருத்தல்.**

2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்கு உரிய பணியகத்தின் முறைப்பாட்டாளர்களுக்கு செலுத்துவதற்காக ரூபா 22 மில்லியனும், மரணம் அடைந்த புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் 157 பேருக்கு மரண நட்ட ஈடாக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா. 48 மில்லியனும், வெளிநாட்டு தொழிலாளர்களுக்காக பாதுகாப்பு கணக்கில் (ளுயகந யுஉஉழரவெ னுநிழளவை) வைப்பிலிடப்பட்டிருந்த ரூபா. 82 மில்லியனும் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களை மீண்டும் இலங்கைக்கு கொண்டு வருவதற்காக அவர்களது வீட்டாளர்களினால் பணியகத்தில் வைப்பிலிடப்பட்டிருந்த தொகையில் மீதியாக உள்ள ரூபா. 37 மில்லியன் என மொத்தமாக ரூபா. 189 மில்லியன் மீதி செலுத்தப்படாது அந்த பணியகக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

**ஒன்றிணைந்த மாவீரர் வீட்டுக் கடன் வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தாமை.**

2013 ஜனவரி 24 ஆம் திகதி இடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை சமுர்த்தி அதிகார சபையுடன் இணைந்து மாவீரர் வீட்டுக் கடன் வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 05 வருட புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு பணியகத்தினால் 2013 மார்ச் 8 ஆம் திகதி சமுர்த்தி அதிகார சபைக்கு ரூபா. 100 மில்லியன் தொகை செலுத்தப்பட்டு இருந்ததுடன் அந்தத் தொகை சமுர்த்தி அதிகார சபையின் பெயரில் நிலையான வைப்பில் வைப்பிலிடப்பட்டிருந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் காலம் 2018 மார்ச் 7 ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ள போதிலும் செயல்திட்டத்திற்கு அமைய கடன் வழங்குதல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்காக 2014 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரையில் வட்டி வருமானமும் கிடைத்திருக்கவில்லை. மேலே குறிப்பிடப்பட்ட வைப்புடன் பணியகத்திடம் மொத்தமாக ரூபா. 397 மில்லியன் பெறுமதியான 07 நிலையான வைப்புக்கள் வங்கி பிணையாக வைக்கப்பட்டு வீட்டுக் கடன் முன்மொழிவு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்தக் கடன் முன்மொழிவு

செயற் திட்டம் செயல்படும் நிலைமையில் இருக்கவில்லை.

**இலங்கை வெளிநாட்டு தொழில் முகவர் தனியார் கம்பனியின் செயலாற்றுகை.**

1996 ஒக்டோபர் 04 ஆம் திகதியிடப்பட்ட சமூக கூட்டுத்தாபன நோக்கத்திற்கு அமைய அனைத்து பிரிவுகளுக்கும் இலங்கை தொழிலாளர்களை வழங்குதல் மற்றும் பிரதிநிதி, ஆலோசகராக செயல்படுதல், தெளிவுபடுத்துதல் மற்றும் பயிற்சி வேலைக் திட்டங்களை நடத்துதல், தொழில் தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்பன கம்பெனியை அமைப்பதன் நோக்கமாகும்.

**தொழில் வெற்றிடங்களுக்கு போதிய அளவு தொழிலாளர்களை அனுப்புவதற்கு தவறியிருந்தமை.**

அரசாங்கத்தின் முழுமையான உரிமைத்துவத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த நிறுவனத்தின் மூலம் அரச பாதுகாப்பின் அடிப்படையில் ஒப்பீட்டளவில் குறைந்த மொத்த செலவில் வரையறைக்கு உட்படாது இலங்கைத் தொழிலாளர்களைத் தொழிலுக்காக அனுப்பக் கூடியதாக இருந்த போதிலும், 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே தொழில் வெற்றிடங்கள் 2,561 மற்றும் 2,860 கிடைத்திருந்த போதிலும் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த தொகை முறையே 155 மற்றும் 333 ஆக இருந்தது. அது கிடைத்திருந்த தொழில் வெற்றிடங்களில் 4 சதவீதம் மற்றும் 13 சதவீதமாக இருந்ததால் நிறுவனத்தின் முக்கிய நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1996 சங்க கூட்டுத்தாபனத்தின் 2017 செப்டம்பர் 28 ஆம் திகதி இடப்பட்ட விசேட முன்மொழிவு தீர்மானத்தின் மூலம் (ளிநஉயைட சநளழடரவழைெ) முகவர் நிறுவனத்தின் வணிக நடவடிக்கையாக புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் விமான பயணச்சீட்டு வழங்குதலை உள்ளடக்கி நிறுவனத்தினால் விமானப் பயணச் சீட்டினை வழங்கும் பிரிவொன்று தாபிக்கப்பட்டு இருந்தது. எனினும் அதற்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியினரின் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டு இருக்காதுடன் நிறுவனத்தினால் அதற்கான பயிற்சி பெற்ற பதவி அணியினர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அதே போன்று அதற்காக விமான போக்குவரத்து சேவைகள் அனுமதிப்பத்திரத்தை (IATA) சட்ட ரீதியாகப் பெற்றுக் கொள்ளாத காரணத்தினால் முகவர் நிறுவனத்தின் மூலம் விமானப் பயணச்சீட்டு வழங்கும் சேவையினை நிறைவேற்றும் காரணத்தினால் வெளிநாட்டுக்குச் செல்லும் தொழிலாளர்களுக்கு விமானப் பயணச் சீட்டினைக் கொள்வனவு செய்வதற்காக அதிக தொகையினைச் செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

# கல்வித் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

- தேசிய கல்விச் சீர்திருத்தத்தை மேற்கொள்ள இயலாது போனமை
- தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரமாக உயர்த்தும் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்யாமுடியாமை
- முன்பள்ளிக் கல்விக் கொள்கையைப் பூர்த்தி செய்வதற்கு கல்வி அமைச்சு தவறியிருந்தமை
- விசேட தேவைப்பாடுள்ள சிறுவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட விசேட கல்வி நிலையங்களை அச் சிறுவர்களின் தேவைப்பாட்டிற்கமைவாக நிர்மாணிக்க இயலாமை
- விசேட கல்வித் துறையில் நிலவும் பயிற்சி பெற்ற ஆசிரிய நியமனங்களுக்காக உள்ள வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் தொடர்பாக முறையான வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை.
- சுரக்ஷா சிசு காப்புறுதி 2023 ஆம் ஆண்டிற்காக உடன்படிக்கைக்கு உட்பட்டிருக்கவில்லை.
- விசேட கல்வி முறையொன்றிற்கான திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிராமை.
- பல்கலைக் கழகத்திற்கு உரித்தான காணி நிலங்கள் வெளித்தரப்பினரால் அனுமதியின்றி அத்துமீறலாக பயன்படுத்தப்பட்டமை தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.
- இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு உரிய பதவி உயர்வுகள் வழங்கப்படாமை.
- விளையாட்டுத் திறன் கொண்ட தேசிய மற்றும் சர்வதேச தரத்திலான விளையாட்டு வீர வீராங்கனைகளை உருவாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டுப் பாடசாலைகளின் செயற்பாடுகள் நோக்கத்திற்கமைவாக முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.
- 5 வயது முதல் 14 வயது வரையான குழந்தைகளின் கல்வி குறித்து முறையான ஒழுங்குமுறை இன்மை
- நிர்மாணப் பணிகளில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.
- இணைய டிஜிடல் அச்சு இயந்திரம் திட்டமிட்டபடி பயன்படுத்தப்படவில்லை.
- பரீட்சைத் திணைக்களத்தின் ஆறு மாடிகளைக் கொண்ட பல்செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணிப்பு ஒப்பந்தத்திலான குறைபாடு
- பிரிவென் கற்கைச் செயற்பாட்டு நடவடிக்கைகள் இடைநடுவே நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை
- "சலசினே" தொலைக்காட்சி நிலையத்துடன் தேசிய கல்வி நிறுவனம் மேற்கொண்ட உடன்படிக்கையின் படி கல்வி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப் பட்டிருக்கவில்லை.
- பாடசாலைப் பாடப்புத்தகங்களை பிள்ளைகளுக்கு வழங்குவதில் உள்ள செயற்திறனின்மை

# கல்வித் துறை

எந்த ஒரு நாட்டின் எதிர்கால வளர்ச்சியையும் தீர்மானிக்கும் முக்கிய காரணி அந் நாட்டின் கல்விக்காக மேற்கொள்ளப்படும் முதலீடாகும். இலங்கையின் கல்வியறிவு பல வளர்முக நாடுகளைப் பார்க்கிலும் விஞ்சியிருந்த போதிலும் பாரம்பரிய கல்வி முறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றப்படுவதனால் உலகின் ஊழியத் தேவைப்பாட்டிற்கு ஏற்ப தொழிநுட்ப அறிவைக் கொண்ட ஊழியர்களை தற்போது நிலவும் கல்வி முறையின் மூலம் உருவாக்க இயலாதுள்ளது. ஆகவே, நவீன கல்வி முறைமையின் மூலம் அறிவும் தொழிநுட்பத் திறனும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்குவது கல்வித் துறையின் பொறுப்பாகும். அப் பொறுப்பை நிறைவேற்றும் நோக்கில் கல்வித் துறையின் மூலம் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


- அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு கல்வித் துறைக்கும் கல்வி அமைச்சிற்கும் உரித்தான திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவகங்களும் அரச கூட்டுத்தாபனங்களின் விடங்களுக்கு உரித்தான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் திட்டங்களைத் தொகுத்து, செயற்படுத்தல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- அமைச்சின் நோக்கெல்லைக்கு உட்பட்ட மக்கள் சேவைகளை செயற்திறனான முறையிலும் மக்களின்
- மனதைக் கவரும் வகையிலும் வழங்குதல்.
- விரயத்தையும் ஊழலையும் முறையடிக்கும் வகையில் அமைச்சின் பணி மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு துணைபுரியும் வகையில் நவீன முகாமைத்துவ முறை மற்றும் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி சகல முறைகளையும் நடைமுறைகளையும் மறுசீரமைத்தல்.
- குழந்தைப் பருவம், ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைத் துறைகளுக்கு இடையே போதிய தொடர்பை ஏற்படுத்தும் வகையில் கல்வி வளர்ச்சிக்கு உரித்தான துறைசார் கொள்கைகளை உருவாக்கி செயற்படுத்துதல்.
- உலகளாவிய சவால்களை தன்னம்பிக்கையுடனும் வெற்றியுடன் கூடிய நம்பிக்கையுடனும் இலங்கைச் சிறுவர்கள் மற்றும் இளைஞர் சமூகத்தை அணுகச்செய்வதற்கான இயலுமையை ஏற்படுத்தும் வகையில் தேசியக் கல்வி முறையை உருவாக்குதல்.
- முன்பள்ளிக் கல்வி முதல் உயர்கல்வியைப் பூர்த்தி செய்யும் வரையில் தெளிவான பாதைத் திட்டமொன்றை உருவாக்குவதற்காக கொள்கைவழிகாட்டலை வழங்குதல்.
- ஒவ்வொரு குழந்தைக்கும் கல்விக்காக அணுகல் உரிமையை உறுதிசெய்தல்.

- இணைப்பாடத்திட்டத்தையும் வெளிக்கள செயற்பாடுகளையும் பாடசாலைகளில் ஊக்குவித்தல்.
- தேசிய பாடசாலைகளுக்குத் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை வழங்குதல்.
- தேசிய கல்விக் கொள்கைகளிற்கு இணங்க, சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளை ஒழுங்கமைத்தல்.
- கல்வியின் தரம், மாணவர் ஒழுக்கம் மற்றும் ஒழுக்கத்தைப் பாரிய அளவில் பேணுவதற்குத் தேவையான கொள்கை நடவடிக்கைகளை எடுத்தல்.
- விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- தேசிய மற்றும் கூட்டணி மொழிக் கல்வியை மேம்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- பௌத்த மற்றும் பாலி கற்கை நடவடிக்கைகளை ஊக்குவித்து சமயக் கல்வியின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பிரிவென கல்வியை மேம்படுத்தல்
- இலங்கை கல்வி நிர்வாக சேவை, அதிபர் சேவை மற்றும் ஆசிரியர் சேவையின் நிர்வகிப்பு மற்றும் ஏனைய கல்விச் சேவைகளின் ஆளணி நிர்வாக நடவடிக்கைகள், பாடசாலை நூலகங்களை மேம்படுத்துதல் மற்றும் விருத்திசெய்தல்.
- பாடசாலைப் பாடப் புத்தகங்கள், சீருடைகள், மாணவர்களின் ஏனைய தேவைகளையும் வசதிகளையும் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்கிச் செயற்படுத்துதல்.
- அனைத்துப் பாடசாலைகளிலும் சுகாதார நடவடிக்கைகள், குழந்தை நட்பு வகுப்பறைகள், ஆசிரியர் தங்கும் விடுதி மற்றும் ஓய்வறை வசதிகள் உட்பட சகல பௌதீக வசதிகளையும் மேம்படுத்துதல்.
- கற்றல் மற்றும் கற்பித்தல் செயன்முறைக்கான நவீன தொழிநுட் வசதிகளைப் பயன்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் விருத்தி செய்தல்.
- தொழிநுட்பக் கல்விக்கான நாட்டத்தை அதிகரிப்பதற்காக நுட்பங்களை வகுத்து செயற்படுத்துதல்.
- கல்வித் தகைமையைப் பொருட்படுத்தாது தொழிற்திறன் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குதல்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புச் சந்தைக்கு ஏற்ற ஊழியப்படை ஒன்றை உருவாக்குவதற்காக தொழில்நுட்ப மற்றும் தொழிநுட்பக் கல்வியை நவீனமயமாக்கல்
- பாடத்திட்டங்களை நவீனமயமாக்கி “ழுநெ வுஏநுவு” எனும் கருப்பொருளின் கீழ் குறித்த நிறுவகங்களை வலையமைப்பிற்குள் உள்ளடக்கி தொழிநுட்பப் பட்டப் படிப்பு நிறுவனங்களாக மாற்றுதல்.
- பாடசாலையை விட்டு வெளியேறிய பின்னர் பல்கலைக்கழகக் கல்விக்குத் தகுதி பெறாத மாணவர்களுக்கு தொழிற்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான கொள்கைகளை உருவாக்கி வசதிகளை வழங்குதல்.

- தொழிற்பயிற்சிக்கான பயிற்சி வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- தற்போதுள்ள தேசிய தொழிற்கல்வித் தகைமை (ஏேஞ) நிலைகளை 7 முதல் 10 ஆம் நிலை வரை அதிகரிப்பதுடன் அதற்கேற்ப இலங்கைத் தகுதிக் கட்டமைப்பை (ளுடுஞகு) திருத்தியமைத்தல்.
- தொழிற்கல்வி படிப்புகளில் தொழில் முனைவோர், தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளை உள்ளடக்கி பாடத்திட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்ளல்.
- நடமாடும் தொழில்நுட்பக் கல்விச் சேவைகளின் மூலம் தொழிற்பயிற்சி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைக்கான சந்தை வாய்ப்பை இலக்காகக் கொண்டு தொழிற்கல்வியை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வேலை வாய்ப்புகளுக்கு ஏற்ற பட்டங்களை வழங்கும் உயர்கல்வி நிறுவனங்களாக நகரப் பல்கலைக்கழகங்களை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்.
- சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்காக ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளைப் பயன்படுத்துவதற்காக ஒரு திறமையான பொறிமுறையை உருவாக்குதல்.
- தேசிய புத்தாக்குனர் நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- அறிவியல், தொழில்நுட்ப மற்றும் சமூக, பொருளாதார ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- புதிய கண்டுபிடிப்புகளுக்காக சமூகத்தை வழிகாட்டி ஊக்குவித்தல்
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிர்வாகத்திற்கு உரித்தான அரச பல்கலைக்கழகங்களை நிர்வகித்து மேம்படுத்தல்.
- இலங்கையில் உயர்கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் சர்வதேச கல்வி நிறுவனங்கள் மற்றும் பிறநிறுவனங்களுடன் இணைந்து ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.
- உயர் கல்விக்கான அணுகலை விரிவுபடுத்துவதற்கான தீர்மானங்களைக் கண்டறிந்து செயற்படுத்தல்.
- உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையை இலக்காகக் கொண்டு பட்டதாரிகளை உருவாக்கும் பொருட்டு ஒட்டுமொத்த கல்விச் சீர்திருத்தக் கொள்கையில் பாடத்திட்டத் திருத்தங்களை மேற்கொள்ளல்.
- பல்கலைக்கழகக் கல்வியில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தல்.
- நட்புரீதியான கல்விப் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

- அனைத்து அரச பல்கலைக்கழகங்களையும் உலகத் தரவரிசையில் உயர் நிலையை அடைவதற்கான நடவடிக்கை எடுத்தல்.
- இலங்கையில் தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு சர்வதேச பல்கலைக்கழகங்களிற்கு நுழைவதற்கான புலமைப்பரிசு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- இலங்கையில் இயங்கும் தனியார் மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் ஒழுங்குமுறைப்படுத்துதலும் அங்கீகாரம் வழங்குதலும்.
- பௌத்த மற்றும் பாலி கல்வியை மேம்படுத்தி பிக்குகளின் உயர் கல்வி நடவடிக்கைகளிற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
- உலகளாவிய தேவைகளுக்கு ஏற்ப முழுக் கல்வித் துறையையும் உள்ளடக்கும் வகையில் கல்விச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல்.
- கல்விச் சீர்திருத்தம் தொடர்பான சனாதிபதிச் செயலணி மற்றும் விசேட குழுக்களின் பரிந்துரைகளைப் பொது உரையாடலுக்குப் பரிந்துரைத்து, கல்வியின் முன்னேற்றத்திற்காக அவற்றை ஏற்ற முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்.
- தகவல் தொழில்நுட்பத்தைத் தொடர்புபடுத்தி தொலைக் கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.
- பயனுள்ள கற்றல் மற்றும் கற்பித்தல் செயன்முறையை அடைவதற்காக தேவையான ஆசிரியர்களை உருவாக்கி, ஆசிரியர்களைப் பயிற்றுவித்து அவர்களின் திறன்களை மேம்படுத்துதல்.
- கல்வி அமைச்சிற்குச் சொந்தமான திணைக்களங்களுக்கும் நிறுவனங் களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கும் உரித்தாகச் செயற்படுதல்.
- கல்வி அமைச்சிற்கு உரித்தான திணைக்களங்களையும் அனைத்து நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல். இதன்படி, இத்துறையுடன் தொடர்பான கல்வி அமைச்சு மற்றும் இரு திணைக்களங்கள் மற்றும் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட மேற்குறித்த பணிகள் தொடர்பாக செயற்படுத்தப்பட்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சில விடயங்கள் கீழே தொகுத்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டின் போது, மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கல்வி அமைச்சிற்கு ரூபா 143,904 மில்லியன் தொகையான தேறிய ஒதுக்கீடு பாராளுமன்றத்தால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் பின்வருமாறு இதில் ரூபா 123,173 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தமையால் மிகுதித் தொகை ரூபா 16,731 மில்லியனாகக் காணப்பட்டது. விபரங்கள் கீழே உள்ள வரைபடம் 22 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.




| | கல்வி அமைச்சு | பரீட்சைகள் திணைக்களம் | கல்வி வெளியீட்டுத் திணைக்களம் | தேசிய கல்வி அணைக்குழு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஒதுக்கீடு | 138952 | 4709 | 171 | 72 | 143904 |
| செலவினம் | 122414 | 4581 | 116 | 62 | 127173 |
| மிகுதி | 16538 | 128 | 55 | 10 | 16731 |

வரைபடம் : 22 வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் அளவும் உள்ளபடியான செலவினமும்

மூலம் : 2022 வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

**தேசிய கல்விச் சீர்திருத்தத்தை மேற்கொள்ள இயலாது போனமை**

கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக் கல்வி இராஜாங்க அமைச்சு 2020 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கபட்டு 2020, 2021 மற்றும் 2022 ஆகிய 03 ஆண்டுகளில் ரூபா 5,219 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் திட்டமிடப்பட்டவாறு தேசிய கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளத்தவறியிருந்தது. 2022 ஆம் ஆண்டில் இராஜாங்க அமைச்சு நீக்கப்பட்டு நோக்கெல்லைக்கு உரித்தான செயற்பாடுகளும் பணிகளும் அன்று முதல் கல்வி அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. அதன்படி, கல்விச் சீர்திருத்தத்திற்காக கடந்த 03 ஆண்டுகளின் போது இராஜாங்க அமைச்சால் செலவிடப்பட்டிருந்த ரூபா 351 மில்லியன் தொகையான செலவினம் விளைவற்ற செலவினமாகும் அபாயம் காணப்பட்டது.

**தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரமாக உயர்த்தும் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்யாமுடியாமை**

இந் நாட்டில் உள்ள 353 தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரமாக உயர்த்தும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக் கல்வி மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் மேம்பாட்டு முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்விப் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சால் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 2,285 மில்லியன்

செலவிடப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக தேசிய பாடசாலையாக பெயரிடுவதற்காகவும் பெயர்ப் பலகைகளிற்காகவும் ரூபா 2.4 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இந் நிகழ்ச்சித்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

**முன்பள்ளிக் கல்விக் கொள்கையைப் பூர்த்தி செய்வதற்கு கல்வி அமைச்சு தவறியிருந்தமை**

கல்வி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சால் 2021 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட முன்பள்ளிக் கல்விக் கொள்கை தொடர்பாகத் திட்டமிடப்பட்ட பணிகளைப் பூர்த்திசெய்வதற்கு கல்வி அமைச்சு தவறியிருந்தது.

**விசேட தேவைப்பாடுள்ள சிறுவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட விசேட கல்வி நிலையங்களை அச் சிறுவர்களின் தேவைப்பாட்டிற்கமைவாக நிர்மாணிக்க இயலாமை**

விசேட தேவைப்பாடுள்ள சிறுவர்களுக்காக கஹதுடுவ வெனிவெல்கொல பிரதேசத்தில் விசேட தேவையுடைய சிறுவர்களுக்காக ரூபா 247 மில்லியன் தொகையான செலவினத்தை ஏற்று விசேட கல்வி நிறுவகம் ஒன்றை வடிவமைத்து நிர்மாணிக்கும் முறைக்கமைவாக நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் விசேட தேவைப்பாடுள்ள சிறுவர்களுக்கு சரியான முறையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை பின்னர் இனங்காணப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தம் வழங்கப்பட முன்னர் அத் தேவைப்பாடு குறித்து கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**விசேட கல்வித் துறையில் நிலவும் பயிற்சி பெற்ற ஆசிரிய நியமனங்களுக்காக உள்ள வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் தொடர்பாக முறையான வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை.**

விசேட கல்வித் துறையில் உள்ள பாடசாலைகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் 5:1 எனும் விகிதத்தில் இருக்க வேண்டிய போதிலும் 09 மாகாணங்களில் உள்ள 55 பாடசாலைகளில் 66 ஆசிரியர்கள் மிகையாகக் காணப்பட்டதுடன் 212 பாடசாலைகளில் 349 வெற்றிடங்களும் காணப்பட்டன. மேலும், விசேட கல்விப் பயிற்சியுடனான ஆசிரிய நியமனங்களைப் பெற்றிருந்த போதிலும் ஏனைய பாடங்களைக் கற்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 147 ஆசிரியர்கள் 135 பாடசாலைகளில் உள்ளமை அவதானிக்கப்பட்டதுடன் அவ் ஆசிரியர்கள் தொடர்பாக கல்வி அமைச்சுச் செயலாளரின் 37/.2020 மற்றும் திசெம்பர் 31 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**சுரக்ஷா சிசு காப்புறுதி 2023 ஆம் ஆண்டிற்காக உடன்படிக்கைக்கு உட்பட்டிருக்கவில்லை.**

சகல சிறுவர்களுக்கும் காப்புறுதி ஒன்றை வழங்கும் நோக்கில் 2017 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்ட சுரக்ஷா சிசு காப்புறுதி 2023 ஆம் ஆண்டிற்காக உடன்படிக்கைக்கு உட்பட்டிருக்கவில்லை.

**விசேட கல்வி முறையொன்றிற்கான திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிராமை.**

ரூபா 3,444 மில்லியன் தொகையான ஓர் செலவினத்தை ஏற்று 96,919 மடிக் கணனிகள் மற்றும் சார்ஜிங்க இராக்கைகள் 2019 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. நோக்கங்களிற்கு மாறாக இக் கணனிகள் 184 தேசிய பாடசாலைகளிற்கும் 1,217 மாகாணப் பாடசாலைகளுக்கும் 6 ஆம் ஆண்டு முதல் 11 ஆம் ஆண்டு வரையிலான மாணவர்களுக்கு 2020 ஆம் ஆண்டின் இறுதியில் வழங்கப்பட்டிருந்ததுடன் பகிர்ந்தளிக்கப்பட்ட காலப்பகுதியின் போதும் உத்தரவாதக் காலம் ஒரு வருடத்தைக் கடந்திருந்தது. எஞ்சிய 3,892 மடிக் கணனிகளும் 3 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இக் கணனிகளை உபயோகித்து மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த விசேட கல்வி முறைமை ஒன்றிற்கான திட்டமிடப்பட்ட ஓர் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று தயாரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

தற்போது, பகிர்ந்தளிக்கப்பட்ட சில மடிக் கணனிகள் விளைவற்றுக் காணப்படுவதுடன் கணனிகள் காணாமற் போயும் உள்ளன.

**பல்கலைக் கழகத்திற்கு உரித்தான காணி நிலங்கள் வெளித்தரப்பினரால் அனுமதியின்றி அத்துமீறலாக பயன்படுத்தப்பட்டமை தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.**

21 தேசிய பாடசாலைகளின் 55 ஏக்கர்,05 பேர்ச் உம் 03 ஆசிரியர் கல்லூரிகளுக்குச் சொந்தமான 07 பேர்ச் 01 ரூட் 25 பேர்ச் மற்றும் கல்லூரி ஒன்றிற்குச் சொந்தமான 91 ஏக்கரில் 24 பேர்ச்சும் கல்வி அமைச்சின் அங்கீகாரமின்றி வெளித்தரப்பினரால் அத்துமீறிப் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக அமைச்சின் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

**இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு உரிய பதவி உயர்வுகள் வழங்கப்படாமை.**

2015 ஆகஸ்ட் 21 ஆம் திகதியிடப்பட்ட 1928.்.28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் படி, இலங்கை கல்வி நிர்வாக சேவைக் குறிப்பின் படி, பட்டியற்படுத்தப்பட்ட 64 தேசிய பாடசாலைகளுக்காக இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 1 ஆம் தர அதிகாரிகளை அதிபர்களாக நியமித்திருக்கவில்லை.

**விளையாட்டுத் திறன் கொண்ட தேசிய மற்றும் சர்வதேச தரத்திலான விளையாட்டு வீர வீராங்கனைகளை உருவாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டுப் பாடசாலைகளின் செயற்பாடுகள் நோக்கத்திற்கமைவாக முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.**

விளையாட்டுத் திறனவாய்ந்த தேசிய மற்றும் சர்வதேச தரத்திலான விளையாட்டு வீர வீராங்கனைகளை உருவாக்கும் நோக்கில் 1989 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த 22 விளையாட்டுப் பாடசாலைகள் கடந்த 5 ஆண்டுகளாக இயங்கு நிலையில் இருக்கவில்லை. இதன் காரணமாக அப்பாடசாலைகளில் காணப்பட்ட விடுதிகள், விளையாட்டு உபகரணங்கள், உடற்பயிற்சி உபகரணங்கள் ஆகியவை குறைபயன்பாட்டில் காணப்பட்டன. நிர்வாகக் குறைபாடுகள், முறையான பயிற்சியின்மை மற்றும் விளையாட்டுப் பாடசாலைகள் இயங்காமையால் கடந்த 5 ஆண்டுகளில் 293 விளையாட்டு புலமைப்பரிசில் பெற்றவர்கள் இப் பாடசாலையை விட்டு வெளியேறி யிருந்தனர். இப் பாடசாலைகளில் இடை நிலை வகுப்புக்களில் மாணவர்கள் சேர்க்கப்படுகையில் விளையாட்டுத் திறன் கொண்ட மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடமும் பயன்படுத்தப் பட்டிருந்ததன் காரணமாக விளையாட்டுப் புலமைப்பரிசில் பெற்ற மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான வசதியிருக்கவில்லை.

**5 வயது முதல் 14 வயது வரையான குழந்தைகளின் கல்வி குறித்து முறையான ஒழுங்குமுறை இன்மை**

1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவிப் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரிகள் (மேலதிக ஏற்பாடு) அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் படி 5 வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்ட வயதெல்லையைக் கொண்ட பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவதற்காக தனியார் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படலாகாத போதிலும் கல்வி அமைச்சின் தலையீடின்றி வியாபார நிறுவனங்களாக சர்வதேச பாடசாலைகளும், சமய பாடசாலைகளாக மதரசா பாடசாலைகளும் தனியார் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், சர்வதேச பாடசாலைகளையும், தனியார் பாடசாலைகளையும் ஒழுங்கமைப்பது கல்வி அமைச்சின் முக்கிய பணிகளில் ஒன்றான போதிலும் இது தொடர்பாக ஓர் ஒழுங்குமுறை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**நிர்மாணப் பணிகளில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.**

2022 திசெம்பர் 31 ஆம் திகதி கல்வி அமைச்சிற்கு வெளிநாட்டு உதவியாகக் கிடைக்கப்பெற்றிருந்த இந்திய அரசாங்க உதவியின் கீழ் தோட்டப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டம் எவ்வித முன்னேற்றத்தையும் அடைந்திராததுடன் பொலொன்னறுவை மாவட்ட பல்லின மற்றும் மும்மொழிக் கற்கை கொண்ட புதிய பாடசாலை ஒன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டமும்

தொழிநுட்பப் பாடத்திற்கான தேசியக் கல்விக் கல்லூரி நிர்மாணிக்கும் செயற்திட்டமும் முறையே 42 சதவீத முன்னேற்றத்தையும் 15 சதவீத முன்னேற்றத்தையும் மாத்திரம் எட்டியிருந்தது.

**இணைய டிஜிடல் அச்சு இயந்திரம் திட்டமிட்டபடி பயன்படுத்தப்படவில்லை.**

பரீட்சை வினாத்தாள்களில் போதிய முழுமையைப் பெறுவதன் மூலம் பரீட்சார்த்திகளின் நம்பிக்கையை அதிகரித்து இரகசியத்தன்மையை உயரிய அளவில் பாதுகாக்கும் நோக்கில் பரீட்சைகள் திணைக்களத்தால் ரூபா 546 மில்லியன் செலவில் 2018 நவம்பர் மாதம் ஸ்தாபிக்கப்பட்ட இணை டிஜிடல் அச்சு இயந்திரத்தினால் 2019 ஆம் ஆண்டின் க.பொ.த (சா.த) பரீட்சையின் 8 சதவீதமும் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட சகல பரீட்சைகளுக்காக அச்சிடப்பட்ட மொத்த பரீட்சை வினாத்தாள்களும் முறையே 5,10 மற்றும் 3.5 சதவீத அளவும் மாத்திரமே அச்சிடப்பட்டிருந்தன.

**பரீட்சைத் திணைக்களத்தின் ஆறு மாடிகளைக் கொண்ட பல்செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணிப்பு ஒப்பந்தத்திலான குறைபாடு**

ரூபா 564.3 மில்லியன் ஒப்பந்தச் செலவில் பரீட்சைத் திணைக்களத்தின் ஆறு மாடிகளைக் கொண்ட பல்செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணிப்பு ஒப்பந்தம் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2019 பெப்ரவரி 02 பூர்த்தியடைவதற்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வேலை பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் அத் திகதி வரையில் மத்திய பொறியியல் உசாவுகைப் பணியகத்திற்கும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கும் முறையே ரூபா 64 மில்லியன் தொகையும் ரூபா 305 மில்லியன் தொகையுமாக ரூபா 369 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**பிரிவென் கற்கைச் செயற்பாட்டு நடவடிக்கைகள் இடைநடுவே நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை**

கல்வி அமைச்சின் இரு மொழிக் கல்வித் திணைக்களத்தால் பிரிவென் கற்கைச் செயற்பாடுகளிற்காக ரூபா 1 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் திட்டமிடப்பட்டிருந்த நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன.

**“சலசினே” தொலைக்காட்சி நிலையத்துடன் தேசிய கல்வி நிறுவனம் மேற்கொண்ட உடன்படிக்கையின் படி கல்வி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப் பட்டிருக்கவில்லை.**

2021 திசெம்பர் 24 அன்று, புதிய கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து மக்களுக்கு அறிவிப்பதற்காக “சலசினே” தொலைக்காட்சி நிலையத்துடன் தேசிய கல்வி நிறுவனம் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக்கொண்டதுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி 05 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காக ரூபா 15 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பான ஒளிபரப்புகள் 2021 திசெம்பர் 29 ஆம் திகதிக்கு முன் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின்

இறுதி வரையிலும் குறித்த நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டிருவில்லை.

**பாடசாலைப் பாடப்புத்தகங்களை பிள்ளைகளுக்கு வழங்குவதில் உள்ள செயற்திறனின்மை**

2022 ஆம் ஆண்டிற்கான முதல் பாடசாலைத் தவணை ஏப்ரல் 18 ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் மாதம் வரை பாடப்புத்தகங்கள் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தன. மேலும் மே முதல் திசெம்பர் வரை ஆண்டு 1 முதல் 11 ஆம் ஆண்டு வரை விநியோகிக்கப்பட்ட பாடப்புத்தகங்களின் எண்ணிக்கை 22,082,941 ஆகக் காணப்பட்டன. இதன் படி, 2022 ஆம் ஆண்டிற்காக அச்சிடப்பட்டிருந்த மொத்த பாடப்புத்தகங்கள் 32,831,750 இல் 22,082,941 அதாவது மொத்த பாடப்புத்தகங்களில் 67 சதவீதம் 2022 ஆம் ஆண்டின் முதலாவது பாடசாலைத் தவணை ஆரம்பமாவதன் முன் உரிய நேரத்தில் விநியோகிக்க முடியாதிருந்தது. மேலும், 2023 ஆம் ஆண்டிற்கான பாடப்புத்தகங்களின் 32,890,400 பிரதிகள் அச்சிடுவதற்காக 23 அச்சகங்களுடன் திணைக்களம் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தியிருந்தது. முதலாம் பாடசாலைத் தவணை 2023 மார்ச் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது வரையில் பாடப் புத்தக விநியோக நிலையத்திற்கு 15,645,654 அளவிலானவற்றைப் பகிர்ந்தளிப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

# உயர் கல்வி துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

- நிதியினைப் பயன்படுத்துதல்
- பிணைமுறிகள் மீறப்பட்டிருந்தமை காரணமாக அறவிடப்பட வேண்டிய தொகை அளவிடப்பட்டிருக்காமை.
- ஆரம்பிக்கப்பட்டிருந்த செயல் திட்டங்களை நிறைவு செய்வதில் தாமதம்.
- பயன்படுத்தப்படாத நிதி அபிவிருத்தி நிதியத்தின் கீழ் காணப்பட்டமை.
- பல்கலைக்கழகத்தால் அனுமதி பெற்றுக் கொடுத்திருந்த ஆராய்ச்சி முன்மொழிவினை நீக்குதல் மற்றும் நிறுத்தி வைத்திருத்தல்.
- ஆராய்ச்சிக் கொடுப்பனவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஆராய்ச்சிகள் முடிவுறுத்தப்பட்டிருக்காமை.
- பேராதெனிய பல்கலைக்கழகத்தில் கல்வி சாரா பதவியணி உத்தியோகத்தர்களுக்கு ஆராய்ச்சி கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தமை.
- திறைசேரி அனுமதி இன்றி மருத்துவ பலன் முன்மொழிவுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.
- புதிய முகாமைத்துவத் தகவல்கள் ஒழுங்கமைப்பினைத் தாபிப்பதற்குத் தவறியிருந்தமை.
- வெளிநாட்டு வளங்கள் திணைக்கப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக வெளிநாட்டு மானியங்களை நேரடியாகப் பெற்றுக் கொள்ளுதல்.
- பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெற்றிடங்களை நிரப்பாமை.


# உயர் கல்வி துறை



இலங்கையில் கல்வியானது இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய நீண்ட வரலாற்றை கொண்டுள்ளதுடன் இலங்கையின் அரசியலமைப்பு சட்டத்தின் மூலம் கல்வி அடிப்படை உரிமையாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இலங்கை மக்களிடம், மூன்றாம் உலக நாடொன்றில் எதிர்பார்க்கப்படும் மட்டத்தினை விட அதிகமான 92 சதவீத எழுத்தறிவு மட்டம் காணப்படுகின்றது. தெற்காசியாவில் உயர் எழுத்தறிவு வீதம் மற்றும் மொத்த ஆசியாவில் ஓர் உயர் எழுத்தறிவு வீதத்தினை இலங்கை கொண்டுள்ளது. நாட்டின் மக்கள் வாழ்க்கை மற்றும் கலாச்சாரத்தினுள் கல்வியினால் மிக முக்கியமான பங்கினை வகிப்பதுடன் அது கி.மு. 543 வரையான நீண்ட வரலாற்றுக் காலத்தைக் கொண்டுள்ளது. புதிய கல்வி ஒழுங்கமைப்பு உருவாக்கப்பட்டது 19 ஆம் நூற்றாண்டில் இலங்கை பிரித்தானிய பேரரசுடன் இணைக்கப்பட்டிருந்த போது என்பதுடன் அதில் ஒரு சில பொறுப்புக்கள் மத்திய அரசிடமும் ஏனைய காரணிகள் தொடர்பான சுதந்திரம் மாகாண சபைகளிடமும் காணப்படும் வகையில் மத்திய அரசு மற்றும் மாகாண சபை ஆகிய இரு பிரிவுகளின் கீழும் காணப்பட்டது.. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு அதன் கீழ் தாபிக்கப்பட்டுள்ள 17 பல்கலைக்கழகங்கள் மற்றும் 19 உயர்கல்வி நிறுவனங்களினால் கீழே காட்டப்பட்டுள்ள நோக்கங்களை எட்டக் கூடியதாக இருந்தது..

- தேசிய கொள்கைக்கு இணங்க பல்கலைக்கழக கல்வியினை திட்டமிடல் மற்றும் ஒன்றிணைப்பு செய்தல்.
- பல்கலைக்கழக கல்வி மற்றும் அது தொடர்பாக பாராளுமன்றத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியினை உயர் கல்வி நிறுவனங்களிடையே பகிர்ந்து அளித்தல் மற்றும் அவ்வாறான ஒவ்வொரு உயர் கல்வி நிறுவனத்தின் மூலமும் மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளைக் கட்டுப்பாடு செய்தல்.
- உயர் கல்வி நிறுவனங்களின் கல்வித் தரங்களைப் பேணிக் கொள்ளுதல்.
- உயர்கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தினை ஒழுங்குறுத்தல் செய்தல்.
- ஒவ்வொரு உயர் கல்வி நிறுவனத்திற்கும் மாணவர்களை அனுமதித்தலை ஒழுங்குறுத்தல் செய்தல் மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் மூலம் அல்லது இந்த சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் அல்லது ஒதுக்கப்பட்டுள்ள அவ்வாறான அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயல்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல்.

மேலே குறிப்பிடப்பட்ட செயல்களை அல்லது கடமைகளை நிறைவேற்றுவதற்காக உயர் கல்வி பிரிவு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் முறையே ரூபா. 19,096 மில்லியன் மற்றும் ரூபா. 61,564 மில்லியன் நிதி 2022 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரையில் அதில் முறையே ரூபா. 17,623 மில்லியன் மற்றும் ரூபா. 58,017 மில்லியன் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது.




| | உயர் கல்விப் பிரிவு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | மொத்தம் |
|---|---|---|---|
| நிதி ஒதுக்கீடு | 19,096 | 61,564 | 80,660 |
| செலவினம் | 17,623 | 58,017 | 75,640 |
| மீதி | 1,473 | 3,547 | 5,020 |

வரைபடம் : 23 வழங்கப்பட்ட ஒதுக்கீட்டு அளவும் உள்ளபடியான செலவினமும்
மூலம் : 2022 வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

மேலே குறிப்பிடப்பட்ட நிதிப் பயன்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புகள் பொழிப்பாக்கம் செய்யப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

**பிணைமுறிகள் மீறப்பட்டிருந்தமை காரணமாக அறவிடப்பட வேண்டிய தொகை அளவிடப்பட்டிருக்காமை.**

நாட்டில் 12 பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனத்தில் கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளுக்கு சென்றதன் பின்னர் பிணைமுறிகள் மீறப்பட்டு கல்வி மற்றும் கல்வி சாரா பதவி அணியினரில் 526 பேரிடம் இருந்து மீளாய்வாண்டு இறுதியில் ரூபா. 2.332 மில்லியன் அறவிடப்பட வேண்டி இருந்த போதிலும் பல்கலைக்கழகங்கள் ஆணைக்குழு அந்தத் தொகையினை அறவிடுதல் தொடர்பான தொடர் நடவடிக்கை எடுத்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கவில்லை.

**ஆரம்பிக்கப்பட்டிருந்த செயல் திட்டங்களை நிறைவு செய்வதில் தாமதம்.**

- மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு மேலதிக மாணவர்களை அனுமதிப்பதற்குத் தேவையான வசதிகளை உடனடியாக வழங்குவதற்கு 2013 ஜூன் மாதம் அமைச்சரவை தீர்மானத்துடன் பொறியியல் பீடத்திற்கு பல்நோக்கு கட்டடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்திற்காக ரூபா. 313 மில்லியன் நிதியினை ஈடுபடுத்தி 04 சந்தர்ப்பங்களில் கால நீடிப்பினை பெற்றுக் கொண்டு அவை காலாவதியாகி இருந்த போதிலும், 2023 ஜூன் 30 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்து ஒப்படைப்பதற்குத் தவறியிருந்தது.
- திருகோணமலை பல்கலைக்கழகத்தில் பல்நோக்கு கேட்போர் கூடத்திற்கான கட்டடத் தொகுதியினை நிர்மாணிப்பதற்கு ரூபா. 674 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் 2018 ஓகஸ்ட் 08 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தம் 2021 பெப்ரவரி 08 ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் 2023 மே 23 ஆம் திகதி அதன் பௌதிக முன்னேற்றம் 09 சதவீதமாக இருந்தது.
- 2018 வரவு செலவு முன்மொழிவுக்கு அமைய மருத்துவ பட்டத்தினை எதிர்பார்ப்போரின் எண்ணிக்கையை 300 இனால் அதிகரித்தல், தேசிய சுகாதார சேவையினை முன்னேற்றுதல், பட்டப் பின் படிப்பு மருத்துவ பட்டதாரிகளை அதிகரித்தல் மற்றும் மருத்துவ பயிற்சி தொடர்பான கற்பித்தலின் தரத்தினை முன்னேற்றுதல் என்பவற்றுக்காக 2019 ஆம் ஆண்டில் மத்திய பொறியியல் சேவை தனியார் நிறுவனத்திற்கு ரூபா.1,300 மில்லியன் பெறுமதிக்கு கராப்பிட்டிய வைத்தியசாலையில் பேராசிரியர் அலகினை அமைக்கும் செயல்திட்டம் வழங்கப்பட்டிருந்தது. 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி வரையில் அதில் 06 மாடிகள் வரையிலான உள்ளக அமைப்பினை தயாரிக்கும் நடவடிக்கை மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தது.
- ருஹுணு பல்கலைக்கழகத்தில் தோல் ஆரோக்கிய விஞ்ஞான பீடத்தினை தாபிப்பதற்கான செயல் திட்டத்திற்கு 03 கட்டடங்களை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் 2020 திசெம்பர் 03 ஆம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றிடம் ரூபா. 1,501 மில்லியனுக்கு வழங்கப்பட்டு 2023 ஜூன் 02 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் மீண்டும் 2023 ஜூலை 14 ஆம் திகதி வரையில் துணைவேந்தரினால் நிறுவனத்திற்கு கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்த செயல் திட்டத்தின் பௌதீக செயலாற்றுகை 2023 ஜூன் 30 ஆம் திகதியில் 59 சதவீத மட்டத்தில் காணப்பட்டது.
- களனி பல்கலைக்கழகத்தில் வணிகம் மற்றும் முகாமைத்துவ பீடத்திற்கு 10 மாடிகளைக் கொண்ட கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்திற்காக மதியுரை

சேவையினை வழங்கும் நிறுவனத்திற்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மொத்தமாக ரூபா. 15 மில்லியன் மதியுரை சேவை கட்டணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த கட்டடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட எடுக்கவில்லை.

**பயன்படுத்தப்படாத நிதி அபிவிருத்தி நிதியத்தின் கீழ் காணப்பட்டமை.**

மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் அந்தந்த திணைக்களம் மற்றும் பாட நெறிகளுக்கு 89 பல்வேறு விடய தலைப்பு கணக்குகளில் ரூபா. 252 மில்லியன் தொகை காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் அதில் பயன்படுத்தப்படாத மொத்த நிதி 91.5 சதவீதம் அதாவது ரூபா. 228 ஆகும்.

**ஆராய்ச்சிக் கொடுப்பனவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஆராய்ச்சிகள் முடிவுறுத்தப்பட்டிருக்காமை.**

2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் கல்வி சாரா பதவி அணியினரில் 335 உத்தியோகத்தர்களுக்கு ஆராய்ச்சி கொடுப்பனவாக மொத்தமாக ரூபா. 434 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய ஆராய்ச்சிகளின் முன்னேற்றம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**பல்கலைக்கழகத்தால் அனுமதி பெற்றுக் கொடுத்திருந்த ஆராய்ச்சி முன்மொழிவினை நீக்குதல் மற்றும் நிறுத்தி வைத்திருத்தல்.**

கடந்த 6 வருட காலப் பகுதியினுள் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தால் அனுமதி வழங்கப்பட்டிருந்த 459 ஆராய்ச்சிகளுக்கு உரிய முன்மொழிவுகளை நீக்குதல் மற்றும் பணம் பெற்றுக் கொள்ளப்படாததன் அடிப்படையில் 34 ஆராய்ச்சிகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்தமாக ரூபா. 454 மில்லியன் பெறுமதியான 193 ஆராய்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. 2023 மார்ச் 15 ஆம் திகதியில் அந்த ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை 229 ஆக இருந்தது.

**பேராதெனிய பல்கலைக்கழகத்தில் கல்வி சாரா பதவியணி உத்தியோகத்தர்களுக்கு ஆராய்ச்சி கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தமை.**

2.٠.2014 முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆராய்ச்சி முகாமைத்துவக் குழு அனுமதி இன்றி மற்றும் எதுவித இடைநிலை ஆராய்ச்சி அறிக்கையோ அல்லது வேறு ஆராய்ச்சி அறிக்கையோ இன்றி பேராதெனிய பல்கலைக்கழகத்தில் கல்வி சாரா பதவி அணி உத்தியோகத்தர்கள் 59 பேருக்கு 2014 நவம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் 2022 ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் ரூபா. 84 மில்லியன் ஆராய்ச்சி கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

**திறைசேரி அனுமதி இன்றி மருத்துவ பலன் முன்மொழிவுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.**

அரச நிதியில் இருந்து 65 சதவீதத்தையும் ஊழியர்களிடமிருந்து 35 சதவீதத்தையும் அங்கத்துவ பணமாகப் பெற்றுக் கொண்டு திறந்த பல்கலைக்கழகங்களினால் செலுத்தப்பட வேண்டிய காப்பறுதி கணக்கு உருவாக்கப்பட்டு உள்ளக உத்தியோகத்தர்களைக் கொண்ட குழு ஒன்றின் பரிந்துரையின் அடிப்படையில் பல்கலைக்கழக பதவி அணியினரின் விண்ணப்பப் படிவங்களுக்கு வைத்திய பலன்களை செலுத்துவதற்கு 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் திறைசேரி அனுமதியின்றி அரச நிதி ரூபா. 30 மில்லியன் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

**புதிய முகாமைத்துவத் தகவல்கள் ஒழுங்கமைப்பினைத் தாபிப்பதற்குத் தவறியிருந்தமை.**

மொத்த செலவு ரூபா. 58 மில்லியனான திறந்த பல்கலைக்கழகத்தின் 05 பிரிவுகளின் நடவடிக்கைகள் தொடர்பாக மொடியூல் ரீதியாகத் தாபிக்கப்பட்டிருந்த முகாமைத்துவ தகவல்கள் ஒழுங்கமைப்பில் (முஅளை) காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு பராமரிப்பு நிறுவனங்களுக்கு முடியாது இருந்தது என்பதனால் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் புதிய உள்ளக முகாமைத்துவ தகவல்கள் ஒழுங்கமைப்பைத் (நெற முஅளை) தாபிப்பதற்கு ரூபா. 46 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டு வரையில் எதுவிதமான மொடியூலும் உருவாக்கப்பட்டிருக்காதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில், புதிய முகாமைத்துவத் தகவல்கள் ஒழுங்கமைப்பினைத் தாபிப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது..

**வெளிநாட்டு வளங்கள் திணைக்கப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக வெளிநாட்டு மானியங்களை நேரடியாகப் பெற்றுக் கொள்ளுதல்.**

வெளிநாட்டு வளங்கள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக ஊவா வெல்லச ,பல்கலைக்கழகம் கொழும்பு பல்கலைக்கழக கணினி கல்வி நிறுவகம் மற்றும் உயிர் இரசாயனவியல் மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்திடம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கிடைத்திருந்த மொத்தம் ரூபா. 72 மில்லியனை வெளிநாட்டு மானியங்கள் நிறுவனத்திற்கு நேரடியாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெற்றிடங்களை நிரப்பாமை.**

2020 ∴ 2021 கல்வி ஆண்டுக்கு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான 04 வெற்றிட சுற்றுகள் நடாத்தப்பட்டு இருந்த போதிலும் இன்னமும் 3,008 வெற்றிடங்கள் காணப்படுவதுடன் அந்த வெற்றிடங்களுக்கு மீண்டும் மாணவர்களை அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் 2020 / 2021 கல்வியாண்டில் மட்டும் 3,008 மாணவர்களுக்கு பல்கலைக்கழக பிரவேசம் இழக்கப்பட்டிருந்தது. இவ்வாறு

| | | |
|---|---|---|
| மாணவர்களுக்கான பிரவேசம் | பல்கலைக்கழக இழக்கப்படுவதைக் | குறைப்பதற்குப் புதிய முறைமையினை ஆணைக்குழு தயாரித்திருக்கவில்லை. |

# திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

- அதிகரிக்கும் கேள்விக்கு ஒப்பாக மாணவர்களின் ஆட்சேர்ப்பினை அதிகரிக்க முடியாமை.
- வெளிநாட்டு தொழிற்சந்தையின் தேவைப்பாடு உரிய முறையில் இனங்காணப்படாமை.
- போதியளவு கல்விசார் பதவியணியை ஆட்சேர்க்காத காரணத்தால் விடயப்பரப்பிற்கு உரிய தரத்தினை அதிகரிக்க முடியாதிருந்தமை.
- மாணவர்களின் பயிற்சிக் காலம் நிறைவடைந்து தொழிலில் ஈடுபடுவதற்கு உரிய தரவுக் கட்டமைப்பொன்று இல்லாதிருத்தல்.
- சுற்றுலா ஹோட்டல் மூலம் எந்தவொரு பயிற்சியாளருக்கும் நடைமுறைப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்காமை.
- பதிவு காலாவதியாகியிருந்த தொழில்சார் பயிற்சி நிறுவனத்தின் பதிவினை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்காமை.
- தற்காலிகமாக தடை செய்யப்பட்ட நிறுவனங்கள் தொழில்சார் கல்வித் துறையில் நிலைத்திருத்தல்
- கடன் பணத்தை வழங்குதல் தொடர்பில் அமைச்சு தலையிட்டிருக்காமை.
- தேசிய அறிவியல் மையமொன்று ஆரம்பிக்கப்பட்டிராமை
- சூரிய வலு படல்களை உற்பத்தி செய்றவதற்கான வசதிகளை வழங்கும் செயற்திட்டம் தோல்வியடைந்திருந்தமை.
- விடுதியின் நிர்மாணப் பணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிராமை.
- தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு விசேட செயற்திட்டத்தை மேற்கொள்வதற்காக பெறப்பட்ட பணத்தை உரிய பணிகளை செய்யாமல் நிறுத்தி வைத்திருத்தல்
- விளைவற்ற விதத்தில் வட்டி செலுத்த நேர்ந்தமை
- சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைப்பயன்பாட்டுடன் காணப்படல்
- செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பிரதான பணிகள் நிறைவேற்றப்பட்டிராமை.
- வெற்றித்தன்மையை பரிசோதிப்பதற்கு முன்னர் செயற்திட்டத்தை ஆரம்பித்திருந்தமை
- செயற்திட்டம் தொடர்பில் கண்காணிப்பு அல்லது பின்தொடர்தலொன்று மேற்கொள்ளப்பட்டிராமை
- உயிரியல் தொழில்நுட்ப புத்தாக்க பூங்காவினை நிறுவும் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் விளைவற்றதாகியிருந்தமை.


# திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத் துறை

தற்போதைய மட்டும் எதிர்கால ஊழிய படையணிக்கு மிகவும் சிக்கலான பொருளாதாரத்திற்கு பொருந்தும் வகையில் நவீன மயப்படுத்தப்பட்ட மற்றும் கல்வியுடன் திறன்கள் மற்றும் ஆற்றல்கள் நிறைந்த ஆராய்ச்சி புத்தாக்கமுடைய திறமை மிக்க தங்கத்தவர்களை கொண்டிருப்பது அத்தியாவசியமானது ஆகும். அதற்கான திறன்கள் மற்றும் அறிவு ஆரியவற்றுக்கு இடையே உள்ளம் இடைவெளியை நிரப்புவதற்கு பொருளாதாரத்தில் நிலவும் உயர் மற்றும் மூன்றாம் நிலை கல்வி சந்தர்ப்பங்களில் அதிகரிக்க வேண்டும் அந்த எதிர்பார்ப்பையும் நிறைவேற்றுவதற்கு கல்வி அமைச்சின் கீழ் உள்ள திறன்கள் மேம்பாடு தொழிற்கல்வி ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் பிரிவினால் ஒரு திணைக்களம் மற்றும் 20 நியதிச்சட்ட நிறுவனங்களால் பின்வரும் பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்தது.

- தொழிற்கல்வி மீதான நாட்டத்தை அதிகரிக்க மூலோபாயங்களை வகுத்து செயல்படுத்தவும்.
- கல்வித் தகுதியைப் பொருட்படுத்தாமல் தொழிற்கல்விக்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற் சந்தைகளுக்கு ஏற்ற பணியாளர்களை உருவாக்க கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்வியை நவீனப்படுத்துதல்.
- தொழில்முறை பாடத்திட்டங்களை புதுப்பித்து - One TVET என்ற எண்ணக்கருவின் கீழ் தொடர்புடைய நிறுவனங்களை வலையமைத்து அவற்றை தொழில்நுட்ப பட்டப்படிப்பு நிறுவனங்களாக மாற்றுதல்.
- பாடசாலையை விட்டு வெளியேறிய பின்னர் பல்கலைக்கழக கல்விக்கு தகுதியற்ற மாணவர்களுக்கு தொழிற்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான கொள்கைகளை வகுத்து வசதிகளை வழங்குதல்.
- தொழிற்பயிற்சி வாய்ப்புகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
- தற்போதுள்ள தேசிய தொழிற்கல்வித் தகைமை (NVQ) நிலைகளை 7ல் இருந்து 10 மட்டங்களாக அதிகரிப்பதுடன் அதற்கேற்ப இலங்கை தகுதிக் கட்டமைப்பை (SLQF) திருத்தியமைத்தல்.
- தொழில்முனைவு, தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் பிற மொழிகள் ஆகியவற்றை தொழில்முறைக் கல்விப் பாடநெறிகளில் சேர்க்கும் வகையில் பாடத்திட்டத்தை திருத்துதல்.

- நடமாடும் தொழில்நுட்ப கல்வி சேவைகள் மூலம் தொழில் பயிற்சி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தைகளை இலக்காகக் கொண்டு தொழில் கல்வியை வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- வேலை வாய்ப்புகளுக்கு ஏற்ற பட்டங்களை வழங்கும் உயர்கல்வி நிறுவனங்களாக நகரப் பல்கலைக்கழகங்களை நிறுவு நடவடிக்கை எடுத்தல்.
- சர்வதேச ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒத்துழைக்க ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வசதிகளை வழங்குதல்.
- கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சி முடிவுகளைப் பயன்படுத்த ஒரு திறமையான பொறிமுறையை உருவாக்குதல்.
- தேசிய புத்தாக்க நிறுவனங்களை நிறுவ தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- அறிவியல், தொழில்துறை மற்றும் சமூக, பொருளாதார ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை விரிவுபடுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- புதிய கண்டுபிடிப்புகளுக்கு சமூகத்தை வழிகாட்டல் மற்றும் ஊக்குவித்தல்.

மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தினால் மீளாய்வாண்டுக்காக ரூபா 14,486 மில்லியன் நிதியேற்பாமு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 11,481 மில்லியன் பயன்படுத்தப் பட்டிருந்தது. அதற்கமைய அந்த காலப்பகுதியினள் பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற் பாட்டில் 21 சதவீதம் அல்லது ரூபா 3,004 மில்லியனான நிதியேற்பாடு பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.விபரங்கள் கீழே உள்ள வரைபடம் 24 இல் தரப்பட்டுள்ளது.




| | கல்வி அமைச்சு (திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி,ஆராய்ச்சி மற்றும் | தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியளித்தல் திணைக்களம் | மொத்தம் |
|---|---|---|---|
| தே.நிதி ஏற்பாடு ரூ.மி | 12,109.11 | 2,377.00 | 14,486.11 |
| செலவினம் ரூ.மி | 9,297.95 | 2,183.39 | 11,481.34 |
| சேமிப்பு ரூ.மி | 2,811.16 | 193.61 | 3,004.77 |

வரைபடம் 24 - பாராளுமன்றத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மற்றும் பயன்பாடு

மூலம் - பொது திறைசேரியின் இறுதிக் கணக்கு அறிக்கைகள்

மேற்படி பணிப்பொறுப்பினை நிறைவேற்றுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

**அதிகரிக்கும் கேள்விக்கு ஒப்பாக மாணவர்களின் ஆட்சேர்ப்பினை அதிகரிக்க முடியாமை.**

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் கடந்த 5 வருடங்களில் முழுநேரப் பாடநெறிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் 3,075 முதல் 4,683, அதாவது 412 சதவீதம் முதல் 681 சதவீதம் வரை இருந்தது, ஆனால் படிப்புகளுக்கான சேர்க்கையை அதிகரிக்க நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை. அதிகரித்து வரும் தேவையுடன் ஒப்பிடும் போது 20 வீதத்தால் அதாவது வருடாந்தம் 600 என்ற நிலையான பெறுமதிக்கு குறைந்த பட்ச மாணவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். மேலும், 03 பிராந்திய நிலையங்களில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தப்படவில்லை. எனவே, உயர்தரப் பல்கலைக்கழக அனுமதியை இழந்த மாணவர்களுக்கு தொழில் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது.

**வெளிநாட்டு தொழிற்சந்தையின் தேவைப்பாடு உரிய முறையில் இனங்காணப்படாமை.**

இத்துறையில் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு

இல்லாததால், வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தைக்கு தேவையான பயிற்சி பெற்ற தொழிலாளர்களை இலக்காகக் கொண்ட பாடநெறிகளை அறிமுகப்படுத்துவது, வெளிநாட்டு தேவைகளை சரியான முறையில் அங்கீகரிக்காததால் பலவீனமாக உள்ளது. வேலை சந்தை, மற்றும் இலங்கையில் வேலையின்மை நிலைமையை குறைப்பதற்கு இந்த நிறுவனங்களின் பங்களிப்பு மிகவும் குறைவாக இருந்தது.

**போதியளவு கல்விசார் பதவியணியை ஆட்சேர்க்காத காரணத்தால் விடயப்பரப்பிற்கு உரிய தரத்தினை அதிகரிக்க முடியாதிருந்தமை.**

தொழில்முறை பயிற்சித் திட்டங்களின் தரத்தை மேம்படுத்துவது தொடர்பாக, கல்விப் பணியாளர்களின் ஆட்சேர்ப்பு போதுமானதாக இருக்க வேண்டும் மற்றும் தரத்தை மேம்படுத்தும் வகையில் பாடப் பகுதி தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்பட வேண்டிய போதிலும், அனுபவம் வாய்ந்த ஆலோசகர்கள் இல்லாததாலும், போதிய பயிற்சித் திட்டங்கள் இல்லாததாலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற் சந்தைக்குத் தேவையான பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் உருவாக்கம் குறைந்தபட்ச அளவில் உள்ளது.

**மாணவர்களின் பயிற்சிக் காலம் நிறைவடைந்து தொழிலில் ஈடுபடுவதற்கு உரிய தரவுக் கட்டமைப்பொன்று இல்லாதிருத்தல்.**

மாணவர்களின் பதிவு செய்த சந்தர்ப்பத்திலிருந்து பயிற்சிக் காலம் நிறைவடைந்து தொழிலில் ஈடுபடுவதற்கு உரிய தரவுக் கட்டமைப்பொன்று இந்த துறையினுள் உள்ள எந்தவொரு பயிற்சி நிறுவனத்திலும் நாளதுவரையாக பேணப்படாமை.

**சுற்றுலா ஹோட்டல் மூலம் எந்தவொரு பயிற்சியாளருக்கும் நடைமுறைப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்காமை.**

அஹுங்கம ஹோட்டல் பள்ளி தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பாடநெறிகளை பயிலும் மாணவர்களின் மேலதிக பயிற்சிக்காகவும் சிறந்த பயிற்சியை வழங்கும் நோக்கத்துடன் ரூ. 2019 ஆம் ஆண்டு 149 மில்லியன் செலவில் இது ஒரு ஹோட்டலாகப் புதுப்பிக்கப்பட்டாலும், அந்த ஆண்டு முதல் 2023 ஜூன் 30 வரை எந்தப் பயிற்சியாளர்களுக்கும் நடைமுறைப் பயிற்சி அளிக்கப்படவில்லை.பயன்பாட்டினைக் கருத்தில் கொள்ளாது சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்.

**பதிவு காலாவதியாகியிருந்த தொழில்சார் பயிற்சி நிறுவனத்தின் பதிவினை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்காமை.**

2022 ஏப்ரல் 20 இல் உள்ளபடியாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வியில் பதிவுசெய்யப்பட்ட மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கை 3386 ஆகும், இதில் 2154 நிறுவனங்களின் பதிவு காலாவதியாகிவிட்டது. 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை, பதிவுகள் காலாவதியான 371 நிறுவனங்கள் பதிவை புதுப்பிப்பதற்கு விண்ணப்பித்திருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டு வரையிலும் பதிவை புதுப்பிக்க எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.

**தற்காலிகமாக தடை செய்யப்பட்ட நிறுவனங்கள் தொழில்சார் கல்வித் துறையில் நிலைத்திருத்தல்**

சட்டவிரோதமான முறையில் செயற்பட்ட 81 நிறுவனங்களின் செயல்பாடுகள் தற்காலிகமாக தடை செய்யப்பட்டிருந்தாலும், அந்த நிறுவனங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுக்காததால், இந்த நிறுவனங்களும் தொழிற்கல்வித் துறையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்குப் புறம்பாக செயற்படுகின்றன.

**கடன் பணத்தை வழங்குதல் தொடர்பில் அமைச்சு தலையிட்டிருக்காமை.**

கடன் வழங்குவது தொடர்பான அனைத்து விண்ணப்பங்களும் அமைச்சின் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றாலும், 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட 1,308 பயனாளிகளில் 1,127 பயனாளிகளுக்கு ரூபா 491 மில்லியன் கடனாக வழங்கப்பட்டிருந்தது, ஆனால் வங்கிகளே கடனாளிகளை தெரிவு செய்து அமைச்சின் தலையீடு இன்றி கடன்களை வழங்கியிருந்தன.

**தேசிய அறிவியல் மையமொன்று ஆரம்பிக்கப்பட்டிராமை**

தேசிய அறிவியல் மையம் அமைப்பதற்காக நிலத்தை கையகப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 280 மில்லியன் பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை, அதன் உரிமை அமைச்சிற்கு பெறப்படவில்லை. மீளாய்வாண்டில், விரிவான இலக்குகளின் கீழ் 07 சந்தர்ப்பங்களை இலக்காகக் கொண்டு, ரூபா 60 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 24 மாதங்களுக்குள் மையத்தின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டது. அதற்கான மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 2,820 மில்லியன் ஆன போதிலும் செலவில் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

**சூரிய வலு படல்களை உற்பத்தி செய்றவதற்கான வசதிகளை வழங்கும் செயற்திட்டம் தோல்வியடைந்திருந்தமை.**

சூரிய வலு படல்களின் முன்மாதிரிகளை தயாரிப்பதற்கான வசதிகளை வழங்கும் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி கல்விப் பயிற்சித் திட்டத்தின் கீழ், இலங்கை அரசு ரூபா 240 மில்லியன் பங்களிப்பின் அடிப்படையில் 06 வருட திட்ட காலத்துடன் உத்தேச திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. ஆனால் 06 வருடங்கள் கடந்தும் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமையால் இத்திட்டம் தோல்வியடைந்திருந்தது.

**விடுதியின் நிர்மாணப் பணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிராமை.**

துறைசார் திறன் அபிவிருத்தி செயறற்திட்டத்தினால் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் மாணவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட 06 மாடிகளைக் கொண்ட அத்திடிய பகுதியில் உள்ள விடுதியின் நிர்மாணப் பணிகள் 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி பூர்த்தி

செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும், விடுதியின் நிர்மாணப் பணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு விசேட செயற்திட்டத்தை மேற்கொள்வதற்காக பெறப்பட்ட பணத்தை உரிய பணிகளை செய்யாமல் நிறுத்தி வைத்திருத்தல்**

சிறப்புத் திட்டத்தை மேற்கொள்வதற்காக, தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு ஏனைய நிறுவனங்களால் வழங்கப்பட்டிருந்த ரூபா 45 மில்லியனான நிதியேற்பாடுகள் 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பயன்படுத்தப்படாமல் நிறுவனத்தில் தக்கவைக்கப்பட்டது. இந்த மதிப்பில், 3 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 2019 ஆம் ஆண்டில் 13 ஆண்டுகள் தொடர்ச்சியான கல்விக்காக கல்வி அமைச்சிடம் இருந்து பெறப்பட்ட ரூபா 27 மில்லியன் தொகையும் உள்ளடங்கியுள்ளது.

**விளைவற்ற விதத்தில் வட்டி செலுத்த நேர்ந்தமை**

தலைமை அலுவலகத்தை பராமரிக்கும் நோக்கத்துடன், 2015 ஆகஸ்ட் 26 ஆம் திகதி தெஹிவளையில் 100 கோடி ரூபா செலவில் மேம்பட்ட தொழில்நுட்ப நிறுவகத்தை நிர்மாணிப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 03 மாடிகளின் பணிகள் 20 மில்லியன் செலவில் பூர்த்தி செய்யப்பட்டு 2017 பெப்ரவரி 21 ஆம் திகதி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. எஞ்சிய 02 மாடிகளின் பணிகள் நிறைவடையாததால், கட்டிடம் ஒப்படைக்கப்பட்ட நாள் முதல் செயல்படாமல் உள்ளது. 2017 மார்ச் முதல் 2022 டிசம்பர் வரையிலான காலத்திற்கு தலைமை அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்கு ரூபா 55 மில்லியன் வெளி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டியிருந்தது.

**சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைப்பயன்பாட்டுடன் காணப்படல்**

தொழில்நுட்ப இன்குபேட்டர் துறையில் சேவைகளை வழங்க வேண்டிய தேவை நாட்டில் அதிகமாக இருந்த போது, இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் உள்ளூர் தொழில்துறையை மேம்படுத்துவதற்காக சுவீகரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிராத பெறுமதி ரூபா 103 மில்லியனில் அதிக திறன் கொண்ட உயர் தொழில்நுட்ப 14 இயந்திரங்கள், ரூபா 13 மில்லியன் மதிப்புள்ள ஒரு இயந்திரம் மற்றும் அங்கீகரிக்கப்படாத மதிப்புள்ள மற்றொரு இயந்திரம் செயலற்றதாக அல்லது பயன்படுத்தப்படாமல் இருந்தது.

**செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பிரதான பணிகள் நிறைவேற்றப்பட்டிராமை.**

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2022 ஆம் ஆண்டின் செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 05 முக்கிய நடவடிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட உப-செயல்பாடுகளின் எண்ணிக்கை 15 ஆகும், இதில் 02 நடவடிக்கைகள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளன. செயல் நடவடிக்கைத்திட்டத்தின்படி, இந்த ஆண்டில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்ட மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 100,000 முதல் ரூபா 2.3 மில்லியன் இடைப்பட்ட

வீச்சில் காணப்பட்ட 07 செயல்பாடுகளின் பௌதீக முன்னேற்றம் 0 சதவீதம் முதல் 56 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது.

**வெற்றித்தன்மையை பரிசோதிப்பதற்கு முன்னர் செயற்திட்டத்தை ஆரம்பித்திருந்தமை**

இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையினால் திடக்கழிவுகளின் சிதைவை துரிதப்படுத்தும் நுண்ணுயிரிகளின் குழுக்களை அடையாளம் காண இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை SP 21-02 எனும் சிறப்புத் திட்டத்தை 2021 ஜூலை இல் ஆரம்பித்து ரூபா 8 மில்லியன் செலவிட்டிருந்தது. இந்தச் சிக்கலுக்கு, இலக்கு அடிப்படையிலான பல்துறைத் திட்டத்திற்கு (TO 18-21) 2018 ஆம் ஆண்டின் புரோது ரூபா 49 மில்லியன் நிதியில் தொடங்கப்பட்டு இறுதிக் கட்டத்தில் காணப்பட்ட போது, அதன் வெற்றியை சோதிக்கும் முன்னர் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**செயற்திட்டம் தொடர்பில் கண்காணிப்பு அல்லது பின்தொடர்தலொன்று மேற்கொள்ளப்பட்டிராமை**

இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையினால் TO-14-04 என்ற ஆராய்ச்சி திட்டத்தின் மூலம் டெங்கு நோய் பரப்பும் கிருமிகளை கட்டுப்படுத்த ரூபா 46 மில்லியன் செலவில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த புதிய லார்வா வகை கண்டுபிடிக்கப்பட்ட போதிலும், அந்த லார்வாக்களை நாட்டில் பரப்புவதன் மூலம் இலங்கையில் டெங்கு நோயை முற்றாக ஒழிக்கும் வரை அந்த திட்டத்தின் பெறுபேறு பயன்படுத்தப்பட வேண்டிய நிலையில் கண்காணிப்பு அல்லது பின்தொடர்தல் மேற்கொள்ளப்படவில்லை.

**உயிரியல் தொழில்நுட்ப புத்தாக்க பூங்காவினை நிறுவும் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் விளைவற்றதாகியிருந்தமை.**

ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியுட் ஒவ் பயோ டெக்னோலொஜி கம்பனியால் உயிரியல் தொழில்நுட்ப புத்தாக்க பூங்காவினை நிறுவும் செயற்திட்டத்திற்காக நேரடி செலவுகள் மற்றும் நிர்வாக செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 144 மில்லியன் செலவிடப்பட்டதுடன், அதில் ரூபா 125 மில்லியன் சம்பளம் மற்றும் கட்டிட வாடகைக்கு மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. எதிர்பார்த்த முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை என்றாலும், பணியாளர் நிர்வாகம் மற்றும் கட்டிட வசதிகளுக்கான மொத்த செலவில் 87 சதவீதம் எனும் பெரும் பங்களிப்பை கம்பனி வழங்கியிருந்தது.

# சுகாதாரத் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

- சுகாதார அமைச்சு
  - கைரேகை இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படாத வருகை மற்றும் புறப்பாடுகளுக்கான சம்பளம் , மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள் செலுத்தப்பட்டமை
  - பயிற்சி மருத்துவ அலுவலர்களுக்கு சட்டரீதியற்ற உதவித்தொகை வழங்கப்பட்டமை
  - பயிற்சியை திட்டமிட்டபடி நிறைவு செய்யாத செவிலியர்கள், துணை மற்றும் இடைக்கால மருத்துவ பணியாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகை அறவிடப்படாமை
  - சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை
  - வாகன முகாமைத்துவத்தில் காணப்பட்ட நலிவுகள்
  - அரசிற்கு செலுத்த வேண்டிய வரிக் கொடுப்பனவு தவிர்க்கப்பட்டமை
  - சுகாதாரத் துறையைப் பராமரிப்பதில் தேவைப்படுகின்ற பதவிகள்
  - ஊழியர் மிகை மற்றும் பற்றாக்குறை சரியாக முகாமைத்துவம் செய்யப்படாமை
- வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோஷா கம்பனி
  - கம்பனிக்குச் சொந்தமாக போதியளவு களஞ்சியசாலை வசதிகள் இல்லாதிருந்தமை
  - பிஸ்கட் உற்பத்தி இயந்திரமொன்று செயலற்றுக் காணப்பட்டமை
- போதனா மருத்துவ மனைகள்
  - மூலப்பொருள் மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது முன்னர் அடையாளம் காணப்பட்ட வழங்குநர்களுக்கு ஆதரவாக தயாரிக்கப்பட்டிருந்தமை
  - அறுவைசிகிச்சை அறைகளில் அறுவை சிகிச்சை நுகர்பொருட்களின் இருப்பைக் கட்டுப்படுத்துவதில் குறைபாடுகள் காணப்பட்டமை

- **மருத்துவ வழங்கற் பிரிவு**
  - **மருத்துவ வழங்கல்கள் தரமிழந்தமை**
  - **தேசிய மருந்து தர உத்தரவாத ஆய்வுக்கூடத்தில் வசதிகள் போதிய அளவில் இல்லாமை**
  - **கொட்டிக்காவத்தையில் அமைந்துள்ள மருத்துவ விநியோக களஞ்சியசாலைக்கு ஏற்பட்டிருந்த சேதத்திற்குரிய காப்புறுதி முழுமையான ரீதியில் அறவிடப்பட்டிருக்காமை**
  - **பைசர் தடுப்பூசிகள் காலாவதியானமை**
  - **மருத்துவ விநியோகப் பிரிவிற்கு விரிவான முகாமைத்துவ தகவல் ஒழுங்கமைப்பு ஒன்றினைத் தாபித்தல்.**
- **சரியான வெப்ப நிலையில் மருந்துகள் களஞ்சியப்படுத்தப்படாமை.**

# சுகாதாரத் துறை

எந்தவொரு அமைப்பின் நல்வாழ்வும் உற்பத்தித்திறனும் அந்த அமைப்பைச் சேர்ந்த மனித வளங்களின் செயல்திறனால் தீர்மானிக்கப்படுகிறது. மேலும், ஒரு நாட்டின் நல்வாழ்வு மற்றும் அபிவிருத்தியை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்று அந்த நாட்டில் வாழும் மக்களின் திறன் ஆகும். ஒரு நாட்டின் மக்களின் திறமையை தீர்மானிக்கும் முக்கிய காரணி அந்நாட்டு மக்களின் நல்ல ஆரோக்கிய நிலைமை ஆகும். ஒரு நாட்டில் ஆரோக்கியமான மக்களை உருவாக்க, அந்த நாட்டில் மிக உயர்தர சுகாதார சேவை பேணப்பட வேண்டும்.நாட்டின் பொருளாதார, சமூக, உள ரீதியான மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கு பங்களிக்கும் ஆரோக்கியமான தேசத்தை உருவாக்கும் தொலைநோக்கு பார்வையுடன், சுகாதார அமைச்சினால் பின்வரும் பணிகள் மற்றும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்தது.

- கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தொகுத்தல்
- சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து விடயங்களின் மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள்.'. நிதியம், திணைக்களம், சட்டப்பூர்வ சபைகள் மற்றும் அரசு கூட்டுத்தாபனங்களின் கீழ் உள்ள விடயங்களின் , மேற்பார்வை மற்றும் மதிப்பீடுப் பணிகளை செய்தல்.
- பொது சுகாதார சேவைகள் தொடர்பான கொள்கைகள் மற்றும் நியமங்களை உருவாக்குதல்
- பொது சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்தவதற்கான வேலைத்திட்டங்களை தொகுத்து செயல்படுத்தல்
- சர்வதேச தனிமைப்படுத்தல் மற்றும் சுகாதார விதிமுறைகளை செயல்படுத்துதல்
- தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ மையங்களின் தரம், நியமங்கள் மற்றும் விலைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணித்தல்
- இலாப நோக்கற்ற சமூக மருத்துவ பராமரிப்பு நிறுவனங்களின் பணியை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்
- தொற்றுநோய், தொற்றக்கூடிய மற்றும் தொற்றாத நோய்களின் தரக் கட்டுப்பாடு, தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான நடவடிக்கைகளைத் தொடங்குதல்
- பாடசாலை சுகாதார திட்டத்துடன் தொடர்புடைய மருத்துவ மற்றும் வாய்வழி சுகாதார சேவைகளை செயல்படுத்துதல்
- தோட்டத் துறைக்கான சுகாதார சேவைகள் தொடர்பான பணிகள்
- பொது சுகாதாரம்
- திரிபோஷா விநியோக வேலைத்திட்டங்களை செயல்படுத்துதல்

- அனைத்து மருத்துவமனைகள் மற்றும் மருத்துவமனை ஊழியர்களின் நிர்வாகம் (மாகாண சபைகளின் கீழ் உள்ள மருத்துவமனைகள் தவிர)
- பயிற்சி நடவடிக்கைகள் செயற்பாடுகளை அனைத்து திணைக்களம் மற்றும் அச்சேவைகளின் நிர்வாகம் மற்றும் அமைப்பு மற்றும் ஏனைய உயர் மருத்துவக் கல்வி நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல்
- தேசிய இரத்த மாற்று சேவைகள் தொடர்பான பணிகள்
- மருந்து உற்பத்தி, இறக்குமதி மற்றும் விநியோக நடவடிக்கைகள்
- இலங்கை மருத்துவ சேவை தொடர்பான நிர்வாகம் மற்றும் ஆளணி முகாமைத்துவம்
- மருத்துவ மற்றும் குறைநிரப்பு மருத்துவ சேவைகளின் தரம் மற்றும் திறன்களை மேம்படுததுவதற்கு தேவையான பயிற்சி வாய்ப்புகளை உருவாக்குதல்.
- சுகாதாரத் துறையுடன் தொடர்பான ஆராய்ச்சிகளை விரிவுபடுத்த புதிய உத்திகளை அறிமுகப்படுத்துதல்
- தேசிய சுகாதார காப்புறுதி வேலைத்திட்டங்கள் தொடர்பான பணிகள்

2022 ஆம் ஆண்டில், மேற்குறிப்படப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு சுகாதார அமைச்சிற்கு ரூபா 256,586 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 240,852 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக நடாத்தப்பட்ட மாதிரி கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான மற்றும் பொருண்மையான கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

**கைரேகை இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படாத வருகை மற்றும் புறப்பாடுகளுக்கான சம்பளம் , மேலதிக நேர மற்றும் டீனைய படிகள் செலுத்தப்பட்டமை**

அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், அனைத்து அரச நிறுவனங்களிலும் கைரேகைப் பதிவு இயந்திரங்களைப் பயன்படுததுவதன் மூலம் உத்தியோகத்தர்களின் அலுவலகத்திற்கு வருகை மற்றும் வெளியேறுதல்களை உறதிப்படுத்தப்படுவது தொடர்பாக அறிக்கைகள் வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் கைரேகை இயந்திரங்களைப் பயன்படுத்தாமல் மீளாய்வாண்டில் சம்பளங்களுக்காக ரூபா 43,356 மில்லியனும் தற்போதைய சம்பளத்தின் அடிப்படையில் மேலதிக நேர மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவாக ரூபா யாக 36,192 மில்லியனுமாக மொத்த தொகை ரூபா 79,548 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மேலும், மேலதிக நேர மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவாக செலவிடப்பட்ட மொத்தத்

தொகை சம்பளத்தின் கிரயத்தில் 72 சதவீதமாகும்.

**பயிற்சி மருத்துவ அலுவலர்களுக்கு சட்டரீதியற்ற உதவித்தொகை வழங்கப்பட்டமை.**

மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் 2016 சனவரி முதல் பயிற்சிக்காக 22 மத்திய அரச வைத்தியசாலைகளிற்கு இணைக்கப்பட்டிருந்த பயிற்ச்சி மருத்துவ அலுவலர்களுக்கு 2022 மார்ச் வரையான காலத்திற்காக ரூபா 47 மில்லியன் சட்டரீதியற்ற படிகளாக செலுத்தப்பட்டு இருந்தது. ஏனைய வைத்தியசாலைகளிற்கு உரியதாக 2016 முதல் 2022 திசெம்பர் வரை மேலதிகமாக செலுததப்பட்டுள்ள சட்டரீதியற்ற கொடுப்பனவுகளின் பெறுமதி எவ்வளவு என்பது தொடர்பான தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை.

**பயிற்சியை திட்டமிட்டபடி நிறைவு செய்யாத செவிலியர்கள், துணை மற்றும் இடைக்கால மருத்துவ பணியாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகை அறவிடப்படாமை**

2018 சனவரி 01 முதல் 2022 ஆகஸ்ட் 15 வரையான காலத்தினுள் 23 பயிற்சி பாடசாலைகளுக்கு ஆட்சேர்க்கப்பட்ட 432 பயிற்சியாளர்கள், பயிற்சியை உரியவாறு பூர்த்தி செய்யாது பயிற்சியை கைவிட்டு சென்றிருந்ததுடன் அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய பிணைமுறி மாத்திரம் ரூபா **116** மில்லியன் பெறுமதி ஆகும்.

**சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை**

2020 ஆண்டில் பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள், அமைப்பு மற்றும் தனிநபர்களினால் அமைச்சிற்கு மற்றும் அதன் கீழ் காணப்படும் வைத்தியசாலை நிறுவனம் மற்றும் பல பிரிவிகளிற்கு நிதியல்லா உதவி அல்லது அன்பளிப்பாக பெறுமதி ரூபா 1,339 மில்லியனான பண்டங்கள் உபகரணங்கள் மற்றும் மருத்துவ வழங்கல்களும் பெறுமதி தெரியாத பண்டங்கள் மற்றும் உபகரணங்களின் 2,444 அலகுகள் வழங்கப்பட்டிருந்தமை உறுதியான போதும் அவற்றின் பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கி இருக்கவில்லை.மேலும் 2010 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப் பகுதியினுள் அமைச்சினால் செயற்படுத்தியிருந்த 54 வெளிநாட்டுதவி கருத்திடங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,603 மில்லியன் செலவினுள் நிதியல்லா சொத்துக்கள் கைப்பற்றல் மற்றும் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் நிதியல்லா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு இருக்காததுடன் கோவிட் 19 அவசரகால பதில் மற்றும் சுகாதார அமைப்பு தயாரிப்பு செயற்திட்டத்தால் 2022 திசெம்பர் 31 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,326 மில்லியன் நிதிச் சொத்துக்களின் கிரயம் அமைச்சின் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படடிருக்கவில்லை.

**வாகன முகாமைத்துவத்தில’ காணப்பட்ட நலிவுகள்**

2019 ஏப்ரல் 22 ஆம் திகதி தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட சுகாதார அமைச்சின் வாகன மகாமைத்தவம் தொடர்பான விஷேட கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் அமைச்சிற்கு சொந்தமான 679 வாகனங்கள் காணாமல் போயுள்ளதாக குறிப்பிடப்பட்டு இருந்தது. இவற்றில் 240 வாகனங்களை இனங்கண்டதாக குறிப்பிட்ட போதும் அதனை உறுதி செய்துகொள்வதற்கு போதிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் மேலும் 439 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் 2023 யூன் 30ி வரை தேடிக்கொளவதற்கு , மேற்குறித்த விஷேட கணக்காய்வு அறிக்கையை விநியோகித்து 04 ஆண்டுகள் அளவு கடந்துள்ள போதும் முடியாதிருந்தது. 2020 ஆண்டில் ரூபா 239 மில்லியன் செலவிட்டு கொள்வனவு செய்த 805 மோட்டார் சைக்கிள்கள் அமைச்சின் சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தி இருக்காததுடன் இந்த மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்ட நபர்களுடன் அமைச்சு எழுத்துமூல உடன்படிக்கைகளை 2023 யூன் 30 வரையில் ஏற்படுத்தி இருக்கவில்லை.

**அரசிற்கு செலுத்த வேண்டிய வரிக் கொடுப்பனவு தவிர்க்கப்பட்டமை**

2020 ஏப்ரல் 15 ஆம் திகதிய வரி அறிவித்தல் பிரகாரம் 2020 சனவரி 01 முதல் 2020 மார்ச் 31 வரையான கால எல்லைக்காக வெளியிடப்பட்டிருந்த வரி அறிவித்தலின் ஏற்பாடுகள் அமைச்சு மற்றும் வைத்தியசாவைகளினால் பின்பற்றப்பட்டு இருக்காததுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அமைச்சு, வைத்தியசாலை மற்றும் 24 நிறுவனங்களுக்கான மேற்குறித்த 03 மாத காலப் பகுதிக்காக அரசிற்கு இழக்கப்பட்டிருந்த வரி வருமானம் ரூபா 8 மில்லியன் அளவாக இருந்தது.

**சுகாதாரத் துறையைப் பராமரிப்பதில் தேவைப்படுகின்ற பதவிகள்**

இப்பிரிவில் காணப்படும் பதவி வெற்றிடங்களில் சுகாதாரத் துறையை நடாத்திச் செலும் போது மிகமுக்கிய பதவிகளிற்கிடையில் 1,331 மருத்துவ உத்தியோகத்தர்களும், பல் மருத்துவ அறுவை சிகிச்சை 77 அலுவலர்களும், 1,759 தாதி அலுவலர்களும், 275 தாதி சகோதர சகோதரிகளும், 136 வைத்திய இரசாயனகூட தொழிநுட்ப நிபுணர்களும், 68 தொழில்சார் சிகிச்சையாளர்களும், 126 மருந்துவ கலவையாளர்களும், 270 கதிர்வீச்சு நிபுணர்களுக்குமான வெற்றிடங்கள் காணப்பட்டன

**ஊழியர் மிகை மற்றும் பற்றாக்குறை சரியாக முகாமைத்துவம் செய்யப்படாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதிக்கு 02 வைத்தியசாலைகளில் 03 நிபுணத்துவ அறுவை சிகிச்சை வைத்தியர்கள் மிகையாக காணப்படும் போது 12 வைத்தியசாலைகளில் 15 நிபுணத்துவ அறுவை சிகிச்சை வைத்தியர்களின் வெற்றிடங்களும், 13 வைத்தியசாலைகளில் 20 நிபுணத்துவ பல் மருத்துவ அறுவை சிகிச்சை வைத்தியர்கள் மிகையாக காணப்படும் போது 24 வைத்தியசாலைகளில் 97

நிபுணத்துவ பல் மருத்துவ அறுவை சிகிச்சை வைத்தியர்களின் பற்றாக்குறையும், 5 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் வைத்திய நிர்வாக (சிரேஷ்ட தரம்) 05 அலுவலர்கள் மிகையாக இருக்கும் போது 40 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் வைத்திய நிர்வாக (சிரேஷ்ட தரம்) 43 அலுவலர்கள் பற்றாக்குறையும், 23 வைத்தியசாலைகளில் 146 நிபுணத்துவ வைத்தியர்கள் மிகையாக இருக்கும் போது, 38 வைத்திசாலைகளில் 156 நிபுணத்துவ வைத்தியர்களின் பற்றாக்குறையும், 21 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் 282 வைத்திய அலுவலர்கள் மிகையாக இருக்கும் போது 89 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில 1613 வைத்திய அலுவலர்களின் பற்றாக்குறையும் நிலவின.

**வரையறுக்கப்பட்ட இலங்கை திரிபோஷா கம்பனி**

**கம்பனிக்குச் சொந்தமாக போதியளவு களஞ்சியசாலை வசதிகள் இல்லாதிருந்தமை**

திரிபோஷா கம்பனிக்குச் சொந்தமான நிறுவனத்தில் போதிய களஞ்சியசாலை வசதிகள் இல்லாதிருந்ததுடன் இதனால் பல்வேறு விலை வீச்சில் கொள்வனவு செய்வதற்கு நேரிட்டிருந்தது. உலக உணவுத் திட்டத்தால் (டிுகு) முன்மொழியப்பட்ட சயிலோ அமைப்பைக் நிர்மாணிப்பதற்கு மொத்தம் ரூபா 192 மில்லியன் 2021 ஆம் ஆண்டில் பல சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருநத போதிலும் கொடுக்கப்பட்டது மற்றும் 2022 ஆம் ஆண்டில் அதற்கான பணிகள் முடிக்கப்படவில்லை.

**பிஸ்கட் உற்பத்தி இயந்திரமொன்று செயலறறுக் காணப்பட்டமை**

போசாக்கான பிஸ்கட் வகையொன்றின் உற்பத்திக்காக கிரயம் ரூபா 209 மில்லியன் பெறுமதியான இயந்திரமொன்று 2020 ஆம் ஆண்டில் கம்பனியால் கொள்வனவு செய்யப்பட்டதுடன், இயந்திரத்தை நிறுவுவதற்கு ரூபா 19 மில்லியன் மற்றும் உத்தியோகத்தர்களின் பயிற்சிக்காக ரூபா 5 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிலும் பிஸ்கட் உற்பத்தி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

**போதனா மருத்துவ மனைகள**

**மூலப்பொருள் மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது முன்னர் அடையாளம் காணப்பட்ட வழங்குநர்களுக்கு ஆதரவாக தயாரிக்கப்பட்டிருந்தமை**

மருத்துவமனைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்ற நோயாளிகளுக்கு மற்றும் கனிஷ்ட ஊழியர்களுக்கு உணவளிப்பதற்கான தேவையான மூல உணவுப் பொருட்களுக்கான தேவைகள் உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது முன்பே அடையாளம் காணப்பட்ட வழங்குநர்களுக்கு ஆதரவாக தயாரிக்கப்பட்டிருந்தன. எனவே, இதைப் புரிந்து கொண்ட பல ஒப்பந்ததாரர்களினால் தமது சுயவிருப்பத்தின்படி மருத்துவமனைகளால் கட்டளை செய்யப்படாத மற்றும் குறைவாக கட்டளை செய்யப்பட்ட பொருட்களுக்கு

குறைந்த அலகு விலையும், அதிகமாக கட்டளை செய்யப்பட்ட பொருட்களுக்கு அதிகமான அலகு விலையும், சமர்ப்பிப்பதன் மூலம் திறந்த டெண்டர் நடைமுறை முறைகேடாக பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக, ஒவ்வொரு போட்டியாளருக்கும் சமமான வாய்ப்புகளை இழக்கப்பட்டுள்ளபோதிலும் இந்த நிலைமையை குறைப்பதற்காக யதார்த்தமான மதிப்பீடு தயாரிக்கப்படுவதற்கு சம்பந்தப்பட்ட மருத்துவமனை நிர்வாகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**அறுவைசிகிச்சை அறைகளில் அறுவை சிகிச்சை நுகர்பொருட்களின் இருப்பைக் கட்டுப்படுத்துவதில் குறைபாடுகள் காணப்பட்டமை**

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிறப்புறுப்பு சத்திரசிகிச்சை அறையில் சத்திரசிகிச்சை உபகரணங்களின் கையிருப்பு தொடர்பாக நடாத்தப்பட்ட மாதிரி கணக்காய்வின் போது, ரூபா 9 மில்லியன் பெறுமதியான 1,555 அலகுகள் சத்திரசிகிச்சை நுகர்பொருட்கள் இருப்பொன்று மோசடியான முறையில் பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டு பக்கத்திலுள்ள சத்திரசிகிச்சை அறை டீ இன் தையல் அறையின் கூரையில் மறைத்து வைக்கப்படடிருந்தன.ஆத்துடன் மேலும் 3 வகையான அறுவை சிகிச்சை நுகர்பொருட்கள் தொடர்பான 7 அலகுகள் முறைகேடாகவும் மோசடியாகவும் சிறுநீரக அறுவை சிகிச்சை அறையிலிருந்து அறுவை சிகிச்சை அறை பு இற்கும் அதன் பின்னர் அறுவை சிகிச்சை அறை னு இற்கும் அகற்றப்படடிருந்தமையால் இருப்புக் கட்டுப்பாட்டை மேலும் பலப்படுத்த வேண்டியிருந்தது.இதுகுறித்து, ஆழமான பரிசோதனை செய்யப்பட்டபோது பிறப்புறுப்பு சிறுநீர் அறுவை சிகிச்சை மையத்தில் ரூபா 5 மில்லியன் பெறுமதியான 3 வகையான சத்திரசிகிச்சை நுகர்பொருட்கள் அந்த சத்திரசிகிச்சை அறையில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைகளை விட அதிகமாக வழங்கப்படடிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**மருத்துவ வழங்கற் பிரிவு**

**மருத்துவ வழங்கல்கள் தரமிழந்தமை**

அரச வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட மருத்துவ விநியோகங்களுள் ரூபா.349 மில்லியன் பெறுமதியான மருந்துகள், அறுவை சிகிச்சை மற்றும் ஆய்வுக்கூடப் பொருட்கள் 2022 ஆம் ஆண்டில் தரத்தில் தோல்வி அடைந்ததன் அடிப்படையில் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டு இருந்ததுடன் மேலும் ரூபா. 32 மில்லியன் பெறுமதியான மருந்துகள் தரத்தில் தோல்வி அடைந்ததன் அடிப்படையில் தற்காலிகமாகப் பாவனையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

**தேசிய மருந்து தர உத்தரவாத ஆய்வுக்கூடத்தில் வசதிகள் போதிய அளவில் இல்லாமை.**

மருத்துவ விநியோக பிரிவினால் வைத்தியசாலைகளுக்கு மருந்துகளை வழங்குவதற்கு முன்னர் தேசிய மருந்துகள் ஒழுங்குறுத்தல் அதிகார சபையின் கீழ் செயல்படும் தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வு கூடத்தின் மூலம் மருந்துகளின் தரத்தினைப் பரீட்சிப்பு செய்ய

முடியாதிருந்தது. அதன் காரணமாக மருந்துகள் தரத்தில் தோல்வியுற்றதாக அறிக்கையிடப்படும் சந்தர்ப்பம் வரையில் அந்த மருந்துகளில் பாரிய அளவிலானவை நோயாளர்களினால் பயன்படுத்தப்பட்டிருந்தன.

**கொட்டிக்காவத்தையில் அமைந்துள்ள மருத்துவ விநியோக களஞ்சியசாலைக்கு ஏற்பட்டிருந்த சேதத்திற்குரிய காப்புறுதி முழுமையான ரீதியில் அறவிடப்பட்டிருக்காமை.**

மருத்துவ விநியோக பிரிவிற்குச் சொந்தமாக இருந்த இலக்கம் 53 கொட்டிக்காவத்தை களஞ்சிய சாலை 2016 மே 18 ஆம் திகதி வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்டிருந்த சேதம் ரூபா. 405 மில்லியன் எனக் கணக்கீடு செய்யப்பட்டு இருந்ததுடன் இன்னமும் அறவிடப்படுவதற்கு அல்லது நீக்கப்படுவதற்கு உள்ள தொகை ரூபா.199 மில்லியன் ஆகும். இந்த சேதம் தொடர்பில் உரித்து கோரப்பட வேண்டிய காப்புறுதி ரூபா. 320 மில்லியனாக இருந்த போதிலும் கிடைத்திருந்த தொகை ரூபா. 206 மில்லியன் ஆகும். இன்னமும் காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து கிடைக்க வேண்டிய. ரூபாய் 114 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**பைசர் தடுப்பூசிகள் காலாவதியானமை.**

உலக வங்கி கடன் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊழுஏஐனு 19 அவசர சிகிச்சை மற்றும் சுகாதார ஒழுங்கமைப்பு தயார்நிலை செயல்திட்டம் ( மூன்றாவது மேலதிக நிதியிடல்) மூலம் 2021 திசெம்பர் மாதம் தொடக்கம் 2022 ஜனவரி மாதம் வரையிலான காலப் பகுதியினுள் கொவிட் 19 தொற்றுநோயினை அடக்குவதற்காக அரச மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்பட்டு தொற்றுநோய் ஆய்வு நிறுவனத்திற்கு ரூபா. 16,102 மில்லியன் பெறுமதியான 13,999,050 பைசர் தடுப்பூசிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த தடுப்பூசிகளில் ரூபா. 10,736 மில்லியன் பெறுமதியான 7,951,710 தடுப்பூசிகள் 2022 ஜுலை 31 ஆம் திகதியில் காலாவதியாகி இருந்தன.

**மருத்துவ விநியோகப் பிரிவிற்கு விரிவான முகாமைத்துவ தகவல் ஒழுங்கமைப்பு ஒன்றினைத் தாபித்தல்.**

மருத்துவ விநியோக முகாமைத்துவ செயல்முறையை மிகவும் சிறப்பாக ஒழுங்கு செய்து கொள்வதற்கும், அரச வைத்தியசாலைகளுக்கு தேவையான மருந்துகளைத் தொடர்ச்சியாக விநியோகிப்பதற்கும், மருத்துவ விநியோக பிரிவிற்கு தேவையானது என அடையாளம் காணப்பட்டிருந்த முகாமைத்துவத் தகவல்கள் ஒழுங்கு அமைப்பை அபிவிருத்தி செய்தல், வழங்கிப் பொருத்துதல், நடைமுறைப்படுத்துதல், பயிற்றுவித்தல் மற்றும் பராமரித்தல் போன்ற மொத்த ஒப்பந்தங்களுக்குமாக ரூபா. 633 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த நடவடிக்கை இடை நடுவில் நிறுத்தப்பட்டு ஒப்பந்த பெறுமதி ரூபா. 102 மில்லியனுக்கு ஸ்வஸ்த எனும் பெயரில் புதிய தகவல் முகாமைத்துவ ஒழுங்கமைப்பொன்றைத் தாபிப்பதற்காக

வேறு தனியார் நிறுவனத்திடம் வழங்கப்பட்டிருந்தது.

**சரியான வெப்ப நிலையில் மருந்துகள் களஞ்சியப்படுத்தப்படாமை.**

கம்பஹா மற்றும் அனுராதபுர பிரதேச மருத்துவ விநியோகப் பிரிவுகளில் மற்றும் மீரிகம ஆதார வைத்தியசாலை, அனுராதபுர போதனா வைத்தியசாலை வளாகங்களில் 25 பாகை செல்சியஸிற்கு வெப்பநிலையில் வைக்க வேண்டிய 17 மருந்து உருப்படிகள் 30 பாகை செல்சியஸிற்கும் அதிக வெப்பநிலையின் கீழ் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஒவ்வாமை மற்றும் உயர் குருதி அழுத்த நோய்களுக்காகப் பயன்படுத்தப்படும் மருந்துகள் மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளும் அவற்றுள் காணப்பட்டன.

# சுதேச மருத்துவத் துறை

## கணக்காய்வு அவதானிப்புகள

- நிதி ஏற்பாடு மற்றும் பயன்பாடு
- விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படாது கொடுப்பனவு செலுத்துதல்.
- மோட்டார் சைக்கிள்களை முறையாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை.
- டீசல் மின் பிறப்பாக்கி இயந்திரத்தை வழங்கி பொருத்துவதற்கான நிதி குறித்த செயல்பாட்டுக்காக பயன்படுத்தப்பட்டிருக்காமை.
- மூலிகைக் கஞ்சி கடைகள் தாபிக்கப்பட்டு இருக்காமை.
- மனித வள முகாமைத்துவம்
- ஆயுர்வேத திணைக்களம்
    - திணைக்களத்தின் நிதி ஏற்பாட்டின் பயன்பாடு மற்றும் மீதி
    - பஞ்சகர்ம நிலையங்களின் கண்காணிப்பு
    - மேலதிக நேரக் கொடுப்பனவு கட்டுப்பாடு.
    - கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை
    - தேவைப்பாட்டினை சரியாக இனம் காணாது இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல்
    - வழிகாட்டிக் கோவையின் விதிகளுக்கு இணங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமை
    - முன்மொழியப்பட்ட முகாமைத்துவத் தரவு ஒழுங்கமைப்பினை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை.

- **ஆயுர்வேத மருத்துவ சபை**
  - **ஆயுர்வேத வைத்தியர்கள் ஒழுங்குறுத்தப்பட்டிருக்காமை.**
  - **மரணமடைந்த பாரம்பரிய வைத்தியர்கள் தொடர்பான சரியான தகவல்களை இற்றைப்படுத்தி பேணியிருக்காமை**
  - **ஆயுர்வேத வைத்தியர்களின் செயலாற்றுகை ஒழுங்குறுத்தப்பட்டிருக்காமை.**
- **இலங்கை ஆயுர்வேத மருந்து கூட்டுத்தாபனம்.**
  - **பொது திறைசேரியிடம் இருந்து கிடைத்திருந்த மூலதன மானியத்தினைப் பயன்படுத்தாது வங்கிக் கணக்கில் தடுத்து வைத்திருந்தமை**
  - **சுவையூட்டும் மருந்து உற்பத்திச் சாலையை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தமை**
  - **சர்வதேச மருத்துவ வலயத்தினை உருவாக்குவதற்கான செயல்திட்ட முன்மொழிவு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்காமை.**

# சுதேச மருத்துவத் துறை

சிங்கள மருத்துவத்தினால் அனைவருக்கும் ஆரோக்கியத்தினை வழங்குவதே சுதேச மருத்துவ பிரிவின் நோக்கமாகும். இலங்கையின் அடையாளத்தை காக்கும் வகையில் ஆராய்ச்சிகள் மற்றும் நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி மொத்த சமூகத்திற்கும் ஆரோக்கியத்தை வழங்கி மனித பலத்தினை அதிகரிப்பதன் மூலம் அவர்களின் தேசிய பொருளாதாரம் மற்றும் நீண்டகால அபிவிருத்தி இலக்கினை அடைவதற்கு பங்களிப்பு செய்வித்தல் நிறுவனத்தின் சேவைகளாகும் .

இந்த சேவைகளை நிறைவேற்றும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய முக்கிய பணிகளாவன,

- சுதேச வைத்திய முறைமையினைக் கட்டி எழுப்புவதற்கான கொள்கையினை உருவாக்குதல்.
- ஆரோக்கியமான சமூகத்தினைக் கட்டி எழுப்புவதற்காக சுதேச வைத்திய முறைமையை பிரசித்தப்படுத்துதல்.
- சுதேச வைத்திய முறைமையினை பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.
- உள்நாட்டு மூலிகை பயிர் செய்கையை விரிவுபடுத்தி மருந்து உற்பத்தியை அதிகரித்தல்.
- பாதுகாப்பான ஆயுர்வேத வைத்திய முறைமையை உருவாக்குவதன் மூலம் சுற்றுலா கைத்தொழிலை முன்னேற்றி அதனை நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வித்தல்.
- ஹோமியோபதி மருத்துவ முறையினை மேம்பாடு செய்தல்.

இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சின் நேரடி கண்காணிப்பின் கீழ் ஆயுர்வேத திணைக்களம், இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம், ஹோமியோபதி மருத்துவ சபை மற்றும் ஹோமியோபதி வைத்தியசாலைகள் என்பன செயல்படுத்தப்பட்டு வருவதுடன் ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் 10 ஆயுர்வேத போதனா மற்றும் ஆராய்ச்சி வைத்தியசாலைகளும் 7 மூலிகைப் பூங்காக்களும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம், சுதேச மருத்துவ முறை தொடர்பான தேசிய நிருவகம் மற்றும் ஆயுர்வேத மருத்துவ சபை எனும் 3 நிறுவனங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### நிதி ஏற்பாடு மற்றும் பயன்பாடு

மீளாய்வாண்டினுள் மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக சுகாதார அமைச்சின் செலவு தலைப்பின் கீழ் சுதேச மருத்துவ பிரிவின் மூலதன செலவுகளுக்காக ரூபா. 12 மில்லியனும் மீண்டெழும் செலவுகளுக்காக ரூபா. 356 மில்லியனும் நிதி ஏற்பாடு செய்யப்பட்டு இருந்ததுடன் மூலதன நிதி ஏற்பாடுகளில் 78 சதவீதம் அதாவது ரூபா. 9 மில்லியனும் மீண்டெழும் நிதி ஏற்பாடுகளில் 91 சதவீதம் அதாவது

ரூபா. 323 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது.

**விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படாது கொடுப்பனவு செலுத்துதல்.**

அரச நிர்வாக சுற்றறிக்கையின் அறிவுரைகளுக்கு முரணாக விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படாது வரவு ஏட்டினை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டில் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் என ரூபா. 8 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**மோட்டார் சைக்கிள்களை முறையாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை.**

2021 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வாகன பட்டியலுக்கு அமைய மூலிகை விவசாய செயல்திட்டத்திற்கு உரித்தாக இருந்த 48 மோட்டார் சைக்கிள்கள் ஆயுர்வேத திணைக்களத்திற்கு மற்றும் ஆயுர்வேத மருந்துக் கூட்டுத் தாபனத்திற்கு முறையாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது எனினும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த மோட்டார் சைக்கிளை்களை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**டீசல் மின் பிறப்பாக்கி இயந்திரத்தை வழங்கி பொருத்துவதற்கான நிதி குறித்த செயல்பாட்டுக்காக பயன்படுத்தப்பட்டிருக்காமை.**

ஆயுர்வேத மருந்து கூட்டுத்தாபனத்தினுள் புதிய டீசல் மின்பிறப்பாக்கி இயந்திரத் ஒன்றை வழங்கி பொருத்துவதற்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா. 5 மில்லியன் தொகை சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சினால் அந்த கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2023 மே 16 ஆம் திகதி வரையிலும் கூட்டுத்தாபனத்தினால் குறித்த தொகை அந்த பணிக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**மூலிகைக் கஞ்சி கடைகள் தாபிக்கப்பட்டு இருக்காமை.**

சுவ தரணி கஞ்சி கடைகள் செயல்திட்டத்தின் கீழ் மூலிகைக் கஞ்சி விற்பனை செய்யும் நடமாடும் குடில்கள் தயாரிக்கப்பட்டு மீளாய்வாண்டில் இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளினுள் பிரதேச செயலக மட்டத்தில் தாபிப்பதற்காக காலாண்டுக்கு ரூபா. 3 மில்லியன் வீதம் ரூபா. 5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த காலாண்டு இறுதி வரையிலும் ஒரு மூலிகை கஞ்சி கடையேனும் தாபிக்கப்பட்டு இருக்கவில்லை.

**மனித வள முகாமைத்துவம்.**

2022 செப்டம்பர் 8 ஆம் திகதி தொடக்கம் செயல்படுத்தப்படும் வகையில் புதிய ராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டதன் காரணமாக சுதேச மருத்துவ மேம்பாடு கிராம மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க

அமைச்சு ( தலைப்பு இலக்கம் 416 ) கலைக்கப்பட்டு இருந்தது எனினும் அந்த அமைச்சுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த 403 பதவிகளில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உண்மையான பதவி அணியினர் 345 பேர் பதவி அணி மீளாய்வின்றி இன்னமும் சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவ பிரிவின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## ஆயுர்வேத திணைக்களம்

### திணைக்களத்தின் நிதி ஏற்பாட்டின் பயன்பாடு மற்றும் மீதி

மீளாய்வாண்டில் 02 மூலதன செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா. மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா. 0.66 மில்லியன் அந்த செலவு விடயங்களின் நோக்கத்தைக் கொண்ட பணிகளுக்காக செலவிடப்படாது வேறு மூலதன செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டு இருந்ததுடன் ரூபா. 0.34 மில்லியன் நிதி ஏற்பாடு மீதியாக இருந்தது. 07 மூலதன செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா. 7 மில்லியன் நிதி ஏற்பாடுகளில் ரூபா. 4 மில்லியன் அதாவது 40 சதவீதத்திற்கும் 63 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் நிதி ஏற்பாடு மீதியாக இருந்தது. தேவைப்பாட்டினை சரியாக இனம் காணாது நிதி ஏற்பாட்டினை மாற்றிய காரணத்தினால் 05 மீண்டெழும் செலவு விடயங்களுக்கு வேறு செலவு விடயங்களில் இருந்து மாற்றப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் 26 சதவீதத்திற்கும் 67 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் நிதி ஏற்பாடு மீதியாக இருந்ததுடன் அடிப்படை மதிப்பீட்டில் ரூபா 412 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த மீண்டெழும் செலவு விடயங்களுக்கு வேறு செலவு விடயங்களில் இருந்து மாற்றப்பட்டிருந்த ரூபா. 0.90 மில்லியன் உள்ளடங்களாக ரூபா. 10 மில்லியன் நிதி ஏற்பாடு மீதியாக இருந்தது.

### பஞ்சகர்ம நிலையங்களின் கண்காணிப்பு

1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத மருத்துவமனை, ஆயுர்வேத மூலிகை உற்பத்தி நிலையம், ஆயுர்வேத மூலிகை நிலையம் அல்லது ஆயுர்வேத மருந்து களஞ்சியசாலையைப் பேணிச் செல்வதற்கு ஆயுர்வேத ஆணையாளரினால் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், உடல்சார் மற்றும் மசாஜ் மத்திய நிலையங்களைப் பதிவு செய்தல் தொடர்பான ஒழுங்கு விதிகள் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதால் உடல்சார் மருத்துவ முறைகள் பயன்பாடு ஒழுங்குறுத்தப்படாது காணப்பட்டது.

### மேலதிக நேரக் கொடுப்பனவு கட்டுப்பாடு.

2009 ஏப்ரல் 16 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 09.̇.2009 கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கையின் 2(ஊ) பந்தியின் பிரகாரம் நேரத்தினை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை நாள் சம்பளம் என்பன வழங்கப்படும் போது குறித்த காலம் விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், விரல் அடையாள இயந்திர பயன்பாடு இன்றி வரவு ஏட்டினை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டினுள் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை

நாள் சம்பளம் என ரூபா. 63 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை.**

ஆயுர்வேத சமூக சுகாதார மேம்பாட்டு வேலைத் திட்டம் 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரையில் முன்னோடி செயல்திட்டமாக அனுராதபுர மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு அதன் வெற்றிக்கு அமைய 2005 ஆம் ஆண்டு தொடக்கம் ஏனைய மாவட்டங்களுக்கு சேவையானது விரிவுபடுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அனுராதபுரம் மாவட்டத்தினுள் மட்டும் செயல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையில் ரூபா. 877 மில்லியன் செலவிடப்பட்டிருந்த இந்தச் செயல் திட்டத்திற்காக மீளாய்வாண்டில் தனியாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்காததுடன் அபிவிருத்தி வேலைத் திட்டத்தில் நோயாளர் சிகிச்சை சேவை செயல்திட்டத்தின் கீழ் சம்பளம், கொடுப்பனவு, ஒப்பந்த சேவைகள் உள்ளிட்ட மீண்டெழும் செலவுகளுக்காக மட்டும் நிதி ஏற்பாடு செய்யப்பட்டு 218 உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா. 148 மில்லியனும் ஏனைய செலவுகளுக்காக ரூபா. 5 மில்லியனுமாக மொத்தம் ரூபா. 153 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய ஏனைய மாவட்டங்களை உள்ளடக்கி விரிவுபடுத்தக் கூடியளவிற்கு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படாத இந்த செயல் திட்டத்திற்கு உரிய மீண்டெழும் செலவுகள் மட்டும் திணைக்களத்தின் செலவு விடயங்களின் மூலம் உள்ளடக்கப்பட்ட ஆயுர்வேத சமூக சுகாதார மேம்பாட்டு வேலைத் திட்டத்தினை தொடர்ந்தும் பேணிச் செல்லுவதற்கு நடவடிக்கை எடுத்தல் சர்ச்சைக்குரிய ஒரு விடயமாகும்.

**தேவைப்பாட்டினை சரியாக இனம் காணாது இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல்.**

தேவைப்பாட்டினை சரியாக இனம் காணாது மற்றும் சாத்தியக்கூறு ஆய்வு இன்றி 2015 மார்ச் 16 ஆம் திகதி ரூபா. 28 மில்லியன் செலவிடப்பட்டு பண்டாரநாயக்க ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 14 இயந்திரம் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா. 21 மில்லியன் பெறுமதியான 8 இயந்திரங்கள் இந்த அறிக்கையிடும் திகதி வரையிலும் பொருத்தப்பட்டிருக்கவில்லை. மொத்த செலவு ரூபா. 15 மில்லியனான 06 இயந்திரங்கள் உற்பத்திசாலைக்கு தேவையற்றவை என 2020 ஒக்டோபர் 05 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்த குழுவினால் அடையாளம் காணப்பட்டிருந்தது. சரியான ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளுக்கான ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்படாது இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தது என்பதனால் பொருத்தப்பட்டிருந்த இயந்திர உபகரணங்களும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைமையில் காணப்பட்டன. அதற்கமைய இந்த செயல் திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா. 28 மில்லியன் மொத்த தொகையும் பொருளாதார மற்ற செலவாகும்.

**வழிகாட்டிக் கோவையின் விதிகளுக்கு இணங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமை.**

மீளாய்வாண்டில் ஜூன் மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரையில் ஆயுர்வேத திணைக்களம் மற்றும் அதனுடன் இணைந்த 18 நிறுவனங்களில் பாதுகாப்பு சேவையினை வழங்குவதற்கான ரூபா. 75 மில்லியன் ஒப்பந்தம் தொடர்பில் அரச கொள்முதல் வழிகாட்டல் ஒழுங்குகளுக்கு இணங்கி நடவடிக்கை மேற்கொண்டு இருக்கவில்லை.

**முன்மொழியப்பட்ட முகாமைத்துவத் தரவு ஒழுங்கமைப்பினை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை.**

திணைக்களத்திற்காக முகாமைத்துவத் தரவு ஒழுங்கமைப்பினைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது எனினும், 2023 ஓகஸ்ட் மாத இறுதி வரையிலும் குறித்த தரவு ஒழுங்கமைப்பு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு அமைய திணைக்களம் மற்றும் அதன் இணைந்த நிறுவனங்கள், வைத்தியசாலைகள், வைத்திய மத்திய நிலையங்கள் உள்ளிட்ட மொத்த நிறுவன ஒழுங்கமைப்பிற்கும் குறித்த இற்றைப்படுத்தப்பட்ட முகாமைத்துவத் தரவுகளை வினைத்திறனுடன் பெற்றுக் கொள்வதற்கு சிரமமாக உள்ளதுடன் திணைக்களத்தின் பதவி அணியினரின் வரவு மற்றும் வெளிச் செல்லுகை கட்டுப்பாடு, செயலாற்றுகை கட்டுப்பாடு, சம்பள நிர்வாகம், மேலதிக நேரம் கொடுப்பனவு கட்டுப்பாடு, தனிநபர் கோவை நிர்வாகம் போன்ற கட்டுப்பாடுகள் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன.

**ஆயுர்வேத மருத்துவ சபை.**

**ஆயுர்வேத வைத்தியர்கள் ஒழுங்குறுத்தப்பட்டிருக்காமை.**

2014 ஒக்டோபர் 15 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 1884/36 கொண்ட அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவ சபை விதிகளின் பிரகாரம் சபையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து வைத்தியர்களும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை பதிவினை இற்றைப்படுத்த வேண்டிய போதிலும் பதிவினை இற்றைப்படுத்துவதற்காக சபையினால் முறையான வழிமுறை இனம் காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்காத காரணத்தால் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பதிவு 05 வருடங்களை விஞ்சிய 18,516 வைத்தியர்கள் தமது பதிவினைப் புதுப்பித்திருக்கவில்லை.

**மரணமடைந்த பாரம்பரிய வைத்தியர்கள் தொடர்பான சரியான தகவல்களை இற்றைப்படுத்தி பேணியிருக்காமை.**

2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மருத்துவ சபையில் பதிவு செய்த வைத்தியர்களின் எண்ணிக்கை 26,650 எனவும், மரணம் அடைந்தவர்களின் எண்ணிக்கை 3,827 எனவும் அறிக்கையிடப்பட்டிருந்தது எனினும் மரணம் அடைந்த பாரம்பரிய வைத்தியர்கள் தொடர்பான சரியான தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டு பெற்றுக் கொள்ளும் வழிமுறை ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் மரணம் அடைந்த வைத்தியர்களின் பதிவினை இரத்துச்

செய்து அது பற்றி பொது மக்களுக்கு அறிவிப்புச் செய்யும் வழிமுறையும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதால் குறித்த பதிவு பத்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதற்கான இடம் காணப்பட்டது.

**ஆயுர்வேத வைத்தியர்களின் செயலாற்றுகை ஒழுங்குறுத்தப்பட்டிருக்காமை.**

ஆயுர்வேத வைத்தியர்கள், பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்கள், ஆயுர்வேத தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் மருந்தாளர்களை பதிவு செய்தல், அவர்களுக்கான பரீட்சைகளை நடாத்துதல், பரீட்சை பெறுபேறுகளை வழங்குதல் போன்றவை ரீதியிலான செயல்பாடுகளின் பணிகளை மதிப்பீடு செய்வதற்கு செயலாற்றுகை சுட்டியினை அமைத்து செயலாற்றுகை மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### இலங்கை ஆயுர்வேத மருந்து கூட்டுத்தாபனம்.

**பொது திறைசேரியிடம் இருந்து கிடைத்திருந்த மூலதன மானியத்தினைப் பயன்படுத்தாது வங்கிக் கணக்கில் தடுத்து வைத்திருந்தமை.**

2018, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மூலதன மானியங்களாகப் பொது திறைசேரியிடம் இருந்து கிடைத்திருந்த ரூபா. 76 மில்லியனில் ரூபா. 31 மில்லியன் அதாவது 41 சதவீதம் 2023 ஓகஸ்ட் 23 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாது வங்கிக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

**சுவையூட்டும் மருந்து உற்பத்திச் சாலையை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தமை.**

நோயாளர்களின் சுவையூட்டும் மருந்து தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்தல் மற்றும் ஆரோக்கியமான சமூகத்தினைக் கட்டி எழுப்புதல் ஆகிய நோக்கங்களுடன் ரூபா. 46 மில்லியன் மதிப்பீட்டு செலவுடன் சுவையூட்டும் மருந்து உற்பத்தி சாலையினை நிர்மாணித்தல், ரூபா. 37 மில்லியன் திறைசேரி நிதியினைக் கொண்டு 2018 ஓகஸ்ட் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2020 ஜனவரி 02 ஆம் திகதி வரையில் ரூபா. 12 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிப்பில் 30 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பலவீனம் காரணமாக அத்தினம் தொடக்கம் நிர்மாணிப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. 2023 ஓகஸ்ட் 23 ஆம் திகதியில் 05 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் குறித்த நிர்மாணிப்பு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு இருக்காதுடன் அந்த செயல் திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த தொகை பொருளாதாரமற்றதாகக் காணப்பட்டது.

**சர்வதேச மருத்துவ வலயத்தினை உருவாக்குவதற்கான செயல்திட்ட முன்மொழிவு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்காமை.**

ஆசிய நாடுகளின் காணப்படும் பாரம்பரிய மருத்துவ முறைகளை ஒன்றிணைத்து உள்நாட்டு மக்களுக்கு போன்றே வெளிநாட்டவர்களுக்கும் சுய விருப்பில் சிகிச்சை மற்றும் ஔடதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில்

சர்வதேச மருத்துவ வலயத்தினை உருவாக்குவதற்காக செயல்திட்ட முன்மொழிவொன்று 2022 ஜனவரி 10 ஆம் திகதி தேசிய மருத்துவ இராஜாங்க அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 100 மில்லியனான செயல்திட்ட மொத்த செலவில் ரூபா. 40 மில்லியன் திறைசேரி நிதிகளில் இருந்தும் ரூபா 60 மில்லியன் கூட்டுத்தாபனத்தின் மூலமும் ஏற்றுக் கொள்வதற்கு அதில் முன்மொழியப்பட்டிருந்தது. எனினும் அதற்காக பொதுத் திறைசேரியின் அனுமதி மற்றும் ரூபா 40 மில்லியன் நிதி வழங்கப்பட்டிருக்காது பின்புலத்தில் செயல் திட்டத்திற்கான மொத்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்படாது முறையற்ற வகையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட திட்டமிடல் கலைஞருக்கு ரூபா 02 மில்லியன் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

# புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகார சபை

## கணக்காய்வு அவதானிப்புகள

- புதிய வரிவிதிப்பு சூத்திரம் சட்டமாக இயற்றப்பட்டிருக்காமை
- அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு குறித்த உற்பத்தியைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்கான இடங்களை ஒழுங்குறுத்த இயலாமை.
- சுகாதார எச்சரிக்கைகளை மாற்றுவதன் சாதகமான விளைவினை அதிகரிப்பதற்கு அதிகார சபை தவறியிருந்தமை

# புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகார சபை

**புதிய வரிவிதிப்பு சூத்திரம் சட்டமாக இயற்றப்பட்டிருக்காமை.**

அதிகார சபையின் அறிக்கைகளுக்கு அமைய தற்போது புகையிலை உற்பத்திக்கு இலங்கையில் காணப்படும் வரி விதிப்பு அமைப்பானது முறையற்றது மற்றும் சிக்கலானது எனவும், அது பல வரி வகைகளின் கலவையைக் கொண்டுள்ளது எனவும், 2016 ஆம் ஆண்டில் சிகரட்டின் மீதான கலால் வரி வருமானம் அரசின் மொத்த வருமானத்தில் 7.3 சதவீதமாக இருந்ததுடன் அது 2020 ஆம் ஆண்டு வரையில் 3.1 சதவீதம் வரையில் வீழ்ச்சி அடைந்திருந்த காரணத்தால் அதிகார சபையினால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ரூபா ஒரு மில்லியன் செலவிடப்பட்டு புகையிலைக்கான புதிய வரி விதிப்பு சூத்திரம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் 2021 ஆம் ஆண்டில் ரூபா. 92 பில்லியனாகக் காணப்பட்ட சிகரெட் மீதான கலால் வரி வருமானம் 2026 ஆம் ஆண்டளவில் ரூபா.125 பில்லியன் வரையில் அதிகரித்துக் கொள்ளக்கூடிய வகையிலும், அது புகையிலை பயன்பாடு 1.1 சதவீதம் வீழ்ச்சிக்கு மற்றும் வருடாந்த அரச வருமானம் சுமார் 6 சதவீத அதிகரிப்பிற்கும் காரணமாகும் எனவும் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், புதிய வரி விதிப்பு சூத்திரம் இந்த அறிக்கை தினம் வரையில் சட்டமாக இயற்றப்பட்டிருக்கவில்லை.

**அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு குறித்த உற்பத்தியைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்கான இடங்களை ஒழுங்குறுத்த இயலாமை.**

2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகார சபை சட்டத்தின் பிரகாரம் புகையிலை உற்பத்தி அல்லது மதுபான உற்பத்தியைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டுள்ள இடத்தினுள் அந்த உற்பத்தி விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டுள்ளது என்பதை நிச்சயமாக அறிமுகப்படுத்தி மற்றும் அவற்றின் விலைகளை குறிப்பிட்டு சரியான அளவில் விளம்பரத்தைக் காட்சிப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், மேலே கூறப்பட்ட பிரிவிற்கு உரிய வகையில் கட்டளை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அதற்கு அமைய சட்டத்தின் கீழான அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு குறித்த உற்பத்தியை பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டுள்ள இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரங்களை ஒழுங்குறுத்துவதற்கு இயலாதிருந்தது.

**சுகாதார எச்சரிக்கைகளை மாற்றுவதன் சாதகமான விளைவினை அதிகரிப்பதற்கு அதிகார சபை தவறியிருந்தமை.**

புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய அதிகார சபை சட்டத்தின் பிரகாரம் சிகரெட் மற்றும் புகையிலை உற்பத்தியாளர்களுக்கு சுகாதார எச்சரிக்கை ஆறு மாதத்திற்கு ஒரு தடவை மாற்றப்பட்டு சிகரெட் பைக்கெட், கொள்கலன் அல்லது அட்டைப் பெட்டியின் மீது காட்சிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் மேலே குறிப்பிடப்பட்ட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட 08 சுகாதார எச்சரிக்கை சேர்வையை விரிவு படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டில் 10 சுகாதார எச்சரிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவற்றை வகைப்படுத்தல் அல்லது வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்படுதல் மேற்கொள்ளப்பட்டிருக்காதுடன் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த அறிக்கை திகதி வரையிலுமே 08 சுகாதார எச்சரிக்கைகள் மாற்றப்படுதலின் வெற்றிகரமான பலனை அதிகரித்துக் கொள்வதற்கு அதிகார சபை தவறியிருந்தது.

# தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறை

## கணக்காய்வு அவதானிப்புகள்

- தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு
  - வேலைவாய்ப்பை ஒழுங்குபடுத்துவதற்கான தேசிய கொள்கை மற்றும் தேசிய மனித வலு மற்றும் வேலை வாய்ப்புக் கொள்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்காமை
  - வெற்றியாளர்களுக்கு குறைபாடுடனான விருதுகளை வழங்குதல்
- தொழில் திணைக்களம்
  - ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உரிய தொகை தனியார் கணக்குகளில் வரவு வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை.
  - தொழிற்சாலை உரிமையாளர்கள் அல்லது வதிவிடவாளர்களாக ஆவதற்கு பதிவு செய்யப்பட்டிருக்காமை
  - தனியார் ஊழியர் சேமலாப நிதியத்தின் கண்காணிப்பு ஒழுங்கான முறையில் இடம் பெற்றிருக்காமை
  - தொழில் சங்க பிரிவை நாட்டின் அபிவிருத்தியில் ஈடுபடுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்திருக்காமை.
- மனித வலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களம்.
  - மனித வள தரவு வங்கி ஒன்றினைத் தாபிக்கும் செயல் திட்டத்தின் முன்னேற்றம் பலவீனமடைதல்.
- சிரம வாசனா நிதியம்
  - சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு இயலாதிருந்தமை.

- **ஊழியர் சேமலாப நிதியம்**
    - **அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு வரவு வைக்கப்படாத பண மீதி காணப்பட்டமை**
    - **மரணமடைந்த அங்கத்தவர்களின் சார்பில் கிடைக்க வேண்டிய நன்மை தொகை செலுத்தப்படாமை.**
    - **ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் செயல்பாடின்றி காணப்பட்டமை**
- **சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்.**
    - **சமுர்த்தி பயனாளிகளை வலுப்படுத்தி இருக்காமை.**
    - **உதவித் தொகை நீண்ட காலமாக வங்கி கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருத்தல்.**
    - **திவி நெகும சனசமூக வங்கி மற்றும் சனசமூக வங்கி சங்கம்.**
    - **சமர்த்தி பயனாளிகளை வலுப்படுத்தும் நோக்கத்தினின்றும் விலகி, இலாப நோக்கில் செயல்பட்டிருந்தமை.**
- **திவி நெகும அபிவிருத்தி நிதியம்.**
    - **திவி நெகும அபிவிருத்தி நிதியம் தாபிக்கப்பட்டிருக்காமை**
    - **முகாமைத்துவ மொடியூல் சார்ந்த தரவு ஒழுங்கமைப்பை அபிவிருத்தி செய்யும் மொடியூல் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை**
- **ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்**
    - **அங்கத்துவ பணம் அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு வரவு வைக்கப்படாது வேறு கணக்குகளில் பணம் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை.**
    - **நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் கிடைத்த தொகை அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு வரவு வைக்கப்படாது வேறு கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை.**
    - **மரணக்கொடைத் தொகை செலுத்தப்படாமை.ள**

# தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறை

நாட்டின் உயிர் நாடி உழைக்கும் மக்களே ஆவர். திருப்திகரமான பணிச் சூழலில் தமது பணிகளை நிறைவேற்றுவது ஆரோக்கியமான தொழில் படையினை உருவாக்குவதற்குக் காரணமாக உள்ளதுடன் அதன் மூலம் நாட்டின் உற்பத்தி மற்றும் அதே போன்று தரத்தினை அதிகரிக்க இயலும். தொழில் விடய பரப்பிற்குள் கொள்ளப்படும் அனைத்து சுற்றறிக்கைகள், சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள் விதிப்பிரமாணங்கள் என்பன மீளாய்வு செய்யப்பட்டு தற்காலத்திற்குப் பொருத்தமான மற்றும் ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுதல் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மேலதிகமாக ஊழியர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் பங்களிப்பு ஓய்வூதிய முறைமையை அறிமுகப்படுத்துதல் தொழிலாளர்களின் தொழில் திறன் மற்றும் திறமைகளை வளர்த்து, சேவை நிலையங்களில் உயர் தரத்தினை கொண்ட சுகாதார மற்றும் ஊழியர் பாதுகாப்பு முறையை பேணி தொழில் வழங்குநர் ஊழியர் நட்புறவு அடிப்படையில் வினைத்திறனுடன் வேலைத் திட்டங்களை ஊக்குவித்தலை நோக்காகக் கொண்ட தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரிவின் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் நிறைவேற்றப்பட வேண்டி இருந்தன.

இதற்கமைய இந்த பிரிவுக்கு உரிய தொழில் அமைத்து மற்றும் துணைக்கலாம் மற்றும் நியதி சட்ட சபைகள் மற்றும் 05 அரசுக்கு சொந்தமான வணிகங்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட பணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட ஒரு சில விடயங்கள் கீழே பொழிப்பாக்கம் செய்யப்பட்டு காட்டப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சில் 2022 ஆம் ஆண்டுக்காக ரூபா. 1,775 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா. 1,671 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதில் ரூபா. 104 மில்லியன் மீதியாக இருந்தது.

## தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு

**வேலைவாய்ப்பை ஒழுங்குபடுத்துவதற்கான தேசிய கொள்கை மற்றும் தேசிய மனித வலு மற்றும் வேலை வாய்ப்புக் கொள்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்காமை.**

தொழிலில் ஈடுபடுவதற்கான ஒழுங்கு பொருட்கள் தொடர்பான தேசிய கொள்கை மற்றும் தேசிய மனித வலு மற்றும் தொழில் பாதுகாப்பு கொள்கை என்பன 2022 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**வெற்றியாளர்களுக்கு குறைபாடுடனான விருதுகளை வழங்குதல்**

2020 ஆம் ஆண்டில் தேசிய உற்பத்தித் திறன் விருது போட்டியில் வெற்றியாளர்களுக்கு வழங்குவதற்கான 685 விருது கோப்பைகளுக்காக ரூபா. 5 மில்லியன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2022 ஜூன் 15 ஆம் திகதி விருதுகள் களஞ்சியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தன. விருதுகளைப் பெற்றுக் கொண்டு ஒரு மாதத்திற்கு பின்னர் அவை சரியான விவரக் குறிப்புகளுடன் காணப்படுகின்றனவா என அறிக்கை கோரப்பட்டிருந்ததுடன், களஞ்சியசாலைக்கு வழங்கப்பட்டிருந்த 33 விருது அலகுகள் தவிர ஏனையவை குறைபாடுகளுடன் உள்ளன என அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கையில் இந்த விருது கோப்பைகளை வெற்றியாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## தொழில் திணைக்களம்.

**ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உரிய தொகை தனியார் கணக்குகளில் வரவு வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை.**

மீளாய்வாண்டில் தொழில் திணைக்களத்திற்கு மற்றும் மாவட்ட தொழில் அலுவலகங்களுக்கு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உரிய மொத்தம் ரூபா. 283 மில்லியன் தொகை குறித்த தனி கணக்குகளுக்கு வரவு வைக்கப்படாது பொது வைப்பு கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

**தொழிற்சாலை உரிமையாளர்கள் அல்லது வதிவிடவாளர்களாக ஆவதற்கு பதிவு செய்யப்பட்டிருக்காமை.**

தொழிற்சாலை உரிமையாளர் அல்லது வதிவிடவாளர்கள் ஆவதற்கு பதிவு செய்யப்பட வேண்டி இருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டு இறுதி வரையில் மாவட்ட தொழிற்சாலை பொறியியல் அலுவலகத்தினால் பேணிச் செல்லப்பட்ட கோவை எண்ணிக்கை 32,948 இல் புதிய விதி பிரமாணங்களுக்கு அமைய பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை 3,153 ஆகும். இதற்கமைய ஆகக் குறைந்த பதிவு செய்தல் கட்டணம் ரூபா. 1,000 எனக் கருதுமிடத்து பதிவு செய்யப்படாத தொழிற்சாலைகளுக்காகப் பெற்றுக் கொள்ளப்படக் கூடிய பதிவு செய்தல் கட்டணமான ஆகக் குறைந்த ரூபா. 30 மில்லியனை திணைக்களம் இழந்திருந்தது.

**தனியார் ஊழியர் சேமலாப நிதியத்தின் கண்காணிப்பு ஒழுங்கான முறையில் இடம் பெற்றிருக்காமை.**

ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பங்களிப்பு ஓய்வூதிய முறை என்பவற்றின் நிர்வாகம் மற்றும் கண்காணிப்புக்காக தொழில் திணைக்களம் தனியார் பிரிவு ஒன்றைத் தாபித்திருந்த போதிலும் இந்த பிரிவில் இருந்து அவை தொடர்பாக முறையான கண்காணிப்பு இடம்பெற்றிருக்கவில்லை. இந்த நிதியம் தொடர்பாக 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையில் 291 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப் பட்டிருந்ததுடன், அவற்றில் 68 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டிருக்க

வில்லை. சட்டத்தின் பிரகாரம் ஏதேனும் ஒரு மாத பங்களிப்புத் தொகை அடுத்த மாதத்தின் இறுதி தினத்தில் செலுத்தப்பட வேண்டி போதிலும் ஒரு நிறுவனத்தினால் பேணப்பட்டு வரும் தனியார் ஊழியர் சேமலாப நிதியத்திற்காக ஒழுங்காக அங்கத்துவப் பணம் வரவு வைக்கப்படாததால் 2019 - 2021 காலத்திற்கு உரிய ரூபா. 108 மில்லியன் மிகைவிதிப்பு செலுத்தத் தவறியிருந்தது.

**தொழில் சங்க பிரிவை நாட்டின் அபிவிருத்தியில் ஈடுபடுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்திருக்காமை.**

2022 ஜுலை மாதம் 22 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானிக்கு அமைய தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் கீழுள்ள பணிகள் மற்றும் கடமைகளாக தொழில் சங்கங்களைப் பதிவு செய்தல், அனைத்து அரச மற்றும் தனியார் பிரிவுகளில் தொழில் சங்கங்களின் நடவடிக்கைகளை நாட்டின் அபிவிருத்திக்கு ஈடுபடுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல் என்பவை செயல்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்படவில்லை.

**மனித வலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களம்.**

**மனித வள தரவு வங்கி ஒன்றினைத் தாபிக்கும் செயல் திட்டத்தின் முன்னேற்றம் பலவீனமடைதல்.**

தொழிலாளர் சந்தை தரவுகளை சேகரிப்பதை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி செயலகத்தின் மூலம் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த இளைய மனித வளத் தரவு வங்கி ஒன்றினை தாபித்தலின் முன்னேற்றம் தொடர்பாக மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு இருந்த அவதானிப்புகளுக்கு அமைய ஒழுங்கமைப்பின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்ற முடியவில்லை என்பதால் மென்பொருளை தாபித்ததன் நோக்கத்தினை எட்டுவதற்கு முடியாதிருந்தது. இந்த செயல் திட்டத்திற்காக மீளாய்வாண்டு வரையில் திணைக்களத்தினால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ரூபா 84 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் கணணி உதிரிப் பாகங்கள், வீட்டு உபகரணங்கள் மற்றும் மரத் தளபாடங்கள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக மேலே கூறப்பட்ட செயல் திட்டத்தின் கீழ் ரூபா 84 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**சிரம வாசனா நிதியம்.**

**சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு இயலாதிருந்தமை.**

தங்கியிருப்போரின் நலனோம்பல் நடவடிக்கைகளுக்காக ஒன்றிணைந்த நிதியத்தில் இருந்து மீளாய்வாண்டுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா. 38

மில்லியன் தொகையில் ரூபா. 5 மில்லியன் மட்டும் கிடைத்திருந்ததுடன் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரையில் ஒன்றிணைந்த நிதியத்தில் இருந்து நலனோம்பல் நடவடிக்கைகளுக்காக கிடைக்க வேண்டிய தொகை ரூபா. 379 மில்லியன் ஆகும். அதற்கு அமைய திறைசேரியிலிருந்து குறிப்பிடத்தக்க வகையில் நிதியினைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதால் சேவையில் ஈடுபட்டுள்ளோரின் மற்றும் அவர்களின் தங்கியிருப்போரின் நலனோம்பல்களுக்காக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாது இருந்தது.

**ஊழியர் சேமலாப நிதியம்.**

**அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு வரவு வைக்கப்படாத பண மீதி காணப்பட்டமை.**

2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவ கணக்கு மீதியான ரூபா. 3,380,617 மில்லியனில் ரூபா. 63,571 மில்லியன் தொகை பல்வேறு காரணங்களின் அடிப்படையில் ஒவ்வொரு அங்கத்தவர் கணக்குகளிலும் வரவு வைக்கப்படாது காணப்பட்டது.

**மரணமடைந்த அங்கத்தவர்களின் சார்பில் கிடைக்க வேண்டிய நன்மை தொகை செலுத்தப்படாமை.**

2022 ஆம் ஆண்டு ஜூன் 20 ஆம் திகதியில் பிரதான அலுவலகத்தில் இடம்பெற்ற செலுத்தப்படாத மரண நன்மை விண்ணப்ப படிவங்களின் எண்ணிக்கை 1,101 ஆக இருந்ததுடன் அதில் 220 விண்ணப்ப படிவங்கள் அவை கையளிக்கப்பட்ட தினத்தில் இருந்து 10 வருடங்களுக்கும் 15 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் தொட்டும் 27 விண்ணப்ப படிவங்கள் 4 வருடங்களுக்கும் 13 வருடங்களுக்கும் இடையிலும் 8 விண்ணப்ப படிவங்கள் 6 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் தொட்டும் காணப்படுவதுடன் 210 விண்ணப்ப படிவங்கள் நிராகரிக்கப்பட்டும் இருந்தன. இந்த செலுத்தப்படாத மரண நன்மைகளின் பெறுமதி எவ்வளவு என்பது நிதி கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் செயல்பாடின்றி காணப்பட்டமை.**

நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு புதிய அடையாள அட்டையினை வழங்குதல் மற்றும் மீள பதிவு செய்தல் நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட செயல் திட்டத்திற்காக ரூபா. 13 மில்லியன் செலவிடப்பட்டு 15,000 அட்டைகளும், ரூபா. 18 மில்லியன் செலவிடப்பட்டு 35 கணக்கு மீதி சரிபார்த்தல் இயந்திரங்களும் (KIOSK) கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கொள்வனவு செய்யப்பட்ட இந்த 15,000 அட்டைகள் குறித்த செயலுக்காகப் பயன்படுத்தப்படாது கணக்காய்வு தினம் வரையிலும் செயலற்று தகவல் தொழில்நுட்ப பிரிவில் சேகரித்து வைக்கப்பட்டிருந்ததுடன் 35 இயந்திரங்களில் 2 இயந்திரங்கள் அகற்றப்பட்டிருந்தது. செயல்படாத 33 இயந்திரங்களில் 25 இயந்திரங்களை

அகற்றுவதற்காகப் பிரதான அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. இந்த இயந்திரங்கள் தற்போது செயல்படுத்தப்படாததால் நிதியத்தின் நிதி செயல்பாடின்றி காணப்பட்டது.

**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்.**

**சமுர்த்தி பயனாளிகளை வலுப்படுத்தி இருக்காமை.**

2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் அரசாங்கத்தினால் சமுர்த்தி பயனாளிகளை வலுப்படுத்துவதற்காக பல்வேறு சமுர்த்தி அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக ரூபா. 1,260 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் வலுப்படுத்துதல் தொடர்பான தீர்மானமான இலக்கு அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. 1995 ஆம் ஆண்டு அடையாளம் காணப்பட்டிருந்த சமுர்த்தி பயனாளிகள் 312,307 பேர் 2023 ஆம் ஆண்டு வரையில் 29 வருடங்கள் கடந்து இருந்த போதிலும், வலுப்படுத்தப்படாது இன்னமும் நிவாரணம் பெற்றுக் கொண்டுள்ளனர்.

**உதவித் தொகை நீண்ட காலமாக வங்கி கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருத்தல்.**

சனசமூக வங்கிக்கு மாதாந்தம் மாற்றப்பட்டு வரும் சமுர்த்தி பயனாளிகளின் உதவித் தொகை ஒரு சில சமுர்த்தி பயனாளிகளால் மாதாந்தம் பெற்றுக் கொள்ளப்படாது நீண்ட காலமாக தமது வங்கிக் கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது 10 சனசமூக வங்கிகளில் 41 பிரிவுகளில் 2,433 சமர்த்தி பயனாளிகளின் சேமிப்புக் கணக்குகளில் அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்த தொகை ரூபா. 60 மில்லியன் ஆகும்.

**திவி நெகும சனசமூக வங்கி மற்றும் சனசமூக வங்கி சங்கம்.**

**சமர்த்தி பயனாளிகளை வலுப்படுத்தும் நோக்கத்திநின்றும் விலகி, இலாப நோக்கில் செயல்பட்டிருந்தமை.**

2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் 1,089 சனசமூக வங்கிகளில் 4,115,100 அங்கத்தவர்களின் மொத்த வைப்புத் தொகை ரூபா. 155 பில்லியன் ஆக இருந்ததுடன் அதில் பயனாளிகளுக்கு பெற்றுக் கொடுத்த கடன் தொகைகளில் நிலுவை மீதி சுமார் ரூபா. 68 பில்லியன் ஆகும். 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூ. 149 பில்லியன் உயர் வட்டி வீதத்திற்கு முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் சமுர்த்தி பயனாளிகளின் சேமிப்புகளுக்காக செலுத்தப்பட்டிருந்தது 03 சதவீதமான குறைந்த வட்டியாகும். இதற்கமைய சமுர்த்தி பயனாளிகளை வலுப்படுத்துவதை நோக்காகக் கொண்டு சனசமூக வங்கி ஒழுங்கமைப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், தற்போது சமுர்த்தி பயனாளிகளை வலுப்படுத்தும் நோக்கத்திநின்றும் விலகி, இலாப நோக்கில் செயல்பட்டு இருந்தது.

**திவி நெகும அபிவிருத்தி நிதியம்.**

**திவி நெகும அபிவிருத்தி நிதியம் தாபிக்கப்பட்டிருக்காமை.**

திவி நெகும கட்டளை சட்டத்தின் பிரகாரம் திவி நெகும அபிவிருத்தி நிதியம் தாபிக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் திணைக்களத்துக்கு கிடைக்கும் அனைத்து மானியங்களும், கொடைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வங்கி மற்றும் வங்கி சங்கத்தினால் கொடை வேறு பங்களிப்பு பணம், வங்கிகளின் இலாபத்தில் அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் தொகை சதவீதமாக அனைத்து பெறுகைகளின் ஒன்றிணைந்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தின் அனுமதியுடன் திவி நெகும அபிவிருத்தி நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் திவி நெகும அபிவிருத்தி நிதியம் இதுவரையில் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**முகாமைத்துவ மொடியூல் சார்ந்த தரவு ஒழுங்கமைப்பை அபிவிருத்தி செய்யும் மொடியூல் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.**

2012 ஆம் ஆண்டில் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டிருந்த சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட முகாமைத்துவ மொடியூல் சார்ந்த தரவு ஒழுங்கமைப்பை அபிவிருத்தி செய்யும் “e” - சமுர்த்தி செயல்திட்டத்திற்கு 2016 ஆம் ஆண்டில் ரூபா. 4 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், 2019ஆம் ஆண்டில் மீண்டும் CRM மொடியூலுக்காக ரூபா. 4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2023 ஆம் ஆண்டு வரையிலும் மொடியூல் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்.**

**அங்கத்துவ பணம் அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு வரவு வைக்கப்படாது வேறு கணக்குகளில் பணம் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை.**

சபையினால் 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் 3,912 சேவை வழங்குனர்களுக்கு உரியதாக 2021 ஏப்ரல் 28 ஆம் திகதியில் அறவிடப்பட்டிருந்த ரூபா. 581 மில்லியன் மொத்த அங்கத்துவ பணம் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபை சட்டத்தின் 16 (3) ஆம் பிரிவின் பிரகாரம் அந்தந்த அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு வரவு வைக்கப்படாது வேறு தற்காலிக கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. இதனுள் 7 வருடங்களுக்கும் 41 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் தொட்டு பேணப்பட்டு வரும் மீதி ரூபா. 91 மில்லியன் ஆகும்.

**நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் கிடைத்த தொகை அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு வரவு வைக்கப்படாது வேறு கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை.**

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபை சட்டத்தின் பிரகாரம் ஏதேனும் ஊழியர் தொடர்பாக சபையினால் நீதிமன்ற நடவடிக்கை மூலம் 1985 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் அறவிடப்பட்டிருந்த ரூ. 1,511 மில்லியன்

பெறுமதியான அங்கத்துவப் பணம் மற்றும் மிகை விதிப்பு பணத்தில் ரூபா. 71 மில்லியன் தொகை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் ஊழியர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு வரவு வைக்கப்படாது இருந்தது.

**மரணக்கொடைத் தொகை செலுத்தப்படாமை.**

மீளாய்வாண்டின் இறுதியில் உரிமை கோரப்படாத மரணக்கொடையாக 1,207 அங்கத்தவர்களுக்கு உரியதான ரூபா. 21 மில்லியன் செலுத்தப்பட வேண்டி இருந்தது. 1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் மரணமடைந்த நபர்களுக்கு உரியதாக செலுத்தப்பட வேண்டிய மரணக்கொடை பயனாளிகளின் காலப் பகுப்பாய்வினுள் 07 வருடத்திற்கும் 20 வருடத்திற்கும் அதிகமான கால வீச்சுக்கு உரிய 786 பயனாளிகளுக்கு செலுத்தப்பட வேண்டிய மரணக்கொடைத் தொகை ரூபா. 9 மில்லியன் ஆகும்.

# கைத்தொழில், உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப துறை

## கணக்காய்வு அவதானிப்புகள

- கைத்தொழில் அமைச்சு
  - நிதியேற்பாட்டைப் பயன்படுத்துதல
  - புத்தல கைத்தொழில் பேட்டையில் காணி பயன்பாடு
  - ரயிகம் பசுமை கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி சிறப்புக் கைத்தொழில் வலய செயல்திட்டத்தின் நிர்மாணிப்பு முன்னேற்றம்.
  - கைத்தொழில் பேட்டைகளில் உற்பத்தி நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட குறைந்த கொள்ளளவில் பேணிச் சென்றமை
- இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்தி சபை.
  - ரோபோ தொழில்நுட்பத்திற்கான சிறந்த மத்தியநிலையம் செயல்பாடின்றி இருந்தமை
  - மூங்கில் மரப் பொருட்கள் உற்பத்தி நிறுவனம் செயல்பாடின்றி இருந்தமை
- இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம்
- இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
  - குத்தகை வருமானத்தினை அறவிட்டிருக்காமை
- பரந்தன் கெமிக்கல் கம்பனி
  - கோஸ்டிக் சோடா பைகளைப் பயனின்றி கொள்வனவு செய்தல்.
- தேசிய அருங்கலை பேரவை.
  - பராமரிப்பு இல்லாமையால் ஆளி கன்றுகள் அழிவடைந்தமை
  - சிங்கள கலை கிராமத்தினை பயன்படுத்தாமை

- இலங்கை கைப்பணிச் சபை
    - நடைமுறை கணக்குகளில் செயலற்று பணத்தினை தடுத்து வைத்திருத்தல்.
    - சொத்துக்களின் சட்ட ரீதியான உரிமைத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை
    - பௌதிக ரீதியில் காணப்படாத இருப்புகள் கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்தமை
- தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை.
    - வைப்புக்கள் அறவிடப்பட்டிருக்காமை
    - சேகரிக்கப்பட்ட தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டிருக்காமை.
- இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனம்.
    - காணி குறை பயன்பாட்டுடன் காணப்பட்டமை
- கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்
    - மருந்துகளை ஆய்வு கூடத்திற்கு பயன்படுத்தாமை
    - மூன்றாம் தரப்பினரின் பெட்ரோலிய உற்பத்தியில் பரீட்சிப்பு மேற்கொள்ளும் நோக்கில் உபகரணங்களை ஈடுபடுத்தாமை
- இலங்கை கட்டளைகள் நிறுவனம்
    - இறக்குமதியாளர்களின் தனிப்பட்ட உத்தரவாத ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளாது சீனி தொகையினை களஞ்சியசாலைகளுக்கு விடுவித்திருத்தல்

# கைத்தொழில், உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப துறை


**கைத்தொழில் அமைச்சு.**

இலங்கை மூலப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு அதிக நாட்டம் கொண்ட நாடு என்பதால் அவற்றுக்கு வெளிநாட்டு சந்தைகளில் நிலையான விலை இல்லாததாலும் காலநிலை மற்றும் வானிலை அடிப்படையில் அவற்றின் உற்பத்தி கூடுதல் குறைதல் போன்ற காரணிகளினாலும் நாடு தொடர்ச்சியாக வெளிநாட்டு வர்த்தக இருப்பில் தட்டுப்பாடு கொண்ட நாடாக உள்ளது. இதனால் நாட்டிற்குள் வரும் நிதிகளை விட நாட்டினுள் இருந்து நிதி வெளியேறுவதால் தொடர்ச்சியாக அந்நிய செலாவணி நெருக்கடிக்கு நாடு முகம் கொடுத்துள்ளது. எனினும் சர்வதேச சந்தையுடன் போட்டியிடக் கூடிய உள்நாட்டு தொழில்நுட்ப உற்பத்தியை உறுதிப்படுத்துவதன் மூலம் இந்த சவாலை வெற்றி கொள்ள முடியும். அதற்கமைய தொழில்நுட்ப, அறிவு மற்றும் புத்தாக்க சிந்தனை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட நேசம் மிக்க சூழலை உருவாக்குவதன் மூலம் பல்வகைப்பட்ட, மேலே குறிப்பிடப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட, புதிய கைத்தொழில் உற்பத்திகள், சூழல் நேசம் மிக்க முறைமைகள் பயன்பாடு மேலே குறிப்பிடப்பட்ட சந்தை நுழைவு சந்தர்ப்பங்கள் மற்றும் அனைவருக்கும் பலன் கிடைக்கும் கைத்தொழில் அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்காக கைத்தொழில் அமை◌்சு நடவடிக்கை எடுக்கின்றது. அமைச்சுன் கீழ் 02 திணைக்களங்கள் 02 நியதிச் சபைகள் மற்றும் 12 கூட்டுத்தாபனங்கள் மற்றும் 11 நிறுவனங்கள் செயல்படுகின்றன.

- உற்பத்தி கைத்தொழில் பிரிவில் அனைத்துத் தரப்பினருக்கும் வினைத்திறனான சேவையினை வழங்கும் நோக்கில் சாதகமான அமைப்பினை கட்டியெழுப்புதல்.
- உற்பத்தி கைத்தொழில் பிரிவில் தொழில்நுட்ப பயன்பாடுகள், பெறுமதி சேர்த்தல், உற்பத்தி பல்வகைப்படுத்தல், உள்நாட்டு வளப் பயன்பாடு மற்றும் நிலைத்திருக்கும் தன்மையை அதிகரித்தல்.
- அனைவருக்கும் பலன் ஏற்படுத்தும் தொழில்நுட்ப அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கு பிரதேச தொழில்நுட்ப அபிவிருத்தியை மேம்படுத்தல் மற்றும் முதலீட்டு சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துதல்.
- கைத்தொழில் பிரிவில் உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தை பிரவேசங்களை அதிகரித்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு கைத்தொழில் அமைச்சு எதிர்பார்க்கின்றது.

**நிதியேற்பாட்டைப் பயன்படுத்துதல்.**

அமைச்சுக்காக 2022 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காகக் கைத்தொழில் அமைச்சுக்கு ரூபா. 4,287 மில்லியன் நிகர நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் இறுதி வரையில் ரூபா. 3,327 மில்லியன் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், வருட இறுதியில் ரூபா. 960 மில்லியன் நிதி ஏற்பாடு மீதியாக இருந்தது.




வரைபடம் : 25

**புத்தல கைத்தொழில் பேட்டையில் காணி பயன்பாடு.**

புத்தல கைத்தொழில் பேட்டையில் 43 காணித் துண்டுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையில் 15 கைத்தொழில் துறையினர்களுக்கும் மற்றும் 2022 ஆம் ஆண்டில் மேலும் இரு கைத்தொழில் துறையினர்களுக்கும் 41 காணித் துண்டுகள் வழங்கப்பட்டிருந்தன. அதில் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது 5 கைத்தொழில் துறையினர்களினால் என்பதுடன் 7 கைத்தொழில் துறையினர்கள் கட்டட நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். மூன்று கைத்தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த 340.8 பேர்ச்சஸ் மொத்த காணி அளவில் எதுவித நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்காத காரணத்தால் செயல்பாடின்றி காணப்பட்டது.

**ரயிகம பசுமை கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி சிறப்புக் கைத்தொழில் வலய செயல்திட்டத்தின் நிர்மாணிப்பு முன்னேற்றம்.**

ரைகம பசுமை கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி சிறப்புக் கைத்தொழில் வலயத்தினைத் தாபிப்பதற்காக அங்கு நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா. 97 மில்லியன் தொகை 2022 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டு இருந்ததுடன் அதற்காக ரூபா.48 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் அதன் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்த போதிலும் நிதி முன்னேற்றம் 49 சதவீதமாகும். மேலே குறிப்பிடப்பட்ட செலவில் நீர் வழங்கலுக்காக ரூபா. 29 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் பௌதீக முன்னேற்றம் 20 சதவீதமாக மட்டுமே இருந்தது.

**கைத்தொழில் பேட்டைகளில் உற்பத்தி நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட குறைந்த கொள்ளளவில் பேணிச் சென்றமை.**

மேல் மாகாணத்தில் அமைந்துள்ள 5 கைத்தொழில் பேட்டைகளில் 07 தொழிற்சாலைகள் எதுவித உற்பத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது தொழிற்சாலைகள் மூடப்பட்ட காரணத்தினால் 1535.7 பேர்ச்சஸ் அளவு கொண்ட காணி பயன்படுத்தப்படாது காணப்பட்டதுடன் மேலே கூறப்பட்ட 05 கைத்தொழில் பேட்டைகள் உள்ளிட்ட 07 கைத்தொழில் பேட்டைகளில் 57 தொழிற்சாலைகள் தமது உற்பத்தி நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட குறைந்த கொள்ளளவில் பேணிச் சென்றிருந்தன.

**இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்தி சபை.**

**ரோபோ தொழில்நுட்பத்திற்கான சிறந்த மத்தியநிலையம் செயல்பாடின்றி இருந்தமை.**

2016 ஓகஸ்ட் 17 ஆம் திகதி இடப்பட்ட அமைச்சரவை அனுமதில் ரூபா. 80 மில்லியன் அரச பங்களிப்புடன் ரோபோ தொழில்நுட்பத்திற்கான சிறந்த மத்திய நிலையத்தினை அமைப்பதற்கு இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்தி சபையின் புதியபூமி முன் பராமரிப்பு மத்திய நிலையம் தேர்வு செய்யப்பட்டிருந்தது. புதியபூமி கட்டடத்தில் 05 அறைகளைக் கொண்ட முதலாவது மற்றும் இரண்டாவது மாடிகளை நிர்மாணித்தல், திருத்த வேலை மற்றும் நவீன மயமாக்கல் என்பவற்றுக்காக ரூபா. 40 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதே போன்று இந்த செயல் திட்டத்திற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 34 மில்லியன் பெறுமதியான ரோபோ தொழில்நுட்ப இயந்திர உபகரணங்கள் 2018 ஆம் ஆண்டு மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இந்த மத்திய நிலையத்தில் தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும் 2023 ஜூலை 30ஆம் திகதி வரையில் இந்த மத்திய நிலையத்தில் தாபிக்கப்பட்டிருந்த இயந்திர உபகரணங்கள், குளிரூட்டிகள் என்பன செயலற்று காணப்பட்டன.

**மூங்கில் மரப் பொருட்கள் உற்பத்தி நிறுவனம் செயல்பாடின்றி இருந்தமை.**

மூங்கில் மரத்தினைப் பயன்படுத்தி தரமான பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் வருமானம், வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கு பொருளாதார தாக்கத்தினை ஏற்படுத்தும் அடிப்படை நோக்கில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் யூனிடோ நிறுவனம் ஒன்றிணைந்து லக்சல மர கைத்தொழில்சாலையை அமைத்து கட்டடம் ஒன்றில் தற்காலிக அடிப்படையில் மூங்கில் மர பயிற்சி மத்திய நிலையம் ஒன்றை ஆரம்பித்திருந்தது. 2020 மே மாதம் யூனிடோ நிறுவனம் பயன்பாடின்றி செயலற்று இருந்தது என்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

**இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம் .**

2022 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை திட்டமானது உற்பத்தியை அதிகரித்தல், உற்பத்தி செலவு உள்ளிட்ட மொத்த செலவினைக் குறைத்தல், விற்பனை அளவு மற்றும் வியாபாரப் பங்குகளை அதிகரித்தல் போன்ற 10 இலக்குகளை அடைவதற்கான செயலாற்றுகையை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு குறிப்பிடப்பட்டிருக்காதுடன் செயலாற்றுகையை அளவிடுவதற்கான முக்கிய செயலாற்றுகை சுட்டி இனம் காணப்பட்டு முன்னேற்றம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்.**

கூட்டுத்தாபனத்தினால் இதுவரையில் சீமந்து அல்லது சீமந்து சார்ந்த எதுவித உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அருவக்காலு சுண்ணாம்புக்கல் படிவத்தினை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா. 64 மில்லியன் தொகை மற்றும் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள காணியினை வாகனத் தரிப்பிடத்திற்காக குத்தகைக்கு வழங்கியதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா. 4 மில்லியன் வாடகை வருமானம் மட்டுமே 2022 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் பிரதான வருமான மார்க்கமாகக் காணப்பட்டது.

**குத்தகை வருமானத்தினை அறவிட்டிருக்காமை.**

காங்கேசன் துறையில் அமைந்துள்ள கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 2 எண்ணெய் தாங்கிகள் மற்றும் குழாய் அமைப்பு என்பவற்றை இலங்கை பெட்ரோலிய இருப்பு களஞ்சியசாலை அரச நிறுவனத்திற்கு எழுத்து மூலம் உடன்படிக்கை ஏற்படுத்தப்படாது வழங்கப்பட்டிருந்ததுடன், மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 22 ஆம் திகதி இடப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு இறுதி வரையில் ரூபா. 201 மில்லியன் தொகை கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டியுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்தத்

தொகை மீளாய்வு ஆண்டு இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**பரந்தன் கெமிக்கல் கம்பனி.**

**கோஸ்டிக் சோடா பைகளைப் பயனின்றி கொள்வனவு செய்தல்.**

மீளாய்வாண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் பங்களாதேஷில் இருந்து ரூபா. 39 மில்லியன் பெறுமதியான 25 கிலோகிராம் கோஸ்டிக் சோடா பைகள் 5,997 கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் வருட இறுதி வரையிலும் அதில் ரூபா . 23 மில்லியன் பெறுமதியான 2,894 பைகள் மீதமாக இருந்தன. 2023 ஜூலை 12 ஆம் திகதி வரையிலும் இந்தத் தொகையில் ரூபா. 18 மில்லியன் பெறுமதியான மேலும் 2,277 பைகள் மீதியாக இருந்ததுடன் அதன் காலாவதியாகும் திகதி 2023 ஓகஸ்ட் 26 ஆம் திகதி எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறு 2,894 பைகள் மீதியாக இருந்த போதிலும் மீண்டும் 2023 ஆம் ஆண்டில் 2 சந்தர்ப்பங்களில் 7,998 பைகள் கோஸ்டிக் சோடா இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2023 ஜூன் 30 ஆம் திகதியில் மீதியாக இருந்த கோஸ்டிக் சோடா மொத்த பைகளின் எண்ணிக்கை 10,034 ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா. 79 மில்லியன் ஆகும்.

**தேசிய அருங்கலை பேரவை.**

**பராமரிப்பு இல்லாமையால் ஆளி கன்றுகள் அழிவடைந்தமை.**

மகாவலி டீ செயல்திட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா. 35 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 44,000 ஆளி கன்றுகளில் 36,000 கன்றுகள் மட்டும் நடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு தினம் வரையில் 95 சதவீதமான பயிர்கள் அழிவடைந்திருந்தது. இதற்கு பிரதான காரணம் செயல்திட்டத்தில் சரியான கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்காமையே ஆகும்.

**சிங்கள கலை கிராமத்தினை பயன்படுத்தாமை.**

தேசிய அருங்கலை பேரவைக்கு சொந்தமான முனியாண்டி வாவியை அண்டிய சிங்கள கலை கிராமம் 2021 ஆண்டில் ரூபா. 10 மில்லியனும் 2022 ஆம் ஆண்டில் ரூபா. 5 மில்லியன் ஆக மொத்த பெறுமதி ரூபாய். 15 மில்லியன் செலவில் 14 குடில்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதி வரையிலுமே பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**இலங்கை கைப்பணிச் சபை .**

**நடைமுறை கணக்குகளில் செயலற்று பணத்தினை தடுத்து வைத்திருத்தல்.**

சபைக்கு சொந்தமான ஒரு சில கிளைகளில் பேணப்பட்டு வரும் நடைமுறை மற்றும் சேமிப்பு கணக்குகளில் பாரிய தொகையினை நாளாந்தம் தடுத்து வைத்திருப்பதனால் மாதாந்தம் அல்லது ஏதேனும் குறித்த திகதியில் அல்லது ஏதேனும் குறித்த தொகை அல்லது பிரதான அலுவலகத்தின் நடைமுறைக் கணக்கிற்கு தானியங்கி முறை மூலம் மாற்றுவதற்காக சரியான வழிமுறை ஒன்றினைத் தயாரிப்பதன் மூலம் பணம் செயலற்று நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகளில் பேணப்படுவது

குறைக்கப்படும். இவ்வாறு 9 வங்கிக் கணக்குகளில். ரூபா. 44 மில்லியன் உற்பத்தித் திறனான முதலீட்டு வழிகளில் முதலீடு செய்யப்படாது செயலற்று தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

**சொத்துக்களின் சட்ட ரீதியான உரிமைத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை.**

காலி உணவட்டுன சலுசல நிறுவனத்திற்கு சொந்தமாக இருந்த 01 ஏக்கர் 30.6 பர்ச்சேஸ் காணி மற்றும் கட்டடம் 2012 ஒக்டோபர் 11 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கமையி கொள்முதல் மீட்பாகக் கருதி சபையினால் 2012 திசெம்பர் 12 ஆம் திகதி ரூபா. 15 மில்லியன் செலுத்தி இருந்த போதிலும் மீளாய்வாண்டிலும் சொத்தின் சட்ட ரீதியான உரிமைத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**பௌதிக ரீதியில் காணப்படாத இருப்புகள் கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்தமை.**

நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்த இருப்பு ஒதுக்கீட்டு கணக்கில். ரூபா. 12 மில்லியன் மற்றும் அசையா இருப்பு கணக்கில் ரூபா. 108 மில்லியன் என மொத்தமாக. ரூ 120 மில்லியன் பௌதீக ரீதியில் காணப்படாத இருப்பு கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

## தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை.

**வைப்புக்கள் அறவிடப்பட்டிருக்காமை.**

சர்வதேச வர்த்தக மத்திய நிலையத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான மாணிக்கக் கல் மற்றும் ஆபரண வியாபாரிகளுக்கு கடைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக அதிகார சபை மற்றும் சர்வதேச வர்த்தக மத்திய நிலைய நிறுவனம் என்பவற்றுக்கிடையே ஏற்படுத்தப்பட்டிருந்த குத்தகை ஒப்பந்தம் 2021 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் நிறைவடைந்திருந்த போதிலும் பாதுகாப்பு பிணை வைப்பு ரூபா. 16 மில்லியன் தொகை 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**சேகரிக்கப்பட்ட தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டிருக்காமை.**

ஒரு மாதத்திற்குள் சேகரிக்கப்பட்டு தடுத்து வைக்கப்படும் வரிப் பணம் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மாற்றப்பட வேண்டிய போதிலும், 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருந்த 2.5 சதவீத தடுத்து வைத்தல் வரிப் பணம் ரூபா. 483 மில்லியன் தொகை மாற்றப்படாது இருந்தது.

## இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனம்.

**காணி குறை பயன்பாட்டுடன் காணப்பட்டமை.**

நிறுவனத்தின் இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில். ரூபா. 14 மில்லியன் பெறுமதிக்கு 30 வருட குத்தகை

அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட காணியில், குறித்த பணி மேற்கொள்ளப்படாத காரணத்தால் 06 வருடத்திற்கும் அதிகமான காலம் தொட்டு அந்தக் காணி குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

**கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்.**

**மருந்துகளை ஆய்வு கூடத்திற்கு பயன்படுத்தாமை.**

அபிவிருத்தி அடைந்து நாடுகளில் உயர் ஆய்வுக்கூடங்களுக்கு சமனான வசதிகளைக் கொண்ட ஜி ஜிஎல்பி (புடீ) நிலைமை உள்ளடங்களாக அங்கீகாரம் பெற்ற நவீன மருந்துகள் ஆய்வு கூடம் திறைசேரி நிதி ஒதுக்கீடுகளில் ரூபா. 99 மில்லியன் செலவிடப்பட்டு நிறுவனத்தினுள் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் பேணப்பட்டு வந்திருந்த போதிலும் நாட்டில் உள்ள வைத்தியசாலை ஒழுங்கமைப்பு உள்ளிட்ட அனைத்து மேற்கத்திய மருந்துகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் விநியோகித்தல் மேற்கொள்ளும் போது தேசிய ஔடத ஒழுங்குறுத்தல் அதிகார சபையின் மூலம் மேற்கூறிய ஆய்வுக்கூடத்தின் விரிவுபடுத்தப்பட்ட சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**மூன்றாம் தரப்பினரின் பெட்ரோலிய உற்பத்தியில் பரீட்சிப்பு மேற்கொள்ளும் நோக்கில் உபகரணங்களை ஈடுபடுத்தாமை.**

2016 ஓகஸ்ட் 31 ஆம் திகதி இடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் (ரூஊஐளுடு) விதிகளுக்கு இணங்க மூன்றாம் தரப்பினரின் பெட்ரோலிய உற்பத்தியை பரீட்சிப்பு செய்யும் நோக்கில் உபகரணங்களை கைப்பற்றுவதற்கு மற்றும் பொருத்துவதற்கு ரூபா. 118 மில்லியன் செலவிடப்பட்டு தாபிக்கப்பட்டிருந்த பெட்ரோலியம் மற்றும் மசகு எண்ணெய் ஆய்வுக்கூடத்திற்கு பெட்ரோலிய மாதிரிகளை பெற்றுக் கொள்ளும் வழிமுறை உருவாக்கப்பட்டிருக்காததால் ஆய்வுகூடம் அமைக்கப்பட்டதன் அடிப்படை நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**இலங்கை கட்டளைகள் நிறுவனம்.**

**இறக்குமதியாளர்களின் தனிப்பட்ட உத்தரவாத ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளாது சீனி தொகையினை களஞ்சியசாலைகளுக்கு விடுவித்திருத்தல்.**

1984 இன் 06 ஆம் இலக்க இலங்கை கட்டளைகள் நிறுவன சட்டத்தின் 03 (ஈ ) நோக்கம் மற்றும் நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த 2010 ஏப்ரல் 01 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் புடு-ஐஐ-04 கொண்ட இறக்குமதிப் பொருட்களைப் பரீட்சிக்கும் வழிகாட்டலின் பிரகாரம் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வழிகாட்டலின் பிரகாரம் மாதிரி பரீட்சிப்பு அறிக்கை கிடைப்பதற்கு முன்னர் இறக்குமதியாளர்களின் தனிப்பட்ட உத்தரவாத ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளாது 58 சந்தர்ப்பங்களில் மொத்தமாக 10,986,250 கிலோ கிராம் சீனி தொகை இறக்குமதியாளர்களின் களஞ்சியசாலைகளுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

# பொது நிர்வாகத் துறை

## கணக்காய்வு அவதானிப்புகள்

- நிலுவையான கட்டிட வாடகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை
- சொத்து முகாமைத்துவத்தில் நிலவும் குறைபாடுகள
- நு - கிராம உத்தியோகத்தர் செயற் திட்டத்தின் வழங்கல் குறைவாகப் பயன்படுத்துதல
- வெளிநாட்டு உதவிச் செயற்திட்ட நிதிய குறைப் பயன்பாடு
- வெளிநாட்டுக் கடனை உத்தேசித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தாமை
- வெளிநாட்டுக் கடன் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை
- குருநாகல் மாவட்ட செயலகம்
- புத்தளம் மாவட்ட செயலகம்
- கண்டி மாவட்ட செயலகம்
- மாத்தளை மாவட்டச் செயலகம்
- நுவரெலியா மாவட்ட செயலகம்
- காலி மாவட்ட செயலகம்
- மொனறாகலை மாவட்ட செயலகம்
- பதுளை மாவட்ட செயலகம்
- அநுராதபுரம் மாவட்ட செயலகம்
- பொலொன்னறுவை மாவட்ட செயலகம்
- முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்
- யாழ்ப்பாண மாவட்ட செயலகம்
- மன்னார் மாவட்ட செயலகம்
- வவுனியா மாவட்டச் செயலகம்
- கிளிநொச்சி மாவட்ட செயலகம்

- **பதிவாளர் நாயகம் திணைக்களம்**
    - **ஆவணங்கள் ஊடுகதிர் செய்யப்படாத காரணத்தால் இ-காணி செயல் திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை.**
    - **பிறப்பு, திருமணம் மற்றும் மரணம் தொடர்பான சிவில் பதிவு தொடர்பான தகவல்கள் தரவு ஒழுங்கமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்காமை**

# பொது நிர்வாகத் துறை

அரசாங்கத்தால் செயற்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தேசியக் கொள்கை களின் அடிப்படையில் "நாட்டிற்கான வேலை கலாச்சாரத்தை" உருவாக்கு வதற்காக குறித்த அரசாங்க அமைச்சுக்களுக்காக கொள்கை ரீதியான வழிகாட்டலை மேற்கொண்டு பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயத்திற்கு உரித்தான கொள்கை வகுத்தல், தேசிய பாதீடு, அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி நடவடிக்கையின் கீழ் உள்ள திட்டங்கள் செயற்படுத்துதல் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் மற்றும் தொடர்புடைய கொள்கை உருவாக்கம், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை செயற்படுத்தல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை, இலங்கை பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை வாஸ்து விஞ்ஞான சேவை, இலங்கை தொழில் நுட்ப சேவை மற்றும் ஒன்றிணைந்த சேவைகளின் நிறுவக, நிர்வாக மற்றும் மனித வள முகாமைத்துவம், பாராளுமன்றம் தொடர்பான பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகளிற்கு உரித்தாக அரசாங்கத்தால் மேற்கொள்ளப் பட வேண்டிய செயற்பாடுகளை மேற்கொள்வது இவ் அமைச்சின் பிரதான பணியாகும்.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி திணைக்களங்களின் தொலைநோக்கு பார்வையானது, "தேசத்திற்கு சிறந்த பொது சேவை", தேசத்தின் முன்னேற்றத் திற்கான தனித்துவமான சேவையை வழங்குதல்" மாகாண மற்றும் பிராந்தியத்திற்கான அதிகாரமளித்தல்" என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அமைச்சின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில், தேசிய பாதீடு, அரச முதலீடு மற்றும் தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்கள் மற்றும் பணிகள் செயற்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் அச் செயற்பாட்டை மேற்கொள்வதற்காக அமைச்சிற்கு மொத்தம் ரூபா 64,096 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதில் வருட இறுதியில் ரூபா 56,150 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப் பட்டிருந்தது. இதன் படி, ரூபா 7,946 மில்லியன் தொகை பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.

சகல மாவட்ட செயலகங்கள், சகல பிரதேச செயலகங்கள், சகல உள்ளூராட்சி அதிகாரசபைகள், 04 திணைக்களங்கள், 05 கூட்டுத்தாபனங்கள்/

சபைகள் ஒரு ஆணைக்குழு மற்றும் ஒரு கம் பனி இவ் அமைச்சின் கீழ் இயங்குகின்றது.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் மேற்கூறிய பணிகளை மேற்கொள்வது குறித்து நடாத்தப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனை களில் கண்டறியப்பட்ட போதியளவானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் தொகுக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

**நிலுவையான கட்டிட வாடகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை**

அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் படி, வருமானக் கணக்களிப்பு உத்தியோகத்தரால் நிலுவை வருமானத்தை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுத்தல் மற்றும் அறவிடுவதற்குள்ள நிலுவை வருமானம் மேலும் சேர்வதனைத் தடுப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும், 29 நிறுவகங்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த கட்டிட நிலுவை வாடகைத் தொகையான ரூபா 342 மில்லியனாக இருந்ததுடன் அந் நிலுவைத் தொகையில் 22 சதவீதமான ரூபா 74 மில்லியன் அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் அரசாங்க பங்களாக்கள், சுற்றுலா பங்களாக்கள் மற்றும் உத்தியோகபூர்வ விடுதிகளில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. 2019 திசெம்பர் 31 இற்கு முன்னைய ஆண்டுகளில் இருந்து நிலுவைக உள்ள நிலுவைக் கடன் தொகை ரூபா 195 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. நிலுவை வாடகை வருமானம் முன்னைய ஆண்டின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் ரூபா 19 மில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

**சொத்து முகாமைத்துவத்தில் நிலவும் குறைபாடுகள்**

கப்பெட்டிபொல மாவத்தை கூட்டு வீடமைப்பை இடித்து அகற்றி புதிய வீடமைப்புத் தொகுதியை நிர்மாணிப் பதற்காக 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 322 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ் வீட்டுத் தொகுதியில் இடித்து அகற்றப்பதுவதற்கு உத்தேசிக்கப்பட்ட 11 வீடுகள் 2009 ஆம் ஆண்டு முதல் தற்காலிக அடிப்படையில் சனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இவ் வீடுகளின் நிர்வாகம் அமைச்சின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டிருந்தது. “நிலமதுர” கட்டிடத்தின் பெறுமதி ரூபா 459 மில்லியன் தொகை கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் குறித்த காணியை அமைச்சிடம் கையேற்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்திருக்க வில்லை. மேலும், உள்நாட்டலுவல்கள் பிரிவின் கீழ் உள்ள 35 சுற்றுலா பங்களாக்கள் மற்றும் அவற்றிற்கு உரித்தான காணிகளைக் கையகப்படுத்துதல் மற்றும் அவற்றை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு உள்ளடக்கும் நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை.

**E - கிராம உத்தியோகத்தர் செயற் திட்டத்தின் வழங்கல் குறைவாகப் பயன்படுத்துதல்.**

கிராம உத்தியோகத்தர்களால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான தினசரி தகவல்களை சேகரித்து வைத்துக்கொள்வதற்கும் பரிசீலிப்பதற்கும் தேவையான தரவுகளை உள்ளடக்கிய ஈ - கிராம சேவைத் திட்டத்தின் முதற்கட்ட செயற்திட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 04 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 133 கிராம சேவையாளர் களங்களிலும் ரூபா 57 மில்லியன் மதிப்பீட்டில் செயற்படுத்துவதற்கும் அதன் வெற்றியின் அடிப்படையில் இரண்டாம் கட்டமாக 7,000 கிராம அலுவலர் களங்கள் உள்ளடங்கும் வகையில் ரூபா 1689.22 மில்லியன் தொகையான மதிப்பீட்டுக் கிரயத்தின் கீழ் செயற்படுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக 2022 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 750 மில்லியன் ஒதுக்கீட்டில் ரூபா 3 மில்லியன் அளவில் செலவிடப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை செயற்திட்டத்திற்காக ரூபா 332 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் வழங்குனருடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டதை அடுத்து பெறுகைகளை இடைநிறுத்தி இருந்ததுடன் இதற்காக பெறுகைச் செயற்பாட்டைச் செயற்படுத்துவதிலான தாமதம், அமைச்சரவை குறிப்பாணை அனுப்புவதில் தாமதம் போன்ற பல்வேறு குறைபாடுகள் திட்டமிட்டபடி செயற்திட்டம் செயற்படுத்தப்படாமைக்குக் காரணமாயின.

**வெளிநாட்டு உதவிச் செயற்திட்ட நிதிய குறைப் பயன்பாடு**

யாழ்ப்பாணத்தில் வர்த்தக நிலைய மொன்றை நடாத்துவதற்கு மென்பொருள் அமைப்பை அறிமுகப்படுத்துவதற்காக வெளிநாட்டு மானியத்தின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 40 மில்லியன் வட மாகாணத்தின் பால் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத் திற்காக JICA நிறுவனத்தின் மானியத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 10 மில்லியன் தொகையும் உள்ளூராட்சியை அதிகரிப்பதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 50 மில்லியன் தொகையும், உள்ளூராட்சி அதிகாரசபைகளை மெம்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்ட வழங்கலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 50 மில்லியன், கழிவுகளுக்கு பெறுமதி சேர்க்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜேர்மன் அரசாங்கத்தின் மானியத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 270 மில்லியன் தொகையும், இலங்கை அரசாங்கத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 5 மில்லியன் என ரூபா 575 மில்லியன் செயற்திட்டம் செயற்படுத்தப்படாததன் காரணமாக 2022 திசெம்பர் 31 வரை முழுமையாக எஞ்சியிருந்தது.

**வெளிநாட்டுக் கடனை உத்தேசித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தாமை**

பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான முதலீட்டுத் திட்டத்தின் 03 ஆவது பகுதியை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ஏடீபீ)

கடனின் கீழ் ஏற்படுத்தப்பட்டிருந்த ரூபா 200 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டுத் தொகையில் 55 சத வீதமான ரூபா 110 மில்லியன் தொகையும் இத் திட்டத்தின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ஏபேீ) கடனின் கீழ் ஏற்படுத்தப்பட்டிருந்த ரூபா 1000 மில்லியன் தொகையான ஏற்பாடுகளில் 58 சதவீதமான ரூபா 576 மில்லியன் தொகையும், இலங்கை அரசாங்கத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 200 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில் 79 வீதமான ரூபா 157 மில்லியன் தொகையும் நோக்கத்திற்குரிய பணிக்காக பயன் படுத்தப்பட்டிருக்கவில்லை. இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒதுக்கீடுகளில் ரூபா 8 மில்லியன் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டு செலவு செய்யப்பட்டிருந்தது.

### வெளிநாட்டுக் கடன் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை

பிராந்திய அபிவிருத்தி ஆதரவுச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உலக வங்கிக் கடனின் கீழ் ரூபா 1,900 மில்லியன் மானியங்களின் கீழ் ரூபா 1,400 மில்லியன் தொகையும், இலங்கை அரசாங்கத்திடமிருந்து ரூபா 50 மில்லியன் தொகையுமாக ஒதுக்கீடுகள் மேற் கொள்ளப்பட்டிருந்த போதிலும், உலக வங்கி மானியத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகளில் 56 சவீதமான அதாவது ரூபா 778 மில்லியன் தொகையான ஒதுக்கீடு எஞ்சியிருந்தது. கிராமிய பாலம் செயற்திட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக நெதர்லாந்து அரசாங்கத்தின் கடனின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 300 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டுத் தொகையில் 69 சதவீதம் செலவிடப்பட்ட போதிலும் இலங்கை அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 12 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டுத் தொகையில் 64 சதவீதமான ரூபா 8 மில்லியன் ஒதுக்கீடு எஞ்சியிருந்தது.

### குருநாகல் மாவட்ட செயலகம்

செயற்பாட்டுத் திட்டத்தின் படி, செயற்திட்ட நோக்கங்களை மேற்கொள்ளாமையின் காரணமாக 13 அமைச்சுக்களாலும் 14 திணைக்களங்களாலும் கிடைக்கப்பெற்ற ஏற்பாடுகளில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 1,239,453 மில்லியன் தொகையான ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. பாராளுமன்ற உறுப்பினரின் மொத்த ஒதுக்கீட்டில் 50 சதவீத ஆகக் குறைந்த அளவு பிரதேச ரீதியாகச் செயற்படுத்தக்கூடியதும் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு உதவும் பௌதீக உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட வேண்டிய போதிலும் 18 பிரதேச செயலகங்களின் பரவலாக்கப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த ஏற்பாட்டின் ரூபா 88 மில்லியன் தொகையான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக 24 சதவீதமான ரூபா 21 மில்லியன் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தது.

17 பிரதேச செயலகங்களால் ஓய்வூதிய நிதியத்தைப் பெற்றுக்கொள்ளும் ஓய்வூதியப் பெறுனர்கள்/ விதவைகள் 259 பேருக்கு ரூபா 53 மில்லியன் தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2022 மே மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை இதில மேலும் 30 மில்லியன் தொகை அறவிடப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டது.

குருநாகல் மாவட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் கிராம சக்தி செயற்திட்டத்தின் கீழ் திறன் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 52 மில்லியன் தொகையானதுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறாகச் செலவிடப்பட்ட தொகை ரூபா 15 மில்லியனாக இருந்தமையால் கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் மிகவும் குறைவான நிலையில் காணப்பட்டது.

கடின நிதிக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 115 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 68 மில்லியன் தொகை கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலவிடப் பட்டிருந்ததுடன், எஞ்சிய தொகையாக ரூபா 47 மில்லியன் காணப்பட்டது. இவ்வாறே 19 பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைந்த 74 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்காக ரூபா 21 மில்லியன் தொகை, கடன் தொகையை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த கடன் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

பிரதேச செயலகங்கள் 03 இற்கு உரித்தான முன்னேற்றம் 03 வருட காலப்பகுதியில் காட்டு யானைகளின் சேதத்திற்கான மொத்தத் தொகை ரூபா 11 மில்லியன் ஆதனங்கள், உடல் மற்றும் உயிர் சேதங்களுக்கான நட்டஈடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் கடந்த காலப்பகுதிக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகையில் காட்டு யானைகளின் சிக்கல்களுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய அபிவிருத்திச் செயற்திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை.

2022 நவம்பர் 21 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, குறித்த செயற்திட்டங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட சுற்றாடலுக்கு உகந்த பசளை வழங்குனர்கள் வழங்கும் பசளைக்கான கொடுப்பனவுகள், குறித்த மாவட்ட செயலகம்/ அரசாங்க அதிபரின் பரிந்துரையுடன் விவசாய அமைச்சரால் தீர்த்து வைக்கப்படுவதற்கு இயலுமான வகையில் உகந்த செயற்பாட்டை அறிமுகப்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் படி, கொடுப்பனவை மேற்கொள்வதற்காக மாவட்டச் செயலகத்திற்கு ரூபா 823 மில்லியன் தொகையான பணம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், குருநாகல் மாவட்ட செயலாளரால் அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணான வகையில் 12 வழங்குனருக் ரூபா 205 மிலலியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

17 பிரதேச செயலகங்களில் 2,856 மின்சாரமற்ற வீடுகள், 4,900 மலசல கூடங்களற்ற வீடுகள், குழியுள்ள மலசல கூடங்களுடனான 2,314 வீடுகள், தற்காலிகமான 2,961 வீடுகள் மற்றும் 2,851 குடியிருப்பதற்கு வீடுகளற்ற வீடுகள் குடும்பங்கள் இருக்கையில் பன்முறைப்படுத்தப்பட்ட நிதி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வசதிகளை வழங்குவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 88 மில்லியன் தொகையான ஏற்பாடுகளில் 01 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### புத்தளம் மாவட்ட செயலகம்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களினூடாக நெல் கொள்வனவு செய்யப்பட்டு அரிசியாக்கப்படுவதன் அடிப்படையில் அரசாங்கத்தால் 2020.ு.21 பெரும்போகத்தின் போது 14 நெல் ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 100 மில்லியன் தொகைக்காக கிடைக்கப்பெற வேண்டிய ரூபா 33 மில்லியன் பெறுமதியான அரிசி கி.கி. 422,502 ம் 2021 சிறு போகத்தின் போது 19 நெல் ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 78 மில்லியன் தொகைக்காக கிடைக்கவேண்டிய 1,006,687 கி.கி. அரிசி 2023 மே 30 ஆம் திகதி வரையிலும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

நிர்மாணிக்கப்பட்டு வரும் மாவட்ட செயலகக் கட்டிட அலுவலக பிரதான கட்டிடத்தில் 14 ஆவது பட்டியற் கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டதுடன், இதற்காக தீர்ப்பனவுச் செயற்பாட்டிற்கு செல்வதனால் தாமத வட்டியாக ரூபா 10 மில்லியன் செலுத்தப்பட நேர்ந்தது. இவ்வாறே நிர்மாணிப்புகளின் குறைபாடுகளைச் சீர்செய்வதற்காக ரூபா 34 மில்லியன் தொகை பொறியியலாளர் மதிப்பீட்டுடன் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் தீர்வு நடவடிக்கையின் போது இது கருத்திற்கொள்ளப்படாது செயற்பட்டமையால் அரசாங்கத்திற்கு ரூபா 18 மில்லியன் தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

### கண்டி மாவட்ட செயலகம்

09 பிரதேச செயலகங்களில் மண்சரிவு மற்றும் அதிக ஆபத்தான பிரதேசங்களாகக் குறிப்பிடப்பட்ட 1,070 குடும்பங்கள் வாழ்வதாக இனங் காணப்பட்டிருந்த போதிலும் அவர்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப் படுவதற்கோ அல்லது மாற்று வழியொன்றிற்காக வழிநடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அதிக ஆபத்தான பகுதியிலேயே வாழ்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாழ்வாதார சுழற் கடன் நிதியக் கணக்கில் கூட்டுமொத்த மீதி ரூபா 177 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 116 மில்லியன் தொகையான கடன் மீதி ஒன்று நிலுவையாகக் காணப்பட்டிருந்தது. இதில் 128 கடன்பெறுனர்களின் ரூபா 5 மில்லியன் தொகையான கடன் காலாவதியாகி இருந்ததுடன் 105 பேரின் ரூபா 6 மில்லியன் தொகையான கடனை அறவிட முடியாதிருந்தது.

கண்டி மாவட்டச் செயலகத்தில் செயற்படும் கிராம சக்தி மக்கள் வியாபார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1,775 கடன்பெற்றவர்களுக்கு ரூபா 62 மில்லியன் தொகையான கடன் வழங்கப்பட்டிருந்தது. இக் கடன்பெறுனர்களில் 319 பேரிடமிருந்து ரூபா 9 மில்லியன் தொகையான கடன் அறவீடு செயலிழந்த நிலையில் காணப்பட்டது.

### மாத்தளை மாவட்டச் செயலகம்

இரத்தொட்டை, லக்கல, வில்கமுவ, அம்பன்கங்கோரலே மற்றும் நாஉல பிரதேச செயலகப் பிரிவுகளில் கிராம சக்தி வியாபாரத்திற்காக 04 ஆண்டு கால அளவு பழமைவாய்ந்த 59 கிராம உத்தியோகத்தர் வலயச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 20 மில்லியன் தொகையான பணம் உத்ததேசிக்கப்பட்ட நோக்களுக்காகப் பயன்படுத்தப்படாது வங்கிக் கணக்குகளில் விளைவற்றுக் காணப்பட்டது.

### நுவரெலியா மாவட்ட செயலகம்

2019 ஆம் ஆண்டின் கம்பெரலிய துரித கிைாம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்தின் சமய ஸ்தலங்களிற்காக சூரிய சக்தி முறைமையை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்கு உரிய அம்பகமுவ பிரதேச செயலகத்தால் ரூபா 17 மில்லியன் செலவில் ஆரம்பிக்கப்பட்ட 14 இடங்களில் பொருத்தப்பட்டிருந்த சூரிய சக்தி முறைமையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் நாட்டின் மின்சார முறைமைக்கு சேர்க்கப்படுவது ஆண்டின் இறுதித் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இடர் முகாமைத்துவ நிலைய ஏற்பாட்டின் மூலம் கங்காரகொல்ல கிராமத்தில் கற்கள் விழும் அனர்த்தத்தைக் குறைக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 19 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்திராததன் காரணமாக செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கமும் விளைவை அடைவதற்கு இயலாதிருந்தது.

கிராம சக்தி வேலைத்திட்டத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்தில் மலர்ச் செய்கையாளர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 9 மில்லியன் செலவில் நுவரெலியா மாவட்டச் செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் கழற்றப்பட்டு அகற்றி, வலபனே கல்கடபதன கிராம சக்தி மக்கள் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், எவ்வித விளைவான செயற்பாட்டிற்காகவும் ஈடுபடுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

### காலி மாவட்ட செயலகம்

2019 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 3,155 மில்லியன் தொகையான 2000 இருக்கைகள் கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்கு உரித்தான 2023 மார்ச் 16 ஆம் திகதி வரையிலும் செயற்திட்ட ஆலோசகரால் பரிந்துரைக்கப்பட்ட மொத்த பட்டியல் வருமானம் ரூபா 967 மில்லியன் தொகையானதுடன் இது மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 30 சதவீதம் மாத்திரமேயாகக் காணப்பட்ட போதிலும், நிர்மாணிப்புகளின் பௌதீக முன்னேற்றம் 15 சதவீத அளவில் காணப்பட்டது.

ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 426 மில்லியன் தொகையான முற்பணத் தொகையையும் அறவிடப்பட முடியாதிருந்ததுடன் முற்பணப் பிணை அது வரையிலும் காலாவதியாகி இருக்கையில் செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

### மொனறாகலை மாவட்ட செயலகம்

கிராம சக்தி மக்கள் வியாபாரத்தின் கீழ் நிலவும் நிதிய ஆய்வின் போது 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மாவட்டத்தில் பிரதேச செயலக அதிகார எல்லைக்குட்பட்ட 11 பிரதேசங்களில் 125 கிராம சக்தி மக்கள் சங்கங்கள் காணப்பட்டதுடன் அச் சங்கங்களிற்கு உரித்தான வங்கிக் கணக்குகளில் ரூபா 82 மில்லியன் தொகை விளைவற்றுக் காணப்பட்டது.

மாவட்ட செயலகத்திற்கு உரித்தான ஆவணப்படுத்தப்பட்ட இயங்கும் நிலையில் இல்லாத மற்றும் திருத்த வேலைகள் பொருளாதார ரீதியாக விளைவற்ற 08 வாகனங்கள் தொடர்பாக ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### பதுளை மாவட்ட செயலகம்

2014 ஆம் ஆண்டின் போது அதிக ஆபத்து வலயமாக ஹபுதளை தம்பதென்ன தோட்டத்தில் வாழும் 65 குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்காக தம்பதென்ன தோட்டத்திற்கு உரித்தான ஓர் காணி தேர்ந்தெடுக்கப்பட்டு பயனாளிகளுக்காக வீடமைப்பு நடவடிக்கைகளிறகாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் மேற்கொள்ளப்படுவதற்காக 2019 ஒக்தோபர் 14 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி, 2020 ஒக்டோபர் 14 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய மேற்குறித்த வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக 2022 சனவரி 01 ஆம் திகதி வரையிலும் ரூபா 22 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப் பட்டிருந்தது.

மஹியங்கனை பிரதேச செயலகத்தின் புதிய கட்டிட நிர்மாணிப்பிற்காக ரூபா 141 மில்லியன் தொகையான உடன்படிக்கையிடப்பட்ட தொகைக்கு 2017 திசெம்பர் 18 ஆம் திகதி தனியார் நிறுவகம் ஒன்றுடன் ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 139 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் படி, உடன்படிக்கையிடப்பட்ட நாள் முதல் 546 நாட்களில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் சேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அன்றைய தினத்திற்கு வேலைத் தாமதக் காலம் 1,928 நாட்களானதுடன் இது மதிப்பீட்டுக் காலத்தைப் போல் நான்கு மடங்கை ஒத்ததாகக் காணப்பட்டது.

### அநுராதபுரம் மாவட்ட செயலகம்

மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மகளிர் பணியகத்தின் மூலம் பிரதேச செயலகங்களின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ்

செயற்படுத்தப்பட்டிருந்த 06 கடன் தீர்மானத் திட்டங்களுக்கு உரித்தான 18 பிரதேச செயலக அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிளில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 03 வருடங்களிற்கும் மேலான காலமாக அறவீடுகள் நலிவான நிலையில் காணப்பட்ட கடன் மீதிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 3 மில்லியனாகக் காணப்பட்டது.

09 பிரதேச செயலகப் பிரிவுகளில் கருங்கல் அகழ்விற்காக அனுமதிப்பத்திரம் பெற்றோர் அறுபது பேரில் மீளாய்வாண்டின் இறுதியில் 2020 முதல் 2022 வரையான காலத்திற்கு உரித்தான அறவிடப்பட வேண்டிய அரசாங்கக் கட்டணம் ரூபா 147 மில்லியன் தொகையாகும்.

2009 மே 06 ஆம் திகதிய 1618 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட விதிகளின் படி, இரு பிரதேச செயலக அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2019 ஆம் ஆண்டு முதல் 2022 வரையான காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ஜல்லி அகழ்விற்காக அனுமதிப்பத்திரம் பெற்ற ஏழு பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய அரசாங்கக் கட்டணம் ரூபா 10 மில்லியனாகும்.

### பொலொன்னறுவை மாவட்ட செயலகம்

இந்தியா வெளிநாட்டு உதவியைப் பயன்படுத்தி கதுருவெல நகரத்தில் மும்மொழிகளடங்கிய ஓர் பாடசாலையை நிர்மாணிப்பதற்காக காணியை இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தால் தயாரிப்பதற்கிருந்ததுடன் இதற்கான ஆலோசனை அரச பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆரம்பச் செலவினத்திற்காக ரூபா 187 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. புாடசாலையை நிர்மாணிக்கும் இரண்டாம் கட்டத்திற்காக ரூபா 246 மில்லியன் தொகையான ஒப்பந்தப் பெறுமதியில் ரூபா 136 மில்லியன் தொகை செலவிடப்பட்டு செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

நான்கு பிரதேச சபைப் பிரிவுகளில் கருங்கல் அகழ்விற்காக அனுமதிப் பத்திரங்களைப் பெற்ற 41 பேரிடம் இருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் 2017 ஆம் ஆண்டு முதல் 2021 வரையான காலத்திற்கு உரித்தாக அறவிடப்பட வேண்டிய அரசாங்கக் கட்டணம் ரூபா 140 மில்லியன் தொகையாகும்.

### முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்

மீளாய்வாண்டின போது ‘‘பசுமையான நாடு’’ எனும் தேசிய வீட்டுத் தோட்டப் புரட்சி மற்றும் இதனுடன் தொடர்புடைய வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூபா 200 மில்லின் வழங்கப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பயனாளிகள், தேர்வு செய்யும் விண்ணப்பங்கள், தேர்விற்கான அளவுகோல்கள், பயிர் முளை ஆராய்ச்சி அறிக்கைகள், கிராமிய, பிராந்திய மற்றும் மாவட்டச் செயற்பாடுகளின் முன்னேற்ற அறிக்கைகள், விளைச்சல் அல்லது முடிவுகள், சாகுபடியில் இருந்து

எதிர்பார்க்கப்படும் மதிப்பீட்டு நிலை மற்றும் 139 அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட விவாய உபகரணங்களின் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் ஆகியவை இது வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததன் காரணமாக அவற்றை திருப்திகரமான முறையில் ஏற்று சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### யாழ்ப்பாண மாவட்ட செயலகம்

2019 ஆம் ஆண்டின் போது ரூபா 75 மில்லியன் கிரயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த சுன்னாகம் மலமகற்றல் சுற்றிகரிப்பு மீள்சுழற்சிச் செயற்திட்டச் செயற்பாட்டிற்கான ஒப்பந்தத்திற்கு இது வரையில் ரூபா 9 மில்லியன் கூட்டுத்தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் பணி பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் மலக்கழிவு மீள்சுழற்சிக்கு உட்படுத்த முடியாதிருந்தது.

### மன்னார் மாவட்ட செயலகம்

மீளாய்வாண்டின் போது உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் படி, முசலி பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பயனாளிகளுக்காக மாவட்ட செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு 74 பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டியிருந்த 2 அஸ்வ சக்தி நீர்ப்பாசன உபகரணங்களுக்குப் பதிலாக 1.5 அஸ்வசக்தியுடனான உபரகரணத்தை வழங்கியிருந்தமையால் பயனாளிகளுக்கு உச்ச விளைச்சலைக் கொண்ட பயிரீட்டை மேற்கொள்ள முடியாதிருந்தது.

மீளாய்வாண்டின் போது சிங்கள் கிராம மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை வழங்குவதற்காக ஒரு மணித்தியாலத்திற்கு 750 லீற்றர் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்றும் ரூபா 3 மில்லியன் செலுத்திப் பெறவேண்டியிருந்த போதிலும் ஒரு மணித்தியாலத்திற்கு 500 லீற்றர் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்து வழங்கியதன் காரணமாக இக் கிராமத்து மக்களுக்கு ஒரு நாளுக்கு தேவையான அளவிற்கு சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கப்பட முடியாதிருந்தது.

### வவுனியா மாவட்டச் செயலகம்

இராஜாங்க அமைச்சின் கிராமிய வீடமைப்பு மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 2610 குடும்பங்களுக்காக 2015 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்த வீடுகளில் இது வரை 64 வீடுகள குடியிருப்பிற்காக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது கைவிடப்பட்டிருந்தன.

2018 ஆம் ஆண்டின் பாதீட்டு திட்டத்தின் படி, ரூபா 292 மில்லியன் கூட்டுத்தொகையான கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வவுனியா பொருளாதார மத்திய நிலையம் இது வரை பொது மக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

எவ்வாறெனினும், அந் நிலையத்திற்காக பாதுகாப்பு சேவைகள், சுத்திகரிப்பு சேவைகள் மற்றும் நீர்க் கட்டணங்கள் முதலிய ரூபா 6 மில்லியன் கூட்டுத்தொகையான தொகை கடந்த் 05 வருட காலமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## கிளிநொச்சி மாவட்ட செயலகம்

சௌபாக்கியமான உற்பத்தி கிராட நிகழ்ச்சித்திட்டத்தின் படி, 2021 ஆம் ஆண்டின் போது ஆராய்ச்சி பிரதேச செயலகத்தினால் ரூபா 3 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சந்தைத் தொகுதி குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதற்கு பொது மக்களிற்காகத் திறந்து வைக்கப்படாது கடந்த வருடம் முதல் கைவிடப்பட்டிருந்தது.

ஏனைய இரு அமைச்சுக்களால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் இருந்து மாவட்டச் செயலகத்திற்கும் பூனகரி மாவட்டச் செயலகத்தினால் ரூபா 55 மில்லியன் கூட்டுத்தொகையான கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகள் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டிருந்த தேங்காய் எண்ணை உற்பத்தி நிலையம், 04 வகையான உள்நாட்டு உற்பத்திக் கைத்தொழிலிற்கான இயந்திர உபகரணங்கள் குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாது கடந்த 03 முதல் 04 வருட காலமாக கைவிடப்பட்டிருந்தது.

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

160 வருட பெருமைக்குரிய வரலாற்று மரபுரிமை கூறும் நாட்டின் அசையா மற்றும் அசையும் சொத்துக்களுக்கு உரிய சட்டரீதியான ஆவணங்களைப் பதிவு செய்தல், இலங்கையில் காணி உரிமையைப் பதிவு செய்தல் மற்றும் மக்கள் வாழ்க்கையின் முக்கிய சந்தர்ப்பங்களான திருமணம், பிறப்பு மற்றும் இறப்பு என்பவற்றைப் பதிவு செய்தல், அந்த ஆவணங்களைப் பாதுகாத்தல் மற்றும் கோரிக்கையின் அடிப்படையில் அவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குதல் மற்றும் அதன் மூலம் மக்களுக்கு தமது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் என்பன திணைக்களத்தின் செயல்பாடுகள் ஆகும். ஆவணங்களைப் பதிவு செய்தல் மற்றும் உரிமைகளைப் பதிவு செய்தல் என்பன நாடு முழுவதிலும் அமைக்கப்பட்டுள்ள 07 வலயப் பொறுப்பு பிரதி தலைமை பதிவாளர் அலுவலகங்கள், 14 மாவட்ட உதவி தலைமை பதிவாளர் அலுவலகங்கள், 50 காணிப் பதிவாளர் அலுவலகங்கள், 04 மத்திய காப்பகங்கள் மற்றும் 334 மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகங்கள் என்பவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பதிவாளர் நாயகம் திணைக்களத்துக்கு ரூபா. 2,622 மில்லியன் நிதி பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா. 2,527 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா. 95 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கம் செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

**ஆவணங்கள் ஊடுகதிர் செய்யப்படாத காரணத்தால் இ-காணி செயல் திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை.**

காணி ஆவணங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையை நிகழ் நிலையில் மேற்கொள்ளும் நோக்கில், ஈ- காணி (e - Land) செயல் திட்டத்திற்கு உரிய ஆவணங்களை ஊடுகதிர் செய்யும் நடவடிக்கை 50 காணிப் பதிவாளர் அலுவலகங்களுள் 20 அலுவலகங்களில் மட்டும் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு உரிய 11,595,197 ஆவணங்கள் மட்டும் ஊடுகதிர் செய்யப்பட்டிருந்தன. 2018 ஆம் ஆண்டின் பின்னர் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ஊடுகதிர் செய்தல் மேற்கொள்ளப்படாத காரணத்தால் செயல் திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதற்கு அமைய கொழும்பு மற்றும் ஹோமாகம கணிப் பதிவாளர் அலுவலகங்களுக்கு மட்டும் இந்த வேலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. வேலைத் திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா. 99 மில்லியன் பெறுமதியான இயந்திரம், உபகரணங்கள் மற்றும் ஏனைய உதிரிப் பாகங்கள் என்பன பிரதான அலுவலகத்தில் பிரிவுகளிடையே மற்றும் காணிப் பதிவாளர் அலுவலகங்கள் இடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், வேலைத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருந்த கொழும்பு மற்றும் ஹோமாகம பதிவாளர் அலுவலகங்களிலும், முதல் கட்டம் மட்டுமே செயல்படுத்தப்பட்டிருந்தது.

**பிறப்பு, திருமணம் மற்றும் மரணம் தொடர்பான சிவில் பதிவு தொடர்பான தகவல்கள் தரவு ஒழுங்கமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்காமை.**

அரச துறையினைப் புனர் நிர்மாணம் செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் பிறப்பு, திருமணம் மற்றும் மரணம் தொடர்பான சிவில் பதிவு தொடர்பான தகவல்கள் மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்பட்ட தரவு ஒழுங்கமைப்பினைத் தயாரிப்பதற்காக 2010 / 2011 ஆம் ஆண்டு வரையில் நிர்மாணிக்கப்பட்ட மென்பொருள் ஒழுங்கமைப்பைப் பிரதேச செயலகங்களில் பேணிச் செல்வதற்காக 331 லேப்டொப் கணினி மற்றும் உதிரிப் பாகங்கள் பகிர்ந்தாளிக்கப்பட்டிருந்த போதிலும், 14 மாவட்டங்களுக்கு உரிய 44 பிரதேச செயலகங்களில் 2021 ஆம் ஆண்டுக்குரிய தரவு ஒழுங்கமைப்பிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது பதிவு செய்யப்பட்ட 53,739 பிறப்புகளில் 01 மட்டும் மற்றும் பதிவு செய்யப்பட்ட 23,467 மரணங்களில் 04 மட்டுமே ஆகும். அதே போன்று திருமணம் தொடர்பான தகவல்கள் எதுவும் பிரதேச செயலகங்களில் பேணப்பட்டு இருக்கவில்லை

# வெளிநாட்டு அலுவல்கள் துறை

## கணக்காய்வு அவதானிப்புகள்

- வெளிநாடுகளில் மரணமடைந்த ∴ ஊனமுற்ற இலங்கையர்களுக்கு உரிய நட்ட ஈட்டுத் தொகையினை செலுத்துதல்.
- கட்டு நிதி தீர்க்கப்படாமை
- சொத்து முகாமைத்துவம்

# வெளிநாட்டு அலுவல்கள் துறை

நட்பு மற்றும் அணிசேரா வெளிநாட்டு கொள்கைகளின் அடிப்படையில் இலங்கையின் அடையாளத்தை உறுதிப்படுத்தி உலகின் அனைத்து நாடுகளுடனும் நட்புறவை பேணிக் கொண்டு சர்வதேச சமூகத்தில் பொறுப்பினை வகிக்கும் நாடாக மாறுவதற்காக இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டு கொள்கைகளுக்கு இணங்க இலங்கையின் தேசிய அபிலாசைகளை சர்வதேச ரீதியில் அபிவிருத்தி செய்தல் மற்றும் பாதுகாத்தல், நிரூபித்தல், இலங்கையின் தேசிய அபிலாசைகளுக்கு இணங்க சர்வதேச உறவு முகாமைத்துவப்படுத்தல் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனைகளை வழங்குதல் என்பன அமைச்சின் செயற்பாடுகள் ஆகும்.
வெளிநாடுகளில் அமைந்துள்ள அறுபது (60) இலங்கை தூதரகங்கள் ஃ உயர் ஸ்தானிகர் அலுவலகங்களின் வலையமைப்பொன்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் நிர்வகிக்கப்படுவதுடன், லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவு மற்றும் மூலோபாய ஆய்வுகள் தொடர்பான நிறுவனமும் இந்த அமைச்சின் மூலம் கண்காணிப்பு செய்யப்படுகின்றது.

வெளிநாட்டு அலுவலர்கள் அமைச்சுக்கு மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா. 17,860 மில்லியன் நிதி பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன். மீளாய்வாண்டின் இறுதியில் அதில் ரூபா. 14,798 மில்லியன் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் தொகுக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.


**வெளிநாடுகளில் மரணமடைந்த ஃ ஊனமுற்ற இலங்கையர்களுக்கு உரிய நட்ட ஈட்டுத் தொகையினை செலுத்துதல்.**

சவுதி அரேபியாவில் தொழில் புரிபவர் 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 ஆம் திகதி விபத்துக்குட்பட்டு முழுமையாக அங்கவீனமுற்று 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும் எதுவிதமான நட்ட ஈட்டுத் தொகையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. குவைத் இராஜ்யத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் 2012 ஜனவரி 29 ஆம் திகதி மரணமடைந்திருந்ததுடன் அவரது உள் உறுப்புக்கள் அகற்றப்பட்டிருந்தது என வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மரணம் ஏற்பட்டு 10 வருடங்கள் கடந்து இருந்த போதிலும், எதுவிதமான நட்ட ஈட்டுத் தொகையையும் பெற்றுக் கொள்ளக் கூடிய திறன் தொடர்பில் கண்டறிவதற்கு உயர் ஸ்தானிகர் அலுவலக உத்தியோகத்தர்கள் தவறி இருந்தனர். அதே போன்று சுமார் 17


வருட காலம் குவைத் இராஜ்யத்தில் வீட்டுப் பணிப் பெண்ணாக சேவையாற்றியிருந்த தொழிலாளி ஒருவர் 2011 ஒக்டோபர் 17 ஆம் திகதி காப்பகத்தினுள் மரணம் அடைந்திருந்தார். இறந்தவர் உயிருடன் இருந்தபோது முதலாளியினால் சிறுநீரகம் ஒன்று அகற்றப்பட்டிருந்தது என்பதற்கான குற்றச்சாட்டு உள்ளது என்பதால் அதற்காக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் நீதிமன்ற வைத்திய அறிக்கை என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டு இருந்த போதிலும் மரணம் அடைந்து 11 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் அந்த அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கு உயர் ஸ்தானிகர் அலுவலகம் தவறியிருந்தது. ஜெத்தாவில் 2011 ஆம் ஆண்டில் மரணம் அடைந்த தொழிலாளி ஒருவருக்கு மரணத்திற்கான காரணம் தற்கொலையா அல்லது விபத்தினால் ஏற்பட்டதா என்பது தொடர்பில் உறுதிப்படுத்துவதற்காக பொலிஸ் அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### கட்டு நிதி தீர்க்கப்படாமை.

மீளாய்வாண்டு இறுதி வரையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இரு கட்டு நிதிக் கணக்குகளில் முறையே ரூபா. 86 மில்லியன் மற்றும் ரூபா. 365 மில்லியன் என மொத்தம் ரூபா. 450.49 மில்லியன் தீர்க்கப்படாத முற்பண மீதியாகக் காணப்பட்டது. இதில் ரூபா. 86 மில்லியனான கட்டு நிதி மீதியில் ரூபா. 56.10 மில்லியன் மீதியானது வெளிநாட்டுத் தூதரகங்களில் சேவைக்காக வெளிநாட்டுக்குச் சென்ற பதவி அணியினருக்கு வழங்கப்பட்டிருந்த வீடுகளுக்காக வைக்கப்பட்ட 243 பாதுகாப்பு வைப்புகளைக் கொண்டிருந்தது. ஒரு பிணை வைப்பினைத் தவிர ரூபா. 56 மில்லியனான 242 வீட்டுப் பிணை வைப்புகளும் இதுவரையில் வெளிநாட்டுத் தூதரக பதவி அணியினரால் பயன்படுத்தப்படாத வீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்புகள் ஆகும். மற்றைய கட்டு நிதிக் கணக்கில் தீர்க்கப்படாத முற்பண மீதியான ரூபா. 365 மில்லியன் வெளிநாட்டு தூதரக சேவைக்காக வெளிநாட்டிற்கு வந்த பதவி அணியினருக்கு வழங்கப்படும் வீடுகளுக்காக வைக்கப்படும் பாதுகாப்பு வைப்பு ரூபா. 319 மில்லியனானதுடன் அதில் ரூபா. 63 மில்லியன் தூதரக பதவி அணியினர் வசிக்காத வீடுகளுக்காக வைக்கப்பட்டிருந்த 108 வைப்புக்களைக் கொண்டிருந்தது.




வரைபடம் : 26 கட்டுநிதி 700-0-0-35- 13




வரைபடம் : 27 கட்டுநிதி 700-0-0-35- 22

### சொத்து முகாமைத்துவம்

1972 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்து சுவீடனில் அமைந்துள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் உத்தியோகபூர்வ இல்ல கட்டிடம் 2012 ஆம் ஆண்டு தொடக்கமும், 1976 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்து கென்னியாவில் அமைந்துள்ள இலங்கை பிரதான ஆணையாளர் அலுவலகத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ இல்லம் 2014 ஆம் ஆண்டு தொடக்கமும் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டு இருந்ததுடன் அந்த கட்டிடங்களைப் புனர்நிர்மாணம் செய்து பயன்படுத்தப்படாத காரணத்தினால் உத்தியோகபூர்வ இல்ல வாடகையாக மீளாய்வாண்டில் ரூபா.55.58 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

# வர்த்தகத் துறை

## கணக்காய்வு அவதானிப்புகள

- வியாபார, வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு
  - அரிசி ஒதுக்க இருப்புகளைப் பராமரிப்பது .தொடர்பான அமைச்சின் மேற்பார்வைப் பணிகளைச் செய்யத் தவறியிருந்தது
  - மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.
  - மட்டக்களப்பு ரஜவாச லங்கா சதொச மெகா விற்பனை நிலைய நிர்மாணிப்புத் திட்டம் நிறைவு பெற்றிருக்கவில்லை.
- உணவு ஆணையாளர் திணைக்களம்
  - இந்திய உதவி விநியோகம்
  - தம்புள்ளை வெப்பநிலைக் கட்டுப்பாட்டு களஞ்சியத் தொகுதியை நிர்மாணிப்பதில் தாமதம்
  - உணவகக் கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது.
- கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
  - கூட்டுறவு திரண்ட நிதியிலிருந்து வழங்கப்பட்ட கடனை வசூலிக்காமை
  - கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த கடன் அறவிடப்பட்டிராமை
- கூட்டுறவு அபிவிருத்தி நிதியம்
  - கூட்டுறவு கல்வி ஊழியர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்தும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு அரச சேவைகள் சனச எனும் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன்கள் வசூலிக்கப்பட்டிராமை
  - கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த கடன் வசூலிக்கப்படாமை

- இலங்கை அரச வர்த்தக பல்நோக்கு கூட்டுத்தாபனம்
    - கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஹிங்குரக்கொட மற்றும் பன்னேகமுவ அரிசி பதனிடும் வளாகம் விளைவற்ற நிலையில் உள்ளமை.
    - களஞ்சிய நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்திராமை
    - எழுத்து மூல உடன்படிக்கைகளில் ஈடுபடாது, சொத்தைக் குத்தகைக்கிடப்பட்டமையால் வரி வருமானம் இழக்கப்பட்டமை
    - பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளைத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை
- லங்கா சதொச கம்பனி
    - லங்கா சதொச விற்பனை நிலைய வலையமைப்பின் செயற்திறன்
- லலித் அதுலத் முதலி மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
    - மில்வா பல்கலைக்கழக கிராமச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்
    - பல்கலைக்கழகத்திற்குச் சேர்க்கப்படும் மற்றும் புலமைப்பரிசில் பெறுவதற்கு தகைமை கொண்ட சகல மாணவர்களுக்காகவும் மஹாபொல புலமைப்பரிசில் வழங்குதல
- பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை
    - முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை நடவடிக்கைகள் நிறைவேறியிராமை
    - பாவனையாளர்களின் பிரச்சனைகளை உடனுக்குடன் முன்வைத்தல் மற்றும் பாவனையாளர்களுக்கு சந்தை விலைகளைத் தெரியப்படுத்துவதற்கான மென்பொருட்கள் செயற்பாட்டு நிலையில் இராமை
    - சுற்றிவளைப்பு இலக்குகள் எய்தியிராமை
- இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம்
    - உரிமை கோரப்படாத காணியில் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்குப் பணம் செலவிடப்பட்டமை
    - காப்புரிமை (பேடன்ட் அனுமதிப்பத்திரம்) வழங்கும் மற்றும் வர்த்தக முத்திரை பதிவு செய்தல் ஆகியவற்றின் முன்னேற்றத்திலான பலவீனம

# வர்த்தகத் துறை

நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாத்து போட்டித் தன்மை வாய்ந்த உள்ளூர் வர்த்தக வலையமைப்பின் மூலம் மக்களுக்குத் தேவையான நுகர்வோர் பொருட்களை வழங்குவதற்காகச் செயற்படுவதற்காக நிறுவப்பட்ட வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு, அதன் கீழ் உள்ள 04 திணைக்களங்கள் மற்றும் 09 நியதிச்சட்ட சபைகள்/ 09 நிறுவனங்களால் பின்வரும் செயற்பாடுகள் மற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

- தேசிய வர்த்தகக் கொள்கையின் மூலம் உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் சந்தை நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கான ஓர் கருவியாக தீர்வை வரிக் கொள்கையைப் பயன்படுத்துதல் மற்றும் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகவும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு வரிசைச் சலுகைகளை வழங்குவதன் மூலம் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும்

- சந்தையில் பொருட்களின் விலைகள் அசாதாரணமாக உயரும் சந்தர்ப்பங்களில் காய்கறிகள் மற்றும் பழங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் வாழ்க்கைச் செலவைக் குறைந்த மட்டத்தில் வைத்திருத்தல்.

- ஒரு திறந்த போட்டிச் சந்தைச் சூழலில், லங்கா சதொச நிறுவனம், வரையறுக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தக (இதர) கூட்டுத்தாபனம், கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் போன்ற அரசாங்க நிறுவனங்களின் ஊடாக நுகர்வோர்களுக்கு சலுகைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களை நடாத்துதல்.

- வர்த்தக சமூகம் மற்றும் நுகர்வோரின் நலனுக்காக அலகுத் தரத்தை முறையாக செயற்படுத்துவதை உறுதிசெய்தல்.

- உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் காப்பு இருப்பு (Buffer Stock) பேணுவதற்கு தேவையான சட்டக் கட்டமைப்பையும் உட்கட்டமைப்பையும் விருத்தி செய்தல்.

- அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களிற்கு தொடர்பான தரவு முறைமையைப் பேணி, அத் தரவு முறையை நாளதுவரையாக்கி அத் தரவை வெளிப்புறத் தகவல் வழங்கும் நிறுவனத்துடன் இணைக்கும் பொறிமுறையை அமைத்தல்.

- தேசிய அளவில் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக சட்ட பூர்வ ஆதரவு, ஆலோசனைப் பங்களிப்பை வழங்குதல்.

- உள்ளூர் உற்பத்திகள் மற்றும் ஏற்றுமதிப் பொருட்களின் சரியான தரத்தை பேணுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் நிறுவனத்தை வழிநடத்தல்.

- கல்வியில், உயர் கல்விக்காக சிறார்களை ஊக்குவிப்பது தொடர்பான நலன்புரி செயல்முறைகளைப் பராமரிப்பதில் பங்களிப்புச் செய்தல்.

- தேசிய அறிவுசார் சொத்துரிமையைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு பொறிமுறையை செயற்படுத்துவதற்கான வழிகாட்டுதல்.


- தேசிய மற்றும் சர்வதேச தரங்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் இணக்க மதிப்பீட்டு அங்கீகாரச் சேவைகளை உறுதி செய்வதற்கு உரிய வழிகாட்டல்.

- இலங்கையின் பொருளாதார மற்றும் வர்த்தக நலன்களைப் பாதுகாத்து மேம்படுத்தி சர்வதேச சந்தை வாய்ப்புகளுக்காக ஏற்றுமதியாளர்களை ஊக்குவித்து தேவையான நிறுவனப் பின்னணியை தயாரித்துக் கொடுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களை ஊக்குவித்தல்.

- உரிய இருதரப்பு, பிராந்திய மற்றும் பலதரப்பு வாரியாக நாடுகளுடன் உடன்படிக்கைக் கைச்சாத்திடப்படுகையில் வழிகாட்டுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

- இலங்கையின் ஏற்றுமதிக்காக முன்னுரிமை சிகிச்சை ஏற்றுமதிகள் (GSP) அன்யோன்யமற்ற வர்த்தக உடன்படிக்கைகள் (NMTR), சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் (FTA) மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் (RTA) தொடர்பான சட்ட ஒருங்கிணைப்புப் பற்றிய வழிகாட்டுதல்.

மேற்குறித்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்தால் 2022 ஆம் ஆண்டிற்காக 10,064 மில்லியன் தொகையான ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 9,008 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.




| | வர்த்தக திணைக்களம் | வர்த்தக அமைச்சு | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | உணவு ஆணையாளர் திணைக்களம் | அளவீட்டு அலகு தர நிர்ணய மற்றும் சேவைகள் திணை | இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம் | கூட்டுறவு சேவைகள் ஆணைக்குழு | தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம | பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை | இலங்கை தராதர அங்கீகார சபை | வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த தேறிய ஏற்பாடு | 206 | 8இ414 | 94 | 452 | 170 | 48 | 22 | 62 | 542 | 19 | 35 | 10இ064 |
| மொத்த செலவனம் | 104 | 7இ829 | 91 | 101 | 169 | 47 | 19 | 58 | 542 | 19 | 29 | 9இ008 |
| ளுநசநைள 3 | 102 | 585 | 3 | 351 | 1 | 1 | 3 | 4 | 0 | 0 | 6 | 1056 |

வரைபடம் : 28 வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் அளவும் உள்ளபடியான செலவினமும்
மூலம் : 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

மேற்குறித்த கடமைகளை மேற்கொள்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட அவதானிப்புகள் கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

## வியாபார, வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

### அரிசி ஒதுக்க இருப்புகளைப் பராமரிப்பது .தொடர்பான அமைச்சின் மேற்பார்வைப் பணிகளைச் செய்யத் தவறியிருந்தது.

அமைச்சின் செயற்பாட்டுத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதற்காக திட்டமிடப்பட்ட முக்கிய செயற்பணியான இலங்கையில் 8000 மெட்ரிக் தொன் பாதுகாப்பு அரிசி ஒதுக்கத்தை பேணி வருவது தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 50 மில்லியன் தொகையும் முன்னைய ஆண்டில் ரூபா 200 மில்லியன் தொகையும் ஒதுக்கீடாக உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக எவ்வித செயற்பணியும் மீளாய்வாண்டின் போதும் அதற்கு முன்னைய ஆண்டின் போதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், இது குறித்து அமைச்சின் கண்காணிப்புப் பணிகள் முறையாக நடைபெற்றிருக்கவில்லை.

### மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் கீழ் மிஹிந்தலை வர்த்தக நகர திட்டம், நுவரெலியா உயிரியல் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் அன்னிய மொழி பல்கலைக்கழகத்தை நிறுவுதல் ஆகிய 3

செயற்திட்டங்கள் அமைச்சின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்திற்குரிய காணியை கையளிக்காமை மற்றும் கல்வி அமைச்சின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிராமையுடன் மஹபொல நிதியச் சபையின் தீர்மானத்தின் படி, இச் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. மேலும் மிஹிந்தலை டீசல் வர்த்தக நகர் செயற்திட்டத்திற்காக குறித்த ஆரம்ப நடவடிக்கைகளிற்காக ரூபா 2 மில்லியன் தொகையும் இது வரை செலவிடப்பட்டிருந்தது.

**மட்டக்களப்பு ரஜவாச லங்கா சதொச மெகா விற்பனை நிலைய நிர்மாணிப்புத் திட்டம் நிறைவு பெற்றிருக்கவில்லை.**

வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக (பல்வேறு) கூட்டுத்தாபனம் (கம்பனியால்) மட்டக்களப்பில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ரஜவாச லங்கா சதொச மெகா விற்பனை நிலைய நிர்மாணத் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 48 மில்லியனாகவும் இத் திட்டத்திற்காக 2021 திசெம்பர் 31 இற்குள் அமைச்சால் ரூபா 23 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் படி, 2021 திசெம்பர் 06 ஆம் திகதிக்குள் நிர்மாணப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் 2023 மே வரையிலும் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## உணவு ஆணையாளர் திணைக்களம்

**இந்திய உதவி விநியோகம்**

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஒருங்கிணைப்பின் கீழ், மனிதாபிமான உதவியாக 2022 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 40,000 மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் பால் மா மற்றும் 50 மெற்றிக் தொன் மருந்துப் பொருட்களை வழங்கும் வேலைத்திட்டம் 03 கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ் உதவி விநியோகத்திற்காக வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சால் ரூபா 481 மில்லியன் ஒதுக்கீடு உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது. இவ் இந்திய உதவியைக் களஞ்சியப்படுத்துவதற்காக மருதானை புகையிரத களஞ்சிய சாலைகள் இரண்டிலும் கூடிய இடவசதிகள் இருக்கையில், அரிசி இருப்பு மருதானை களஞ்சிய சாலையில் சேமிக்கப்படாது ஒருகொடவத்தை களஞ்சியசாலையில் சேமித்து வைக்கப்பட்டதன் காரணமாக மீள மருதானைக் களஞ்சியத்திற்குக் கொண்டுவரப்படுவதற்காக 2022 யூலை 04 ஆம் திகதி முதல் யூலை 18 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது ரூபா 2 மில்லியன் விளைவற்ற செலவினம் நேர்ந்திருந்தது.

**தம்புள்ளை வெப்பநிலைக் கட்டுப்பாட்டு களஞ்சியத் தொகுதியை நிர்மாணிப்பதில் தாமதம்**

உடன்படிக்கைக்கு உட்பட்டிருந்த தம்புள்ளை வெப்பநிலை கட்டுப்பாட்டு களஞ்சிய தொகுதி நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நாட்களை விட 03 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், குறித்த செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உள்நாட்டு நிதி மற்றும் வெளிநாட்டு மானியங்களின் கீழான ரூபா 205 மில்லியன் தொகையான மொத்த தேறிய ஒதுக்கீடும் வெளிநாட்டு ஒதுக்கீட்டில் 99

சதவீதமான அதாவது ரூபா 39 மில்லியன் தொகை எஞ்சியிருந்தது.

**உணவகக் கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது.**

உணவகக் கட்டிடம் மாத வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்காக 3 ஆண்டுகளுக்காக ரூபா 5.12 மில்லியன் தொகை பெறவேண்டியதாகக் காணப்பட்டது. 2020 திசெம்பர் 01 ஆம் திகதி முதல் 2022 நவம்பர் 30 ஆம் திகதி வரை மாத்திரம் ரூபா 3 மில்லியன் பட்டியல்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 2 மில்லியன் வாடகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் உடன்படிக்கை மீறியமையால் உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்**

**கூட்டுறவு திரண்ட நிதியிலிருந்து வழங்கப்பட்ட கடனை வசூலிக்காமை**

செயற்படாத கடன் அட்டவணையின் படி, 1989 முதல் 2006 வரையான காலப்பகுதியின் போது நிதியத்தில் இருந்து 69 கூட்டுறவு சங்கங்களுக்கு ரூபா 129 மில்லியன் கடன் தொகையில் 2022 சனவரி 01 அன்று ரூபா 89 மில்லியன் நிலுவைத் தொகை அறவிடப்படுவதற்கு இருந்ததுடன் 2022 சனவரி 01 இல் உள்ளவாறு 2022 ஆம் ஆண்டில் ரூபா 507 மில்லியன் தொகையான பெறவேண்டிய செயற்பாட்டுக் கடன் மீதியில் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 25 மில்லியன் தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. இக் கடன் மீதியில் 07 வருடங்களுக்கு முன்னர் பல்வேறு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 125 மில்லியன் கடன் மீதியிலிருந்து எந்தத் தொகையும் மீட்கப்படவில்லை. 2022 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு இக் கடன் மீதியில் பெறவேண்டிய ரூபா 217 மில்லியன் கடன் வட்டியும் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டில் ரூபா 10 மில்லியன் மாத்திரமே கிடைக்கப்பெற்றிருந்தது. மேலும் 2010, 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பான வருடாந்த கடன் வட்டி மற்றும் கடன் தவணைகளை உடன்படிக்கையின் பிரகாரம் வசூலிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததன் காரணமாக 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 49 மில்லியன் தொகையான வட்டித் தொகை இலாபத்தில் இருந்து கழிக்கப்பட்டிருந்தது.

**கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த கடன் அறவிடப்பட்டிராமை**

கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு 2013 மே 8 அன்று வழங்கப்பட்டிருந்த ரூபா 75 மில்லியன் கடன் தொகையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 62 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் இதற்காக வசூலிக்கப்பட வேண்டிய வட்டி ரூபா 76 மில்லியன் ஆகக் காணப்பட்டது. 10 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் கடன் தொகையும் வட்டித் தொகையும் சேர்த்து ரூபா 138 மில்லியன் தொகை 2022 திசெம்பர் 31 வரையிலும்

அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**கூட்டுறவு அபிவிருத்தி நிதியம்**

**கூட்டுறவு கல்வி ஊழியர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்தும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு அரச சேவைகள் சனச எனும் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன்கள் வசூலிக்கப்பட்டிராமை.**

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கப் பெறவேண்டிய பங்களிப்புத் தொகை மீதி ரூபா 119 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 61 மில்லியன் மற்றும் ரூபா 17 மில்லியனாக மொத்தம் ரூபா 79 மில்லியன் அதாவது 66 சதவீதமான உயரிய சதவீதம் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கல்வி சேவை ஊழியர் கூட்டுறவு சங்கத்திடம் இருந்தும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு அரச சேவைகள் சனச எனும் இரு சங்கங்களிடம் இருந்து வசூலிக்கப்பட வேண்டியிருந்தது. பெறவேண்டிய பங்களிப்புத் தொகை மீதியில் 12 சங்கங்களில் இருந்து 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான பங்களிப்புத் தொகை பெறப்பட்டிருக்கவில்லை. இத் தொகை ரூபா 5 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

**கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த கடன் வசூலிக்கப்படாமை**

கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தில் இருந்து 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 153 மில்லியன் கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இத் தொகையில், 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 60 மில்லியன் மட்டுமே வசூலிக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் வசூலிக்கப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 93 மில்லியனாகக் காணப்பட்டது.

**இலங்கை அரச வர்த்தக பல்நோக்கு கூட்டுத்தாபனம்**

வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் 2022 மார்ச் 31 இல் உள்ளவாறு வசூலிக்கப்படாதுள்ள மீதி ரூபா 995 மில்லியனாகும். அம் மீதியில் 2, 3, 4, 5 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேலான மீதிகள் முறையே ரூபா 2 மில்லியன் ரூபா 7 மில்லியன் ரூபா 16 மில்லியன் ரூபா 11 மில்லியன் மற்றும் 138 மில்லியனாகக் காணப்பட்டன. மேலும், முன்னைய விற்பனைக்கான கட்டணம் வசூலிக்கப்படாத கடன்பட்டோரிடம் இருந்தும் மீண்டும் மீண்டும கடன் விற்பனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஹிங்குரக்கொட மற்றும் பன்னேகமுவ அரிசி பதனிடும் வளாகம் விளைவற்ற நிலையில் உள்ளமை.**

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஹிங்குரக்கொட மற்றும் பன்னேகமுவ அரிசி பதனிடும் வளாகம் ஏறக்குறைய 18 ஆண்டு காலமாக குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன் இரண்டு அரிசி வளாகங்களிலும் ஒரு மணி நேரத்திற்கு 2000 கிலோ படி அரிசியை பதனிடும் திறன் கொண்டவையாகும். எவ்வாறெனினும், 2022 ஆம் ஆண்டில் குறித்த இரண்டு அரிசி வளாகங்களிலும் எந்தவித அரிசி உற்பத்தியும்

மேற்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டதுடன் அரிசி பதப்படுத்தும் இரு வளாகங்களிலும் 2022 ஆம் ஆண்டில் 03 முதல் 12 பணியாட்கள் பணியமர்த்தப்பட்டிருந்ததுடன் சம்பளம் மற்றும் மேலதிக நேரக்கொடுப்பனவு மற்றும் கொடுப்பனவுகள் உட்பட ஊழியர் கிரயம் ரூபா 10.59 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

**களஞ்சிய நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்திராமை**

அமைச்சின் ஒதுக்கங்களின் கீழ், 2019 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான 13 களஞ்சியங்களை நவீனமயமாக்கல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் நவீனமயமாக்கலுக்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தால் ரூபா 83 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அமைச்சினால், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 62 மில்லியன் செலவினங்கள் மீளளிக்கப்பட்டிருந்தன. அச் சகல நவீனமயமாக்கல் நடவடிக்கைகளும் 2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டளவிலும் 9 களஞ்சியங்களில் மாத்திரம் நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

**எழுத்து மூல உடன்படிக்கைகளில் ஈடுபடாது, சொத்தைக் குத்தகைக்கிடப்பட்டமையால் வரி வருமானம் இழக்கப்பட்டமை**

கூட்டுத்தாபனத்தால் வருடாந்த வாடகை வருமானம் ரூபா 86 மில்லியன் தொகையான 71,464 சதுர அடி சொத்து 2022 இல் எழுத்துமூல உடன்படிக்கை எதுவும் மேற்கொள்ளப்படாது குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. இவ்வாறு எழுத்து மூல உடன்படிக்கைகளில் சேர்க்கப்படாததன் காரணமாக லங்கா சதொச நிறுவனம் விலைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 142 மில்லியன் குத்தகைப் பெறுமதியை விடக் குறைவாகச் செலுத்தியிருந்தமையால் 2022 ஆம் ஆண்டில் இழந்த வருமானம் ரூபா 29 மில்லியனாகக் காணப்பட்டது.

**பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளைத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை.**

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, லங்கா சதொச நிறுவனம் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை ஆகியவற்றிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்த தொகை முறையே ரூபா 2,152 மில்லியன் மற்றும் 94 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன் கூட்டுத்தாபத்தால் லங்கா சதொச நிறுவனத்திற்கும் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் செலுத்த வேண்டிய தொகை முறையே ரூபா 89 மில்லியன் ஆகவும் ரூபா 967 மில்லியன் ஆகவும் காணப்பட்டது.

## லங்கா சதொச கம்பனி

**லங்கா சதொச விற்பனை நிலைய வலையமைப்பின் செயற்திறன்**

2022 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் மொத்த விற்பனை நிலையங்களின் இலாப நட்ட நிலையைக கருத்திற்கொள்கையில் 452 விற்பனை நிலையங்களில் 193 விற்பனை நிலையங்கள் அதாவது 43

சதவீதமானவை நட்டத்தில் உள்ளமை அவதானிக்கப்பட்டது. அவ் விற்பனை நிலையங்களில் ரூபா 0.005 மில்லியன் முதல் ரூபா 5.25 மில்லியன் வரையான இழப்புகள் ஏற்பட்டிருந்ததுடன் அந்த மொத்த இழப்பு மதிப்பு ரூபா 288 மில்லியன் ஆகக் காணப்பட்டது. விற்பனை நிலையங்களின் சராசரி மொத்த இலாப விகிதம் 12 சதவீதமான குறைந்த நிலையில் இருந்தமை மற்றும் நாளாந்த விற்பனை ரூபா 0.2 மில்லியனான குறைந்த நிலையில் இருந்தமை மற்றும் அதிகளவான மேந்தலைச் செலவினத்தை ஏற்றமை இதற்கான முக்கியமான காரணங்களாகியிருந்தன.

**லலித் அதுலத் முதலி மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

**மில்வா பல்கலைக்கழக கிராமச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.**

மில்வா பல்கலைக்கழக கிராமச் செயற்திட்ட அறிக்கையைத் தயாரித்து முதலீட்டாளர்களுடனான உடன்படிக்கையில் கைச்சாத்திடல் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாது 2021 திசெம்பர் 30 அன்று ரூபா 340 மில்லியன் செலவிடப்பட்டு 99 வருட காலக் குத்தகை அடிப்படையில் கையகப்படுத்தப்பட்ட காணியின் உரித்தைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கு 2023 யூன் 30 ஆம் திகதி வரையிலும் தவறியிருந்தது.

**பல்கலைக்கழகத்திற்குச் சேர்க்கப்படும் மற்றும் புலமைப்பரிசில் பெறுவதற்கு தகைமை கொண்ட சகல மாணவர்களுக்காகவும் மஹாபொல புலமைப்பரிசில் வழங்குதல்.**

பல்கலைக்கழகத்திற்குச் சேர்க்கப்படும் மற்றும் புலமைப்பரிசில் பெறுவதற்கு தகைமை கொண்ட மாணவர்களுக்காக மஹாபொல புலமைப்பரிசில் ஒன்றை வழங்குவதனை இலக்காகக் கொண்டிருந்த போதிலும் பெற்றோர்களால் உழைக்கப்படும் வருடாந்த வருமானம் ரூபா 0.5 மில்லியன் இற்கு குறைவானமை எனும் நிர்ணயிப்பை அடிப்படையாகக் கொண்டதன் காரணமாக 2020/2021 கல்வி ஆண்டிற்கு உரித்தாக மஹாபொல புலமைப்பரிசில் வழங்கப்படுவதற்கு பலகலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் தகைமை பெறும் மாணவர்கள் 26,000 ஆனதுடன் இவர்களில் நிதியத்தின் பொறுப்பாளர் சபையின் மூலம் 16,000 மாணவர்கள் மாத்திரம் அதாவது 61.5 சதவீதத்திற்கு மாத்திரம் மஹாபொல புலமைப்பரிசில் வழங்கப்பட்டிருந்தது.

**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை நடவடிக்கைகள் நிறைவேறியிராமை**

நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளால் பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு நிவாரணத்தை வழங்குவதற்காக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் அதிகாரச்சட்டத்தின் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க பாவனையாளர்களின் முறைப்பாடுகள் தொடர்பில் தலையிட்டு உற்பத்தியாளர் அல்லது விற்பனையாளரால் வழங்கப்படும்

அனுமதிப்பத்திரத்திற்கு அல்லது அனுமதிப்பத்திரத்திற்கு அல்லது உத்தரவாதத்திற்கு தொடர்புடைய விடயங்கள் அல்லது வேறு விடயங்களுக்கு இணங்க பொருட்களை விற்பனை செய்வது அல்லது சேவைகளை வழங்குவது தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பாக அதிகாரசபை விசாரணை செய்ய முடியும். இருப்பினும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது மாவட்டங்களுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 284 முறைப்பாடுகள் மற்றும் தலைமை அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளில் 1078 முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**பாவனையாளர்களின் பிரச்சனைகளை உடனுக்குடன் முன்வைத்தல் மற்றும் பாவனையாளர்களுக்கு சந்தை விலைகளைத் தெரியப்படுத்துவதற்கான மென்பொருட்கள் செயற்பாட்டு நிலையில் இராமை.**

பாவனையாளர்களின் பிரச்சனைகளை உடனடியாக சமர்ப்பித்து பாவனையாளர்களுக்கு சந்தை விலைகளைத் தெரியப்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது 1977 இன் பாவனையாளர் விசாரணை சேவைகள் (1977 Interactive Mobile Service) மென்பொருளுக்காக அதிகாசபையால் ரூபா 5 மில்லியன் தொகையும் இச் செயற்திட்டத்தைப் பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்துவதற்காக ரூபா 4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், பல்வேறு குறைபாடுகள் காரணமாக செயற்திட்டம் எதிர்பார்த்த பணிகளை நிறைவேற்றியிருக்கவில்லை.

**சுற்றிவளைப்பு இலக்குகள் எய்தியிராமை**

2022 ஆம் ஆண்டின் போது நாடு முழுவதும் 23,280 சுற்றிவளைப்புகள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதில் 13,980 சோதனைகள் அதாவது 60 சதவீதம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கொழும்பு, கண்டி, களுத்துறை, காலி, பதுளை, நுவரெலியா ஆகிய 06 மாவட்டங்களில் இலக்கிடப்பட்ட சுற்றிவளைப்புகளில் 50 சதவீதத்திற்கும் குறைவான சுற்றிவளைப்புகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

**உரிமை கோரப்படாத காணியில் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்குப் பணம் செலவிடப்பட்டமை**

காணியின் உரித்தை கையேற்காது புலமைச் சொத்து விற்பனை மேம்பாட்டு மையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 22 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும், அது தொடர்பான காணி, நகர அபிவிருத்தி அதிகாரசபையால் சுவீகரிக்கப்பட்டிருந்தது. இக் கட்டிடம் நிர்மாணிக்கப்படுவதற்காக செலவிடப்பட்ட தொகை 2022 ஆம் ஆண்டின் போதும் தீர்க்கப்படுவதற்கு இயலாது போயிருந்தது.

**காப்புரிமை (பேடன்ட் அனுமதிப்பத்திரம்) வழங்கும் மற்றும் வர்த்தக முத்திரை பதிவு செய்தல் ஆகியவற்றின் முன்னேற்றத்திலான பலவீனம்.**

மீளாய்வாண்டின் போது, காப்புரிமை பெறுவதற்காக 431 பேர் கோரியிருந்ததுடன் 2023 ஏப்ரல் 30 வரையில் இதில் 5 பேருக்கு மாத்திரதே உரிமம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், வர்த்தக முத்திரை பதிவிற்காக கிடைக்கப்பெற்ற 9,465 விண்ணப்பங்களில் 531 விண்ணப்பங்கள் அதாவது 5.6 சதவீதம் மாத்திரமே முதன்மை மற்றும் இரண்டாம் நிலை பரிசோதனைகளிற்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

# அனர்த்த முகாமைத்துவத் துறை

## கணக்காய்வு அவதானிப்புகள்

- வளிமண்டலவியல் திணைக்களம்
    - ஏற்பாடுகளின் பயன்பாடு
    - கொங்கல ரேடார் அமைப்பை ஸ்தாபிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட விளைவற்ற பணச் செலவு
    - தன்னியக்க வளிமண்டலவியல் முறைமை முறையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.
    - வளிமண்டலவியல் நிலையங்களில் ரேடார் முறைமைகள் ஸ்தாபிக்கப்பட்டிராமை
- தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம்
    - அங்கீகாரம் இன்றி ஊக்குவிப்புத் தொகை செலுத்தப்பட்டிருந்தமை
    - சட்ட ரீதியான அந்தஸ்தை வழங்குவதற்காக ஓர் அதிகாரச்சட்டத்தை அங்கீகரித்துக்கொண்டிராமை
    - தன்னியக்க மழைமானி செயலிழந்திருந்தது.
    - மாவட்ட அலுவலகங்களை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிராமை
    - மண்சரிவு ஆய்வு அறிக்கைகள் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கான அறிக்கைகள் வழங்குவதில் தாமதம்
    - சுனாமி முன்னெச்சரிக்கை சமிக்ஞைக் கோபுரங்கள் செயற்படாமை
    - தேசிய அவசரகாலச் செயற்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிராமை
    - இழப்பீடு வழங்கப்பட்டிராமை
    - ஒரு செயற்திட்டத்தை முறையாக நிறைவேற்றியிராத ஓர் ஒப்பந்தக்காரருக்கு மீள ஓர் ஒப்பந்தத்தை வழங்கியிருந்தமை

# அனர்த்த முகாமைத்துவத் துறை

ஒரு நாட்டின் வானிலை மற்றும் காலநிலை நிலைமைகள் அந் நாட்டு மக்களின் சுகாதார மற்றும் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதைப் போன்று நாட்டின் உற்பத்தியில் ஏற்படும் மாறுபாடுகளிலும் பாரிய அளவில் தாக்கத்தைச் செலுத்துகின்றது. இவ்வாறே, வானிலை மற்றும் காலநிலை நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களை முன்கூட்டியே கண்டறிந்துகொள்வதன் மூலம் அதற்கான தெளிவான திட்டங்களைத் தயாரித்துக்கொண்டு எதிகாலத்தில் நிகழக்கூடிய பேரிடர்களில் இருந்து நாட்டையும் அங்கு வாழும் மக்களையும் காப்பாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க முடியும். இக் கண்ணோட்டத்தில் பார்க்கையில் ஒரு நாட்டின் அனர்த்த முகாமைத்துவத் துறை, அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வலுவான பங்களிப்பைச் செய்கின்றது.

நாட்டின் இயற்கை அனர்த்த அபாயத்தை முன்கூட்டியே கண்டறிதல், அனர்த்தத்தை தடுத்தல், சேதத் தணிப்பு மற்றும் பாதிக்கப்பட்டவர்களை ஊக்குவித்து செயற்திறனாக்குவதற்காக அனர்த்த அபாய முகாமைத்து நிலையங்களை ஒருங்கிணைத்து நிறுவனக் கட்டமைப்பை வலுப்படுத்தி, அனர்த்த நிலைகள் தொடர்பாக துல்லியமாக எதிர்வு கூறக்கூடிய வகையில் நவீன தொழில்நுட்பம் மற்றும் அறிவைக் கொண்டு வளிமண்டலவியல் திணைக்களத்தை வலுப்படுத்துதல். அனர்த்தங்களிற்கு உட்பட்ட பிரதேசங்கள், நித்தம் அனர்த்தங்களிற்கு உட்படும் அபாயமான பிரதேசங்கள், அனர்த்தங்களால் பாதிப்பிற்குட்பட்ட நபர்கள், சொத்துக்கள், வியாபாரங்கள் மற்றும் விவசாய நிலங்கள் பற்றிய அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கிய "தேசிய அனர்த்தத் தரவுத் தளத்தை" ஸ்தாபிக்கும் நோக்குடன் அனர்த்த முகாமைத்துவத் துறை செயற்பட்டு வருகின்றது. இதன்படி, அத் துறையின் கீழ் ஒரு திணைக்களமும் 04 நியதிச்சட்ட நிறுவனங்களும் இயங்கி வருகின்றன.

மேற்குறித்த நிறுவனங்களால் அவர்களது கடமைகள் நிறைவேற்றப்படுகையில் கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் தொகுக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

### வளிமண்டலவியல் திணைக்களம்

#### ஏற்பாடுகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான சகல சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து தேறிய ஏற்பாடு ரூபா 791.7 மில்லியனாகக் காணப்பட்டதுடன் மொத்தச் செலவினம் ரூபா 369.2 மில்லியனாகக் காணப்பட்டமையால் மிகுதி ரூபா 422.5 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இதன் படி, 53 சதவீத ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 03 மூலதனச் செலவின விடயங்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 378 மில்லியனான மொத்த ஏற்பாடும் 04 மூலதனச் செலவின விடயங்களில் 39 முதல் 91 சதவீதம்

வரையான வீச்சிலான ஏற்பாடும் பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்தது.

**கொங்கல ரேடார் அமைப்பை ஸ்தாபிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட விளைவற்ற பணச் செலவு**

திணைக்களத்தால் கொங்கல ரேடார் அமைப்பை ஸ்தாபிப்பதற்காக ரூபா 403 மில்லியன் செலவிடப்பட்டு 13 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அச் செயற்பணிகள் இது வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. குறித்த செயற்பணிக்காகக் கொண்டுவரப்பட்டிருந்த உபகரணங்களில் ரூபா 09 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் காணாமற் போயிருந்ததுடன் இவ்வாறு காணாமற்போனமைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு அவ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**தன்னியக்க வளிமண்டலவியல் முறைமை முறையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.**

ஜப்பானிய உதவியில் (JICA) 2008 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 570 மில்லியன் பெறுமதியான 38 தன்னியக்க வளிமண்டலவியல் முறைமைகளின் மூலம், வெப்பநிலை, ஈரப்பதம், மழைவீழ்ச்சி, காற்றின் வேகம் மற்றும் திசை, அமுக்கம், சூரிய கதிர்வீச்சின் அளவு போன்ற அளவுருக்கள் அளவிடப்படுகின்றன. இவ் உபகரண முறைமைக்கான உதிரிப்பாகங்களிற்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 123 மில்லியன் தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்ததுடன் ஸ்தாபிப்பதற்கு உரித்தான கொள்வன விற்காக முறையான அங்கீகாரங்களுடன் கோவைகள் முறைப்படி பேணப்பட்டு கொள்வனவுப் பிரிவில் முறையாகப் பேணப்பட்டிருக்க வில்லை. இவ் உபகரண முறைமைகளில் 20 வளிமண்டலவியல் பிராந்திய அலுவலக வளாகத்திலும், எஞ்சிய 16 தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் போன்ற ஏனைய நிறுவன வளாகங்களிலும் ஸ்தாபிக்கப் பட்டிருந்ததுடன் 02 முறைமைகள் ஸ்தாபிக்கப்படாத நிலையில் காணப்பட்டன.

**வளிமண்டலவியல் நிலையங்களில் ரேடார் முறைமைகள் ஸ்தாபிக்கப்பட்டிராமை**

டொப்லர் ரேடார் முறைமை புத்தளம் மற்றும் பொத்துவில் வளிமண்டலவியல் நிலையப் பகுதியில் ஸ்தாபிக்கப்படுவதற்காக 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ரூபா 513.78 மில்லியன் தொகையான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், இதற்காக ரூபா 370,161 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் இறுதிக் கட்டத்தை அடைய வேண்டியிருந்த போதிலும், உடன்படிக்கையிடப்பட்டு 06 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் ரேடர் முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் அங்கீகாரம் இன்றி ஊக்குவிப்புத் தொகை செலுத்தப்பட்டிருந்தமை**

2000 சனவரி 11 ஆம் திகதியிடப்பட்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி மற்றும் 1994 யூன் 14 ஆம் திகதிய 05 ஆம் இலக்க பொது முயற்சிகள்

சுற்றறிக்கையின் படி, அமைச்சரவை அல்லது பொது நிர்வாக அமைச்சு அல்லது பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் இன்றி 2022 ஆம் ஆண்டின் சனவரி முதல் ஏப்ரல் வரை நிறுவனத்தால் ரூபா 09 மில்லியன் ஊக்குவிப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**சட்ட ரீதியான அந்தஸ்தை வழங்குவதற்காக ஓர் அதிகாரச்சட்டத்தை அங்கீகரித்துக்கொண்டிராமை**

தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டு 30 ஆண்டுகள் அளவில் கடந்திருந்த போதிலும் இதற்கு சட்ட ரீதியான அந்தஸ்தை வழங்குவதற்காக நிறுவனத்தால் ஓர் அதிகாரச்சட்டத்தை அங்கீகரித்துக்கொள்ள முடியாதிருந்தது.

**தன்னியக்க மழைமானி செயலிழந்திருந்தது.**

மண்சரிவு எச்சரிக்கைகளை வெளியிடுவதற்கு 2022 செப்தெம்பர் 15 ஆம் திகதி கூடிய ஆபத்துள்ள 14 மாவட்டங்களில் 330 தன்னியக்க மழைமானிகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் இவற்றில் 72 செயலிழந்திருந்தன. தன்னியக்க மழைமானி முறைமைகளின் தரவுப் பரிமாற்றத்தில் ஏற்பட்ட தடைகளால் முன்னேற்பாடாக நிலச்சரிவு எச்சரிக்கை அறிவிப்புகள் வெளியிடப் படுவதில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

**மாவட்ட அலுவலகங்களை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிராமை**

இரத்தினபுரி மற்றும் களுத்துறை அலுவலகங்களை நிர்மாணிப்பதற்காக 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை பொதுத் திறைசேரியில் இருந்து ரூபா 143 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 61 மில்லியன் தொகை பயன்படுத்தப்படாதிருந்தது. இரத்தினபுரி மாவட்ட அலுவலக நிர்மாணிப்புகள் பூர்த்தியடைந்திருந்ததுடன் களுத்துறை மாவட்ட அலுவலக நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**மண்சரிவு ஆய்வு அறிக்கைகள் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கான அறிக்கைகள் வழங்குவதில் தாமதம்**

மாவட்ட/ பிரதேச செயலக அலுவலகங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன அலுவலகங்களிற்கு மண்சரிவு ஆய்வு அறிக்கைகளைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்களுக்காக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் அறிக்கைகள் வழங்கப்படுவதில் குறிப்பிடத்தக்க அளவு தாமதம் ஏற்பட்டிருந்தது.

| ஆண்டு | சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலவிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை | ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்ட எண்ணிக்கை | ஆய்வு அவசியமற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| **2020** | 2773 | 5098 | 3717 | 0 | 4154 |
| **2021** | 4154 | 7607 | 5783 | 1208 | 4770 |
| **2022** | 4770 | 4231 | 5260 | 2397 | 1344 |

அட்டவணை 20 : மண்சரிவு ஆய்வு அறிக்கைகளைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை :

### சுனாமி முன்னெச்சரிக்கை சமிக்ஞைக் கோபுரங்கள் செயற்படாமை

முல்லைத்தீவு மாவட்டத்தின் 05 இடங்களில் ரூபா 32 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சுனாமி முன்னெச்சரிக்கை சமிக்ஞைக் கோபுரங்கள் செயலிழந்திருந்தன.

### தேசிய அவசரகாலச் செயற்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிராமை

2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் 04 ஆம் பிரிவின் படி, அனர்த்த முகாமைத்துவ நிலையப் பணியில் ஒன்றாக ஓர் தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டமும் ஓர் தேசிய அவசரகாலச் செயற்பாட்டுத் திட்டமும் ஆயத்தம் செய்து தயாரிப்பதும் இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்வதும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், ஆண்டிறுதி வரையிலும் தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிராததுடன் ஓர் தேசிய அவசர காலச் செயற்பாட்டுத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### இழப்பீடு வழங்கப்பட்டிராமை

குருநாகல் மாவட்டத்தின் 28 பிரதேச செயலக அலுவலகங்களில் அனர்த்தத் தினால் 441 வீடுகள் சேதமுற்றதாக 2022 ஆம் ஆண்டின் போது அறிவிக்கப் பட்டிருந்ததுடன் 192 வீடுகள் சேதமடைந்தமைக்காக 2023 யூன் 30 ஆம் திகதி வரையிலும் இழப்பீடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### ஒரு செயற்திட்டத்தை முறையாக நிறைவேற்றியிராத ஓர் ஒப்பந்தக்காரருக்கு மீள ஓர் ஒப்பந்தத்தை வழங்கியிருந்தமை

கண்டி அக்குரணை வெள்ளத்தைக் குறைப்பதற்கான செயற்திட்டத்தை முறையாகச் செய்திராத அதே ஒப்பந்தக்காரருக்கே நுவரெலியா மாவட்ட கங்காரகொல்ல கிராமத்தின் பாறைச் சரிவையும் மண்சரிவு அபாயத்தைக் குறைக்கும் செயற்திட்ட நிர்மாணிப்பிற்கு மான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததது. இச் செயற்திட்டமும் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தமையால் செயற்திட்டத் தால் பயனடைய முடியவில்லை. இதனால் அதுவரை செலவிடப்பட்ட ரூபா 19 மில்லியன் விளைவற்ற செலவின மானதுடன் செயற்திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்ட இலக்கையும் எய்த முடியாதிருந்தது

# வெகுசன ஊடகத் துறை

## கணக்காய்வு அவதானிப்புகள்

- வெகுசன ஊடக அமைச்சு
  - பிராந்திய தொலைக்காட்சி ஒலிபரப்பை டிஜிடல் மயமாக்கும் செயற்திட்டத்திற்கான ஏற்பாட்டைப் பயன்படுத்தியிராமை
  - இலத்திரனியவியல் ஊடகங்களுக்கான ஒழுங்குமுறை வழிமுறைகளை மேம்படுத்தாமை
- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
  - பணி நியமன அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்டிருந்த அதிகாரிகளுக்கு பணியைச் செய்வதன் முன் பணம் வழங்கப்பட்டுள்ளமை.
  - கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான நிதியம் விவேகமான முறையில் பயன்படுத்தப்பட்டிராமை
  - போதுமான பேறுகைச் செயன்முறை ஒன்று பின்பற்றப்படாது சொத்துக்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தமை
  - கூட்டுத்தானத்தின் அன்றாட பணிகள் திறைசேரி ஏற்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்படுவதற்கு நேர்ந்தமை
- இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
  - கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையிலான வீழ்ச்சி
  - வருமான வரி செலுத்தப்பட்டிராமை
- வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு
  - நிதி நிலைமை வீழ்ச்சி
- செலசினே தொலைக்காட்சி நிறுவனம
  - கடனை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை
- எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் கம்பனி
  - நிதி மோசடி தொடர்பாக வழமையான ஒழுக்காற்று நடைமுறைக்கு மாறாகச் செயற்படுதல்

- இலங்கை பத்திரிகைச் சபை
    - பத்திரிகைப் பதிவு தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் திருத்தப்படாமை
- அரசாங்க அச்சகத் திணைக்களம்
    - குறித்த காலப்பகுதிக்குள் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமையால் இழப்பு ஏற்பட்டிருந்தமை
    - தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளைகளுக்கு மாறாக அச்சீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்
- இலங்கை மன்ற நிறுவனம்
    - நிறுவகத்தின் நிரந்தர விரிவுரையாளர்களிடம் இருந்து உயரளவிலான சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை
    - நிதி நிர்வாகம் நலிவான நிலையில் காணப்பட்டமை
- இலங்கை அச்சீட்டு நிறுவனம
    - நிர்வாக சபை பூர்த்திசெய்யப்பட்டிருக்க வில்லை.
- தபால் திணைக்களம்
    - வாகனங்கள் பௌதிகரீதியாக நிறுவகத்தில் இன்மை
    - சொத்துப் பராமரிப்பிலான நலிவுகள்
    - நிலுவையான வருமானம் அறவிடப்பட்டிராமை
- இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
    - விளைவற்ற முறையில் இழப்பீடுகளையும் தீர்வுக்கான செலவுகளையும் செலுத்தப் படுவதற்கு நேர்ந்தமை
    - கொழும்பு தாமரைக் கோபுரம்

# வெகுசன ஊடகத் துறை

பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் உள்ளடங்கலான சரியான தகவல்களை அறிந்துகொள்ளும் மக்களின் உரிமையை உறுதிப்படுத்தும் தகவல்கள், அறிவு மற்றும் கருத்துப் பேதங்களின் நடுநிலையான தொடர்பாடலுக்காக உகந்த வெகுசன ஊடகக் கலாச்சாரமொன்றை உருவாக்கி அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படையில் முன்வைத்து "வெளிப்படையான வெகுசன ஊடகக் கலாச்சாரத்தை அறிமுகப்படுத்துதல்" தொடர்பாக குறித்த சட்டங்கள் மற்றும் கட்டளை விதி முறைகளுக்கு இணங்கும் வகையில் வெகுசன ஊடகவியல் விடயத்திற்குப் பொறுப்பான கொள்கைகளை உருவாக்கி, தேசிய வரவு செலவுத் திட்டம், பொது முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழ் உள்ள செயற்திட்டங்களை செயற்படுத்தி இதற்கு உரித்தான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துதல், பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்ற விடயப் பொறுப்பைக் கொண்ட வெகுசன ஊடக அமைச்சினாலும் அதன் கீழான 15 நிறுவனங்களாலும் பின்வரும் பணிகளும் அதிவிசேட முன்னுரிமைப் பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன.

- வெகுசன ஊடகவியலாளர்கள் மற்றும் வெகுசன ஊடக நிறுவனங்களுக்காக சமூக கலாச்சாரப் பெறுமதி மற்றும் சமூக விழுமியங்கள் தொடர்பான சட்டகத்தை மீறிச் செல்லாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு வெளிப்படைத் தன்மையுடனான வெகுசன ஊடக கலாச்சாரம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்காக தேசிய மற்றும் சர்வதேச சட்டங்கள் பிரமாணங்களுக்கு நேரொத்தவாறு ஊடக நியமங்களை ஸ்தாபித்தல்.
- தபால் சேவை பொது மக்களின் மையத் தேவைப்பாடுகளை இலக்காக கொண்ட ஓர் சேவையாக விரிவுபடுத்தி டிஜிடல் தபாலைச் சார்ந்த சேவைகளுக்காக தேவையான செய்முறைகளை அறிமுகப்படுத்தி செயற்படுத்தல்.
- இலங்கை பத்திரிகை சபையை மீள் கட்டமைத்தல்.
- சமூக ஊடகம் உட்பட புதிய ஊடகங்களை பயன்படுத்தி கையாள்தல் தொடர்பான தொழில்சார் அறிவையும் அனுபவத்தையும் வழங்குவதற்காக சமூகக் கல்வி செய்முறை ஒன்றை அறிமுகப்படுத்துதல்.
- சர்வதேச நியமங்களுக்கு இணங்க வெகுசன ஊடக உயர்கல்வி தொழில்சார் திறமை மேம்பாட்டுச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல்.

மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சு மற்றும் மூன்று திணைக்களங்களுக்கு ரூபா 21,262 மில்லியன் கூட்டுத்தொகையான ஏற்பாடுகள் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின்

இறுதிவரையில் இதில் ரூபா 20,302 மில்லின் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

மேற்கூறிய பணிப் பொறுப்புக்கள் மற்றும் அதிவிசேட முன்னுரிமைப் பணிகளும் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் அமைச்சினாலும் அதன் கீழான திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் மூலம் கண்டறியப்பட்ட அவதானிப்புக்கள் தொகுக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

## வெகுசன ஊடக அமைச்சு

### பிராந்திய தொலைக்காட்சி ஒலிபரப்பை டிஜிடல் மயமாக்கும் செயற்திட்டத்திற்கான ஏற்பாட்டைப் பயன்படுத்தியிராமை

இலங்கையில் பிராந்திய தொலைக்காட்சி ஒலிபரப்பை டிஜிடல் மயமாக்கும் செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்படுத்தப்பட்டிராமையால் மீள 2021 ஆம் ஆண்டின் போதைய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி நாளதுவரையாக்கப் பட்டிருந்ததுடன் தொழிநுட்பத்துடன் செயற்படுத்தப்படுவதற்கான அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றிருந்தது. இதன் மூலம், நாடெங்கிலும் பரவலாக உள்ள 16 ஒளிபரப்பு நிலையங்களை ஸ்தாபிப்பதற்கிருந்த போதிலும் 2023 யூன் 30 வரையில் ஒரு ஒளிபரப்பு நிலையத்தையேனும் ஸ்தாபிப்பதற்கு முடியாதிருந்தது. 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 120 மில்லியன் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் ரூபா 9 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி, ரூபா 111 மில்லியன் தொகை குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

### இலத்திரனியவியல் ஊடகங்களுக்கான ஒழுங்குமுறை வழிமுறைகளை மேம்படுத்தாமை

பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை உயரிய அளவில் பாதுகாத்து உகந்த ஊடகவியலை உறுதிப்படுத்தும் நோக்குடன் இலத்திரனியவியல் ஊடகங்களுக்காக ஒலிபரப்பு அதிகாரத்திற்கான அதிகாரச்சட்டம் கணக்காய்வுத் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்பிற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் பொறிமுறையை ஒழுங்கமைக்கும் செயற்பாடும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலிபரப்பு அனுமதிப்பத்திரங்களின் ஒருமித்த தன்மையை ஏற்படுத்துவதற்கான பொது வடிவமைப்பு ஒன்றை கணக்காய்வுத் திகதி வரையிலும் அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### பணி நியமன அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்டிருந்த அதிகாரிகளுக்கு பணியைச் செய்வதன் முன் பணம் வழங்கப்பட்டுள்ளமை.

பணி நியமன அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்கள் குறித்த பணி முடிவடைந்ததை அடுத்து அமைச்சுச் செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரத்திலேயே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தால் பணி நியமன

அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 07 அதிகாரிகளுக்கு 2022 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் வரை மாத்திரம் ரூபா 2 மில்லியன் தொகை பணி நிறைவேற்றப்பட முன்னர் மாதாந்தம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான நிதியம் விவேகமான முறையில் பயன்படுத்தப்பட்டிராமை**

கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான நிதியம் ரூபா 56 மில்லியன் 2 சதவீதத்தைப் பார்க்கிலும் குறைவான வட்டி வீதத்தில் வைப்புச் செய்யப்பட்டிருக்கையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 52 மில்லியன் பெறுமதியான வங்கி மேலதிகப்பற்று ஒன்றிற்காக ரூபா 5 மில்லியன் தொகையான வட்டி செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2012 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து தனியார் வங்கி ஒன்றின் நடைமுறைக் கணக்கொன்றில் ரூபா 18 மில்லியன் தொகை விளைவற்ற நிலையில் பேணப்பட்டிருந்தது.

**போதுமான பேறுகைச் செயன்முறை ஒன்று பின்பற்றப்படாது சொத்துக்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தமை**

கூட்டுத்தானத்தின் எதிரில் உள்ள புதிய கட்டிடம் 2022 செப்தெம்பர் 01 ஆம் திகதி குத்தகையில் ஓர் நவீன சந்தைத் தொகுதி வளாகத்திற்காக 20 ஆண்டு காலப்பகுதிக்காக 20 வருட கால எல்லைக்காக ரூபா 1,014 மில்லியன் குத்தகைக்கிடப்பட்டிருந்தது. இதற்காக ஒரு பத்திரிகையில் மட்டும் விளம்பரமிடப்பட்டிருந்தது. இது வரையிலும் ரூபா 3 மில்லியன் தொகையான ஆரம்ப வாடகையில் வழங்கப்பட்டிருந்த இக் கட்டிடமும் வாகனத்தரிப்பிடத்திற்காக பெறப்பட்டிருந்த மதிப்பீட்டு அறிக்கையில் கட்டிடத்தினதும் வாகனத்தரிப்பிடத்தினதும் சதுர அடியின் அளவு குறைவாகக் குறிப்பிடப்பட்டு உடன்படிக்கையிடப்பட்டிருந்தது.

**கூட்டுத்தானத்தின் அன்றாட பணிகள் திறைசேரி ஏற்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்படுவதற்கு நேர்ந்தமை**

கூட்டுத்தாபனம் 2012 ஆம் ஆண்டின் பின்னர் திறைசேரி ஒதுக்கீட்டைப் பெற முன்னர் தொடர்ச்சியான நட்டத்தை எதிர்நோக்கியிருந்ததுடன் மீண்டெழும் செலவினத்திற்காக திறைசேரி ஒதுக்கீடு பெறப்படுவதனால் அந் நட்டத்தைக் குறைத்துக்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றிருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது திறைசேரி ஒதுக்கீடு கிடைக்கப்பெற முன்னர் ரூபா 334 மில்லியன் தொகையான நட்டம் ரூபா 345 மில்லியன் தொகை கிடைக்கப் பெற்றிருந்தமையால் ரூபா 12 மில்லியன் தொகையான இலாபமாகியிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது திறைசேரி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றிராமையால் அந் நட்டம் ரூபா 236 மில்லியன் தொகை வரை அதிகரித்திருந்தது.

## இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்

**கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையிலான வீழ்ச்சி**

மீளாய்வாண்டின் போது இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்கள் ரூபா 351 மில்லியன் தொகையான எதிர்மறை மீதி வரை குறைவடைந்திருந்ததுடன் 2022 சனவரி 01

இல் உள்ளவாறு ரூபா 572 மில்லியன் வரையான திரட்டு நிதி எதிர்மறை மீதி, மீளாய்வாண்டின் நட்டமான ரூபா 538.3 தொகை மற்றும் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட முன்னைய ஆண்டுச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,112 தொகையான எதிர்மறை பெறுமதி வரை வீழ்ச்சியுற்றிருந்தது. 2020 ஆம் ஆண்டின் ரூபா 69 மில்லியன் தொகையான கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு மூலதன நிலை 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 254 மில்லியன் தொகையான எதிர்மறை செயற்பாட்டு மூலதன நிலை வரை வீழ்ச்சியுற்றிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது எதிர்மறை செயற்பாட்டு மூலதனம் ரூபா 568 மில்லியன் தொகையால் மேலும் விருத்தியடைந்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நடைமுறைக் கணக்குகள் இரண்டிற்கு உரித்தான வங்கி மேலதிகப்பற்று முறையே ரூபா 231 மில்லியன் தொகையாகவும் ரூபா 114 மில்லியன் தொகையாகவும் இருந்ததுடன் ரூபா 23 மில்லியன் தொகையான மேலதிகப்பற்று வட்டி கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறே ஒரு நடைமுறைக் கணக்கிற்கு உரித்தாக மீளாய்வாண்டின் 08 மாதங்களுக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த மேலதிகப்பற்று எல்லை அவ்வப்போது மீறப்பட்டிருந்தது.

### வருமான வரி செலுத்தப்பட்டிராமை

2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை கூட்டுத்தாபனத்தால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டியிருந்த பெறுமதி சேர் வரிப் பொறுப்பு ரூபா 314 மில்லியன் தொகையாகும். இதில் ரூபா 45 மில்லியன் தொகை 2022 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரிப் பொறுப்பாகும்.

## வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு

### நிதி நிலைமை வீழ்ச்சி

2015 ஆம் ஆண்டின் போது ரூபா 3,199 மில்லியனான வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் உரிமை மூலதனம் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 654 மில்லியன் வரை தொடர்ச்சியாகக் குறைவடைந்திருந்தது. வலையமைப்பின் 2016 ஆம் ஆண்டின் ரூபா 107 மில்லியன் தொகையான நட்டம் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 362 மில்லியன் வரை விருத்தியடைந்திருந்தது. மேலும், அக் காலப்பகுதியின் போது ஊடக வலையமைப்பு தொடர்ந்து நட்டத்தை ஈட்டியிருந்தது. மீளாய்வாண்டின் போது சுயாதீனத் தொலைக்காட்சிச் சேவையின் நட்டம் ரூபா 285 ஆகக் காணப்பட்டதுடன் இதன் கீழ் இயங்கும் வசந்தம் ரீவீ, ஐரீஎன் எப்எம் மற்றும் வசந்தம் எப்எம் என்பவற்றின் நட்டம் முறையே ரூபா 27 மில்லியன், ரூபா 45 மில்லியன் மற்றும் ரூபா 5 மில்லியனாகக் காணப்பட்டது. ஊடக வலையமைப்பின் 2020 ஆம் ஆண்டின் ரூபா 621 மில்லியன் தொகையான செயற்பாட்டு மூலதனம் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 399 மில்லியன் வரை குறைவடைந்திருந்ததுடன்

மீளாய்வாண்டின் போது இது ரூபா 117 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது.

### செலசினே தொலைக்காட்சி நிறுவனம்

#### கடனை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை

மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூபா 296 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 200 மில்லியன் தொகையான அதாவது கடன்பட்டோர் மீதிகளில் 68 சதவீதமானவை 4 வருடங்களிற்கு மேற்பட்ட கடன்பட்டோரைக் கொண்டமைந்திருந்தன. மொத்த கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட ஒரு வருடத்திற்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 231 மில்லியனான அதாவது 78 சதவீதமாகக் காணப்பட்டதுடன் இம் மீதிகளை அறவிட்டுக்கொள்வதற்காக நிறுவகம் ஆரம்பம் முதல் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எதனையும் எடுத்திருக்கவில்லை.

### எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் கம்பனி

#### நிதி மோசடி தொடர்பாக வழமையான ஒழுக்காற்று நடைமுறைக்கு மாறாகச் செயற்படுதல்.

நிறுவகத்தின் முன்னாள் விற்பனைத் தலைவர் பொறுப்பின்றி செயற்பட்டிருந்ததன் காரணமாக நிறுவகத்திற்கு ஏற்படுத்திய நிதி மோசடி தொடர்பாக வழமையான ஒழுக்காற்று நடைமுறைக்கு மாறாக முகாமைத்துவம் செயற்பட்டிருந்தமையால் ரூபா 23 மில்லியன் தொகையான நிதி இழப்பு தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### இலங்கை பத்திரிகைச் சபை

#### பத்திரிகைப் பதிவு தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் திருத்தப்படாமை

1973 இன் 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் படி, பத்திரிகைகளைப் பதிவு செய்வதற்காகவும் அவ்வாறு பதிவுசெய்வதற்கான கட்டணங்களை அறவிடுவதற்காகவும் கட்டளைகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், தொழிநுட்ப விருத்தியுடன் ஈ- பத்திரிகை வெளியீடு முறைப்படி விருத்தியடைந்திருந்த போதிலும் அப் பத்திரிகைப் பதிவு தொடர்பாக அதிகாரச்சட்ட ஏற்பாடுகளைத் திருத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### அரசாங்க அச்சகத் திணைக்களம்

#### குறித்த காலப்பகுதிக்குள் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமையால் இழப்பு ஏற்பட்டிருந்தமை

குறித்த காலத்திற்குள் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமையால் 2021 ஆம் ஆண்டின் கடைசி 3 மாதங்களிற்குள் அகற்றப்படும் அஸ்கோன் கடதாசி ஒரு கிலோகிராம் ரூபா 65 இற்கு புதிய கொள்வனவாளருக்கு விற்பனை செய்யப்படுவதற்கு இயலுமை இருக்கையில் முன்னைய கொள்வனவாளருக்கே தலா ஒரு கிலோ மீற்றர் ரூபா 26.50 இற்கு விற்பனை

செய்யப்பட்டிருந்தமையல் திணைக்களத்திற்கு ரூபா 10 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

**தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளைகளுக்கு மாறாக அச்சீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.**

தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளைகளுக்கு மாறாக அச்சீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்காக அவர்களின் மாதாந்த சம்பளத்தில் 65 சதவீதத்திற்கு மேலதிகமாக 85 சதவீதத்தில் இருந்து 366 சதவீதம் வரை பல்வேறு வகைசார்ந்த 07 வகைக் கொடுப்பனவுகள் மாதாந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தமைக்கான திணைக்களப் பிரிவொன்றில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது கண்டறியப்பட்டது. ரூபா 12 மில்லியன் கூட்டுத்தொகை அப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது 8 மாதங்களுக்காகச் செலுத்தப்பட்டிருந்தது.

## இலங்கை மன்ற நிறுவனம்

**நிறுவகத்தின் நிரந்தர விரிவுரையாளர்களிடம் இருந்து உயரளவிலான சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை**

நிறுவகத்தின் 10 நிரந்தர விரிவுரையாளர்களிற்கான விரிவுரைக் கட்டணமாக ரூபா 16 மில்லியன் தொகையும் வெளி விரிவுரையாளர்களுக்காக ரூபா 17 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 45 பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளில் 29 இற்காக வெளி விரிவுரையாளர்களை மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 06 பாடநெறிகளுக்காக வெளி விரிவுரையாளர்களின் வளப் பகிர்வு 75 சதவீதத்தை விஞ்சியிருந்தது. நிறுவகத்தின் பாடநெறி ஒருங்கிணைப்புப் பிரிவொன்று இருந்த போதிலும், மன்றத்தின் நிரந்தர விரிவுரையாளர்கள் இப் பாடநெறிகளின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மாத்திரம் மேற்கொண்டிருந்தனர்.

**நிதி நிர்வாகம் நலிவான நிலையில் காணப்பட்டமை**

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைக் கணக்கொன்றில் ரூபா 55 மில்லியன் தொகையான மீதி ஒன்று பேணப்பட்டிருந்தது. இந் நிதி குறுகிய காலத்திற்குள் பயன்படுத்தப்பட்டு நிறுவனத்திற்கு நலனைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை அச்சீட்டு நிறுவனம்

**நிர்வாக சபை பூர்த்திசெய்யப்பட்டிருக்க வில்லை.**

இலங்கை அச்சீட்டு நிறுவன அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவக நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்து நிர்வகிப்பதற்காக 09 அங்கத்தவர்களைக் கொண்ட "நிர்வாக சபை" ஒன்று நியமிக்கப்பட வேண்டும். எனினும், உத்தியோகபூர்வமாக அங்கத்தவர்களாக குறிப்பிடப்பட்டிருந்த நான்கு அங்கத்தவர்கள் தவிர்ந்த

அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஐந்து அங்கத்தவர்கள் 2022 மார்ச் 31 ஆம் திகதியின் பின்னரும் நியமிக்கப்பட்டிருக்க வில்லை.

### தபால் திணைக்களம்

#### வாகனங்கள் பௌதிகரீதியாக நிறுவகத்தில் இன்மை

தபால் மா அதிபதியின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பாக தபால் திணைக்களத்திடம் இருந்தும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத் திடம் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை ஒப்பிடுகையில் 42 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் திணைக்களத்திடம் இன்மையும் 60 ஸ்ரீ 7256 ஆம் இலக்க பேரூந்து பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்டிருந்த போதிலும் இதற்குத் தேவையான மேலதிகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

#### சொத்துப் பராமரிப்பிலான நலிவுகள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு முறையாகக் கையேற்கப்பட்டிராத 565 தபாலகங்கள் காணப்பட்டதுடன் தபால் திணைக்களத்திடம் காணி இருக்கையில் அலுவலகக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது 08 தபாலகங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களில் இயங்கியிருந்தன. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்திடம் 43 தபாலகங்களினதும் 02 உத்தியோக பூர்வ விடுதிகளினதும் 83,152.61 சதுர மீற்றர் (3,286.66 பேர்ச்) அளவிலானவை குறை பயன்பாட்டுக் காணிகள் உள்ளமை அவதானிக்கப்பட்டது.

#### நிலுவையான வருமானம் அறவிடப்பட்டிராமை

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக நிலவிவரும் நிலுவையான வருமான மீதி ரூபா 93.4 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது அவ் வருமானத்தை அறவிட்டுக்கொள்வதற்காக திணைக்களம் தவறியிருந்தது. இதில் ரூபா 75 மில்லியன் 2019 ஆம் ஆண்டின் போதும் இதற்கு முன்னைய ஆண்டுகளின் போதில் இருந்தும் நிலவிவரும் நிலுவை வருமானத் தொகையாகும். திணைக்களத் தால் வெளிநாட்டுத் தபால் நிர்வா நிறுவகத்திற்கு 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வருமான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந் நிறுவகத்தால் நிலுவை வருமான அறிக்கை அங்கீகரிக்கப்பட்டிரா மையால் 01 வருடத்தில் இருந்து 09 வருட காலத்திற்கு பரந்திருந்த நிலுவை வருமானத் தொகை ரூபா 486 மில்லியனாகக் காணப்பட்டது. அந் நிலுவைத் தொகை அறவிடப்படுவதற்காக திணைக்களத்தால் போதுமான தாக்கமும் நிலுவை வருமானத்தை அங்கீகரிக்கா மைக்கான காரணமும் ஆராயபட்டிருக்க வில்லை.

### இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

#### விளைவற்ற முறையில் இழப்பீடுகளையும் தீர்வுக்கான செலவுகளையும் செலுத்தப் படுவதற்கு நேர்ந்தமை

ஹம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் தொலைத் தொடர்பு ஊடக நிலையத்தை நிர்மாணிப்பதற்காக

ஆணைக்குழுவிற்கும் ஒப்பந்தக்காரரிற்கும் இடையே 2014 யூலை 28 ஆம் திகதி மேற்கொள்ளபட்ட உடன்படிக்கை ஆணைக்குழுவால் முதலீட்டுச் சபை மற்றும் சனாதிபதி செயலகத்தின் ஆலோசனையில் 2016 ஆகஸ்ட் 10 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டிருந்ததன் காரணமாக இத் தீர்மானத்திற்கு எதிராக ஒப்பந்தக்காரர் ஒருவரால் சமர்ப்பிக்கப் பட்டிருந்த முறைப்பாட்டின் படி, ஒப்பந்தக்காரருக்கு இழப்பீடு உள்ளடங்கலாக மொத்த தீர்வையாளர் செலவுகளாக ரூபா 427 மில்லியன் ஆணைக்குழுவால் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

### கொழும்பு தாமரைக் கோபுரம்

கொழும்பில் உள்ள தாமரைக் கோபுரத் திட்டத்தின் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வலிதான செயலாற்றல் பிணை ஒன்றையும் தக்கவைப்புச் சான்றிதழ் ஒன்றையும் தொழிற்துறை இழப்பீட்டுக் காப்பீட்டையும் சமர்ப்பிப்பதற்கு சீனா நெஷனல் எலெக்ட்ரோனிக்ஸ் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. 2022 சனவரி 31 ஆம் திகதிய 22/0132/331/001 ஆம் இலக்க அமைச்சரவை அனுமதியின் படி, அக் கடப்பாடுகள் நிறைவேற்றப்படும் வரை பணப்புழக்க இழப்புக்களாக குறைக்கப் பட்டிருந்த 10.43 அமெரிக்க டொலர் மில்லியன் தொகையும் சீராக்கப்பட்ட ஒப்பந்தத் தொகையில் எஞ்சிய தொகையான 4.115 மில்லியன் அமெ.டொ. தொகையும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

செயற்திட்ட வருமானத்தில் கடன் தவணைப்பணத்தைச் செலுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,762 மில்லியன் தொகையான கடன் தவணைப்பணமும் வட்டியும் ஆணைக்குழு வின் பணத்திலிருந்து செலுத்தப் பட்டிருந்தது.

கொழும்பு தாமரைக் கோபுர சமையலறை உபகரணங்களின் பௌதீக ஆய்வின் போது 15.747 அமெரிக்க டொலர் பெறுமதியான ஐஸ் கட்டித் தயாரிப்பு இயந்திரம் (S/N G01423B) செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் 100,744 அமெரிக்க டொலர் பெறுமதியான 32 பொருட்களின் குறைவும் கண்டறியப்பட்டிருந்தது. 2010 அக்டோபர் 13 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி, தொலைக்காட்சி, தொலைத் தொடர்பு மற்றும் ஒளிபரப்பு சேவைகளுக்காக கோபுரத்தைப் பயன்படுத்துவதே முதன்மை நோக்கமாகக் காணப்பட்டது. மேலும், வானொலி, தொலைக்காட்சி மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கொழும்பு தாமரைக் கோபுரத் திட்டத்திற்காக 2022 திசெம்பா 31 அன்று செலுத்தப்பட்டிருந்த ஆலோசனைக் கட்டணம் ரூபா 336 மில்லியனாகக் காணப்பட்டதுடன் உடன்படிக்கையிடப்பட்ட பெறுமதிக்கு மேலாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 138 மில்லியனாகவும் காணப்பட்டது.

# மின்சக்தி மற்றும் வலுச்சக்தித் துறை

## கணக்காய்வு அவதானிப்புகள்

- வலுச்சக்தி மற்றும் மின்சக்தி அமைச்சு
  - செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தாமதமானமையால் விளைவற்ற கடப்பாட்டு கட்டணங்களை செலுத்த சேர்ந்தமை மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் நலிவடைதல்.
  - புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தியின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு போதிய நடவடிக்கை எடுத்திருக்காமை
  - அடைப்பட வேண்டியதாக காணப்பட்ட எதிர்பார்த்த இலக்குகள் மற்றும் இடைவுகளை அடைந்துகொள்வதற்கு உரிய பொறுப்புகள் போதியளவில் நிறைவேற்றப்படாமை
  - இலங்கை நிலக்கரி கம்பனி
  - நிலக்கரியை குறைவாக விநியோகித்தல்
- இலங்கை மின்சார சபை
  - மின்சார உற்பத்திக் கிரயம் அதிகரித்தல்
  - மின்சக்தி அதிகாரச்சட்டத்தின் பிரிவுகளுக்கு முரணாக வலுச்சக்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை.
  - நுகர்வோர் வைப்புகளுக்காக வட்டி செலுத்தியிராமை
  - நீண்ட கால மின்சார உற்பத்தி பரவலாக்கல் திட்டத்தின் பிரனாரம் நடவடிக்கை எடுத்திருக்காமை
  - மீளுருவாக்கத்தக்க வலுச்சக்தி நிலையத்தினை நடைமுறைப்படுத்தும் திட்டத்திற்கமைய நடவடிக்கை எடுத்திருக்காமை
  - உரிய நேரத்தில் கொடுப்பனவு மேற்கொள்ள தவறிய காரணத்தால் தாமதக் கட்டணம் செலுத்த நேர்ந்தமை.
  - பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களில் மின்சாரக் கட்டணங்களிலிருந்து அறவிடப்பட்டிராமை.
  - உரிய அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது ஊழியர்களுக்கு பல்வேறு படிகளை செலுத்துதல்
  - அரசாங்கத்திற்கு சாதகமான முறையில் தனியார் மின்சார உற்பத்தி நிலையங்களை சுவீகரிக்காமை
  - மின்சார உற்பத்திக்காக அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொண்டிராத மின்சார விநியோகத்தர் ஒருவரிடமிருந்து மின்சாரத்தினை கொள்வனவு செய்தல்.
  - தென் பகுதியின் மின்சார விநியோகத்தினை வலுப்படுத்துவதற்கு தேவையான மின்சார வீதிகளின் புனரமைப்பு பணிகள் நிறைவு செய்யப்படாமை

- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
    - உள்நாட்டு எரிபொருள் சந்தை
    - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிப் பெறுபேறு மற்றும் தேறிய சொத்துக்களின் நிலைமை
    - எதிர்கால பிணைய பரிவர்த்தனைகள் (ஹெட்ஜிங்) காரணமாக நாட்டுக்கு ஏற்பட்டிருந்த இழப்பு
    - மாதாந்த பயன்பாட்டுக் கட்டணம் (ஆழவொடல ருவடைவைல குநநள) செலுத்துதல்
    - பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு முரணாக விற்பனை முகவர்களுக்கு தரகு செலுத்துதல்.
    - ளுயுP கணினிக் கட்டமைப்பு நாளதுவரையாக்கப்படாமை.
    - மசகு எண்ணெய் கொள்வனவின் போது கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட செலவு
    - மசகு எண்ணெய் கொள்வனவின் போது மேலதிக மதிப்பிடப்பட்ட தாமதக் கட்டணமொன்றை செலுத்த நேர்ந்தமை
    - மசகு எண்ணெய் கொள்வனவின் போது தவிர்க்கக்கூடிய மேலதிகக் கிரயமொன்றை தவிர்க்க முடியாதிருந்தமை
    - ஒட்டோ டீசல் கொள்வனவு செய்வதற்காக சூப்பர் டீசல் விலை பயன்படுத்தப்பட்ட காரணத்தால் செலவிடப்பட்ட மேலதிக கிரயம்
    - இந்திய குறுங்கால கடன் வசதியின் கீழ் மசகெண்ணெய் கொள்வனவு செய்வதற்காக (ஐனெயைெ ஊசநனவை டுைநெ) கூடுதலான கிரயமொன்றை செலவிட நேர்ந்தமை.
    - பெற வேண்டிய மீதியை பதிவழிக்கும் தீரமானத்திற்கு உரியதாக பணிப்பாளர் சபை உரிய நடவடிக்கை எடுத்துள்ளதா என்பது உறுதிப்படுத்தப்படாமை.
- இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை
    - மீளுருவாக்கத்தக்க வலுச்சக்தி செயற்திட்டத்தின் அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்க உரிய நடவடிக்கை எடுக்காமை.
    - புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களின் பிரகாரம் வலுச்சக்தி வளங்களின் அபிவிருத்தி திட்டத்தைத் தயாரிக்காமை
    - மத்திய வலையமைப்பிலிருந்து விலகிய (ழகக பசனை) மீளுருவாக்கத்தக்க வலுச்சக்தி செயற்திட்டம் மேம்படுத்தப்படாமை.
    - வலுச்சக்தி செயற்திறனுக்கு உரியதாக ஏதேனும் செயற்திட்டமொன்றை நடாத்துவதற்காக கடன் கோரும் முதலீட்டாளர் ஒருவருக்காக பிணை வழங்கும் பணி நிறைவேற்றப்பட்டிராமை.
- இலங்கை அணுச்சக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை
    - கதிரியக்க மூலங்களின் இறக்குமதி அல்லது ஏற்றுமதி.
- இலங்கை மசகெண்ணெய் இருப்பு களஞ்சிய முனையக் கம்பனி
    - கம்பனிக்கு சொந்தமான பவுசர்களை பயன்படுத்தல்.

# மின்சக்தி மற்றும் வலுச்சக்தித் துறை

வலுச்சக்தி மற்றும் மின்சக்தி அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள 12 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களினால் பின்வரும் பணிகள் மற்றும் பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டது.

- அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் அமைச்சின் கீழ் உள்ள துறைகள் மற்றும் சட்டப்பூர்வ நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்களின் பாடங்கள் மற்றும் மின்சாரம் மற்றும் எரிசக்தி தொடர்பான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் திட்டங்களை தொகுத்தல், செயல்படுத்துதல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- அமைச்சின் கீழ் பொது சேவைகளை திறமையான மற்றும் பொதுமக்களுக்கு சிநேகபூர்வமான முறையில் வழங்குதல்.
- விரயம் மற்றும் ஊழலை ஒழிப்பதன் மூலம் அமைச்சகம் தனது பங்கை நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்காக நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் நடைமுறைகளையும் சீர்திருத்துதல்.
- சூரிய வலு, நீர்மின், அனல், நிலக்கரி, கழிவு மற்றும் காற்று போன்ற மூலங்களிலிருந்து புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியை ஆய்வு செய்தல், திட்டமிடுதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் கண்காணித்தல்.
- இலங்கையின் மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் எரிசக்தி பாதுகாப்பு மற்றும் வலுச்சக்தி செயற்திறன் ஏற்படும் வகையில் கேள்வியை முகாமை செய்தல்.
- நீண்ட கால தேவை அடிப்படையிலான மின் உற்பத்தி திட்டத்தை செயல்படுத்துதல்.
- மின்சாரம் பரிமாற்றம் மற்றும் விநியோக செயல்முறையை நெறிப்படுத்துதல்.
- உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் அதிகபட்ச செயல்திறனுடன் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்ய சிறந்த வலையமைப்பொன்றை உருவாக்குதல்.
- மின் உற்பத்திக்கான செலவைக் குறைத்தல் மற்றும் உற்பத்தியில் உள்ள நிச்சயமற்ற தன்மைகளை நீக்குதல்.
- பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துதல்.
- கிராமப்புற மின்மயமாக்கல்.
- பெட்ரோலியம் தொடர்பான உற்பத்திகள் மற்றும் இயற்கை எரிவாயு இறக்குமதி, சுத்திகரிப்பு, சேமிப்பு, விநியோகம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு மற்றும் செயல்படுத்தல்.

- பெட்ரோலியம் உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு தொடர்பான நடவடிக்கைகள்.
- பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஆய்வு மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள்.
- பெற்றோலியம் உற்பத்தி மூலங்களில் எரிவாயு மற்றும் உப உற்பத்தி பணிகள், இருப்பு பேணுதல் மற்றும் உற்பத்திக்கான விநியோகம்.
- எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் தொடர்பான உள்கட்டமைப்பு அபிவிருத்தி.
- வலுச்சக்தி வளங்களின் கட்டுப்பாடு, ஒழுங்குறுத்துகை மற்றும் பயன்பாட்டிற்கு பொருத்தமான வலுச்சக்தி கொள்கையை உருவாக்குதல்.
- மீளுருவாக்கத்தக்க வலுச்சக்தி அபிவிருத்தி.
- வீடுகள், அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு குறைந்த செலவில் மின்சாரத்தை பெற்றுக்கொள்வதை உறுதி செய்வதற்காக சூரிய வலுச்சக்தி கட்டமைப்பு மற்றும் சூரியத் தகடு கட்டமைப்புகளை பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
- மீளுருவாக்கத்தக்க வலுச்சக்தி திட்டங்களைத் தொடங்க தனியார் துறை மற்றும் தொழில்முனைவோரை ஊக்குவித்தல்.
- தொழிற்சாலை கழிவுகளை பயன்படுத்தி வலுச்சக்தி உற்பத்தியை அதிகரித்தல்.
- அமைச்சின் விடயப்பரப்பிற்கு உரியதாக சாட்டப்பட்டுள்ள இனைத்து விடயங்களுக்கும் உரிய பணிகள் மற்றும் அமைச்சின் விடயஙத்திற்கு அனைத்து நிறுவனங்களுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல்.

2022 ஆம் ஆண்டின் போது மேற்படி பணிப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சிற்கு ரூபா 274,955 ஆன நிதியேற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றுள் ரூபா 267,444 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ள உருவில் விபரிக்கப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் வலச்சக்தி அமைச்சு மற்றும் அதன் கீழான நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களால் மேற்குறிப்பிடப்பட்ட பணிகள் மற்றும் பணிப்பொறுப்புகளை நிறைவேற்றுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

**வலுச்சக்தி மற்றும் மின்சக்தி அமைச்சு**

**செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தாமதமானமையால் விளைவற்ற கடப்பாட்டு கட்டணங்களை செலுத்த சேர்ந்தமை மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் நலிவடைதல்.**

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் கீழ் இலங்கை மின்சார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா 19,288 மில்லியனான மொரகொல்ல நீர் மின்சார உற்பத்திக் கூடத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டு 2018 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த தாமதம் காரணமாக ரூபா 28 மில்லியன் கடப்பாட்டு கட்டணமாக விளைவற்ற முறையில் செலுத்த நேர்ந்திருந்தது. 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 9,737 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், அதன் பௌதீக செயன்முன்னேற்றம் 45 சதவீதமான பெறுமதியை கொண்டிருந்தது.

**புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தியின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு போதிய நடவடிக்கை எடுத்திருக்காமை**

புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தியின் பங்களிப்பினை அதிகரிப்பதற்காக மத்திய ஒருங்கிணைப்புப் பொறிமுறையானது புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களுக்கான அங்கீகாரத்திற்காக செலவிடப்படும் நீண்ட காலத்தைக் குறைக்கும் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி வளங்களை உச்ச மட்டத்தில் பயன்படுத்துவதற்காக காற்று, சூரிய சக்தி மற்றும் மழைப்பொழிவுக்கான பயனுள்ள முன்கணிப்பு தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல் என்று இலங்கையின் தேசிய எரிசக்தி கொள்கை மற்றும் மூலோபாயத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அமைச்சினால் இதற்கான போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**அடைப்பட வேண்டியதாக காணப்பட்ட எதிர்பார்த்த இலக்குகள் மற்றும் இடைவுகளை அடைந்துகொள்வதற்கு உரிய பொறுப்புகள் போதியளவில் நிறைவேற்றப்படாமை**

எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்தல், தேசிய பொருளாதாரத்திற்கு குறைந்த செலவில் எரிசக்தி விநியோக சேவைகளை வழங்குதல், புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்களிப்பை அதிகரித்தல், எரிசக்தி துறையின் நல்லாட்சியை வலுப்படுத்துதல மற்றும் எதிர்கால எரிசக்தி உள்கட்டமைப்பிற்காக நிலத்தை பாதுகாத்தல் போன்றவற்றில் அமைச்சினால் எட்டப்பட்டிருக்க வேண்டிய எதிர்பார்க்கப்படும் இலக்குகள் மற்றும் மைல்கற்களை அடைவதற்குரிய பொறுப்புகள் போதுமான அளவு நிறைவேற்றப்படவில்லை.

**இலங்கை நிலக்கரி கம்பனி**

**நிலக்கரியை குறைவாக விநியோகித்தல்**

நிலக்கரிக் கம்பனியால் விநியோகிக்கப்பட்ட ரூபா 590 மில்லியனான நிலுவை நிலக்கரி மீதியொன்று எட்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இலங்கை நிலக்கரிக் கம்பனியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்ப்பனவு முறைமையின் கீழ் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### இலங்கை மின்சார சபை

#### மின்சார உற்பத்திக் கிரயம் அதிகரித்தல்

2022 ஆம் ஆண்டில் ஒரு கிலோவாட் மணிநேர மின்சாரத்தின் சராசரி செலவு ரூபா 33.65 ஆகவும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூபா.19.42 ஆகவும் இருந்தது. மேலும், 2022ஆம் ஆண்டில் ஒரு கிலோவாட் மணிநேர மின்சாரத்தின் சராசரி விற்பனை விலை ரூபா 21.24 ஆகவும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூபா.16.37 ஆகவும் இருந்தது. அதன்படி, 2022 ஆம் ஆண்டில் ஒரு கிலோவாட் மணிநேர மின்சாரத்தின் சராசரி மொத்த இழப்பு ரூபா. 12.41 மற்றும் கடந்த ஆண்டு ஒரு கிலோவாட் மணிநேர சராசரி மொத்த இழப்பு ரூபா. 3.05 உடன் ஒப்பிடுகையில் 307 சதவீதம் அதிகமாகும். இதற்கு முக்கிய காரணம் 2022 ஆம் ஆண்டில் நிலக்கரி உள்ளிட்ட எரிபொருள் விலைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஆகும்.

#### மின்சக்தி அதிகாரச்சட்டத்தின் பிரிவுகளுக்கு முரணாக வலுச்சக்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை.

இலங்கை மின்சக்தி சட்டத்தின் விதிகளுக்கு முரணாக ஒழுங்குமுறை அதிகாரியிடம் அதிகாரத்தைப் பெறாமல், உற்பத்தி உரிமம் பெறாத மூன்று ஓய்வு பெற்ற சுயாதீன மின் உற்பத்தியாளர்களிடமிருந்து (ஐ.பீ.பீ) 2022 ஆம் ஆண்டில் ரூபா 5 பில்லியனுக்கு 60.33 ஜிகாவாட் ஆற்றலை கொள்வனவு செய்திருந்தது.

#### நுகர்வோர் வைப்புகளுக்காக வட்டி செலுத்தியிராமை

இலங்கை மின்சார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சபை வாடிக்கையாளர் வைப்புத்தொகைக்கு வட்டி செலுத்தவில்லை. 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்ட விகிதத்தின் அடிப்படையில், கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட கணக்கீடுகளின்படி, செலுத்த வேண்டிய வட்டி ரூபா 976 மில்லியன் மற்றும் செலுத்தப்படாத திரட்டப்பட்ட வட்டி 2022 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக் ரூபா 9 பில்லியன் ஆகும்.

#### நீண்ட கால மின்சார உற்பத்தி பரவலாக்கல் திட்டத்தின் பிரனாரம் நடவடிக்கை எடுத்திருக்காமை

குறைந்த செலவில் நீண்ட கால மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டம் 2018 – 2037 இன் படி, 500 மெகாவாட், 657 மெகாவாட், 445 மெகாவாட் மற்றும் 430 மெகாவாட் திறன் கொண்ட புதிய மின் உற்பத்தி நிலையங்கள் முறையே 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டது. இருப்பினும், திட்டமிடப்பட்ட புதிய திறனான 2,032 மெகாவாட்டில் 661.6 மெகாவாட் மின் உற்பத்தி நிலையங்கள் மட்டுமே இயக்கப்பட்டிருந்தன.

**மீளுருவாக்கத்தக்க வலுச்சக்தி நிலையத்தினை நடைமுறைப்படுத்தும் திட்டத்திற்கமைய நடவடிக்கை எடுத்திருக்காமை**

2022 - 2041 பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் நிபந்தனையுடன் அங்கீகரிக்கப்பட்ட 2022 – 2041 குறைந்த செலவில் நீண்ட கால உருவாக்க விரிவாக்கத் திட்டத்தின் பிரகாரம், 2022 ஆம் ஆண்டில், 544 மெகாவாட் திறன் கொண்ட புதிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆலைகள் இயக்க திட்டமிடப்பட்டது. இருப்பினும், மொத்தம் 211 மெகாவாட் திறன் கொண்ட புதிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆலைகள் மட்டுமே இயக்கப்பட்டன. இத்திட்டம் செயல்படுத்தப்படாததால், 2022 ஆம் ஆண்டின் பொது ரூபா 5 பில்லியன் மதிப்புள்ள 60.33 ஜிகாவாட் மணிநேர கூடுதல் மின்சாரத்தினை கொள்வனவு செய்ய நேர்ந்திருந்தது.

**உரிய நேரத்தில் கொடுப்பனவு மேற்கொள்ள தவறிய காரணத்தால் தாமதக் கட்டணம் செலுத்த நேர்ந்தமை.**

2022 ஆம் ஆண்டில் தாமதமான வட்டியாக மின்சாரம் கொள்வனவுகள் மற்றும் எரிபொருள் கொள்வனவுகள் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்) சரியான நேரத்தில் செலுத்துவதில் தாமதம் காரணமாக முறையே ரூபா 6.55 பில்லியன் மற்றும் ரூபா 8.92 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது. மேலும், உள்ளூர் வங்கிக் கடன்கள் தொடர்பாக வாரியத்தால் கடன் தவணைகளை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதால், ரூபா. 11 மில்லியன் அபராத வட்டியும் செலுத்தப்பட்டது.

**பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களில் மின்சாரக் கட்டணங்களிலிருந்து அறவிடப்பட்டிராமை.**

மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைக்கமைய பாராளுமன்றத்தின் பிரதிநிதிகளின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு வழங்கப்பட்ட 74 மின்சார இணைப்புகள் தொடர்பில் ரூபா 16 மில்லியனான தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதில் 29 இணைப்புகள் தொடர்பான ரூபா 5 மில்லியன் ஆறு வருடங்களாக மீட்கப்படாமலும், மேலும் 30 இணைப்புகள் தொடர்பான ரூபா 3 மில்லியன் ஒரு வருடத்திற்கும் மேலாக மீளப் பெறப்படவில்லை.

**உரிய அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது ஊழியர்களுக்கு பல்வேறு படிகளை செலுத்துதல்**

2008 ஆம் ஆண்டு ஏப்ரல் 09 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கு மாறாக மற்றும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் படி, சம்பளம் மற்றும் பணியாளர்கள் ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறாமல், 2022 ஆம் ஆண்டுக்கான பொறியியல் கொடுப்பனவு, ஊக்குவிப்பு கொடுப்பனவு, தற்காலிக கொடுப்பனவு முதலியவற்றுக்காக ரூபா 418 மில்லியன் செலுத்தப்பட்டது.

**அரசாங்கத்திற்கு சாதகமான முறையில் தனியார் மின்சார உற்பத்தி நிலையங்களை சுவீகரிக்காமை**

ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (தனியார்) கம்பனியுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் 06 ஆம் திகதி முதல் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி வரை 10 வருடங்கள் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த பின்னர், இந்த மின் நிலையத்தை இலங்கை மின்சார சபை கொள்வனவு செய்யதல் தொடர்பில் 2016 மார்ச் 23 ஆம் திகதி அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அரசின் தலைமை மதிப்பீட்டாளரினால் கம்பனி ரூபா 2,370 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டதுடன், கூடத்தின் உரிமையாளர்கள் அதை ரூபா 2,446 மில்லியன் ஏல விலையில் சபைக்கு விற்க ஒப்புக்கொண்டனர். மேலும், 10 வருட ஆரம்ப ஒப்பந்தக் காலத்தில் பெற்ற தேறிய இலாபத்தை அடுத்த 8 ஆண்டுகளுக்கு 9.5 சதவிகிதம் தள்ளுபடி செய்வதன் மூலம் ஆலையின் சராசரி மதிப்பு ரூபா 4,192 மில்லியனுக்கு கிட்டிய பெறுமதியை கொண்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த ஆலையை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல், ஆரம்ப ஒப்பந்தம் 05 வருடங்கள் 06 மாதங்களுக்கு 4 முறை 2016 ஏப்ரல் 6 முதல் 2022 செப்டம்பர் 8 வரை நீட்டிக்கப்பட்டது. அதன்படி, ஆலையை விற்பனை செய்வதற்கு நிறுவனத்தின் உரிமையாளர்கள் ஒப்புக்கொண்ட விலையை விட அரசு மதிப்பீட்டாளரின் மதிப்பீடு குறைவாக இருந்ததால், ஆலையை கையகப்படுத்தி அரசுக்கு சாதகமாக நடத்தும் வாய்ப்பை சபை இழந்துவிட்டது.

**மின்சார உற்பத்திக்காக அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொண்டிராத மின்சார விநியோகத்தர் ஒருவரிடமிருந்து மின்சாரத்தினை கொள்வனவு செய்தல்.**

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க திருத்தப்பட்ட இலங்கை மின்சாரச் சட்டத்தின் விதிகளின்படி, மின்சார உற்பத்திக்கான உரிமங்கள் இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட வேண்டும். இதன்படி, மேற்படி சட்டத்தின் 43 (1) பிரிவின்படி, மின்சார உற்பத்தி மற்றும் விநியோகம் அத்தகைய உரிமம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து மட்டுமே செய்யப்பட வேண்டும், ஆனால் 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை அத்தகைய தலைமுறை உரிமம் பெறாத ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய கம்பனியிடமிருந்து மின்சாரம் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றிருந்தது.

**தென் பகுதியின் மின்சார விநியோகத்தினை வலுப்படுத்துவதற்கு தேவையான மின்சார வீதிகளின் புனரமைப்பு பணிகள் நிறைவு செய்யப்படாமை**

நிலைமாற்றல் அபிவிருத்தி திட்டம் - 2013 இன் படி தென் பிராந்தியத்தில் மின்சார அமைப்பை வலுப்படுத்துவதற்குத் தேவையான புதிய பொல்பிட்டிய - ஹம்பாந்தோட்டை 220 முஎ ஒலிபரப்பு பாதை மற்றும் கொத்மலை - நவ பொல்பிட்டிய 220 முஎ மின் கடத்தல் பாதை மற்றும் ஹொரணை - பாதுக்க

220 முஏ மின் கடத்தல் பாதைகளின் பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**


**உள்நாட்டு எரிபொருள் சந்தை**

2022 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் (CPC); உள்நாட்டு பெட்ரோலிய சந்தையில் 86 சதவீதத்திற்கும் அதிகமாக விநியோகித்துள்ளது. மீளாய்வாண்டின் போது, பெட்ரோலியத்தின் மொத்த இறக்குமதிக்காக 4,532 மில்லியன் ஐ.அ.டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த பெட்ரோலிய சந்தையில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக, 2022 இல் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெயின் சராசரி விலை முன்னைய ஆண்டில் நிலவிய 68.86 மில்லியன் ஐ.அ.டொலருக்கு ஒப்பாக 100.11 மில்லியன் ஐ.அ.டொலர் வரையிலும் 45.4 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக கச்சா எண்ணெயை தொடர்ந்து இறக்குமதி செய்ய இயலாமை காரணமாக, சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தை தொடர்ந்து மூட வேண்டியதாயிற்று, மேலும் மொத்த பெட்ரோலிய சுத்திகரிப்பு உற்பத்தி 2022 இல் 55.4 சதவீதம் குறிப்பிடத்தக்க சரிவை பதிவு செய்தது..

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிப் பெறுபேறு மற்றும் தேறிய சொத்துக்களின் நிலைமை**

கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனம் 39,849 மில்லியன் மொத்த இலாபத்தினை பதிவு செய்திருந்ததுடன், அது கடந்த வருடத்தில் பதிவு செய்த மொத்த இலாபமான ரூபா 4,068 மில்லியனுக்கு ஒப்பாக ரூபா 43,917 மில்லியனான அதிகரிப்பாகும். எவ்வாறான போதிலும், மீளாய்வாண்டின் போதும், ரூபா 615,053 மில்லியனான தேறிய நட்டத்தினை பதிவு செய்திருந்ததுடன், அதற்கமைய கடந்த வருடத்தில் ரூபா 81,816 மில்லியனான தேறிய நட்டத்திற்கு ஒப்பாக கூட்டுத்தாபனத்தின் தேறிய நட்டம் ரூபா 533,237 மில்லியனால் அதிகரித்திருந்தது. கடந்த வருடத்தில் ரூபா 33,220 மில்லியனாக காணப்பட்ட செலாவணி மாற்ற வீதத்தின் பாதகமான மாற்றம் மீளாய்வாண்டின் போது ரூபா 527,010 மில்லியன் வரை ரூபா 493,790 மில்லியனால் அதிகரித்திருந்தமை இதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டின் போது மற்றும் கடந்த 5 வருடங்களில் கூட்டுத்தாபனத்தின் நிதிப் பெறுபேறு (தேறிய இலாபம் ) பின்வரும் உருவில் காணப்படுகின்றது.




வரைபடம் 29: கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபம்/நட்டம்

மூலம் - கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள்

**எதிர்கால பிணைய பரிவர்த்தனைகள் (ஹெட்ஜிங்) காரணமாக நாட்டுக்கு ஏற்பட்டிருந்த இழப்பு**

2007 மற்றும் 2009 க்கு இடையில் எண்ணெய் கொள்முதல் தொடர்பாக கூட்டுத்தாபனத்தினால் செய்யப்பட்ட ஹெட்ஜிங் பரிவர்த்தனைகள் தொடர்பாக நடத்தப்பட்ட கணக்காய்வின் படி, அந்த பரிவர்த்தனைகளால் 2022 டிசம்பர் 31 வரை நாட்டிற்கு ஏற்பட்ட மொத்த இழப்பு ரூபா 14,028 மில்லியன். மேலும், கூட்டுத்தாபனத்திற்கு எதிராக, ஐ.அ.டொலர் 8.6 மில்லியனைக் கோரி கொழும்பு உயர் வர்த்தக நீதிமன்றத்தில் கொமர்ஷியல் வங்கியால் வழக்குத் தாக்கல் செய்துள்ளதுடன், 2022 ஆம் ஆண்டு இறுதிவரை வழக்கு நிலுவையில் இருந்தது.

**மாதாந்த பயன்பாட்டுக் கட்டணம் (Monthly Utility Fees) செலுத்துதல்**

2013 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 38/1140 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம், கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அனைத்து விற்பனை முகவர்களும் (CODO) நிரப்பு நிலையங்களில் மற்றும் திறைசேரிக்கு சொந்தமான வணிகர்களால் நடாத்தப்படும் (TODO) நிரப்பு நிலையங்களிலிருந்து மாதாந்த பயன்பாட்டுக் கட்டணமொன்று (MUF) 2014 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அறவிடுவதற்கு தீர்மானித்திருந்தது. எனினும், இந்த தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிராததுடன், CODO மற்றும் TODO நிரப்பு நிலையங்களில் 220 நிரப்பு நிலையங்களில் 11 விற்பனையாளர்களிடமிருந்து மாத்திரம் மாதாந்த பயன்பாட்டுக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 3,416 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் இதுவரை தவறியிருந்தது.

**பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு முரணாக விற்பனை முகவர்களுக்கு தரகு செலுத்துதல்.**

2019 யூலை 30 ஆந் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம், பெற்றோலியத்தின் உள்நாட்டு சந்தை விலை தளம்பல்களின் தாக்கத்தின் அடிப்படையில் விநியோகத்தர்களுக்கு செலுத்தப்படும் தரகின் அளவானது தளம்பல் அடைந்த காரணத்தால் அதன் பாதகமான விளைவுகள் கூட்டுத்தாபனம் மற்றும் விநியோகத்தர்கள் ஆகிய தரப்பினரை பாதிக்காதிருக்க பின்வருமாறு உச்ச மற்றும் குறைந்த வறையரைகளுக்கு இணங்க தரகு சதவீதம் தீர்மானிக்கப்பட்டிருந்தது

| | பெற்றோல் | | டீசல் | |
|---|---|---|---|---|
| | 92 Oct | 95 Oct | LAD | LSD |
| **Upper Cap** | Rs.162 | Rs.170 | Rs.121 | Rs.145 |
| **Lower Cap** | Rs.117 | Rs.128 | Rs.95 | Rs.110 |

அட்டவணை 21

எவ்வாறாயினும், இந்த பணிப்பாளர் சபையின் முடிவிற்கு மாறாக, விநியோகஸ்தர்களுக்கு அதிகபட்ச வரம்புகளைப் பொருட்படுத்தாமல் முகவர்களுக்கு தரகு பணம் வழங்கப்பட்டன. அதன்படி, மீளாய்வாண்டின் போது ரூபா 12,140 மில்லியன் விற்பனை முகவர் தரகு அதிகமாக செலுத்தப்பட்டு விற்பனை மற்றும் விநியோகச் செலவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், 2023 செப்தம்பர் 01 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்தமாக அதிகமாகச் செலுத்தப்பட்ட முகவர் தரகு தொகை ரூபா 23,576 மில்லியன் ஆக காணப்பட்டது.

**SAP கணினிக் கட்டமைப்பு நாளதுவரையாக்கப்படாமை.**

2005 ஆம் ஆண்டு கார்ப்பரேஷனால் அறிமுகப்படுத்தப்பட்ட பதிப்பு (SAP ECC 6.0) 2010 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் இதுவரையிலும் எந்த புதுப்பிப்பும் இல்லாமல் பயன்படுத்தப்பட்டது மற்றும் SAP கணினி அமைப்பை புதுப்பிக்கத் தேவையான அவசர நடவடிக்கைகள் இன்னும் எடுக்கப்படவில்லை மற்றும் இந்த அமைப்பில் சில செயலிழப்புகள் காரணமாக, முழு நாட்டின் எண்ணெய் விநியோகம் சீர்குலைக்கும் கடுமையான ஆபத்தொன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**மசகு எண்ணெய் கொள்வனவின் போது கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட செலவு**

மீளாய்வுக்குட்பட்ட நிதியாண்டில் இறக்குமதி செய்யப்பட்ட 2,023,509 பீப்பாய்கள் கச்சா எண்ணெயின் (Siberian Light மற்றும் Ural) விலையை நிர்ணயிக்க வெவ்வேறு விலைக்

குறியீட்டைப் பயன்படுத்தியதால், ஒவ்வொரு தயாரிப்புக்கும் Singapore PLATTS இல் தினசரி வெளியிடப்படும் விலைக் குறியீட்டின்படி விலைக்கு (கிரயத்திற்கு) ஒப்பாக கூட்டுத்தாபனத்தினால் விநியோக கம்பனிக்கு ஐ.அ.டொலர் 49 மில்லியன் அல்லது தொடர்புடைய இறக்குமதி பத்திரத்தில் குறிப்படப்பட்ட மாற்று விகிதத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட ரூபா 17,876 மில்லியன் கூடுதலான கிரயமொன்று செலுத்தப்பட்டிருந்தது.

## மசகு எண்ணெய் கொள்வனவின் போது மேலதிக மதிப்பிடப்பட்ட தாமதக் கட்டணமொன்றை செலுத்த நேர்ந்தமை

மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் அவசர சந்தர்ப்பமொன்றாக அமைப்புக் குறிப்பீடுகளை மாற்றியமைத்து நிதிச் சாத்தியக்கூறு தொடர்பாக முறையான மதிப்பீடின்றி பெறுகைகள் குழுவின் மேவுகை அங்கீகாரத்தின் அடிப்படையில் மசகெண்ணெய் கொள்வனவு செய்வதற்கான இருப்பு மீளாய்வுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டமையால் ரூபா 336 மில்லியனான மேலதிக தாமதக் கட்டணமொன்றை செலுத்த நேர்ந்திருந்தது.

## மசகு எண்ணெய் கொள்வனவின் போது தவிர்க்கக்கூடிய மேலதிகக் கிரயமொன்றை தவிர்க்க முடியாதிருந்தமை

மீளாய்வாண்டிலும் மசகு எண்ணெய் கொள்வனவின் போது உலகச் சந்தையில் பெட்ரோலியத்தின் விலை படிப்படியாக அதிகரிப்பைக் காட்டும் என்று சிங்கப்பூர் PLATTS நிறுவனம் கணித்திருந்தாலும். அது தொடர்பான முறையான மதிப்பீடு இல்லாமல், அமைப்புக் குறிப்பீடுகளுக்கு இணங்காதவாறு விலைக்கேள்விகளை இரத்து செய்து, மீண்டும் அமைப்புக் குறிப்பீடுகளின் கீழ் இறங்கும் திகதியை மாற்றி அதே வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட காரணத்தால் கூட்டுத்தாபனத்திற்கு ஐ.அ.டொலர் 368,837 அல்லது ரூபா 73 மில்லியன் தவிர்க்கக்கூடியதாக இருந்த மேலதிக செலவொன்று செலுத்த நேர்ந்திருந்தது.

## ஒட்டோ டீசல் கொள்வனவு செய்வதற்காக சூப்பர் டீசல் விலை பயன்படுத்தப்பட்ட காரணத்தால் செலவிடப்பட்ட மேலதிக கிரயம்

மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் நான்கு வழங்குநர்களிடமிருந்து 08 கட்டளைகள் லங்கா ஆட்டோ டீசல் LAD (Gas Oil 500 ppm) 1,820,012 பீப்பாய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், இதில் விலை நிர்ணயம் செய்வதற்கு ஒப்பீட்டளவில் அதிக PLATTS சராசரி மதிப்பைக் கொண்ட லங்கா சூப்பர் டீசல் (FOB Singapore Price Method of Gas Oil 10 ppm) விலையை அடிப்படையாகக் கொள்வதற்கு இணங்கியிருந்தது. அதன் பிரகாரம் , கூட்டுத்தாபனத்திற்கு மொத்தம் ஐ.அ.டொலர் 10.5 மில்லியன் அல்லது ரூபா 3,872 மில்லியன் மேலதிக கிரயத்தினை செலவிட வேண்டியிருந்தது.

**இந்திய குறுங்கால கடன் வசதியின் கீழ் மசகெண்ணெய் கொள்வனவு செய்வதற்காக (Indian Credit Line) கூடுதலான கிரயமொன்றை செலவிட நேர்ந்தமை.**

இந்திய குறுகிய கால கடன் வசதியின் கீழ் இரண்டு சந்தர்ப்பங்களில் கூட்டுத்தாபனத்தினால் லங்கா ஆட்டோ டீசல் LAD (Gas Oil 500 ppm) 599,722 பீப்பாய்களை கொள்வனவு செய்யும்போது, அதற்காக விலையை நிர்ணயிப்பதற்கு ° PLATTS இற்கு ஒப்பாக அதிக சராசரிப் பெறுமதியுடைய லங்கா சுப்பர் டீசல் (FOB Singapore Price Method of Gas Oil 10 ppm) இற்குரிய விலையை அடிப்படையாகப் பயன்படுத்திய காரணத்தால் கூட்டுத்தாபனத்திற்கு மொத்தம் ஐ.அ.டொலர் 4.6 மில்லியன் அல்லது ரூபா 1,669 மில்லியன் மேலதிக கிரயமொன்றை மேற்கொள்ள நேர்ந்திருந்தது.

**பெற வேண்டிய மீதியை பதிவழிக்கும் தீர்மானத்திற்கு உரியதாக பணிப்பாளர் சபை உரிய நடவடிக்கை எடுத்துள்ளதா என்பது உறுதிப்படுத்தப்படாமை.**

2021 ஜூலை 22 ஆந் திகதிய 08.'.1252 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், போதுமான தகவல்கள் இல்லாததால், கூட்டுத்தாபனத்தின் கணக்கு புத்தகங்களிலிருந்து ரூபா 1,516 மில்லியன் நிலுவைத் தொகையை தள்ளுபடி செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டது. எவ்வாறாயினும், பெறப்பட்ட தகவல்களிலிருந்து, வரவுகளை தள்ளுபடி செய்வதற்கான முடிவை எடுப்பதற்கு முன், அந்த மீதியை அடிப்படையாக கொண்ட பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளில் மோசடிக்கான சாத்தியத்தை சரிபார்க்க பணிப்பாளர் சபை சரியான நடவடிக்கைகளை எடுத்ததா என்பதை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை**

**மீளுருவாக்கத்தக்க வலுச்சக்தி செயற்திட்டத்தின் அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்க உரிய நடவடிக்கை எடுக்காமை.**

2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின்படி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களின் அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்கு பொறுப்பான அமைச்சர் அதிகாரசபையின் தலைவருக்கு வழங்கிய பணிப்புரைகளை அதிகாரசபை உரிய முறையில் நடைமுறைப்படுத்தவில்லை. மேற்படி சுற்றறிக்கையின் பிரிவு 16ன் படி, திட்டக் குழுவால் பரிந்துரைக்கப்படாத திட்டங்களின் அபிவிருத்திக்கான சிறப்புத் திட்டத்தை முகாமைத்துவ சபை தயாரிக்கவில்லை, மேலும் சிறு நீர்மின் திட்டச் சட்டத்தின் அதிகாரங்களை எடுத்துக் கொண்டு, அரசு கையகப்படுத்தியது. சிறு நீர் மின் திட்டங்களின் அதிகாரங்கள் காலாவதியான சிறப்பு உரிமம் மற்றும் திறந்த ஏலங்களை அழைப்பதன் மூலம் மின்சாரத்தை மேம்படுத்துவதற்கு பொருத்தமான முதலீட்டாளர்களைத் தேர்ந்தெடுத்தது. மின்சார சபையுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தாலும், இதுபோன்ற 30 சிறிய நீர்மின் திட்டங்கள் தொடர்பாக

தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்ப்டிருக்கவில்லை.

**புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களின் பிரகாரம் வலுச்சக்தி வளங்களின் அபிவிருத்தி திட்டத்தைத் தயாரிக்காமை.**

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின்படி, ஒவ்வொரு பிரதேசத்திலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களின் சாத்தியக்கூறுகளுக்கு ஏற்ப புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் ஒப்புதலின் பேரில் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும் எனினும், அதிகாரசபை தாபிக்கப்பட்டு 15 வருடங்கள் கடந்திருந்த போதிலும், அவ்வாறானதொரு திட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, வலுச்சக்தி அபிவிருத்தி பகுதிகளில் புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி வளங்களின் அபிவிருத்தி பணிகள் மிகவும் மெதுவாக இருந்தது. பல்வேறு மாவட்டங்களில் 269,562 ஹெக்டேர் காற்றாலை ஆற்றல் மேம்பாட்டுப் பகுதிகளாக அதிகாரசபை வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தாலும், 2021 திசெம்பர் 31 நிலவரப்படி 206 ஹெக்டேர் நிலங்கள் மட்டுமே புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டங்களின் ஆரம்ப வளர்ச்சிப் பணிகளைத் தொடங்கியிருந்தன.

**மத்திய வலையமைப்பிலிருந்து விலகிய (off grid) மீளுருவாக்கத்தக்க வலுச்சக்தி செயற்திட்டம் மேம்படுத்தப்படாமை.**

இலங்கை மின்சார சபையின் மத்திய வலையமைப்பில் நிலவும் இயலளவு (யுஎயடையடிடந புசனை ஊயியஉவைல) போதுமானதாக இல்லாதிருந்த காரணத்தால், அதற்கு தீர்வாக அதிகாரசபையினால் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 5 இன் பிரகாரம், மத்திய வலையமைப்பிலிருந்து விலகிய (ழகக பசனை) மீளுருவாக்கத்தக்க வலுச்சக்தி செயற்திட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையினால் அதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அதிகாரச்சட்டம் 25 இன் பிரகாரம் 2023 சனவரி மாதமளவில் மத்திய வலையமைப்பிலிருந்து விலகி எந்தவொரு மீளுருவாக்கத்தக்க வலுச்சக்தி செயற்திட்டத்திற்காகவும் வலுச்சக்தி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு இயலுமானதாக இருக்கவில்லை.

**வலுச்சக்தி செயற்திறனுக்கு உரியதாக ஏதேனும் செயற்திட்டமொன்றை நடாத்துவதற்காக கடன் கோரும் முதலீட்டாளர் ஒருவருக்காக பிணை வழங்கும் பணி நிறைவேற்றப்பட்டிராமை.**

இலங்கை சுனித்யா எரிசக்தி உத்தரவாத நிதியம், எரிசக்தி திறன் தொடர்பான ஒரு திட்டத்தை இயக்க கடன்களுக்கு விண்ணப்பிக்கும் முதலீட்டாளர்களுக்கு உத்தரவாதம் அளிக்கும் நோக்கத்திற்காக நிறுவப்பட்டாலும், அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான பணிகள் இதுவரை நிறைவேற்றப் பட்டிராததுடன், 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அந்த நிதியத்தில் ரூபா 127 மில்லியன் மீதியொன்று நிலவியது.

**இலங்கை அணுச்சக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை**

**கதிரியக்க மூலங்களின் இறக்குமதி அல்லது ஏற்றுமதி.**

2014 ஆம் ஆண்டின் 48 இலக்கம் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்திச் சட்டத்தின் படி கதிரியக்க மூலங்களை இறக்குமதி செய்வதற்கு அல்லது ஏற்றுமதி செய்வதற்கு சபையின் அங்கீகாரத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டிய தேவைகள் மற்றும் நடைமுறைகள் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்றாலும், இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையினால் சர்வதேச வழிகாட்டுதல்களைப் பயன்படுத்தி விதிகளைத் பயன்படுத்தி விதிகள் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**இலங்கை மசகெண்ணெய் இருப்பு களஞ்சிய முனையக் கம்பனி**

**கம்பனிக்கு சொந்தமான பவுசர்களை பயன்படுத்தல்.**

2022 திசெம்பர் மாதத்திற்கான SAP (ERP அமைப்பு) வாகன செயல்திறன் அறிக்கையின்படி, சிலோன் பெட்ரோலியம் களஞ்சிய டெர்மினல் கம்பனிக்கு சொந்தமான கணிசமான எண்ணிக்கையிலான பவுசர்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்படவில்லை. 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் தொடர்பாக நடத்தப்பட்ட கணக்காய்வின் பிரகாரம், நிறுவனத்திற்கு சொந்தமான 130 பௌசர்களில், 68 பௌசர்கள் இந்த மாதத்தில் ஒரு பயணத்திற்கு பயன்படுத்தப்படவில்லை / விநியோகிக்கப்படவில்லை மற்றும் 18 பௌசர்கள் மாதத்தினுள் ஒரு நாள் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தன.

# நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
    - வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு
    - தோட்ட வீட்டுத் துறை
- அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்கள்
    - கொழும்பு பெருநகரை அண்மித்த நகர அபிவிருத்திச் செயற்திட்டம் (MCUDP)
- நகர அபிவிருத்தி அதிகாரசபை
- டுசுனுஊ – சேவைகள் தனியார் கம்பனி
- காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்
- நகர்ப்புறக் குடியிருப்பு மேம்பாட்டு அதிகாரசபை
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
- தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம

# நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை


நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் இதன் கீழ் உள்ள இராஜாங்க அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள்/ நிறுவனங்களால் பின்வரும் பணிகளும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன.

- அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு விடயத்திற்கும் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுக்கு உரித்தான கொள்கை, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தொகுத்தல், செயற்படுத்தல், பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மதிப்பிடல்.
- அமைச்சின் நோக்கெல்லைக்கு உரித்தான பொது மக்கள் சேவைகளை திறமையான முறையிலும் பொது மக்களின் நட்புறவுடனும் வழங்குதல்.
- அமைச்சின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நவீன முகாமைத்துவ முறை மற்றும் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி சகல முறைகளையும் நடைமுறைகளையும் மீளமைத்தல்.
- நகரங்கள், புறநகர் மற்றும் புறநகரை அண்மித்த பகுதிகளின் திட்டமிடல் மற்றும் மேம்பாடு
- நகரப் புறங்களின் பொருளாதார, சமூக மற்றும் பௌதீக வளர்ச்சியை ஒருங்கிணைந்த வகையில் முறையாக மேம்படுத்தி ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள்.
- வீடமைப்புத் தொகுதிகளை நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், வீட்டுத் திட்டங்களுக்கு காணி வழங்குதல், வீட்டு நிதியுதவி வழங்குதல்.
- நகர்ப்புற திண்ம கழிவு முகாமைத்துவம்.
- சுகல நகர்ப்புற நிர்மாணிப்புகளிலும் வாகனத் தரிப்பிடங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்காக அணுகுவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதை உறுதிப்படுத்தல்.
- தேசிய பௌதீக திட்டங்கள் மற்றும் பிராந்திய பௌதீகத் திட்டங்களைத் தயாரித்து ஒழுங்கமைத்தல்.
- கூட்டாட்சி ஆதன முகாமைத்துவம் மற்றும் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள்
- தாழ் நிலங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பான நடவடிக்கைகள்.
- அரசாங்க உத்தியோகபூர்வ குடியிருப்புகள் மற்றும் ஏனைய கட்டிடங்களுக்கான நியமம் மற்றும் பரிமாணங்களை ஒழுங்கமைத்தல்.
- சுற்றுச் சூழலுக்கு உகந்த வகையில் செலவுச் சுருக்கமான வீடுகளை

நிர்மாணிக்கும் நுட்ப முறை குறித்து கிராமிய மக்களுக்கு வழிகாட்டுதல்.

- அரச நிறுவனங்களுக்கு இயந்திரவியல் பொறியியலாளர் சேவைகளை வழங்குதல்.
- நிர்மாணிப்புத் துறை நடவடிக்கைகளை ஒழுங்கமைத்து பதிவு செய்தல், முறைப்படுத்தல் மற்றும் தரப்படுத்தல்.
- கனரக கட்டுமான உபகரணங்களில் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு பயிற்சி
- கட்டிடப் பொருட் துறையை விருத்தி செய்தல்.
- உள்நாட்டு நிர்மாணிப்பாளர்களை வலுப்படுத்தல்.
- கடல்சார் மாசடைவு தடுப்பு நடவடிக்கைகள்
- கரையோரப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்
- அரச மற்றும் தனியார் பெருந்தோட்ட கம்பனிகளில் கடமையாற்றும் காணி உரித்தற்ற மக்களுக்காக வீடுகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தும் நோக்குடன் புதிய கிராமங்களையும் நகரங்களையும் உருவாக்குதல்.
- தோட்டத்துறை சமூகத்தின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார ரீதியாக வலுவூட்டுவதற்காக அடிப்படை வசதிகளையும், வாழ்வாதாரங்கள் மற்றும் சமூக விருத்தி செயற்திட்டங்கள் உள்ளடங்கலாக ஏனைய தேவைப்பாடுகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- கிராமப்புற தோட்டத் துறைகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
- சமூகத்தை அண்மித்த சமூக தலைமைத்துவம் மற்றும் சமூகப் பங்கேற்பிற்கு முன்னுரிமையான "மக்கள் சார் சபைகளையும் மக்கள் சார் மத்தியநிலையங்களையும்" ஸ்தாபித்தல்
- தோட்டத் தொழிலாளிகளின் பிள்ளைகளுக்காக அடிப்படைக் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை உறுதிப்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

2022 ஆம் ஆண்டின் போது மேற்குறித்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் 04 இராஜாங்க அமைச்சுக்கள் உள்ளடங்கலாக 03 திணைக்களங்களுக்கு ரூபா 27,147.75 மில்லியன் தொகையான ஒதுக்கீடு பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் இதில ரூபா 24,205.05 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 2,942.7 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே உள்ள வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன.




| | ரூபா.மில்லியன் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு | ரூபா.மில்லியன் கட்டிடங்கள் திணைக்களம் | ரூபா.மில்லியன் அரசாங்க தொழிற்சாலை | ரூபா.மில்லியன் பௌதீக திட்டமிடல் திணைக்களம் | ரூபா.மில்லியன் மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தேறிய நிதி ஏற்பாடு | 26176 | 558 | 200 | 214 | 27148 |
| செலவினம் | 23308 | 537 | 175 | 184 | 24205 |
| சேமிப்பு | 2867 | 21 | 25 | 29 | 2943 |

வரைபடம் :30 வழங்கப்பட்ட ஒதுக்கீடு மற்றும் உள்ளபடியான செலவினம்
மூலம்: 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த பின்வரும் இராஜாங்க அமைச்சு 2022 செப்தெம்பர் 30 ஆம் திகதி முதல் 2022 இன் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தல்) சட்டத்தின் மூலம் இரத்துச் செய்யப்பட்டு அவ் இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள செயற்பாடுகள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழான செலின விடயங்களுக்கு உள்வாங்கப்பட்டிருந்தது.

- நகர அபிவிருத்தி, கழிவுப் பொருள் அகற்றல் மற்றும் சமூக சுகாதார நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு
- கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணிப்புகள் மற்றும் கட்டிடப் பொருட் துறை இராஜாங்க அமைச்சு
- தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பிற்கான இராஜாங்க அமைச்சு
- கடலோரப் பாதுகாப்பு மற்றும் தாழ் நில மேம்பாட்டிற்கான இராஜாங்க அமைச்சு

மேற்குறித்த செயற்பாடுகள் மற்றும் பணிகளின் செயற்திறன் குறித்து நடாத்தப்பட்ட மாதிரிக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் தொகுக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

- 2017 ஏப்ரல் 14 ஆம் திகதி மீதொட்ட முல்ல குப்பை மேடு சரிந்தமையால் 32 உயிரிழப்புகள் நேர்ந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் செயற்படுத்தப்படுவதற்கு இயலாது போன புத்தளம் அருவக்காலு பிரதேசத்தின் 266 ஏக்கர் அளவிலான பிரதேசத்தின் குப்பைச் சேகரிப்பு மத்தியநிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டு இதற்கு தெற்கு வலயத்தில் உள்ள நாளாந்தம் சேகரிக்கப்படும் திண்மக் குப்பைகள் 1,200 மெட்ரிக் தொன்கள் புகையிரத மார்க்கமாக வெளியேற்றப்படும் செயற்திட்டம் ஒன்று செயற்படுத்தப்படுவதற்காக அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு 2017 மே 09 ஆம் திகதி அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. இது வெளிநாட்டு உதவியின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், உலக வங்கியின் பரிந்துரைகள் செயற்படுத்தப்படுவதற்கு முடியாது போன காரணத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பட்ட அமெரிக்க டொலர் 700,000 தொகையான உதவித் தொகை கிடைக்கப்பெறாது போனமையால் இச் செயற்திட்டம் உள்நாட்டு நிதியத்தினால் செயற்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 19,127 மில்லியன் தொகையானதுடன் சாத்தியவள ஆய்வு நடவடிக்கைகளிற்கு ரூபா 85 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டம் 2018 சனவரி 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 யூன் 30 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்யப்படுவதற்கும் 04 தொகுதிகளின் கீழ் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. தேவைப்படும் இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் தொகுதியின் கீழ் 04 புகையிரத இயந்திரத் தொகுதிகளை ரூபா 8.27 மில்லியன் செலவிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இறக்குமதி செய்யப்பட்டு 03 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் குறித்த செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட முடியாதிருந்ததன் காணமாக புகையிரதத் திணைக்களத்தால் புகையிரத இயந்திரம் வேறு செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

- எவ்வாறெனினும், இச் செயற்திட்டத்திற்காக 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 21,045 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும்

திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிராமையால் செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நலனைப் பெற்றுக்கொள்ள இயலாதிருந்தது.

- நூறு நகரங்கள் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 496 மில்லியன் செலவில் 2022 யூன் 30 ஆம் திகதி வரையில் வேலை பூர்த்திசெய்யப்பட்டு, நகரத்தை அலங்கரிக்கும் 04 செயற்திட்டங்கள், வீதி மேம்பாட்டுத் திட்டங்கள் உட்பட 15 செயற்திட்டங்கள், மீளாய்வாண்டின் இறுதி வரை குறித்த நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்படுவதற்கு அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- சுகித புரவர நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் புலத்சிங்கல ஏகல் ஒய பல மாதிரிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு 2016 ஆகஸ்ட் 16 ஆம் திகதி ரூபா 41 மில்லியன் தொகையான ஒப்பந்தப் பெறுமதிக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்தம் வழங்கப்பட்டதன் பின்னர் 03 கட்டங்களுக்கு பிரிக்கப்பட்டு ஒப்பந்தப் பெறுமதி ரூபா 153 மில்லியன் வரை 272 சதவீதத்தால் அதிகரித்து நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கட்டிடத்தின் பயன் புலத்சிங்ஹல பிரதேச சபைக்கு 2018 ஒக்டோபர் 20 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 04 ஆண்டுகள் அளவில் காலம் கடந்திருந்த போதிலும் அக் கட்டிடம் எந்தவித நோக்கச் செயற்பாட்டிற்கும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

- அமைச்சால் 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட ரூபா 113.93 மில்லியன் பெறுமதியான 07 செயற்திட்டங்கள் நிதி அமைச்சால் விநியோகிக்கப்பட்ட 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய சுற்றறிக்கையின் படி இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. இங்கு சில செயற்திட்டங்களுக்காக 25 சதவீதம் முதல் 53 சதவீதம் வரையான வீச்சில் செலவினங்கள் ஏற்கப்பட்டிருந்ததுடன் அச் செயற்திட்டங்கள் இடைநிறுத்தப்படின் இதற்காக ஏற்கப்பட்ட ரூபா 49 மில்லியன் தொகையும் சிக்கனமற்ற செலவினமானதாகும் என அவதானிக்கப்பட்டது.

- 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது செயற்படுத்தப்பட்ட 12 வீடமைப்புச் செயற்திட்டங்கள் மற்றும் 30 செயற்திட்டங்களிற்காக 145 வீடுகளும் 602 வீடுகளும் நிர்மாணிக்கப்படுவதற்கு மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 202 மில்லியன் தொகையும் ரூபா 837 மில்லியன் தொகையும் ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மொத்தக் கிரயமாக முறையே ரூபா 110 மில்லியன் தொகையும் ரூபா 228 மில்லியன் தொகையும் குறித்த ஒப்பந்தக்காரர்களுக்கு நிர்மாண

வேலைகளுக்கான கொடுப்பனவாக தோட்ட மனித அபிவிருத்திப் பொறுப்பிற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக அந் நிறுவனத்திற்கு முகாமைத்துவக் கட்டணமும் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், குறித்த செயற்திட்டங்களில் உடன்படிக்கையிடப்பட்ட காலமும் கடந்திருந்த பொதிலும் செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டு குடியிருப்பாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு குறித்த கடன் தவணைப்பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- அமைச்சால் வீடமைப்பு பிரிவால் 2017 – 2020 காலப்பகுதியின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 4,989 மில்லியன் பெறுமதியான 10 வீடமைப்புச் செயற்திட்டங்களின் கீழ் 27,555 வீடுகள் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இதற்காக ரூபா 4,025 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் இதில் 5,604 வீடுகள் மாத்திரம் வேலை பூர்த்தியடைந்த நிலையில் இருந்தன. முன்னேற்ற அறிக்கையின் படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணிப்பு வேலைகளின் முன்னேற்றம் 25 சதவீதத்திலும் குறைவான 07 வீடமைப்புச் செயற்திட்டங்களும், 25 சதவீம் முதல் 50 சதவீதம் வரையான 02 செயற்திட்டங்களும், 75 சதவீதத்திலும் கூடுதலான ஒரு செயற்திட்டமும் காணப்பட்டன. இச் செயற்திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட வேண்டிய ஏனைய வீடுகளின் எஞ்சிய வேலை பூர்த்திசெய்யப்படாது இடைநடுவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

- 2030 ஆம் ஆண்டளவில் சகலருக்கும் போதிய பாதுகாப்பான வீடொன்றைப் பெறுதல் மற்றும் வதிவிடத்தை மேம்படுத்துவது நிலைபேறான அபிவிருத்தி இலக்காக இனங்காணப்பட்டிருந்ததுடன் இதற்காக மீளாய்வாண்டிற்கான இலக்கிடப்பட்ட அளவில் ஆண்டின் இறுதியில் பெறப்பட்டிருந்த முன்னேற்றம் 8 சதவீதம் மாத்திரமேயாகக் காணப்பட்டது.

### வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு

- வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவால் 2019 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட “வெலஓய செயற்திட்டம்” செயற்திட்டத்திற்காக ரூபா 32 மில்லியன் செலவில் நிர்மாணிப்பதற்கு இலக்கிடப்பட்ட 256 வீடுகளில் எந்த வீட்டினதும் வேலை முற்றாகப் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

2019 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி வீடமைப்பு மேம்பாட்டு செயற்திட்டத்திற்காக ரூபா 530 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் எவ்வித வீட்டினதும் மேம்பாட்டுப் பணிகள் முற்றாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிறுநீர் நோய்

பெருவாரியாக உள்ள பகுதிகளில் மக்களுக்காக 115 நீர் சுத்திகரிப்பு முறைகளை அமைப்பதற்காக ரூபா 481 மில்லியன் பெறுமதிக்கு ஒப்பந்தம் ஒன்று தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தினூடாக தனியார் கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் ஆரம்பக் கட்டமைப்பின் கீழ் 50 சுத்திகரிப்பு முறைமைகள் ஸ்தாபிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்கான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 209 மில்லியனாகும். இதில் ரூபா 111 மில்லியன் ஒப்பந்தத்தின் பௌதீக முன்னேற்றம் குறித்து கருத்திற்கொள்ளப்படாது ஒப்பந்தக்காரருக்கு 2021 ஆம் 2022 ஆம் ஆண்டுகளின் போது சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினூடாக ஒப்பந்த கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் எதுவித நீர் சுத்திகரிப்பு முறைமையும் 2022 திசெம்பர் 31 வரை செயற்பாட்டு நிலைக்குக் கொண்டுவரப்பட்டு சிறுநீரக நோயாளிகளுக்கு நீர் வழங்கப்பட்டிருக்கவில்லை.

- கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணிப்பு மற்றும் கட்டிடப் பொருள் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்ள குடும்பங்களிற்காக 300 கொங்கிரீட் பனல் வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 384 மில்லியன் தொகையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 106 மில்லயன் ஒப்பந்த நிறுவனத்திற்கும் ரூபா 3 மில்லியன் உசாவுகை நிறுவனத்திற்கும் செலுத்தப்பட்டிருந்தது. செலுத்தப்பட்ட தொகை மொத்தக் கிரயத்தில் 28 சதவீதமாகக் காணப்பட்ட போதிலும், பௌதீக முன்னேற்றம் 4 சதவீதம் மாத்திரமேயாகக் காணப்பட்டது. பூர்த்திசெய்யப்பட்ட 12 வீடுகள் மாத்திரமேயானதுடன் 12 வீடுகள் தொடர்பாக தொழிநுட்ப உசாவுகை நிறுவகத்தினால் 2022 சனவரி 12 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த இறுதி மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த கிரயங்களில் இருந்தான விலகல்களையும் குறைபாடுகளையும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது உடன்பட்ட மொத்த தொகையும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், உடன்படிக்கையில் உள்ள பந்திகள் மீறப்பட்டதன் காரணமாக ஒப்பந்தம் உடனடியாக இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் நி.பி. 507 இன் பிரகாரம் ஒப்பந்தக்காரரின் பெயர் கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கப்படுவதற்குத் தேவையான பூர்வாங்க படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- தனியாருக்கும், அரசிற்கும் சொந்தமான காணிகளைக் கையகப்படுத்தாது, வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அவ் வீட்டு பயனாளிகளுக்கு உறுதிப் பத்திரம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமையால் வீடுகளின் சட்டபூர்வ உரிமை குடியிருப்பாளர்களுக்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

மேலும், இழப்பீட்டைக் கோரியுள்ள விண்ணப்பதாரர்களிடம் இருந்து 20 ஆண்டுகளுக்கு முன், காணி கையகப்படுத்தப்பட்டு, வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த காணி உரிமையாளர்களுக்கு செலுததப்பட வேண்டிய இழப்பீடு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## தோட்ட வீட்டுத் துறை

- தோட்டத் துறையின் செயற்பாட்டுத் திட்டத்தின் படி, பசுமை தங்க வீட்டுத்திட்டத்தின் கீழ், 2022 திசெம்பர் 31 ஆம் திகதியன்று இறுதிக்கட்டத்தில் உள்ள 466 வீடுகளை நிர்மாணித்து முடிப்பதற்கு ரூபா 65 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 282 வீடுகள் மாத்திரமே முற்றாகப் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் இது எதிர்பார்க்கப்பட்ட நிறைவானவற்றுடன் ஒப்பிடுகையில் 61 சதவீதம் மாத்திரமேயாகக் காணப்பட்டது. இவ்வாறே, உரிமைப் பத்திரம் வழங்கல் வேலைத்திட்டத்தின் கீழ், தோட்டத்தில் உள்ள 1,000 குடும்பங்களின் காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்காக ரூபா 2.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 300 குடும்பங்களின் காணி உரிமை மாத்திரமே உரிமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இது எதிர்பார்க்கப்பட்ட நிறைவேறலின் 30 சதவீதம் மாத்திரமேயாகும்.

- 2021 ஆம் ஆண்டின் போது நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2021 நவம்பர் மாதம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிலையில் காணப்பட்ட ஹட்டன் நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி, கேகாலை மற்றும் காலி எனும் 06 வலயங்களின் வீடுகள் நிர்மாணிக்கப்படுவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 451 மில்லியன் பெறுமதியான தொகையில் ரூபா 227 மில்லியன் அதாவது 50 சதவீதம் தோட்ட மனித வள பொறுப்பிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

- தோட்டப் பிரிவின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த இந்திய வீடுகள் 10,000 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மீளாய்வாண்டின் போது 3,525 வீடுகள் நிர்மாணிக்கப்படுவதற்காக பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டமை, நிறைவேற்றப்பட்டமை, காணி விடுவிக்கப்பட்டமை மற்றும் வேலைக் குழுக்களை ஸ்தாபிப்பதற்காக இந்திய உதவித்திட்டத்தின் கீழ் ரூபா 400 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அந் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. இவ்வாறே இந்திய உதவி வீடமைப்பு 4,000 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், 180 வீடுகள் பூர்த்திசெய்யப்படுவதற்காக ரூபா 95 மில்லியன் தொகையான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும்,

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இதில் 35 மில்லியன் செலவில் 26 வீடுகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. இதன் படி, செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 37 சதவீதமானவேளை பௌதீக முன்னேற்றம் 14 சதவீதமாகக் காணப்பட்டது.

- தோட்ட சமூகத்திற்காக வீடுகளை நிர்மாணிப்புச் செயற்படுத்தல் வழிகாட்டல் கைநூலின் படி, செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டு கடன் அறவிடப்படும் சகல செயற்பாடுகளும், உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுவதற்கான பொறுப்பு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி அறக்கட்டளைக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுவதற்காக உரிய வீடமைப்புச் செயற்திட்டத்தின் மதிப்பீட்டுக் கிரயத்தில் 7 சதவீதம் முகாமைத்துவக் கட்டணமாகச் செலுத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் படி, தோட்டச் சமூகத்திற்காக வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு, குறித்த வீட்டு உரிமையாளர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய வீடமைப்புக் கடன் தொகை தவணைப்பணமாக அறவிடப்படுவதற்கு அமைவாக 2016, 2017 ஆம் 2018 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 3,867 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 4,202 வீடுகளிற்காக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி அறக்கட்டளைக்கு ரூபா 271 மில்லியன் முகாமைத்துவக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், ரூபா 1,998 மில்லியன் தொகையான கடன் தவணைப்பணத்தை அறவிட்டுக்கொள்வதற்கு பெருந்தோட்ட வீடமைப்பு சமூக உட்கட்டமைப்பு பிரிவு தவறியிருந்தது.

- ஹற்றன் மற்றும் நுவரெலியா வலயங்களில் உள்ள 02 வலயங்களில் 06 தோட்டங்களில் வீட்டுச்செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதற்காக ரூபா 160 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்ட தொகையில் ரூபா 31 மில்லியன் தொகை அதாவது 20 சதவீதம் செலவிடப்பட்டிருந்த போதிலும் எந்தவித பௌதீக முன்னேற்றமும் பெறப்பட்டிருக்கவில்லை.

### அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்கள்

### கொழும்பு பெருநகரை அண்மித்த நகர அபிவிருத்திச் செயற்திட்டம் (ஆஊஊருனீ)

- மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 353 மில்லியனான நொரிஸ் கனல் மேம்பாட்டு செயற்திட்டத்திற்கு எதிராக அதனை அண்மித்துள்ள தொடர்மாடிக் குடியிருப்புகளின் குடியிருப்பாளர்களால் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததன காரணமாக அதன் நிர்மாண நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இது தொடர்பாக மேற்கொண்டு

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ஒருங்கிணைந்த வெள்ள முகாமைத்துவ அமைப்பு (IFMS) ஒன்றை ஸ்தாபிப்பதற்காக ரூபா 77.4 மில்லியன் செலவிடப்பட்டு ரியல் டைம் கண்ரோலர் முறைமை (சுவுஊ) மையம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் கண்காணிப்புக் கட்டுப்பாடு மற்றும் தரவு சேகரிப்பு முறைமை (SCADA) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மையத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கவில்லை.

### நகர அபிவிருத்தி அதிகாரசபை

- 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் ஐஐ ஆம் பிரிவின் 8 ஆம் பந்தியின் (அ) பிரிவின் பிரகாரம், உரிய உள்ளூராட்சி நிறுவகத்தால் செயற்படுத்தப்பட வேண்டிய நகர காணிகள் பயன்பாட்டுக் கொள்கை நகர அபிவிருத்தி அதிகாரசபையால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் அச் செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரபையால் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும்அதன் பிரிவுகளாக 273 நகர அபிவிருத்தி பிரதேசங்கள் பிரகடனப்படுத்தப் பட்டிருந்த போதிலும் காணி பயன்பாட்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு உரிய உள்ளூராட்சி நிறுவகங்களுக்கு 85 பகுதிகள் மாத்திரமே கிடைக்கப்பெற்றிருந்தன.

- நகர்ப்புற மறுமலர்ச்சித் திட்டத்தின் 22 நிர்மாணிப பணிகளின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக 14,542 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இவற்றில் 12,325 வீடுகள் 2013 முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. எனினும், கூட்டாட்சி முகாமைத்துவச் சான்றிதழைப் பெற்றிராமையால், குடியிருப்பாளர்களில் 50 சதவீதத்திற்கு மேற்பட்டவர்களுக்கு வீடுகளின் உரித்தை வழங்குவதற்கு முடியாதிருந்தது. இதன் காரணமாக இவ் வீட்டுகளின் மின்சாரம், பாதுகாப்பு செலவுகள், நீர் சுத்திகரிப்பு மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகளிற்தாக ரூபா 231 மில்லியன் செலவை அதிகாரசபை ஏற்கவேண்டியிருந்தது. மேலும், இவ் வீடுகளில் இவற்றில் 271 வீடுகள் 2023 ஆகஸ்ட் வரையிலும் எவருக்கும் வழங் கப்படாது விளைவற்ற நிலையில் காணப்பட்டன. இவ்வாறே, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக வழங்கப்பட்டிருந்த வீட்டுப் வாடகை மற்றும் தண்ணீர்க் கட்டணமாக ரூபா 953 மில்லியன் வசூலிக்கப்பட வேண்டியிருந்தது.

- ஹம்பாந்தோட்டை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ், கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவகத்தின் (முழுஜஊயு) உதவியுடன் ரூபா 6.4

மில்லியன் அமெரிக்க டொலர் (ரூபா 851.2 மில்லியன் ) செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாகம் ருஹுணுபுர சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பிரதான கேட்போர்கூடம், நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கேட்போர் கூடத்தின் ஏனைய கட்டுமானப் பணிகளுக்கு ரூபா 3,831 அரச நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. மாநாட்டு மண்டபத்தைப் பேணிக்காப்பதற்காக செலவினத் தொகையாக 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை, ரூபா 93 தொகை அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டத்தின் அக் காலப்பகுதிக்கு உரித்தான வருமானமாக ரூபா20.64 மில்லியன் மாத்திரமே உழைக்கப்பட்டிருந்தது.

- 2022 யூலை 16 ஆம் திகதிய 22/0970/502/019 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, பன்னிபிட்டிய வீரமாவத்தையில் 500 வீடுகளைக் கொண்ட வீட்டுத் திட்டத்தில் இருந்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஒரு வருட வாடகை அடிப்படையில் 101 வீடுகள், வருடாந்த வாடகை ரூபா 69 மில்லியன் தொகை அரசாங்கத்தால் அதிகாரசபைக்கு செலுத்தப்படும் எனும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2023 யூலை வரையிலும் இதற்கான வாடகை அதிகாரசபைக்குக் கிடைக்கப்பெற்றிராததுடன் ஒவ்வொரு வீட்டு உரிமையாளர்களால் செலுத்த வேண்டிய பராமரிப்பு செலவுகள் மற்றும் வீடுகளுக்காகச் செலுத்தப்பட வேண்டியிருந்த மின்சாரம், எரிவாயு மற்றும் நீர் கட்டணங்களுக்காக 2023 ஆகஸ்ட வரையிலும் ரூபா 10 மில்லியன் அதிகாரசபைக்கு வசூலிக்க வேண்டியதாகக் காணப்பட்டது.

- அதிகாரசபைக்குச் சொந்தமான கொழும்பு கோட்டை டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தையை அண்மித்த 2 ஏக்கர் 2 ரூட் 2 பேர்ச் 21.4 காணி எந்தவொரு அபிவிருத்தி நோக்கங்களுக்கும் பயன்படுத்தப்படாது 2023 ஆகஸ்ட் வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

- அதிகாரசபைக்குச் சொந்தமான கொழும்பு கோட்டை டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தையை அண்மித்த 2 ஏக்கர் 2 ரூட் 2 பேர்ச் 21.4 காணி 2023 ஆகஸ்ட் வரையிலும் எந்தவொரு அபிவிருத்தி நோக்கங்களுக்கும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

- 2006 ஆம் ஆண்டின் போது காலி நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அலேதசியஸ் வித்தியாலய மைதானம், காலி சர்வதேச கிரிகட் மைதானம் மற்றும் விளையாட்டு தொகுதி நிர்மாணிப்பிற்காக 16 ஏக்கர், 3 ரூட் 0.57 பேர்ச் வீடுகள், தோட்டங்கள் மற்றும் வியாபாரங்கள் அமைந்த காணிகளை கையகப்படுத்துவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருந்தது. இக் காணிகளுக்காக இழப்பீடுகள் வழங்கப்பட்டு தீர்க்கப்படுவதற்காக

ரூபா 400 மில்லியன் தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக திறைசேரியிடமிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன் 2021 யூலை 13 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 282 மில்லியன் தொகையான நட்ட ஈடு மற்றும் வட்டித் தொகைக்காகச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அவ்வாறு கையேற்கப்பட்ட 16 ஏக்கர் 03 ரூட் காணியில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய காணி அளவு மேலும் விளைவற்றுக் காணப்பட்டது.

- பொது மக்களுக்கு சேவை வழங்கப்படும் நிதி, நிர்வாக நிறுவக் கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்படுவதற்காக ஏற்ற இடமாக ராஜகிரிய, ஸ்ரீ ஜயவர்தன புர மாவத்தையில் உள்ள காணிகளில் ஏக்கர் 04 பேர்ச் 43 ஆன காணிகள் 03 பகுதிகள் 2013 ஒக்டோபர் 09 ஆம் திகதி அதிகாரசபைக்கு கையகப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், இவ்வாறு கையகப்படுத்தப்பட்ட காணியில் ஏக்கர் 02 ரூட் 03 பேர்ச் 01 காணியின் 02 பகுதிகள் 2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளின் போது அசல் உரிமையாளர்களுக்கு மீள கையளிக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூட் 01 பேர்ச் 02 அளவிலான காணிக்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 213 தொகை இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அக் காணிப் பகுதி 2023 யூன் வரையிலும் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட செயற்பணி அல்லது வேறு எந்த அபிவிருத்திச் செயற்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

- இறையிலாதன அடிப்படையில் (குசநந ர்ழடன டயளளை) அரசாங்கத்தால் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த முத்துராஜவெல காணியின் சுமார் 02 ஏக்கர் காணி 2019 ஆம் ஆண்டின் போது அரசாங்கக் கம்பனி ஒன்றிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. இக் காணியின் விற்பனைப் பெறுமதியில் இதற்காக ஏற்கப்பட்ட அபிவிருத்திச் செலவினங்கள் அறவிடப்பட்டு எஞ்சிய தொகை அரச திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்குமாறு கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் காணியை விற்பனை செய்து ரூபா 273.62 மில்லியன் தொகையான அபிவிருத்திச் செலவினத் தொகையான ரூபா 21 மில்லியன் கழிக்கப்பட்டு ரூபா 252 மில்லியன் தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

- மதமுல்ல ஈ.டீ. ராஜபக்ஷ ஞாபகார்த்த நிலையத்தை நிர்மாணிப்பதற்காக நீதிமன்றக் கட்டளையில் அறவிடப்பட்டிருந்த பணத்திற்கும் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட பெறுமதிக்கும் இடையேயான வேறுபாடு ரூபா 47 ஆகக் காணப்பட்டது. அத் தொகை செயற்திட்டத்திற்காக செலவிடப்படாத தொகையாக காண்பிக்கப்பட்டிருந்ததன்

காரணமாக இப் பணத்தை அறவிட முடியாது என்பது அவதானிக்கப்பட்டது. மேலதிகமாக செலவிடப்பட்ட செலவினம் தொடர்பாக மேலதிக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இதற்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இ ருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. எனினும், நி.பி.113 இன் பிரகாரம் திறைசேரி அங்கீகாரம் பெறப்படாது இவ் இழப்பு புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்படுவதற்காக 2021 யூன் 28 ஆம் திகதிய ஆசுறு.்.5404 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

- கூட்டுத்தாபனம் 2010 யூலை 14 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட 1662/17 ஆம் இலக்க வர்த்தமானியின் படி, மேல் மாகாணத்தில் உள்ள கால்வாய்களில் உள்ன பாதுக்கப்பட வேண்டிய காணியைப் (சுநளநசஎயவழைெ) பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்குறித்த வர்த்தமானி விநியோகிக்கப்பட்டு 10 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அவ்வாறு ஒதுக்கப்பட்ட காணிகள் இனங்காணப்படுவதற்கோ அல்லது ஒதுக்கப்பட்ட காணிகளில் குடியேறியுள்ள அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராத அத்துருகிரிய கொத்தலாவல அதிவேக வீதி பரிமாற்றம் தொடர்பில் வரிசைப் பூங்கா ஒன்று நிர்மாணிக்கப்பட் டு வடிகால்களை மேம்படுத்துவதற்கான செயற்திட்டம், செழுமையின் தொலைநோக்குப் பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது. திறைசேரி ஒதுக்கீட்டை அங்கீகரித்துக்கொள்வதற்காக செயற்திட்ட முன்மொழிவிற்காக விரிவான சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டம் 2020 திசெம்பர் 15 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 செப்தெம்பர் மாதம் வரையிலும் கூட்டுத்தாபன நிதியத்தில் இருந்து ரூபா 214 மில்லியன் இதற்காகச் செலவிடப்பட்டிருந்தது. இதில் எந்தவித தொகையும் திறைசேரியிலிருந்து மீளளிக்கப்படுவதற்காக கூட்டுத்தாபனம் தவறியிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் மேற்கொள்ளப்பட்டிருந்த வேலைகளின் பெறுமதி ரூபா 129 மில்லியனாக தொழில்நுட்பக் குழுவின் சான்றுறுதிப்படுத்தலுடன் நடைமுறை வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

- ரூபா 800 மில்லியன் திறைசேரி ஒதுக்கீட்டின் அடிப்படையில் "பேர" வாவியின் வண்டல் மண்ணை அகற்றி சுத்தப்படுத்தும் திட்டத்தின் பணிகள் 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டிலேயே நிறைவேற்றப்பட

வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெறப்பட்டிருந்த முன்னேற்றம் 21 எனும் மிகக் குறைவான நிலையில் காணப்பட்டது. இச் செயற்திட்டத்திற்கு தேவையான இயந்திர உபகரணங்கள் கொள்வனவிற்காக ரூபா 284 மில்லியன் திறைசேரி ஒதுக்கீட்டை வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதலளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அவ் எல்லை மீறப்பட்டு மீள அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படாது 2019 ஆகஸ்ட் மாதம் ரூபா 404 மில்லியன் பெறுமதியான 3 இயந்திரங்களைக் கொள்வனவு செய்துள்ளது. இதில் ரூபா 245 மில்லியன் மற்றும் ரூபா 76 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு இயந்திரங்களும் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் விளைவற்ற நிலையில் காணப்பட்டன.

- கடல் மண் கியூபிக் மீட்டர் 04 மில்லியன் அகழ்வு, தரைப்பகுதிக்கு பாய்ச்சுவதற்காகவும் களஞ்சியப்படுத்துவதற்காகவும் கூட்டுத்தாபனம் வெளிநாட்டு தனியார் ஒப்பந்த கம்பனி ஒன்றுடன் 2018 ஏப்ரல் 10 ஆம் திகி ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. எனினும், கூட்டுத்தாபனத்தால் உடன்படிக்கைக்காலம் முடிவுற முன்னர் உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டதன் காரணமாக வெளிநாட்டுக் கம்பனியால் மத்தியஸ்தம் கோரப்பட்டிருந்ததுடன் இதற்கு உரித்தாக 2023 ஏப்ரல் 28 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த மத்தியஸ்த வழக்குத் தீர்வின் பிரகாரம், ஐ.அதெ. டொலர் 2 மில்லியனிற்குச் சமமான ரூபா 633 மில்லியன் தொகையும் ஒப்பந்ததாரரால் தீர்க்கப்படும் வழக்கு நடவடிக்கைகளுக்காக ஏற்கப்பட்ட செலவினத்தில் ரூபா 120 மில்லியனுமாக ரூபா 753 மில்லியன் கூட்டுத்தாபனத்தால் செலுத்த நேரிட்டது. இவ்வாறே இப் பிரச்சனை தொடர்பாக உள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகளிற்காக கூட்டுத்தாபனத்தால் ரூபா 49 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதன் படி, முறையற்ற விதத்தில் உடன்படிக்கைகள் பூர்த்தி செய்தமைக்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது.

**கூட்டுத்தாபனத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட நிர்வாகக் கம்பனி**

- **டுசுனுஊ – சேவைகள் தனியார் கம்பனி**

- கம்பனியால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ரூபா 9 மில்லியன் தொகையும் திரண்ட அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேரி வரிப் பெறுமதி ரூபா 526 மில்லியன் தொகையானதுடன் இதன் படி, காசு அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரிப் பெறுமதி ரூபா 345 மில்லியன்

தொகையானதுடன் இதில் தண்டப்பணம் செலுத்தும் அபாயமும் நிலவியது. சுய கணிப்பீட்டு அடிப்படையில் அனுப்பிவைக்கப்பட வேண்டிய ரூபா 81 மில்லியன் தொகையான வருமான வரியும் அதனைச் செலுத்தாத பெறுமதியில் 21.5 சதவீத வட்டி அடங்கலாக மிகைக்கட்டண அறவீடும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் செலுத்த வேண்டியிருந்தது. இந்த எவ்வித கொடுப்பனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதற்கு 2022 திசெம்பர் வரை தவறியிருந்தது.

- 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 9 மில்லியனிற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 1669 ஊஊவுஏ கமரா உபகரணங்களில் ரூபா 3.6 மில்லியன் பெறுமதியான 835 அலகுகள் தொழிநுட்ப காலாவதியாகியிருந்தமையாலும் விற்பனை செய்யப்பட முடியாமையாலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் காணப்பட்டன. இவ்வாறே, 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 2 மில்லியன் இற்கு இறக்குமதி செய்யப்பட்ட ர்யனெ ர்நடன ஆநவயட னுநவநஉவழசள றவைா ஊயசபநசள 1000 இல் 506 அலகுகளும் ரூபா 11 மில்லியன் செலவில் இறக்குமதி செய்யப்பட்ட 8 விடயங்களுக்கு உரித்தான 731 அலகுகளும் பாதுகாப்பு உபகரணங்கள் மீளாய்வாண்டின் போதும் விற்பனை செய்யப்படுவதற்கு முடியாதிருந்ததுடன் தேவைப்பாடு சரியாக எதிர்வு கூறப்படாது இவ் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## ➢ காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

- காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் வணிக வியாபாரமாக கடல் மண்ணைப் பொதியிட்டு விற்பனை செய்யும் செயற்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டியதாக இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையால் 2018 ஒக்டோபர் 04 ஆம் திகதி தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன் இதற்கான கட்டிட நிர்மாணக் கூட்டுத்தாபனத்தால் ரூபா 200 மில்லியன் தொகையான கடன தொகை கம்பனிக்கு 2019 மே 07 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. குறித்த நிர்மாணிப்புகளை மேற்கொள்வதற்காக கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான காணி இருதரப்பினருக்கிடையே குத்தகை உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படாது கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படுவதற்கு முறையான கிரய நலன் பகுப்பாய்வு செய்யப்படாது கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் ரூபா 331 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் அரச

மதிப்பீட்டின் படி ரூபா 326 மில்லியன் தொகைக்கு கூட்டுத்தாபனத்திற்கு கையேற்கப்பட்டு இது அரசாங்கக் கம்பனியான லிட்ரோ காஸ் டேர்மினல் லங்கா (தனியார்) கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது.

- கூட்டுத்தாபனத்தால் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகைக்காக 12 சதவீத வருடாந்த வட்டி விகிதத்தில் மாதாந்தம் ரூபா 2 மில்லியன் படி 10 வருடங்களிற்குள் கடனை மீளச் செலுத்தும் அடிப்படையில் கம்பனியுடன் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் வியாபாரத்தை இடைநடுவில் நிறுத்தியதன் காரணமாக கடன் மற்றும் வட்டியைச் செலுத்துவதற்கு கம்பனி தவறியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனியால் மேலும் செலத்தப்பட வேண்டியிருந்த கடன் தொகை ரூபா 141 மில்லியனாகவும் செலுத் தப்பட வேண்டிய வட்டி ரூபா 49 மில்லியன் தொகையாகவும் இருந்தமையால் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கப்பெற வேண்டிய மொத்தப் பெறுமதி ரூபா 191 மில்லியனாகக் காணப்பட்டது. மேலும் நிர்வகிக்கப்பட்ட கம்பனியின் கணக்குகளின் படி, செயற்திட்டத்திற்காக கம்பனியால் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 383 மில்லியனாகக் காணப்பட்டது. கூட்டுத்தாபனத்தால் அவ்வப்போது எடுக்கப்பட்டிருந்த முறையற்ற தீர்மானங்கள் காரணமாக கம்பனிச் செயற்பாட்டு நடவடிக்கைகளிற்கு பாதகமான தாக்கமும் நிதிசார் பாதக முறையும் நேர்ந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

- கம்பனியால் சீமேந்துக் கற்களின் 05 உற்பத்தித் தொழிற்சாலைகளும் மண் சுத்திகரிப்பு தொழிற்சாலை ஒன்றும் பேணப்பட்டு வருவதுடன் இதில் நாவல தொழிற்சாலை தவிர்ந்த ஏனைய சகல கைத்தொழிற்சாலை தற்போது நட்டத்தை ஏற்படுத்தும் நிலைக்கு உட்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அத் தொழிற்சாலைகளில் இருந்து கிடைக்கப்பெற்ற மொத்த நட்டம் ரூபா 13 மில்லியன் தொகையானதுடன் கடந்த 05 ஆண்டுகளிற்குள் ஏற்கப்பட்ட மொத்த நட்டத் தொகை ரூபா 75 மில்லியனாகக் காணப்பட்டது. மேலும், ஹிங்குரக்கொட தொழிற்சாலை 2019 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து தனது உற்பத்தி நடவடிக்கைகளை இடைநிறுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தொழிற்சாலையும் அதன் உபகரணமும் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன

**நகர்ப்புறக் குடியிருப்பு மேம்பாட்டு அதிகாரசபை**

ரூபா 1,392 மில்லியன் செலவிடப்பட்டு இலவசக் கொடுப்பனவாக அதிகாரசபைக்குக் கிடைக்கப்பெற்ற மொறட்டுவை லுனாவ அரச காணியில் 356 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு விற்பனை அடிப்படையில் 353 வீடுகள்

வழங்கப்பட்டிருந்ததுடன் அவ் வீடுகளின் கிரயத்தைத் தீர்மானிக்கையில் காணிக் கிரயத்தை கருத்திற்கொண்டிராததுடன் வீட்டுப் பயன்பாட்டாளர்களுக்கு உறுதியும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

- மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த வீடமைப்புக் கடன் மற்றும் உதவி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் இடையே “உங்களுக்கு வீடும் நாட்டிற்கு நாளையும்” உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்ட 8,153 வீடுகளின் நிர்மாணிப்பு நடவடிக்கைகளிற்காக ரூபா 2,589 மில்லியன் தொகையான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் போது 5,878 வீடுகள் ரூபா 388 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 6,353 வீடுகளின் நிர்மாணிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு பழைய நிர்மாணிப்புகள் பூர்த்தி செய்யப்படாது 2022 ஆம் ஆண்டின் போது புதிதாக இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1485 வீடுகளுக்காக உதவி வழங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் இதில் 19 வீடுகள் மாத்திரம் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்திருந்தன. 2022 ஆம் ஆண்டின் போது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உள்ளக நிதி ஒதுக்கீட்டின் கீழ் வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 600 மில்லியன் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு 1000 வீடுகள் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 147 மில்லியன் செலவிட்டு 391 வீடுகள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

- “மிஹிந்து வீடமைப்பு” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்ட 557 வீடுகளின் வேலை 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 92 மில்லியன் செலவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 210 வீடுகள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தன. 2022 ஆம் ஆண்டின் போது புதிதாக 77 வீடுகள் வேலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கும் இவற்றில் 21 வீடுகள் நிர்மாணிப்புள் பூர்த்திசெய்யப்படுவதற்காக ரூபா 40 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 18 மில்லியன் செலவில் 08 வீடுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இவ்வாறே, செலன உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 75 மில்லியன் ஒதுக்கப்பட்டு 100 வீடுகள் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 32 மில்லியன் செலவில் 94 வீடுகள் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு வீட்டின் நிர்மாணிப்பு வேலைகள் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

- 2017 ஆம் 2019 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்திய வீட்டுத் திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2400 வீடுகள் ரூபா 1200 மில்லியன் ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் இதற்காக 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 242 மில்லியன் ஏற்பாட்டில் 820 வீடுகள் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 42 மில்லியன் செலவில் 138 வீடுகள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தன. மேலும், பழைய வீட்டுத் தொகுதி பழுதுபார்ப்பின் கீழ் கம்பஹ ஹிம்புட்டு உயன வீடமைப்புத் தொகுதியின் மலக்கழிவகற்றல் திருத்தப்படுவதற்கு ரூபா 76 மில்லியன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 51 மில்லியன் செலவில் திருத்த வேலைகளில் 5 சதவீதம் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- அதிகாரசபையின் கொழும்பு 10 டார்லி வீதியில் உள்ள ஏக்கர் 01 இன் பேர்ச் 26.5 இலான காணியில் வீடு மற்றும் கடைத் தொகுதியுடனான கலப்பு அபிவிருத்திச செயற்திட்டம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக திறந்த கேள்வி கோரப்படாது 2005 நவம்பர் 09 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தில் டீயுலு ளுயுவு ஆடீர்(ஶஎவ)டுவுனு வெளிநாட்டு கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அக் கம்பனியுடன் 2006 யூன் 23 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி காணிப் பெறுமதி அரசாங்க பிரதான மதிப் பீட்டாளரின் ரூபா 650 மில்லியன் மதிப்பீட்டில் அறவிடப்படுவதற்கும், 06 ஆண்டுகளில் செயற்திட்டத்தை நிறைவேற்றியதை அடுத்து ரூபா 162 மில்லியன் தொகையான இலாபத்தை அதிகாரசபைக்கு வழங்குவதற்கும் உடன்பட்டிருந்தது. எனினும், டீயுலு ளுயுவு ஆடீர்(ஶஎவ)டுவுனு கம்பனி திட்டமிடப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளாது 2006 ஆம் ஆண்டின் போது இதிலிருந்து நீங்கியிருந்ததுடன் அச் செயற்பாடு டு ரூ வு ஐகெசயளவசரஉவரசந ஹுநஎநடழிஅநவெ கம்பனியிடம் ஒப்படைத்திருந்தது. இப் புதிய கம்பனியுடன் அதிகாரசபை 2016 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துகையில் காணிக்காக புதிய மதிப்பீட்டு அறிக்கை ஒன்றைப் பெற்றிராது 10 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 2006 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 650 மில்லயனிற்கு ஒப்படைத்திருந்தது. 2016 மே 05 ஆம் திகதி உடன்படிக்கையில் பணம் செலுத்தப்படுவதன் முன்னர் 983 ஆம் இலக்க உறுதியின் மூலம் 2016 மே 05 ஆம் திகதி இக் காணியின் உரிமை கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 712 மில்லியன் வெளிநாட்டுத் தொகையில் செலுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும், இதற்கு முரணாக காணி கூறுகள் இல. 2,3,4 எனும் காணிக் கூறுகள் 3 சம்பத் வங்கிக்கு குத்தகைக்கு பெறப்பட்ட ரூபா 800 மில்லியன் தொகையில் 2016 மே 05

ஆம் திகதிய சம்பத் வங்கி காசோலைகள் இரண்டின் மூலம் அதிகாரசபைக்கு குறித்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- இவ்வாறே, 2017 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை டுருவு ஐகெசயளவசரஉவரசந னுநளநடழிஅநவெ கம்பனியால் திட்டமிடப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம்

- திணைக்களம் தனது செயற்பாட்டிற்கு மாறாக புண்ணிய பூமி சுத்திகரிப்பு மற்றும் வேறு நடவடிக்கைகளிற்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் 64 ஊழியர்களைத் தொடர்நது ஈடுபடுத்தியிருந்ததுடன் இதற்காக சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவாக ரூபா 25 மில்லியன் தொகையை திணைக்களம் செலுத்தியிருந்தது.

- 1946 இன் 13 ஆம் இலக்க நகர மற்றும் கிராமிய நிர்மாண கட்டளைச் சட்டத்தின் (269 அதிகாரம்) மற்றும் 2000 இன் 49 ஆம் இலக்க நகர மற்றும் கிராமிய நிர்மாணிப்பு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய கொள்கை நிர்மாணிப்புக் கொள்கையைத் தயாரித்து தேசிய கொள்கைத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டியதுடன் 2021 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின் படி 2021 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையிலும், 2019 இல் தயாரிக்கப்பட்டிருந்த தேசிய கொள்கைத் திட்டமிடலுக்குத் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அச் செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- அநுராதபுரம் புனித நகர பூமியில் மக்கள் குடியிருப்பை மட்டுப்படுத்தி அத்துமீறிய நிர்மாணிப்புகளை இதிலிருந்து அகற்றுவது திணைக்களத்திற்கு உரித்தான செயற்பாடல்லாத போதிலும், அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, இதற்காக லோலுகஸ்வெவ நகர நிர்மாணிப்பு செயற்திட்ட திணைக்களத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டு வரை ரூபா 634 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டை வழங்கியிருந்தது. 2022 ஆம் ஆண்டளவில் ரூபா 13 மில்லியன் அதாவது 2 சதவீதம் மாத்திரமே செலவிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட அலுவலகம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.


# நெடுஞ்சாலைகள் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- அரசின் நிதியுதவி மூலம் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம்
    - பேஸ்லைன் வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் III ஆம் கட்டம்.
    - 100,000 கி.மீ. மாற்று வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டம்.
    - மத்திய அதிவேக நெடுஞ்சாலைகள் - IV செயற்திட்டம்
- கிராமிய வீதிகள் மற்றும் எஞ்சிய உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவு
- வீதி அபிவிருத்தி அதிகாரசபை
- வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் துணைக் கம்பனிகள்

# நெடுஞ்சாலைகள் துறை

நெடுஞ்சாலை வலையமைப்பானது ஒரு நாட்டின் மதிப்பு மிக்க மற்றும் மிகவும் பரந்த சமூக சொத்தாக கருதப்படுவதுடன் அது பொருளாதார, சமூகம், கலாச்சார ரீதியில் போன்றே சுற்றாடல் ரீதியிலும் சமூக நலனோம்பல் நோக்கில் மிகவும் முக்கியமான பிரிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பொருளாதார பிரிவுகளுக்கு ஈடாக சேவை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் நகர மற்றும் கிராம அபிவிருத்தியில் ஏற்றத்தாழ்வுக்கு தீர்வாக வினைத்திறனாக மற்றும் சூழல் நேயமிக்க பொது போக்குவரத்து ஒழுங்கமைப்பிற்காக போக்குவரத்து வலையமைப்பினை அபிவிருத்தி செய்தல் அடிப்படை தேவைப்பாடாக அரசாங்கத்தின் முக்கிய கொள்கைகள் மூலம் இனம் காணப்பட்டுள்ளது. நாட்டினுள் வாழும் மக்களின் வாழ்க்கை நிலைமையை கட்டி எழுப்பும் நோக்கில் அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், போக்குவரத்து தேவைப்பாடுகளுக்காக அதிகரித்து வரும் கேள்வியினைப் பூர்த்தி செய்யும் நோக்கில் நெடுஞ்சாலைகள் பிரிவுக்கு மொத்தமாக மிக உயர்ந்த முதலீடு மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு அமைய தேசிய, மாகாண மற்றும் கிராமிய வீதிகளும் உள்ளடக்கப்பட்டு நாட்டின் வீதி வலையமைப்பை முன்னேற்றுவதன் மூலம் பிரயாணிகளுக்கு தமது இலக்கினை அடைவதற்கு இலகுவாக பிரவேசிக்க கூடியதாக இருத்தல், எரிபொருள் சிக்கனம், போக்குவரத்து செலவினைக் குறைத்தல், வீதி நெருக்கடியை குறைத்தல் போன்ற சாதகமான காரணங்களினால் இந்த பிரிவுக்கு மேற்கொள்ளப்படும் முதலீடுகள் மிகவும் உயர்ந்த பொருளாதார பெறுமதியினை உருவாக்குகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. இலங்கை தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பு 2022 ஆண்டு இறுதி வரையில் அண்ணளவாக 12,536 மீட்டரை கொண்டதாக உள்ளதுடன் அது “ஏ” தரத்திலான நெடுஞ்சாலை தூரம் 4 ,217 கிலோ மீட்டரையும், “பி” தரத்திலான நெடுஞ்சாலையில் தூரம் அண்ணளவாக 8,007 கிலோ மீட்டரையும், கட்டணம் அறவிடப்படும் நெடுஞ்சாலைகளின் தூரம் அண்ணளவாக 312 கிலோ மீட்டரையும், 4,254 பாலங்களையும் கொண்டுள்ளது.




வரைபடம் : 31 இலங்கை தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பு

2022 ஜூலை 22 ஆம் திகதி இடப்பட்ட அதி விசேட வர்த்தமானி பத்திரத்தின்

மூலம் போக்குவரத்து அமைச்சு, போக்குவரத்து இராஜாங்க அமைச்சு, கிராமிய வீதி மற்றும் எஞ்சிய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு ஆகிய அமைச்சுக்களின் விடயப் பரப்புகள் ஒன்றிணைக்கப்பட்டு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாக அத்தினம் முதல் செயல்படுத்தப்பட்டு இருந்தது.

2022 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பிரிவின் வருடாந்த மதிப்பீட்டிற்கு அமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் நிறைவேற்றப்பட வேண்டி இருந்தன.

### நெடுஞ்சாலைகள் பிரிவு.

- வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் விடயத்திற்கு மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுக்கு உரிய கொள்கைகள், வேலைத் திட்டங்கள் மற்றும் செயல் திட்டங்களைத் தயாரித்தல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.
- கிராமப்புறம் மற்றும் நகர்ப்புற இடங்களைத் தொடர்பு படுத்தி மக்களை மையமாகக் கொண்டு பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி ஏற்படும் வகையில் உயர் தரத்தினை கொண்ட வகையில் தேசிய நெடுஞ்சாலைகள் ஒழுங்கமைப்பினை அபிவிருத்தி செய்தல் மற்றும் சிறந்த தரத்தில் பேணிச் செல்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.
- அதிவேக நெடுஞ்சாலைக் கட்டணத்தைத் தீர்மானித்தல், சேகரித்தல் மற்றும் ஒழுங்குறுத்தல்.
- அரச முன்னுரிமை மற்றும் தேசிய கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பிரதேச மற்றும் மாகாண நிர்வாக நிறுவனங்களுக்கு சொந்தமான வீதிகள் தொடர்பில் வேலை திட்டங்கள் மற்றும் செயல் திட்டங்களைத் தயாரித்து அவற்றை இணைத்தல் மற்றும் கண்காணித்தல்.
- மேலே கூறப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அந்த நிறுவனங்களுக்கு உரிய அனைத்து விடயங்களுக்கும் உரிய நடவடிக்கைகளை கண்காணிப்பு செய்தல்.

### போக்குவரத்துப் பிரிவு

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி மிகவும் மேம்பட்ட போக்குவரத்து உள்கட்டமைப்பை செயல்படுத்துதல், வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை இந்த பிரிவின் செயற்பணியாக இருந்தது அந்த பணியை நிறைவேற்ற, பின்வரும் பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டது.

- சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து முறையை உறுதிப்படுத்த தேவையான கொள்கைகள் மற்றும் சட்டங்கள், விதிகளை உருவாக்குதல்.
- பொது போக்குவரத்து அமைப்பில் பொதுமக்களின் நம்பிக்கையை மற்றும் சாலை வசதிகளை ஏற்படுத்துவதற்கு உயர் தரத்தை உருவாக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- போக்குவரத்து நெரிசல், பயணிகள் நெரிசல் மற்றும் சாலை விபத்துகளை குறைக்க பின்பற்ற வேண்டிய

வழிகாட்டுதல்கள் மற்றும் விதிகளை அறிமுகப்படுத்தல்.


- பொது மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகள் மற்றும் புகையிரத சேவைகளை ஒரு பொதுவான அட்டவணையின்படி ஒருங்கிணைந்த மாதிரியின் கீழ் இயங்கும் போக்குவரத்து சேவையாக இயக்க தேவையான அதிநவீன இலத்திரனியல்-டிக்கெட் முறையை அறிமுகப்படுத்துதல்.
- புகையிரதம் மற்றும் பேருந்து நிலையங்கள் தொடர்பான பொது வசதிகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- புகையிரதம் மற்றும் பேருந்து சேவைக்குத் தேவையான புகையிரதங்கள் மற்றும் பேருந்துகளின் பராமரிப்பு.
- பேருந்து உற்பத்தி மற்றும் போக்குவரத்து தொடர்பான உள்ளூர் தொழில் அமைப்பை உருவாக்க தேவையான பெறுகை நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல்.
- கொழும்பு, ஹம்பாந்தோட்டை, காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கு புகையிரதம் மூலம் சரக்குகளை கொண்டு செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் விரிவாக்குதல்.
- தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் வாகனப் பதிவை மக்களுக்கு ஏற்ற, திறமையான, ஊழலற்ற நடைமுறையாக மாற்றுதல்.
- இலங்கை போக்குவரத்துச் சபையை இலாபம் ஈட்டும் நிறுவனமாக நவீனப்படுத்துதல் மற்றும் பிரதான பேருந்து நிலையங்களில் பொது வசதிகளை மேம்படுத்துதல்.
- தற்போதைய பேருந்துகளை மாற்றி, கொழும்பு மற்றும் முக்கிய நகர எல்லைகளுக்குள் சுற்றுச்சூழலுக்கு உகந்த புதிய பேருந்துகளை அறிமுகப்படுத்தி, தனியார் பயணிகள் போக்குவரத்தையும் பசுமைப் போக்குவரத்துடன் இணங்கச் செய்யும் திட்டத்தை வகுத்து செயல்படுத்துதல்.
- புகையிரத பெட்டிகள், பேருந்துகள் மற்றும் கார்களை உள்நாட்டில் உற்பத்தி செய்யவும், பழுதுபார்க்கவும் மற்றும் மேம்படுத்தவும் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் போக்குவரத்து சேவையை உருவாக்குதல்.
- பள்ளி பேருந்து சேவைகளை வலுப்படுத்துதல் மற்றும் மாணவர் பாதுகாப்பிற்கான நியமங்களின் கீழ் வலுப்படுத்தல்.
- கிராமப்புறங்களுக்கு பொதுப் போக்குவரத்து வசதிகளை வழங்குவதை நெறிப்படுத்த பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்திற்காக இலங்கை போக்குவரத்து சபையை வழிநடத்துதல்.
- பயணிகள் மற்றும் போக்குவரத்து சேவையின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உயர் தரத்தில் போக்குவரத்து சேவைகளை ஒழுங்குபடுத்துதல்.
- சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் மற்றும் கார்களை பதிவு செய்வதில் உள்ள பல்வேறு முறைகேடுகளை நீக்கி திறமையான சேவையை வழங்குதல்.

**கிராமிய வீதிகள் மற்றும் எஞ்சிய உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவு**

கிராமப்புற வீதிகளின் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் இத்துறையின் கீழ் பரந்த பார்வை மற்றும் இலக்கு அணுகுமுறையுடன் செயல்படுத்தப்படுகின்றன. அதற்காக, புதிய திட்டங்களையும் செயற்திட்டங்களையும் கண்டறிந்து, திட்டமிட்டு, செயல்படுத்தி, வழிநடத்தி, பின்தொடர்வதே இத்துறையின் நோக்கமாக இருந்தது. அதன்படி, இப்பிரிவு பின்வரும் முக்கிய நோக்கங்களை நிறைவேற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- கிராமப்புற வீதிகள் பாலங்கள் மற்றும் பிற தொடர்புடைய உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு தேவையான மூலோபாயங்களை கண்டறிதல
- கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான வழிமுறை தொழில்நுட்பங்கள் மற்றும் பொறிமுறைகளின் அறிமுகம்.
- கிராமப்புற சமூகத்தில் வேலைவாய்ப்பு மற்றும் வணிக வாய்ப்புகளை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல்.
- கிராமப்புற வீதிகள், பாலங்கள் மற்றும் பிற உள்கட்டமைப்புகளை முன்னுரிமையின்படி அடையாளம் கண்டு அவற்றின் செயற்திறனை மேம்படுத்தல்.

2022 ஆம் ஆண்டில், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு பாராளுமன்றத்தினால் ரூபா 272,062 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிக்குள் ரூபா 214,962 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு, 2022 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய 05 வருடங்களுக்கான ஒதுக்கீட்டுத் தொகை, செலவிடப்பட்ட தொகை மற்றும் எஞ்சிய தொகை பின்வருமாறு.




| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|
| நிதி ஏற்பாடு (ரூ.மி) | 242202 | 218534 | 284665 | 298027 | 410118 | 272062 |
| செலவினம் (ரூ.மி) | 214043 | 185920 | 177644 | 258646 | 230297 | 214962 |
| சேமிப்பு (ரூ.மி) | 28160 | 32614 | 107021 | 39382 | 179821 | 57099 |

வரைபடம்: 32 கடந்த 6 வருட காலப்பகுதியினுள் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகள், பயன்பாடு மற்றும் சேமிப்பு

மூலம் - வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2017 முதல் 2021 வரையிலான 05 ஆண்டுகளில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்திற்கு வழங்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூபா 1,453,546 மில்லியன் மற்றும் மொத்த செலவு ரூபா1,066,550 மில்லியன் ஆனமையால், பயன்படுத்தப்படாத ஒதுக்கீடு ரூபா 386,996 மில்லியன் ஆக காணப்பட்டது.

### அரசின் நிதியுதவி மூலம் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம்

- களனி பாலத்திலிருந்து அத்துரிகிரிய வரை தூண்களின் மூலம் வீதியொன்றை அமைக்கும் திட்டம் 2025 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டு முதலீட்டாளரால் 15 வருடங்கள் நடத்தப்படவிருந்தது. இந்த திட்டம் ஒரு பொது தனியார் கூட்டாண்மையாக () வடிவமைப்பு - உருவாக்கம் - நிதி - இயக்கம் - பராமரிப்பு மற்றும் பரிமாற்றம் (DBFOMT) அடிப்படையில் செயல்படுத்தப்பட இருந்தது. செயற்திட்டத்தின் மதிப்பீடு ரூபா 193,000 மில்லியன ஆக இருந்ததுடன், முன்மொழியப்பட்ட பிரதான பாதையின் நீளம் கி.மீ. 16.4 ஆகும் 2022 டிசம்பர் 31, இல் உள்ளபடியாக செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட உள்ளூர் நிதியின் அளவு ரூபா1,182 மில்லியனாக இருந்தது, மேலும் அமைச்சரவையின் ஒப்புதலின்றி 2023ஜனவரி 31 முதல் செயற்திட்டச் செயல்பாடுகளை நிறுத்த செயற்திட்ட வழிநடத்தல் குழு தீர்மானித்திருந்தது.

- மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 54,695 மில்லியன் ருவன்புர அதிவேக நெடுஞ்சாலைத் திட்டப் பணிகள் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டன. அதன்படி, கஹதுடுவ இடைமாற்றலிலிருந்து பெல்மதுல்ல வரையிலான தூரம். 76 மீற்றர் மற்றும் கஹதுடுவ முதல் இங்கிரிய வரையான பிரிவில். மீட்டர். 24.3 இனை நிர்மாணிக்கும் பணி 2021 மே 03 அன்று கட்டுமான நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்கான கட்டுமானப் பணிகள் 2023ல் முடிக்க திட்டமிடப்பட்டது. இருப்பினும், கட்டுமானப் பணிகள் தொடங்கி ஒரு வருடம் ஆகியும் பட்டியல் மற்றும் பணம் செலுத்தாததால் 2022 மே 10 முதல் கட்டுமானப் பணிகளை ஒப்பந்ததாரர் ஒருதலைப்பட்சமாக நிறுத்தினார். தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடனிலிருந்து 2022 பெப்ரவரி 18 ஆம் திகதி வற் வரியுடன் கூடிய ரூபா 3,012 மில்லியன் கட்டுமான நிறுவனத்திற்கு முன்பணமாக செலுத்தப்பட்டதுடன், ஒப்பந்ததாரர் நிர்மாணத்தை நிறுத்தியதால் மேற்படி தொகையை செலுத்த முடியவில்லை.

### பேஸ்லைன் வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் III ஆம் கட்டம்.

- பேஸ்லைன் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் ஐஐஐ கட்டம் 2009 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது, மீளாய்வாண்டின் இறுதியில் 13 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், முன்னுரிமை வழங்கி செயற்படுத்தப்பட வேண்டின செயற்திட்டமொன்று அல்ல

என கருதி பாரிய திட்ட மதிப்பாய்வு மற்றும் துரிதப்படுத்தும் குழு செயற்திட்டத்தை நிறுத்த முடிவு செய்தது. எவ்வாறாயினும், காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை தொடருமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிக்கப்பட்டது. 2023 ஜனவரி மாதத்தில் செயற்திட்டம் முடிவடையும் போது, திட்டத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன், 2022 திசெம்பர் 31 இல் நிலவரப்படி, நிலம் கையகப்படுத்துதல் மற்றும் திட்ட மேலாண்மை அலகுக்கான செலவு ரூபா 3,720 மில்லியன் மற்றும் ரூ. 49 கோடி செலவிடப்பட்டிருந்து.

### 100,000 கி.மீ. மாற்று வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டம்.

- கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட 100,000 கி.மீ. மாற்று வீதி புனரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட பொறியியல் மதிப்பீடுகளை மீளாய்வு செய்து திருத்துமாறு வரிசை அமைச்சின் செயலாளர் அதிகாரசபைக்கு அறிவித்திருந்தார். மேலும், பல சந்தர்ப்பங்களில், மிகைப்படுத்தப்பட்ட ஒப்பந்த மதிப்பீட்டின் மதிப்புகள் திருத்தப்பட்டு இறுதிக் கட்டணங்கள் செலுத்தப்படும் என்று அமைச்சின் செயலாளர் கணக்காய்வுக்குத் தெரிவித்திருந்தார். எவ்வாறாயினும், பின்னர், 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் திகதிக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களுக்கும் அதன் பின்னர் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களுக்கான ஒப்பந்தப் பெறுமதியையும் உண்மையான வேலைகளின் அடிப்படையில் செலுத்துமாறு அமைச்சின் செயலாளர் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு பணிப்புரை விடுத்திருந்தார். இதன்படி, உயர் மதிப்பீடுகளின் அடிப்படையில் 2022 டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் ஒப்பந்தக்காரர்களுக்கு அதிகாரசபை ரூபா 115,435 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தமை கணக்காய்வில் சர்ச்சைக்குரியதாக காணப்பட்டது.

- 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் உள்நாட்டு நிதியினால் செயற்படுத்தப்படும் தேசிய, பிராந்திய மற்றும் கிராமப்புற அளவில் 100,000 கிலோ மீட்டர் நீளமான மாற்று வீதியினை புனரமைப்பு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த வீதிகளின் தூரம் 17,847 கி.மீ. ஆகவும், முடிக்கப்பட்ட பணிகள் 6,298 கி.மீ. தொடர்ந்தும் நடைமுறை வேலையின் அளவானது 11,549 கி.மீ. ஆகும். இப்பணிகளுக்கு மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் ரூபா 142,821 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளதுடன், அன்றைய தேதியில் நிலுவையில் உள்ள பட்டியல்களின் பெறுமதி ரூபா 16,810 மில்லியன் ஆகும். இச்செலவுகளை ஈடுகட்ட, உள்ளூர் வங்கிகளிடமிருந்து ரூபா 43,205 மில்லியன் மற்றும் அமைச்சின்

செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 68,263 மில்லியன் மற்றும் திறைசேரி உண்டியல்களை வழங்குவதன் மூலம் ரூபா 35,940 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

- குருநாகல், பொலன்னறுவை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் மாத்திரம் அமுல்படுத்தப்பட்ட 42 வீதி நிர்மாணத் திட்டங்களில் 119 வீதிகள் தொடர்பான மதிப்பீடுகளை தயாரிப்பதில், பிரதான வேலை விடயங்களின் விலைகள் மிகைப்படுத்தப்பட்டிருந்தமை, மூலப்பொருட்களின் போக்குவரத்து தூரம் உண்மையான தூரத்தை விட அதிகமாக இருந்தமை, திட்ட மேற்பார்வைச் செலவு மற்றும் நிர்வாகச் செலவு ஆகியவை அதிக விகிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை, மூலப்பொருள் கழிவுகளுக்கான அசாதாரண பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டமை ஆகியவற்றால் ஒப்பந்தச் கிரயம் ரூபா 221 மில்லியன் அதிகமாக மதிப்பிடப்பட்டிருந்தது.

- அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் நெறிமுறையின்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணப் பிணைமுறியொன்றை சமர்ப்பித்தால், ஒப்பந்தத் தொகையில் 20 சதவீத முன்பணி முன்பணம் வழங்கப்படலாம். எவ்வாறாயினும், மகநெகும நிர்மாண பொறிமுறை நிறுவனத்தால் உப ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட 1,753 ஒப்பந்த வேலை கட்டளைகளுக்கு முன்பணி முன்பணம் வழங்கியபோது, 16 பணி கட்டளைகள் மட்டுமே பணிக்கு முந்தைய முற்பணப் பிணைமுறியை பெற்றிருந்தன.

- மாத்தறை மாவட்டத்தில் ஒப்பந்ததாரர்களுக்கு வேலை முன்பணம் வழங்கும் போது ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 590 மில்லியனான 26 முற்பணப் பிணைமுறிகளின் செல்லுபடியான காலம் மீளாய்வாண்டின் இறுதியில் காலாவதியடைந்திருந்தது. எவ்வாறாயினும், பணிகள் நிறைவடையாத மற்றும் பணிகளுக்கு இடையில் நிறுத்தப்பட்டுள்ள வீதிகள் தொடர்பான முற்பண பிணைமுறிகளின் செல்லுபடியாகும் காலத்தை நீடிக்க வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் செயற்படவில்லை. இதன் காரணமாக, கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 15 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த முன் பணி முற்பணம் ரூபா 399 மில்லியன் மீள அறவிட முடியாது காணப்பட்டது.

- தெரிவுக் கணக்காய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டவாறு, கேகாலை மாவட்டத்தில் மகநெகும நிர்மாணக் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்ட ரூபா 1,736 மில்லியன் கிரயமான 74 நிர்மாண ஒப்பந்தங்களின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன், புத்தளம் மாவட்டத்தில் 124 வீதிகளின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் புத்தளம் மாவட்டத்தில் 20 வீதிகளின் அபிவிருத்திக்காக ரூபா 5,291 மில்லியன், பொலன்னறுவை

மாவட்டத்தில் 10 வீதிகளின் அபிவிருத்திக்காக ரூபா 377 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும், புத்தளம் மாவட்டத்தில் 208 வீதிகளின் நிர்மாணமும் அபிவிருத்தியும் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், வீதிகளை பயன்படுத்தும் பொதுமக்கள் சிரமத்துக்குள்ளாகி வருவதுடன், அபிவிருத்திப் பணிகளுக்காக கொண்டு வரப்பட்ட மூலப்பொருட்களும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது.

- மாத்தறை மாவட்டத்தில் 02 ஒப்பந்தப் பொதிகளின் யுடீஊ இழையப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட ரூபா 62.74 மில்லியன் பெறுமதியான 10 வீதி அபிவிருத்தித் திட்டங்களின் யுடீஊ முற்றாக கழன்று சென்றிருந்த காரணத்தால் வீதிகள் அபிவிருத்திக்கு முன்னர் இருந்ததைப் போலவே மாறியுள்ளதுடன், போக்குவரத்துக்கு பயன்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தது. அதன்படி, ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை ரூபா 17 மில்லியன் விளைவற்ற செலவினமாகியிருந்தது.

**மத்திய அதிவேக நெடுஞ்சாலைகள் - IV செயற்திட்டம்**

- மத்திய அதிவேக நெடுஞ்சாலை செயற்திட்டம் கட்டம் 04 இன் செயற்திட்ட முகாமைத்துவ அலகு 2016 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதுடன், 2022 டிசம்பர் 31 வரையிலும் ரூபா 551 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும், 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி செயற்திட்ட பணிகள் நிறைவு செய்யப்படும் வரையிலும் திட்டத்தின் சிவில் பணிகள் தொடங்கப்படவில்லை. 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இந்த செயற்திட்டத்தை கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**கிராமப்புற வீதிகளின் எஞ்சிய உள்கட்டமைப்பு வசதிகள் பிரிவு.**

- மீளாய்வாண்டில் கிராமிய பாலம் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,496 மில்லியன் ஒதுக்கீட்டில், ரூபா 616 மில்லியன் அல்லது 41 சதவீதம் பயன்படுத்தத் தவறிவிட்டது. அத்துடன், 2022 ஆம் ஆண்டுக்கான கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டத்திற்காக ரூபா 5,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், புதிய வீதித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படாததால், பெறப்பட்ட ஒதுக்கீட்டில் 72 வீதமான ரூபா. 3,603 மில்லியன் நிலுவை பட்டியல்களை செலுத்த பயன்படுத்தப்பட்டது.

- வாகனங்கள் செல்லக்கூடிய பாலங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 7,204 மில்லியன் மதிப்பீட்டில் 463 பாலங்களை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தங்கள் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் வழங்கப்பட்டுள்ளன. மீளாய்வாண்டின் இறுதியில், 52 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு, கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்படாத பாலங்களின் எண்ணிக்கை 175 ஆக இருந்ததுடன்,

25 சதவீதத்திற்கும் குறைவான பௌதீக முன்னேற்றத்துடன் 96 பாலங்களும், 25 முதல் 50 சதவீதத்திற்கு இடைப்பட்ட 46 பாலங்களும் இருந்தன.

- குறைந்த கிரயத்துடனான பாலம் செயற்திட்டத்தின் கீழ், 2020 ஆம் ஆண்டில் ரூபா 1,500 மில்லியன் செலவில் 1,000 பாலங்கள் நிர்மாணிக்க திட்டமிடப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதிக்குள், 22 பாலங்கள் மட்டுமே முடிக்கப்பட்டு 11 பாலங்களின் பணிகள் ஆரமபிக்கப்பட்டிருந்தன.
- கிராமிய வீதி செயற்திட்டத்தின் கீழ், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் ஊடாக ரூபா 35,497 மில்லியன் செலவில் 38,718 கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நிர்மாண ஒப்பந்தங்கள் உள்ளூராட்சி மன்றங்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டன. ஆனால் மீளாய்வாண்டின் இறுதியில், 6,423 கிராமப்புற வீதிகளின் ஒப்பந்தங்கள் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதன் பௌதீக செயன் முன்னேற்றம் 16 சதவீதம் எனும் குறைவான பெறுமதியை கொண்டிருந்தது. மேலும் அங்கு செய்யப்பட்ட பணியின் மதிப்பு ரூபா 6,394 மில்லியன் ஆக காணப்பட்டது.

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

- அதிகாரசபையினால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக உள்ளூர் வங்கிகளால் பெறப்பட்ட கடன்களிலிருந்து மீளச் செலுத்தப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 356,059 மில்லியன் ஆகும், மேலும் கடன் வாங்கியதன் காரணமாக 05 வருட காலப்பகுதியில் உள்ளூர் வணிக வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய வட்டித் தொகை ரூபாய் 108,970 மில்லியன் ஆக காணப்பட்டது. மேலும், மீளாய்வாண்டின் இறுதியில், செலுத்த வேண்டிய கடன் வட்டி ரூபா 37,669 மில்லியனாகவும், கடன் தவணையின் மதிப்பு ரூபா 2,502 மில்லியனாகவும் இருந்தது.
- உள்நாட்டு வங்கிகளிலிருந்து பெறப்பட்ட கடன் பணத்திற்கான கடன் வட்டி மற்றும் தவணையாக 2022 டிசம்பர் 31 இல் உள்ளபடியாக நிலுவையில் உள்ள தொகையை செலுத்துவதற்கு திறைசேரிக்கு நிதியேற்பாட்டினை வழங்க முடியாததன் காரணமாக ரூபா 36,672 மில்லியன் திறைசேரி பிணைமுறிகள் )வுசநயளரசல டீழனௌ) வெளியிடப்பட்டன. உள்நாட்டு வங்கிகளில் பெற்ற கடனுக்கு மேலதிகமாக 100,000 கி.மீ வீதி செயற்திட்டத்துடன் தொடர்புடைய வீதி நிர்மாணப் பணிகளுக்காக 36 ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 32,218 மில்லியனுக்காகவும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி திறைசேரி உண்டியல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

- அதிகாரசபைக்கு சொந்தமான A மற்றும் B தர நெடுஞ்சாலைகளின் மொத்த தூரம் 12,225 கிலோமீட்டர்கள் என்றாலும், தேசிய நெடுஞ்சாலைகளின் மூலதனமயமாக்கல் தொடங்கப்பட்ட 2018 ஆம் ஆண்டு முதல் 2022 டிசம்பர் 31 வரை 285 வீதிகளுக்கு உரிய 3,267 கிலோமீட்டர்கள் மட்டுமே மூலதனமாக்கப்பட்டன. இதன்படி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான A மற்றும் B தரங்களைச் சேர்ந்த 8958 கிலோமீற்றர் தூரத்திற்கான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிராததுடன், இது ஒட்டுமொத்த வீதிக் கட்டமைப்பின் நீளத்தின் அளவில் 73 வீதமாகும்.

- அதிகாரசபையினால் 10 நிர்மாண செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணத்தின் பெறுமதி ரூபா 45,812 மில்லியன் ஆகும், மேலும் அந்த பெறுமதிகளில் 05 வேலைத்திட்டங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட் ரூபா 15.53 மில்லியன் முற்பணங்கள் 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிலுவைகள் தீர்க்கப்படவில்லை. மேலும், மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் கட்டம் I, மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் மூன்றாம் கட்டம் ஐஐஐ மற்றும் ருவன்புர அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் ஆகியவற்றின் ஒப்பந்தங்களுக்காக மொத்தம் ரூபா 39,976 மில்லியன் முன்பணமாக செலுத்தப்பட்டதுடன், அது தொடர்பான 03 திட்டங்களின் பணிகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டன. அதன்படி, பணியை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா 45,812 மில்லியன் முற்பணத்தை தீர்ப்பனவு செய்ய முடியாதிருந்தது.

### வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் துறைக் கம்பனிகள்

- வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் துணைக் கம்பனியொன்றான வ.்.ப அதிவேக வீதிப் போக்குவரத்து (தனியார்) கம்பனி, 2015 ஆம் ஆண்டு கணக்கீட்டு ஆண்டிற்குப் பிறகு இதுவரை கணக்காய்வுக்காக அதன் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கவில்லை.

- வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்வகிக்கப்படும் வ.்.ப மகநெகும இமல்ஷன் (தனியார் ) கம்பனியின் 99 சதவீத பங்கு உரிமைகள், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தாக உள்ளதாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மற்றும் மற்றுமொரு தனியார்

தரப்பினருக்கு 50 சதவீதம் படியாக கம்பனியின் பங்குகளின் உரித்து காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 133 இன் படி, ஒவ்வொரு வருடமும் ஒரு நிறுவனம் பங்குதாரர்களின் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்றாலும், அதிகாரசபைக்கு உரிய 04 துணைக் கம்பனிகள் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.
- 2023 மார்ச் 20 ஆந் திகதிய CP/23/0394/608/033 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், அதிகாரசபைக்கு சொந்தமான 04 துணைக் கம்பனிகளை கலைக்க முடிவு செய்யப்பட்ட காரணத்தால், அந்தந்த நிறுவனங்களின் தொடர்ச்சியான நிலவுகை நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது.

# நிர்மாணம் மற்றும் பொறியியற் துறை

## கணக்காய்வு அவதானிப்புகள

- இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்
    - சட்டரீதியான கொடுப்பனவுகள் மற்றும் கடன்கள் மற்றும் வட்டிக் கொடுப்பனவு தவிர்க்கப்பட்டமை
- நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை
    - பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் எண்ணிக்கையில் குறைவு.
    - கட்டுமான உபகரணப் பயிற்சி நிலையம் அமைந்துள்ள காணி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்டாமை .
    - விளைவற்ற பண மீதியொன்று நடைமுறைக் கணக்கில் பராமரிக்கப்படுதல்
    - அதிகமாக செலுத்தப்பட்டிருந்த எரிபொருள் கொடுப்பனவு அறவிடப்படாமை
    - அங்கீகாரமின்றி மற்றும் கட்டணம் அறவிடப்படாமல் விடுதியொன்று பயன்படுத்தப்பட்டமை
- கட்டிடங்கள் திணைக்களம்
    - செயற்திட்டங்கள் முடிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தமை
    - செயற்திட்டங்களுக்கான செலவுகள் செயயப்பட்ட பின்னர் முடிக்கப்படாமல் இடையில் நிறுத்தப்பட்டமை
- அரச தொழிற்சாலைகள் திணைக்களம்
    - செயற்திட்டப்பணிகள் இடையில் நிறுத்தப்பட்டமை
- வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்
    - தவறான விலைப்பட்டியல்களை வழங்குவதன் மூலம் விற்பனை பெறுமதி அதிகரிக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தமை
    - கூட்டு கம்பனியிடமிருந்து பணம் அறவிடப்படாமை
- இலங்கை நிர்மாண கைத்தொழில் சபை
    - ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட ஒரு பணியாளர் மூலம் நிறுவனத்தின் பணிகள் நடாத்திச்செல்லப்படல்

- மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம்
  - வரி கொடுப்பனவு தவிர்க்கப்பட்டிருந்தமை
  - உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதி உத்தியோகத்தர் அல்லாத வெளித் தரப்பினரால் பயன்படுத்தப்பட்டமை
- மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) நிறுவனம்.
  - முழுமையாக பணிகள் முடிக்கப்பட்ட நிர்மாண செயற்திட்டங்களில் ஏற்படும் செயற்பாட்டு நட்டங்கள்
  - செயற்திட்ட தாமதத்தால் தாமத இழப்பீடு செலுத்தவதற்கு நேரிட்டமை
- அரச அபிவிருத்தி மற்றும் வடிவமைப்பு கூட்டுத்தாபனம்
  - ஒப்பந்த வருமானத்தில் குறைவு.
  - செலுத்த வேண்டியவை செலுத்தப்படாமை
- நிர்மாண உத்தரவாத நிதியம்
  - பாதுகாப்பொன்று வைக்கப்படாது தொழில் தருநர்களுக்கு வழங்கப்பட்ட உத்தரவாதங்களுக்காக நிதியத்தினால் செலுத்தப்பட்ட பணம் மீள அறவிடப்படாதிருந்தமை
  - ஒப்பந்ததாரர்களுக்கு விடுவிக்கப்படாது பணம் போக்குவரத்திலுள்ள காசுக்கணக்கில் வைத்திருக்கப்பட்டமை
  - முகாமைத்துவ தகவல் அமைப்பொன்று நிறுவப்படாமை

# நிர்மாணம் மற்றும் பொறியியற் துறை

2022 இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்படி, நிர்மாணத்துறையின் சேர்க்கப்பட்ட பெறுமதி 2021 ஆம் ஆண்டில் 4.4 சதவீதமாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அது 20.9 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. எரிபொருள் மற்றும் மூலப்பொருட்கள் கிடைக்காமை, கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு, வழங்குநர்கள் பொருட்களை கடன் அடிப்படையில் வழங்குவது மட்டுப்படுத்தப்பட்டமை போன்ற காரணங்கள் மற்றும் பொதுத்துறையில் செயற்திட்டங்களுக்கான கொடுப்பனவு தாமதமாகியிருந்தமை முக்கியமாக இதற்கு தாக்கமளித்திருந்தது.

நிர்மாணம் மற்றும் பொறியியல் துறையைச் சேர்ந்த இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனம், நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை, கட்டிடங்கள் திணைக்களம், அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம், வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை கைத்தொழில் சபை போன்ற 06 நிறுவனங்கள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழும், மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் மற்றும் மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) கம்பனி நீர்ப்பாசன அமைச்சின் கீழும் அரச நிர்மாணம் மற்றும் வடிவமைப்பு சட்டப்பூர்வ நிறுவனம் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சின் கீழும் நிர்மாண பாதுகாப்பு நிதியம் திறைசேரி பிரதி செயலாளரின் கீழும் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களாகும்.

### இந்த நிறுவனங்களின் அடிப்படை நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள்

- இலங்கையில் நிர்மாணக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கான ஏற்பாடுகளைச் செய்தல், நிர்மாணக் கைத்தொழிலின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல், பதிவு செய்தல், முறைப்படுத்துதல் மற்றும் தரப்படுத்துதல் என்பவற்றுக்காகவும் , நிர்மாணத்துறை தொடர்பான தேசிய ஆலோசனைக் குழுவை நிறுவுதல் தொடர்பான ஏற்பாடுகளைச் செய்தல், நிர்மாணம் தொடர்பான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துதல் மற்றும் நிர்மாண ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் மற்றும் தரப்படுத்துதல்.

- கட்டிட உதிரிப்பாகங்கள் உற்பத்தி, இயந்திர மற்றும் மின்சாரப் பணிகள் , பொறியியல் பணிகள் மற்றும் ஆலோசனை பணிகள்

- அரச திணைக்களம் மற்றும் அரச நிறுவனங்களின் செலவுத் தலைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளின் படி. கட்டிடம் திட்டமிடல், மதிப்பீடு செய்தல், நிர்மாணம் மற்றும் தொடர்புடைய வசதிகளை வழங்குதல், கட்டிடங்களுக்கான ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல், அரச கட்டிடங்களின் பராமரிப்பு, புதிய சேர்த்தல்கள் மற்றும் மேம்படுத்துதல்

- உற்பத்தி, நிர்மாணம் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு மற்றும் இயந்திர பொறியியல் ஆலோசனை சேவைகளை வழங்குதல்

- நியமங்களுக்கு இணங்க உயர்தர கட்டிட பொருட்கள் மற்றும் உபகரணங்களை போட்டி விலையில் நாடளாவிய ரீதியில் வழங்குவதில் முன்னணியில் இருத்தல்.

- நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் நலன்களை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் மற்றும் தேசிய நிர்மாணக் கைத்தொழிலின் அபிவிருத்தியை ஊக்குவித்தல்.

- நீர் வள அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு பல்வேறு ஆலோசனை சேவைகளை வழங்குதல் மற்றும் நிர்மாணம், ஆலோசனை சேவைகள் மற்றும் பொறியியல் சேவைகளை வழங்குதல்

- பாலங்கள், நெடுஞ்சாலைகள், நீர்த்தேக்கங்கள், நீர்ப்பாசன அமைப்புகள், நீர்மின் நிலையங்கள், சுரங்கங்கள் மற்றும் கால்வாய்கள், நீர் வழங்கல் செயற்திட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் போன்ற பொறியியல் செயற்திட்டங்களை நிறைவேற்றுதல்.

**இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்**

**சட்டரீதியான கொடுப்பனவுகள் மற்றும் கடன்கள் மற்றும் வட்டிக் கொடுப்பனவு தவிர்க்கப்பட்டமை**

2022 திசெம்பர் 31 இல் அத்திகதி வரையில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புகள் மற்றும் அதற்கான மிகைக்கட்டணம் ரூபா 877 மில்லியனும் பெறுமதி சேர் வரி ரூபா 1,296 மில்லியன் மற்றும் அதற்கு விதிக்கப்பட்ட மிகைக்கட்டணம் ரூபா 803 மில்லியனும் ஆன சட்டப்பூர்வ கொடுப்பனவுகள் கூட்டுத்தாபனத்தினால் 2023 ஆகஸ்ட் 18 வரையில் செலுத்தப்படவில்லை. மேலும், கூட்டுத்தாபனத்தின் சொத்து மற்றும் திறைசேரி பிணைகளின் மீது அரச வங்கிகளில் பெறப்பட்டிருந்த கடன் தொகை ரூபா 2,737 மில்லியன் மற்றும் அது தொடர்பாக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 1,136 மில்லியன் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரை செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை**

**பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் எண்ணிக்கையில் குறைவு.**

2022 ஆம் ஆண்டிற்கான நிர்மாண ஒப்பந்ததாரர்களின் பதிவு செய்தல் இலக்கு 1090 ஆக இருந்தபோதிலும், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் எண்ணிக்கை 1,618 ஆகும். இதில் புதிதாக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் எண்ணிக்கை 445 ஆகும். அதன் பிரகாரம் கடந்த

ஆண்டுடன் ஒப்பிடும்போது பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் எண்ணிக்கை 945 ஆல் குறைவடைந்துள்ளது.

**கட்டுமான உபகரணப் பயிற்சி நிலையம் அமைந்துள்ள காணி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்படாமை .**

அதிகார சபையால் ரூபா 306 மில்லியன் ரூபா செலவில், பத்தரமுல்ல பெலவத்தையில் நிர்மாணிக்கப்பட்ட உபகரண பயிற்சி நிலையம் கட்டப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணி அதிகாரசபைக்கு கையளிக்கப்படுவதற்கான நடவடிக்கை 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை பூர்த்தி செய்யப்படவில்லை.

**விளைவற்ற பண மீதியொன்று நடைமுறைக் கணக்கில் பராமரிக்கப்படுதல்**

அதிகார சபையின் தலைமை அலுவலகத்தினால் நடைமுறைக் கணக்கொன்றில் ரூபா 307 மில்லியன் ஆன சராசரி பண மீதியொன்று விளைவற்றதாக கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக, சராசரி வட்டி விகிதத்தைக் கணக்கிடும் போது, அதிகார சபைக்கு அண்ணளவாக ரூபா 149 மில்லியன் வட்டி வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**அதிகமாக செலுத்தப்பட்டிருந்த எரிபொருள் கொடுப்பனவு அறவிடப்படாமை**

2015 மே 25 ஆம் திகதிய பொத முயற்சிகள் சுற் றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக 06 அதிகாரிகளினால் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் வரம்பை மீறி 2019 ஆம் ஆண்டு முதல் மற்றும் 2021 ஆம் ஆண்டு வரை 12,789 லிட்டர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, அதிகமாக செலவு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1.6 மில்லியன் ஆன தொகையொன்று இதுவரை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**அங்கீகாரமின்றி மற்றும் கட்டணம் அறவிடப்படாமல் விடுதியொன்று பயன்படுத்தப்பட்டமை**

பத்தரமுல்லையில் அமைந்துள்ள அதிகாரசபைக்கு சொந்தமான வீடு வடிவமைப்பு மற்றும் கட்டிட நிலையத்தில் பயிற்சி பெறும் மாணவர்களின் வதிவிட வசதிகளுக்காக 08 அறைகள் கொண்ட விடுதியின் 05 அறைகள் அதிகாரசபையின் ஊழியர்களுக்கும் வரிசை அமைச்சின் ஊழியர்களுக்கும் முறையான அங்கீகாரமின்றி மற்றும் கட்டணம் அறவிடப்படாமல் தங்குவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளன.

**கட்டிடங்கள் திணைக்களம்**

**செயற்திட்டங்கள் முடிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தமை**

அரச மற்றும் அரை அரச நிறுவனங்களால் 2022 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த வெளிநாட்டு

வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் அமைச்சினை தொழிலாளர் அமைச்சக கட்டிடத்திற்கு எடுத்துச் செல்லும் செயற்திட்டம், களுத்துறை கைத்தொழில் பேட்டை நிர்மாணம், கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை நிர்மாணம், மஹாஓயா வைத்திய அதிகாரி அலுவலக கட்டிட நிர்மாணம் போன்ற ரூபா 244.23 மில்லியன் பெறுமதியான 09 செயற்திட்டங்கள் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு நீண்ட காலத்தின் பின்னர் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட காரணமாக ஒப்பந்தத் தொகையை விட மதிப்பீடு மிகைத்தமை மற்றும் மூலப்பொருட்கள் மற்றும் எரிபொருள் போன்றவற்றின் பற்றாக்குறை. போன்ற காரணங்களினால் முடிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

**செயற்திட்டங்களுக்கான செலவுகள் செயயப்பட்ட பின்னர் முடிக்கப்படாமல் இடையில் நிறுத்தப்பட்டமை**

கட்டிட திணைக்களத்திற்கு கடந்த 5 வருடங்களில் வழங்கப்பட்ட 23 நிர்மாண ஒப்பந்தங்கள், ரூபா 659 மில்லியன் செலவிடப்பட்ட பின்னர் முடிக்கப்படாமல் இடையில் நிறுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 20 செயற்திட்டங்கள் தேசிய இயந்திரவியல் நிறுவனத்திற்கு அமைச்சரவையால் நேரடியாக வழங்கப்பட்டிருந்த செயற்திட்டங்களாகும். ஒரு செயற்திட்டம் அரச அபிவிருத்தி மற்றும் வடிவமைப்பு கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டமும் கைவிடப்பட்டிருந்ததடன் மற்றும் இந்த செயற்திட்டத்திற்காக திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முற்பணமான ரூபா 1.37 மில்லியன் தொகையும் மற்றொரு செயற்திட்டத்திறகாக ஈடுசெய்யப்பட்டிருந்தது.

**அரச தொழிற்சாலைகள் திணைக்களம்**

**செயற்திட்டப்பணிகள் இடையில் நிறுத்தப்பட்டமை**

2022 ஆம் ஆண்டு அரச மற்றும் அரை அரச நிறுவனங்களிடமிருந்து திணைக்களத்திற்கு பெறப்பட்ட மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 245 மில்லியன் ஆன மத்திய கலாசார நிதியத்தின் 191 மின் விளக்குக் கம்பங்கள் , நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பத்தேகம நீர் விநியோக முறைமைக்கான தயாரிப்பு , கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் 20 கட்டில்களை திருத்தியமைத்தல் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் லுனுகம்வெஹர தேசிய பூங்காவில் 04 இரும்பு பாலங்கள் திருத்துதல் போன்ற 04 செயற்திட்டங்களுக்கான முற்பணத்தை செலுத்தாமை, புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு அங்கீகாரம் வழங்கப்படாமை போன்ற காரணங்களால் இடையில் நிறுத்தப்படடிருந்தன.

**வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்**

**தவறான விலைப்பட்டியல்களை வழங்குவதன் மூலம் விற்பனை பெறுமதி அதிகரிக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தமை**

பிரதம மந்திரி மற்றும் ஐந்தாம் நிறைவேற்று சனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்தின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக கம்பனியால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கணனி

விற்பனை அறிக்கையின்படி 2021 மார்ச் 26 முதல் 2023 ஜுன் 07 வரை ரூபா 780 மில்லியன் விற்பனைக்காக 2,197 விலைப்பட்டியல்கள் வழங்கப்பட்டிருந்தன. இருந்தபோதிலும், 2023 ஒக்டோபர் 06 அன்று கம்பனியின் உதவி சந்தைப்படுத்தல் முகாமையாளரினால் வழங்கப்பட்ட அட்டவணையின்படி, இதற்காக வழங்கப்பட்ட விலைப்பட்டியல்களின் எண்ணிக்கை 575 ஆக இருந்ததுடன் பெறுமதி ரூபா 1,158 மில்லியன் மட்டுமே ஆகும்.. இதில் ரூபா 559 மில்லியனுக்கான 98 விற்பனை விலைப்பட்டியல்கள் பொய்யாக வழங்கப்படடு விற்பனை பெறுமதியை அதிகரித்து காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பின்னர் அவை இரத்து செய்யப்பட வேண்டுமென இனங்காணப்பட்டிருந்தது.

### கூட்டு கம்பனியிடமிருந்து பணம் அறவிடப்படாமை

நாட்டின் அந்நியச் செலாவணி நெருக்கடியால் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் சந்தையில் டைல்ஸ் தட்டுப்பாட்டைக் குறைக்கும் நோக்கத்தில் அரச கம்பனியொன்றாக இருந்த கட்டிடப் பொருட்கள் கூட்டத்தாபனத்திற்கு மட்டுமே டைல்ஸ் இறக்குமதி செய்து விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தபோது அதற்காக இணைக்கப்பட்டிருந்த கூட்டுக் கம்பனியால் பணம் வங்கியில் வைப்பிலிடப்பட்ட பின்னர் வழங்குநர்களுக்கு பணம் செலுத்தவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் கம்பனியின் வங்கி கணக்கிலிலுந்து செலவிடப்பட்டிருந்த ரூபா 64 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை நிர்மாண கைத்தொழில் சபை

### ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட ஒரு பணியாளர் மூலம் நிறுவனத்தின் பணிகள் நடாத்திச்செல்லப்படல்

சபையின் சுமூகமான செயற்பாட்டிற்காக திறமையான மற்றும் நிரந்தர பதவியணியொன்று ஆட்சேர்ப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்று அல்லது ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இல்லாததால், ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படடிருந்ததுடன் அவர்களில் 16 அதிகாரிகள் 2022 திசெம்பர் 31 இல் 01 முதல் 17 ஆண்டுகள் வரை ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு பணியமர்த்தப்படடிருந்தனர்.

## மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம்

### வரி கொடுப்பனவு தவிர்க்கப்பட்டிருந்தமை

2010 இன் 16 ஆம் இலக்க குற்றமற்ற வரிகள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 (2) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தினால் 1996 முதல் 2007 வரையிலான காலகட்டங்களில் செலுத்தப்படாத வருமான வரி, வட் மற்றும் உழைக்கும்போது செலுத்தும் வரி உட்பட ஏனைய வரிகள் மற்றும் தொடர்புடைய அபராதங்கள் மொத்தம் ரூபா 82 மில்லியன, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுததுவதற்கு தவற விடப்பட்டிருந்தது.

**உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதி உத்தியோகத்தர் அல்லாத வெளித் தரப்பினரால் பயன்படுத்தப்பட்டமை**

பணியகத்திற்கு சொந்தமான கொழும்பு 07, சரண வீதியில் அமைந்துள்ள 15 வீட்டு அலகுகளைக் கொண்ட உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதி அமைந்துள்ள காணியின் 2022 திசெம்பர் 31 இல் பெறுமதி ரூபா 960 மில்லியனும் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 6.68 மில்லியனும் ஆகும். இந்த 15 உத்தியோகபூர்வ வீடுகளில் 05 வீடுகள் பணியகத்தின் அதிகாரிகள் அல்லாத வெளி தரப்பினரால் பயன்படுத்தப்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

## மத்திய பொறியியல் சேவைகள் (தனியார்) நிறுவனம்.

**முழுமையாக பணிகள் முடிக்கப்பட்ட நிர்மாண செயற்திட்டங்களில் ஏற்படும் செயற்பாட்டு நட்டங்கள்**

மத்திய பொறியியல் சேவைகள் தனியார் கம்பனியின் பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாணத் செயற்திட்டங்களில் இருந்து, 2022, 2021 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 667 மில்லியன், ரூபா 888 மில்லியன் மற்றும் ரூபா 973 மில்லியன் செயற்பாட்டு நட்டங்கள் ஏற்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் நடைபெற்று வரும் 47 நிர்மாண செயற்திட்டங்களில் மூலம் ரூபா 434 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**செயற்திட்ட தாமதத்தால் தாமத இழப்பீடு செலுத்தவதற்கு நேரிட்டமை**

59 செயற்திட்டங்களுக்கு ரூபா 69 மில்லியன் தாமத இழப்பீடாக சேவை தருனரால் பட்டியல்களிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டங்களில் உள்ள 47 2023 ஜூன் 30 வரை கோரப்பட்ட காலத்தை நீட்டிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்படாததுடன் 07 செயற்திட்டங்களுக்கு குறைக்கப்பட்ட தாமத இழப்பீட்டுத் தொகையான ரூபா 2.1 மில்லியன் மீண்டும் அறவிடப்படவதற்கு மடியாத நிலையில் காணப்பட்டது.

## அரச அபிவிருத்தி மற்றும் வடிவமைப்பு கூட்டுத்தாபனம்

**ஒப்பந்த வருமானத்தில் குறைவு.**

மீளாய்வாண்டில் ஒப்பந்த வருமானம் ரூபா 2,060 மில்லியனாக இருந்ததுடன் முந்தைய ஆண்டில் ரூபா 3,371 மில்லியனாக இருந்தமையால் முன்னைய வருடத்தடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டில் ஒப்பந்த வருமானம் ரூபா 1,311 மில்லியன் அதாவது 39 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

**செலுத்த வேண்டிய செலுத்தப்படாமை**

கூட்டுத்தாபனத்தினால் கூட்டுத்தாபனத்தின் சொத்து மற்றும் திறைசேரி பிணைகளின் அடிப்படையில் வங்கிகளில் இருந்து பெறப்பட்ட ரூபா 1,848 மில்லியன் கடன் தொகையொன்றும், கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 1,474 மில்லியன் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாததன் அடிப்படையில் விதிக்கப்பட்ட மிகைக்கட்டணம் ரூபா 928 மில்லியனும் மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்தப்படாமல் இருந்தது.

**நிர்மாண உத்தரவாத நிதியம்**

**பாதுகாப்பொன்று வைக்கப்படாது தொழில் தருநர்களுக்கு வழங்கப்பட்ட உத்தரவாதங்களுக்காக நிதியத்தினால் செலுத்தப்பட்ட பணம் மீள அறவிடப்படாதிருந்தமை**

நிதியத்தால் எந்தவித பாதுகாப்பும் வைக்கப்படாது பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு உத்தரவாதம் அளிககப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரர்களின் செயல்திறன் குறைவடைந்த சந்தர்ப்பங்களில் தொழில் தருநர் உத்தரவாதப் பணத்தை நிதியத்திலிருந்து கோரி இருந்ததுடன் தொழில் தருநருக்கு நிதியத்தினால் செலுத்தப்பட்ட தொகை மொத்தம் 113 மில்லியன் 2022 திசெம்பர் 31 வரை மீண்டும் நிதியத்திற்கு அறவிட வேண்டியிருந்தது.

**ஒப்பந்ததாரர்களுக்கு விடுவிக்கப்படாது பணம் போக்குவரத்திலுள்ள காசுக்கணக்கில் வைத்திருக்கப்பட்டமை**

100,000 கிலோமீற்றர் கிராமப்புற வீதிச் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணத் தொழிலை மேற்கொள்ளும் 290 ஒப்பந்ததாரர்களின் சான்றளிக்கப்பட்ட பட்டியல்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் 2022 ஆம் ஆண்டு நிதியத்திற்கு ரூபா 31 பில்லியன் வழஙகப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 30 பில்லியன் ஒப்பந்தங்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்தது. இந்த எஞ்சிய தொகையும் சேர்த்து, வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிலிருந்து ஒப்பந்தக்காரர்களுக்கு விடுவிக்கப்படுவதற்கு பெறப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்ததாரர்களுக்கு விடுவிக்கப்படாமல், ரூபா 279 மில்லியன் தொகையொன்று 2022 திசெம்பர் 31 இல் நிதியத்தினால் போக்குவரத்திலுள்ள காசுக்கணக்கில் சேமிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூபா 127 மில்லியன் 01 வருட காலப்பகுதியிலும், ரூபா 147 மில்லியன் 1 மற்றும் 2 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியிலும், ரூபா 6 மில்லியன் 02 வருடங்களுக்கும் மேலான காலப்பகுதியிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. மேலும், சிக்கலான மற்றும் அபாயகரமானதாக அடையாளம் காணப்பட்ட மேற்படி வீதி அபிவிருத்தித் செயற்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுடன் நிதியம் முறையான ஒப்பந்தமொன்று செய்து கொள்ளவில்லை.

**முகாமைத்துவ தகவல் அமைப்பொன்று நிறுவப்படாமை**

நிதியத்திற்கான முகாமைத்துவ தகவல் அமைப்பொன்றை உருவாக்குவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் நிதியத்தால் 2015 ஆம் ஆண்டில் இலங்கை டெலிகொம் நிறுவனத்துடன ரூபா 2.98 மில்லியன் பெறுமதியான் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஒப்பந்தத்தின்படி, முதல் தவணை மற்றும் அபிவிருத்திக்கு பிறகு செலுத்த வேண்டிய இரண்டாவது தவணையுமாக மொத்தம் ரூபா 2.08 மில்லியன் அதாவது ஒப்பந்த பெறுமதியில் 70 சதவீதம் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்டது. பணம் செலுத்தப்பட்டு சுமார் 07 வருடங்கள் கடந்துள்ள போதிலும், 2023 மார்ச் 31 வரை இந்த முகாமைத்துவ தகவல் அமைப்பின் தயாரிப்பு நிறைவு பெறவில்லை.

# விமான சேவைத் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- சிவில் விமானப் போக்குவரத்து ஆணைக்குழு
    - அரச வருமானம் திரண்ட நிதிக்கு வரவு வைக்கப்படாமை
    - அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிராமை
    - கைவிடப்பட்ட திட்டங்கள்
    - குத்தகைப் பணம் வசூலிக்கப்படாது சொத்துக்களின் பயன்பாட்டிற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தமை
    - விமான நிலையங்கள் மற்றும் விமான வசதிகளை அறிவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை
- வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் கம்பனி மற்றும் அதன் நிர்வாகிப்பில் உள்ள கம்பனிகள்
    - கம்பனியின் தொடர்ச்சியான இயக்கம்
    - தற்போதைய விமான அணி
    - கடன் திருப்பிச் செலுத்தப்படாமை
    - அறவிடப்பட வேண்டிய தொகை
- விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி
    - தேறிய சொத்து மதிப்பிற்காக இலங்கை அரசாங்கத்திற்கு பங்குகளை வழங்கியிராமை
    - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்திச் செயற்திட்டம் - கட்டம் II – படிநிலை II செயற்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமை

# விமான சேவைத் துறை

அரசாங்கத்தில் நிலவும் கொள்கைகளுக்கேற்ற வகையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கப்படும் வழிகாட்டல்களின் படியும் துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய நியதிச்சட்ட நிறுவனங்களுக்கு உரித்தான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை வகுத்தல், செயற்படுத்தல், பின்பற்றுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் அமைச்சின் முக்கிய பணிகளாகும். விமானப் போக்குவரத்துத் துறையுடன் தொடர்பான சிவில் விமான சேவைகள் அதிகாரசபை, வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி மற்றும் வரையறுக்கப் பட்ட ஸ்ரீ லங்கன் எயர்லைன் மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள கம்பனிகளுக்கு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கேதுவாக தேவையான வழிகாட்டல்கள் அமைச்சால் மேற்கொள்ளப்படுகின்றன.

## சிவில் விமானப் போக்குவரத்து ஆணைக்குழு

“சகலருக்கும் பாதுகாப்பான வானத்தை உறுதிசெய்யும் வகையில் திறமையான மற்றும் நம்பகமான விமான சேவைப் பாதுகாப்புக் கட்டுப்பாட்டாளராக இருத்தல். எனும் நோக்குடன்

அமைச்சின் கீழ் சிவில் விமானப் போக்குவரத்துத் சேவைகள் அதிகாரசபை செயற்படுகின்றது. இலங்கையின் சர்வதேச மற்றும் உள்நாட்டு விமான நிலையங்களிற்கு உரித்தான ஒழுங்கு முறை நடவடிக்கைகள் அதிகாரசபையால் மேற்கொள்ளப்படுவதுடன் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் சர்வதேச மரபுகளை நாட்டில் நடைமுறைப்படுத்தல் அதிகாரசபையின் முக்கிய செயற்பணியாகும்.

அதிகாரசபையால் மேற்கூறிய பணிகள் மற்றும் செயற்பணிகளை செயற்படுத்தல் மற்றும் நிதி விவகாரங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட ஆக்கபூர்வமானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அறிக்கைகள் தொகுத்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

### அரச வருமானம் திரண்ட நிதிக்கு வரவு வைக்கப்படாமை

2008 மே 22 ஆம் திகதியிடப்பட்ட 1550/7 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விசேட வர்த்தமானியின் 07 ஆம் 08 ஆம் ஒழுங்கு முறை விதிப்படி, இலங்கையில் இருந்து ஆரம்பிக்கும் விமானப் போக்குவரத்திற்காக இலங்கைக்கு வெளியே வழங்கப்படும் அல்லது விற்கப்படும் ஒவ்வொரு பயணி அனுமதிப்பத்திரத்திற்காகவும் 60 அமெரிக்க டொலர் மேலதிகக் கட்டணம் அல்லது அத் தொகைக்குச் சமமான தொகை அறவிடப்பட வேண்டியதுடன் அவ்வாறு அறவிடப்படும் மேலதிகக் கட்டணம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும்,

2008 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது சேகரிக்கப்பட்ட 16,982 மில்லியன் தொகையான மேலதிகக் கட்டணம் அதிகாரசபையால் திரண்ட நிதியிற்குச் செலவு வைக்கப்படாது அதிகாரசபை வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. மேலும், அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் 2002 முதல் 2007 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சேகரிக்கப் பட்ட மேலதிகக் கட்டணங்கள் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டுள்ளதா என்பதை அறிவதற்கான தகவல்கள் கணக்காய்விற் கான சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

**அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிராமை**

2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 7 (இ) பிரிவின் படி, இலங்கைக்கான விமான சேவைகள் அபிவிருத்தித் திட்டம் ஒன்று அதிகாரசபையால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2023 யூன் 23 ஆம் திகதி வரையிலும் இது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**கைவிடப்பட்ட திட்டங்கள்**

2016 ஆம் ஆண்டு தேசிய வரவு செலவுத் திட்டத்தின் மூலம் உள்நாட்டு விமானப் போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில் பீபீபீ ஏற்பாட்டினூடாக திகன, பதுளை மற்றும் புத்தளம் போன்ற இடங்களில் புதிய மூன்று உள்ளக விமான நிலையங்களை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதன்படி, பதுளை விமான நிலையத்திற்கான ஆய்வறிக்கைத் திட்டமும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடும் தயாரிக்கப்படுவதற்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையால் ரூபா 2 மில்லியன் செலுத்தப்பட்டதுடன் இது வரையில் இம் மூன்று விமான நிலையங்களின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

**குத்தகைப் பணம் வசூலிக்கப்படாது சொத்துக்களின் பயன்பாட்டிற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தமை**

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் மூன்றாம் துணை அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள விமான வசதிகளும் காணிகளும், குத்தகை உடன்படிக்கை ஒன்று இல்லாதும் வாடகை அறவிடப்படாதும் விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (தனியார்) கம்பனியின் பயன்பாட்டிற்காக அனுமதி வழங்கப் பட்டிருந்தது.

**விமான நிலையங்கள் மற்றும் விமான வசதிகளை அறிவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை**

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபைச் சட்டத்தின் இரண்டாவது உப அட்டவணையில் குறிப்பிப்பட்டுள்ள 14 விமான நிலையங்கள் மற்றும் மூன்றாம் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள 08 விமான வசதிகள் மற்றும் அவற்றிற்கு உரித்தான காணிகளைக் கையேற்கும் உத்தரவு 2016 ஆம் ஆண்டு வரை வர்த்தமானி ஒன்றின் மூலம் வெளியிடப்படுவதற்கு அதிகாரசபையால். நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டின் போது 02 விமான நிலையங்கள் 07 விமான வசதிகள்

மற்றும் கட்டுநாயக்க மற்றும் இரத்மலானை விமான நிலையங்களிற்கு உரித்தான காணிகள் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. மேலும், பலாலி விமான நிலையம் மற்றும் மட்டக்களப்பு விமான நிலையம் தொடர்பான வர்த்தமானி முறையே 2019 ஆம் 2022 ஆம் ஆண்டுகளின் போது வெளியிடப்பட்டிருந்தன. 2023 மே 15 இல் உள்ளவாறு 21 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள மீதமுள்ள விமான நிலையங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் கம்பனி மற்றும் அதன் நிர்வாகிப்பில் உள்ள கம்பனிகள்

### கம்பனியின் தொடர்ச்சியான இயக்கம்

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டமைப்பின் நட்டம் (வரிக்குப் பின்) ரூபா 163,583 மில்லியனானதுடன் அன்றைய தினத்தில் உள்ளவாறான திரண்ட நட்டம் ரூபா 529,213 மில்லியன் ஆகவும் அன்றைய தினத்தில் உள்ளவாறான கூட்டமைப்பின் நடைமுறைச் சொத்துக்களிற்கு மேலான நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 292,420 மில்லியனாகவும் மொத்தச் சொத்துக்களிற்கு மேலான மொத்தப் பொறுப்புகள் ரூபா 426,424 மில்லியனாகவும் காணப்பட்டது. மேலும், 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கம்பனி ரூபா 166,370 மில்லியன் தேறிய நட்டத்தையும் அன்றைய தினத்தில் ரூபா 537,505 மில்லியன் திரண்ட நட்டத்தையும் கொண்டிருந்தது. மேலும், அத் திகதியில் கம்பனியின் நடைமுறைச் சொத்துக்களிற்கு மேலான நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 302,703 மில்லியனாகவும் மொத்தச் சொத்துக்களிற்கு மேலான மொத்தப் பொறுப்புகள் ரூபா 437,037 மில்லியனாகவும் காணப்பட்டது. 2022 நவம்பர் 08 ஆம் திகதி திறைசேரிச் செயலாளரால் இலங்கை அரசாங்கம் கம்பனிக்கு தனது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் செலுத்தும் ஆதரவை உறுதிப்படுத்தும் வகையில் விநியோகிக்கப்பட்ட கடிதத்தையும் கருத்திற்கொண்டு நிதிக்கூற்றுக்கள் நீண்டகால நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்னும் அனுமானத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. 2022/2023 ஆம் ஆண்டுடள் தொடர்பான நிதிக்கூற்றுக்கள் இது வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### தற்போதைய விமான அணி

ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் கம்பனி தேவைப்பாட்டு மதிப்பீட்டின் படி, 27 விமானங்களிற்கான தேவைப்பாடு உள்ளது. தற்போது 24 விமானங்கள் இயங்குகின்றன. இவற்றில் 2023 ஏப்ரல் 20 இல் உள்ளவாறு 08 விமானங்களும், 2021 யூலை முதல் 2023 ஏப்ரல் 20 வரையான காலப்பகுதியின் போது குத்தகை அடிப்படையில் ரூபா 4,956 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. அதில் ஒரு விமானம் 2021 யூலை முதல் தொடர்ந்து சேவையில் இருந்து நீக்கப்பட்டிருந்தது.

### கடன் திருப்பிச் செலுத்தப்படாமை

கம்பனி அதன் கடன்பேற்றை அதிகரித்து அரசாங்க வங்கிகளில் இருந்து ரூபா 37,960 இற்குச் சமமான 200 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் ரூபா 26,250 மில்லியனான ரூபாக் கடனையும் 2017/18 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெற்றிருந்தது. மீளாய்வாண்டின் போது இவ் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களிற்கான வட்டியாக ரூபா 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (ஏறத்தாழ ரூபா 2,777 மில்லியன்) செலுத்தப்பட்டிருந்தது. 2023 ஏப்ரல் 27 ஆம் திகதி வரை இக் கடன் தொகையில் மூலக் கடன் தொகை எதுவும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### அறவிடப்பட வேண்டிய தொகை

கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையில் செலுத்தப்பட்டிராத வியாபாரக் கடன்பட்டோர் ரூபா 24,050 மில்லியனாகும். இதில் ரூபா 2,321 மில்லியன் 5 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

### விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி தேறிய சொத்து மதிப்பிற்காக இலங்கை அரசாங்கத்திற்கு பங்குகளை வழங்கியிராமை

2005 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை அடிப்படை யாகக் கொண்டு திறைசேரிச் செயலாளரால் தற்போது அரசாங்கத்திற்குச் சொந்தமான விமான நிலையக் காணியையும் கட்டிடங்களையும் கம்பனிக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களையும் மதிப்பிடும் படியும் அந் நேரத்தில் இலங்கை அரசாங்கத்தால் சேவை செய்யப்பட்ட விமான நிலைய அபிவிருத்திக்குரிய பொறுப்பை ஏற்று தேறிய சொத்துப் பெறுமதிக்காக இலங்கை அரசாங்கத்திற்கு பங்குகளை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கும் படி உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கம்பனியின் கோரிக்கையின் பேரில் சட்ட மா அதிபதியால் 2010 பெப்ரவரி 08 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் விமான நிலையக் காணி, கட்டிடங்களும் தற்போது சிவில் விமான சேவைகள் அதிகாரசபை மற்றும் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான ஏனைய சகல அசையும் அசையாச் சொத்துக்களும் பரஸ்பரப் பரிமாற்றத்தைக் கொண்டுள்ளமையால் புதிய அமைச்சரவைத் தீர்மானத்தைப் பெற்றுக்கொள்ளும் படியும் அறிவுறுத்தப் பட்டிருந்தது. எவ்வாறெனினும், இது வரையிலும் புதிய அமைச்சரவைத் தீர்மானத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனி எவ்வித நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

அவ்வாறே, 2002 இன் 34 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் கீழ், போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரின் 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அமைச்சரால் கட்டுநாயக்கா விமான நிலையம், இரத்மலானை விமான நிலையம் மற்றும் இரத்மலானை சிவில்

விமான சேவைப் பயிற்சி நிலையத்திற்கு உரித்தான காணி, கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள், அத்திடிய வான் தொடர்பாடல் ஒலிபரப்பு நிலையம், கம்பஹா மற்றும் பமுனுகம வானொலி கப்பற்துறை உதவுகருவி, பிதுருதலாகல ரேடார் நிலையம், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்குச் சொந்தமான நுவரெலியா மற்றும் அநுராதபுரவில் உள்ள 0.125 ஹெக்டேயர் விடுமுறை விடுதிக் காணியை இலங்கை சிவில் விமான சேவை, அதிகாரசபைக்கு கையளித்திருந்தது. ஆகையால், கம்பனியால் பயன்படுத்தப்பட்ட காணிகளினதும் கட்டிடங்களினதும் உரிமை தொடர்பான கணக்காய்வின் போது சந்தேகம் ஏற்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் போது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையக் கட்டிடங்கள் மாத்திரமே மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மொத்த மதிப்பீட்டையும் பூர்த்திசெய்து இலங்கை அரசாங்கத்திற்கு பங்குகளை வழங்கு வதற்காக இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்திச் செயற்திட்டம் - கட்டம் II – படிநிலை II செயற்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமை**

2022 ஏப்ரல் 12 ஆம் திகதியிடப்பட்ட “இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மீதான இடைக்காலக் கொள்கையின்” கீழ் திறைசேரியால் வெளியிடப்பட்ட விசேட கடிதத்தின் படி,

நிதி அமைச்சின் கடனை மீளச் செலுத்தும் இயலுமை குறித்த சான்றிதழ் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ஒப்பந்தக்காரரால் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்திச் செயற்திட்டம் - கட்டம் II இன் - II படிநிலைச் செயற்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதன் படி, 2022 திசெம்பர் 09 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் செயற்திட்டம் நிறைவடைவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த மையால் ஒப்பந்தக்கார ரால் செலுத்தப்பட வேண்டிய தாமதக் கட்டணம் உட்பட ஏனைய கட்டணங்களும் இழப்பிற்காகவும் ரூபா 15,730 மில்லியன் உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டியிருந்தது.

# போக்குவரத்துத் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

- இலங்கை புகையிரத சேவைகள் (செயற்திட்டம்)
  - குருநாகல் ஹபரனை புகையிரதம் - செயற்திட்டம்
  - கொழும்பு நகரை அண்மித்த புகையிர செயற்திட்டம்
  - மஹவ – அனுராதபுரம் - ஓமந்தை வரையான புகையிரதப் பாதைச் செயற்திட்டம்
- இலங்கை புகையிரதத் திணைக்களம்
  - நிலுவையாகக் காணப்பட்ட வருமானங்கள் அறவிடப்பட்டிராமை
  - தாமதக் கட்டணம் மற்றும் வட்டி
  - தீர்த்து வைக்கப்படாத நாணய கடிதம்
  - வழங்கப்படாத பொருட்களுக்காக கொடுப்பனவு செய்தல்
  - இலங்கை புகையிரதத்தின் முக்கிய திட்டம்
  - குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்
  - புகையிரப் போக்குவரத்து
  - பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் பாதுகாப்பற்ற 200 மணிகளும் மின்யமைப்புகளும் நிறுவுதல்.
- இலங்கை போக்குவரத்துச் சபை
  - ஒருகொடவத்தை எரிபொருள் நிரப்பு நிலைய நிர்மாணிப்புகள்
  - ஒன்பது வாயு வெளியேற்றல் தகைமை ஆய்வு நிலையங்களின் நிர்மாணிப்பு
  - முன்தயாரிப்பு டயர்களின் உற்பத்தி
  - செயற்பாட்டுத் திட்டம்
  - சேதங்களுக்கான இழப்பீட்டை மீளப் பெற இயலாமை
  - எரிபொருள் பற்றாக்குறை
  - பஹசர பேரூந்து நவீனமயமாக்கல் செயற்திட்டம்

- **தேசிய போக்குரத்து ஆணைக்குழு**
    - **பயணிகள் அனுமதிப்பத்திரம்**
    - **GPS சாதனங்களின் குறைவான பயன்பாடு**
    - **நிசி சரிய செயற்திட்டம**

# போக்குவரத்துத் துறை

போக்குவரத்துத் துறையின் முக்கிய பணியான மக்களின் வாழ்க்கை நிலைமையை உயர்த்துவதனை முன்னிட்டு புதிய தொழில்நுட்ப முறைமைகளைப் பயன்படுத்தி மிகவும் உயர்தரமான போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை அமுல்ப்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் நிலைபேறாகப் பேணுதல் எனும் செயற்பணியை நிறைவேற்றுவதற்காக போக்குவரத்து அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள இராஜாங்க அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களால் பின்வரும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- சுற்றாடலுக்குச் சாதகமான போக்குவரத்து முறைமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளையும் சட்ட விதிகளையும் தயாரித்தல்.
- பொதுப் போக்குவரத்து முறைமை தொடர்பாக மக்கள் நம்பிக்கையையும் வீதி வசதிகளை உருவாக்குவதற்கான உயந்த தரத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.
- வீதி நெரிசல், பயணிகள் நெரிசல் மற்றும் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்காக பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள் மற்றும் சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல்.
- அரசாங்க மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகளையும் புகையிரத சேவைகளையும் பொதுவான நேர அட்டவணைக்கு இணங்க ஒருங்கிணைந்த படிவத்தின் கீழ் அமுற்படுத்துகின்ற போக்குவரத்துச் சேவையாக அமுலாக்குவதற்குத் தேவையான நவீன தொழில்நுட்பமான ஈ- டிக்கட் முறைமையை அறிமுகப்படுத்துதல்.
- புகையிரத மற்றும் பேரூந்து தரிப்பிடங்கள் சார்ந்த பொது வசதிகளையும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- புகையிரத மற்றும் பேரூந்து சேவைகளுக்குத் தேவையான புகையிரத்தினையும் பேரூந்துகளையும் பராமரித்தல்.
- பேரூந்துகள் தயாரிப்பு மற்றும் போக்குவரத்து துறைக்குரிய உள்நாட்டு கைத்தொழில் முறைமையை கட்டியெழுப்புவதற்குத் தேவையான பெறுகை நடைமுறையினை அறிமுகப்படுத்துதல்.
- கொழும்பு ஹம்பாந்தோட்டை, காங்கேசன்துறை, மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கு புகையிரத்தின் மூலம் பொருட்களைக் கொண்டு செல்வதற்குத் தேவையான வசதிகளை ஸ்தாபித்தலும் விரிவுபடுத்தலும்.
- தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்தலை மக்களுக்குச் சாதகமான, வினைத்திறனான, மோசடிகள் அற்ற நடைமுறையாக மாற்றுதல்.


இலங்கை போக்குவரத்துச் சபையை இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனமாக நவீனமயப்படுத்துதலும் பிரதான பேரூந்துத் தரிப்பிடங்களில் பொது வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

தற்போதைய பேரூந்துத் தொகுதியை மீளமைத்து கொழும்பு மற்றும் பிரதான நகர எல்லைக்குள் பயணிப்பதற்காக சுற்றாடலுக்குச் சாதகமான புதிய பேரூந்துகளை அறிமுகப்படுத்தி தனியார் பயணிகள் போக்குவரத்தையும் பசுமையான போக்குவரத்திற்கு இணங்கும் வகையிலான வேலைத்திட்டத்தைத் தயாரித்தலும் அமுறப்படுத்தலும்.

புகையிரதப் பெட்டிகள், பேரூந்துகள் மோட்டார் வாகனங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்து, திருத்தம் செய்தல் மற்றும் மேம்படுத்துதலுக்காக முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்தும் போக்குவரத்துச் சேவையைக் கட்டியெழுப்புதல்

- பாடசாலை பேரூந்துச் சேவைகள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பை வழங்கும் நியமங்களின் கீழ் வலுப்படுத்துதல்.
- கிராமிய பிரதேசங்களுக்கு பொதுப் போக்குவரத்து வசதிகளை வழங்கி முறைமைப்படுத்துவதற்காக இலங்கை போக்குவரத்துச் சபையை பயணிகள் மற்றும் பொருட் போக்குவரத்தில் ஈடுபடுத்துதல்.
- பயணிகள் மற்றும் போக்குவரத்து சேவைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் போக்குவரத்துச் சேவைகளை உயர்த்த தரத்தில் ஒழுங்கமைத்தல்.
- சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், மற்றும் மோட்டார் வாகனங்களை பதிவுசெய்கையில் இடம்பெறும் பல்வேறு முறைகேடுகளை அகற்றி வினைத்திறனான சேவையை வழங்குதல்.

மேற்கூறிய கடமைகளை நிறைவேற்று வதற்காக போக்குவரத்து அமைச்சிற்கு இராஜாங்க அமைச்சிற்கும் இரண்டு திணைக்களங்களுக்கும் பாராளுமன்றத்தால் மீளாய்வாண்டின் போது மொத்தமாக ரூபா 62,710 மில்லியன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 58,940 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் 6 சதவீதம் அதாவது ரூபா 3,770 மில்லியன் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. விபரம் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது.




| | போக்குவரத்து அமைச்சு | இராஜாங்க அமைச்சு | இரலங்கை புகையிரதம் | மோட்டார் வாகனம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஏற்பாடு | 14699 | 2759 | 42697 | 2555 | 62710 |
| செலவினம் | 13782 | 791 | 42531 | 1836 | 58940 |
| சேமிப்பு | 917 | 1968 | 166 | 719 | 3770 |

வரைபடம் – 33 வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் அளவு மற்றும் உள்ளபடியான செலவினம்

மூலம் - 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

மேற்கூறிய கடமைகளை நிறைவேற்று வதற்கு உரித்தான கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட அவதானிப்புக்கள் தொகுக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

**இலங்கை புகையிரத சேவைகள் (செயற்திட்டம்)**

**குருநாகல் ஹபரனை புகையிரதம் - செயற்திட்டம்**

பொருளாதார நிலையத்தை மையமாகக் கொண்டு குருநாகலில் இருந்து தம்புள்ளை ஊடாக ஹபரனை வரை நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள இப் புதிய புகையிரதப் பாதையின் இரு மருங்கிலும் உள்ள காணியைக் கையேற்பதற்காக 2010 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,460 மில்லியன் தொகையில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 39 சதவீதத்திற்குச் சமமான ரூபா 576 மில்லியன் மாத்திரமே செலவு செய்யப்பட்டிருந்தது.

இச் செயற்திட்டத்திற்குரிய 57 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் 4,392 காணித் துண்டுகளைக் கையேற்பதற்கு இருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறித்த வகையில் பணம் செலுத்தி கையொப்பமிடப்பட்டு 149 காணித் துண்டுகள் மாத்திரமே கையேற்கப் பட்டிருந்தன. குருநாகலில் இருந்து ஹபரனை வரை புகையிரதப் பாதை நிர்மாணிக்கப்படுவதற்காக 2022 ஆம் ஆண்டு வரையில் முதலீட்டாளர்களோ அல்லது நிதியத்தைப் பெறும் மார்க்கமோ இனங்காணப்பட்டிராததுடன் 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை காணிக் கையேற்பிற்கான செலவாக ரூபா 349 மில்லியன் உட்பட மொத்தச்

செயற்திட்டத்திற்காக ரூபா 568 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப் பட்டிருந்தது. செயற்திட்டத்தை மேலும் முன்னெடுத்துச் செயற்படாதுவிடுவதற்கு அரசாங்கத்தினால் கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருந்தமையால் செயற்திட்டத்திற்காக இதுவரையில் ஏற்கப்பட்டுள்ள மேற்குறித்த செலவினங்கள் அனைத்தும் விளைவற்றுப் போயிருந்தது.

### கொழும்பு நகரை அண்மித்த புகையிர செயற்திட்டம்

கொழும்பு நகரை அண்மித்த புகையிர செயற்திட்டத்தின் கீழ் 20 ஆண்டுகளிற்குள் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்கை உள்ளடக்கிய செயலாக்க ஆய்வு அபிவிருத்தி, போக்குவரத்துச் செயற்திட்டத் திற்காக விபரமான பொறியியல் திட்டம் தயாரித்து போக்குவரத்துச் செயற்திட்டத் திற்காக வசதியளிப்பதற்கு ஏற்பாடுகளை ஏற்படுத்துவது போன்ற செயற்பாடுகளை நோக்காகக் கொண்டு ரூபா 1,654 மில்லியனிற்குச் சமமான 11.36 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்பாட்டுத் தொகையுடன் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.
செயலாக்க ஆய்வறிக்கை மற்றும் விபரமான திட்டம் 2021 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் பூர்த்திசெய்யப்பட்டு குறித்த வரிசை அமைச்சினூடாக இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்கு வழங்கப் பட்டிருந்தது. செயலாக்க ஆய்வறிக்கைக் காக ஆசிய அபிவிருத்திக் கடன் வசதியின் கீழ் ரூபா 1,446 தொகையான பணம் செலவிடப்பட்டிருந்ததுடன் அக் கடனிற்கான கடன் தவணைப்பணமாக ரூபா 361 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், குறித்த செயலாக்க ஆய்வறிக்கை நடைமுறைப்படுத்தப்படாது இரண்டு ஆண்டுகளிற்கு மேலான காலமாக விளைவற்றுக் காணப்பட்டதன் காரணமாக பொருளாதாரத்திற்கு எவ்வித பயனும் கிடைத்திருக்கவில்லை.

### மஹவ – அனுராதபுரம் - ஓமந்தை வரையான புகையிரதப் பாதைச் செயற்திட்டம்

இந்திய “எக்சீம்” வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு உட்பட்டு மஹவ – அனுராதபுரம் - ஓமந்தை வரையான புகையிரதப் பாதை நான்கு கட்டங்களாக தயாரிப்பதற்காக இந்திய அரசாங்கத்தின் கம்பனிகளில் இருந்து விலை மனுக்கள் கோரப்பட்டு 2019 நவம்பர் 29 ஆம் திகதி முதல் 36 மாதங்களில் நிறைவேற்றப்படுவதற்காக 2019 யூலை 18 ஆம் திகதி Ircon International Limited நிறுவனத்துடன் 91 மில்லியன் அமெரிக்க டொலரிற்கு உடன்படிக்கை ஏற்படுத்தப் பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரால் 2022 நவம்பர் 28 ஆம் திகதி வரையில் இச் செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அன்றைய தினத்தில் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 35 சதவீத அளவில் நலிவான நிலையில் காணப்பட்டது. அநுராதபுரம் - வவுனியா மற்றும் வவுனியா ஓமந்தை வீதிப் பகுதியின் நிர்மாணிப்புகள் 2023 சனவரி முதல் இடம்பெற்றிருந்ததுடன் அப் பிரிவின் வேலைப் பூர்த்தி 2022 மே மாதம் வரையில் திட்டமிடப்பட்டிருந்தது. 2023

பெப்ரவரி அளவில் மொத்தச் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 44 சதவீதமாக மாத்திரமேயாகியிருந்ததுடன் மஹவ – அனுராதபுர வீதிப் பகுதி நிர்மாணிப்புகள் இதுவரையிலும் ஆரம்பிக்கப்பட்டிராமையால் இச் செயற்திட்டத்தின் நிர்மாணிப்புகள் 2023 ஆம் ஆண்டின் போதும் பூர்த்தி செய்யப்படுவதற்கு இயலாத நிலை உள்ளமை அவதானிக்கப்பட்டது.

**இலங்கை புகையிரதத் திணைக்களம்**

**நிலுவையாகக் காணப்பட்ட வருமானங்கள் அறவிடப்பட்டிராமை**

2008 முதல் 2021 வரையான காலப்பகுதிக்கு உரித்தான வரையறுக்கப் பட்ட ரோக்கியோ சீமேந்துக் கம்பனியில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8 மில்லியன் தொகையான போக்குவரத்துக் கட்டணமும் வரையறுக்கப் பட்ட இலங்கைப் பெற்றோலியக் களஞ்சியப்படுத்தல் நிறுவனத்திடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 54 மில்லியன் தொகையான தாமதக் கட்டணமும் பொருட் போக்குவரத்து மற்றும் ஏனைய வியாபார நடவடிக்கைகளில் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 12 மில்லியன் தொகையான நிலுவைத் தொகையும் புகையிரதத் திணைக்களத்திற்குரிய காணிகள் குத்தகைக்கிடப்பட்டமைக்காக பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் நிறுவகங்களிடம் இருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 80 மில்லியன் தொகையுமாக ரூபா 154 மில்லியன் தொகையான நிலுவை வருமானம் 2022 ஆம் ஆண்டின் போது அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

**தாமதக் கட்டணம் மற்றும் வட்டி**

பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகையில் வெளியேற்றும் நடவடிக்கைகள் ஆக்கபூர்வமான முறையில் மேற்கொள்ளப் பட்டிராததன் காரணமாக வருடாந்தம் பாரிய தொகை தாமதக் கட்டணமாகவும் வட்டியாகவும் செலுத்தப்படுவதற்கு நேர்ந்திருந்ததுடன் 2018 – 2021 ஆம் ஆண்டுகளின் போது அவ்வாறு தாமதக் கட்டணமாக ரூபா 74 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது அவ்வாறு செலுத்தப் பட்டிருந்த தொகை ரூபா 5 மில்லினாகக் காணப்பட்டது.

**தீர்த்து வைக்கப்படாத நாணய கடிதம்**

2022 ஆம் ஆண்டின் இறுதியில் தீர்த்துவைக்கப்படாத நாணயக் கடிதங்களின் பெறுமதி ரூபா 249 மில்லியனாக இருந்ததுடன் இதில் 47 சதவீதமான ரூபா 118 மில்லியன் 02 ஆண்டுகளுக்கும் 24 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட பழைய மீதியாகக் காணப்பட்டன. பணம் செலுத்தி 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த இம்மீதிகள் பொருட் பெறுவனவுக் குறிப்பின் (GRN) மூலம் தீர்த்து வைக்கப்படாமைக்கான காரணம் கணக்காய்விற் குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் இக் கொடுப்பனவுகள் வழங்கப்படாதிருந்த பொருட்களிற்காக வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த பணம் என்பது

குறித்து கணக்காய்வில் சர்ச்சைக்குரித்தான நிலையாகக் காணப்பட்டது.

### வழங்கப்படாத பொருட்களுக்காக கொடுப்பனவு செய்தல்

பொருட்கள், உரிய தரத்திலும் சரியான அளவிலும் பெற்றுக்கொள்ளப்பட்டதென உறுதிப்படுத்தியதை அடுத்து கொடுப்பனவு களை சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரால் களஞ்சிய வழங்கல்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு உறுதிப்படுத்தப்படாது வழங்கப் பட்டிராத பொருட்களுக்காக வழங்குனர்களுக்கு ரூபா 90 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

### இலங்கை புகையிரதத்தின் முக்கிய திட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் மானியங்கள் இன் கீழ் கிடைக்கப்பெற்ற அ.டொ. 1.5 மில்லியன் செலவில் புகையிரதத் திணைக்களத்திற்காக தயாரிக்கப் பட்டிருந்த முக்கிய செயற்பாட்டுத் திட்டம் (Master Plan) செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சீனாவில் இருந்து கொண்டுவரப்பட்டிருந்த பயணிகளுக்கான 100 பெட்டிகளில், இது வரையில் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பெட்டிகளின் எண்ணிக்கை 17 ஆகக் காணப்பட்டதுடன் ஏனைய பெட்டிகள் மாளிகாவத்தை, இரத்மலானைத் தரிப்பிடங் களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் மேலும் சில பெட்டிகள் புத்தளம் புகையிரத நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறே 2021 ஆம் ஆண்டின் போது இந்தியாவில் இருந்து 06 இயந்திரத் தொகுதிகளும் 10 என்ஜின்களும் ரூபா 90 மில்லியன் செலவில் பெற்றுக்கொள்ளப் பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் போது 23 புகையிரத என்ஜின்களும் 36 இயந்திரத் தொகுதிகளும் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.

### புகையிரப் போக்குவரத்து

நேர அட்டவணையின் படி, புகையிரதப் போக்குவரத்து 1865 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் போது நேர அட்டவணைப்படி புகையிரதங்கள் பயணித்திருக்கவில்லை என புகையிரதப் பாவனையாளர்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. 2022 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த புகையிரதப் போக்குவரத்து தவணைகளின் எண்ணிக்கை 120,993 ஆகக் காணப்பட்டதுடன் இரத்துச் செய்யப்பட்டிருந்த புகையிரதப் போக்குவரத்து தவணைகளின் எண்ணிக்கை 10,077 ஆகக் காணப்பட்டது. குறித்த நேரத்தில் பயணித்திருந்த புகையிரதத் தவணைகளின் எண்ணிக்கை 32,844 ஆகக் காணப்பட்டதுடன் திட்டமிடப்பட்டிருந்த புகையிரதப் பயணிப்பின் தவணை எண்ணிக்கையில் 72 சதவீதமானவை குறித்த முறையில் பயணித்திருக்கவில்லை.

நீண்டகாலமாக இலங்கையின் மொத்தப் பயணிகள் போக்குவரத்தில் 6 சதவீதத்தையும் பொருட்கள் போக்குவரத்தில் 6.5 வீதத்தையும் வழங்கியிருந்த புகையிரத சேவை அதன் பங்களிப்பை மேம்படுத்துவதற்குத் தவறியிருந்தது. 1934 ஆம் ஆண்டின் போது 1,521 கிலோமீட்டர் புகையிரத மார்க்கத்தையும் பெலி அத்த வரையிலான 32 கிலோமீட்டரையும் புதிதாக சேர்க்கப்பட்டதை அடுத்து 2021 ஆம் ஆண்டளவில் 1,465 கிலோ மீட்டர் வரை 56 கிலோ மீட்டரால் குறைவடைந்திருந்தது.

**பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் பாதுகாப்பற்ற 200 மணிகளும் மின்யமைப்புகளும் நிறுவுதல்.**

உடன்படிக்கையின் படி, 2017 சனவரி 27 ஆம் திகதி வரையில் 200 வீதிப் பாதுகாப்பு அமைப்புகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் 2022 ஆகஸ்ட் 01 ஆம் திகதி வரையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 200 அமைப்புகளில் 10 அமைப்புகள் முறைப்படி சோதிக்கப்பட்டு புகையிரத திணைக்களத்திற்கு மீள ஒப்படைக்கப்பட்டிராததுடன் 2022 ஆகஸ்ட் வரையில் ஒப்பந்தத் தொகையில் 95 சதவீதமான ரூபா 1,003 மில்லியனான கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கீழ்க்கரையில் (கடலோர) வீதியில் பொருத்தப்பட்டுள்ள 142 மணிகள் மற்றும் மின்சார அமைப்புக்களில் 60, புத்தளம் வீதியில் பொருத்தப்பட்டுள்ள 46 மணிகள் மற்றும் மின்சார அமைப்புக்களில் 34 என மொத்தம் 94 மணிகள் மற்றும் மின்சார அமைப்புக்கள் பொருத்தப்பட்டு ஒரு வருட காலத்திற்குள் செயலிழந்த நிலையில் காணப்பட்டன. இதன்படி, பொருத்தப்பட்ட மணிகள் மற்றும் மின்சார அமைப்புக்களில் 50 சதவீதத்திற்கு அண்மித்த அளவிலானவை செயலிழந்திருந்தமையால் இதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 500 மில்லியன் தொகைக்கு அண்மித்த செலவினம் விளைவற்ற செலவினமாகியிருந்தது.

**இலங்கை போக்குவரத்துச் சபை**

**ஒருகொடவத்தை எரிபொருள் நிரப்பு நிலைய நிர்மாணிப்புகள்**

ஒருகொடவத்தை எரிபொருள் நிரப்பு நிலைய நிர்மாணிப்பிற்காக சபை 2018 மார்ச் 20 ஆம் திகதி தனியார் கம்பனி ஒன்றுடன் ரூபா 61 மில்லியன் மதிப்பில் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம், நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 2018 யூன் 20 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2023 மார்ச் வரையிலும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிராததுடன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தக்காரருக்கு ரூபா 32 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஒப்பந்தக்காரரால் குறித்த விதத்தில் பணி நிறைவேற்றப்பட்டிராததன் காரணமாக ஒப்பந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பணி தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை ஒன்றும் எஞ்சிய பணிக்காக மதிப்பீடு ஒன்றைத்

தயாரிக்குமாறு மத்திய பொறியியல் உசாவுகைப் பணியகம் (CECB) அறிவித்திருந்த போதிலும் 2023 மார்ச் வரையிலும் இம் மதிப்பீட்டு அறிக்கையும் மதிப்பீடும் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2023 ஏப்ரல் 10 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது எரிபொருள் நிரப்பு நிலையத்தின் கூரை முற்றாகத் துருப்பிடித்திருந்தமை உள்ளடங்கலாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் தரம் குறித்துக் கவனம் செலுத்தப்படாது திட்டத்திற்கு இணங்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட பணிக்காக கொடுப்பனவு பரிந்துரைக்கப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் 2023 ஏப்ரல் அளவில் சபைக்கு ரூபா 9 தொகையான நட்டத்தை ஏற்க வேண்டியிருந்தது. இவ்வாறே, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12 தொகை செலவில் கொண்டுவரப்பட்டிருந்த 07 டீசல் மற்றும் பெற்றோல் பம்பிகளும் மின்பிறப்பாக்கி ஒன்றும் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் மின்பிறப்பாக்கியின் உத்தரவாதக் காலப்பகுதியும் கடந்திருந்தது.

**ஒன்பது வாயு வெளியேற்றல் தகைமை ஆய்வு நிலையங்களின் நிர்மாணிப்பு**

சபையால் மாகாண மட்டத்தில் 09 வாயு வெளியேற்றல் தகைமை ஆய்வு நிலையங்களை நிர்மாணிப்பதற்காக பொருத்தமான உபகரணங்களை 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதி மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் வாயு வெளியேற்றல் பொறுப்பு நிதியத்தால் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன் இதற்காக அந் நிதியத்தினால் ரூபா 22 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இவ் வாயு வெளியேற்றல் தகைமை ஆய்வு நிலையங்களுக்கு உரித்தான சிவில் வேலை நிர்மாணிப்பிற்காக ரூபா 90 மில்லியன் தொகையான மதிப்பீட்டுத் தொகையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 28 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இவ் 09 வாயு வெளியேற்றல் தகைமை ஆய்வு நிலையங்களின் நிலத்தை அஸ்போல்ட் இட்டு காபட் இடுவதற்காக 2018 ஆகஸ்ட் 16 ஆம் திகதி ரூபா 50 மில்லியனிற்கு மகநெகும வீதி நிர்மாணிப்பு இயந்திர உபகரணக் கம்பனியும் போக்குவரத்துச் சபையும் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தியிருந்த போதிலும் இதற்காக ஏற்கப்பட்ட செலவினம் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. தற்போது, இவ் வாயு வெளியேற்றல் தகைமை ஆய்வு நிலையங்கள் செயற்படாததுடன் வாயு வெளியேற்றல் பொறுப்பு நிதியத்தால் வழங்கப்பட்டிருந்த ரூபா 22 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் உக்கலடைந்து காணப்பட்டன. மேலும் இவ் வாயு வெளியேற்றல் தகைமை ஆய்வு நிலையங்களுக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் வேறு செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் உபகரணத் தொகுதியுடன் வழங்கப்பட்டிருந்த கணனிகள் வேறு பணிகளிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. இதன் படி, செலவிடப்பட்ட செலவினங்கள் விளைவற்ற செலவினங்களாகியிருந்தன.

### முன்தயாரிப்பு டயர்களின் உற்பத்தி

வசதிகளையும் தரத்தையும் உயர்த்துவதன் மூலம் கிரயக் கட்டுப்பாட்டை நோக்காகக் கொண்டு கூடுதலான இயக்கசக்தியைக் கொண்ட நவீன இயந்திர உபகரணங்களைக் கொண்ட டயர் முன்தயாரிப்புத் தொழிற்சாலை நவீனமயப்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டிற்கு ரூபா 50 மில்லியன் ஒதுக்கப்பட்டு மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 69 மில்லியனாகியிருந்தது. இதன் மூலம் தற்போதுள்ள தொழிற்சாலையின் இயலளவு 15,000 அலகுகள் வரை இரட்டிப்பாக்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இச் செயற்பாடு மேற்கொள்ளப்பட முடியாமையால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 06 வலையங்களின் மூலம் மாத்திரம் ரூபா 787 மில்லியன் பெறுமதியான 53,706 முன்தயாரிப்பு டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும் தொழிற்சாலையில் நிலவும் உற்பத்தியின் இயலளவை உச்ச அளவில் பயன்படுத்தி டயர்களை முன்தயார்படுத்தக் கூடிய போதிலும் குறித்த பிராந்திய மற்றும் டிப்போக்களில் இருந்து முன்தயாரிப்பிற்காகத் தேவையான டயர்களைத் தொழிற்சாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### செயற்பாட்டுத் திட்டம்

சபையால் 2022 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின் படி, நாளாந்தம் 5,794 பேருந்துகளை இயக்குவதற்குச் சபை திட்டமிட்டிருந்தது. இச் செயற்பாட்டை மேற்கொள்வதற்குத் தேவையான 840 இயந்திரத் தொகுதிகள் வருடாந்தம் திருத்தப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்தப் படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த துடன் இதற்காக திறைசேரி யிடமிருந்தும் இலங்கை போக்குவரத்துச் சபை யிடமிருந்தும் ஏற்பாடாக ரூபா 662 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், சபையால் பழுதுபார்க்கப்பட்டிருந்த பேருந்துகளின் அளவு 254 ஆகக் காணப்பட்டதுடன் இதற்காகச் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 77 மில்லியனாகும்.

### சேதங்களுக்கான இழப்பீட்டை மீளப் பெற இயலாமை

கட்டுபெத்த அதிசொகுசு சுற்றுலாப் போக்குவரத்துச் சேவைக்கு உரித்தான ரூபா 11 மில்லியன் பெறுமதியான அதிசொகுசு பேருந்தொன்று நெடுஞ்சாலையில் விபத்திற்குள்ளாகி திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாது ஓட்ட நிலையில் இருந்து நீக்கப்பட்டிருந்தது. இதற்கான முழுக் காப்புறுதியும் பெறப்பட்டிருந்த போதிலும் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்டிருந்த காலஅவகாசத்திற்குள் பேருந்தின் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு டிப்போ உத்தியோகத்தர்கள் தவறியிருந்ததன் காரணமாக இழப்பீட்டை மேற்கொள் வதற்குக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### எரிபொருள் பற்றாக்குறை

மஹரகம டிப்போவில் 2022 ஆகஸ்ட் மாத இறுதி நாளில் இருக்க வேண்டிய எரிபொருள் இருப்பின் அளவு 326,772 லீற்றர்களாகும். எனினும், அன்றைய

திகதியில் உள்ளவாறு தாங்கியில் காணப்பட்ட உண்மையான எரிபொருள் இருப்பின் அளவு 48,598 லீற்றர்களாகப் பதிவாகி இருந்தது. இதன் படி, ரூபா 120 மில்லியன் பெறுமதியான எரிபொருள் 278,174 லீற்றர்களின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் இப் பற்றாக் குறைக்கான காரணம் கணக்காய் விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. இவ்வாறு பேணப்பட்ட எரிபொருள் இருப்புப் பற்றாக்குறைக்காக சபையாலும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற நிதிக்கூற்றுக்களில் ரூபா 37 மில்லியன் தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### பஹசர பேரூந்து நவீனமயமாக்கல் செயற்திட்டம்

பொதுப் போக்குவரத்திற்காக பயணிகளின் விருப்பை நோக்காகக் கொண்டு ஏறத்தாழ 23000 பேரூந்துகளை நவீனமயமாக்கும் நோக்கில் 2018 முதல் 2023 வரையான காலப்பகுதியின் போது இச் செயற்திட்டம் நாடெங்கிலும் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 26,860 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இம் மதிப்பீட்டுத் தொகையில் 1 சதவீதத்தை அண்மித்த ரூபா 249 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்ததுடன் இதில் 73 சதவீதத்தை அண்மித்த ரூபா 181 மில்லியன் செயற்திட்டத்தின் நிர்வாக நடவடிக்கைகளிற்காகச் செலவிடப் பட்டிருந்தது. செயற்திட்டத்தின் திறனின்மை காரணமாக அரசாங்கத்தால் செயற் திட்டத்தை இடைநடுவில் நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் செயற் திட்டத்தினால் அது வரையிலும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 1465 ஜீபீஎஸ் இயந்திரங்களில் 500 தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கும் எஞ்சிய 965 போக்குவரத்து அமைச்சிற்கும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தது.

### தேசிய போக்குரத்து ஆணைக்குழு

### பயணிகள் அனுமதிப்பத்திரம்

1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் படி, எவரேனும் ஒருவருக்கு 24 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படும் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் வேறொருவருக்கு மாற்றப்படலாகாத போதிலும் 2022 ஆம் ஆண்டின் போது 33 போக்குவரத்துச் சேவைகளின் அனுமதிப்பத்திரம் மாற்றப்பட்டிருந்தது.

### GPS சாதனங்களின் குறைவான பயன்பாடு

ஆணைக்குழுவிற்கு 2021 நவம்பர் 26 ஆம் திகதி காலி வீதியின் வழித்தடத்தில் பேரூந்துகளில் பொருத்தப்படுவதற்காக 500 GPS சாதனங்கள் மிலேனியம் செயற்திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், 2023 பெப்ரவரி 16 ஆம் திகதி வரையிலும் பொருத்தப்பட்டிருந்த மொத்த GPS எண்ணிக்கை 186 ஆகும். எஞ்சிய 314 உபகரணங்களும் பேரூந்துகளில் பொருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ் GPS சாதனங்களின் உத்தரவாதக் காலம் கடப்பதற்கு அண்மித்த நிலையில் இருந்த

போதிலும் ஆணைக்குழு இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. இவ்வாறே, 2022 ஆம் ஆண்டின் போது GPS அமைப்பின் பராமரிப்புக் கிரயம் உள்ளடங்கலாக அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளைப் பேணுவதற்காக ரூபா 8 மில்லியன் தொகையான செலவை ஏற்றிருந்த போதிலும் நாடெங்கிலும் உள்ள பயணிகள் போக்குவரத்தின் சகல பேருந்துகளிற் காகவும் GPS பொருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் இச் செயற்திட்டத்தின் செயற்திறன் நிலை வரையறுக்கப்பட்டிருந்தது. மேலும் ஆணைக்குழுவின் பதிவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திரங்களைக் கொண்ட 1,747 பேருந்துகள், அதாவது மொத்த பேருந்துகளில் 56 சதவீத அளவிலானவை GPS கருவிகளைப் பொருத்த வேண்டிய நிலையில் காணப்பட்டன.

### நிசி சரிய செயற்திட்டம்

மீளாய்வாண்டின் போது "நிசி சரிய" சேவையைச் செயற்படுத்துவதற்காகவும் 100 புதிய செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காகவும் ரூபா 34.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் புதிய ஒரு சேவையையேனும் ஆரம்பிக்கப்படுவதற்காக ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

# துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

- பிரதான அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துதல்.
- தாமதமடைந்த செயற்திட்டங்கள்.
- கடனைப் பயன்படுத்தாமையால் பொறுப்புக் கட்டணம் மற்றும் கடன் வட்டி என்வற்றை விளைவற்று செலுத்த நேரிட்டமை.
- கொள்கலன் செயல்பாட்டு நடவடிக்கைகளில் சர்வதேச நிலை மற்றும் துறைமுகங்கள் அதிகார சபையின் சந்தை பங்கு.
- கப்பல் பண்டங்கள் செயற்பாட்டு நடவடிக்கை.
- கொழும்பு துறைமுகத்திற்கு படகுகளின் வருகை (வரவு )
- முடிவுமுனை செயற்பாட்டு நடவடிக்கைகள் வீழ்ச்சியடைதல்.
- கிழக்கு கொள்கலன் முடிவுமுனையின் குறை பயன்பாடு.
- துறைமுகங்கள் அதிகார சபையில் நிர்வகிக்கப்படும் கம்பனி ஒன்றினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடனுக்காக பிணை நிற்றல்.
- துறைமுகங்கள் அதிகார சபைக்கு திறைசேரியிடம் இருந்து கிடைக்க வேண்டிய நிதி.
- நிதி அதிகாரச் சட்டத்திற்கு மற்றும் துறைமுகங்கள் தொடர்பான அதிகாரசபை அதிகாரச் சட்டத்திற்கு இணங்காமை.
- துறைமுகங்கள் அதிகாரச் சட்டத்திற்கு இணங்காமை.
- முறையாக காணியினை ஒப்படைத்திருக்காமை.
- கிழக்கு கொள்கலன் முடிவுமுனையின் குறை பயன்பாடு.
- சிக்கனமற்ற செலவினங்கள்
- இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்காத பங்கு உரிமை.
- நிர்வகிக்கும் கம்பனிக்குக் கொள்கை ஒன்றினைத் தயாரித்திருக்காமை.
- இறக்குமதி ஏற்றுமதிப் பொருட்கள் போக்குவரத்து.
- கப்பல் கூட்டுத்தாபனத்தின் மூலம் பொருட்களைக் கொண்டு செல்லும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவடைதல்.

# துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை

தெற்காசிய வலயத்தில் ஆகக் கூடிய போட்டித் தன்மை கொண்ட கடல் சார் சேவைகள் கேந்திர நிலையமாக இலங்கையை அபிவிருத்தி செய்வதன் மூலம் அனைத்து பயனாளிகளுக்கும் உயர் நட்பு மட்டத்தில் கடல் சார் சேவைகளை வழங்குதல் மற்றும் வலயத்தில் முன்னணி விமான போக்குவரத்து கேந்திர நிலையமாக இலங்கையை நிலைநாட்டும் நோக்கில் செயல்படும் துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு மற்றும் அதன் கீழ் செயல்படும் திணைக்களமொன்று மற்றும் 05 நியதிச்சட்ட சபைகள் என்பவற்றினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகள் மற்றும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டி உள்ளன.

- அரசாங்கத்தின் மூலம் செயல்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் விடயத்திற்கு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களம் மற்றும் நியதிச் சபை நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் என்பவற்றின் விடயங்களுக்கு உரிய கொள்கைகள், வேலைத் திட்டங்கள் மற்றும் செயல் திட்டங்கள் என்பவற்றை உருவாக்குதல், செயல்படுத்துதல், தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்..
- வணிகத் துறைமுகங்கள் அபிவிருத்தி, முகாமைத்துவம் மற்றும் அவற்றின் முதலீட்டு சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துதல்.
- கொள்கலன் முனையங்கள், எண்ணெய் தாங்கி உபகரணங்கள், கலங்கரை விளக்கங்கள் மற்றும் கலங்கரை விளக்க அபிவிருத்தி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- கப்பல் உரிமை மற்றும் செயல்பாடுகள், கப்பல் முகாமைத்துவம், கப்பல் தரகு மற்றும் முகவர் சேவை தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் கப்பல் துறை வழங்குனர்கள் மற்றும் பயன்படுத்துவோரிடையே அறிவுறுத்தல் ஒருங்கிணைப்பை உறுதி செய்தல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல்.
- கப்பல் கட்டணம் மற்றும் கப்பல் சேவை நடவடிக்கைகள் மற்றும் கரையோர பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகள் என்பவற்றை ஒழுங்குறுத்தல் செய்தல்.
- சிதைந்த கப்பல்கள் மற்றும் கடல் அழிவு மீட்புகளை ஏற்றல்.
- சர்வதேச மற்றும் உள்நாட்டு விமான நிலையங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் விமான நிலையங்கள் மூலம் ஏற்படும் சேவைகளின் கட்டணங்கள் மற்றும் தரங்களை ஒழுங்குறுத்தல் செய்தல்.

- சர்வதேச விமான போக்குவரத்தினை விரிவுபடுத்துதல், விமான பொருட்கள் ஏற்றுமதி, உள்நாட்டு விமான போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் தனியார் விமான போக்குவரத்து சேவையை ஒழுங்குறுத்தல் செய்தல் மற்றும் விமானங்களைப் பதிவு செய்தல்.

2022 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சுக்கு ரூபா. 6,414 மில்லியன் நிதி பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா. 2,800 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள 01 அரச திணைக்களம் மற்றும் 05 நியதிச் சட்ட சபைகளினால் மேலே குறிப்பிடப்பட்ட செயல்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க மற்றும் முக்கிய கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கம் செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

**பிரதான அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துதல்.**

துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவை அலுவல்கள் அமைச்சின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் கீழ் கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்காக சாத்தியக்கூறு ஆய்வறிக்கையை தயாரிப்பதற்கான ரூபா. 824 மில்லியன் நிகர நிதி ஏற்பாடுகளில் மீதி 33 சதவீதமும் தூண்களின் மீது நிர்மாணிக்கப்படும் துறைமுக நுழைவு அதிவேகப் பாதை செயல் திட்டத்திற்காக நிகர நிதி ஏற்பாடான ரூபா. 1,010 மில்லியனில் மீதி 72 சதவீதமும் ஆகும். மேலும் இந்த 2 செயல் திட்டங்களில் திட்டமிடப்பட்ட செயல்திட்ட செயல்பாடுகள் திட்டமிடப்பட்ட வகையில் வருடத்தினுள் நடைமுறைப்படுத்தி பூர்த்தி செய்வதற்கு முடியாது இருந்ததனால் செயலாற்றுகை முறையே 95 சதவீதம் மற்றும் 54.3 சதவீத மட்டங்களில் காணப்பட்டது.

**தாமதமடைந்த செயற்திட்டங்கள்.**

இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை மூலம் தற்போது பிரதான செயற்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் ஜெய கொள்கலன் முடிவுமுனையின் நீளம் சுமார் 600 மீட்டராக உள்ளதனால் 330 மீட்டர் நீளமான பாரிய அளவிலான 2 கப்பல்களை ஒரே நேரத்தில் கையாளுதல் சிரமமாக உள்ள காரணத்தால் அதிகார சபைக்கு வணிக சந்தர்ப்பங்கள் இழக்கப்படுகின்றது என்பதால் அந்த முடிவுமுனையை 120 மீட்டரினால் நீட்டிப்பதற்கும் மற்றும் 15 மீட்டர் ஆழம் கொண்ட துறைமுகத்தினை உருவாக்குவதற்கும் 2017 ஜூலை மாதத்தில் அமைச்சரவை அனுமதி வழங்கி இருந்தது. 2018 நவம்பர் 29 ஆம் திகதி துறைமுகங்கள் அதிகார சபை மற்றும் ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கைக்கு அமைய ஒப்பந்தத்திற்கான மொத்த செலவு ரூபா. 5,035 மில்லியன் ( VAT

இன்றி) ஆகும். உடன்படிக்கைக்கு அமைய, உடன்படிக்கை இடப்பட்டு 7 நாட்களுக்கு குறையாத நாளில் ஒப்பந்தத்தை ஆரம்பிக்கும் கட்டளை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும், அதிலிருந்து 02 வருட காலத்திற்குப் பின்னர் 2020 நவம்பர் 23 ஆம் திகதி திருத்தங்களுடன் வேலையை ஆரம்பிக்கும் கட்டளை வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை தொடர்பாக மீண்டும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டு முன்மொழிபட்டிருந்த வகையில் மேம்பாட்டினை மேற்கொள்வதற்காக 2020 செப்டம்பர் 29 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் மீண்டும் அனுமதியினை பெற்றுக் கொள்ளுதல் இந்த தாமதத்திற்கான காரணமாக இருந்தது. திருத்தத்தின் பின்னர் மேலே கூறப்பட்ட ஒப்பந்தம் 2022 ஜூலை 23 ஆம் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் இந்த செயல் திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 42 சதவீதம் மட்டுமானதாகவே இருந்தது.

**கடனைப் பயன்படுத்தாமையால் பொறுப்புக் கட்டணம் மற்றும் கடன் வட்டி என்வற்றை விளைவற்று செலுத்த நேரிட்டமை.**

காங்கேசன் துறை துறைமுகத்தைப் புனரமைப்பு செய்வதுக்கு இலங்கை அரசாங்கம் மற்றும் இந்திய எக்ஸிம் வங்கியுடன் ஐக்கிய அமெரிக்க டொலர் 45 மில்லியன் கடன் தொகையினை பெற்றுக் கொள்வதற்கு 2018 ஜனவரி 10 ஆம் திகதி உடன்படிக்கை இடப்பட்டு இருந்தது. கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 05 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் துறைமுக நிர்மாண நடவடிக்கைகள் இதுவரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதே போன்று கடன் தொகையில் சுமார் ஐக்கிய அமெரிக்க டொலர் 905,194 பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா. 12 மில்லியன் தொகையான பெற்றுக் கொண்டிருக்காத கடனுக்கான பொறுப்பு கட்டணம் மற்றும் கடன் வட்டியாக பொருளாதாரமற்ற கொடுப்பனவு இடம்பெற்றிருந்தது.

**கொள்கலன் செயல்பாட்டு நடவடிக்கைகளில் சர்வதேச நிலை மற்றும் துறைமுகங்கள் அதிகார சபையின் சந்தை பங்கு.**

2022 ஆம் ஆண்டுக்காக உலக துறைமுகங்கள் செயல்பாடு தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அல்பா லைனர் அறிக்கைக்கு (Alpha Liner Report ) அமைய கொழும்பு துறைமுகத்தின் விசாரணை அலகு (Twenty Equivalent Unit ) 6,862,178 செயல்பாடுகளை மேற்கொண்டு உலகின் 22 ஆவது இடத்தில் உள்ளதுடன் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 5.3 சதவீத பின்னடைவினைக் காணக் கூடியதாக உள்ளது. இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் கொள்கலன் கையாளுகை 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் 5 சதவீதத்தினால் குறைவடைந்து இருந்தது.

**கப்பல் பண்டங்கள் செயற்பாட்டு நடவடிக்கை.**

கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய முக்கிய துறைமுகங்களுக்கு 2018 ஆம் ஆண்டில் வந்த கப்பல்களின் எண்ணிக்கை 4,933

ஆக இருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 4,073 வரையில் குறைவடைந்திருந்தது. எவ்வாறு இருப்பினும், செயல்படுத்தப்பட்ட இருபது சம (TEUs) கொள்கலன் அலகுகளின் எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டில் 7 மில்லியன் தொடக்கம் 2022 ஆம் ஆண்டில் 7 மில்லியன் வரையில் குறைவடைந்திருந்தது. அதே போன்று செயல்படுத்தப்பட்ட வழமையான கப்பல் பண்டங்களின் தொகை 2018 ஆம் ஆண்டில் மெட்ரிக் தொன் 10.1 மில்லியன் தொடக்கம் 2022 ஆம் ஆண்டு மெட்ரிக் தொன் 6.2 மில்லியன் வரையில் குறைவடைந்திருந்தது. விபரங்கள் அட்டவணை 22 இல் காட்டப்பட்டுள்ளது.

.

| விபரம் | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|
| வருகைதந்த கப்பல்களின் எண்ணிக்கை | 4,933 | 4,708 | 4,337 | 4,180 | 4,073 |
| செயற்படுத்தப்பட்ட கொள்கலன் முனையங்களின் (TEUs) எண்ணிக்கை ('000 அலகுகள்) | 7,047 | 7,228 | 6,854 | 7,249 | 6,862 |
| செயற்படுத்தப்பட்ட சம்பிரதாயபூர்வமான கப்பற் பொருட்களின் அளவு ('000 மெ.தொன்) | 10,136 | 9,530 | 8,894 | 9,229 | 6,249 |

அட்டவணை 22 - முக்கிய துறைமுகங்களில் செயல்படுத்தப்பட்ட கொள்கலன் அலகு மற்றும் வழமையான கப்பல் பண்ட எண்ணிக்கை


மூலம் - இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டு செயலாற்றுகை மீளாய்வு அறிக்கை

**கொழும்பு துறைமுகத்திற்கு படகுகளின் வருகை (வரவு )**

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கொழும்பு துறைமுகத்திற்கு கொள்கலன் தாங்கிய படகுகளின் வருகை 27 படகுகளினால் அதாவது 0.7 சதவீதத்தினால் குறைவடைந்து இருந்தது. 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையில் கொள்கலன் படகுகளின் வருகையில் சிறிய அதிகரிப்பும் மத்திய மற்றும் சிறிய அளவிலான படகுகளுக்கு பதிலாக பாரிய அளவிலான படகுகள் வந்த காரணத்தினால் 2018 ஆம் ஆண்டின் பின்னர் 2021 ஆம் ஆண்டு வரையில் கொள்கலன் படகுகளின் வருகையில் படிப்படியான குறைவும் மற்றும் 2022 ஆம் ஆண்டளவில் சிறிய அதிகரிப்பும் அவதானிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது கொள்கலன் தாங்கிய படகுகள் 105 அதாவது சுமார் 03 சதவீத அதிகரிப்பு 2022 ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் உரு 01 இலும் மற்றும் உரு 02 இலும் காட்டப்பட்டுள்ளது. வழமையான மற்றும் வேறு படகுகளின்

வருகையும் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது முறையே 50 சதவீதம் மற்றும் 24 சதவீதம் பின்னடைவு அவதானிக்கப்பட்டது.


.




| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|
| கொள்கல | 3,683 | 3,739 | 3,604 | 3,281 | 3,180 | 3,287 |
| சம்பிராக | 56 | 51 | 77 | 64 | 62 | 31 |
| ஏனைய | 590 | 541 | 517 | 461 | 433 | 330 |

வரைபடம் 34 - கொழும்பு துறைமுகத்திற்கு படகுகளின் வருகை (உள்வரவு ) – வகைப்படுத்தலுடன்

மூலம்: இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டு செயலாற்றுகை மீளாய்வு அறிக்கை




| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|
| வருகைதந்த மொத்த படகுகளின் எண்ணிக்கை | 4,329 | 4,331 | 4,198 | 3,806 | 3,675 | 3,648 |

உரு 35 - கொழும்பு துறைமுகத்திற்கு படகுகளின் வருகை (உள்வரவு ) – மொத்த படகுகளின் எண்ணிக்கை

மூலம் - இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டு செயலாற்றுகை மீளாய்வு அறிக்கை


**முடிவுமுனை செயற்பாட்டு நடவடிக்கைகள் வீழ்ச்சியடைதல்.**

கொழும்பு துறைமுகத்தினால் 2001 ஆண்டில் 1,726,616 கொள்கலன் அலகு செயல்படுத்தப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 6,862,184 கொள்கலன் அலகுகள் வரையில் அதிகரித்திருந்தது. இந்த கொள்கலன் செயல்பாட்டு நடவடிக்கைகளின் போது கொழும்பு துறைமுகத்தினுள், இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சந்தை பங்குகள் 2001 ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு இறுதி வரையான 22 வருட காலத்தினுள் 81 சதவீதம் தொடக்கம் 28 சதவீதம் வரையில் வீழ்ச்சி அடைந்திருந்தது. கொழும்பு துறைமுகத்தினுள் துறைமுகங்கள் அதிகார சபையின் செயல்பாட்டு நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டு வரையில் ஜய கொள்கலன் முடிவுமுனை (JCT) மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் கிழக்கு கொள்கலன் முடிவு முனைக்கு செயல்பாட்டு நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு செய்திருந்ததுடன் போட்டி நிறைந்த நீண்ட கால குத்தகை அடிப்படையில் தெற்காசிய நுழைவு முடிவுனை (SAGT) 2013 ஆம் ஆண்டில் செயல்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 26 சதவீதமான சந்தை பங்குகளும், கொழும்பு சர்வதேச கொள்கலன் முடிவுமுனை (CICT) 2001 ஆம் ஆண்டில் செயல்பாடு ஆரம்பிக்கப்பட்டு 46 சதவீத சந்தை பங்குகளும் 2022 ஆம் ஆண்டு வரையில் உரிமையாக்கப்பட்டு இருந்தது.

கடந்த ஐந்து வருடங்களுக்கான கொள்கலன் கையாளுகை தொடர்பான விபரங்கள் அட்டவணை 23 இல் காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | SLPA (வருடாந்த முடிவுமுனை கொள்ளளவு கொள்கலன் இருபதுசம அலகு மில்லியன் 3.550) | சந்தை பங்கு | SAGT (வருடாந்த முடிவுமுனை கொள்ளளவு கொள்கலன் இருபதுசம அலகு மில்லியன் 1.950) | சந்தை பங்கு | CICT (வருடாந்த முடிவுமுனை கொள்ளளவு கொள்கலன் இருபது சம அலகு மில்லியன் 2.400) | சந்தை பங்கு | மொத்த கொள்கலன் அலகு |
|---|---|---|---|---|---|---|---|
| **2018** | 2,304,534 | 33 | 2,066,758 | 29 | 2,676,194 | 38 | 7,047,486 |
| **2019** | 2,282,618 | 32 | 2,052,153 | 28 | 2,893,566 | 40 | 7,228,337 |
| **2020** | 2,097,804 | 31 | 1,872,052 | 27 | 2,884,906 | 42 | 6,854,762 |
| **2021** | 2,198,334 | 30 | 1,838,693 | 25 | 3,212,331 | 45 | 7,249,358 |
| **2022** | 1,925,895 | 28 | 1,752,236 | 26 | 3,184,053 | 46 | 6,862,184 |

அட்டவணை 23 - கடந்த ஐந்து வருடங்களில் கொள்கலன் கையாளுகை தொடர்பான விபரங்கள்




வரைபடம் 36 - இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் முடிவுமுனை செயற்பாட்டு நடவடிக்கை

ஆதாரம் - இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டு செயலாற்றுகை மீளாய்வு அறிக்கை

மேலே குறிப்பிடப்பட்ட தரவுகளுக்கு அமைய இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு கொள்கலன் செயற்பாட்டிற்காக சொந்தமாக இருந்த சந்தை பங்கு படிப்படியாக தனியார் துறைக்கு உரிமையாகிக் கொண்டு வந்திருந்தது. அதிகார சபையின் கொள்கலன் செயல்பாட்டு நடவடிக்கைகள் (JCT) தொடர்பான ஆராய்ச்சி பயன்பாட்டு வீதத்தினை (Berth Occupancy Ratio) கருத்தில் கொள்ளும்போது 2018, 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அது முறையே 64 சதவீதம், 70 சதவீதம், 72 சதவீதம், 70 சதவீதம் மற்றும் 63 ஆக இருந்தது. அதற்கு அமைய அதிகார சபையின் முடிவுமுனை பயன்பாட்டு வீதம் 2022 ஆம் ஆண்டில் 7 சதவீதத்தினால் குறைவடைந்து இருந்தது. அதிகார சபையின் அனைத்து முடிவுமுனைகளின் கொள்ளளவு இருபதுசம அலகு மில்லியன் 3.55 ஆக இருந்த போதிலும் 22 ஆம் ஆண்டில் உண்மையான கொள்கலன் செயற்பாட்டு இருபது சம அலகு மில்லியன் 1.92 ஆக இருந்ததுடன் ஜேயுபுவு மற்றும் ஊஐஊவு கொள்கலன் முடிவுமுனைகளின் கொள்ளளவு முறையே இருபதுசம அலகு மில்லியன் 1.95 மற்றும் மில்லியன் 2.4 ஆக இருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டில் உண்மையான கொள்கலன் செயற்பாடு முறையே இருபதுசம அலகு மில்லியன் 1.75 மற்றும் இருபதுசம அளவு மில்லியன் 3.18 ஆக இருந்ததுடன் CICT முடிவுமுனை ஆகக் கூடிய கொள்ளளவினை விஞ்சி இருந்தது.

**கிழக்கு கொள்கலன் முடிவுமுனையின் குறை பயன்பாடு.**

மேலே குறிப்பிடப்பட்ட வகையில் கொள்கலன் செயல்பாடு தொடர்பில் துறைமுகங்கள் அதிகார சபையின் பங்களிப்பு (JCT இல்) குறைவடைந்த காரணத்தால் அதன் கொள்ளளவினை அதிகரிப்பதற்கு கிழக்கு முடிவுமுனையில் (ECT) நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பகுதியில் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததால் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் முடிவுமுனை கொள்ளளவு இருபதுசம அலகு மில்லியன் 3.55 வரையில் அதிகரித்திருந்தது.

**கிழக்கு கொள்கலன் முடிவுமுனையின் குறை பயன்பாடு.**

கொழும்பு துறைமுகத்தில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள கொள்கலன் கையாளுவதற்கான முடிவுமுனைகளுள் 14.25 மீட்டர் ஆழத்தை விட அதிகமான ஆழமுடைய பாரிய அளவிலான கப்பல்கள் வரக்கூடிய முடிவுமுனையானது கொழும்பு சர்வதேச கொள்கலன் முடிவுமுனை மற்றும் கிழக்கு கொள்கலன் முடிவுமுனை என்பனவாகும்.

கொழும்பு துறைமுகத்தை விரிவுபடுத்தும் செயல்திட்டத்திற்கு உரியதாக இலங்கை வங்கியால் நிதியளிக்கப்பட்ட கொள்கலன் இருபதுசம அலகு மில்லியன் 0.8 வருடாந்த கொள்ளளவைக் கொண்டு நிர்மாண மொத்த செலவு ரூபா. 11,168 மில்லியனான 18 மீட்டர் ஆழமும் மற்றும் 440 மீட்டர் நீளமும்

கொண்ட கிழக்கு கொள்கலன் முடிவுமுனையின் 1 ஆம் கட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2016 ஏப்ரல் மாதம் பூர்த்தி செய்யப்பட்டு இருந்தது. ஜய கொள்கலன் முடிவுமுனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட, கப்பலில் இருந்து கரை வரையான செயல்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய மூன்று பாரம் தூக்கிகள், 2020 பெப்ரவரி 07 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம; PA/HD/25 கொண்ட பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் கிழக்கு கொள்கலன் முடிவுமுனையில் (ECT) பொருத்தப்பட்டு, அதன் செயல்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர், 2021 பெப்ரவரி 09 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் அமப/21/0198/328/005/டீ பிஆர் கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் கிழக்கு கொள்கலன் முடிவுமுனையை அபிவிருத்தி செய்தல், செயல்பாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் முழுமையான உரிமைத்துவத்துடன் கொள்கலன் முடிவுமுனையாக செயல்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டினுள் 14.25 மீட்டரை விட அதிக ஆழமான பாரிய அளவிலான 17 கொள்கலன் கப்பல்கள் முடிவுமுனைக்கு வந்திருந்ததுடன் 346,174 கொள்கலன்கள் வளாகத்தினுள் செயல்படுத்தப்பட்டிருந்தது.. 2021 ஆம் ஆண்டில் 48 சதவீதத்தில் காணப்பட்ட முடிவுமுனை கொள்ளளவு பயன்பாட்டு வீதம் (Capacity Utilization ) 2022 ஆம் ஆண்டில் 43 சதவீதம் வரையில் குறைவடைந்து இருந்தது. கப்பலில் இருந்து கரை வரையில் செயல்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய பாரிய அளவிலான 12 பாரம் தூக்கிகள் (STS Cranes ) மற்றும் இரயில் தண்டவாளங்களில் பொருத்தப்பட்டு செயல்படுத்தப்படும் 40 தானியங்கி கென்ட்ரி பாரம் தூக்கிகள் (ARMG Cranes ) ஐக்கிய அமெரிக்க டொலர் 282.56 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவில் கொள்வனவு செய்வதற்குரிய கொள்முதல் தாமதமடைந்த காரணத்தால் செயல்பாட்டு நடவடிக்கைகளின் போது முடிவுமுனையின் கொள்ளளவினை முழுமையாக பயன்படுத்துவதற்கு முடியாது இருந்தது.

**துறைமுகங்கள் அதிகார சபையில் நிர்வகிக்கப்படும் கம்பனி ஒன்றினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடனுக்காக பிணை நிற்றல்.**

இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையில் நிர்வகிக்கப்படும் கம்பெனியாக மாகம்புர துறைமுக முகாமைத்துவ கம்பெனி 2007 இன் 07 ஆம் இலக்க கம்பெனி சட்டத்தின் கீழ் 2013 ஜுலை 05 ஆம் திகதி நிறுவப்பட்டு இருந்ததுடன் முகாமைத்துவ ஒப்பந்தத்தின் மூலம் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் செயல்பாட்டு முகாமைத்துவம் கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கம்பெனியினால் பெட்ரோலிய கூட்டுத்தாபனத்திடம் இருந்து (ஊநுலீநுவுஊழ) பெற்றுக் கொள்ளப்பட்ட அனுமதி பத்திரத்தின் மூலம் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் எரிபொருள் வழங்குனராக செயல்பட

ஆரம்பித்திருந்ததுடன் களஞ்சியப்படுத்துதல் மற்றும் சர்வதேச கப்பல்களுக்கு மீள் ஏற்றுமதி செய்தல் என்பவற்றை நோக்காக கொண்டு பாரிய அளவிலான எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்டது. எவ்வாறு இருப்பினும், அடிப்படை ரீதியில் உலக சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சி அடைந்த காரணத்தால் கம்பெனிக்கு எரிபொருள் வழங்குதல் மூலம் குறிப்பிடத்தக்களவு நட்டம் ஏற்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் கம்பெனி தனியார் வங்கியிடம் இருந்து ஐக்கிய அமெரிக்க (ஐ.அ.டொ) டொலர் 24 மில்லியன் கடன் தொகையினைப் பெற்றுக் கொண்டிருந்தது. அதில் கடன் தொகை மற்றும் வட்டியாக ஐக்கிய அமெரிக்க டொலர் 26.49 மில்லியன் ( ரூபா. 9,617 மில்லியன் )2023 ஒக்டோபர் 12 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்படாது இருந்ததுடன் கடனைத் தீர்ப்பதற்காக கம்பெனிக்குச் சொந்தமாக போதியளவு சொத்துக்கள் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. 2017 நவம்பர் தொடக்கம் கம்பெனியின் செயல்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு இருந்ததுடன் வங்கியினால் இந்தக் கடனை அறவிடுவதற்காக நிர்வகிக்கப்படும் கம்பெனிக்கு மற்றும் அதிகார சபைக்கு எதிராக இரண்டு வழக்குகள் 2020 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டு இறுதி வரையில் வழக்கு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு இருக்கவில்லை.

**துறைமுகங்கள் அதிகார சபைக்கு திறைசேரியிடம் இருந்து கிடைக்க வேண்டிய நிதி.**

அம்பாந்தோட்டை துறைமுகத்தினை நிர்மாணிக்கும் செயல் திட்டத்திற்காக பெற்றுக் கொண்டிருந்த கடன் தொகைக்காக அதிகார சபையினால் 2017 ஆம் ஆண்டில் செலுத்தி இருந்த தவணைப் பணம் ரூபா. 4,406 . மில்லியனும் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 372 மில்லியனும் உள்ளிட்ட ரூபா. 4,778 மில்லியன் தொகை 2023 மே 31 ஆம் திகதி வரையிலும் அதிகார சபைக்கு கிடைக்காது இருந்தது. மேலும், இது தொடர்பான மீதி உறுதிப்படுத்தல் அதிகார சபையினால் கோரப்பட்டிருந்த போதிலும் திறைசேரியினால் அது உறுதிப்படுத்தப்பட்டு இருக்காதுடன் 2022 ஆம் ஆண்டுக்கான குடியரசின் நிதிக் கூற்றுகளில் செலுத்தப்பட வேண்டிய மீதிகளில் இந்த மீதி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. இதனால் இந்தத் தொகை கிடைத்தமை தொடர்பாக நிச்சயமற்ற தன்மை காணப்பட்டது. துறைமுக அபிவிருத்தி செயல் திட்டத்தின் கீழ் எண்ணெய் தாங்கிகளை நிர்மாணிக்கும் செயல் திட்டத்திற்காக திறைசேரியினால் இலங்கை வங்கியிடம் இருந்து பெற்றுக் கொண்டிருந்த டொலர் கடன் தொகைக்கான தவணைப் பணம் திறைசேரியினால் குறித்த நேரத்தில் செலுத்தப்படாத காரணத்தால் அதிகார சபையின் பெயரில் இலங்கை வங்கியில் பேணப்பட்டு வரும் ஐக்கிய அமெரிக்க இராச்சிய டொலர் கணக்கில் இருந்து 2018 ஆம் ஆண்டில் ஐக்கிய இராச்சிய டொலர் 0.64 மில்லியன் அதாவது ரூபா.

377.84 மில்லியன் வங்கியினால் அறவிடப்பட்டிருந்ததுடன் அந்தத் தொகை இதுவரையில் துறைமுக அதிகார சபைக்கு பெறப்படுவது தொடர்பில் நிச்சயமற்ற தன்மை காணப்பட்டது.

**நிதி அதிகாரச் சட்டத்திற்கு மற்றும் துறைமுகங்கள் தொடர்பான அதிகாரசபை அதிகாரச் சட்டத்திற்கு இணங்காமை.**

நிதி அதிகாரச் சட்டத்திற்கு அமைய அரச கூட்டத்தாபனத்தில் ஏதேனும் ஒரு ஆண்டில் நிதி கூற்றுக்கு அமைய மிகை காணப்படுமாயின் அதிகார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறைப்புகள் செய்யப்பட்ட பின்னர் மீதியினை திரண்ட நிதியத்திற்கு வரவு வைத்தல் வேண்டும். அதே போன்று 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 30 ஆம் பிரிவுக்கு அமைய இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி மற்றும் அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள நிதி பங்களிப்பின் அடிப்படையில் வருடத்திற்கு 8 சதவீதத்தை ( ஆகக் குறைந்தது ரூபா. 607 மில்லியன்) விஞ்சாத பங்கிலாபத்தினை திரண்ட நிதியத்திற்கு செலுத்துதல் வேண்டும். 1979 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான 43 வருட காலத்தினுள் அதிகார சபையினால் இலாபம் ஈட்டப்பட்ட வருடங்களுக்கு மட்டும் திரண்ட மூலதனத்தின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய ஆகக் கூடிய பங்கிலாபம் ரூபா. 15,383, மில்லியனாக இருந்ததுடன் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது ரூபா. 1,585 மில்லியன் அதாவது 10 சதவீதம் மட்டுமே ஆகும். எவ்வாறு இருப்பினும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா. 39,433 மில்லியன் வரியின் பின்னரான இலாபத்தில் ரூபா. 985 மில்லியன் அதாவது 2 சதவீதம் மட்டுமே பங்கிலாபமாக திறைசேரிக்கு மாற்றப்பட்டு இருந்ததுடன் மீளாய்வாண்டுக்காக திறைசேரிக்கு எவ்வித தொகையும் மாற்றப்பட்டு இருக்கவில்லை.

**துறைமுகங்கள் அதிகாரச் சட்டத்திற்கு இணங்காமை.**

1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகார சபை சட்டத்தின் (எ) பகுதியின் 38 (1) (அ ) மற்றும் (ஆ ) ஆகிய பிரிவுகளுக்கு அமைய கைப்பற்றப்பட்ட அல்லது அரச உரிமையாக்கப்பட்ட பொருட்கள் சுங்கத் திணைக்களத்தினால் வெளியேற்றப்படுமாயின் அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய அனைத்து கட்டணங்களும் சுங்கத் திணைக்களத்தினால் அதிகார சபைக்கு செலுத்தப்படுதல் வேண்டும். எனினும் கைப்பற்றப்பட்ட 6 கொள்கலன்களுக்காக அதிகார சபையினால் அறவிடப்பட வேண்டிய ரூபா. 23 மில்லியன் தொகை அவ்வாறு அறவிடப்பட்டிருக்கவில்லை.

**முறையாக காணியினை ஒப்படைத்திருக்காமை.**

டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தையில் அமைந்துள்ள ரூபா. 629 மில்லியன் பெறுமதியான 2 ஏக்கர் 3 ரூட் 9.61 பேர்ச் கொண்ட காணியினை தாமரைக் கோபுரம் நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுபவிக்கும் உரிமையை

ஒப்படைத்திருந்த போதிலும் முறையான செயல்முறைகளுக்கு அமைய பெறுமதி ஆவணங்களில் இருந்து நீக்கி, உரிமை உறுதியின் மூலம் காணி ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

காலவாய் வளவு ( மேற்கு) கொழும்பு 01 பிரதான வீதி மற்றும் ஓல்கொட் மாவத்தையை எல்லையாக கொண்ட. ரூபா. 948 மில்லியன் பெறுமதியான 02 ஏக்கர் காணி சுங்கத் திணைக்களத்தின் கட்டட நிர்மாணிப்பிற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் சட்ட ரீதியாக அந்த இடத்தினை ஒப்படைப்பதற்கும் மற்றும் பெறுமதியினை ஏடுகளில் இருந்து நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சிரில் சீ பெரேரா மாவத்தையில் அமைந்துள்ள ரூபா. 84 மில்லியன் பெறுமதியான 01 ஏக்கர் 02 ரூட் 14.9 பேர்ச் கொண்ட காணியை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பெற்றுக் கொண்டிருந்த போதிலும் சட்டரீதியான பரிமாற்ற நடவடிக்கைகள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.

### சிக்கனமற்ற செலவினங்கள்

தென் பிரதேசத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் காலி துறைமுகத்தில் பல்கரும முடிவுமுனையினை நிர்மாணிப்பதற்காக 2006 மார்ச் 28 ஆம் திகதி இலங்கை அரசு மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கி (JBIC) என்பவற்றுக்கு இடையே கடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் காலி கோட்டை சார்ந்த இந்த நிர்மாணிப்பினை மேற்கொள்ளுவதற்கு யுனெஸ்கோவின் (UNESCO) அனுமதியினை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. அதற்காக 3 வருடத்திற்கும் அதிகமான காலம் கடந்திருந்தமையும், கடன் தொகை போதுமானதாக இல்லாமையும், கடன் கால எல்லையை நீடிக்காமையும் போன்ற காரணங்களின் அடிப்படையில் இந்த செயல் திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா. 423 மில்லியனான ஆலோசனைக் கட்டணம் அதிகாரசபையின் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுகளில் நடைபெறும் வேலைகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அந்த செலவு மூலதனம் அல்லது வருமான செலவாக இனம் காணப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த செயல் திட்டத்தினை நடைமுறைப்படுத்தாத காரணத்தால் மேலே செலவிடப்பட்ட தொகை பொருளாதார மற்ற செலவாக இருந்தது.

### இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்காத பங்கு உரிமை.

2010 ஆம் ஆண்டில் தெற்காசிய பிரவேச முடிவுமுனை (SAGT) கம்பனி ஆரம்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அதிகார சபையினால் வழங்கப்பட்டிருந்த மூன்று பாரம் தூக்கிகளின் பெறுமதி பரிமாற்றம் செய்வதற்கு ரூபா. 142 மில்லியன் பெறுமதிக்கு அந்த கம்பனியின் பங்குகளை அதிகாரசபைக்கு வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது என்பதாக காட்டப்பட்டிருந்தது. நிதிக் கூற்றுகளில் ஏனைய பெற்றுக்

கொள்ளப்பட வேண்டியவை என்பதன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த இந்த தொகை அல்லது பங்குகளின் உரிமை மீளாய்வு ஆண்டு இறுதி வரையில் அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருக்காதனுடன் குறித்த கம்பனியினால் பங்குகளுக்காக எந்தத் தொகையும் செலுத்தப்பட வேண்டியது இல்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக தெற்காசிய பிரவேச முடிவுமுனை கம்பனியுடன் ஒப்பந்தமிடப்பட்டு உடன்படிக்கை செய்யப்பட்டிருக்காத காரணத்தால் அதிகாரசபைக்கு குறித்த கம்பனியின் பங்குகள் கிடைப்பது நிச்சயமற்ற தன்மையில் காணப்பட்டது.

**நிர்வகிக்கும் கம்பனிக்குக் கொள்கை ஒன்றினைத் தயாரித்திருக்காமை.**

2021 நவம்பர் 16 ஆம் திகதி இடப்பட்ட தொழில் முயற்சி சுற்றறிக்கையுடன் வழங்கப்பட்டுள்ள தொழில் முயற்சிக்கான நியதிச்சட்ட நல்லாளுகை வழிகாட்டல்களுக்கு அமைய நிர்வகிக்கும் கம்பனிக்கு தாய் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிர்வகிக்கும் கம்பனி கொள்கை (Board approved subsidiary policy ) தயாரிக்கப்பட்டு அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையிடம் நிர்வகிக்கும் கம்பெனிக்கான அத்தகைய கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.

**இறக்குமதி ஏற்றுமதிப் பொருட்கள் போக்குவரத்து.**

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம், இலங்கையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி போக்குவரத்து செயல்பாடுகளில் வசதிகளை வழங்குதல் மற்றும் ஒத்துழைப்பை வழங்குவதற்காக தாபிக்கப்பட்டுள்ள முழுமையான அரசுக்கு சொந்தமான ஒரு தொழில் முயற்சியாகும். அரச துறையில் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் இறக்குமதிகள், பொருட்களைக் கொண்டு செல்லுதல், சுங்க அனுமதி மற்றும் ஏனைய சேவைகள், வேறு கப்பல் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளுதலை குறைத்து அந்த சேவைகளை அரசுக்கு சொந்தமாக உள்ள உள்நாட்டு ஓட்டத்தின் மூலம் மேற்கொண்டு அந்நிய செலாவணியை நாட்டில் தடுத்து வைக்கும் நோக்கத்தைக் கொண்டு இந்த நிறுவனத்திற்கு அரச அனுசரணைகளை வழங்கி உள்ளதுடன் அதற்காக My Ceylon Breeze மற்றும் My Ceylon Princess பெயரிலான இரண்டு கப்பல்கள் இந்த கம்பெனிக்கு சொந்தமாக உள்ளது. இந்த 02 கப்பல்கள் மூலம் போன்றே வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கப்பல்களின் மூலமும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் தனது செயல்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது. அவற்றுள் ஏழலயபந மற்றும் ஊாயசவநச ாசைந என்பன இரு முக்கிய வருமான வழிகள் ஆகும்.

Voyage (கூட்டுத்தாபனத்தின் கப்பல்கள் மூலம் கப்பல் பயணம் மேற்கொள்ளப்பட்டு வருமானம் ஈட்டுதல்)

Charter hire

நிறுவனம் மேலே குறிப்பிடப்பட்ட இரு படகுகளைக் கொள்வனவு செய்வதற்காக 2016 ஆம் ஆண்டில் அமெரிக்க டாலர் 70 மில்லியன் நடப்புக் கடன் பெற்றுக்

கொண்டுள்ளதுடன், 2018 பெப்ரவரி 3 ஆம் திகதி வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் மூலதன மீதி 15 ஆண்டுகள் தொடக்கம் 20 ஆண்டுகள் வரையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட கடன் நிபந்தனைகளுக்கு அமைய, கடன் மீள செலுத்துதல் அமெரிக்க டொலர் 2 மில்லியன் வீதமான இரண்டு ஆண்டு தவணை மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். 2022 மார்ச் 31 ஆம் திகதி வரையில் தவணையாக டொலர் 18 மில்லியன் செலுத்தப்பட வேண்டி இருந்த போதிலும், கம்பனி டொலர் 12 மில்லியன் மட்டுமே செலுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நிலுவை கடன் தவணைக டொலர் 6 மில்லியன் ஆகும்.

**கப்பல் கூட்டுத்தாபனத்தின் மூலம் பொருட்களைக் கொண்டு செல்லும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவடைதல்.**

2016 ஜனவரி 21 ஆம் திகதி இடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய மற்றும் 2005 மே 6 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 415 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய, அனைத்து அரச நிறுவன பொருட்களும் கம்பனியின் மூலமாகவே இறக்குமதி செய்யப்பட வேண்டும் என்பதுடன் அங்கு கம்பனி, அரச நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும் . எவ்வாறு இருப்பினும், 2018 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அரச துறையில் பொருட்களைக் கொண்டு செல்லும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையை பரீட்சிப்பு செய்யும் போது, கம்பெனியின் மூலம் பொருட்களைக் கொண்டு செல்லும் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவடைந்திருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது

| ஆண்டு | தடவைகள் |
|---|---|
| **2018** | 1981 |
| **2019** | 1790 |
| **2020** | 2172 |
| **2021** | 1533 |
| **2022** | 790 |

அட்டவணை 24 – கம்பனியின் மூலம் பொருட்கள் கொண்டு செல்லப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை.

# புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- வித்யாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டப நிர்மாணிப்புப் பலவீனங்களினால் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளமை.
- பொருளாதார நெருக்கடிகளைக் கொண்ட அறநெறி பாடசாலைகளுக்கு நிலையான கட்டடங்களை நிர்மாணிக்கும் செயல் திட்டத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டமை.
- பொருளாதார நெருக்கடிகளைக் கொண்ட அறநெறி பாடசாலைகளுக்கு நிலையான கட்டடங்களை நிர்மாணிக்கும் செயல் திட்டத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டமை.
- தம்பதிவ யாத்திரிகர்களுக்கு வசதிகளை வழங்குதல் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை.

# புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் துறை

2022 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவலக அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள அமைச்சுக்கள், 08 திணைக்களங்கள் மற்றும் 11 நியதிச் சட்ட சபைகள் ∴ நிறுவனங்களினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் மற்றும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டி இருந்ததுடன் வருடத்தினுள் மேற்கொள்ளப்படும் அமைச்சுக்களுக்கு உரிய கடமைப் பொறுப்பு திருத்தங்களின் பின்னர் உள்ள அமைச்சு கலைக்கப்பட்டு 09 திணைக்களங்கள் மற்றும் 10 நியதிச் சட்ட சபைகள் ∴ நிறுவனங்கள் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழ் காணப்பட்டது.

- கஷ்டப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள விகாரைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு “ சசுன் உதாவ” தேசிய வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.

- தேசிய பாரம்பரியத்தை பாதுகாப்பதற்குத் தேவையான சட்ட கட்டளைகளைப் பொருத்தமான வகையில் திருத்தி அமைத்தல்.

- மத்திய கலாசார நிதியம் தொடர்பான முழுமையான ஆய்வொன்றை மேற்கொண்டு அதனை முழுமையாக மீளமைப்பு செய்வதற்குக் கொள்கை ரீதியான அடிப்படையைத் தயாரித்தல்.

- ஜனாதிபதி செயலாற்றுகை படையணி மற்றும் இணைந்த தொல்பொருள் பாரம்பரிய முகாமைத்துவத்திற்குத் தேவையான கொள்கை ரீதியான மற்றும் சட்ட ரீதியான பின்புலத்தை தயாரித்தல்.
- அனைத்து சமயங்களுக்கும் உரிய டிஜிட்டல் தொல்லியல் கலைக்களஞ்சியத்தை உருவாக்குதல்.
- தேசிய பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காகக் காணப்படும் நிறுவனங்களின் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டத்தினை செயல்படுத்துதல்.

- அச்சிடப்பட்ட ஆக்கங்கள், நாடகம், சினிமா, சித்திரம் மற்றும் சிற்பம், இசை மற்றும் நடன தொழில்களை மேம்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல்.

- உள்நாட்டை முன்னிலைப்படுத்தும் ஆக்கங்களுக்கான பதிப்புரிமை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச உடன்படிக்கைக்கு அமைய முறையான பொறிமுறையினை அறிமுகப்படுத்துதல்.


- முழுமையான நாடக அரங்கினை தாபித்தல் மற்றும் கலைஞர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வேலைத் திட்டத்தினை தாபிப்பதற்கு நிறுவன ரீதியான அமைப்பு ஒன்றை தயாரித்தல்.

- கலைப் படைப்புக்களைப் பாதுகாத்தல் மற்றும் கண்காட்சிக்காக விசேட வசதிகளை ஏற்படுத்துதல்.

- பாரம்பரிய மற்றும் நவீன நாட்டிய கலைஞர்களின் படைப்புக்களைக் காட்சிப்படுத்தும் இடங்களை பெற்றுக் கொடுத்தல் மற்றும் சித்திரம் மற்றும் சிற்பக் கலைஞர்களுக்கு தமது படைப்புகளை விற்பனை செய்வதற்கு சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலா பயணிகளை கவரும் தலங்களில் இடவசதி பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டங்களை சுற்றுலா அமைச்சுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளுதல் .

- கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் மரபுரிமை முகாமைத்துவத்திற்கான ஜனாதிபதி செயலாற்றுகை படையணியுடன் ஒருங்கிணைதல்.

2022 ஆம் ஆண்டில் மேலே கூறப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள 09 திணைக்களங்களுக்கு மொத்தமாக ரூபா. 6,918 மில்லியன் நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரையில் அதில் ரூபா. 5,983 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு அமைய ரூபா. 935 மில்லியன் நிதி பயன்படுத்தப்படாது மீதியாகக் காணப்பட்டது.




| | புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவலர்கள் அமைச்சு | பௌத்த நடவடிக்கைகள் தொடர்பான திணைக்களம் | முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் | கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம் | இந்து சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் திணைக்களம் | கலாச்சார அலுவல்கள் திணைக்களம் | தேசிய நூதனசாலை திணைக்களம் | தேசிய சுவடிகள் காப்பக திணைக்களம் | தொல்பொருளியல் திணைக்களம் | பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகர நிதி ஏற்பாடு | 0 | 0 | 153 | 183 | 247 | 875 | 447 | 281 | 0 | 76 | 0 |
| செலவு | 0 | 0 | 122 | 168 | 225 | 747 | 329 | 191 | 0 | 71 | 0 |
| மீதி | 228 | 96 | 31 | 15 | 22 | 128 | 118 | 90 | 202 | 5 | 935 |

வரைபடம் : 37 வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் அளவும் உள்ளபடியான செலவினமும்

மூலம் : 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களினால் மேலே குறிப்பிடப்பட்ட பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புகளின் போது வெளிப்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கம் செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

**வித்யாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டப நிர்மாணிப்புப் பலவீனங்களினால் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளமை.**

2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2017 செப்டம்பர 30 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு நியமிக்கப்பட்டிருந்த வித்தியாலங்கார சர்வதேச பௌத்த மாநாட்டு மண்டபம 05 கட்டங்கள் வரையில் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக 2021 திசெம்பர 31 ஆம் திகதி வரையில் ரூபா. 1,246 மில்லியன் மொத்த செலவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் கட்டடத்தின் அத்திவாரத்தில் காணப்பட்ட குறைபாடு காரணமாக பிரதான கட்டடத்திற்கு சமனாக முன்பக்கம் மற்றும் பின்பக்க படிக்கட்டுகள் அமிழ்திருத்தல், டயில்கள் கழன்று நுழைவு படிக்கட்டுகள் மற்றும் இணைந்த சுவர்கள் வெடித்து இருத்தல், கட்டடத்தின் அதி உயர் தளத்தில் லிண்டல்களில் பூச்சு அடுக்குகள் கழன்று இருத்தல், கட்டடத்தினுள் வெளியிலிருந்து நீர் கசிவு மூலம் மத்திய குளிரூட்டல் ஒழுங்கமைப்புடன் கூடிய அறையில் மற்றும் நீர் தாங்கி அமைக்கப்பட்டுள்ள இடத்தில் நீர் தேங்கி இருத்தல் மற்றும் கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த தீயணைப்பு உபகரணங்கள் 2019 நவம்பர் 10 ஆண்டுகள் காலாவதி அடைந்து இருந்ததனால் 2022 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட முடியாத நிலைமையில் காணப்பட்டது.

**பொருளாதார நெருக்கடிகளைக் கொண்ட அறநெறி பாடசாலைகளுக்கு நிலையான கட்டடங்களை நிர்மாணிக்கும் செயல் திட்டத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டமை.**

மத்திய கலாச்சார நிதியத்தினால், பொருளாதார நெருக்கடிகளைக் கொண்ட அறநெறி பாடசாலைகளுக்கு 367 நிலையான கட்டடங்களை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனத்தின் மூலம் நிர்மாணிப்பதற்கு அமைச்சரவையின் தழுவு அங்கீகாரத்தை எதிர்பார்த்து இருந்த போதிலும் அமைச்சரவையின் அனுமதி இன்ற 2023 மே 31 ஆம் திகதி ரூபா. 872 மில்லியன் செலுத்தி 298 அறநெறி பாடசாலை கட்டடங்களின் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. தொழில்நுட்பக் குழுவின் அங்கீகரிக்கப்பட்ட விலைக்கு அமைய மொத்த ஒப்பந்த பெறுமதி ரூபா. 1,175 மில்லியமாக இருந்ததுடன், பௌதீக முன்னேற்றத்திற்கு அமைய செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா. 872 மில்லியன் ஆகும். அதற்கு அமைய, 367 கட்டடங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாணிப்புப் பணிகள் பூர்த்தி

செய்யப்பட்ட கட்டடங்களின் எண்ணிக்கை 131 ஆகும்.

### ஜோன் த சில்வா ஞாபகார்த்த அரங்கத்தின் திருத்த வேலை நடவடிக்கைகளை நிறைவு செய்ய முடியாமை.

ஜோன் த சில்வா அரங்கத்தினை திருத்துவதற்கான இரண்டாம் கட்ட நடவடிக்கைகளுக்கு ரூபா. 1,567 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு இருந்தது. 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மொத்த ஒப்பந்த தொகையில் 20 சதவீதமான ரூபா. 311 மில்லியன் முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் அத்தினம் வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிர்மாணிப்பின் அளவு ரூபா. 86 மில்லியனுக்கு சமமான அளவிலாகும். அரங்கத்தின் திருத்த வேலை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2022 திசெம்பர் 09 ஆம் திகதி கலாச்சார அலுவலர்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டி இருந்த போதிலும், 2023 ஏப்ரல் 20 ஆம் திகதி வரையிலும் திருத்த வேலை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.

### தம்பதிவ யாத்திரிகர்களுக்கு வசதிகளை வழங்குதல் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை.

தம்பதிவ யாத்திரை அமைப்பாளர்கள் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சில் பதிவு செய்யப்படுவதன் மூலம் யாத்திரையில் ஈடுபடுவோருக்கு இலவச விசா பெற்றுக் கொடுக்கும் வசதி, கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ளும் வசதி மற்றும் யாத்திரிகர்களுக்கு அதிக பாதுகாப்பை வழங்குதல் போன்ற சந்தர்ப்பங்கள் உரித்தாகும் எனினும் அந்த வசதிகள் தொடர்பில் அமைப்பாளர்கள் மற்றும் யாத்திரிகர்களை தெளிவுபடுத்தும் முறையான வேலைத் திட்டம் அமைச்சில் செயல்படுத்தப்பட்டிருக்காததுடன் இலவச விசா வசதிகளை பெற்றுக் கொடுப்பதன் மூலம் செலவு குறைவடையும் பலனை யாத்திரிகள் பெற்றுக் கொள்கின்றனரா என்பது தொடர்பில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# வனவள,வனவிலங்குகள் மற்றும் சுற்றாடல் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- வனவிலங்குகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு
    - ஆகக்குறைந்த கேள்வியினைக் கவனத்திற்கொள்ளாமல் கட்டிடமொன்றை வாடகைக்கு பெறல்
- வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களம்
    - முத்துராஜவெல சுற்றாடல் முறைமை
    - யானை மனித மோதல்
- தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம்
    - பின்னவல மிருகக் காட்சிசாலையில் குரங்குகள் காட்சிப்படுத்தாமை.
    - நிர்மாணங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டமை
- வன பாதுகாப்புத் திணைக்களம்
    - நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுதல்
    - காடுகளில் இருந்து கிடைக்கின்ற வருமானம் குறைவடைந்தமை
    - அறவிட வேண்டிய பணம் உரியவாறு அறவிடப்படாமை.
    - சிறிய அளவிலான மின் வலுக்கூடத்தை நடாத்திச் செல்வதற்காக வழங்கப்பட்ட காணியில் இருந்து அறவிட வேண்டிய பணம் அறவிடப்படாமை.
    - வனப் பயிர்ச்செய்கைக்காக கன்றுகளை நாட்டுதல்.
    - வாகனங்களின் பௌதீக இருப்பு உறுதிப்படுத்தப்படாமை
    - வன குற்றங்களை குறைப்பதற்கு முடியாதிருந்தமை.
- அரச மரக் கூட்டுத்தாபனம்
    - தளபாடப் பொருள் இருப்பு விளைவற்றுக் காணப்பட்டமை.
    - கடன் விற்பனைக்காக பெற வேண்டிய பணம்
    - மரங்களை மாற்றத்திற்கு உட்படுத்தும் போதான விரயங்கள்
- வன விலங்குகள் பாதுகாப்பு நிதியம்
    - தேசிய ஒதுக்கப் பிரதேசங்களுக்காக நுழைவுக் கட்டணத்தை அமுல்படுத்துதல் தாமதமடைந்தமையினால் வருமானம் இழக்கப்பட்டமை.


- **மிருகக் காட்சிசாலை நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிதியம்**
    - **விலங்குகள் நலன்புரி உபாய வழிகளுக்கு இணங்குதல்.**
    - **விலங்குகள் தனிமைப்படுத்தல் நிலையமொன்று ஸதாபிக்கப்படாமை**
    - **சுற்றாடல் முறைமையினைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம்**
- **மத்திய சுற்றாடல் அதிகார சபை**
    - **சுற்றாடல் பாதுகாப்பு பிரதேச முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்படாமை**
    - **கழிவுகளின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்திட்டம்**
    - **செயற்திட்ட நிதி ஏற்பாடுகளில் சேமிக்கப்பட்ட பணத்தை மீண்டும் திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை.**
    - **விளைவற்று உபகரணங்கள் கொளவ்னவு செய்தல்**
- **சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை**
    - **கப்பல் ஒன்று விபத்திற்கு உட்பட்மை தொடர்பாக இழப்பீட்டை மீளளிப்புச் செய்யாமை**
- **கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம்**
    - **கட்டணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தமை**
    - **கடைகளை அகற்றும் கட்டளை விநியோகிக்கப்பட்ட அனுமதியற்ற நிர்மாணங்களுக்குரிய நடவடிக்கைகளை எடுக்காதிருந்தமை**
- **கரையோரப் பாதுகாப்பு பரிசு நிதியம்**
    - **பரிசு நிதியத்தை இனங்காண்பதற்காக சரியான திட்ட முறைமையொன்று காணப்படாமை.**

# வனவள,வனவிலங்குகள் மற்றும் சுற்றாடல் துறை

வனவளங்கள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாப்பதை நிலைபேறான நோக்காகக் கொண்டு “வனவிலங்குகள் மற்றும் வனங்களைப் பாதுகாப்பதன் மூலம் உயிரியல் பல்வகைமையினை வளர்க்கும் நோக்கில் உள்நாட்டு தாவரங்களைப் பாதுகாத்தல் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு விலங்குகளைப் பாதுகாத்தலும், நிலைபேறான மரக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக கொள்கை வழங்கல், குறித்த நிறுவனங்களை தொடர்புபடுத்துதல், செயற்படுத்துதல் மற்றும் செயற்பாட்டிற்கு கொண்டுவருவதற்கான தலைமைத்துவத்தை வழங்குதல்” என்ற பணிக்கூற்றுக்களை நிறைவேற்றுவதற்காக வனவிலங்குகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள மூன்று திணைக்களங்கள், நிதியச்சட்ட நிறுவனம், மூன்று நியதிச் சட்ட நிதியங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் என்பன காணப்பட்டதுடன் அமைச்சினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- அரசாங்கத்தின் மூலம் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஏனைய தேசிய கொள்கைகளின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்ட “வனவிலங்குகளை பாதுகாத்தல் மற்றும் வனப்பாதுகாப்பு” ஏற்படுத்துவதற்காக குறித்துரைத்த சட்டம் மற்றும் கட்டளைகளுக்கு இணங்க வனவிலங்குகள் மற்றும் வனப்பாதுகாப்பு விடயங்களுக்குரிய கொள்கைகளை வழங்கல்.
- தேசிய வரவு செலவுத் திட்டம், அரசாங்க முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் கீழ் உள்ள செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- அமைச்சின் விடயப்பரப்பிற்கு கீழ் உள்ள நிறுவனங்களின் விடயங்கள், பணிகள் மற்றும் அதற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வழங்கல், அமுல்படுத்துதல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பிடுதல்.

2022 ஆம் ஆண்டில் மேலே கூறப்பட்ட கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைசசிற்கு 03 திணைக்களங்களுக்கு ரூபா. 7,921 மில்லியன் நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரையில் அதில் ரூபா. 7,296 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா. 625 மில்லியன் நிதி பயன்படுத்தப்படாது மீதியாகக் காணப்பட்டது. விபரம் வரைபடம் 39 இல் காட்டப்பட்டுள்ளது.




| | වනජීවී හා වන සම්පත් සංරක්ෂණ අමාත්‍යාංශය | වනජීවී සංරක්ෂණ දෙපාර්තමේන්තුව | ජාතික සත්වෝද්‍යාන දෙපාර්තමේන්තුව | වන සංරක්ෂණ දෙපාර්තමේන්තුව | එකතුව |
|---|---|---|---|---|---|
| ප්‍රතිපාදනය | 2707 | 2256 | 749 | 2209 | 7921 |
| ප්‍රතිපාදන උපයෝජනය | 2329 | 2162 | 691 | 2114 | 7296 |
| ඉතිරිය | 378 | 94 | 58 | 95 | 625 |

வரைபடம் : 38 வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின்அளவும் உள்ளபடியான செலவினமும்

மூலம் : 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

மேற்கூறப்பட்ட பணிகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுதல் தொடர்பான தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான மற்றும் பொருண்மையான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

**வனவிலங்குகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு**

**ஆகக்குறைந்த கேள்வியினைக் கவனத்திற்கொள்ளாமல் கட்டிடமொன்றை வாடகைக்கு பெறல்**

2016 யூன் 01 ஆம் திகதி முதல் ஆறு மாடிகளையுடைய தனியார் கட்டிடமொன்றில் சதுர அடி 22,522 பரப்பளவில் வனவிலங்குகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சை நடாத்திச் செல்வதற்காக 2021 யூன் மாதம் 01 ஆம் திகதி முதல் 2023 மே 31 ஆம் திகதி வரை ரூபா 140 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக கோரப்பட்ட கூறுவிலையின் பிரகாரம் அதற்கு அருகில் அமைந்துள்ள கட்டிடமொன்றிலிருந்து அதனை விட ரூபா 18.6 மில்லியன் குறைவாகப் பெறப்பட்டிருந்த கூறுவிலையைக் கவனத்திற் கொள்ளாமல் மற்றும் அரசாங்கத்தின் மாதாந்த மதிப்பீடான ரூபா 8 மில்லியனைக் கவனத்திற் கொள்ளாமல் கட்டிடம் வாடகைக்கு பெறப்பட்டிருந்ததுடன் அரசாங்கத்தின் கட்டிடமொன்றிலிருந்து இட வசதிகள் ஒதுக்கிக் கொள்வதற்கும் போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களம்**

**முத்துராஜவெல சுற்றாடல் முறைமை**

முத்துராஜவல சுற்றாடல் முறைமையில் 1,285 ஹெக்டேயர் நிலப் பகுதியொன்று 1996 இன் 947.:.13 இலக்க வர்த்தமானியின் மூலம் சரணாலயமாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட போதிலும்

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த சரணாலயத்தின் எல்லையை அடையாளப்படுத்துவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**யானை மனித மோதல்**

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது மின்சாரவேலி நிர்மாணிப்பதற்காக ரூபா 1,251 மில்லியன் தொகையும், அதனைப் பராமரிப்பதற்காக ரூபா 1,031 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிர்மாணிக்கப்பட்ட மொத்த மின்சார வேலிகளின் நீள அளவு 4,756 கிலோ மீற்றர் ஆகும். எனினும் கடந்த 05 வருடங்களில் ஏற்பட்ட யானை மரணங்கள் மற்றும் மனித மரணங்கள், ஆதனங்களின் இழப்புக்கள் மற்றும் உடலியல் ரீதியான இழப்புக்களை கவனத்திற் கொள்ளும் போது மின்சார வேலி நிர்மாணிக்கப்பட்ட போதும் யானை மனித மோதல்கள் குறைந்திருந்தமை அவதானிக்கப்படவில்லை. விபரம் பின்வருமாறு.

| ஆண்டு | யானை மரணம் | மனித மரணங்கள் | ஆதனங்களின் இழப்பு | உடலியல் ரீதியான பாதிப்புக்கள் |
|---|---|---|---|---|
| **2018** | 319 | 96 | *838 | *37 |
| **2019** | 407 | 122 | *2,148 | *145 |
| **2020** | 327 | 113 | *850 | *75 |
| **2021** | 375 | 142 | *1,326 | *58 |
| **2022** | 439 | 145 | *2668 | *179 |
| **மொத்தம்** | **1,867** | **618** | **7,830** | **494** |

அட்டவணை: 25 :

* மாவட்ட அலுவலகத்தின் மூலம் இழப்பீடு செலுத்தப்படுகின்றமையால் திணைக்களத்திடம் முழுமையான தகவல்களும் காணப்படவில்லை.

## தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம்

**பின்னவல மிருகக் காட்சிசாலையில் குரங்குகள் காட்சிப்படுத்தாமை.**

2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பின்னவல மிருகக் காட்சிசாலையில் குரங்குகள் தீவொன்றை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டு வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் அந்த சூழலில் விலங்குகள் (குரங்குகள்) விடுவிக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

**நிர்மாணங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டமை**

தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தால் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்துடன் ரூபா 176 மில்லியன் தொகையில் 06 நிர்மாண

செயற்திட்டங்களுக்காக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி அந்த நிறுவனம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் இடைநடுவில் நிறுத்தப்பட்டதுடன் அந்த செயற்திட்டம் வேறு ஒப்பந்தகாரருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக செலவிடப்பட்ட ரூபா 70 மில்லியன் பயனற்ற செலவினத்திற்குட்பட்டிருந்தது. அதில் 04 செயற்திட்டங்களுக்காக தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணம் ரூபா 14 மில்லியனும் அறவிட வேண்டி இருந்தது.

**வன பாதுகாப்புத் திணைக்களம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுதல்**

“காடுகளை பாதுகாத்தல் மற்றும் மீளமைத்தல்” மற்றும் “நிலப்பரப்பு சூழல் முறைமை மற்றும் நிலைபேறான முகாமைத்துவம் செய்து காடுகளைப் பாதுகாத்தல், மீளமைத்தல் மற்றும் நிலைபேறான பயன்பாட்டை மேம்படுத்துதல், பாலைவனமாக்குவதற்கு எதிராக நடவடிக்கை எடுத்தல், உயிரியல் பல்வகைமைக்கான இழப்பை தடுத்தல்” ஆக 2020 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்தால் இனங்காணப்பட்டிருந்த பிரதான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 02 இன் கீழ் 2030 ஆம் ஆண்டு வரையில் வனங்களின் மேவுகை 32 சதவீதம் வரை அதிகரித்தல் இலக்காகக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டில் செயலாற்றல் தொடர்பான தகவல்கள் மொத்த வன அளவு மற்றும் அதனுடன் ஒப்பிடும் போது நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்த கொள்ளும் ஒட்டுமொத்த செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**காடுகளில் இருந்து கிடைக்கின்ற வருமானம் குறைவடைந்தமை**

திணைக்கள முகாமைத்துவத்தின் கீழ் காணப்படுகின்ற காணிகள் அமைந்துள்ள கருங்கல் உடைத்து அகற்றும் போது 2009 மே 06 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட்ட கட்டணம், நியாயமான காரணம் இல்லாமல் 50 சதவீதத்தால் குறைப்பதற்கு 2020 நவம்பர் 13 ஆம் திகதிய ஒன்றிணைந்த அமைச்சரவை குறிப்பிற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டணம் குறைந்தமையின் காரணமாக 05 மாவட்ட வன அலுவலகங்களில் மாத்திரம் கருங்கல் உடைத்தலில் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 18 மில்லியன் ஆகும்.

**அறவிட வேண்டிய பணம் உரியவாறு அறவிடப்படாமை.**

தனியார் கம்பனி ஒன்றால் நடாத்திச் செல்லப்பட்ட கருங்கல் குவாரி 2013 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான கால எல்லையினை விஞ்சி அகலப்பட்ட கல்கியூப் 541,471 இற்காக திணைக்களத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 133 மில்லியன் தொகை எதிர்வரும் 03 வருடங்களில் மாதாந்த தவணையாக

அறவிடுவதற்கு 2020 ஒக்டோபர் மாதம் வழங்கப்பட்டிருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் படி 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிட வேண்டியிருந்த 78 மில்லியனில் ரூபா 66 மில்லியன் அறவிடப்படாதிருந்ததுடன் ரூபா 5 மில்லியன் மதிப்பிழந்த காசோலைகளும் அதனிடையே இருந்தது.

**சிறிய அளவிலான மின் வலுக்கூடத்தை நடாத்திச் செல்வதற்காக வழங்கப்பட்ட காணியில் இருந்து அறவிட வேண்டிய பணம் அறவிடப்படாமை.**

சிறிய அளவிலான மின் வலுக்கூடத்தை நடாத்திச் செல்வதற்காக வலுச்சக்தி தனியார் கம்பனிக்கு 2015 பெப்ரவரி மாதம் முதல் 200 பேர்ச் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் பேர்ஜ் ஒன்றிற்காக ஆண்டொன்றிற்கு ரூபா 5,000 வீதம் முதலாவது ஆண்டிற்காக மாத்திரம் ரூபா ஒரு மில்லியன் வாடகைப் பணம் பெறப்பட்டு அதன் பின்னர் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த கம்பனியால் உடன்படிக்கை செய்யப்பட்ட 200 பேர்ச்சிற்கு மேலதிகமாக மேலும் 523.78 பேர்ச் அனுமதியற்ற வகையில் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 2023 பெப்ரவரி 18 ஆம் திகதி வரையில் 723.78 பேர்ச்சிற்காக 08 வருடங்களுக்காக அக் கம்பனியிலிருந்து அறவிட வேண்டிய பணம் ரூபா 40 மில்லியன் ஆகும்.

**வனப் பயிர்ச்செய்கைக்காக கன்றுகளை நாட்டுதல்.**

குறித்துரைத்த காலப் பகுதியில் கன்றுகளை நட்டுவதற்கோ அல்லது கன்றுகளைப் பகிர்ந்தளிப்பதற்கோ திட்டமிடப்பட்ட வேலைத்திட்டமொன்று காணப்படாமையின் காரணமாக முல்லைத்தீவில் அமைந்துள்ள 02 கன்று நாற்று மேடைகளில் 2019 ஆம் ஆண்டு முதல் நடப்பட்ட 197,736 கன்றுகளில் அநேகமானவை மற்றும் கல்கமுவ வன அலுவலகத்திற்கு இணைந்ததான மெதகம கன்று நாற்றுமேடையில் இருந்து 2022 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னர் உற்பத்தி செய்யப்பட்ட 67,375 கன்றுகளில் 6,748 கன்றுகளும், 2019 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம் (நுளுஊயுஆ) ரூபா 71 மில்லியன் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் நட்டப்பட்டு பராமரித்துச் செல்லப்பட்ட கன்றுகளில் கனிசமான அளவும் இறந்திருந்ததுடன் மேலும் கனிசமான கன்றுகளின் அளவு அசாதாரணமாக வளர்ச்சியடைந்திருந்தது.

**வாகனங்களின் பௌதீக இருப்பு உறுதிப்படுத்தப்படாமை**

திணைக்களத்திற்கு உரிய வாகனத்தொகுதி பௌதீகரீதியில் மெய்மையாய்வு செய்யப்படாதிருந்ததுடன் 711 வாகனங்கள் காணப்பட்டமைக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அதில் 288 வானகளின் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படா மையினால் அவற்றின் பௌதீக இருப்பை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**வன குற்றங்களை குறைப்பதற்கு முடியாதிருந்தமை.**

வனக் குற்றங்களைக் குறைப்பதற்கு முடியாதிருந்தமை, காணப்படுகின்ற

வழக்குகளை செயற்திறனாக பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமை, நிறைவடைந்துள்ள வழக்குகளுக்குரிய தண்டப்பணத்தை உரிய பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை போன்ற விடயங்களின் காரணமாக 2017 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தில் முல்லைத்தீவு வன அலுவலகம் மற்றும் ஒலுமடு வன அலுவலகத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற ஒதுக்கக் காட்டுப் பகுதியில் அனுமதியற்ற வகையில் வெளிசாக்குதல், மரம் வெட்டுதல், மரக் கடத்தல் போன்ற குற்றங்கள் முறையே 929 மற்றும் 491 இடம்பெற்றிருந்தது. அவ்வாறே குருநாகல், கல்கமுவ, மெல்சிரிபுர, குளியாப்பிட்டி மற்றும் மாஹோா போன்ற வனப் பகுதியின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற ஒதுக்க வனாந்தரங்களில் 253 ஹெக்டேயருக்கு ஏற்பட்ட இழப்பு தொடர்பாக வன குற்றங்கள் கணிசமான அளவில் காணப்பட்டதுடன் வழக்குத் தீர்ப்புகள் மந்தகதியில் இருந்தமையினால் அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய கட்டணங்களை குறித்துரைத்த காலப் பகுதியில் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. வன குற்றங்களின் மரங்களும் கணிசமான அளவில் குவித்துவைக்கப்பட்டிருந்தமையால் உக்கும் நிலையில் காணப்பட்டது.

## அரச மரக் கூட்டுத்தாபனம்

### தளபாடப் பொருள் இருப்பு விளைவற்றுக் காணப்பட்டமை.

2012 ஆம் ஆண்டு முதல் 2022 யூலை 31 ஆந் திகதி வரை உற்பத்தி செய்யப்பட்ட கிரயம் ரூபா 68 மில்லியன் ஆன மிகையான தளபாடப் பொருட்களின் இருப்பும், 2022 ஆம் ஆண்டில் எந்தவொரு விற்பனையும் செய்யப்படாதிருந்த ரூபா 7 மில்லியன் பெறுமதியான தளபாடப் பொருட்களில் 32 விடயங்கள் மற்றும் மிகவும் மெதுவாக விற்பனை செய்யப்படுகின்ற 03 மில்லியன் பெறுமதியான தளபாடப் பொருட்களில் 12 விடயங்களும், 2012 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை உற்பத்தி செய்யப்பட்டிருந்த போதும் மெருகூட்டப்படாத பெறுமதி ரூபா 20 மில்லியன் ஆன தளபாடப் பொருட்களின் இருப்பும் பூஸ்ஸ காட்சிக்கூட களஞ்சியத்திலும், இயந்திர கூடத்திலும் காணப்பட்டது.

### கடன் விற்பனைக்காக பெற வேண்டிய பணம்

கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட மரங்கள் மற்றும் மரம் சார்ந்த தளபாடப் பொருட்களுக்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய பணம் ரூபா 908.87 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான நிலுவையான கடன் ரூபா 430,86 மில்லியன் உம், 04 வருடங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட கடன் ரூபா 59.85 மில்லியனும் ஆகும். கடன் பணம் செலுத்தாத 24 நிறுவனங்களுக்கு மீண்டும் மீண்டும் கடனுக்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டதன் காரணமாக அந்த நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய கடன் பணம் ரூபா 771 மில்லியன் ஆகும்.

**மரங்களை மாற்றத்திற்கு உட்படுத்தும் போதான விரயங்கள்**

அம்பாறை மரம் அறுக்கும் ஆலையில் 2019 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தில் மாற்றம் செய்யும் போது விரயத்திற்கு உட்பட்ட கனடெசி மீற்றர் 1,706,529 அதாவது 49 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அந்தக் காலத்தில் சில பணிகளுக்காக தேவையினை விஞ்சி 32 சதவீதத்திற்கும் அதிகமான கனடெசி மீற்றர் 454,496 மர அளவு விநியோகிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த காலத்தில் அறுக்கப்பட்ட ரூபா 295 மில்லியன் பெறுமதியான கனடெசி மீற்றர் 3,718,422 ஆன கணிசமான மர இருப்பை செயற்திறனாகப் பயன்படுத்துவதற்கு பொருத்தமான வேலைத்துட்டம் காணப்படாமையினால் குவித்துவைக்கப் பட்டிருந்தது.

**வன விலங்குகள் பாதுகாப்பு நிதியம்**

**தேசிய ஒதுக்கப் பிரதேசங்களுக்காக நுழைவுக் கட்டணத்தை அமுல்படுத்துதல் தாமதமடைந்தமையினால் வருமானம் இழக்கப்பட்டமை.**

வன விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற தேசிய ஒதுக்கப் பிரதேசங்களுக்காக உள்உழைவுக் கட்டணம் 2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய இலக்கம் 2292/11 என்ற வர்த்தமானியின் மூலம் அத்திகதியில் இருந்து திருத்தப்பட்டிருந்த போதிலும் அந்த கட்டணத் திருத்தம் 2022 செப்டெம்பர் மாதம் 02 ஆம் திகதி முதல் அறவிடப்பட்டு அதுவரை பழைய கட்டணம் அறவிடப்பட்டதன் காரணமாக யால வடக்கு கல்கே நுழைவு மற்றும் யால பலட்டுப்பான நுழைவு என்ற யால தேசிய பூங்கா நுழைவு இரண்டிலும் மற்றும் குமண, லாகுகல, மாதுறுஓயா, கல்ஓய, வில்பத்து, கெல்வெஸ்லேண்ட் என்ற 06 தேசிய பூங்காக்களில் அந்த காலத்திற்குரிய ரூபா 16,844,205 வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

**மிருகக் காட்சிசாலை நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிதியம்**

**விலங்குகள் நலன்புரி உபாய வழிகளுக்கு இணங்குதல்.**

உலக மிருகக்காட்சிசாலைகள் மற்றும் மீன் வளங்கள் தொடர்பான சங்கங்களினால் 2015 ஆம் ஆண்டின் போது நாளதுவரையாக்கப்பட்ட விலங்குகள் நலன்புரி உபாய வழிகளை உள்ளடக்கிய மூலதர்ம முறைமையின் ஐஐ ஆம் பந்தியின் பிரகாரம் 13 வகையான விலங்கு வகைகளுக்குரிய மரண பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் அதன் 03 ஆவது பந்தியின் பிரகாரம் மிருகக் காட்சிசாலைகளில் விலங்குகளுக்கு இயற்கையாக நடமாடுவதற்காக தேவையான சூழல் அமைக்க வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக 2022 திசெம்பர் 20 ஆம் திகதி வரையில் 15 தனிமையான விலங்குகளும், சோடிகள் இல்லாத 56 விலங்குகளும் மிருகக்காட்சிசாலையில் வசித்து வருகின்றது.

**விலங்குகள் தனிமைப்படுத்தல் நிலையமொன்று ஸ்தாபிக்கப்படாமை**

நோய்கள் தொற்றிய விலங்குகள் ஆரோக்கியமான விலங்குகளிலிருந்து விலக்கப்பட்டு தனிமைப்படுத்துவதற்காக தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் தனிமைப்படுத்தல் நிலையம் ஒன்று காணப்படாதிருந்ததுடன் கோணபலயில்

நிர்மாணிக்கப்படுகின்ற தனிமைப்படுத்தல் நிலையத்தின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக 2022 ஆம் ஆண்டில் 02 மாதங்களான குறுகியகாலத்தில் வெள்ளை மயில் மற்றும் நான்கு மயில் குஞ்சுகள் தொற்றுநோயின் காரணமாக இறந்திருந்தது.

**சுற்றாடல் முறைமையினைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம்**

சுற்றாடல் முறைமைகளில் முகாமைத்துவத்தை அதிகரிப்பதன் மூலம் அந்த சுற்றாடல் முறைமையினைப் பாதுகாத்து அதன் மூலம் மக்களுக்கு நலன்களை கைப்பெற்றிக் கொள்ளும் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்த போதிலும் வாழ்வாதாரத்தை விருத்தி செய்தல் மற்றும் பாதுகாப்பதற்காக இயற்கை வள நிலைபேறானதாக பயன்படுத்துதல் மற்றும் யானை மனித சகவாழ்வை ஏற்படுத்துதல் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த கூறுகளுக்காக ரூபா 3,117 மில்லியன் ஆன 38 சதவீதமான குறைந்த நிதி ஏற்பாடும், நிறுவனத்தின் திறமை மற்றும் முதலீட்டு இயலளவை அதிகரிப்பதற்காக ரூபா 4,386 மில்லியன் அதாவது ஒட்டுமொத்த நிதி ஏற்பாடு 55 சதவீதமும் செலவிடப்பட்டிருந்தது.

**மத்திய சுற்றாடல் அதிகார சபை**

**சுற்றாடல் பாதுகாப்பு பிரதேச முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்படாமை**

1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (திருத்த) சட்டத்தின் பிரகாரம் வருடாந்த பாதுகாப்பு ஆலோசனை பௌதீக திட்டமிடல் வழங்கல் தொடர்பாக அதிகார சபைக்கு சொந்தமாக இருக்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் முத்துராஜவல சுற்றாடல் பாதுகாப்பு காட்சிக் கூடம், தலங்கம சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசம், கிரகரிவெவ சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசம், வளவத்த வத்துரான சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசம் மற்றும் பொல்கொட சுற்றாடல் பாதுகாப்பு பிரதேச முகாமைத்துவக் குழு தாபிக்கப்படாமையால் மனித செயற்பாடுகள் மற்றும் இயற்கை சம்பவங்கள் தொடர்பாக எழுந்த பிரச்சினைகளை தீர்த்து அந்த சுற்றாடல் வலயத்தை பாதுகாத்தல் சரியான பிரகாரம் மேற்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**கழிவுகளின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்திட்டம்**

தனியார் கம்பனி ஒன்றுடன் 2014 ஆகஸ்ட் 08 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் அடிப்படையில் கழிவுகளின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் செயற்திட்டத்தற்குரிய ஒப்பந்தத்திற்காக செயலாற்றல் காப்பீடும் பெற்றுக்கொள்ளப்படாமல் உடன்படிக்கைக்கு கைச்சாத்திடப்பட்டிருந்த போதும் இதுவரை செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாகவும் பிரச்சினையான நிலைமை காணப்பட்டது. அதன் பிரகாரம் செலவிடப்பட்ட ரூபா 64 மில்லியன் தொகையும் 2009 ஆம் ஆண்டின் போது பிலிசரு செயற்திட்டத்தின் மூலம் கூட்டுப்பசளை தளத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 13 மில்லியன் தொகையும், கழிவுப்

பொருட்களைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்ட இயந்திர பொறிமுறைகள் விளைவற்றுக் காணப்பட்டது.

**செயற்திட்ட நிதி ஏற்பாடுகளில் சேமிக்கப்பட்ட பணத்தை மீண்டும் திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை.**

பொதுத் திறைசேரியிலிருந்தும் மற்றும் வெளிநாட்டு உதவிகளிலிருந்தும் கிடைக்கப்பெற்ற செயற்திட்ட மானியங்களில் எஞ்சியிருந்தவை எதிர்வரும் 04 வருடங்கள் முதல் 09 வருடங்கள் வரையான காலம் சென்றுள்ள ரூபா 18.53 மில்லியன் மீளத் திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**விளைவற்று உபகரணங்கள் கொளவ்னவு செய்தல்**

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 3.58 மில்லியன் மற்றும் 8 மில்லியன் செலுத்தி கொள்வனவு செய்யப்பட்ட Dusk Track DRX Desktops Model 8553உபகரணம் மற்றும் Micro mate Instantal என்ற வகையின் பகுப்பாய்வு உபகரணங்கள் 02 குறித்துரைத்த காலத்தில் அமைச்சினால் ஒழுங்கு முறையாக மேற்கொள்ளாமையினால் 2022 ஆம் ஆண்டில் இறுதி வரையும் விளைவற்றுக் காணப்பட்டது.

**சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை**

**கப்பல் ஒன்று விபத்திற்கு உட்பட்மை தொடர்பாக இழப்பீட்டை மீளளிப்புச் செய்யாமை**

MV X Press Pearl கப்பல் விபத்திற்குட்பட்டதற்குரியதாக அதிகார சபையினால் செலவிடப்பட்ட செலவினம் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் செலவிடப்பட்ட செலவினங்களின் ஒரு பகுதியையும் உள்ளடக்கி 13 சந்தர்ப்பங்களின் போது மீளளிப்புச் செய்வதற்காக கப்பலின் பாதுகாப்பு கம்பனிக்கு அனுப்பப்பட்டு அ.டொலர் 48.41 மில்லியனால் மீளளிப்புச் செய்யப்பட்ட அளவு அ.டொலர் 6.72 மற்றும் 20.32 திரண்ட மில்லியன் ஆகும். கோரப்பட்டிருந்த அ.டொலர் 32.38 மதிப்பீடு செய்யப்பட்ட செலவினங்களாக இருந்தமை மற்றும் நிருவாக செலவினங்கள் 25 சதவீதம் உள்ளடக்கப்பட்டமையின் காரணமாக காப்புறுதிக் கம்பனியால் நிராகரிக்கப்பட்டிருந் தமையும் எதிர்காலத்தின் போது மீளளிப்பை மேற்கொள்ளாதிருப்பதற்கும் கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம்**

**கட்டணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தமை**

லங்கா மினரல் சேன்ட் லிமிட்டெட் நிறுவனத்திற்கு 2007 ஆம் ஆண்டு முதல் 2020 செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட 04

அனுமதிப் பத்திரங்கள் மற்றும் 2020 செப்டெம்பர் முதல் 2021 செப்டெம்பர் வரையான காலத்தில் விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் உரிய நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட மணல் கியூப் அளவினை விஞ்சி மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட அகல்வுகளில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 74.58 மில்லியன் கட்டணத்தை அறவிடுவதற்கு தவறி இருந்தது.

**கடைகளை அகற்றும் கட்டளை விநியோகிக்கப்பட்ட அனுமதியற்ற நிர்மாணங்களுக்குரிய நடவடிக்கைகளை எடுக்காதிருந்தமை.**

2012 முதல் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலத்தில் உடைத்து அகற்றும் கட்டளை இடப்பட்ட அனுமதியற்ற 2,228 நிர்மாணங்களில் 2,069 அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 13 மாவட்டங்களில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த இனங்காணப்பட்ட அனுமதியற்ற நிர்மாணங்கள் 861 இல் 255 இற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**கரையோரப் பாதுகாப்பு பரிசு நிதியம்**

**பரிசு நிதியத்தை இனங்காண்பதற்காக சரியான திட்ட முறைமையொன்று காணப்படாமை.**

நீதிமன்றத்தால் அறவிடப்படுகின்ற தண்டப்பணம், நிதியத்திற்கு அறவிடுவதற்கு உள்ள மற்றும் அவற்றுக்கு பரிசாக உரிய தரப்பினரை வழங்குவதற்காக மாவட்ட நீதவான் நீதிமன்றம், பொலீஸ் திணைக்களம் மற்றும் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்திற்கு இடையே தகவல் பரிமாற்றங்கள் உரிய முறையில் மேற்கொள்ளாமையினால் நீதிமன்றங்களிலிருந்து கிடைக்கவேண்டிய தண்டப்பணம் மற்றும் பரிசுகளை பெற்றுக்கொள்ள வேண்டிய நபர்களை இலகுவாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்வதற்கும், திறைசேரிக்கு அனுப்பப்படவேண்டிய 40 சதவீதமான தண்டப்பணம் அளவு உரிய நேரத்தில் அனுப்புவதற்கும் முடியாதிருந்தது.

# முதலீட்டு ஊக்குவிப்புத் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள்

- **இலங்கை முதலீட்டு சபை**
    - **சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காமை.**
    - **திறைசேரிக்கு மீண்டும் வழங்கப்பட வேண்டிய தொகையினைத் தீர்க்காமை.**
    - **குறை பயன்பாடுடைய வளாகம்**
    - **முதலீட்டு சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகை.**

# முதலீட்டு ஊக்குவிப்புத் துறை

பெரும்பாலும் இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் தனிநபர் வருமானத்தின் மெதுவான வளர்ச்சிக்கு காரணமாக உள்ளது மூலதன குறைபாடாகும். இந்தக் குறைபாட்டை தவிர்த்துக் கொள்வதற்காகப் பின்பற்ற வேண்டிய சிறந்த உபாயமானது முதலீட்டு ஊக்குவிப்பாகும் . அதற்கு அமைய முதலீட்டு ஊக்குவிப்பு என்பது நாட்டை முதலீடு செய்வதற்குப் பொருத்தமான இடமாக தெரிவு செய்யப்படுவதற்குத் தேவையான பின்புலத்தினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் ஆகும். அதற்கு அமைய முதலீட்டாளர்களுக்குத் தேவையான பௌதீக, தத்துவார்த்த, நிதி மற்றும் சூழல் வசதிகளை வழங்குதல் முதலீட்டு ஊக்குவிப்பின் மூலம் இடம்பெறும். அதற்கமைய முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் அதன் கீழான 06 நிறுவனங்களினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயல்கள் மற்றும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டி இருந்தது.

- அரசின் மூலம் செயல்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு விடயத்திற்கு மற்றும் அதற்கு தாபிக்கப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதி சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசு கூட்டுத்தாபனங்களின் விடயங்களுக்கு உரிய கொள்கைகள், வேலைத் திட்டங்கள் மற்றும் செயல் திட்டங்களை உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல், தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

- அமைச்சின் விடயப் பரப்பிற்கு உரித்தாகும் பொது மக்கள் சேவைகளை வினைத்திறனுடன் மற்றும் பொது மக்கள் நட்பு ரீதியில் பெற்று கொடுத்தல்.

- விரயம் மற்றும் ஊழல் என்பவற்றைப் புறக்கணித்து அமைச்சின் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுதலை உறுதிப்படுத்துவதற்கு பயனுள்ள வகையில் நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தை ஈடுபடுத்தி அனைத்து முறைகள் மற்றும் நியதிகளை மறுசீரமைப்பு செய்தல்.

- இலங்கை வலய சந்தை மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை உயர்த்துவதை நோக்காகக் கொண்ட கொள்கைகள், வழிவகைகள், வேலை திட்டங்கள் மற்றும் செயல் திட்டங்களை உருவாக்குதல்.

- இலங்கையினுள் பொருளாதார திறனை மேம்படுத்தி வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் தனியார் துறையின் முதலீடுகளை ஊக்குவிப்பு செய்தல்.


- பொருளாதார அபிவிருத்தி வலய ஊக்குவிப்பு, ஒழுங்குறுத்தல் மற்றும் கண்காணிப்பு.

- கொழும்பு தாமரை கோபுரத்தை வணிக மாதிரியாக அமைத்து சுற்றுலா மத்திய நிலையமாக ஊக்குவிப்பு செய்தல்.

- தொழில்நுட்ப பூங்காக்களை உருவாக்குதல்.

- டிஜிட்டல் தொழில்நுட்ப வணிகத்தினை விரிவுபடுத்துதல் தொடர்பான நடவடிக்கைகள்.

2022 ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுக்கு மொத்தமாக ரூபா. 144 மில்லியன் நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா. 121 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் உரு 40 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 40 - மதிப்பீடு செய்யப்பட்ட உண்மையான செலவுகள்

ஆதாரம் - 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

மேலே குறிப்பிடப்பட்ட செயல்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் பொழிப்பாக்கம் செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

### இலங்கை முதலீட்டு சபை

#### சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காமை.

அரசுக்கு சொந்தமான வணிகத்துக்கான செயல்பாட்டு கையேட்டிக்கு அமைய அரசுக்கு சொந்தமான வணிகம் அதன் பதவி அணியினர் மற்றும் தொழிலாளர்களுக்கு திறைசேரியிடமிருந்து அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு அனுமதியினைப் பெற்றுக் கொள்ளாது ரூபா. 544 மில்லியன் கொடுப்பனவு மற்றும் ரூபா. 68 மில்லியன் ஊக்குவிப்பு கொடுப்பனவு என்பன சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

#### திறைசேரிக்கு மீண்டும் வழங்கப்பட வேண்டிய தொகையினைத் தீர்க்காமை.

2021 ஆம் ஆண்டில், இணைந்த நிதியத்திற்கு பங்களிக்கும் ரீதியில் கோரப்பட்ட ரூபா. 500 மில்லியன் தொகையில் அமைச்சரவைத் தீர்மானத்தின் கீழ் தாபிக்கப்பட்ட விசேட அலகுக்கு 2022 ஆம் ஆண்டுக்கு செலுத்தப்பட வேண்டிய சம்பளம் மற்றும் கொடுப்பனவு அறவீடு ரீதியில் ரூபா. 51 மில்லியனை முதலீட்டு சபை கழித்துக் கொண்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், 2022 மே இறுதிவரையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 09 உத்தியோகத்தர்களில் 08 உத்தியோகத்தர்கள் அவர்களது பதவிகளில் இருந்து விலகி இருந்ததுடன் அந்த 09 உத்தியோகத்தர்களுக்கு 2022 ஆம் ஆண்டுக்கு செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா. 19 மில்லியன் என்பதால், அந்த முழு தொகையினையும் கழித்துக் கொண்டதன் பின்னர் மீதி தொகையான ரூபா. 32 மில்லியன் தொகையினை இணைந்த நிதியத்திற்கு பங்களிப்பு ரீதியில் பொது திறைசேரிக்கு மீண்டும் வழங்குவதற்கு முதலீட்டு சபை தவறி இருந்ததுடன் அது 2022 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைத்த முற்பண மீதியுடன் இணைக்கப்பட்டு இருந்தது.

#### குறை பயன்பாடுடைய வளாகம்

13 வலயங்களுக்கு சொந்தமான 773 ஏக்கர் அளவிலான நிலம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் வெறுமையாகக் காணப்பட்டதுடன் அது கைத்தொழில் நில அளவில் 30 சதவீதமாக காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக ஆறுபொக்க (மருந்து வலயம்) மற்றும் பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் ஐஐ ஆம் கட்டத்தில் முறையே 751.7 ஏக்கர் மற்றும் 282.9 ஏக்கர் அதன் ஆரம்பம் தொட்டு 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் எதுவித முதலீடும் இன்றி வெறுமையாகக் காணப்பட்டது. மேலும், வலயங்களுக்குச் சொந்தமல்லாத 08 காணிகள் தொடர்பிலான 777.11 ஏக்கர் அளவும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் வெறுமையாகக் காணப்பட்டது. ரூபா. 516 மில்லியன் செலுத்தி நிர்மாணிக்கப்பட்ட மிரிஜ்ஜவில ஏற்றுமதி செயலாக்க வலயத்தில் 10.8 கிலோமீட்டர் தூரத்தைக் கொண்ட

உள்ளக பாதையில் 800 மீட்டர் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

**முதலீட்டு சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகை.**

முதலீட்டு சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகை 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 873 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா. 143 மில்லியன் அதாவது 16 சதவீதம் 05 வருடங்களுக்கும் அதிகமாக நிலுவையாகக் காணப்படுகின்றது. நிலுவைத் தொகையின் அடிப்படையில் சேதங்களுக்கான ஒதுக்கீடு ரூபா. 359 மில்லியனாக இருந்ததுடன் அது 2022 திசெம்பர் 31ஆம் திகதி மொத்த நிலுவை தொகையில் 41 சதவீதமாகக் காணப்பட்டது.

# சுற்றுலா அலுவல்கள் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்
- சுற்றுலா பிரயாணிகளின் வருகை மற்றும் வருமானம் குறைந்தமை.
- சுற்றுலாத்துறை வருமானம் குறைவடைந்த பின்னணியில் சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் அதிகரித்தமை
- நிதி மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்
- மனிதவள முகாமைத்துவம்
- விபத்திற்கு உட்பட்டு பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டிருந்த ஜீப் வண்டியை அமைச்சிற்கு கையேற்றல்.
- வெளிநாட்டு தூதரங்களுக்கு அந்நிய செலாவணி முற்பணம் வழங்குதல்.
- பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை ஈடுபடுவதற்காக பிரதி நிறுவனம் ஒன்றை தெரிவு செய்தல்.
- விளம்பர நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் போது பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமை.
- வாடகைக்கு வழங்கப்பட்ட காணிகளில் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமை.
- விருந்தினர் விடுதிகளை வாடகைக்கு வழங்குதல்
- அதிகார சபைக்கு சொந்தமான தேசிய விடுமுறை விடுதி தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்டமை.

# சுற்றுலா அலுவல்கள் துறை

அனேகமான ஆசிய நாடுகளில் தமது வெளிநாட்டு வருமானத்தின் பிரதான இடத்தை சுற்றுலா கைத்தொழிலுக்காக வழங்கியுள்ளதுடன் சுற்றுலா கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் பிரதான முன்னுரிமை வழங்கப்படுகின்றது. இலங்கை பிராந்தியத்தில் அனேகமான நாடுகளை விட சுற்றுலா கவர்ச்சிகரமான நாடாக இருந்த போதிலும் சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்வதற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படாமை மற்றும் சுற்றுலா பிரயாணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யாமையால் சுற்றுலா கைத்தொழிலில் கணிசமான பின்னடைவுக்கு உட்பட்டிருந்தது. எனினும், நாட்டில் சுற்றுலா கைத்தொழிலில் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்ட கீழே குறிப்பிடப்படுகின்ற நிறுவனங்களில் பின்வரும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

- அனுபவம் உள்ள நபர்களின் பங்கு பற்றுதலுடன் சுற்றாடல் மற்றும் உள்நாட்டு கலாசாரத்துக்கு இசைவான சுற்றுலா கைத்தொழிலாக அபிவிருத்தி செய்வதற்கான வேலைத் திட்டம் ஒன்றை தயாரித்தல்.
- சுற்றுலா பிரயாணிகளின் பாதுகாப்பு தொடர்பான விசேட வேலைத் திட்டம் ஒன்றை தயாரித்தல்.
- வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளுக்காக புதிய கவர்ச்சிகரமான இடங்களை அறிமுகப்படுத்துதல்.
- சுற்றுலா பிரயாணிகளை கவர்வதற்காக வர்த்தக மாநாடுகள், விழாக்கள், கண்காட்சிகள், மற்றும் மாநாட்டினை நடத்துவதற்கான வசதிகளை வழங்குதல்.
- சுற்றுலா கைத்தொழில் அபிவிருத்தி செய்வதற்காக தனியார் துறைக்கு முதலீடுகள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.
- பிரதான சுற்றுலா நகரங்கள் தொடர்புபடுகின்ற வீதியின் நாற்சந்திகளில் சுற்றுலா சேவை நிலையங்களை ஸ்தாபித்தல்.
- பிரதேச அலுவலகங்களை ஸ்தாபிப்பதன் மூலம் சுற்றுலா வசதிகளை அங்கீகரிக்கும் செயற்பாடுகளை முறைமைப்படுத்துதல்.
- பிரதான சுற்றுலா நகரங்களில் சுற்றுலா பயிற்சி பாடசாலைகளை ஸ்தாபித்தல் மற்றும் கவர்ச்சிகரமான

திறன் அபிவிருத்தி பாடநெறிகளை அறிமுகப்படுத்துதல்.

- குடும்பம் சார்ந்த மற்றும் சமூக அடிப்படையிலான சுற்றுலா கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்.

- சகல சுற்றுலா வழிகாட்டிகளுக்கும் மற்றும் சாரதிகளை பதிவு செய்யும், பயிற்சியளித்தல், மற்றும் அடையாளத்தை உறுதிப்படுத்துதலுக்காக நடவடிக்கை எடுத்தல்.

- சுற்றுலா வர்த்தகம் சார்ந்த தொழில் முயற்சிகளை உருவாக்குவதற்காக விசேட வேலைத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துதல்.

- தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் சுற்றுலா பிரயாணிகளுக்கு வசதிகளை வழங்குதல்.

- One Stop எண்ணக்கருவின் கீழ் ஒரு தொடர்புபடும் நிலையம் ஒன்று ஊடாக மேற்கொள்ளும் செயற்பாடுகளை அமுல்படுத்துதல்.


- உயர்ந்த தரத்தில் சுற்றுலா ஹோட்டல்களை ஸ்தாபித்து மற்றும் தற்போது காணப்படுகின்ற ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கையை இரண்டு மடங்கு வரை அதிகரித்தல்.

- தேசிய மரபுரிமை மற்றும் தொல்பொருளியல் இடங்கள் தொடர்பாக சரியான தகவல்களை சுற்றுலாதாரிகளுக்குடையே பிரபல்யப்படுத்துவதற்காக சுற்றுலா வழிகாட்டிகளுக்கு சரியான அறிவு மற்றும் தகவல்களை வழங்கும் திட்டம் ஒன்றை ஏற்படுத்துதல்.

மேலே குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக அமைச்சு ஒன்று, திணைக்களம் ஒன்று, 2 பணியகங்கள், ஒரு நிறுவனம் மற்றும் ஒரு அதிகார சபையின் மூலம் நிறைவேற்றப்பட்ட பணிப்பொறுப்புக்கள் தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சில விடயங்களின் பொழிப்பு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

## நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

மேலே குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக சுற்றுலா துறை அமைச்சு மற்றும் உத்ஹிந்த பூங்கா திணைக்களம் இற்கு கூட்டு மொத்தமாக ரூபா 1,316 மில்லியன் ஏற்பாடு திணைக்களத்தால் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதில் ரூபா 901 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 415 மில்லியன் நிதிஏற்பாட்டை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. விபரம் வரைபடம் 41 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.





வரைபடம் 41 - பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடு, செலவினம் மற்றும் சேமிப்பு
மூலம்:- வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

**சுற்றுலா பிரயாணிகளின் வருகை மற்றும் வருமானம் குறைந்தமை.**

முன்னைய ஆண்டின் போது இலங்கைக்கு வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகள் 194,495 வருகை தந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த அளவு 719,978 சுற்றுலா பிரயாணிகள் வரை அதாவது 270 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. கொவிட் தொற்று நோயின் காரணமாக அவ்வப்போது மூடப்பட்டிருந்த நாடு படிப்படியாக திறக்கும் நிலைக்கு உட்பட்டமை காரணமாக இருந்தது. சுற்றுலா துறை அமைச்சு மற்றும் அதன் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற ஏனைய நிறுவனங்களின் பணிகள் மற்றும் இலக்குகளிலும் காணப்பட்ட வரையறைகளை நீக்கியமை இந்த சுற்றுலா பிரயாணிகள் வருகை அதிகரிப்பினால் ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் சுற்றுலாதாரிகளின் வருகை கடந்த ஆண்டு கடந்த 4 வருடங்களுடன் ஒப்பிடும் போது வரைபடம் 42 காண்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே 2018 ஆம் ஆண்டின் போது சுற்றுலா வியாபாரத்தில் இருந்து 711,961 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டமை 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 646,362 மில்லியன் வரை குறைவடைந்திருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போது அந்த வருமானம் 80.78 சதவீதத்தால் அதாவது ரூபா 522,172 மில்லியனால் குறைவடைந்து ரூபா 124,189 மில்லியனாக காணப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் போது அந்த வருமானம் மேலும் குறைவடைந்து ரூபா 100,620 மில்லியன் ஆக காணப்பட்ட போதும் 2022 ஆம் ஆண்டின் போதும் அந்த வருமானம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 260 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 362,426 மில்லியனாக காணப்பட்டது. நாட்டில் அந்நிய செலவாணி பெறுமதி

வீழ்ச்சியடைந்தன் பிரகாரம் கவனத்தில் கொள்ளும் போது சுற்றுலா கைத்தொழில் வீழ்ச்சியினை விட வீழ்ச்சி


மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்பட்டது. அது தொடர்பான விபரம் வரைபடம் 43 காண்பிக்கப்பட்டுள்ளது.




| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|
| வருகைதந்த வெளிநாட்டு, சுற்றுலா பிரயாணிகளின் எண்ணிக்கை | 2,333,796 | 1,913,702 | 507,704 | 194,495 | 719,978 |

வரைபடம் 42 மீளாய்வாண்டின் போதும் முன்னைய நான்கு ஆண்டுகளின் போதும் வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளின் வருகை

மூலம்:- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை





| | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|---|---|
| சுற்றுலா வியாபாரத்தில் இருந்து கிடைத்த வருமானம் (ரூபா மி | 405,492 | 512,293 | 598,356 | 711,961 | 646,362 | 124,189 | 100,620 | 362,426 |

வரைபடம் 43 சுற்றுலா வியாபாரத்தில் இருந்து கிடைத்த வருமானம்

மூலம்:- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

**சுற்றுலாத்துறை வருமானம் குறைவடைந்த பின்னணியில் சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் அதிகரித்தமை.**

2013 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக அதிகரித்து 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1,482 மில்லியன் வரை சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் அதிகரித்திருந்ததுடன் 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை சுற்றாடல் அபிவிருத்தி வரி வருமானம் விரைவாக குறைவடைந்திருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது அது ரூபா 809.7 மில்லியன் வரை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 51 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அவ்வாறே சுற்றுலாவிற்காக வருகின்ற குடியகல்வு வரி வருமானமும் 2013 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக அதிகரித்து 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 2,824.9 மில்லியன் வரை அதிகரித்து 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ரூபா 483.9 மில்லியன் வரை விரைவாக குறைவடைந்திருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 1,426 மில்லியன் வரை சுற்றுலா அபிவிருத்தி வருமானம் அதிகரித்திருந்ததுடன் குடியகல்வு வரி வருமானமும் ரூபா 2,598 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. விபரம் வரைபடம் 44 இல் காண்பிக்கப்படுகின்றது.




| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் (ரூபா மில்லியன்) | 1,014.2 | 1,005.6 | 1,014.8 | 1,276.8 | 1,541.5 | 1,482.1 | 924.2 | 537.8 | 809.7 | 1,425.8 |
| வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளுக்கான குடியகல்வு வரி (ரூபா மில்லியன்) | 1,604.9 | 1,779.8 | 1,968.5 | 2,355.4 | 2,378.8 | 2,824.9 | 2,089.2 | 489.5 | 483.9 | 2,597.8 |

சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் (ரூபா மில்லியன்) — வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளுக்கான குடியகல்வு வரி (ரூபா மில்லியன்)

வரைபடம் 44 சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளுக்கான குடியகல்வு வரி

மூலம்:- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

### நிதி மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சின் கீழ் காணப்படுகின்ற இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம், மற்றும் இலங்கை சுற்றுலா ஹொட்டல் முகாமைத்துவ நிறுவனம் என்ற 04 நிறுவனங்களுக்காக குறித்துரைத்த பெறுகைகள் நடைமுறைகள் அங்கீகரித்து எந்தவொரு காப்புறுதி பிரதிநிதி ஒருவர் தொடர்புபடுத்தாமல் 2021 ஆம் ஆண்டில் ரூபா 50 மில்லியன் பெறுமதியான காப்புறுதி வசதி பெறப்பட்டிருந்தது. அதற்காக பெயர் குறிப்பிடப்பட்ட காப்புறுதி முகவர் ஒருவருக்கு 10 சதவீத தரகு பணம் சமூக தர வேலைத் திட்டத்திற்கு செலுத்துமாறு அதிகார சபையில் இருந்து கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய காப்புறுதி கம்பனியால் ரூபா 4.8 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், அந்த அவசர வேலை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான தகவல்கள் காணப்படாமையினால் இந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் அடிப்படையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தால் 2022 திசெம்பர் 12 ஆம் திகதி இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் குற்றப் புலனாய்வு பணியகத்திற்கும் அறிக்கையிடப்பட்ட போதும் நிறுவனத்தால் அதற்கான ஆரம்ப விசாரணை ஒன்றேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## மனிதவள முகாமைத்துவம்

### இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரித்தற்ற பதிற்கடமை பணிப்பாளர் நாயகம் பதவிக்கு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தமை.

இந்த உத்தியோகத்தரால் தமது உள்ளபடியான பதவியின் கடமைகள் எதுவும் நிறைவேற்றப்படாமல் 2020 மார்ச் 10 ஆந் திகதி முதல் 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை தாபன கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பதிற்கடமை பதவிக்குரிய ஆரம்ப சம்பளத்தில் 25 சதவீதம் மாத்திரம் உரிய உத்தியோகத்தருக்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் அமைச்சில் இருந்து சம்பளம் மற்றும் படிகள் மற்றும் மாதாந்த தொலைபேசி படிகள், எரிபொருள் படிகளாக ரூபா 5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

### விபத்திற்கு உட்பட்டு பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டிருந்த ஜீப் வண்டியை அமைச்சிற்கு கையேற்றல்.

அபிவிருத்தி உபாய வழிகள் மற்றும் சர்வதேச வியாபார அமைச்சிற்கு உரியதாக காணப்படும் போது 2019 நவம்பர் 24 ஆந் திகதி திடீர் விபத்திற்கு உட்பட்டிருந்த ஜீப் வண்டியை பழுது பார்ப்பதற்காக ரூபா 21 மில்லியன் கிரயத்தில் கம்பனி ஒன்றுக்கு அனுப்பப்பட்டிருந்த போதும் 2021 யூலை 22 ஆந் திகதி சுற்றுலா அமைச்சு செயலாளர் தமது பெயருக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார் எனினும், காப்புறுதி நிறுவனத்தின் பிரகாரம இந்த வண்டியின் சந்தை பெறுமதியான ரூபா 15.5 மில்லியன் தொகைக்கு மாற்றுதல்

அல்லது பழுது பார்த்தலை முழுமைபடுத்துவதற்காகவும் ரூபா 9.3 மில்லியன் தொகை மாத்திரம் செலுத்துவதற்கு முடியுமாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டமையினால் நிலுவை பழுது பார்த் தல் செலவினங்களின் பெறுமதி ரூபா 12 மில்லியன் பொறுப்பொன்று அமைச்சிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

**வெளிநாட்டு தூதரங்களுக்கு அந்நிய செலாவணி முற்பணம் வழங்குதல்.**

இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்தால் 24 நாடுகளின் வெளிநாட்டு தூதரங்களுக்கு அனுப்பபட்ட அந்நிய செலாவணி முற்பணங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 43 மில்லியன் நிதிக்காக உரிய மீதி உறுதிப்படுத்தல்கள் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே பின்வரும் மீதிகளின் அடிப்படையில் இணங்காணப்பட வேண்டிய அந்நிய செலவாணி மாற்றல் இலாபம் ரூபா 33 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை ஈடுபடுவதற்காக பிரதி நிறுவனம் ஒன்றை தெரிவு செய்தல்.**

பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் 2022 மே 18 முதல் 20 வரை இந்தியாவில் நடைபெற்ற மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி பணியகத்தால் முகவர் நிறுவனம் ஒன்றை தெரிவு செய்யும் பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட போதும் அவ்வாறு புறக்கணிக்கப்பட்டமைக்கான காரணம் விடயங்கள் குறித்துரைத்தரீதியில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகளுக்காக முகவர் நிறுவனமொன்று செலுத்தப்பட்ட ரூபா 11 மில் லியன் ஆகும்.

**விளம்பர நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் போது பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமை.**

இலங்கை வலுப்படகு சங்கத்தினால் 2017 ஆம் ஆண்டின் போது ஒழுங்கமைக்கப்பட்ட பெந்தோட்டை பிரதேசத்தில் காணப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத சர்வதேச வலுப்படகு போட்டிக்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி மேம்பாட்டு பணியகம் பங்கு பற்றியிருந்ததுடன் அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் ரூபா 8 மில்லியன் பங்களிப்பொன்றை பெற்றுக்கொள்வதற்கு இணங்கப்பட்டிருந்தது. எனினும் இதன் போது கூட்டு மொத்த கிரயத்தில் 20 சதவீதம் ஆன சங்கத்தால் வங்கி பிணைக்காக ஒதுக்கப்படாமை, அனேகமான மேம்படுத்தல் நடவடிக்கைகள் சங்கத்தால் நிறைவேற்றப்படாமை இணங்கப்பட்ட கிரயம் ரூபா 3 மில்லியனால் 42 சதவீதத்தால் அதிகரித்தமை இங்கிலாந்து முதல் வலு படகு போக்குவரத்துக்காக கப்பல் கம்பனி ஒன்றை தெரிவு செய்யும் போது பெறுகைகள் நடைமுறைகள் பின்பற்றப்படாமை, வலு படகு போட்டியை நடாத்துவதில் தாமதம் ஏற்பட்டமை மோட்டார் படகுகளை மீண்டும் அனுப்பும் முறைமை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

**வாடகைக்கு வழங்கப்பட்ட காணிகளில் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமை.**

2014 ஆம் ஆண்டின போது 05 கம்பனிகளுக்கு 35 ஏக்கர்களும் 2019 ஆம் மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மேலும் 02 கம்பனிகளுக்கு 16.8 ஏக்கர்களும் ஆக யால பலட்டுபான சுற்றுலா அபிவிருத்தி வலயத்தில் காணி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 02 கம்பனிகள் மாத்திரம் மீளாய்வாண்டில் இறுதி வரையிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஆரம்பித்து இருந்தது. சுற்றாடல் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக உச்சவெளியில் 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது கைப்பற்றப்பட்ட 510 ஏக்கர் காணி நில அளவில் 49 ஏக்கர் காணி மாத்திரம் 03 கம்பனிகளுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த 03 கம்பனிகளில் ஒரு கம்பனி மாத்திரம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. சுற்றுலா நடவடிக்கைகளுக்காக விடுவித்தல் கையளித்தலாக கற்பிட்டியில் 12 தீவுகளில் 2,055.87 ஏக்கர் காணி நில அளவு ஒன்று 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது அதிகார சபைக்கு கிடைத்திருந்த போதிலும் அந்த 12 தீவுகளில் 05 தீவுகளுக்குரிய காணி 206.58 ஏக்கர் மாத்திரம் 2010, 2011 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது 03 கம்பனிகளுக்கு வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், அதில் எந்த ஒரு கம்பனியும் மீளாய்வாண்டில் இறுதி திகதி வரையிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கவில்லை. வாடகைக்கு வழங்கப்பட்ட கம்பனிகளில் இருந்து 02 கம்பனிகள் முறையே ரூபா 43 மில்லியன் மற்றும் ரூபா 9 மில்லியன் ஆக 03 வருடங்கள் முதல் 5 வருடங்கள் வரை வாடகை நிலுவையாக காணப்பட்டது.

**விருந்தினர் விடுதிகளை வாடகைக்கு வழங்குதல்**

அதிகார சபைக்கு சொந்தமான 37 விருந்தினர் விடுதிகளில் 09 விருந்தினர் விடுதிகள் இரண்டு வருடங்கள் முதல் எட்டு வரையான காலத்தில் வாடகைக்கு வழங்கப்படாமையின் காரணமாக அந்த ஆதனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் 34 விருந்தினர் விடுதிகளில் இருந்து செலுத்த வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 30 மில்லியனாக இருந்ததுடன் அதில் 04 வருடங்களில் நிலுவை வருமானம் ரூபா 13 மில்லியன் அல்லது 45 சதவீதம் ஆகும். மொத்த நிலுவை பணத்தையும் அறவிடுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் திருப்பதி கரமான மட்டத்தில் காணப்படவில்லை.

**அதிகார சபைக்கு சொந்தமான தேசிய விடுமுறை விடுதி தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்டமை.**

அதிகார சபைக்கு சொந்தமான 05 தேசிய விடுமுறை விடுதிகளில் மீளாய்வாண்டிலும், அதற்கு முன்னைய ஆண்டுகளுக்காகவும் முறையே ரூபா 51 மில்லியன் மற்றும் ரூபா 73 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. எனினும் அந்த விடுமுறை விடுதிகளின் நட்டத்தை குறைத்துக் கொள்வதற்கு போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

# வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- செயற்திட்டங்களின் நடவடிக்கைகளில் உடன்படிக்கை செய்யும் போது பூர்த்தி செய்யப்படாமைால் பயனற்ற கடப்பாட்டுக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தமை.
- வீதிப் பிரிவின் செயற்திட்டம்
    - ஒன்றிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்
    - இரண்டாவது ஒன்றிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம
    - உள்ளக ரீதியில் இணைக்கும் அபிவிருத்தி செயற்திட்டம்.
    - கொகுவலை மற்றும் கெட்டம்பே மேல் பால நிர்மாண செயற்திட்டம்.
    - களனி கங்கை மேல் புதிய பாலம் நிர்மாணிக்கும் செயற்திட்டம்
    - தெற்கு வீதி இணைப்பு செயற்திட்டம்.
    - துறைமுக நுழைவு விமான வீதி செயற்திட்டம்
    - கொழும்பு தேசிய பெருந்தெருக்கள் செயற்திட்டம் (ஒபெக் II)
    - மேல் மாகாண தேசிய பெருந்தெருக்கள் செயற்திட்டம் (ஒபெக் III)
- நீர் வழங்கல் பிரிவின் செயற்திட்டம்.
    - குறித்துரைத்த திகதியில் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் நிறுத்தி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்காக கவனத்தில் கொள்ளகூடிய தொகையொன்று செலவிடப்பட்டிருந்தமை.
    - அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் - 1
    - பெரும்பாக கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்தை விருத்தி செய்யும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமை.
    - அம்பத்தலே முறைமை புனரமைப்பு மற்றும் வலுசக்தி சேமிப்பு செயற்திட்டம்
    - யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம்
    - மொறட்டுவை இரத்மலான கழிவு நீர் அகற்றும் செயற்திட்டம் - கட்டம் II

- **நகர அபிவிருத்தி பிரிவின் செயற்திட்டம்**
    - **உபாய வழிகள் நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (SCDP)**
    - **நகர புனர்வாழ்வு செயற்திட்டத்திற்கு உதவி வழங்கும் செயற்திட்டம் (SCURP)**
    - **நகர செயற்திட்டங்களை தயாரிக்கும் வசதிகள் செயற்திட்டம் (UPPF)**
    - **அநுராதபுரம் ஒன்றினைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் (AIUDP)**
    - **பெரும்பாக கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்தை விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் - கட்டம் 03**
- **சுகாதார பிரிவில் செயற்திட்டம்.**
    - **இலங்கை உலக வங்கி கடனின் மூலம் அமுல்படுத்தப்பட்ட ஊழுஏஐனு 19 அவசர சிகிச்சை மறறும் சுகாதார செயற்திட்டம்.**
- **விவசாய பிரிவின் செயற்திட்டம்**
    - **உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் பயிர்ச்செய்கை விளைச்சல்களுக்காக குறித்துரைத்த விலை ஒன்றை பெற்றுக்கொள்ளும் அவசர செயற்திட்டம்.**

# வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

2022 ஆம் ஆண்டிற்கான நிதியமைச்சின் வருடாந்த அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஒட்டு மொத்த பாதீட்டு நிலுவையான மரூபா 2,460 பில்லியனை தீர்ப்பதற்காக அரசாங்கத்தின் உள்நாட்டு நிதி மூலங்களில் இருந்து ரூபா 2,035 பில்லியனும், வெளிநாட்டு நிதி மூலங்களில் இருந்து ரூபா 425 பில்லியனும் தேறிய வெளிநாட்டு கடன் பெறப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் கடந்த ஆண்டின் போது வெளிநாட்டு நிதி மூலங்களில் இருந்து பெறப்பட்டிருந்த ரூபா 14 பில்லியன் தேறிய வெளிநாட்டுக் கடனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் வெளிநாட்டுக் கடன் வெளிப்படுத்தக் கூடிய அளவில் அதிகரித்திருந்தது.

மீளாய்வாண்டின் போது அரசாங்கம் வெளிநாட்டு அபிவிருத்தி தரப்பினர்களுடனும், கடன் வழங்கும் முகவர் நிறுவனங்களுடனும் 15 புதிய வெளிநாட்டு நிதியீட்ட இணைக்க உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்ததுடன் அதன் மூலம் எதிர்வரும் ஆண்டுகளின் போது ஐ.அ.டொலர் 1,915 மில்லியனை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது அ.டொலர் 1.805.5 கடன் வசதிகள் மற்றும் அ.டொலர் 109.7 மில்லியன் மொத்த மானிய வசதிகளினையும் உள்ளடக்கியிருந்தது.

2022 ஆம் ஆண்டின் போது வியாபாரத் துறைக்காக ஆகக் கூடிய வெளிநாட்டு நிதியீட்ட இணைக்கம் கிடைத்திருந்ததுடன் அது அ.டொலர் 1,000 மில்லியன் அல்லது ஒட்டு மொத்த வெளிநாட்டு நிதியீட்ட இணைக்கத்தில் இருந்து 52 சதவீதமாக இருந்ததுடன் மின்சக்தி மற்றும் எரிபொருள் சக்தி பிரிவு துறை அ.டொலர் 500 மில்லியன் மற்றும் மானியங்கள் அ.டொலர் 203 ஆக பிரிக்கப்பட்டிருந்தது.

**செயற்திட்டங்களின் நடவடிக்கைகளில் உடன்படிக்கை செய்யும் போது பூர்த்தி செய்யப்படாமைால் பயனற்ற கடப்பாட்டுக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தமை.**

2012 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை நாட்டில் அமுல்படுத்தப்பட்ட முதலீட்டு செயற்திட்டங்களில் அந்தந்த கடன் வழங்கும் நிறுவனங்களுடன் கைச்சாத்திடப்பட்ட நிறுவன உடன்படிக்கை கால அட்டவணையின் படி கடனை விடுவிப்பதற்கு தவறியமையின் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 19 பில்லியன் கடப்பாட்டுக் கட்டணம் பயனற்றதாக செலுத்த வேண்டியிருந்தது. இந்த பயனற்ற கடப்பாட்டுக் கட்டணத்திற்காக பிரதானமாக செயற்திட்ட செயற்பாட்டு அலகுகளில் காணப்படுகின்ற பின்வரும் குறைபாடுகள் காரணமாக இருந்தது.

i. செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் காணி கைப்பற்றல் பூர்த்தி செய்யப்படாமை.

ii. பல்வேறு முன் அங்கீகாரம் பெற வேண்டிய நிறுவனங்களில் அங்கீகாரம் பெறப்படாமை.

iii. ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை.

iv. சரியான காலநிலை மற்றும் காலநிலை எதிர்வு கூறல்கள் மேற்கொள்ளப்படாமை.

**வீதிப் பிரிவின் செயற்திட்டம்**

வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் நிதியத்தின் பயன்பாடு மற்றும் நிதி மற்றும் பௌதீக செயல்முன்னேற்றம் பின்வருமாறு இருந்தது.

| | செயற்திட்டத்தின் பெயர் | கடன் தொகை | | 2022.12.31 இல் மொத்த பயன்பாடு | | செயற்திட்ட காலம் | 2022.12.31 இல் செயல்முன்னேற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஐ.அ.டொலர். மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர். மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர். மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர். மில்லியன் |
| 1 | ஒன்றிணைந்த வீதி நிகழ்ச்சித்திட்டம் | 800.00 | 104,000 | 526.47 | 91,418 | 06 | 66 | 63 |
| 2 | இரண்டாவது ஒன்றிணைந்த வீதி அபிவிருத்தி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் | 900.00 | 137,070 | 498.38 | 105,991 | 05 | 55 | 67 |
| 3 | பதுளை - செங்கலடி வீதி அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் | 120.00 | 15,600 | 69.11 | 12,171 | 08 | 86 | 93 |
| 4 | ஒபேக் நிதியத்திலிருந்து வீதி வலையமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் | 40.00 | 4,560 | 33.08 | 4,844 | 09 | 88 | 88 |
| 5 | உள்ளக இணைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் | 150.00 | 54,000 | 6.63 | 2,194 | 05 | 4 | 25 |
| 6 | மத்திய அதிவேக வீதி கட்டம் - 01 | 989.44 | 134,628 | 51.56 | 13,266 | 04 | 46 | 35 |
| 7 | கொகுவலை மற்றும் கெட்டம்பே மேல் பாலம் வடிவமைப்பு மற்றும் நிர்மாணித்தல் செயற்திட்டம். (KGF) | 52.00* | 10,192 | 13.95* | 3,411 | 2 1/2 | 48 | 49 |
| 8 | கண்டி பல்நோக்கு போக்குவரத்து துறை அபிவிருத்தி செயற்திட்டம் (KMTTDP) | 69.33 | 13,762 | 0.85 | 169 | 6 1/2 | 1 | - |
| 9 | மண் சரிவு மற்றும் இடர் முகாமைத்துவ செயற்திட்டம் (LDPP) | 7,618.00 | 12,870 | 6,283.00 ** | 9,678 | 7 1/2 | 98 | 99 |
| 10 | களனி கங்கை மேல் புதிய பால நிர்மாண செயற்திட்டம் (NBCP) | 35,020.00 ** | 46,755 | 31,782.00 ** | 87,036 | 09 | 91 | 100 |
| 11 | மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதி மற்றும் | 85.00 | 10,774 | 73.15 | 9,272 | | 99 | 99 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பாலங்களை விரிவுபடுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் (EXIM) | | | | | | | |
| 12 | போக்குவரத்து செயற்திட்டத்தை தயாரித்தல், வசதிகள் செயற்திட்டம் (TPPF) | 10.00 | 1,457 | 2.51 | 449 | 6 1/2 | 93 | 94 |
| 13 | 25 பாலங்களை மீள் நிர்மாணிக்கும் செயற்திட்டம் (RCBP) | 10.00 *** | 4,632 | 6.66 | 4,128 | 07 | 67 | 97 |
| 14 | அதிவேக வீதி இணைக்கும் செயற்திட்டம் (SRCP) | 70.36 | 14,274 | 68.68 | 12,395 | 08 | 98 | 86 |
| 15 | துறைமுக நுழைவு விமான வீதி செயற்திட்டம் | 293.89 | 46,382 | 108.26 | 28,447 | 09 | 81 | 54 |
| 16 | போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ செயற்திட்டம் | 9.00 | 1,305 | 2.36 | 727 | 07 | 54 | 77 |
| 17 | கொழும்பு தேசிய நெடுஞ்சாலைகள் செயற்திட்டம் (ஒபேக் II) | 50.00 | 6,500 | 39.47 | 6,628 | 10 | 89 | 98 |
| 18 | மேல் மாகாண தேசிய பெருந்தெருக்கள் செயற்திட்டம் (ஒபேக் III) | 17.00 | 2,210 | 13.28 | 2,501 | 08 | 96 | 97 |
| 19 | ரக்வான - சூரியகந்த A017 வீதி (ஒபேக் IV) | 40.00 | 5,498 | 0.91 | 320 | 02 | 9 | 5 |
| | | | **626,468** | | **395,048** | | | |

* யூரோ ** ஜப்பான் ஜென் *** குவைத் டினார்

மூலம்: செயற்திட்டம் கடன் உடன்படிக்கை மற்றும் செயலாற்றல் அறிக்கை

- அ.டொலர் 3644 மில்லியன், யூரோ 52 மில்லியன், குவைத் டினார் 10 மில்லியன் மற்றும் ஜப்பான் ஜென் 42,638 மில்லியனுக்கு சமனான ரூபா 626,468 மில்லியன் வெளிநாட்டு உதவியின் கீழ் 19 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அதில் 395.47.52 மில்லியன் அதாவது 63 பில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

- செயற்திட்டங்களின் பௌதீக செயல்முன்னேற்றம் 0 முதல் 100 சதவீதத்திற்கு இடையிலான வீச்சில் காணப்பட்டதுடன் செயற்திட்டங்களில் இருந்து அதிக பகுதி கால நீடித்தல் (EOT) இன் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

- 19 செயற்திட்டங்களுக்கு இடையே 15 செயற்திட்டங்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் 03 செயற்திட்டங்கள் கலைக்கப்பட்டிருந்தது. மேலும் ஒரு செயற்திட்டம் இ டை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

14 செயற்திட்டங்களில் கைப்பற்றப்பட்ட ஒட்டு மொத்த காணி கூறுகளின் எண்ணிக்கை 48,715 ஆக இருந்ததுடன் காணி கைப்பற்றல் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட கூறுகளின் எண்ணிக்கை 5,052 அதாவது 10 சதவீதம் மாத்திரம் ஆகும்.
வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் சுருக்கம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

### ஒன்றிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்

ரூபா 117,780 மில்லியன் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீடுகளின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் புனரமைப்பு செய்வதற்கு தெரிவு செய்யப்பட்ட தேசிய வீதிகள் 370 கிலோ மீற்றர் ஆலும், கிராமிய வீதிகள் 2,905 கிலோ மீற்றர் ஆலும், 4 தேசிய வீதிகள் 27.43 கிலோ மீற்றர் ஆலும் மற்றும் 566 கிராமிய வீதிகள் 2,199 கிலோ மீற்றர் அளவிலும் புனரமைப்பு வேலைகள் மாத்திரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அது எதிர்பார்க்கப்பட்ட செயல் முன்னேற்றத்தில் 68 சதவீதம் மாத்திரம் ஆக காணப்பட்டது. செயற்திறன் இன்மையான ஒப்பந்த முகாமைத்துவம், எரிபொருள் மற்றும் பொருட்களின் பற்றாக்குறை இந்த நலிவான செயற்திட்டங்களுக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்ததுடன் உரிய வீதி பொதிகள் முழுவதும் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த பூர்த்தி செய்யப்பட்ட வீதிகளுக்கு இடையே 72.22 கிலோ மீற்றர் நீளமான 29 கிராமிய வீதிகள் உரிய அரசாங்க நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

### இரண்டாவது ஒன்றிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்.

2021 ஏப்ரல் மாதத்தின் போது நாளதுவரையாக்கப்பட்ட வசதிகள் நிர்வாக கைநூலின் பிரகாரம் வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மேல் மாகாணங்களில் 417.75 கிலோ மீற்றர் தேசிய வீதிகள் மற்றும் 1349 கிராமிய வீதிகளில் 3338.87 கிலோ மீற்றர் நிகழ்ச்சிதிட்டத்தின் மூலம் மறுசீரமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 13 தேசிய வீதிகளில் 153.74 கிலோ மீற்றர் மற்றும் கிராமிய வீதிகளில் 557 வீதிகளில் 1,432.42 கிலோ மீற்றர் அளவில் புனரமைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு உரிய நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. செயற்திறன் அற்ற ஒப்பந்த முகாமைத்துவம், எரிபொருள் வரையறை மற்றும் பொருள் பற்றாக்குறை இந்த நிலைமைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**உள்ளக ரீதியில் இணைக்கும் அபிவிருத்தி செயற்திட்டம்.**

செயற்திட்டத்தின் 2 ஆவது கூறின் கீழ் விவசாயிகளுக்காக வழங்கும் வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் சேவைகளுக்கான நுழைவுகளுக்காக செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது ஆரம்பம் ஆக ஐ.அ..டொலர் 50 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும். நிச்சயம் அற்ற அவசர வெளிப்படுத்தல் கூறு (CERC) அமுல்படுத்துவதற்காக ˙ 2 ஆவது கூறுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு பெறப்பட்டிருந்தது. அதனால் இரண்டாவது கூறின் கீழ் விவசாயிகளுக்காக வழங்கும் வசதிகளை மானியங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

**கொகுவலை மற்றும் கெட்டம்பே மேல் பால நிர்மாண செயற்திட்டம்.**

மதிப்பீட்டு கிரயம் ரூபா 2,2132 மில்லியன் ஆன கொகுவலை வான் பாலம் நிர்மாண நடவடிக்கைகள் 2023 யூன் 16 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் செயல் முன்னேற்றம் 73.5 சதவீதம் மாத்திரம் ஆக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 8,187 மில்லியன் ஆன நித்தம்பே மேன் பாலம் நிர்மாண நடவடிக்கைகள் 78 சதவீதம் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் உள்ளபடியான செயல் முன்னேற்றம் 36 சதவீதம் மாத்திரம் ஆகும். காணியினை கைப்பற்றுவதில் தாமதம் மற்றும் ஒப்பந்தகாரர்களுக்கு பணம் செலுத்தாமை இதற்காக நேரடியாக தாக்கமளித்திருந்தது. 2018 ஆம் ஆண்டில் வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப மதிப்பீடுகளின் பிரகாரம் கொகுவலை மற்றும் கெட்டம்பே வான் பாலங்களை நிர்மாணித்தல் தேசிய பொருளாதாரத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூபா 4 மில்லியன் தொகை சேமித்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் நிர்மாண நடவடிக்கைகள் தாமதத்தின் காரணமாக செயற்திட்டத்தின் விளைவுகளை அடைந்து கொள்ளுதல் தாமதம் ஏற்பட்டுள்ளது.

**களனி கங்கை மேல் புதிய பாலம் நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

புதிய களணி பாலம் நிர்மாணத்தின் போது நிர்மாண நடவடிக்கைகளுக்காக தேவையான காணி அளவினை கைப்பற்றுவதற்காக ரூபா 943.92 மில்லியன் அளவில் செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த காணி பிரதேசங்களில் மீண்டும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் கைப்பற்றுவதை தடுப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமையினால் அனுமதியற்ற 07 குடியிருப்பாளர்கள் அளவில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீண்டும் குடியிருக்கின்றமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறே 2014 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டத்திற்காக கையேற்கப்பட்ட காணி, காணி கைப்பற்றல் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

புதிய களனி பால சூழலலை மேற்பார்வை செய்வதற்கு இயலுமான வரையில் கமரா முறைமையுடன் தொடர்பாடல் கட்டிடம் ஒன்று ரூபா 24 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் உரிய கட்டிடத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக இலத்திரனியல் உபகரணங்களும் பொருத்தப்பட்டிருந்தது. எனினும், இந்தக் கட்டிடம் மற்றும் அதில் பொருத்தப்பட்டுள்ள கமரா முறைமை 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த கட்டிடத்திற்காக பொருத்தப்பட்டிருந்த வழிபதனாக்கி இயந்திரங்கள் இரண்டினை உள்ளடக்கிய பகுதிகள் கள்வர்களினால் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

### தெற்கு வீதி இணைப்பு செயற்திட்டம்.

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகள் 2014 மே 27 ஆந் திகதி அமெரிக்க டொலர் 70 மில்லியன் பெறுமதியில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் நிருமாண நடவடிக்கைகள் தாமதம் அடைந்ததன் காரணமாக 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சில தடவைகள் கடன் காலப்பகுதியில் இறுதி திகதி நீடிக்கப்பட்டிருந்தது. கடன் காலப்பகுதியினை நீடிக்கப்பட்டிருந்த போதிலும் முகாமைத்துவ செயற்திறனின்மையின் காரணமாக கடன் காலவதியாவதற்கு முன்னர் கடன் தொகையில் ரூபா 478 மில்லியன் செயற்திட்டத்தின் மூலம் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு தவறியிருந்தது. மேலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 86 சதவீத பௌதீக செயல் முன்னேற்றம் மாத்திரம் அடையப்பட்டிருந்த போதும் செயற்திட்டம நிறுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் இறுதி நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக செலவாகின்ற பணம் ரூபா 2,536 மில்லியன் ஆக இருந்தமை 2022 மார்ச் 21 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த புதிய மதிப்பீட்டு பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

### துறைமுக நுழைவு விமான வீதி செயற்திட்டம்

- 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு துறைமுக நுழைவு விமான வீதியின் சிவில் நிர்மாண நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 54 சதவீதமாக இருந்த போதிலும் நிதிசார் செயல் முன்னேற்றம் ரூபா 23,430 மில்லியனாக இருந்ததுடன் அது மொத்த கிரய மதிப்பீடான ரூபா 28,002 மில்லியனில் 83 சதவீதம் ஆகும். மேலும் ஆலோசனையாளர்களின் செயல் முன்னேற்றம் பிரகாரம் விலை முரண்பாடுகளின் காரணமாக ஆரம்ப ஒப்பந்த பெறுமதி 81 சதவீதத்தால் அதாவது ரூபா 50,800 மில்லியனால் உயர்வடைந்திருந்தது.

- கடல்சார் வசதிகள் நிலையக் கட்டிடம் ஒன்றை நிர்மாணித்து இலங்கையின் துறைமுக அதிகார சபைக்கு கையளித்தலின் தாமதத்தின் காரணமாக செயற்திட்டத்தினால்

இலங்கை துறைமுக அதிகார சபையின் (SLPA) தற்போது இருக்கின்ற பதவியணியினர் வாடகைக்குப் பெற்ற கட்டிடங்களில் குடியிருந்து வருகின்றனர். அதுதொடர்பாக செயற்திட்டத்தினால் செலுத்த வேண்டிய மொத்த தொகையான ரூபா 195 மில்லியனில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 117 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- ஐக்கிய அமெரிக்க டொலர் 28.4 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி உடைய இலத்திரனியல் கட்டணம் சேகரித்தல் முறைமை (ETC) அமுல்படுத்துதலை இரத்து செய்வதற்கு செயற்திட்டத்தினால் 2023 பெப்ரவரி 02 ஆம் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் இணக்கப்பாடு கோரப்பட்டிருந்தது. துறைமுக வீதியின் நிர்மாணம் மற்றும் கடல்சார் வசதிகள் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம் கூறுகளின் ஒப்பந்த விலை தளம்பல்களை செலுத்துவதற்காக இந்த கூறுகளுக்காக நிதியேற்பாட்டினையும் பயன்படுத்தியமையால் மிகுதிப் பணம் இந்த கூறுகளை அமுல்படுத்துவதற்கு போதியளவில் இல்லாது இருந்தமை இதற்கான காரணமாக அமைச்சின் செயலாளரால் தனது கடிதத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் மூலம் (நுவுஊ) முறைமையில் ஆலோசனைச் சேவைக்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 162 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நுவுஊ முறைமை இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக சகல அதிவேக வீதிகளுக்காகவும் ஒரே ஒரு தானியங்கி கட்டண சேகரித்தல் முறைமையொன்றை அறிமுகப்படுத்தும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்ததுடன் செலவிடப்பட்ட செலவினம் பயனற்ற செலவினத்திற்கு உள்ளாகியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

### கொழும்பு தேசிய பெருந்தெருக்கள் செயற்திட்டம் (ஒபெக் II)

உருகொடவத்த அம்பத்தள வீதி கட்டம் I, II மீளமைப்பு நடவடிக்கைகள் 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் முறையே ரூபா 1,528 மில்லியன் மற்றும் ரூபா 1,943 மில்லியன் ஒப்பந்த பெறுமதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. முறையே 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நிர்ணயித்திருந்த போதும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரால் கட்டம் ஐ இற்காக வேலைத்தளம் விடுவிக்கப்படாமை, கொரோனா தொற்று நோயை உள்ளடக்கிய காரணங்களினால் 1204 நாட்கள் காலத்தை நீடிப்பதற்கு ஒப்பந்தகாரரின் நாளாந்த செலவினங்களை தீர்த்து வைப்பதற்காக ரூபா 26 மில்லியன் கட்டம் II இற்காக 428 நாட்கள் நீடிப்பதற்குரிய ரூபா 71 மில்லியன் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

**மேல் மாகாண தேசிய பெருந்தெருக்கள் செயற்திட்டம் (ஒபெக் III)**

கடுவெல அத்துருகிரிய வீதியின் கட்டம் ஐ மீளமைக்கும் நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தம் 2018 சனவரி 29 ஆம் திகதி ரூபா 1,065 மில்லியனுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் 2019 யூலை 28 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், 2023 மார்ச் 04 வரை காணியை கைப்பற்றுதலின் தாமதம் அடைந்தமை மற்றும் கொவிட் தொற்று நோய் போன்ற காரணங்களினால் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த காலம் நீடிப்பதற்குரிய ரூபா 65 மில்லியன் செயற்திட்டத்தினால் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**நீர் வழங்கல் பிரிவின் செயற்திட்டம்.**

2022 ஆம் ஆண்டு பூர்த்தியடையும் போது நீர் வழங்கல் சபையின் கீழ் வெளிநாட்டுக் கடன் மற்றும் உதவிகளின் மூலம் 33 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 538,822 மில்லியன் ஆகும். நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆண்டு பூர்த்தியடையும் போது அந்த செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபா 584,909 மில்லியன் ஆகும். ஒப்பந்தகாரரின் செயற்திறனின்மை, காணி விடுதலின் தாமதம், சுற்றாடல் பிரச்சினைகள், மற்றும் ஒப்பந்த கையளித்தலின் தாமதம் காரணமாக 02 சந்தர்ப்பங்கள் முதல் 07 சந்தர்ப்பங்கள் வரை ஒப்பந்த காலம் நீடித்தல் அந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்ட கால எல்லை 275 நாட்கள் முதல் 2,131 நாட்கள் வரையான வீச்சில் தாமதம் அடைந்திருந்தது.

**குறித்துரைத்த திகதியில் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் நிறுத்தி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்காக கவனத்தில் கொள்ளகூடிய தொகையொன்று செலவிடப்பட்டிருந்தமை.**

பெரியளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை மீண்டும் உபாய வழிகள் மற்றும் விரைவாக அதிகாரங்களுடன் உத்தியோகத்தர் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வேலை பூர்த்தி செய்யப்படுமென தீர்மானித்திருந்த 07 செயற்திட்டங்கள் அத்திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் தற்காலிகமாக நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தமைக்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்திருந்த 12 செயற்திட்டங்களுக்காக நிறுத்தி வைத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தொடர்ந்தும் அக் குழுவினால் 2023 ஆம் ஆண்டின் போதும். 10 செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும், 02 செயற்திட்டங்களை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட 05 நீர் வழங்கல் செயற்திட்டங்களுக்காக ஆண்டின் இறுதி வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 6,562 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் - 1**

2023 யூன் 30 ஆம் திகதி வரை ரூபா 8,285 மில்லியன் செலவிடப்பட்ட இச்செயற்திட்டத்தின் கட்டம் 1 பற்கோளாறுகள் மற்றும் சிறுநீரக நோய் விரைவாக பரவி வருகின்ற பிரதேசங்களில் நீரை வழங்குவதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற் திட்டத்திற்கு நீரை வழங்குவதற்கு எதிராக பிரதேசத்தின் விவசாய அமைப்புக்களிடம் இருந்து காண்பிக்கப்பட்ட தொடர்ச்சியான எதிர்ப்பின் அடிப்படையில் நீர்ப்பாசன திணைக்களம் செயற்திட்டத்திற்கு நீரை விநியோகிப்பதை நிறுத்தி இருந்தது. எனினும், செயற்திட்டத்திற்கு தேவையான முழுமையான நீர் இயலளவு வடமத்திய மாகாண மகஎல செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் வழங்குவதற்கு நீர்ப்பாசன திணைக்களம் விருப்பம் தெரிவித்திருந்த போதிலும் மாகாவலி அதிகாரசபையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற அந்த செயற்திட்டம் இன்னும் ஆரம்ப கட்டத்தில் காணப்படுகின்றமையால் செயற்திட்டத்திற்கு தேவையான இயலளவை பெற்றுக்கொள்வதற்காக அதிக நிச்சயம் அற்ற நிலைமை காணப்பட்டது. மேலும் 2022 ஆம் ஆண்டு நிறைவடையும் போது அரசாங்கத்தினால் செயற்திட்டத்திற்காக ரூபா 45 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணம் 1,309 மில்லியன் கடன் மீள செலுத்தப்பட்டிருந்தது.

**பெரும்பாக கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்தை விருத்தி செய்யும் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமை.**

கொழும்பு நகரத்தில் 2012 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற 49 சதவீதம் வருமானம் கிடைக்காத நீர் விகிதாசாரம் 2020 ஆம் ஆண்டு வரை 18 சதவீதம் வரை குறைந்த மட்டத்திற்கு கொண்டு வந்து கொழும்பு நகரத்தில் 24 மணித்தியாலம் முழுவதும் தரமான நீரை வழங்கலை தொடர்ச்சியாக வழங்குதல், நிறுவன செயற்பாடுகளை வலுப்படுத்துதல் பிரதான நோக்கமாக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி பங்களிப்பின் கீழ் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அரசாங்கத்தினதும் ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் ரூபா 40.40 பில்லியன் செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட மொத்த நீர் மாணி கனிசமான அளவு செயல் இழந்தமையின் காரணமாக வருமானம் இல்லாத நீர் முகாமைத்துவ நடவடிக்கைகளினால் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதிலும் கனிசமான இடையூறுகள் காணப்பட்டது. அவ்வாறே இந்த செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட கடனுக்காக 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அரசாங்கத்தால் முறையே 1,166 மில்லியன் கடன் வட்டி மற்றும் கடன் தொகையில் கடன் பணத்தில் குறைவாக பயன்படுத்தப்பட்டதன் அடிப்படையில் ரூபா 209 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

**அம்பத்தலே முறைமை புனரமைப்பு மற்றும் வலுசக்தி சேமிப்பு செயற்திட்டம்**

ஹம்பத்தலே நீர் சுத்திகரிப்பு கூடத்திற்காக மாதாந்தம் செலவாகின்ற ரூபா 203 மில்லியனுக்கு அதிகமான

வலுசக்தி கிரயம் குறைப்பதற்காக குறைந்த செயற்திறனடைய மற்றும் பழைய கம்பிகள் அகற்றப்பட்டு அதற்காக புதிய கம்பிகள் மீளமைப்பதற்கும் 70 வருடங்களுக்கும் 100 வருடங்களுக்கும் இடையிலான பழைய அமுக்க குழாய் முறைமைக்கு பதிலாக இயலளவு கூடிய குழாய்களை பதிப்பதன் மூலம் உராய்வு நட்டத்தை குறைத்தல் (குசழை உவழைெ டழளள) இந்த செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்ட நடவடிக்கைகள் 2014 செப்தெம்பர் ஆரம்பிக்கப்பட்டு 2019 யூன் வரையில் 04 வருடங்களும் 09 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு ஆரம்பம் ஆரம்பம் ஆக திட்டமிடப்பட்ட போதும். அத் திகதியில் பூர்த்தி செய்வதற்கு தவறியமையால் 2023 யூன் வரை மேலும் 04 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அடையப்பட்ட ஒட்டு மொத்த செயல் முன்னேற்றம் 70.13 சதவீதமான குறைந்த சதவீதத்தில் இருந்ததுடன் அத் திகதி வரையில் கூட்டு மொத்தமாக ரூபா 11,047 மில்லியன் கிரயம் ஒன்று செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

### யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம்

ரூபா 34,492 மில்லியன் தொகையான செயற்திட்ட கிரயத்தின் கீழ் மேற் கூறப்பட்ட 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டு 2017 ஆகஸ்ட் மாதம் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் செயற்திட்ட காலம் 2026 வரை யூன் வரை நீடிக்கப்பட்டிருந்தது சேயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடாத்திச் செல்லும் போது நீர் தேக்கங்களின் தொடர்புடைமை காரணமாக நீர் தேக்கங்கள் மாற்றப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் ஆரம்ப நோக்கமான யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வாழ்கின்ற 80,000 குடும்பங்களுக்காக சுகாதார வசதிகளை வழங்கும் செயற்திட்ட விடயப் பரப்பை நீக்கி கடல் நீரை மீள் சுழற்சி செய்யும் அலகொண்றை ஸ்தாபிப்பதற்கு விடயப்பரப்பில் உள்ளடக்கப்பட்டு செயற்திட்டத்தின் விடயப்பரப்பு மாற்றப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கடல் நீரை மீள் சுழற்சி அலகில் (ளுறுசுழு) இலக்கிடப்பட்ட பௌதீக செயல் முன்னேற்றம் 83 சதவீதமாக இருந்த போதிலும் அடையப்பட்ட உள்ளபடியான பௌதீக முன்னேற்ற செயல் முன்னேற்றம் 49 சதவீதம் ஆகும்.

### மொறட்டுவை இரத்மலான கழிவு நீர் அகற்றும் செயற்திட்டம் - கட்டம் II

ரூபா 21,682 மில்லியன் ஆன செயற்திட்ட கிரயத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டின் போது கடன் முகவராண்மை நிறுவனத்துடன் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் போது யூரோ 22.5 மில்லியன் மற்றும் இலங்கை ரூபா 4,116 மில்லியன் பெறுமதியில் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ஒப்பந்தகாரர்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தத்திற்காக

ரூபா 1,427 மில்லியன் முற்பணம் ஒன்று 2021 திசெம்பர் 15 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்த போதும் 2022 ஆம் ஆண்டு முதல் கடன் முகவர் நிறுவனம் கடன் பணத்தை செலுத்துதல் கைவிட்டமையினால் மேற்கூறப்பட்ட முற்பண தொகை போதியளவான செயலாற்றல் இன்றி ஒப்பந்தகாரர் நிறுத்தி வைத்திருந்தார். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சகல கடன்களையும் மீள பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் புதிய பம்பி கூட நிர்மாணம், பம்பி கூடம் மற்றும் சுத்திகரிப்பு நவீனமயப்படுத்தல், கழிவு நீர் சுத்திகரிப்புக் கூட நிர்மாணம், கழிவு நீர் இணைப்பை வழங்குதல், நிர்மாணம் மற்றும் நிர்மாண ஒப்பந்த ஆலோசனை போன்ற ஒப்பந்தங்கள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**நகர அபிவிருத்தி பிரிவின் செயற்திட்டம்**

**உபாய வழிகள் நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (SCDP)**

- காலி நகரத்தில் வெள்ள நீரை கட்டுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட வெள்ள நீர் கட்டுப்பாட்டு வடிகாண் முறைமை 16 இனை நிர்மாணிப்பதற்காக தேவையான காணிகள் கையேற்கப்படாமையினால் நிர்மாண நடவடிக்கைகளை செய்ய முடியாதிருந்தது. இந்த செயற்திட்டத்தின் ஆலோசனைச் சேவைக்காக ரூபா 21 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்த செயற்திட்டம் இடை நடுவில் நிறுத்தப்பட்டதன் காரணமாக இந்த செலவினம் பயன் அற்ற செலவினமாக இருந்தது.

- காலி மொறகொட பிரதான வாய்க்கால் மற்றும் பன்சல உப வீதிகளை நிர்மாணிப்பதற்காக இணங்கப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி ரூபா 845 மில்லியன் ஆக இருந்ததுடன் வாய்க்கால் வழியின் மொத்த நீளம் 4.250 மீற்றர் ஆகும். எனினும் ரூபா 397 மில்லியன் செலவில் 1,850 மீற்றர் அளவில் பூர்த்தி செய்து செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டதன் காரணமாக அந்த முழுமையான நலன்களையும் மக்களுக்கு வழங்குவதற்கு முடியாதிருந்தது. செயற்திட்ட நிர்மாணங்களின் தேவையான காணிகளை கையேற்பதற்கு முடியாதிருந்தமை இந்த நிலைமைக்கு காரணமாகும்.

- பெறுமதி டொலர் 202 மில்லியன் ஆன உபாய வழிகள் நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் ஒரு கூறான கண்டி பல்நோக்கு போக்குவரத்து துறை செயற்திட்டம் (Kandy Multimodal Transport Terminal - KMTT) காலரீதியில் ஆரம்பிப்பதற்கு தவறியமையின் காரணமாக அதற்காக ஒதுக்கப்பட்ட டொலர் 92 மில்லியன் கடன் வழங்குதல் கடன் முகவர் நிறுவனத்தினால் இரத்துச் செய்யப்பட்டமையினால் செயற்திட்டம் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

## நகர புனர்வாழ்வு செயற்திட்டத்திற்கு உதவி வழங்கும் செயற்திட்டம் (SCURP)

- 700 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக அப்பில்வத்த வீடமைப்பு செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ரூபா 4,473 மில்லியன் பெறுமதியில் சீன கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாண நடவடிக்கைகள் 2020 ஒக்டோபர் 27 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 17 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. 2022 இன் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் 64 சதவீதம் எதிர்பார்க்கப்பட்ட போதும் ரூபா 1,145 மில்லியன் செலவிடப்பட்டு 22 சதவீத பௌதீக செயலாற்றல் மாத்திரமே அடையப்பட்டிருந்தது.

- மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 1,982 மில்லியன் ஆன 300 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக ஒபேசேகரபுர வீடமைப்பு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2020 மே 05 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2022 ஒக்டோபர் 21 ஆந் திகதி செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஒப்பந்தகார நலிவான செயலாற்றலின் காரணமாக 2022 மார்ச் 29 ஆந் திகதி இந்த செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 271 மில்லியன் செலவிடப்பட்டு அது வரையில் 14 சதவீத செயல் முன்னேற்றம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. எனினும், இது வரை இந்த செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு செயற்திட்டம் மற்றும் வரிசை அமைச்சு எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

- செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் கைநூலின் 2 ஆவது கூறின் கீழ் காணி அபிவிருத்தி செய்யும் 11 செயற்திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 111.5 ஏக்கர் காணிகளை அபிவிருத்தி செய்தற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 04 காணி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது இலக்கிடப்பட்ட 3.58 சதவீதம் ஆன மிகவும் குறைந்த சதவீதம் ஆகும்.

## நகர செயற்திட்டங்களை தயாரிக்கும் வசதிகள் செயற்திட்டம் (UPPF)

- கடன் உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட கடன் தொகை 883 மில்லியனுக்கு சமனான அ.டொலர் 4.65 மில்லியனாக இருந்ததுடன் செயற்திட்டம் 2019 மார்ச் 06 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2022 மார்ச் 31 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதி முதல் செயற்திட்டத்தின் சகல செயற்பாட்டு நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டதன் காரணமாக செயற்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட

ஆலோசனை அறிக்கை 68 பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### அநுராதபுரம் ஒன்றினைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் (AIUDP)

- அநுராதபுரம் ஒன்றிணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தால் 2022 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 2,123 மில்லியன் ஆன 05 பொதிகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 04 பொதிகளில் 02 பொதிகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே ஒப்பந்தம் கையளிக்கப்படாத செயற்திட்ட பொதிகள் 07 ஆக இருந்ததுடன் அந்த செயற்திட்டங்களுக்காக வழங்குவதற்கு இணங்கப்பட்ட கடன் தொகை ரூபா 5,025 மில்லியன் ஆகும்.

- வடக்கு மற்றும் தெற்கு பல் நோக்கு போக்குவரத்து நிலையத்தை நிர்மாணிக்கும் ஆரம்ப நடவடிக்ககளுக்காக ரூபா 288 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் அந்த செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டமையினால் செலவிடப்பட்ட செலவினம் பயன் அற்றதாக இருந்தது.

### பெரும்பாக கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்தை விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் - கட்டம் 03

- பெரும்பாக கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கட்டம் 03 இனை அமுல்படுத்துவதற்காக ஐரோப்பிய முதலீட்டு வங்கி (ஐ.மு.வ) கடன் மூலம் ரூபா 600 மில்லியனும், இலங்கை அரசாங்கத்தின் மூலம் ரூபா 50 மில்லியனும் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தம் கையளிக்கப்படாமையின் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- 03 முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியினை அமுல்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி கடனின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 200 மில்லியன் நிதியேற்பாட்டில் 55 சதவீதமான ரூபா 110 மில்லியனும் இந்த நிகழ்ச்சிதிட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி கடனின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,000 மில்லியன் நிதியேற்பாடுகளில் 58 சதவீதமான ரூபா 576 மில்லியனும், இலங்கை அரசாங்கத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 200 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகளில் 79 சதவீதமான

ரூபா 157 மில்லியனும் நோக்கமிடப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இலங்கை அரசாங்கத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 8 மில்லியன் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டு செலவிடப்பட்டிருந்தது.

- பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக உலக வங்கி கடனின் கீழ் ரூபா 1,900 மில்லியன் மற்றும் மாணியத்தின் கீழ் ரூபா 1,400 மில்லியனும், இலங்கை அரசாங்கத்தின் மூலம் 50 மில்லியனும் ஆக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உலக வங்கி மாணியத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 56 சதவீதமான ரூபா 778 மில்லியன் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

- கிராமிய பாலம் செயற்திட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக நெதர்லாந்து அரசாங்கத்தின் கடனின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 300 மில்லியன் நிதியேற்பாடுகளில் 69 சதவீதம் செலவிடப்பட்டிருந்த போதிலும் இலங்கை அரசாங்கத்தின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 12 மில்லியன் நிதியேற்பாடுகளில் 64 சதவீதமான ரூபா 8 மில்லியன் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### சுகாதார பிரிவில் செயற்திட்டம்.

### இலங்கை உலக வங்கி கடனின் மூலம் அமுல்படுத்தப்பட்ட ஊழுஏஐனு 19 அவசர சிகிச்சை மறறும் சுகாதார செயற்திட்டம்.

- செயற்திட்டத்தின் மூலம் 2021 திசெம்பர் முதல் 2022 சனவரி வரையான காலத்தில் COVID 19 தொற்று நோய் சுற்றிவளைப்புக்களுக்கு ரூபா 16,102 மில்லியன் பெறுமதியான பைசர் தடுப்பூசிகள் 13,999,050 கொள்னவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றின் பெறுகை செயற்பாடுகளுக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

- ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் காலவதியாகிய காலத்தை நீடிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு தடுப்பூசி மாத்திரைகள் 781,560 எண்ணிக்கை 04 தொகுதிகளுக்காக மாத்திரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

- பைசர் தடுப்பூசிகள் 20,907,900 இல் 11,839,500 தடுப்பூசிகள் தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த போதிலும், தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தடுப்பூசிகள் சில வழங்கப்பட்டிருக்குமாயின் சில சுகாதார நிறுவனங்களினால் குறிப்பிடப்பட்ட கால நாட்கள் 30 யை விஞ்சியதன் காரணமாக அந்த தடுப்பூசிகள் பாவனையில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

**விவசாய பிரிவின் செயற்திட்டம்**

**உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் பயிர்ச்செய்கை விளைச்சல்களுக்காக குறித்துரைத்த விலை ஒன்றை பெற்றுக்கொள்ளும் அவசர செயற்திட்டம்.**

- உலக வங்கியின் கீழ் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் பயிர்ச்செய்கை விளைச்சல்களுக்காக சரியான விலையினை வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறுங்கால களஞ்சிய வசதிகளை வழங்குவதன் கீழ் ரூபா 223 மில்லியன் செலவினத்தை செய்து 11 மாவட்ட அலுவலகங்களை மேவுகை செய்யும் வகையில் 26 களஞ்சியங்கள் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 15 களஞ்சியங்களின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட 11 களஞ்சியங்களில் ஒரு களஞ்சியத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட 10 களஞ்சியங்கள் விளைவற்று காணப்பட்டது.

# விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் துறை

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- இலங்கை விளையாட்டு வீரர்கள் வெற்றி பெற்ற சர்வதேச சாதனைகள
- முடிக்கப்படாது கைவிடப்பபடடிருந்த செயற்திட்டங்கள்
- செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்
- வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்
- தேசிய விளையாட்டு சங்கங்களால் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாமை
- தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு தொகுதி விளையாட்டு எகடமியொன்று மற்றும் சர்வதேச விளையாட்டு அரங்கொன்றாக அபிவிருத்தி செய்யப்படல்
- குருநாகல் மலியதேவ வித்தியாலயத்தில் ஈட்டி எறியும் மைதானம் மற்றும் துப்பாக்கியால் சுடும் மைதானத்தை நிர்மாணித்தல்
- தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையம்
    - நிர்மாணச் செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தமை
    - உபயோகத்தைப் பொருட்படுத்தாது பிங்கிரிய பிரதேசத்தில் விளையாட்டு தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக அரசாங்க நிதி விளைவற்று பயன்படுத்தப்பட்டமை
- சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகாரசபை
    - சுகததாச வெளிப்புற விளையாட்டரங்கின் பிரதான நுழைவாயில் மற்றும் இரும்பு வேலி அமைக்கும் செயற்திட்டம் நிறைவு பெறாமை
    - சுகததாச வெளிப்புற விளையாட்டரங்கின் சுற்றுச்சவர் வேலி அமைக்கும் செயற்திட்டம் நிறைவு பெறாமை
    - நீச்சல் குளம் மற்றும் சுழியோட்டக் குளம் பராமரிக்கப்படாமை
    - பிடிகாசு மீதி தீர்க்கப்படாமை
    - சுகததாச வெளிப்புற விளையாட்டரங்கின் பிரதான நுழைவாயில் மற்றும் இரும்பு வேலி அமைக்கும் செயற்திட்டம் நிறைவு பெறாமை
    - சுகததாச வெளிப்புற விளையாட்டரங்கின் சுற்றுச்சவர் வேலி அமைக்கும் செயற்திட்டம் நிறைவு பெறாமை
    - நீச்சல் குளம் மற்றும் சுழியோட்டக் குளம் பராமரிக்கப்படாமை
    - பிடிகாசு மீதி தீர்க்கப்படாமை

- இலங்கை கிரிக்கெட்
    - முற்பண மீதிகள் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை
    - அனுசரணை உரிமை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை
    - தேசிய கிரிக்கெட் மைதானம் மற்றும் பல்விளையாட்டுத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கான பணிகள் இடையில் நிறுத்தப்பட்டமை
    - கிரிக்கெட் விளையாட்டு பயிற்சியாளர்களுக்கு பயன்பெறுவதற்கான நோக்கம் நிறைவேற்றப்படாமை
    - அலுவலகத் தேர்தல் நடத்தப்படாத ாத சங்கங்களுக்கான நிர்வாகச் செலவுகள் கொடுப்பனவு
    - கிரிக்கெட் மைதானத்தில் நீச்சல் தடாகம் அமைப்பதற்கான பணிகள் நிறைவடையாமை
- தேசிய இளைஞர் படையணி
    - திறன்களின் அடிப்படையில் இளைஞர்களை வேலைகளுக்கு வழிகாட்டும் செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்ட நிதி தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற கற்கை நெறிகளுக்கு பயன்படுத்தப’பட்டமை.
    - இளைஞர் படையணி சட்டத்தை திருத்தியமைத்து புதிய சட்டமொன்று இயற்றப்படாமை
    - முற்பணம் மீள அறவிடப்படாமை
    - முற்பணம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை
    - பயன்படுத்தப்பட்டு வருகின்ற வாகனங்கள் படையணியின் பெயரில் பதிவு செய்யப்படாமை
- தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
    - சொத்துக்கள் கணக்கிடு செய்யப்படாமை
    - கணனிகள் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமை
    - விளையாட்டுக் கழகங்கள் மற்றும் இளைஞர் கழகங்களின் நிதி அறிக்கைகள் சபையின் நிர்வாகத்திடம் சமர்ப்பிக்கப்படாமை

# விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் துறை


தேசிய பொருளாதாரத்தில் தீவிரமான பங்களிப்பொன்றை வழங்கும் இளைஞர் சமூகமொன்றை உருவாக்குதல் மற்றும் ஒழுக்கமான விளையாட்டு வீரர் சமூகமொன்றை உருவாக்குவதன் மூலம் ஐக்கிய மற்றும் வளமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பதே விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் பணிக்கூற்றாக இருந்தது. அந்த பெறுபேறுகளை அடைவதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு, விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்,தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்,தேசிய இளைஞர் படையணி, சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபை மற்றும் ஊக்குபதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை நிறுவனம் உட்பட 10 சட்டரீதியான நிறுவனங்கள், விளையாட்டு நிதியம் மற்றும் 66 விளையாட்டுச் சங்கங்கள் மூலம் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

- விளையாட்டு விடயப்பரப்புடன் தொடர்பான கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தொகுத்தல், செயல்படுத்துதல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- அமைச்சின் விடயப்பரப்பிற்கு உட்பட்ட பொது சேவைகளை திறமையாக மற்றும் பொது நட்பு முறையில் வழங்குதல்
- விரயம் மற்றும் ஊழலை ஒழிப்பதன் மூலம் அமைச்சின் பங்கை நிறைவேற்றுவதை உறுதிப்படுததுவதற்கு உதவும் வகையில் நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் நடைமுறைகளையும் மறுசீரமைப்பு செய்தல்.
- இலங்கையில் விளையாட்டு நடவடிக்கைகளை ஊக்குப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் விளையாட்டுத் துறையில் எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்குத் தேவையான உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் ஊக்குவிப்புகளை வழங்குதல்.
- விளையாட்டுக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துதல்
- சர்வதேச ரீதியில் இலங்கையின் பிம்பத்தை கட்டியெழுப்புவதற்கு விளயாட்டைப் பயன்படுத்தக் கூடிய வகையில் புதிய உத்திகளை வகுத்தல் மற்றும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- விளையாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்
- பொது மக்களின் உடல் நலனுக்கான தேவையான வசதிகளை

மேம்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல்

- விளையாட்டு மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டுக்களில் ஊக்கமருந்து பயன்படுத்துவதை எதிர்த்து செயற்படுதல்.
- விளையாட்டு தொகுதிகளின் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்
- விளையாட்டு சங்கங்களின் அமைப்பு மற்றும் விளையாட்டு போட்டிகளை ஊக்குவித்தல்.
- இளைஞர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் தேசிய வேலைத்திட்டத்தை இலக்காகக் கொண்ட அணுகுமுறை மேம்பாட்டுத் திட்டங்களைத் தொகுத்து செயல்படுத்துதல்.
- இளைஞர்களை மையமாகக் கொண்ட சர்வதேச கூட்டுறவு அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்துதல்.
- வேலையற்ற இளைஞர்களை மையமாகக் கொண்ட திறன் அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்துதல்.
- இளைஞர் அமைப்புக்கள் தொடர்பான ஒழுங்கு முறை மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்
- இளைஞர்களின் திறன்கள், திறமைகள் மற்றும் படைப்பாற்றல் ஆகியவை சமூக அங்கீகாரம் பெற்று அவர்களின் அபிலாசைகளை வளர்க்கும் வகையில் இளைஞர் சமூகத்தை இலக்காகக் கொண்ட சிறப்புத் திட்டங்களைத் தொகுத்தல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்குப் பொருத்தமான வகையில் இளைஞர் மனித வள வங்கியைத் தொடங்குதல்.
- இளம் தொழில்முனைவோரை உருவாக்க நடவடிக்கை எடுப்பது மற்றும் அவர்களுக்கு தேவையான ஊக்கத்தொகை மற்றும் புதிய வாய்ப்புகளை வழங்குவதற்கான வழிமுறைகளை செயல்படுத்துதல்.
- விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைசசிற்கு இணைக்கப்பட்ட தொடர்பான திணைக்களம். சட்டரீதியான நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுககு ஒதுக்கப்பட்ட விடயங்களுக்குரிய ஏனைய செயற்பாடுகளைத் தயாரித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

2022 ஆம் வருடத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சிற்கு மற்றும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கு மொத்தம் ரூபா 6,822 மில்லியன் தேறிய ஒதுக்கங்கள் பாராளுமன்றத்தினால் வழங்கப் பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவற்றில் ரூபா 4,908 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வருட இறுதியில் ரூபா 1,914 மில்லியன் ஆன ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் வரைபடத்தில் காட்டப்படுகின்றது.




| | விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் | மொத்தம் |
|---|---|---|---|
| தேறிய ஏற்பாடு ரூபா மில்லியன் | 5841 | 981 | 6822 |
| செலவுகள் | 4106 | 802 | 4908 |
| சேமிப்பு | 1734 | 180 | 1914 |

மூலாதாரம் - 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள்

விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள திணைக்களம் மற்றும் சட்டரீதியான நிறுவனங்களினால் மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுதல் தொடர்பான மாதிரிக் கணக்காய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்படுகின்றன.

**இலங்கை விளையாட்டு வீரர்கள் வெற்றி பெற்ற சர்வதேச சாதனைகள்**

மீளாய்வாண்டில் இலங்கை விளையாட்டு வீரர்கள் 06 முக்கிய சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றி சாதனைகளாக 03 தங்கம், 05 வெள்ளி மற்றும் 12 வெண்கலம் என 20 பதக்கங்களைப் பெற்றுக் கொண்டனர். மேலும் திறந்த சூப்பர் 100 பேட்மிண்டன் போட்டி, ஆசிய கோப்பை போட்டி மற்றும் 2022 ஆசிய வலைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கேற்று சாம்பியன் பட்டத்தை பெற்றிருந்தனர்.

**முடிக்கப்படாது கைவிடப்படடிருந்த செயற்திட்டங்கள்**

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் ரூபா 1,140 மில்லியன் ஒதுக்கப்பட்டு ரூபா 324 மில்லியன் செலவிடப்பட்ட 07 செயற்திட்டங்கள் நிதிப் பற்றாக்குறை, ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஆலொசனை நிறுவனங்களுடன் ஏற்பட்ட பிரச்சனைகள் போன்ற காரணங்களால் பணிகள் முடிக்கப்படாமல் கைவிடப்படடிருந்தன.

### செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்னைய வருடங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட 6 செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 530 மில்லியன் ஆக இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் செலவிடப்பட்ட செலவு ரூபா 315 மில்லியன ஆகும். பல்வேறு காரணங்களால் இத்திட்டங்கள் முடிவடைதல் தாமதமாகி இருந்ததுடன் மூலப்பொருட்களின் விலை உயர்வு மற்றும் நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்வதில் உள்ள சிரமங்கள் ஆகியவை காரணமாக இந்த செயற்திட்டங்களுக்கு இதுவரை செலவிடப்பட்ட செலவினங்களில் இருந்து எதிர்பார்த்த பலன்களைப் பெறுதல் சிரமமாக இருந்தது.

### வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்கங்களின் கட்டளையின் பிரகாரம் தேசிய விளையாட்டு சங்கங்களினால் அடுத்து வரும் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்து அந்த செயல்நடவடிக்கைத் திட்டம் நடப்பாண்டு முடிவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 66 விளையாட்டு சங்கங்களில் 11 விளையாட்டு சங்கங்களால் மட்டுமே 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### தேசிய விளையாட்டு சங்கங்களால் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாமை

2006 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்கங்களின் கட்டளையின் பிரகாரம் தேசிய விளையாட்டு சங்கங்களினால் உறுதிப்படுத்தப்பட்ட நிதிககூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 09 விளையாட்டு சங்கங்களின் நிதிககூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2023 ஆகஸ்ட் மாதம் வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு தொகுதி விளையாட்டு எகடமியொன்று மற்றும் சர்வதேச விளையாட்டு அரங்கொன்றாக அபிவிருத்தி செய்யப்படல்

தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு தொகுதி விளையாட்டு எகடமி மற்றும் சர்வதேச விளையாட்டு அரங்காக அபிவிருத்தி செய்வதறகாக 2017 முதல் 2022 ஆம் ஆண்டு வரை ரூபா 3,866 மில்லியன் ஆன வரவு செலவுத்திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா 606 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ஆனால் அதன் செயற்கை ஓட்ட நிரலில் காணப்பட்ட குறைபாடுகள், பழைய ஓட்ட நிரல் அமைந்துள்ள கேட்போர் கூடத்தின் கூரை காற்றினால் சேதமடைந்திருந்தமை, சிறிய கேட்போர் கூடத்தின் நிர்மாணம் முடிவடையாமை, மின்பிறப்பாக்கி இயந்திரம் பொருத்துதல் முடிவடையாமை மற்றும் சமையலறையை திருத்துதல் உடன்படிக்கை செய்யப்படாமல்

வழங்கப்பட்டிருந்ததால் செலுத்தப்பட்ட ரூபா 5.4 மில்லியன் பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தமை போன்ற காரணங்களால் இச்செயற்திட்டத்தின் எதிர்பார்த்த பணிகள் நிறைவேற்றப்படாததால் முதலீடு செய்யப்பட்ட தொகைக்கு எதிர்பார்த்த பலனைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**குருநாகல் மலியதேவ வித்தியாலயத்தில் ஈட்டி எறியும் மைதானம் மற்றும் துப்பாக்கியால் சுடும் மைதானத்தை நிர்மாணித்தல்**

குருநாகல் மலியதேவ வித்தியாலயத்தில் ஈட்டி எறியும் மற்றும் துப்பாக்கியால் சுடும் மைதானத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 12 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டு 2018 மார்ச் 28 ஆம் திகதி ரூபா 12 மில்லியன் ஆன ஒப்பந்த பெறுமதியில் 06 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு தனியார் ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஆனால் செயற்திட்டத்தின் I ஆம் கட்டம் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் ஈட்டி எறியும் மற்றும் துப்பாக்கியால் சுடும் விளையாட்டிற்காக விளையாட்டு மைதானத்தை பயன்படுத்த முடியாதிருந்தமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற முடியாதிருந்தது.

**தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையம்**

விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சினால் தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையத்தின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத்திற்காக 2018 முதல் 2022 ஆம் ஆண்டு வரை முறையே ரூபா 266 மில்லியன் மற்றும் ரூபா 72 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டின் போது நிலையத்தின் மூலம் பேணிச் செல்லப்படுகின்ற பிரதான பயிற்சி நிகழ்ச்சித் திட்டமான பதவியணியினர்களுக்கு பயிற்சி வழங்கும் 19 நிகழ்ச்சித் திட்டங்கள், எதிர்காலத்திற்கு தயார்படுத்தும் இளைஞர்களுக்கு தலைமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள் 14, தொழில் முயற்சியாளர்களுக்கான 55 நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான தலைமைத்துவ திறன் அபிவிருத்திக்கு 06 நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், உள்ளபடியாக முறையே நிகழ்ச்சித் திட்டங்கள் 04, 24, 7 மற்றும் 1 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

**நிர்மாணச் செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தமை**

2015 முதல் 2017 ஆம் ஆண்டு வரை தேசிய நூதனசாலையொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 90 மில்லியன் மதிப்பீட்டு நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டு ரூபா 71 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், செயற்திட்டம் நிறுத்தப்பட்டதன் காரணமாக செலவிடப்பட்ட பணம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் நோக்கத்தையும் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. நூதனசாலையின் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டு, அந்த கட்டிடத்தில் தேசிய விளையாட்டு மன்றத்தின் அலுவலகம் மற்றும் தேசிய தேர்வுக் குழு நிறுவப்பட்டிருந்தது.

**உபயோகத்தைப் பொருட்படுத்தாது பிங்கிரிய பிரதேசத்தில் விளையாட்டு தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக அரசாங்க நிதி விளைவற்று பயன்படுத்தப்பட்டமை**

குருநாகல் வெலகெதர விளையாட்டரங்கிற்கு அண்மித்ததாக விளையாட்டுத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு 2011 ஆம்ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அதன் பிரகாரம் குருநாகல் நகரத்திற்கு அண்மித்ததாக காணியொன்று தெரிவு செய்யப்படாது குருநாகல் நகரத்தில் இருந்து 55 கீலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பிங்கிரிய பிரதேசத்தில் காணியொன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. இக்காணியில் விளையாட்டு அரங்கு நிர்மாணிப்பதற்காக ரூபா 86 மில்லியனும், உள்ளக விளையாட்டு அரங்கு நிர்மாணிப்பதற்காக ரூபா 207 மில்லியனும், நீச்சல் தடாகம் நிர்மாணிப்பதற்காக ரூபா 87 மில்லியனும் செலவிடப்பட்டபோதிலும் அவற்றின் நிர்மாண நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. அதை நிர்மாணிப்பதற்காக கொண்டு வரப்பட்டிருந்த இரும்பு மேவுகை கட்டிடத்திற்கு அருகில் உள்ள நிலத்தில் போடப்பட்டிருந்ததுடன் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. அதன்படி இந்த தவறான முடிவால் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதியிலிருந்து மேற்படி நிர்மாணத்திற்காக மாத்திரம் ரூபா 380 மில்லியன் விளைவற்றதாக செலவிடப்பட்டதுடன் மற்றும் அந்த தவறான தீர்மானத்திற்கு காரணமான தரப்பினர் அடையாளம் காணப்படவில்லை.அத்துடன் இந்நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்த விளையாட்டுத் தொகுதி நிர்மாணிக்கப்படடிருந்த 15½ ஏக்கர் அளவான காணி விளையாட்டு அமைச்சிற்கு கைளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.



விளையாட்டுக்கூடம்



உள்ளக விளையாட்டு அரங்கு



நீச்சல் தடாகம்

## சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகாரசபை

### சுகததாச வெளிப்புற விளையாட்டரங்கின் பிரதான நுழைவாயில் மற்றும் இரும்பு வேலி அமைக்கும் செயற்திட்டம் நிறைவு பெறாமை

2019 ஆம் ஆண்டில் நிர்மானப் பணிகள் தொடங்கப்பட்ட ஒப்பந்த பெறுமதி ரூபா 50 மில்லியன் ஆன சுகததாச வெளிப்புற மைதானத்தின் பிரதான நுழைவாயில் மற்றும் இரும்பு வேலி அமைக்கும் செயற்திட்டத்தின் நிர்மாணப்பணிகள் 2020 மே 10 இல் முடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்காக ரூபா 32 மில்லியன் செலவிடப்பட்டு 03 வருடங்களுக்கு மேலாகியும் பணிகள் நிறைவடையவில்லை.

### சுகததாச வெளிப்புற விளையாட்டரங்கின் சுற்றுச்சவர் வேலி அமைக்கும் செயற்திட்டம் நிறைவு பெறாமை

நடைபெற்று வரும் வேலைகளில் சேர்க்கப்பட்டுள்ள ரூபா 18 மில்லியன் கிரயமான சுகததாச வெளிப்புற விளையாட்டரங்கின் சுற்றுச்சுவர் அமைக்கும் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2019 செப்டெம்பர் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் 2019 திசெம்பர் 18 அன்று முடிக்கப்பட்டிருக்க வேண்டும். நாட்டில் நிலவும் கோவிட் 19 தொற்று நிலைமை, மூலப்பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் காலநிலை காரணமாக, ஒப்பந்த காலம் சம்பந்தப்பட்ட ஆலோசனை நிறுவனத்தால் 2021 திசெம்பர் 21 வரை நீட்டிக்கப்படடிருந்த போதிலும் இந்த திட்டத்தின் நிர்மாணப் பணிகள் இன்னும் முடிக்கப்படவில்லை.

### நீச்சல் குளம் மற்றும் சுழியோட்டக் குளம் பராமரிக்கப்படாமை

சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபையின் பிரதான நீச்சல் குளம் மற்றும் சுழியோட்டக் குளம் ஆகியவற்றிற்காக நிறுவப்பட்ட நீரேற்று நிலையம் 2010 ஆம் ஆண்டிற்குப் பின்னர் திருத்தப்படவில்லை. 2020 ஆம் ஆண்டு முதல் இந்த நீரேற்று நிலையத்தை திருத்தம் செய்ய வேண்டிய நிலை இருந்தபோதிலும், இத்திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமையால் ஏற்பட்ட நீர் கசிவு காரணமாக பராமரிப்புச் செலவும் அதிகரித்துள்ளது. ஆனால் நிறுவனம் இன்னும் நீரேற்று நிலையத்தை திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.மேலும் சிறுவர்களுக்கான குளம் மூழ்கி இருந்ததால் பயிற்சிகளுக்கு பயன்படுத்தப்படாமல் இருந்ததடன் அதை திருத்தவதற்கு இற்றைவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை

### பிடிகாசு மீதி தீர்க்கப்படாமை

2022 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 2014 ஆம் ஆண்டு முதல் காணப்பட்டு வருகின்ற கூட்டுத்தொகை ரூபா 87 ஆன பிடிகாசு மீதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை அதிகாரசபையினால் எடுக்கப்படவில்லை.

## இலங்கை கிரிக்கெட்

### முற்பண மீதிகள் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை

2018 ஆம் ஆண்டு ஆர்.பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானம் மற்றும் 2020 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கட் மைதானத்தை

நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட முறையே ரூபா 9 மில்லியன் மற்றும் ரூபா 12 மில்லியனும், 2021 ஆம் ஆண்டில் மொனரவில கிரிக்கெட் விளையாட்டரங்கில் டர்ஃப் விக்கெட்டுகளை (வுரசக றுைஉமநவ) நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா 6 மில்லியன் மற்றும் வித்யார்த்த வித்தியாலய மைதான நிர்மாணத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 7 மில்லியனும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### அனுசரணை உரிமை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை

2018 ஆம் ஆண்டில் இலங்கையில் தெற்காசியச் சுற்றுலாவிற்காக பெற வேண்டிய அனுசரணை உரிமைகளுக்கான வருமானமான ரூபா 37 மில்லியன் பெற வேண்டியவையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தும் இது தொடர்பாக நிறுவனம் 2018 ஒக்டோபர் 04 அன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் நீதிமன்ற நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டு வருகின்றது.

### தேசிய கிரிக்கெட் மைதானம் மற்றும் பல்விளையாட்டுத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கான பணிகள் இடையில் நிறுத்தப்பட்டமை

பொலன்னறுவை ஹிங்குராக்கொட பிரதேசத்தில் சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தும் வகையில் தேசிய கிரிக்கெட் மைதானம் மற்றும் பல்விளையாட்டுத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்காக செயறதிட்டம் 2018 ஒக்டோபர் மாதம் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டு 2017 ஆகஸ்ட் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையில் ரூபா 154 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும், எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைவதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் இதுவரையில் தவறியிருந்தது.

### கிரிக்கெட் விளையாட்டு பயிற்சியாளர்களுக்கு பயன்பெறுவதற்கான நோக்கம் நிறைவேற்றப்படாமை

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, கிளிநொச்சி கிரிக்கெட் மைதானத்தில் எஞ்சியுள்ள பணிகளை முடிப்பதற்காக 2018 ஆம் ஆண்டு இலங்கை ரூபாவை கிரிக்கெட் நிறுவனத்தினால் ரூபா 10 மில்லியன் இராணுவ செயற்திட்டக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட போதிலும் அந்த பணத்தில் எதிர்பார்த்த மாகாணத்தில் உள்ள வீரர்கள் மற்றும் கிரிக்கெட் பயிற்சியாளர்கள் பயன்பெறுவதற்காக எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தவறியிருந்தது.

### அலுவலகத் தேர்தல் நடத்தப்படாத ரத சங்கங்களுக்கான நிர்வாகச் செலவுகள் கொடுப்பனவு

தென் மாகாண கிரிக்கெட் சங்கத்தின் அரசியலமைப்பின் பிரகாரம், அதன் அதிகாரிகளால் பொதுச் சபைக் கூட்டம் வருடாந்தம் மற்றும் அலுவலகத் தேர்தல்கள் 3 வருடங்களுக்கு ஒரு முறையும் நடாத்தப்படாததுடன் இலங்கை

கிரிக்கெட் நிறுவனத்தினால் 2006 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 84 மில்லியன் தென் மாகாண கிரிக்கெட் சங்கத்திற்கு நிர்வாகப் பணி, விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விளையாட்டு அபிவிருத்திப் பணிகளுக்காக செலுத்தப்பட்டிருந்தது.

**கிரிக்கெட் மைதானத்தில் நீச்சல் தடாகம் அமைப்பதற்கான பணிகள் நிறைவடையாமை**

பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நீச்சல் தடாகம் அமைப்பதற்கான ஒப்பந்தம் 2019 நவம்பர் 20 அன்று வழங்கப்பட்டு நிர்மாணப் பணிகள் 2019 திசெம்பர் 04 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 147 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் முடிக்கப்படவில்லை. ரூபா 37 மில்லியன் பெறுமதியான ரங்கிரி தம்புலு சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நீச்சல் குளம் நிர்மாணத் திட்டம் 2019 நவம்பர் 20 அன்று நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டும் மீளாய்வாண்டு வரை செயற்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடையவில்லை.

**தேசிய இளைஞர் படையணி திறன்களின் அடிப்படையில் இளைஞர்களை வேலைகளுக்கு வழிகாட்டும் செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்ட நிதி தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற கற்கை நெறிகளுக்கு பயன்படுத்தப'பட்டமை.**

திறன்களின் அடிப்படையில் இளைஞர் யுவதிகளை வேலைகளுக்கு வழிநடத்தும் நோக்கத்துடன் இலங்கை தொழிலாளர் சந்தையில் காணப்படும் பணியாளர்களுக்கு கோட்பாட்டு அறிவு மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்காக 2022ஆம் ஆண்டில் படையணிக்கு ரூபா 90 மில்லியன் மேலதிக ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. அதற்காக நிறுவனம் 4,499 பயிற்சியாளர்களுக்கு 16 பாடநெறிகளைக் கொண்ட வேலை சார்ந்த பயிற்சி வேலைத்திட்டமொன்று 07 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுடன் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டங்களைத் தயாரித்திருந்தது. ஆனால், மேற்கூறிய 2 வேலை சார்ந்த பயிற்சி கற்கை நெறிகள் ஏற்கனவே நிறுவனத்தின் ஏற்பாடுகளின் மூலம் செயல்படுத்தப்பட்டிருந்தாலும் அந்த கற்கை நெறிகள் இரண்டிற்காகவும் மேற்படி நிதியில் இருந்து ரூபா 26 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**இளைஞர் படையணி சட்டத்தை திருத்தியமைத்து புதிய சட்டமொன்று இயற்றப்படாமை**

2011 திசெம்பர் 15 திகதிய அமைச்சரவைத் தீர்மானம் வழங்கப்பட்டு 12 வருடங்களுக்கும் அதிக காலம் கடந்து விட்ட போதிலும் , அமைச்சரவைத் தீர்மானத்தின்படி நாட்டில் இளைஞர் சமுதாயத்தை மேம்படுத்தும் பணியை சிறப்பாகவும், திறம்படவும் மேற்கொள்வதற்கு அதற்கு பொருத்தமான விதத்தில் தற்போதுள்ள இளைஞர் படையணிச் சட்டத்தைத் திருத்தியமைத்து, புதிய சட்டமொன்று இயற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**முற்பணம் மீள அறவிடப்படாமை**

நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்ட 5 பயிற்சி நிலையங்கள் தொடர்பான ஒப்பந்த உடன்படிக்கைகள் 02 முதல் 06 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் இரத்து செய்யப்பட்ட போதிலும், 2016-2017 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை ரூபா 61 மில்லியன் ஆன முற்பணங்கள் மீண்டும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**முற்பணம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை**

படையணியின் 10 புதிய நிலையங்கள் மற்றும் தற்போதுள்ள நிலையங்களின் 21 கட்டிட அலகுகளுக்கான நிர்மாணங்களுக்கான ஒப்பந்தம் திறந்த டென்டர் நடைமுறைக்கு முரணாக அரச நிறுவனமொன்றின் மூலம் மேற்கொள்ளப்படுவதற்கு 2016 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நிர்மாணங்களின் முன்னேற்றம் தோல்வியடைந்ததால் 2022 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இரத்துச் செய்யப்பட்டன. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நிர்மாணப் பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 109 மில்லியன் ஆன முற்பணத் தொகையில் மேலும் அறவிட வேண்டிய ரூபா 38 மில்லியன் ஆன முற்பணத்தை அறவிடுவதற்கு படையணி தவறியிருந்தது.

**பயன்படுத்தப்பட்டு வருகின்ற வாகனங்கள் படையணியின் பெயரில் பதிவு செய்யப்படாமை**

2017 திசெம்பர் 21 ஆம் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் படையணியால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 31 மில்லியன் பெறுமதியான 08 வாகனங்கள் படையணியின் பெயரில் பதிவு செய்யப்படவில்லை.

**தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்**

**சொத்துக்கள் கணக்கிடு செய்யப்படாமை**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 27 ஆம் பந்தியின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் சபையிடம் காணப்பட்ட 61 காணிகளுடன் தொடர்புடைய 235 ஏக்கர் தொடர்பாக நிதிகூற்றுக்களில் வெளிக்காட்டப்படாததுடன் சபைக்குச் சொந்தமான 06 ஏக்கர் 58 பேர்சசஸ் ஆன 06 கட்டிடங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**கணனிகள் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமை**

ஜப்பானில் வேலைவாய்ப்பை வழங்கும் நோக்கில் ஜப்பானிய மொழிப் பாடத்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக 2022ஆம் ஆண்டு ரூபா 4 மில்லியன் பெறுமதியில் 25 மடிக்கணனிகள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், அதற்கான பாடநெறி ஆரம்பிக்கப்படாத காரணத்தினால், மடிக்கணனிகள் மேற்கண்ட நோக்கத்துடன் தொடர்பில்லாத மன்றத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு வழங்கப்பட்டிருந்தன.

**விளையாட்டுக் கழகங்கள் மற்றும் இளைஞர் கழகங்களின் நிதி அறிக்கைகள் சபையின் நிர்வாகத்திடம் சமர்ப்பிக்கப்படாமை**

தேசிய இளைஞர் சேவை மன்றச் சட்டத்தின் படி, மன்றத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மன்றத்தின் சொந்த நிதியில் பேணப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்ட போதிலும், சட்டத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக விளையாட்டுக் கழகங்கள் மற்றும் இளைஞர் கழகங்கள் நிறுவப்பட்டிருந்தன. ரூபா 21 மில்லியன் நிதிச் சொத்துக்களைக் கொண்ட இச்சங்கங்களின் செயற்பாடுகளுக்கு மன்றத்தின் பணியாளர்கள் மற்றும் பௌதீக வளங்கள் பயன்படுத்தப்பட்டதுடன், நிதி அறிக்கைகள் மன்றத்தின் நிர்வாகத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

# மாகாண சபைகள

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- மாகாண சபைகளின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுதல்
- மாகாண சபைகளின் வருமானம் மற்றும் செலவுகள்
    - மாகாண சபைகளின் வருமானம்
    - மாகாண சபைகளின் செலவு
- மூலதனச் செலவுகள் மற்றும் தனியார் தொழில் முயற்சிகள் செலவுகள்
- நிர்மாணங்கள் மற்றும் முதலீடுகள
- மாகாண சபையின் சொத்துக்கள்
- மாகாண சபையின் பொறுப்புக்கள்
- வட மத்திய மாகாண சபை
- தென் மாகாண சபை
- மத்திய மாகாண சபை
- வடமேல் மாகாண சபை
- வட மாகாண சபை
- கிழக்கு மாகாண சபை
- மேல் மாகாண சபை
- சப்ரகமுவ மாகாண சபை
- ஊவா மாகாண சபை

# மாகாண சபைகள்

1987 ஆம் ஆண்டின் போது பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட 13 ஆவது அரசியலமைப்பின் திருத்தத்தினால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட 154 அ (1) உறுப்புரையின் மூலம் மேல், மத்திய, தெற்கு, வடமேல், வட மத்திய , ஊவா, கிழக்கு, வடக்கு, சப்ரகமுவ ஆகிய 09 மாகாண சபைகள் நிறுவப்பட்டிருந்தன. மாகாண சபையொன்று ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுவதுடன் பிரதம செயலாளர் நிருவாக உத்தியோகத்தராகச் செயற்படுவார். சட்டவாக்க சபையின் பிரதானியாக பிரதம அமைச்சர் செயற்படுவதுடன் பிரதம அமைச்சர் உள்ளடங்கலாக 05 அமைச்சர்களை மாகாண சபை உள்ளடக்கியிருக்கும். மாகாண சபைகளில் பின்பற்றவேண்டிய நடைமுறைகள், மாகாண சபைகள் அரசாங்க சேவைக்குரிய விடயங்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட அல்லது அவற்றிற்கு துணையான விடயங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகளை வழங்குவதற்காக 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள 09 மாகாண சபைகளின் உத்தியோகபூர்வமான காலம் முடிவடைந்துள்ளதனால் அரசியலமைப்பின் 154 (உ) உறுப்புரையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் அச்சபைகள் கலைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட்டுள்ளது. அதற்கிணங்க சபையொன்று இல்லாத சப்ரகமுவ, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண சபைகள் 2017 ஆம் ஆண்டிலிருந்தும், வடமேல்,மத்திய மற்றும் வடக்கு மாகாண சபைகள் 2018 ஆம் ஆண்டிலிருந்தும், மேல், ஊவா மற்றும் தெற்கு மாகாண சபைகள் 2019 ஆம் ஆண்டிலிருந்தும் 1989 இன் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணையான ஒழுங்குவிதிகள்) அதிகாரச் சட்டத்தின் 2(1) (அ) பிரிவிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் ஒவ்வொரு மாகாண சபையின் ஆளுநரினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

## மாகாண சபைகளின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுதல்

ஒவ்வொரு மாகாண சபையினாலும் சபையின் நிதியத்தின் நிதி நிலைமையை மற்றும் செயற்பாட்டு நிலைமையை வெளிப்படுத்தும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையின் பிரகாரம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அந்நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் செய்யப்படுதல் வேண்டும். ஆரம்பத்திலிருந்து இற்றை வரைக்கும் மாகாண சபைகளில் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக ஒரே மாதிரியான

கணக்கு முறையொன்று அறிமுகப்படுத்தப்படாததுடன் 2021 மற்றும் 2022 ஆம் வருடங்களில் 09 மாகாண சபைகளினால் பல்வேறு முறைமைகளைப் பின்பற்றி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

மேலும் அந்நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்வேறு வடிவங்கள், பெயர்கள் மற்றும் ஆதாரங்களைப் பயன்படுத்தி நிதிக்கூற்றுக்களில் பெறுமதிகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.மாகாண சபை நிதியக் கணக்கைத் தயாரிப்பதற்கு முறையான ஒரே மாதிரியான வழிகாட்டியொன்று அல்லது சுற்றறிக்கையொன்று அரசினால் அல்லது மாகாண சபைகளினால் வெளியிடப்படாதிருந்ததுடன் அவற்றைப் பகுப்பாய்வு செய்து ஒப்பீட்டளவில் பயன்படுத்தி முடிவுகளை எடுப்பதற்கு முடியாத நிலைமையொன்று காணப்பட்டது.

குறிப்பிட்ட வழிகாட்டியொன்று வழங்கப்படாத காரணத்தினால், மாகாண சபைகளுக்கு தகவல்களை மறைக்கவோ, தவிர்க்கவோ அல்லது தீர்மானம் எடுப்பவர்களை தவறாக வழிநடத்தும் வகையில் தகவல்களை முன்வைப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

இருப்பினும், தற்போதுள்ள நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, பல முக்கியமான கூறுகள் தொடர்பாக பகுப்பாய்வு செய்யப்படுவதற்கு முடியுமான விடயங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## மாகாண சபைகளின் வருமானம் மற்றும் செலவுகள்

மாகாண சபைகளினால் அட்டுறு அடிப்படை, காசு அடிப்படை அல்லது மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படை ஆகிய ஒன்றுக்கொன்று மாற்றமான அடிப்படைகள் பயன்படுத்தப்பட்டிருந்தமை மற்றும் ஒரே மாதிரியான முறை பின்பற்றப்படாமை போன்ற நிலைமைகளின் கீழ் மாகாண சபைகளின் வருமானம் மற்றும் செலவுகள் ஒப்பீடு செய்யப்பட்டிருந்தது.

### மாகாண சபைகளின் வருமானம்

மாகாண சபையின் வருமானம் பிரதானமாக அரசாங்க மானியம், வரி வருமானம், வரியற்ற வருமானம் போன்ற பல்வேறு மூலகங்களை உள்ளடக்கியிருந்தன. 09 மாகாண சபைகளினால் 2022 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபா 419,307 மில்லியனான வருமானம் சேகரிக்கப்பட்டது. அவ்வருமானத்தில் ரூபா 56,726 மில்லியன் வரி வருமானமாகவும் ரூபா 19,277 மில்லியன் வரியல்லாத மற்றும் பிற வருமானங்களாகவும் காணப்பட்டதுடன் அரசினால் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட மொத்தம் ரூபா 343,304 மில்லியன் ஆன அரச மானியமும் உள்ளடங்கியிருந்தது.அதன் பிரகாரம் மாகாண சபைகளினால் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானத்தில் 82 சதவீதம் அரசினால் வழங்கப்பட்ட மானியங்களை உள்ளடக்கியிருந்தது.

### மாகாண சபைகளின் செலவு

ஒவ்வொரு மாகாண சபையாலும் தனியார் தொழில் முயற்சிகள், பிற பொருட்கள் மற்றும் சேவைகள் பராமரிப்பு செலவுகள் உட்பட மீண்டெழும்

செலவுகளும் , மூலதன வடிவில் அபிவிருத்தி செலவுகளும் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டில் 09 மாகாண சபைகளினால் மொத்தம் ரூபா 403,544 மில்லியன் செலவிடப்பட்டது. அந்த செலவில் 96 சதவீதம் அதாவது ரூபா 387,118 மில்லியன் மீண்டெழும் செலவுகளாகவும் 4 சதவீதம் அதாவது ரூபா 16,426 மில்லியன் மூலதனச் செலவுகளாகவும் செலவிடப்பட்டுள்ளது. மொத்த மீண்டெழும் செலவுகளில் 77 சதவீதம் அதாவது ரூபா 298,401 மில்லியன் தனிப்பட்ட சம்பளம் வழங்குவதற்காக மாகாண சபைகளால் செலவிடப்பட்டுள்ளது.

**மூலதனச் செலவுகள் மற்றும் தனியார் தொழில் முயற்சிகள் செலவுகள்**

2022 ஆம் ஆண்டில், தனியார் தொழில் முயற்சிகள் செலவினமாக ரூபா 298,401 மில்லியன் செலவிடப்பட்ட போது, அந்த மாகாணங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 16,426 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது.

விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| மாகாண சபைகள் | 2022 திசெம்பர் 31 இல் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் மொத்த செலவு | 2022 திசெம்பர் 31 இல் மிகை (பற்றாக்குறை) | 2022 திசெம்பர் 31 இல் அரசினால் வழங்கப்பட்ட மானியம் |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| **மேல் மாகாண சபை** | 102,093 | 86,877 | 15,216 | 62,062 |
| **மத்திய மாகாண சபை** | 48,375 | 51,247 | (2,872) | 42,859 |
| **தென் மாகாண சபை** | 52,219 | 52,997 | (778) | 45,357 |
| **வட மேல் மாகாண சபை** | 49,760 | 47,368 | 2,392 | 41,647 |
| **வட மத்திய மாகாண சபை** | 27,519 | 27,655 | (136) | 24,757 |
| **ஊவா மாகாண சபை** | 30,772 | 34,101 | (3,329) | 28,519 |
| **கிழக்கு மாகாண சபை** | 33,984 | 31,633 | 2,351 | 31,680 |
| **வட மாகாண சபை** | 33,959 | 31,314 | 2,646 | 29,395 |
| **சப்ரகமுவ மாகாண சபை** | 40,626 | 40,352 | 273 | 37,028 |
| | **419,307** | **403,544** | **15,763** | **343,304** |

## நிர்மாணங்கள் மற்றும் முதலீடுகள்

(அ) மாகாண சபைகள் அரசாங்கத் திடம் இருந்து பெறப்பட்ட மானியங்களை குறைவாகப் பயன்படுத்தியிருந்தன அல்லது மாகாண சபைகளின் வருமானத்தை சரியாக மதிப்பிடாமல் மத்திய அரசிடமிருந்து ஒதுக்கீடுகளைப் பெற்றதன் காரணமாக பெருமளவு தொகையொன்று நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| மாகாண சபைகள் | 2022 திசெம்பர் 31 இல் மீதி | 2021 திசெம்பர் 31 இல் மீதி |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| **மேல் மாகாண சபை** | 25,500 | 12,000 |
| **தென் மாகாண சபை** | 3,888 | 3,388 |
| **வட மேல் மாகாண சபை** | 9,703 | 6,964 |
| **சப்ரகமுவ மாகாண சபை** | 3,050 | - |

சீரான கணக்கியல் முறைமை இல்லாததால் ஏனைய மாகாண சபைகளின் முதலீடுகள் பற்றிய தகவல்களை கணக்காய்விற்கு பெற முடியாதிருந்தது.

அதற்கு மேலதிகமாக 2022 திசெம்பர் 31 இல் 09 மாகாண சபைகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி பணம் மற்றும் வங்கி மீதிகளொன்று காணப்பட்டன.

| மாகாண சபைகள் | பணம் மற்றும் வங்கி மீதிகள் ரூபா மில்லியன் |
|---|---|
| **மேல்** | 5,041 |
| **மத்திய** | 910 |
| **தெற்கு** | 588 |
| **வட மேல்** | 1,252 |
| **வட மத்திய** | 3,137 |
| **ஊவா** | 1,603 |
| **கிழக்கு** | 1,278 |
| **வடக்கு** | 2,646 |
| **சப்ரகமுவ** | 1,953 |
| **மொத்தம்** | 18,408 |

இதன் பிரகாரம் மாகாண சபைகளுக்கு ஒதுக்கீடுகளை வழங்கும் போது, பொது திறைசேரி, நிதி ஆணைக்குழு, உள்ளூராட்சி அமைச்சு போன்ற நிறுவனங்கள் மாகாண சபைகளினால் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடுகள் மற்றும் சேமிப்புகள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை.

## மாகாண சபையின் சொத்துக்கள்

2021 திசெம்பர் 31 இல் ரூபா 374,492 மில்லியனக இனங்காணப்பட்ட மாகாண சபைகளின் மொத்த சொத்துகளின் அளவு 2022 திசெம்பர் 31 இல் ரூபா

409,697 ஆக இனங்காணப்பட்டிருந்ததுடன் அது 9 சதவீத வளர்ச்சியாகும். 2022 ஆம் ஆண்டில் மாகாண சபைகளின் மொத்த சொத்துக்களில் ரூபா 325,898 மில்லியன் அதாவது 80 சதவீதம் நிதியல்லாச் சொத்துக்களாக இருந்ததுடன் இதில் ரூபா 85,806 மில்லியன் ஆன அதிகளவான நிதியல்லாச் சொத்துக்களை ஊவா மாகாண சபை கொண்டிருந்தது. எவ்வாறாயினும், மேல்மாகாண சபை உட்பட பல மாகாண சபைகளினால் காணி மற்றும் கட்டிடங்கள் உள்ளிட்ட சொத்துக்கள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கும், உரிய நேரத்தில் மீள்மதிப்பீடு செய்வதற்கும், பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் முறையாக கையகப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்வதற்கு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படாமையால் ஒப்பீட்டு பகுப்பாய்வு செய்தல் பயனற்றதாக இருந்தது.

விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| மாகாண சபைகள் | 2022 திசெம்பர் 31 இல் நிதியல்லாச் சொத்துக்களின் மீதி | 2022 திசெம்பர் 31 இல் மொத்தச் சொத்துக்களின் மீதி | 2021 திசெம்பர் 31 இல் மொத்தச் சொத்துக்களின் மீதி |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| **மேல்** | 27,890 | 64,965 | 40,361 |
| **மத்திய** | 6,683 | 9,258 | 11,294 |
| **தெற்கு** | 49,091 | 58,358 | 55,372 |
| **வட மேல்** | 84,011 | 96,693 | 87,869 |
| **வட மத்திய** | 26,921 | 31,997 | 31,396 |
| **ஊவா** | 85,806 | 88,220 | 91,843 |
| **கிழக்கு** | 15,906 | 18,007 | 16,802 |
| **வடக்கு** | 21,886 | 25,763 | 24,930 |
| **சப்ரகமுவ** | 7,703 | 16,436 | 14,625 |
| | **325,897** | **409,697** | **374,492** |

**மாகாண சபையின் பொறுப்புக்கள்**

2021 திசெம்பர் 31 இல் ரூபா 11,893 மில்லியன் ஆன மாகாண சபையின் மொத்தப் பொறுப்பு 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் ரூபா. 10,967 மில்லியன ஆக இருந்தது. 2022 ஆம் ஆண்டில் மொத்த பொறுப்புகளில் ரூபா 2,605 மில்லியன் அதாவது 24 சதவீதம் வடக்கு மாகாண சபைக்குரிய பொறுப்புகள் ஆகும்.

**வட மத்திய மாகாண சபை**

- 2022 ஆம் ஆண்டில் வட மத்திய மாகாண சபைக்கான மொத்த தேறிய ஒதுக்கீடு ரூபா 25,157 மில்லியன் ஆக

இருந்ததுடன் , மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 22,102 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, மாகாண சபைக்கு வழங்கப்பட்ட மொத்த தேறிய ஒதுக்கீட்டில் சேமிக்கப்பட்ட தொகை ரூபா 3,055 மில்லியன் ஆக இருந்ததுடன் அது மொத்த ஒதுக்கீட்டில் 12 சதவீதமாக இருந்தது.

- வடமத்திய மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் ஓய்வூதிய நிதியத்திற்கு வருடாந்த கூட்டுறவு சங்கங்களின் பங்களிப்பு ரூபா 8 மில்லியன் மற்றும் மாகாண சபை நிதியத்திலிருந்து வருடாந்தம் கிடைக்கின்ற ரூபா 10 மில்லியனுடன் வருடாந்த பெறுவனவு ரூபா 18 மில்லியன ஆகும். எனினும் நிதியத்தின் 560 ஊழியர் பயனாளிகளுக்கு வருடாந்தம் செலுத்த வேண்டிய ஓய்வூதியச் செலவு ரூபா 26 மில்லியன் என்பதால் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை நிச்சயமற்றதாக இருந்ததுடன் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான பயனாளிகளுக்கு ஓய்வூதியமாக இன்னும் செலுத்த வேண்டிய தொகை ரூபா 18 மில்லியன் ஆக இருந்தது.

- வட மத்திய மாகாண அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர முகவர் நிலையத்தின் வாகன திருத்தப் பிரிவினால் மீளாய்வாண்டில் ரூபா 23 மில்லியன் மேலதிக பங்குகள் வாங்கப்பட்டிருந்ததுடன் அம்மேலதிக பங்குகளை கொள்வனவு செய்தமை பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் போட்டி விலை மனுக்கள் கோரப்படாமல் மேற்கொள்ளப் பட்டிருந்தது.

- மாகாணக் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த 811 பாடசாலைகளில் 2022 ஆம் ஆண்டில் பிரதேச மற்றும் பிராந்திய அலுவலகங்களால் மேற்பார்வை செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 376 மட்டுமே ஆகும். மேற்பார்வை செய்யப்பட்ட பாடசாலைகளில் 114 பாடசாலைகளின் தர சுட்டெண் பெறுமதி 60 வீதத்திற்கும் குறைவாகவும் சராசரி செயற்பாடுகள் குறைந்த மட்டத்திலும் காணப்பட்டதோடு தேசிய மட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தப்படுகின்ற க.பொ.த (சா.த) மற்றும் உயர்தர பரீட்சை பெறுபேறுகளை ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது வடமத்திய மாகாணம் 09 ஆவது இடத்தைப் பெற்றிருந்தது.

- வடமத்திய மாகாணத்தில் பாடசாலைகளில் இணைக்கப்பட்ட 63 அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் 02 மாதங்கள் முதல் 32 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் , அந்த விடுவிக்கப்பட்ட ஆசிரியர்களில் 61 பேருக்கு விடுவிப்பு செய்யப்பட்ட நாள் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணிக்கு சமூகமளித்தல் , வருகை

மற்றும் புறப்பாடு, விடுமுறை போன்ற தகவல்கள் மற்றும் விடுவிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டு கொடுப்பனவு தொடர்பான தகவல்கள் உறுதிப்படுத்தப்படாமல் வலயக்கல்வி அலுவலகங்களினால் அந்த அதிகாரிகளுக்கு செலுத்தப்பட்டிருந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளின் மொத்தம் ரூபா 257 மில்லியன ஆகும்.

- 290 பாடசாலைகளுக்கு தரநிலை அதிபர்கள் நியமிக்கப்படாத காரணத்தினால், ஆசிரியர் சேவையைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு அதிபர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பதில் கடமையாற்றும் பதவிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 122 பாடசாலை தரநிலை அதிபர்கள் பிரதி அதிபர் பதவிகளில் கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தனர்.

- பிரதான அமைச்சின் ஏற்பாடுகளின் அடிப்படையில், அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், பதவியா மஹாசென் மகா வித்தியாலயம், பதவியா மஹாசென் ஆரம்பப் பாடசாலை மற்றும் பதவியா பராக்கிரமபுர ஆரம்பப் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் ரூபா 66 மில்லியன் ஆன ் 05 நிர்மாணத் திட்டங்கள். 2016 ஒக்டோபர் 2 முதல் 2017 பெப்ரவரி 12 வரையான காலப்பகுதிக்குள் முடிப்பதற்காக ஒப்பந்தம் செய்யப்படடிருந்தும் அந்த ஒப்பந்தங்கள் முடிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்ததுடன் , அவற்றுக்காக செலுத்தப்படடிருந்த தொகை ரூபா 14 மில்லியன் ஆகும்.

### தென் மாகாண சபை

- 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகங்களில் நீதிமன்ற தண்டமாக அறவிடப்பட்டிருந்த மொத்தம் ரூபா 40 மில்லியன் தொகையானது தீர்க்கப்பட வேண்டிய நீதிமன்ற தண்ட மீதியாகக் காணப்பட்டதுடன் இந்தத் தொகையை குறித்த பயனாளி சங்கத்தினை அடையாளம் கண்டு உடனடியாகப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதே போன்று, இந்த மீதியில் 2022 ஆம் ஆண்டிற்கு முன்னைய காலத்திற்குரிய அடையாளம் காணப்படாத ரூபா 28 மில்லியன் தொகையும் மீதியாகக் காணப்பட்டது.

- வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் வாகன திருத்த வேலைகளுக்காக வேறான அலகு ஒன்று அமைக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில், அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனங்களின் திருத்த வேலைகளுக்காக வெளியார் நிறுவனங்களுக்கு ரூபா 7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

- தென் மாகாண சபையின் 08 நிறுவனங்களில் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்துடைய 23 பதவிகளில் உள்ள 39

அதிகாரிகளுக்கு 2019 மே முதல் 2022 திசெம்பர் 31 வரை ரூபா 35 மில்லியன் ரூபா எரிபொருள் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் 2014 சனவரி 02 ஆம் திகதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைக்கு இணங்காது சுப்பர் பெற்றோல் மற்றும் சுப்பர் டீசலுக்காக ரூபா 5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- 2018 ஒக்டோபர் 12 ஆம் திகதிய சனாதிபதியின் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் அலுவலகக் கொடுப்பனவு செலுத்த முடியாத போதிலும் தென் மாகாண சபையின் தலைவருக்கு 2019 ஒக்டோபர் மாதம் தொடக்கம் 2022 ஒக்டோபர் மாதம் வரையில் அலுவலக கொடுப்பனவாக ரூபா 2 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தல் சட்டம் மற்றும் 2007 மே 18 ஆம் திகதிய சனாதிபதி செயலாளர் சுற்றறிக்கையின் பிரகாரம் காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் 49 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்ட 1,131 உறுப்பினர்களில் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் உறுப்பினர்கள் முறையே 536, 652 , 739, 689 மற்றும் 771 பேர் வருடாந்தம் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றை சமர்ப்பித்திருக்கவில்லை.

- பிரதேச சபை சட்டத்தின் மிகைவிதிப்பு தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தீர்மானத்தின் பிரகாரம் தெரிவிக்கப்பட்ட திகதி தொடக்கம் 14 நாட்களுக்குள் மிகைவிதிப்பாளரினால் மாகாண சபை ஆணையாளருக்கு குறித்த தொகையினை செலுத்துதல் வேண்டும். ஆனால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 9 மில்லியன் பெறுமதியான 11 மிகைவிதிப்பு பத்திரங்களுக்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் இலத்திரனியல் வருமானச் செயற்திட்டத்திற்காக 2018 மார்ச் மாதம் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் முகவராண்மையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு ரூபா 6 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2022 ஏப்ரல் மாதமளவில் செயற்திட்டத்தை முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அது முடிக்கப்படுவதந்கு முடியாதிருந்தது. அவ்வாறு திட்டமிட்ட திகதியில் செயற்திட்டம் முடிக்கப்படாததால், மீண்டும் உரிமங்களை அச்சிடுவதற்கு ரூபா 3 மில்லியன் மேலதிக செலவொன்று செய்ய வேண்டி ஏற்பட்டது.

- செயற்திட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்படாது கௌரவ ஆளுநரின் மன்மொழிவொன்றின் அடிப்படையில்

- தென் மாகாணத்தின் அனைத்து அரச நிறுவனங்களையும் ஒன்றிணைத்து தபால் முகாமைத்துவ கணினி நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக 2020 ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி ரூபா 14 மில்லியன் ஆன தொகைக்கு ஒப்பந்த கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இச்செயற்த்திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா 28 மில்லியன் ஆன தொகையொன்று செலவிடப்பட்டிருந்தும், ஒப்பந்தத்தின் பிரகாரம் குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகள் முடிக்கப்படவில்லை. அத்துடன் இதற்காக ரூபா 21 மில்லியன் ஆன தொகைக்கு 86 ஸ்கேனர் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு கட்டமைப்பினை தாபிக்கும் நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

### மத்திய மாகாண சபை

- மத்திய மாகாண அபிவிருத்தித் திட்டத்தின்படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2,181 மில்லியன் ஆன, 1006 வேலை முன்மொழிவுகளில் ரூபா 31 மில்லியன் பெறுமதியான 15 புதிய வேலை முன்மொழிவுகள் ஆரம்பிக்கப்படாததுடன் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 123 மில்லியன ஆன 35 வேலை முன்மொழிவுகளின் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது. மேலும் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 123 மில்லியன் ஆன முழுமையாக பணிகள் முடிக்கப்படாத 50 சதவீதத்திற்கும் அதிகமாக முடிக்கப்பட்டிருந்த முன்மொழிவுகளின் எண்ணிக்கை 26 ஆகும்.

- ஹங்குரன்கெத வலயக் கல்வி அலுவலகத்தினால் ஹங்குரன்கெத மக்கள் வங்கியில் பேணப்பட்டு வந்த நடைமுறைக் கணக்கில் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2021 திசெம்பர் மாதம் வரையான மீதியானது ஆசிரியர் சம்பளங்களை தவறாகப் பயன்படுத்தியதன் மூலம் ரூபா 14 மில்லியன் தொகையான முறைகேடுகள் இடம்பெற்று இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 4 மில்லியன் தொகையொன்று இன்னும் அறவிடவேண்டியிருந்தது. இது சம்பந்தமாக மத்திய மாகாண பிரதம செயலாளரினால் தொடக்க புலனாய்வுக் குழு அறிக்கையானது மத்திய மாகாண கல்வி அமைச்சு செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை அது சம்பந்தமான மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2016 முதல் 2021 வரையான காலத்தில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ்

காணப்படுகின்ற கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சம்பளத்தை தயாரிக்கும் போது சம்பள கடமைகளை நிறைவேற்றிய இரண்டு உத்தியோகத்தர்களால் 14 வங்கி கணக்குகளுக்கு ரூபா 52 மில்லியன் தொகை மற்றும் வங்கி கணக்கு இலக்கத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படாத ரூபா 1 மில்லியனும் ஆக மொத்தம் ரூபா 53 மில்லியன் தொகையொன்று மோசடியாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இச்சம்பவம் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவக்கைகளை எடுப்பதற்குக் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் ஏற்பாடுளுக்கு முரணாக ஆளுநரின் உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் பாதுகாப்பு வாகனங்களின் சாரதிகளினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஓட்டப் பொழிப்புக்களுக்கான எவ்வித மேற்பார்வையொன்றும் இல்லாது கொடுப்பனவுகளாக மீளாய்வாண்டில் ரூபா 1 மில்லியன் ஆளுநரின் தனிப்பட்ட பதவியணி சாரதிகளுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

- 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய சனாதிபதி செயலாளரின் அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்யும் சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கு முரணாக ஆளுனர் பயன்படுத்துகின்ற 02 உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு 2020 மே மாதத்திலிருந்து 2022 ஏப்ரல் மாதம் வரைளான 24 மாத காலப்பகுதிக்காக 6720 லீற்றர் எரிபொருளுக்காக ஏறத்தாழ ரூபா ஒரு மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் திணைக்களத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட வாகனங்களுக்கு ஏற்பட்ட 79 விபத்துக்கள் தொடர்பான ரூபா 65 மில்லியன் நட்டம் சம்பந்தமாக விபத்து இடம்பெற்று 01 ஆண்டிற்கும் 18 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்தும் துரிதமாக நடவடிக்கை எடுத்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு மற்றும் ஏனைய பரீட்சிப்புக்களை முடிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- சேதனப்பசளை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 9 மில்லியன் செலவிடப்பட்டு 3 மண் ஆய்வுகூடங்கள் நவீனமயப்படுத்தப் பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 44 மில்லியன் தொகையான மண் ஆய்வுகூட உபகரணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு கணக்காய்வுத் திகதியான 2023 பெப்வரி 24 ஆந் திகதியில் உள்ளவாறு 09 மாதங்கள் கடந்திருந்தும் உரிய மண்

பரிசோதனை நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆய்வுகூட பொருட்களும் ஏனைய உபகரணங்களும் ஆய்வு கூடத்திற்கு கிடைக்காமையால் இந் நிகழ்ச்சித் திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளை இன்றுவரை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

- மாகாண சுகாதார திணைக்களத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார சேவை முறைமையை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் குறிக்கோளுக்கு முரணான 17 செயற்பாடுகளுக்காக மொத்தம் ரூபா 44 மில்லியன் ஆன தொகை மீளாய்வாண்டில் செலவு செய்யப்பட்டிருந்தது.

- மத்திய மாகாணத்தின் 05 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் 2019 இலிருந்து 2022 வரையான காலப்பகுதியல் வழங்கப்பட்ட 10 மிகைக் கட்டண சான்றிதழ்கள் தொடர்பாக ரூபா 9 மில்லியன் தொகையான மிகைக் கட்டணம் உள்ளூராட்சி திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

- தொடர்ச்சியாக காணப்பட்டு வந்த மத்திய அரசின் சுகாதாரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 172 மில்லியன் ஆன முற்பணமான மீதி தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் அமைந்துள்ள மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையின் 219 கடைகளில் 196 கடைகளுக்காக 2001 ஆம் ஆண்டிலிருந்து 2022 திசெம்பர் 31 வரையான காலப்பகுதி தொடர்பாக அறவிட வேண்டிய நிலுவையான கடை வாடகை ரூபா 16 மில்லியன் ஆக இருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரையும் அப்பணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதில் 13 கடைகளுக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை.

- பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 268 ஆவது அத்தியாயம் மற்றும் வீடமைப்பு நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க ஒரு திட்டமின்றி 2010 ஆம் ஆண்டில் ரூபா 7 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கடுகிதுல வாடிவீடு அதிகாரமற்ற ஒரு நிர்மாணமாகக் கருதப்பட்டு கொத்மலை பிரதேச சபையின் தலைவரால் கட்டிடத்தை உடைத்து அகற்றுமாறு கட்டளை இடப்பட்டிருந்தும் அந்த ஆண்டின் போது கட்டிடத்தின் திருத்த வேலைகளுக்காக ரூபா 1 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

- மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட 04

நிறுவனங்களில் காணப்பட்ட ரூபா 12 மில்லியன் மொத்த தொகையான 34 இயந்திரங்களும் உபகரைணங்களும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாததன் அடிப்படையில் பயன்படுத்தாது காணப்பட்டன. இவற்றினைப் பரீட்சித்து திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டில் வர்த்தக ரீதியான விவசாய ஏற்றுமதி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெகிந்த மற்றும் வெலிகொடவத்த பிரிவுகளிலுள்ள விவசாயி நலனாளிகளுக்கு 70 சதவீத அரசாங்கத்தின் பங்களிப்பின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 6 மில்லியன் மொத்தத் தொகையான 54 சிறிய நீர் வழங்கல் தொகுதிகளும் அவை தொடர்பாக வழங்கப்பட்ட 1500 லீற்றர் பிளாஸ்டிக் நீர் தாங்கிகளும் மற்றும் 500 லீற்றர் பசளை தாங்கிகளும் விவசாயிகளுக்கு வழங்கி 08 மாதம் அளவான காலம் கடந்திருந்தும் பரீட்சிப்பு திகதியான 2022 ஒக்தோபர் 04 ஆந் திகதி வரை அந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

- மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் 15 வலய கல்வி அலுவலகங்களில் மீளாய்வாண்டின் இறுதியளவில் 505 அதிபர் வெற்றிடங்களுக்காக பதில் கடமை அதிபர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை கண்டி, தெனுவர, கம்பளை, கடுகஸ்தோட்டை, வத்தேகம, நாவுல தெல்தெனிய, ஹங்குரன்கெத, மாத்தளை ஆகிய வலயங்களில் அதிபர் தரத்தில் 188 நபர்கள் மிகையாகக் காணப்பட்டனர்.

- தெல்தெனிய வலயக்கல்வி அலுவலகத்திற்கு அங்கீகரித்த பாடசாலை செயற்பாட்டு உதவியாளர் பதவி 63 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை 137 நபர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளதனால் 74 நபர்கள் மிகையாகக் காணப்பட்டனர்.

### வடமேல் மாகாண சபை

- வடமேல் மாகாண சபைக்காக ஒதுக்கப்படடிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 38,791 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 37,367 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ரூபா 1,424 மில்லியன் அதாவது தேறிய நிதியேற்பாட்டில் 4 சதவீதமான நிதியேற்பாடு மாத்திரமே சேமிக்கப்பட்டு இருந்தது. அந்த மொத்த சேமிப்பில் ரூபா 717 மில்லியன் அதாவது 32 சதவீதம் மட்டுமே மூலதன ஒதுக்கீட்டில் இருந்து வந்ததுடன் , மீண்டெழும் ஒதுக்கீட்டின் சேமிப்பு ரூபா 706 மில்லியன் அதாவது 2 சதவீதம் மட்டுமே ஆகும்.

- வடமேல் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின்

நீண்டகால காணி குத்தகையின் கீழ் 10 பிரதேச செயலக பிரிவுகளில் 17 சந்தர்ப்பங்களுக்குரிய 01 ஆண்டு முதல் 12 ஆண்டுகள் வரையான காலப் பகுதிக்குரியதாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 98 மில்லியன் அறவிட வேண்டியதாக காணப்பட்டது.

- வடமேல் மாகாண மனித வளங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான செயற்பாட்டு வருமானமான பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைகளில் முறையே ரூபா 56 மில்லியன் மற்றும் ரூபா 130 மில்லியன் பெற வேண்டிய வருமானம் ஒன்று மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்டதுடன் அதில் ஓராண்டுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மீதிகள் முறையே ரூபா 28 மில்லியன் மற்றும் ரூபா 13 மில்லியன் ஆக இருந்தன.

- வடமேல் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் 2009 - 2014 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த ரூபா 3 மில்லியன் ஆன 07 மிகை அறவீட்டுச் சான்றிதழ் தொடர்பாக துரித நடவடிக்கை ஒன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- கூட்டுறவுச் சங்க சட்டத்தின் பிரகாரம் அனைத்து பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் பதிவாளர்களினாலும் குறிப்பிட்டுள்ளவாறு வருடாந்த தேறிய இலாபத்தில் 10 சதவீதத்திற்கு மேற்படாத மற்றும் ரூபா 500 இற்கு குறையாத தொகையொன்றை கூட்டுறவு நிதியத்திற்கு பங்களிப்பு தொகையாக ஒவ்வொரு ஆண்டும் செலுத்த வேண்டிய போதிலும் , கூட்டுறவுச் சங்கங்களினால் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட தொகை ரூபா 77 மில்லியன் ஆக இருந்தது.

- வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் இரண்டு கூட்டுறவு உதவி ஆணையாளர் பிரிவுகளில் அமைந்துள்ள கூட்டுறவு சங்கங்களில் ரூபா 99 மில்லியன் ஆன பண மோசடி அல்லது பணப் பற்றாக்குறை மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய புலனாய்வொன்றை மேற்கொள்வது பலவீனமான நிலையில் காணப்பட்டது.

- வடமேல் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் குருணாகல் மாவட்டத்தின் மருந்துகள் தேவைப்பாட்டிற்காக 2014 ஆம் ஆண்டு முதல் 2022 காலப்பகுதியில் மருத்துவ வழங்கல் பிரிவிடமிருந்து (MSD) குருணாகல் பிரதேச சுகாதார அலுவலகத்திற்கு கிடைத்திருந்த மருந்துகளில் ரூபா 15 மில்லியன் பெறுமதியான மருந்துகள் மற்றும் பெறுமதி இனங்காண முடியாத 37,716 ஆன சத்திரசிகிச்சை பொருள் இருப்பொன்று தரத்தில்

சித்தியடையாதிருந்ததுடன் அவற்றை மீளாய்வாண்டின் இறுதி வரையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- வடமேல் மாகாண மனித வளங்கள் அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான நடைமுறைக் கணக்கொன்று பல வருடங்களாக மேலதிகப்பற்று நிலையில் காணப்பட்டதால் மீளாய்வாண்டின் மேலதிகப்பற்று வட்டியாக ரூபா 1 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 04 சேமிப்பு கணக்குகளில் மீளாய்வாண்டின் இறுதியில், ரூபா 66 மில்லியன் மீதியொன்று காணப்பட்டது.

- பிரதான முதலமைச்சர் நிதியத்தில் வருடாந்த வட்டிப் பணத்துடன் புதுப்பிக்கப்படுகின்ற சுனாமி வைப்பு நிலையான வைப்புக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதியில், ரூபா 8 மில்லியன் மீதியொன்று காணப்பட்டதுடன் , இப்பணத்தை பயன்படுத்துவது தொடர்பாக எவ்வித கொள்கைத் தீர்மானமொன்றும எடுக்கப்படாததுடன் அப்பெறுமதி வடமேல் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது.

- கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் நிலையம் ஒன்றாக செயற்பட்ட வாரியபொல இழைய ஆய்வுக்கூடம் 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மீண்டும் இழைய ஆய்வுக்கூடம் ஒன்றாக ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. புதிய இழைய ஆய்வுக்கூடம் ஒன்றை மாவத்தகம தெனவர்வத்த அரசின் பண்ணையில் நிர்மாணிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 21 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் அதன் நிர்மாணமும் மீளாய்வாண்டின் இறுதிவரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- வடமேல் மாகாண ஜனகலா மன்றத்தின் புதிய கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக 2020 ஆம் ஆண்டிற்குள் ரூபா 159 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை அதன் நிர்மாணப் பணிகள் நிறைவு பெறவில்லை. மேலும், ரூபா 8 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டிருந்த மின்மாற்றியும், முறையே ரூபா 8 மில்லியன மற்றும் ரூபா 11 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட நீர் தாங்கியும், துணை மின் நிலைய கட்டிடமும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் விளைவற்றதாகக் காணப்பட்டன.

- வடமேல் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் வலகும்புர களிமண் உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டில் ரூபா 10 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படவில்லை.

- வடமேல் மாகாண விவசாயத் திணைக்களத்தினால் 2021 ஆண்டு திசெம்பர் 31 இல் ரூபா 16 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 50 ஞூழுடயச Power Daler களின் குருநாகல் மற்றும் வாரியபொல விவசாய வலய அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த முறையே 04 மற்றும் 07 இயந்திரங்களும் வாரியபொல பண்ணைக்கு வழங்கப்பட்டிருந்த 08 இயந்திரங்களும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட 31 அலகுகளும் செயற்திறனாக பயன்படுத்தப்படுகிறதா என்பது தொடர்பாக பின்தொடரல் மேற்கொள்ளப்படடிருக்கவில்லை.

**வட மாகாண சபை**

- பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை பிரகாரம் சம்பந்தப்பட்ட மாகாண அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படாது வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் 47 ஊழியர்களுக்கு மற்றும் அதன் தலைவருக்கும் மீளாய்வாண்டில் மற்றும் அதற்கு ஆண்டிலும் கூட்டுமொத்தம் ரூபா 5 மில்லியன் தொகையொன்று போக்குவரத்துப் படி, தொலைபேசிக் கொடுப்பனவு, விசேடபடி மற்றும் எரிபொருள் படிகளாக செலுத்தப்பட்டிருந்தன.

- வடக்கு மாகாணத் திறைசேரிக்கு 2016 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதிக்காக அனுப்பப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 266 மில்லியன் முத்திரைத் தீர்வைகள் பொது வைப்புக் கணக்கில் பேணப்பட்டுவந்த போதிலும் குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு உரியகாலப் பகுதியில் அவற்றை அனுப்பவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- 2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் தனியார் மருத்துவ நிறுவனங்கள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஊடாக தனியார் சுகாதார சேவைகளை ஒழுங்குபடுத்தும் பேரவைக்கு அனுப்பி பதிவுச் சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான சான்றிதழொன்று பெறப்படாமல் 167 தனியார் மருந்தகங்கள் மாகாண சபைக்குட்பட்ட பிரதேசங்களில் இயங்கி வந்தன.

- 2018 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டுவரையான காலத்தில் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ் 34 பாடசாலைகளுக்காக 06 இலிருந்து 12 மாதங்கள் வரையிலான ஒப்பந்தகாலத்தை கொண்ட கூட்டுமொத்தம் ரூபா. 515 மில்லியன் பெறுமதியான 34 கட்டட நிர்மாண வேலைகளிற்குரிய ஒப்பந்தகால நீடிப்பு

மேலும் ஆரம்ப ஒப்பந்த காலத்தின் இரு மடங்கிற்கும் அதிகமான காலப்பகுதியாக 12 இலிருந்து 26 மாதங்கள் வரையில் வழங்கப்பட்டிருந்தும் நாளதுவரை குறித்த செயற்றிட்டம் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

- வடக்கு மாகாணசபையின் நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா. 20 மில்லியன் பணமோசடி தொடர்பில் விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டு மாகாணசபையின் நிதியினை அறவிட்டுப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

- மாநகர சபை கட்டளைச்சட்டம், நகர சபை கட்டளைச்சட்டம் மற்றும் பிரதேச சபை அதிகாரச்சட்டங்களின் பிரகாரம் அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு மக்களின் வரி பணத்தில் பெற்ற பணத்தினை பயன்படுத்த வேண்டியபோதிலும் , வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் வடக்கு மாகாணத்திலுள்ள 34 உள்ளூராட்சி நிறுவனங்களில் 33 நிறுவனங்களால் மீளாய்வாண்டிறுதியில் ரூபா 4,388.47 மில்லியன் வட்டி உழைக்கும் நோக்குடன் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

### கிழக்கு மாகாண சபை

- 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அரசின் மானியம் ரூபா 20,482 மில்லியன் முதல் ரூபா 29,964 மில்லியன் வரை அதாவது 46 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் , மாகாண சபையின் வருமான சேகரிப்பு ரூபா 3,839 மில்லியன் முதல் ரூபா 2,596 மில்லியன் வரை அதாவது 32 சதவீதத்தால் கணிசமானளவு குறைவடைந்துள்ளது. மேலும் மீண்டெழும் செலவுகள் ரூபா 30,643 மில்லியன் முதல் ரூபா 32,895 மில்லியன் வரை 7.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

- மதிப்பீடுகள் இன்றி கிழக்கு மாகாணத்தில் பல்வேறு மூலதனச் செலவினங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 2,575 மில்லியன் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் , ரூபா 1,634 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 941 மில்லியன் ஆன விவசாய மேம்பாடு, வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்ற மாகாண அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

நடைமுறைப்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

- மாகாணத் திட்ட பணி அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 22 மில்லியன் செலவிடப்பட்டு 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பணிகள் 2023 மார்ச் 31 வரையில் நிறைவு பெறாத காரணத்தினால் கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த முடியுமாக இருந்தும் எதிர்பார்க்கப்பட்ட சுற்றுலா சேவைகளை நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருந்தது.

- மாகாண சபையினால் 2018 ஜனவரி முதல், மூன்று நடைமுறை வங்கிக் கணக்குகளில் ஏறத்தாழ ரூபா 414 மில்லியன் மீதியொன்று எவ்வித நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றதாக வைக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் மாத இறுதியில் அது ரூபா 640 மில்லியனாக அதிகரித்துள்ளது. மேலே குறிப்பிட்டுள்ளபடி, 2018 ஜனவரி முதல் 2022 திசெம்பர் வரையான காலப்பகுதியில் வங்கி நடைமுறைக் கணக்குகளில் பணம் விளைவற்றதாக காணப்படுவதற்கு அனுமதித்ததன் மூலம் அரசிற்கு அண்ணளவாக ரூபா 281 மில்லியன் நிதி இழப்பொன்று ஏற்பட்டிருந்தது.

- உலக வங்கியின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள மல்வத்து சூரிப்போடை வீதியில் 02 பாலங்களை நிர்மாணிப்பது தொடர்பில் பறை அடிக்கும் நடைமுறையை பின்பற்ற வேண்டியிருந்தமையினால் ரூபா 150 மில்லியன் தொகையொன்று நட்டஈடாக செலுத்த வேண்டி ஏற்பட்டதுடன் அதன் விளைவாக ரூபா 72 மில்லியன் நட்டமொன்று மாகாண சபைக்கு ஏற்பட்டிருந்தது.

- சுகாதார மற்றும் பாதுகாப்பு சேவைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ரூபா 58 மில்லியன் தொகையொன்று ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திறகு பங்களிப்பாக உரிய சேவை வழங்கும் நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ,இந்த பங்களிப்புகள் அந்தந்த நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டதா என்பதை உறுதிப்படுததுவதற்கான எவ்வித சான்றுகளும் காணப்படவில்லை. மேலும் மேற்படி பங்களிப்புத் தொகையின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட ரூபா 6 மில்லியன் பெறுமதி சேர் வரி அந்த நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த முறைசாரா கொடுப்பனவுகள் இதுவரை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### மேல் மாகாண சபை

- சனாதிபதி செயலாளரின் 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்யும் சுற்றறிக்கையின் பிரகாரம் கௌரவ ஆளுனரின் பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்ற உச்ச அளவு உத்தியோகபூர்வ

வாகனங்களின் எண்ணிக்கை 02 மற்றும் பாதுகாப்பு வாகனமொன்றாக இருந்த போதிலும் மேல் மாகாண ஆளுனர் அவர்களுக்கு பாதுகாப்பு வாகனத்தையும் உள்ளடக்கி 04 உத்தியோகபூர்வ வாகனங்கள் பயன்படுத்துவதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக விசாரித்து பார்ப்பதற்காக நிதி மற்றும் செயலாற்றல் அறிக்கை மீளாய்வுக் குழுவொன்று ஆளுனரின் அங்கிகாரத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டு அக்குழுவிற்காக வழக்கமான கடமை நேரங்களிலேயே பங்குபற்றிய அதிகாரிகளுக்கு தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 3 மில்லியன் கொடுப்பனவு செலுத்தப்படடிருந்தது.

- 2018 ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதிய ஜனாதிபதி செயலாளரின் பொதுச் செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சபை தலைவருக்காக வீட்டு வாடகை கொடுப்பனவொன்று செலுத்துவதற்கு நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிராதபோது 2009 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை மாதாந்தம் ரூபா 50,000 வீதம் மொத்தம் 8 மில்லியன் வீட்டு வாடகை கொடுப்பனவொன்று செலுத்தப்படடிருந்தது.

- மேல்மாகாணத்தில் மாகாண சபையின் வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை சாசனத்தின் கீழ், மேல்மாகாணத்தில் வீதிப் பயணிகள் போக்குவரத்திற்காக பேருந்துகளை இயக்கக்கூடிய வழித்தடங்களுக்கான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் டெண்டர் முறையின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பேருந்து சாரதிகளுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும். ஆனால் அதற்கு முரணாக அதிகார சபையால் 2022 திசெம்பர் 31 இல் வழங்கப்பட்டிருந்த 6,161 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களில் 5,064 அனுமதிப்பத்திரங்கள் அல்லது வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையில் 82 சதவீதம் முறையான டெண்டர் நடைமுறைக்கு வெளியே வழங்கப்பட்டிருந்தன.

- மேல்மாகாண சபையின் விடயப்பரப்பிற்குள் அடங்காத மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருக்கு ரூபா 27 மில்லியன் பெறுமதியான பிராடோ ஜீப் வாகனமொன்று மாகாண ஆளுநரின் அனுமதியின் பேரில் வழங்கப்பட்டதுடன் அதற்காக 2021 திசெம்பர் 07 முதல் 2023 திசெம்பர் 29 வரை காப்புறுதிக் கட்டணமாக ரூபா 557,770 சபை செயலகத்தினால் செலுத்தப்படடிருந்தது.

- வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் மத்திய பயிற்சிப் பாடசாலையின் கனரக வாகனப் பயிற்சி நெறிகளுக்காக 2007ஆம் ஆண்டில் ரூபா 3 மில்லியன் ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்ட

பேருந்து சுமார் 03 வருடங்களாக விளைவற்றதாக ஹோமாகம பேருந்து நிலைய தளத்தில் பாதுகாப்பற்ற நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

- மேல் மாகாணத்தில் பதிவுசெய்துள்ள முச்சக்கர வண்டிகளை அதிகாரசபையின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற முச்சக்கர வண்டி பணியகத்தில் பதிவுசெய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 3 மில்லியன் பெறுமதியான 50,000 அடையாள அட்டை கவர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவை 05 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக அதிகாரசபையின் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

- ரூபா 158 மில்லியன் பெறுமதியான 02 கொங்கிரீட் இடும் இயந்திரங்கள் 2012 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் அவை 10 வருட காலப்பகுதிக்குள் 15 வீதிகளில் 420 இயந்திர மணித்தியாலங்களின் நிர்மாணப்பணிகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப்பட்டு, குறைப் பயன்பாடுடையதாக காணப்பட்டன.

- 2012 ஆம் ஆண்டில் ரூபா 6 மில்லியனிற்கு கொள்வனவு செய்யப்பட்ட கெப் இயந்திரம், கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து எந்தவொரு செயற்திட்டத்திலும் பயன்படுத்தப்படாமல் திவுலப்பிட்டிய முன் பூர்த்தி தளத்தில் விளைவற்றதாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

- பணியாளர்கள் மற்றும் பயிற்சிப் பிரிவிற்கு ஆஜளு மென்பொருளை நிறுவுவதற்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா 2 மில்லியனும் 2022 ஆம் ஆண்டில் ரூபா 3 மில்லியனும் ஆக மொத்தம் ரூபா 5 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் உரிய மென்பொருள் அமைப்பு 2023 மே வரை பயன்படுத்தப்படவில்லை.

- மீரிகம ”செத் செவன” முதியோர் இல்லத்தின் கூரை மற்றும் சுவரைச் சீரமைப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 17 மில்லியன் செலவிடப்பட்டதுடன் அக்கட்டிடத்தின் ஏனைய தேவைகளான கதவுகள் மற்றும் ஜன்னல்கள் பொருத்தப்படாத காரணத்தினால் 2023 மே வரையில் பயன்படுத்தவதற்கு முடியாத நிலையில் இருந்தது.

- மாகொல சான்றளிக்கப்பட்ட பாடசாலையின் கணினிப் பிரிவு, சிற்றூழியர் குடியிருப்புகள் மற்றும் 2021 ஆம் ஆண்டில் ரூபா 11 மில்லியன் செலவில் கட்டப்பட்ட விளையாட்டுக் கூடம் 2023 யூன் மாதம் வரையில் விளைவற்றதாக காணப்பட்டன.

- சாதாரண கல்வி நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் (GEMP) கீழ் கிரீன்பாத் பயிற்சி நிலையத்திற்காக 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு

செய்யப்பட்ட ரூபா 11 மில்லியன் பெறுமதியான பொருட்கள் 2022 திசெம்பர் 31 வரை ஒரு வருடத்திற்கும் மேலாக விளைவற்றதாக காணப்பட்டன.

- மாகாண சபையின் விடயப்பரப்பிற்குள் அடங்காத கம்பஹா மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினருக்கு பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த வாகனம் 2022 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளாகியிருந்த காரணத்தால் திருத்தங்கள் செய்வதற்கான செலவு ரூபா 19 மில்லியன் ஆகும். அதற்காக உரிய காப்புறுதிக் கம்பனியால் ரூபா 7 மில்லியன் பணத்தை செலுத்துவதற்கு இணங்கி கொண்டிருந்ததுடன் மிகுதி ரூபா 12 மில்லியன் ஆன தொகை மாகாண சபையால் செலுத்தப்பட்டிருந்தது.

- சிறீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபைக்குச் சொந்தமான ரூபா 7 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியான ஒரு கெப் வாகனம் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தீயால் முழுமையாக அழிவடைந்துள்ளது இதற்காக வாகனத்திற்குப் பொறுப்பான சாரதி மற்றும் வாகனத்தைப் பயன்படுத்திய உத்தியோகத்தர் பொறுப்புக்கூற வேண்டிய போதிலும் வாகனத்தைப் பயன்படுத்திய உத்தியோகத்தருக்கு எதிராக உரிய ஒழக்காற்று நடவடிக்கை எடுக்கப்படாது மாகாண அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருந்தும் இன்னும் ஒப்பந்த அடிப்படையில் மாகாண சேவையில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

- 2014 சனவரி 01 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றிக்கையின் பிரகாரம் மாதத்தின் முதலாம் திகதி காணப்படும் சாதாரண பெற்றோல் மற்றும் டீசல்களின் விலையினை அடிப்படையாகக் கொண்டு எரிபொருள் படி கணிப்பீடு செய்யப்படாது உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகைமையுள்ள 52 உத்தியோகத்தர்களுக்கு மாதத்தின் முதலாம் திகதியில் காணப்பட்ட ஒரு லீற்றர் எரிபொருளின் விலையாக சுப்பர் பெற்றோல் மற்றும் சுப்பர் டீசலின் விலையினை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த எரிபொருள் படி கணிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஒக்தோபர் மாதம் வரையான காலத்தில் ரூபா 6 மில்லியன் ஆன தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக் குழுவின் சிபாரிசு மற்றும் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது 2004 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து 2023 ஏப்ரல் மாதம் வரை உத்தியோகத்தர்களின் தொடக்க சம்பளத்தின் 1∴3 மற்றும் ¼ பங்கு ஒரு படியாகச் செலுத்தப்பட்டு வருவதுடன் 2019 ஏப்ரல் 21 ஆந் திகதியோடு ஏஜ ஆவது மேல் மாகாண சபையின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்து புதிய ஒரு மாகாண சபை

தெரிவுசெய்யப்பட்டிருக்காத நிலைமையின் கீழ் உத்தியோகத்தர்களுக்கு தொடக்க சம்பளத்தில் ¼ பங்காகும் வகையில் செலுத்தப்பட்டிருந்த மொத்த படிகள் ரூபா 15 மில்லியன் ஆகும்.

- தாபன விதிக் கோவையின் பிரகாரம் மாதாந்த வீட்டு வாடகையாக கொடுப்பனவொன்று செலுததப்படுவதற்கு முடியாத போதிலும் மேல் மாகாண சபையின் உயர் பதவிகளை வகிக்கும் 11 அதிகாரிகளுக்கு 05 வருடங்களுக்கும் மேலாக ரூபா 20 மில்லியன் மாதாந்த உத்தியோகபூர்வ வீட்டு வாடகைக் கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்தது.

- வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2012 ஆம் ஆண்டில் அஸ்போல்ட் உற்பத்திக்காக தார் சூடாக்குவதற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 28 மில்லியன் பெறுமதியான னுநஉயவெநைெ இயந்திரம் நிறுவப்பட்டு 10 வருடங்கள் கடந்துள்ள போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை 535,680 கிலோ கிராம் தார் மட்டுமே உற்பத்திக்காக பயன்படுத்தப் பட்டுள்ளதுடன் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டபோது நிறுவனத்தின் பொருளாதார நன்மை கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- மாகாண சபையின் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகள் 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையில் மற்றும் பெறுகை நடைமுறையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மாகாண சபை கட்டிடத்தின் பாதுகாப்பு சேவைகள் பெறப்பட்டபோது வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகையொன்று மேற்கொள்ளப்படாது வருடாந்தம் ரூபா 49 மில்லியனுக்கு பொருளாதார மேம்பாட்டு பணியகத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

- மாகாணத்தில் உள்ள பல பேருந்து வழித்தடங்களுக்கு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு விலைமனு கோரப்பட்டு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான கடிதங்கள் அனுப்பப்படடிருந்தன. அக்கடிதம் கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் பேருந்து போக்குவரத்து சேவையில் சேர்க்கப்பட்டு போக்குவரத்து சேவையை ஆரம்பிக்க வேண்டிய போதிலும், மொத்தமாக 14 ரூபா மில்லியன் செலுத்தியிருந்த 18 விண்ணப்பதாரர்கள் பயணிகள் சேவை அனுமதி பெற்று 01 வருடம் 08 மாதங்கள் கடந்துள்ள போதிலும் , பேருந்துகள் இயக்கத்தில் சேர்க்கப்படாமையால் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவதற்கான அடிப்படை நோக்கம் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை.

- மாகாண வீதி அதிகாரசபையினால் 2022 ஆம் ஆண்டின் போது வீதி சமிக்ஞை பலவகைகளை நிர்மாணிப்பதற்காக தேவையான பொருட்களை கொள்வனவு செய்யும் போது ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரம் விலைமனு கோரப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சமிக்ஞை பலகைகளைப் பொருத்துவதற்குத் தேவையான இரண்டு பொருட்களுக்கு மாத்திரம் ரூபா 9 மில்லியன் அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாது மாகாண ஆளுனரின் அங்கீகாரத்தின் அடிப்டையில் மாத்திரம் மேல் மாகாண சபைக்கும் மேல் மாகாணத்தின் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கும் நாடளாவிய பதவிகளுக்காக 50 உத்தியோகத்தர்கள் சட்டரீதியற்ற முறையில் ஒப்பந்த அடிப்படையில், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டமை மற்றும் அந்த உத்தியோகத்தர்களின் ஒப்பந்த காலத்தை அவ்வாறே நீடிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டின் இறுதியில் மேல் மாகாண சபையில் காணப்பட்ட 135 ாடசாலைகள் மூடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

- கொழும்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் காணப்பட்ட 06 உத்தியோகபூர்வ மனைகளளும், 02 ஆசிரியர் குடியிருப்புகளும், கம்பஹா மாவட்டத்தில் உத்தியோகபூர்வ மனையொன்றும், 02 ஆசிரியர் குடியிருப்புகளும், களுத்துறை மாவட்டத்தில் 05 உத்தியோகபூர்வ மனைகளளும், 35 ஆசிரியர் குடியிருப்புகளும், உத்தியோகபூர்வ மனைகளாகப் பயன்படுத்தப்படாது குறிப்பிட்ட கல்லூரிகளின் ஏனைய பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருவதால் , அக்கல்லூரிகளில் பணிபுரியும் அதிபர்களுக்கு மற்றும் ஆசிரியர்களுக்கு வசதியாக பணிபுரிவதற்கான வாய்ப்பு மற்றும் மாகாண சபைக்கு வருமானமொன்றை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப் பு இழக்கப்பட்டிருந்தது.

- மேல்மாகாண சபை செயலகத்தின் 18 உத்தியோகத்தர்கள் 2022 திசெம்பர் 31 இல் 05 தொடக்கம் 30 வருடங்களன காலப்பகுதியில் இடமாற்றம் செய்யப்படாது ஒரே சேவை நிலையத்திலேயே பணியாற்றி வருகின்றனர்.

- மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் தகைமை அடிப்படையில் 362 ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 153 ஊழியர்களும் ஆக அதிகாரசபையின் நடவடிக்கை களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக 515 ஊழியர்கள்

சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதுடன் மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதற்கேற்ப பதவியணி அங்கீகரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

- மேல்மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய 03 மாவட்டங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்வி நிர்வாக சேவையில் 20 அதிபர்கள், அதிபர் சேவையில் 262 அதிபர்கள், 256 பிரதி அதிபர்கள், 47 உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரியர் சேவையில் 1,893 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன.

### சப்ரகமுவ மாகாண சபை

- மாகாண பிரதம அமைச்சின் செயலாளரினால் சப்ரகமுவ அபிவிருத்தி நிர்மாணங்கள் மற்றும் இயந்திரங்கள் அதிகார சபை சம்பந்தமாக 2022 சனவரி மாதத்தில் வழங்கப்பட்ட தொடக்க புலனாய்வு அறிக்கையின் மூலம் இனங்காணப்பட்ட ரூபா 54 மில்லியன் தொகையான நட்டங்கள் பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

- நூல் நிலைய சேவைகள் சபையின் அங்கத்தவர்களுக்கு 2015 ஆம்ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை படிகளாக ரூபா 5.5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தும் நூல் நிலைய சேவைகள் சபையை தோற்றுவிக்கும் குறிக்கோளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 9 மில்லியன் தொகைக்கு 20,651 புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும், அவற்றில் 7,028 புத்தகங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது 08 ஆண்டுகள் காலமாக நூல் நிலைய மண்டபத்தில் நிலத்தில் குவித்துவைக்கப்பட்டிருந்தன.

- சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் ஒவ்வொரு நபருக்கும் தகைமையுள்ள எரிபொருள் படியினை மற்றுமொரு நபருக்கு வழங்குவதற்கு நிதியேற்பாடு ஒதுக்கப்படாதபோது, கௌரவ ஆளுனர் அவர்கள் நாட்டிற்கு வெளியே இருந்த காலத்தில் அவருக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா ஒரு மில்லியனுக்கு கிட்டிய பிரத்தியேக செயலாளருக்குச் செலுத்தப்பட்டதுடன் கொடுப்பனவை அங்கீகரித்த மற்றும் சான்றுறுதிப்படுத்திய அதிகாரியிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.

- அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க சப்ரகமுவ வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை முன்னைய ஆண்டு தொடர்பான பங்கிலாபம் மாகாண சபை நிதியத்திகு செலுத்தப்படாதிருந்தும் மற்றும் அதிகாரசபையின் செலவுகளுக்காக மாகாண திறைசேரியிடமிருந்து நிதிகள்

பெற்றுக்கொள்ளப்படாதிருந்தும் அதிகாரசபையின் ஊழியர் நியதிச்சட்டக் கோவையின் பிரகாரம் , 2022 ஆம் ஆண்டில் சேமிக்கப்பட்ட விடுமுறையின் அடிப்படையில் படிகளாக ரூபா 2 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் தனிப்பட்ட பஸ் உரிமையாளர்களின் கடனுக்காக சப்ரகமுவ வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு பிணையாக இருக்க முடியாத போதிலும் , அவ்வாறான கடன்களுக்காக அதிகாரசபை பிணையாக இருந்தது. இதில் 31 நபர்கள் ரூபா 3 மில்லியன் தொகையை செலுத்த தவறியதன் காரணமாக பிணையாளராக அதிகாரசபை பொறுப்பொன்றிற்கு உட்பட்டிருந்தது.

**ஊவா மாகாண சபை**

- ஊவா மாகாண சபையின் 6 ஆவது உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்ததன் பின்னர் பெயரளவுப் பதவியான தலைவரின் தனிப்பட்ட பதவியணியிலுள்ள 11 உத்தியோகத்தர்களுக்காக 2022 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2022 யூலை 31 ஆந் திகதி வரை ஊவா மாகாண சபைக்கு எதுவித சேவையும் பெற்றுக்கொள்ளாது சம்பளமும் படிகளுமாக ரூபா 4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளாது 2013 ஆம் ஆண்டின் போது நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட உடவளவ சுற்றுலா ஓய்வகத்திற்கு 2022 ஆம் ஆண்டளவில் ஊவா மாகாண சபையின் மூலம் ரூபா 41 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் 2022 ஆகஸ்ட் மாதமளவில் இந்த ஓய்வகமும் கடைகளும் சுற்றலாதாரர்களுக்காக திறக்கப்படாததன் அடிப்படையில் செலவு செய்யப்பட்ட பணத்திலிருந்து மாகாண சபைக்கு இதுவரை வருமானத்தை உழைக்க முடியாதிருந்தது.

- 2016 ஆம் ஆண்டில் ரூபா 131 மில்லியன் என மதிப்பிடப்பட்டு ரூபா 88 மில்லியனிற்கு வழங்கப்பட்ட ஊவா மாகாண சபையின் உத்தியோகத்தர்களுக்கான ஐந்து மாடி வீடமைப்புத் தொகுதியின் நிர்மாண ஒப்பந்தத்திற்காக ரூபா 50 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இதுவரை வேலைகள் முடிவுறத்தப்பட்டிருக்கவில்லை. இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் தாமதமானதால், அதன் கிரயம் ரூபா 205 மில்லியனாக அதிகரித்துள்ளது. அதன் பிரகாரம் மாகாண சபை நிர்வாகத்தின் பலவீனம் காரணமாக தொடக்க மதிப்பீட்டின் படி 56 சதவீதம் அல்லது ரூபா 74 மில்லியன் அதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

- நோய்க்கான சிகிச்சை சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் வெளிநாட்டவர்களுக்கு ஆயுர்வேத வசதிகளை வழங்கி வருமானத்தை உழைப்பதனை குறிக்கோளாகக் கொண்டு பல்லகெடுவ ஆயுர்வேத வைத்தியசாலையில் சமையலறை மற்றும் மருந்தகத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 24 மில்லியன் மதிப்பீடொன்று செய்யப்பட்டு ரூபா 19 மில்லியனிற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அதன் வேலைப்பகுதிகளில் 45 சதவீதம் அளவானவை நிறைவேற்றப்பட்டு, நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் குறிப்பிட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்ட முடியாதிருந்தது.

- ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் மாகாண சபையின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் , 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 4 மில்லியன் செலவிடப்பட்டு, பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலையில் மருத்துவ வாயு முறைமையை ஸ்தாபிக்கும் நடவடிக்கையானது 2021 ஆகஸ்ட் 17 ஆந் திகதியளவில் முடிவடைந்திருந்ததுடன் 2022 நவம்பர் 18 ஆந் திகதியளவில் இந்த முறைமை விளைவற்றுக் காணப்பட்டது.

- மொனராகலை பிரந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் மற்றும் பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவில் மருந்து களஞ்சியத்திற்காக 2016 இலிருந்து 2019 வரையான காலப்பகுதியில் ரூபா 6 மில்லியன் செலவிடப்பட்டு 02 சூரிய சக்தி மின்சார முறைமைகள் பொருத்தப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 15 ஆந் திகதியளவில் அச் சூரிய சக்தி மின்சார முறைமைகள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டன.

- மஹியங்கனை கல்வி வலயத்தில் 2000- 2016 காலப்பகுதிக்காக ஆசிரியர் சேவை நியதிச்சட்டத்தில் உள்ளடக்கப்படாத 24 ஆசிரியர் ஆலோசகர் பதவிக்காக 24 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு 2020 சனவரி மாதத்திலிருந்து 2022 செப்தெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கு மொத்தமாக ரூபா 72 மில்லியன் சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது

# உள்ளுராட்சி அதிகாரசபைகள

## கணக்காய்வு அவதானிப்புக்கள

- நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல் மற்றும் கணக்காய்வு அபிப்பிராயம்
- ஆதனவரி, வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானங்களை அறவிடல்.
    - நிலுவை வருமானங்களை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை.
    - அறவிட வேண்டிய நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவிடப் படாமை
    - மூலதன வருமானம்
- சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்
    - காணி மற்றும் கட்டிடங்கள்
    - மோட்டார் வாகனங்கள்
    - முதலீடு
    - காசு மற்றும் வங்கி கணக்குகள
    - உள்ளுராட்சி நிறுவனங்களின் கடன்
- மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை.
- உள்ளுராட்சி நிறுவனங்களின் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முக்கியமான விடயங்கள்

# உள்ளூராட்சி அதிகாரசபைகள

## நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல் மற்றும் கணக்காய்வு அபிப்பிராயம்

இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் 341 இன் மூலம் அமுல்படுத்தப்படுவதுடன் அந்த உள்ளூராட்சி நிறுவனங்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அதிகாரத்தின் மூலம் அமுல்படுத்தப்படும் 24 மாநகர சபைகள் சட்டத்தின் 255 ஆவது அதிகாரத்தின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற 41 நகர சபைகளையும் மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற 276 பிரதேச சபைகளையும் உள்ளடக்கி இருந்தது. இந்த உள்ளூராட்சி நிறுவனங்களில் 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் மற்றும் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் தொடர்பான பொழிப்பு பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்படுகின்றது.

| உள்ளூராட்சி நிறுவனங்களின் வகை | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சபைகளின் எண்ணிக்கை | 2023 பெப்ரவரி.28 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்த சபைகளின் எண்ணிக்கை, | கணக்காய்வு அறிக்கை விநியோகித்த சபைகளின் எண்ணிக்கை | 2023 பெப்ரவரி.28 இல் உள்ளவாறு விநியோகிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் கணக்காய்வு அபிப்பிராயம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | முனைப்புழியற்ற அபிப்பிராயம் | முனைப்புழியுள்ள அபிப்பிராயம் | மறுப்பு அபிப்பிராயம் | பாதகமான அபிப்பிராயம். |
| **மாநகர சபைகள்** | 24 | 24 | 24 | 18 | - | 03 | 03 |
| **நகர சபைகள்** | 41 | 41 | 41 | 39 | - | 01 | 01 |
| **பிரதேச சபைகள்** | 276 | 275 | 275 | 263 | 02 | 04 | 06 |
| **மொத்தம்** | <u>341</u> | <u>340</u> | <u>340</u> | <u>320</u> | <u>02</u> | <u>08</u> | <u>10</u> |

(குச்சவெளி பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.)

## ஆதனவரி, வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானங்களை அறவிடல்.

மீளாய்வாண்டில் மேற்கூறப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் நானாவித வாடகை மற்றும் அனுமதிப் பத்திரக் கட்டணங்களுக்காக சிட்டையிடல் வருமானம் ரூபா 34,284 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| உள்ளூராட்சி நிறுவனங்களின் வகை | ஆதனவரி ரூபா. மில்லியன் | வாடகை ரூபா. மில்லியன் | அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா. மில்லியன் | ஏனைய வருமானம் ரூபா. மில்லியன் | மொத்த வருமானம் ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| மாநகர சபைகள் | 7,699 | 1,592 | 444 | 6,736 | 16,471 |
| நகர சபைகள் | 1,380 | 875 | 94 | 1,446 | 3,795 |
| பிரதேச சபைகள் | 2,357 | 2,822 | 441 | 8,398 | 14,019 |
| மொத்தம் | **11,435** | **5,289** | **979** | **16,580** | **34,284** |

### அவதானிப்புக்கள்

- உள்ளூராட்சி நிறுவனங்களில் 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையிலான கால வீச்சில் காணப்படுகின்ற ஆதனவரி மதிப்பீடு செய்யும் தாமதத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு ஆதனவரி அறவிடாமை மற்றும் அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் தரச் சான்றிதழ் விநியோகித்து ஆதனவரி திருத்தப்படாமையின் காரணமாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அறவிட வேண்டிய கணிசமான ஆதனவரி அளவு அறவிடப்படாமல் காணப்பட்டது.
- கால ரீதியில் வாடகை மதிப்பீடு செய்யப்படாமை, மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை அறவிடுவதில் தாமதம் மற்றும் ஆதனவரி உடன்படிக்கை நாளதுவரையாக்காமையின் காரணமாக அநேகமான உள்ளூராட்சி நிறுவனங்களில் கிடைக்க வேண்டிய வாடகை வருமானம் கைவிடயப்பட்டிருந்தது.
- ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் வியாபார அனுமதிப் பத்திரம் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொண்டு அதன் பிரகாரம் வருமானங்கள் சிட்டையிட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யாமையால் சபைக்கு கிடைக்கின்ற வருமானம் மாத்திரம் சிட்டையிடப்பட்டமையால் கிடைக்க வேண்டிய கணிசமான வியாபார அனுமதிப் பத்திர வருமானம் இழக்கப்பட்டிருந்தது.
- வருமானத்தை அறவிடுவதற்கான உப விதிகள் விதிக்கப்படாமை, உப விதிகளை நாளதுவரையாக்காமை, வருமானம் அறவிடும் உரித்து வருடாந்த வாடகைக்கு வழங்கும் கேள்வி நடைமுறைகளில் நலிவின் காரணமாக அறவிடக்கூடிய ஏனைய வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

**நிலுவை வருமானங்களை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை.**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி நிறுவனங்களில் கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 20,347 மில்லியன் ஆக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| உள்ளூராட்சி நிறுவனங்களின் வகை | ஆதனவரி ரூபா. மில்லியன் | வாடகை ரூபா. மில்லியன் | அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா. மில்லியன் | ஏனைய வருமானம் ரூபா. மில்லியன் | மொத்த நிலுவை ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|---|
| மாநகர சபைகள் | 7,314 | 1,968 | 80 | 2,190 | 11,553 |
| நகர சபைகள் | 1,288 | 638 | 7 | 215 | 2,148 |
| பிரதேச சபைகள் | 2,008 | 1,270 | 55 | 3,312 | 6,645 |
| மொத்தம் | **10,610** | **3,876** | **143** | **5,718** | **20,347** |

**இந்த நிலுவை ஏற்படுவதற்கு பின்வரும் விடயங்கள் தாக்கமளித்திருந்தது.**

- ஆதனவரி மற்றும் வாடகையை அறவிடுவதற்காக சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை.
- வாடகை வருமானம் அறவிடுவதற்காக வாடகை உடன்படிக்கைகளின் நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை.
- நிலுவை வியாபார அனுமதிப் பத்திரத்தை அறவிடுவதற்காக வழக்குத் தொடராமை.
- ஏனைய வருமானங்களை அறவிடுவதற்காக சட்டங்களின் ஏற்பாடுகள், உப விதிகளின் ஏற்பாடுகள் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை.

**அறவிட வேண்டிய நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவிடப் படாமை.**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி நிறுவனங்களில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,628 மில்லியன் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 10,589 மில்லியன் என்பன மாகாண சபைகளிலிருந்து அறவிட வேண்டியிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| உள்ளூராட்சி நிறுவனங்களின் வகை | நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா. மில்லியன் | முத்திரைக் கட்டணம் ரூபா. மில்லியன் | மொத்தம் ரூபா. மில்லியன் |
|---|---|---|---|
| மாநகர சபைகள் | 121,2 | 3,18 | 3,302 |
| நகர சபைகள் | 28 | 902 | 930 |
| பிரதேச சபைகள் | 1,479 | 6,507 | 7,986 |
| மொத்தம் | **1,628** | **10,589** | **12,217** |

நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் குறித்துரைத்த பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்குதல் மாகாண சபையினால் பிற்போடப்பட்டிருந்ததுடன் அது உள்ளூராட்சி நிறுவனங்களின் வரவு செலவுத் திட்டம் மற்றும் திட்டமிடல் செயற்பாடுகளுக்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது.

### மூலதன வருமானம்

மீளாய்வாண்டில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மத்திய அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் ஏனைய மூலங்களிலிருந்து ரூபா 7,129 மில்லியன் மூலதன நிதி உதவி கிடைத்திருந்ததுடன் சபை நிதியத்தினையும் உள்ளடக்கி ரூபா 8,996 மில்லியன் ஆண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| உள்ளூராட்சி நிறுவனங்களின் வகை | மூலதன வருமானம் ரூபா. மில்லியன் | மூலதன செலவினம் ரூபா. மில்லியன் | சேமிப்பு ரூபா. மில்லியன் |
|---|---|---|---|
| மாநகர சபைகள் | 1,870 | 2,312 | 88,694 |
| நகர சபைகள் | 1,318 | 1,106 | 774,506 |
| பிரதேச சபைகள் | 3,940 | 5,577 | 2,732 |
| மொத்தம் | **7,129** | **8,996** | **3,596** |

## சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

### காணி மற்றும் கட்டிடங்கள்

நாட்டில் வணிகப் பெறுமதியுடைய காணிகள் மற்றும் கட்டிடங்களில் கணிசமான அளவின் உரித்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமாக இருந்தது. நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 229,246 மில்லியன் ஆகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| உள்ளூராட்சி நிறுவனங்களின் வகை | பெறுமதி ரூபா. மில்லியன் |
|---|---|
| மாநகர சபைகள் | 88,333 |
| நகர சபைகள் | 50,876 |
| பிரதேச சபைகள் | 90,037 |
| மொத்தம் | **229,246** |

மேற்கூறப்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்களில் மேல் மாகாணம் மற்றும் வட மத்திய மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களில் மாத்திரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தற்போதைய சந்தை விலையில் மீள் மதிப்பீடு செய்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### மோட்டார் வாகனங்கள்

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 10,792 ஆக இருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 26,877 மில்லியன் ஆகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| உள்ளூராட்சி நிறுவனங்களின் வகை | வாகனங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா. மில்லியன் |
|---|---|---|
| மாநகர சபைகள் | 3,145 | 11,238 |
| நகர சபைகள் | 1503 | 2,966 |
| பிரதேச சபைகள் | 6144 | 12,674 |
| மொத்தம் | **10,792** | **26,877** |

### முதலீடு

உள்ளூராட்சி நிறுவனங்களில் பிரதான நோக்கம் சட்டத்தால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுகின்றமையால் அதற்காக சபையின் வருமானத்திற்கு ஈடாகின்ற வகையில் செலவினங்கள் திட்டமிடப்பட்டு பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும் உள்ளூராட்சி நிறுவனங்களில் அநேகமானவற்றின் பாதீடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீடு சரியாக தயாரிக்காமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டு அவை வருமானம் உழைக்கும் நோக்கங்கள் உள்ள நிலையான வைப்புக்கள் மற்றும் ஏனைய வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| உள்ளூராட்சி நிறுவனங்களின் வகை | முதலீட்டுத் தொகை ரூபா. மில்லியன் |
|---|---|
| மாநகர சபைகள் | 7,942 |
| நகர சபைகள் | 3,159 |
| பிரதேச சபைகள் | 9,850 |
| மொத்தம் | **20,951** |

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள். பொது வீதிகள் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் பொது மக்கள் நலன்புரி நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் சரியான பிரகாரம் நிறைவேற்றப்படாதிருக்கும் போது அந்த நிதியத்தை நிலையான வைப்புக்களாக

பேணிச் செல்வது பிரச்சினையான நிலைமையாக இருந்தது.

**காசு மற்றும் வங்கி கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி நிறுவனங்களின் வங்கி கணக்குகளில் காணப்பட்ட மற்றும் கையிலுள்ள காசு மீதி ரூபா 7,821 மில்லியன் ஆகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| உள்ளூராட்சி நிறுவனங்களின் வகை | தொகை ரூபா. மில்லியன் |
|---|---|
| மாநகர சபைகள் | 880 |
| நகர சபைகள் | 1,103 |
| பிரதேச சபைகள் | 5,838 |
| மொத்தம் | **7,821** |

**உள்ளூராட்சி நிறுவனங்களின் கடன்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களின் உள்நாட்டு கடன் நிதியம் (LLDF) இலிருந்தும் மற்றும் ஏனைய நிறுவனங்களிலிருந்தும் பெறப்பட்ட கடனின் அளவு ரூபா 7,068 மில்லியன் ஆகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| உள்ளூராட்சி நிறுவனங்களின் வகை | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன் ரூபா. மில்லியன் | ஏனைய கடன் ரூபா. மில்லியன் | மொத்தம் ரூபா. மில்லியன் |
|---|---|---|---|
| மாநகர சபைகள் | 1,417 | 3,286 | 4,703 |
| நகர சபைகள் | 1,293 | 128 | 1,422 |
| பிரதேச சபைகள் | 656 | 287 | 943 |
| மொத்தம் | **3,367** | **3,701** | **7,068** |

**மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை.**

மீளாய்வாண்டின் போது மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 226 ஆம் பிரிவு, நகர சபை கட்டளைச் சட்டத்தின் 182 ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 172 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் 135 நபர்களிடமிருந்து ரூபா 6 மில்லியன் சபை நியத்திற்கு அறவிடுவதற்காக 10 மிகைக் கட்டணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதும் அந்த மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேற்கூறப்பட்ட பொது அவதானிப்புக்களுக்கு மேலதிகமாக அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முக்கியமான விடயங்கள் கீழே பின்வரும் பொழிப்பில் காண்பிக்கப்பட்டுள்ளது.

- மத்திய அரசாங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெற்ற அ.டொலர் 232 மில்லியன் கடன் தொகையைப் பயன்படுத்தி கொழும்பு மாநகர சபையில் மலம் அகற்றும் முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக 2022 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் ரூபா 23,210 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 19,971 மில்லியன் தொகையை கணக்கீடு செய்வதற்கோ அல்லது வெளிப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்காமல் அது பணமாக மீளச் செலுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த ரூபா 3,239 மில்லியன் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.
- நீர்கொழும்பு மாநகர சபை 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கொள்வனவு செய்த மற்றும் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 17 மில்லியன் ஆன 07 சொத்துக்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.
- இரத்தினபுரி மாநகர சபையின் நகர சபைக் கட்டிடத்தில் மின்சாரம் முறைமையை பழுதுபார்க்கும் போது மின்சாரத் துணைப்பாகங்களுக்காக ரூபா 5.3 மில்லியன் மற்றும் 1046 ஊழிய நாட்கள் செலவிடப்பட்டிருந்தது. எனினும் அதற்கு முறையான திட்டமொன்று (Electrical Drawing) மற்றும் கிரய மதிப்பீடொன்றும் தயாரித்து பட்டயம் பெற்ற மின்சாரப் பொறியியலாளரை அழைத்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.
- எம்பிலிபிட்டி நகர சபையின் 2019 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட (LED) அறிவித்தல் பதாதைக்காக ரூபா 2.7 மில்லியன் செலவினம் 20 மாதங்களில் தீர்த்து வைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அறிவித்தல் பதாதை ஸ்தாபிக்கப்பட்டு 34 மாதங்களில் வருமானம் 35,500 மட்டும் ஆக இருந்தது.
- நிவித்திகல பிரதேச சபையின் கூட்டுப்பசளை தளத்திற்காக 2019 ஆம் ஆண்டு முதல் செலவிடப்பட்டிருந்த ரூபா 9 மில்லியன் மற்றும் 2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதி மாகாண சபையிலிருந்து

கிடைத்த ரூபா ஒரு மில்லியன் ஆன பேலர் இயந்திரமும் மின்சாரம் இல்லாமையினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- நிலத் தகுதிச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் அயகம சந்தைத் தொகுதியின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அத்திவாரம் மற்றும் தூண்களின் அடிப்படை (Column Shaft) மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் போது 2022 ஆம் ஆண்டின் போது புரிந்துணர்வு உடன் படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் பூர்த்தி செய்யப்பட்ட வேலைக்காக ரூபா 2 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.
- பலாங்கொடை பிரதேச சபையின் வெலிஓய நகரத்தில் 2015 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட ரூபா 27 மில்லியன் ஆன இரண்டு மாடிக் கட்டிடம் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.
- மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்த குருநாகல் மாநகர சபையின் சபை உறுப்பினரின் நோய் நிலைமைக்காக நிதி உதவியாக ரூபா ஒரு மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.
- குருநாகல் நகரத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய நீர் வடிகாலமைப்புத் திட்டம் (Master Drainage Plan) திருத்துவதற்கு உரிய துறைகளைப் பரீட்சிப்பதற்காக 2022 மே 17 ஆம் திகதி ரூபா 540,000 தொகை முற்பணமாக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த வடிகாலமைப்புத் திட்டம் திருத்துதல் விரைவாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 திசெம்பர் வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை.
- குருநாகல் மாநகர சபையின் நீர் பிரிவின் மூலம் நீர் பயன்பாட்டில் மேற்கொள்கின்ற மாற்றங்களை இனங்காண்பதற்காக மொத்த நீர்மானி பொருத்துதல் மற்றும் குழாய்கள் மூலம் நீரைப் பகிர்ந்தளிக்கும் முறைமையை நாளதுவரையாக்குவதற்காக ரூபா 1.5 மில்லியன் பெறுமதியான நீர் உபகரணங்களில் 06 வகைகளைக் கொள்வனவு செய்திருந்த போதிலும் எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.
- குருநால் மாநகர சபையின் மத்திய சந்தையின் I கட்ட நிர்மாணம் தனியார் நிறுவனம் ஒன்றுடன் ரூபா 949 மில்லியன் தொகையில் உடன்படிக்கை செய்திருந்த போதிலும் இந்த நிர்மாண ஒப்பந்தத்திற்காக கேள்வி கோரும் போது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்து தரமிடல்களுக்கு உயர்ந்த தகைமை கோரப்பட்டிருந்தமையினால் மாநகர சபையுடன் தொடர்பினை பேணிச்செல்கின்ற கேள்விதாரரின் கேள்வி மாத்திரம் பெறப்பட்டு திறந்த போட்டிற்கு இடமளிக்கும் வகையில் மதிப்பீட்டுத் தொகையினை விட ரூபா 270 மில்லியன் அதிகரித்த

தொகையில் கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது.

- குருநாகல் மாநகர சபையினால் மத்திய சந்தை நிர்மாணத்தின் போது மாகாண பொறியியல் திணைக்களத்தின் குழு அறிக்கை மூலம் 20 பிரதான வேலை விடயங்கள் தொடர்பாக அண்ணளவான சந்தை விலை மற்றும் ஆரம்ப மதிப்பீடுகளுக்கிடையே இணக்கம் செய்யாமல் ஒப்பந்தகாரருக்கு சாதகமான வகையில் பொறியியலாளர் மதிப்பீட்டில் 01 மற்றும் 15 என்ற வேலை விடயங்கள் இரண்டும் அதாவது Preliminaries மற்றும் வளிப்பதனாக்கி விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 76 மில்லியன் அதிகரிக்கப்பட்டிருந்தது.
- குருநாகல் மாநகர சபையின் மத்திய சந்தை நிர்மாணத்தின் போது மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட (Provisional sum ) பெறுமதியைப் பரீட்சித்த போது காணப்பட்ட முரண்கள் தொடர்பாக அந்த முரண்கள் ஒப்பந்தகாரருடன் கலந்துரையாடி மதிப்பீடு செய்யப்பட்ட தொகையும் செயற் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் 03 விடயங்களுக்காக ரூபா 93 மில்லியன் மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.
- குருநாகல் மாநகர சபை மத்திய சந்தை நிர்மாணத்தின் போது அசாதாரண விலை வீதத்தின் அடிப்படையில் வடமேல் மாகாண கட்டிடங்கள் அங்கீகரிக்கப்பட்ட வீதம் (BSR) பயன்படுத்தி ரூபா 35 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.
- குருநாகல் மாநகர சபையின் MC - Plaza கட்டிடத்தைப் பழுதுபார்க்கும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு முரணாக விஷேட அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் ரூபா 20 மில்லியன் மேலதிக வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்த மேலதிக வேலைகள் பொறியியலாளர் திணைக்களத்தின் பெறுமதியில் 10 சதவீதம் இருக்க வேண்டிய போதிலும் பொயியலாளர் மதிப்பீட்டில் வேலை விடயங்களை நிறைவேற்றாமல் 53 சதவீதம் மேலதிக வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது.
- குருநாகல் மாநகர சபையின் MC - Plaza கட்டிடத்தை திருத்தும் போது அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் மதிப்பீட்டில் உடன்படிக்கை செய்து இணங்கப்பட்ட பெறுமதியில் நிறைவேற் றாமல் 23 விடயங்களின் பெறுமதி ரூபா 20 மில்லியன் ஆக இருந்ததுடன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் அது 53 சதவீதம் ஆகும்.
- குருநாகல் மாநகர சபையின் (MC - Plaza) கட்டிடத்தை திருத்தும் போது கட்டிடத்தின் விலைப் பகுப்பாய்வு வீதத்தைப் பயன்படுத்தாமல் மேலதிக வேலைக்காக விஷேட விலை வீதம் தயாரித்து செலுத்தியதன் காரணமாக 08 செலவின விடயங்களுக்கு ரூபா 20 மில்லியன் தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

- சுந்தராப்பொல கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் ஒப்பந்தம் மூலம் குருநாகல் மாநகர சபைக்கு கிரய நலன் கிடைக்காதிருந்ததுடன் ரூபா 240 மில்லியன் பெறுமதியான செயற்திட்டத்திலிருந்து ரூபா 100 மில்லியன் தொகையில் உடன்படிக்கை செய்திருந்த போதிலும் இந்த ரூபா 100 மில்லியன் தொகையில் நிறைவேற்ற வேண்டிய வேலைப் பகுதி குறித்துரைத்தவாறு இனங்காண்டு மாநகர சபையினால் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்க வில்லை. கணக்காய்வு செய்யப்பட்ட 2022 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வரை ஒப்பந்தத் தொகையில் ரூபா 57 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.
- சிலாபம் நகர சபையினால் சிலாபம் வைத்தியசாலைக்கு சர்லி கொரயா மண்டபம் 2017 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கையின்றி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் நகர சபைக்கு அறவிட வேண்டிய வாடகைப் பணமான ரூபா 3 மில்லியனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- வென்னப்புவ பிரதேச சபையின் பிரதான களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்ட ரூபா 3 மில்லியன் பொருட்கள் பராமரிப்பு களஞ்சியப் பதிவேட்டில் உள்ளடக்காமையின் காரணமாக அவற்றிற்குரிய நோக்கங்களுக்கு ஈடுபட்டதா? என்பதா என உறுதிப்படுத்த முடியாதிருந்தது.
- கருவலகஸ்வெவ பிரதேச சபையினால் பேணிச் செல்லப்பட்ட 04 நீர் செயற்திட்டங்கள் 2022 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு அங்கத்தவர் மற்றும் நீர்க் கட்டண நிலுவை ரூபா 2 மில்லியன் ஆகும்.
- புத்தளம் நகர சபையில் எல்பா சந்தைத் தொகுதியில் சகல கடைகளும் விற்பனை அடிப்படையில் சபைக்கு கிடைக்க வேண்டிய ஒரே தடவையில் சேகரிக்கப்படும் பணம் (Key money) ரூபா 717 மில்லியனாக இருந்த போதும் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டு 03 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதும் சபையினால் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 253 மில்லியன் மாத்திரமாக இருந்ததுடன் அது மொத்தப் பெறுமதியில் 35 சதவீதம் ஆகும்.
- மீளாய்வாண்டில் கண்டி மாநகர சபை விளையாட்டு மைதானத்திற்காக பொருத்தப்பட்டிருந்த சூரிய கல வீதி விளக்குகள் பௌதீக ரீதியில் பரீட்சித்த போது ஒரு வீதியின் விளக்குகள் வீதியின் தூண் ஒன்றிற்காக செலுத்த வேண்டிய பெறுமதியினை விட ரூபா ஒரு மில்லியன் தொகை 13 வீதி விளக்கு தூண்களுக்காக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.
- கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட்டகோறளை பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணி ஒன்றை ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் அடிப்படையிலான 1 சதவீதமான ரூபா

3 மில்லியன் வரி அறவிடப்பட்டிருக்க வில்லை.

- 2005 ஆம் ஆண்டின் போது உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் ரூபா 96 மில்லியன் தொகையை ஈடுபடுத்தி நிர்மாணிக்கப்பட்ட 03 மாடிகளையுடைய கம்பளை பொது சந்தைத் தொகுதியில் 02 மாடிகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 197 கடைகளில் 100 கடைகள் 17 வருட காலம் முதல் மூடப்பட்டிருந்ததன் காரணமாக இந்த வளவில் பல்வேறு துஷ்பிரயோகங்கள் நடைபெறுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.
- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நக்கீல்ஸ் சுற்றுலா நிலையத்தில் விருந்தினர்கள் ஓய்வு பெறும் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 13 மில்லியனுக்கு உடன்படிக்கை செய்து 2017 ஆம் ஆண்டு வரையில் அதில் 4.4 மல்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒரு பகுதி நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் அழிவடைந்த நிலையில் காணப்பட்டது.
- நுவரெலியா நகரத்தை உள்ளடக்கிய பொது மக்கள் சுகாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பதற்காக கடந்த 05 வருடங்களில் 11 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 111 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் இலக்கிடப்பட்ட பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன் வடிகாண் மற்றும் 107 வாய்க்கால் வழிகளைப் பராமரித்தல் மற்றும் விருத்தி செய்வதற்காக ரூபா 15 மில்லியன் நிதி ஏற்பாடு பாதீட்டிலிருந்து ஒதுக்கப்பட்டி ருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அதில் 93 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.
- மாத்தளை மாவட்டத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 307 மில்லியன் செலவில் 2017 ஆம் ஆண்டின் போது கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் ஸ்தாபிக்கப் பட்டு நாளொன்றுக்கு ரூபா 90 மில்லியன் செலவில் 2021 ஆம் ஆண்டின் போது இயலளவு அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் ஒன்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் பசளை 25 தொன் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.
- மாத்தளை மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சுப்பிரி சந்தைத் தொகுதியின் மேல்மாடி முக்கோண வடிவிலான சினிமா மண்டபத்திற்காக 2000 சதுர அடிக்காக உடன்படிக்கை செய்திருந்த போதிலும் உடன்படிக்கை செய்யப்பட்ட அளவினை விஞ்சி 3,972 சதுர அடி பயன்படுத்தப்பட்டமையால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

ரூபா 4 மில்லியன் வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

- கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் அமுலில் உள்ள 13 உள்ளூராட்சி நிறுவனங்களின் இறுதிக் கணக்குகளில் ரூபா 1,307 மில்லியன் பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் உரித்தை உறுதிப்படுத்தக்கூடிய உரித்துறுதி, நில அளவையாளர் வரைபடங்கள் எதுவும் காணப்படவில்லை.

- மஹியங்கனை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளொன்றுக்கு உக்கும் மற்றும் உக்காத கழிவுகள் 03 மெற்றிக் தொன் அளவில் அகற்றப்பட்டிருந்தது. மீளாண்வாண்டில் 06 வருடங்களுக்கு முன்னர் கழிவுப் பொருள் மீள்சுழற்சி நடவடிக்கைகள் ரூபா 16 மில்லியன் செலவில் நிரந்தர கழிவுப் பொருள் தளம் மற்றும் அலுவலகக் கட்டிடம் நிர்மாணித்து காணப்பட்ட போதிலும் பிரதேச வாசிகளின் எதிர்ப்பின் காரணமாக அந்த நிலையத்தில் கழிவுப் பொருள் மீள்சுழற்சி நடவடிக்கைகள் மீளாண்வாண்டின் இறுதி வரையிலும் செய்யப்படாதிருந்ததுடன் உரிய கட்டிடம் பயனற்று காணப்பட்டது.
- மஹியங்கனை பிரதேச சபையில் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் தொடம்வத்த புதிய கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் திறந்த நிலத்தில் முறையற்ற வகையில் போடப் பட்டிருந்தமையால் எறும்பு பூச்சிகள் போன்ற உயிரினங்கள் பெருகுவதுடன் துர்நாற்றம் வீசுகின்றமையும், மழை காலங்களில் கலக்கப்பட்ட கழிவுகள் வழிந்தோடிச் சென்று கழிவுப் பொருள் தளத்திற்கு அருகிலுள்ள மகாவலி கங்கையில் சேர்கின்ற ஆபத்தும் காணப்பட்டது. கடந்த ஆண்டின் போதும் மீளாண்வாண்டின் போதும் இந்த நிலையத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக ரூபா 38 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.
- மொனராகலை மாவட்டத்தில் 07 உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய இயந்திரங்களை வாடகைக்கு வழங்குவதற்காக மீளாண்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 21 மில்லியன் நிலுவை இயந்திர வாடகை வருமானம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.
- 2021 திசம்பர் 24 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தீயணைப்பு பாதுகாப்பு சேவைக் கட்டணம் 33 தொகுதிகளுக்குரிய அநுராதபுர மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள கைத்தொழில் மற்றும் வியாபார நிலையங்கள் 1931 இல் இருந்து ரூபா 2,500 வீதம் அறவிட வேண்டியிருந்த போதும் அவ்வாறான தொகுதிகளுக்கு இடப்பட்ட கட்டணங்கள் அறவிடாமையினால் ரூபா 5 மில்லியன் அளவிலான வருடாந்த வருமானம் மாநகர சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

- அநுராதபுர மாவட்டத்தில் பிரதேச சபை பதினொன்றுக்குரிய இயந்திரங்கள் மற்றும் வாகன வாடகைகளை பெற்றுக்கொள்வதற்காக மீளாண்வாண்டின் இறுதி வரையிலும் அறவிட வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 11 மில்லியன் ஆகும்.
- அநுராதபுர மாவட்டத்தில் பிரதேச சபை பதினொன்றுக்குரிய பெறுமதி ரூபா 53 மில்லியன் ஆன சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அல்லது பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய பிரகாரம் பூர்த்தி செய்யப்படாமையினால் பயனற்று காணப்பட்டது.
- அநுராதபுர மாவட்டத்தில் நான்கு பிரதேச சபைகளினால் பேணிச் செல்லப்படுகின்ற 12 நீர் செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிட வேண்டிய நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 5.6 மில்லியன் ஆகும்.
- பிபிதெமு பொலன்னறுவை செயற்திட்டத்தின் கீழ் ரூபா 27 மில்லியன் செலவில் 2019 ஆம் ஆண்டில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட ஹிங்குரக்கொட பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட புதிய பொதுச் சந்தையில் 92 கடைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வாடகைக்கு வழங்காமல் பயனற்றுக் காணப்பட்டது. அதன் கீழ் மதிப்பீட்டு வாடகையின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்குரியதாக மாத்திரம் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 13 மில்லியன் ஆகும்.
- உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சில் கழிவுப் பொருள் அலகின் மூலம் ரூபா 145 மில்லியன் செலவில் 2019 ஆம் ஆண்டின் போது லங்காபுர பிரதேச சபையில் ஸ்தாபிக்கப் பட்ட கௌசிமா இயந்திரத்தின் மூலம் நாளொன்றுக்கு உத்பத்தி செய்யக்கூடிய கூட்டுப் பசளை இயலளவு 50 தொன் மாத்திரமாக இருந்த போதிலும் அதிகார பிரதேசத்தில் அவ்வாறான இயலளவிற்கு தேவையான கழிவுப் பொருள் சேகரிக்காமை மற்றும் அதிக பராமரிப்பு கிரயத்தின் காரணமாக இயந்திரம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.
- பிரதேச சபைகள் மூன்றிற்குரிய மீளாய்வாண்டின் இறுதிவரையில் காணப்பட்ட நிலுவைக் கடை வாடகை ரூபா 11 மில்லியன் ஆக இருந்ததுடன் மெதிரிகிரிய பிரதேச சபைக்கு உரிய மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஆதனவரி நிலுவை ரூபா 3.4 மில்லியன் ஆகும்.
- மாத்தறை மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் உருவாகின்ற 35 தொன் அளவிலான கழிவுப் பொருட்களை முகாமைத்துவம் செய்வதற்காக நீண்டகாலத் தீர்வாக கழிவுகளின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் செயற்திட்டம் மாத்தறை மாநகர சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் தனியார் கம்பனியுடன் 2014 ஆகஸ்ட் 08 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்டு கொட்டவிலவத்த காணியில் 05 ஏக்கர் நில அளவில் 25 வருட காலத்திற்காக

பெறப்பட்டிருந்தது. எனினும் 08 வருடங்கள் அளவிலான காலமாக இந்தக் காணியில் கழிவுப் பொருட்கள் திறந்த நிலத்தில் குவித்து வைக்கப்பட்டு அவை ரூபா 41 மில்லியன் வாடகை செலுத்தி மண்ணால் மூடப்பட்டிருந்த போதும் மீண்டும் கழிவு மலை முன்னைய பிரகாரம் வெளிப்படுகின்றமையினால் கழிவுகளை மூடுவதற்காக செய்யப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாக காணப்பட்டது.

- மாத்தறை மாநகர சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் பேருந்து நிலையம் மற்றும் சந்தைத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக இயந்திர பொறிமுறைகள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்ட கடன் பணம் மற்றும் வட்டி ரூபா 55 மில்லியன் ஆக இருந்த போதிலும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரகாரம் அந்த மீதி ரூபா 148 மில்லியன் ஆக இருந்ததுடன் வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- அக்குரஸ்ஸ பிரதேச சபையினால் மீளாய்வாண்டின் இறுதியில் தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட களஞ்சிய இருப்பு பொழிப்பில் உள்ளடக்கப்பட்ட ரூபா 26 மில்லியன் பெறுமதியான களஞ்சிய இருப்புக்களில் 11 மீதிகள் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அந்த மீதிகள் சபைக்குச் சொந்தமாக சபையிடம் பௌதிக ரீதியில் காணப்படவில்லை.
- வெலிகம பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள 8 வாய்க்கால்கள் ஊடாக சேற்றுக் கழிவுகளை அகற்றுதல் 04 ஒப்பந்தகாரர்களுக்கும் மற்றும் விவசாய அமைப்புக்க ளுக்கும் ரூபா 6 மில்லியன் தொகை முறையற்ற வகையில் செலவிடப்பட்டிருந்ததுடன் பிரதேச சபையின் விடயப் பரப்பிற்கு உரித்தற்ற அந்தப் பணிகளுக்காக அங்கீகாரமின்றி சபை நிதியத்திலிருந்து செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.
- உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் மாத்தறை மாவட்டத்தில் 03 உள்ளூராட்சி நிறுவனங்களில் 07 பல்வேறு நிர்மாணங்கள் ரூபா 24 மில்லியன் வேலையுடன் இடையில் நிறுத்தப்பட்டிருந்தமையால் அந்த நிர்மாணங்களை ஆரம்பிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களையும் நிறை வேற்றுவதற்கு முடியாதிருந்ததுடன் நிர்மாணிக்கப்பட்ட பகுதிகளும் அழிவடைந்து காணப்பட்டது.
- வெலிகம பிரதேச சபைக்குரிய நகர அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெறப்பட்டுள்மைக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை தொடர்பாக பரீட்சித்து நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டம் மற்றும் அபிவிருத்திக் கட்டளை / பிரமாணங்களின் பிரகாரம்

நடவடிக்கை எடுத்து ரூபா 6 மில்லியன் கட்டணம் அறவிட்டு அந்த நிர்மாணங்களை முறைமைப்படுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- 2022 நவம்பர் 22 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரகாரம் மற்றும் கோவைகளின் சான்றுகளின் பிரகாரம் குறைபாடுகள் காணப்படுகின்றமையால் வெலிகம பிரதேச சபையின் திட்டமிடல் குழுவினால் அங்கீகரிக்கப்படாத 02 கட்டிடத் திட்டங்கள் தலைவரால் தமது உத்தியோகபூர்வ முத்திரை இட்டு மோசடியாக அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் களப் பரிசோதனைத் திகதி வரையிலும் 1,205 சதுர அடி இரண்டு மாடிக் குடியிருப்பு கட்டிடம் மற்றும் வணிகக் கட்டிடம் என்பன நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

- மீளாய்வாண்டின் போது கம்புறுகமுவ கழிவுப் பொருள் செயற்திட்டத்திற்கு அடுத்தால் அமைந்துள்ள நில வரைபட இலக்கம் 35/215 என்ற காணியில் 100 பேர்ச் கொள்வனவு செய்யும் போது வெலிகம பிரதேச சபையின் முன்னாள் தலைவருக்கு சொந்தமாகக் காணப்பட்ட காணி ரூபா 1 மில்லியனுக்கு மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டு அந்தக் காணி மீண்டும் 02 மாதங்களில் ரூபா 9 மில்லியனுக்கு சபைக்கு கொள்வனவு செய்யப்பட்டமையால் சபையின் நிதியத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

- 2008 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை தங்காலை நகர சபையில் உறுப்பினர் ஒருவராக செயற்பட்டு அந்த சபைக்குரிய பேரூந்து நிலைய கடை வாடகையாளராகவும் செயற்பட்டமை சபை உறுப்பினர் பதவிக்கு பொருத்தமற்ற விடயமாக இருந்த போதிலும் 2008 ஆம் ஆண்டு முதல் இதுவரை கூட்டுமொத்தமாக ரூபா 2 மில்லியன் படி அந்த சபை உறுப்பினருக்கு செலுத்தப்பட்டிருந்தது.